ஒ.—ஆறும்பாட்டில், "எம்பெருமானை நிரதிஸயபுருஷார்த்தம்" என்னும் இவ்வர்த்தத்தை உணராதே பழையார் அநேகம்பேர் இங்ஙனே முடிந்துபோனார்; நீங்களும் இங்ஙனே நசியாதே ஆஸ்ரிதர்க்காக ஸ்ரீமதுரையிலேவந்து பிறந்தருளின ஸர்வேஸ்வரனை யாஸ்ரயிக்கையல்லது ஆத்மாவுக்கு ஹிதமில்லை, இது ஸங்க்ரஹேண சொன்னோமென்கிறார்.

[இல்லைகண்டீர் இன்பமந்தோ உள்ளது நினையாதே] - வேறுபுருஷார்த்தம் இல்லைகிடீகோள். உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. [மல்லைமூதூர்] - அதிஸம்ருத்தமாய் அவனுக்குப் பழையதாய் வருகிற ஊர்.

ப—அநந்தரம், புருஷார்த்த பரிஜ்ஞாநமில்லாமல் முடிந்துபோகாதே க்ருஷ்ணனுடைய ஆநந்தஜநகமான குணகீர்த்தநத்தைப் பண்ணிலல்லது வேறு உஜ்ஜீவநார்த்தமாயிருப்பதொரு ஸங்க்ரஹமில்லையென்கிறார்.

("ஸுவபூஂஷுவயேஞ்ஜநக" என்கிற ஜநத்திலே), இன்பம் - ஸுகரூபமாயிருப்பதொன்று, இல்லைகண்டீர் - இல்லைகிடீர்: அந்தோ! - ஐயோ! உள்ளது - ஸர்வகாலவர்த்தியான ஆநந்தியாயுள்ள பகவத்ஸ்வரூபத்தை, நினையாதே - அநுஸந்தியாதே, தொல்லையார்கள் - பழையகாலத்திலுள்ளார், எத்தனைவர் - எத்தனைபேர், தோன்றிக்கழிந்தொழிந்தார் - ஜந்மமரணங்களே யாத்ரையாய்ப்போனார்! (ஆனபின்பு), மல்லை - நிரதிஸயஸம்பத்ஸம்ருத்தமாய், மூதூர் - (வாமநாவதாரந்தொடங்கி தத்ஸம்பந்தம் மாறாமல்) பழையதான, ஊர் - ஊராயிராநிற்கிற, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - பிறந்தவனுடைய, வண் - ஆஹ்லாதஜநகமான, புகழ் - குணங்களை, சொல்லி - கீர்த்தித்து, உய்யப்போகலல்லால் - உஜ்ஜீவித்துப்போமதொழிய, மற்று - வேறு, சுருக்கு - ஸங்க்ரஹேண சொல்லலாவது, ஒன்று இல்லை - ஒன்றுமில்லை.

இ.—ஆறும்பாட்டில், நிரதிஸயபுருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளார் அநேகர் முடிந்துபோனார்; அங்ஙனே நசியாதே ஆஸ்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆஸ்ரயிக்குமல்லது ஆத்மாவுக்கு ஹிதமில்லை யென்கிறார்.

[இல்லைகண்டீர் இன்பம்] - ஸம்ஸாரத்தில் ஸுகமில்லை கிடீகோள்; அந்தோ! ஶ்ரோத்தாக்களுக்கு நான் உபதேஸிக்கவேண்டுவதே! ப்ரத்யக்ஷம் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறீரே. [உள்ளது நினையாதே] - உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. உண்டானஇல்லாமையை நினையாதே யென்றுமாம். [தொல்லையார்களெத்தனைவர்] - பழையராயிருப்பாரெத்தனைவர் உத்பத்தி விநாஸமேயாய் நடுவிருந்தநாள் புருஷார்த்தத்துக்கு உடலன்றிக்கே முடிந்துபோனார். எத்தனைவரென்கிறது - அநேகரென்கிறது. [மல்லை மூதூர்] - அதிஸம்ருத்தமாய் அவனுக்குப்பழையதாய் வருகிறஊர். ஸித்தாஸ்ரமமாய் வாமநன் நெடுநாள் தபஸ்ஸுபண்ணியும், ஸ்ரீஶத்ருக்நாழ்வான் படைவீடுசெய்தும், கிருஷ்ணன் அவதரித்தும், இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாததேஸம்.

[வண்புகழே] - அவனுடைய கல்யாண குணங்களையே. [சொல்லி உய்யப்போகலல்லால்]-உக்திமாத்ரத்தாலே உஜ்ஜீவித்துப்போமதொழிய. [மற்றொன்றில்லை சுருக்கே]-சுருங்கச் சொல்லலாம் ஹிதம் வேறொன்றுமில்லை காடு கைக்கலாவதுண்டு, திரளச் சொல்லலாவதுஇதுவே.

ஈடு.—நிரதிசயபுருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளாரநேகர் முடிந்து போனார்கள்; அப்படியே நீங்களும் நசியாதே, ஆஶ்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆஶ்ரயிக்குமத்தனையல்லது, ஆத்மாவுக்கு ஹிதமில்லையென்கிறார்.

[இல்லைகண்டீரின்பம்] - "ஸர்வம் து:கமயம்ஜகத்" (ஸர்வம் து:கமயம்ஜகத்) என்கிற ஸம்ஸாரத்தில், கெடுவிகாள்! ஸுகலேசமுமில்லைகிடீகோள். [அந்தோ!] - ஶோச்யரானவுங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! ப்ரத்யக்ஷமும் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறேனிறே. [உள்ளதுநினையாதே] - உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. 'ஸுகரூபமுமாய் நித்யமுமா யிருப்பது பகவத்விஷயம்" என்று அநுஸந்தியாதே. உண்டானஇல்லாமையை நினையாதேயென்று கீழேகூட்டவுமாம். [தொல்லையித்யாதி] - பழையராயிருப்பா ரெத்தனைபேர், உத்பத்தியானது விநாசத்தோடே கூட்ட, நடுவுள்ளநாள் புருஷார்த்தத்துக்கு உடலன்றிக்கே கழிந்துபோனார். சிலபூண்டுகளுண்டாய், தோன்றின இடந்தன்னிலேநின்று தீய்ந்துபோவன; அப்படியே. [மல்லையித்யாதி] - ஸம்ருத்தியை யுடைத்தாய், அவனுக்கு என்றுமொக்கக் கலவிருக்கையாய்ப் போருகிற ஸித்தாஶ்ரமமாய், ஸ்ரீவாமநனெழுந்தருளியிருந்தும், ஸ்ரீஶத்ருக்நாழ்வான் படைவீடுசெய்தும், க்ருஷ்ணன்வந்தவதரித்தும், இப்படி பகவத் ஸம்பந்தம் மாறுதேபோருகிற தேசமாயிற்று. [மூதூர்] - பழையதாய் வருகிறவூர்; அங்கேவந்துஅவதரித்தவனுடைய உதாரமான புகழையே வாயாலே சொல்லி யுஜ்ஜீவித்துப் போமதொழிய. [மற்றொன்றில்லைசுருக்கே] - புறம்பேநின்று பரக்கக்காடுகைக்கலாவதுண்டித்தனைபோக்கி, சுருங்கவொருபாசுரத்தாலே சொல்லலாவதில்லை. (௬)

ஆறும்பாட்டு—இல்லைகண்டீர் இத்யாதி. "உள்ளதுநினையாதே" என்று தொடங்கி "மற்றொன்றில்லைசுருக்கு" என்னுமளவும் - கடாக்ஷித்தவதாரிகை - நிரதிஶய இத்யாதி. இந்த அவதாரிகை "உள்ளதுநினையாதே" என்றதின் முந்தினவர்த்தத்திலே.

"அந்தோ!" என்றதுக்கு ஹார்த்த பாவம் - ஶோச்யாகளித்யாதி. து:கரூபதை ப்ரத்யக்ஷமாயிருக்க உபதேசிக்கிறதென்? என்ன - ப்ரத்யக்ஷமும் இத்யாதி. க்ருபையாலேயென்றபடி. விவரணம் - ஸுகரூபமுமாய் இத்யாதி. உண்டானவில்லாமை-ஸத்யமான இல்லாமை. ஸம்ஸாரத்தினுடைய பாரமார்த்திகாகாரம் - இன்பமில்லையென்னுமதென்றபடி. த்விதியயோஜனையில், 'இன்பம்-இல்லைகண்டீர்" என்றதுள்ளது; அத்தை நினையாதே யென்று ஶப்தார்த்தம். உக்தத்துக்குத்ருஷ்டாந்தம் - சிலபூண்டுகள் இத்யாதி. மல்லை - ஸம்ருத்தி. அதாவது - பகவத் ஸம்பந்தம்மாறுமை. கலவிருக்கை-கொலுவிருக்கை. என்றுமொக்க இது கலவிருக்கையாவென்ன - ஸித்தாஶ்ரமமாய் இத்யாதி. "சுருக்கே" என்றதுக்கு பாவம் - புறம்பே இத்யாதி. காடுகைக்கலாவது - வாய்கைக்கும்படி வர்ணிக்கலாவது. வாய்க்குக்கேடாய்ச் சொல்லுகையென்றபடி. 'இல்லைகண்டீர்' என்றுதொடங்கி, போகலல்லால் - சுருக்கு - மற்றொன்றில்லை என்று அந்வயம்.

ஏழாம் பாட்டு.

மற்றொன்றில்லைசுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்
சிற்றவேண்டாசிந்திப்பேயமையும் கண்டீர்கள் அந்தோ!
குற்றமன்றெங்கள்பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான்
குற்றமில்சீர்கற்று வைகல்வாழ்தல்கண்டீர் குணமே.

ஆ. -(மற்றொன்றில்லை.) - இச்சுருக்கை மிகப்பரவாமே வ்யக்தமாக்குகிறார். வேறுவக்தவ்யமில்லாதபடி ஸங்க்ஷேபேண ஆத்மோஜ்ஜீவநோபாயத்தை எல்லார்க்கும் சொன்னோம். இதுக்கு அதிகாரிநியமமும், காலநியமமும், தேசநியமுமில்லை. "இவ்வுபாயந்தான் துஷ்கரம்" என்று குறைவுபடவும் வேண்டா, ஸ்ம்ருதிமாத்ரமே யமையும். இது நிஷ்பலமாகிலோவென்னில்?—இது செய்தால் முன்னம் அநர்த்தமில்லையிறே. ஆகலால், ஆஶ்ரிதர்க்காக வடமதுரையிலேபிறந்தானை பசுமேய்க்கும் ஆயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யநுஸந்தியுங்கோள்: இதுதானே யமையுமென்னும்படி போக்யமாய், யுக்தமுமாயிருக்குமென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஈஶ்வர ஸமாஶ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம்] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதும் இல்லை. இதுதன்னையும் பரப்பின்றிக்கே சுருங்கச்சொன்னோம். [மாநிலத்து]- இதுக்கு அதிகாரிகள் எங்ஙனேயென்னில்? பூமியிலேஎவ்வுயிர்க்கும்: ஜ்ஞாநவ்ருத்தாதிகள் குறைந்தாரோடு நிறைந்தாரோடு வாசியின்றிக்கே எல்லா ஆத்மாக்களுக்கும். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. [சிந்திப்பே அமையுங்கண்டீர்கள்] உக்திநிரபேக்ஷமாக சிந்தாமாத்ரமே அமையுங்கிடீர்கோள். [அந்தோ] - இதிலே புகாதொழிவதே என்று இன்னாதாகிறார். [குற்றமன்று] - இவ்வுபாயம் அநர்த்தத்தை விளையாதிறே. [எங்கள் பெற்றத்தாயன் என்றுமேலுக்கு] - ஆஶ்ரிதர்க்காக் வடமதுரைப் பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாண குணங்களை அப்யஸித்து என்றும் வாழ்கை, ஆத்மாவுக்கு யுக்தம்.

ப.—அநந்தரம், சிந்தாமாத்ரஸாலப்யனை க்ருஷ்ணகுணாநுஸந்தாநம் பண்ணி, காலதத்த்வமுள்ளதனையும் வாழ்கை ப்ராப்தம் என்கிறார்.

மற்று - வேறு, ஒன்று இல்லை-வக்தவ்யமாயிருப்பதொன்று இல்லை: சுருங்க - ஸங்க்ரஹேண, சொன்னோம்-(உங்களுக்குச்) சொன்னோம்; மா - பெரிய, நிலத்து - பூமியிலே, எவ்வுயிர்க்கும் - எல்லாவாத்மாக்களுக்கும், சிற்றவேண்டா - பரக்கவாயாசப்படவேண்டா: சிந்திப்பே - சிந்தாமாத்ரமே, அமையும் - அமையும்; கண்டீர்கள் - ("ஸுலபா ஸ்மரணாயுஷ்யா" என்று ப்ரஸித்தமன்றோ?), அந்தோ - ஐயோ! (இந்தஸுகமார்க்கம் ஸர்வவ்யாப்தமல்லவாகிலும்), குற்றம் - அநர்த்தகரம், அன்று - அல்லவே; (இப்படி ஸ்மர்த்தவ்யமெது? எதென்னில்), எங்கள் - ஆஶ்ரிதஸவ்யனாய், பெற்றம் - (அஜ்ஞமான) பசுக்களுக்கு, தாயன் - ரக்ஷகமாய்க்கொண்டு, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதீர்ணனானவனுடைய, குற்றமில் - அபேக்ஷாநிரபேக்ஷமாக ஆஶ்ரிதஸம்ரக்ஷணைக

ப்ரயோஜநமான, சீர் - குணங்களை, கற்று - (உபதேசமுகத்தாலே யிப்படி) வ்யுத்பத்திபண்ணி, வைகல் - ("ஸவ்ருர்நுகாரோநுஸ்ஸ்ருதே" என்கிறபடியே) யாவதாத்மபாவிகுணாநுபவம்பண்ணி, வாழ்தல்கண்டீர்-வாழ்கைகிடீகோள்! (உங்களுக்கு); குணம் ஸ்வபாவமாகையும், ப்ராப்தமும்.

இ.—ஏழாம்பாட்டில், பகவத் ஸமாஸ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை]-இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லை யென்னுதல்; இப்போதித்தைச் சொல்லி வேறொருபோது வேறேயொன்றைச் சொல்லுகிறான் என்றிருக்கவேண்டாவென்னுதல். [சுருங்கச்சொன்னோம்]-இது தன்னையும் பரப்பறச்சொன்னோம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படியன்றியே ஸங்க்ரஹமாகச் சொன்னோம். [மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கு அண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும் உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரிகளென்கை. [எவ்வுயிர்க்கும்] - இது அதிக்ருதாதிகாரமன்று, ஸர்வாதிகாரம். [சிற்றவேண்டா]- ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய் பரக்கவேண்டாவென்கை. [சிந்திப்பேயமைமையுங்கண்டீர்கள்] - உக்திநிரபேக்ஷமாக சிந்தாமாத்ரமேயமையுங் கிடீகோள். [அந்தோ]- இவ்விலக்ஷணவிஷயத்தை இழப்பதே என்னுதல். "இது ஸுலபம்" என்றால் காற்கடைக்கொள்ளுகைக்கு உறுப்பாவதே யென்னுதல். [குற்றமன்று] - ஒருநன்மையில்லையாகிலும், ஓர் அநர்த்தத்தை விளையாதே. "ஹாதயெடுவேதிக்ஷுஷதி" இவ்வுபாயத்துக்கு ஃபலமில்லையாகிலும் தானே ப்ரயோஜநம் போருமென்கை. [எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்] - ஆஸ்ரிதர்க்காக வடமதுரைப் பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனென்னுதல். ஆஸ்ரிதர்க்காக பசுமேய்க்கும் ஆயனானவனாகை வடமதுரைப் பிறந்தானென்னுதல். [குற்றமில்சீர் கற்று] - ஹேயப்ரத்யநீகமான கல்யாண குணங்களை அப்யஸித்தென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்கையென்னுதல். "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" [வைகல் வாழ்தல் கண்டீர் குணமே] - கற்பதொருகால்; வாழ்ச்சி நித்யமாயிருக்கும் [வாழ்தல் கண்டீர் குணமே]- வாழ்தல்கிடீர் இவ்வாத்மாவுக்கு யுக்தம்; அல்லாததெல்லாம் அப்ராப்தமென்கை.

ஈடு.—ஏழாம்பாட்டு. பகவத்ஸமாஸ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லையென்னுதல், இப்போது இத்தைச்சொல்லி வேறொருபோது வேறொன்றைச்சொல்லுகிறானென்றிருக்க வேண்டா வென்னுதல் [சுருங்கச்சொன்னோம்] - இதுதன்னைப்பரப்பறச்சொன்னோம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படி சொல்லுகையன்றிக்கே, ஸங்க்ரஹமாகச்சொன்னோம்.

ஏழாம்பாட்டு.—மற்றொன்றில்லை இத்யாதி. "சிற்றவேண்டாசிந்திப்பேயமையும் குற்றமன்று" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - பகவத்ஸமாஸ்ரயண இத்யாதி.

இத்தோடொக்க என்றது - "சிந்திப்பேயமையும்" என்றத்தைப்பற்ற. ப்ரதிபத்தியோடொக்க எண்ணலாவது ஓர் உபாயாந்தரமில்லையென்று முந்தின அர்த்தத்துக்கு பாவம்; என் வார்த்தையை "விப்ரலம்பகவாக்யம்" என்றிருக்கவேண்டா, "ஆப்தம்" என்று விஸ்வஸியுங்கோள் என்றிரண்டாமர்த்தத்துக்கு பாவம். "சுருங்க" என்றதுக்கு - ஶப்தத்தினுடைய ஸங்க்ரஹமும், அர்த்த

[மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்குஅண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும், உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரத்திலுள்ளாரென்கை. [எவ்வுயிர்க்கும்] - இது அதிக்ருதாதிகாரமன்று; ஸர்வாதிகாரம். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. ஒரு வ்யாபாரம் வேண்டாவென்றபடி. [சிந்திப்பேயமையுங்கண்டீர்கள்] - உக்திநிரபேக்ஷமான சிந்தாமாத்ரமே யமையுங்கிடிகோள். [அந்தோ] - "நற்சரக்குக்கிட்டினதனையும் கைவிடுகைக்கு உடலாவதே!" என்று அந்தோ! என்கிறார். [குற்றமன்று] - கீழ்ச்சொன்ன நன்மைகளொன்றுமில்லையேயாகிலும், இதுசொன்னாலும் உங்கள்தலையில் முந்தறமுன்னம் இடிவிழாது. "*யோவஸாதஸ்ஸஉச்யதாம் - ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி*" (யோவஸாதஸ்ஸஉச்யதாம் - ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி)-இவ்வுபாயத்துக்குப் பலமில்லையாகிலும், இதுதானே ப்ரயோஜநம் போருமென்கை. [எங்கள்பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்] - வந்துபிறப்பதற்கு முன்னே பெற்றத்தாயன்போலேகாணும், வந்தவதரிப்பதாக ஸங்கல்பித்ததில் புரையற்றிருந்தபடி. ஆஶ்ரிதர்க்காக வடமதுரைப்பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனென்னுதல். பெற்றத்தாயன் - பசுமேய்க்கும் இடையன். [குற்றமில் சீர்கற்று] - ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யப்யஸித்தேன்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்குமேன்னுதல். "*அஹம்வோபாந்தவோஜாதஃ*" (அஹம்வோபாந்தவோஜாதஃ). [வைகல்வாழ்தல்கண்டீர்குணமே] - கற்பதொருகாலாய், பின்பு வாழ்ச்சி நித்யமாயிருக்குமாயிற்று; இதொன்றுமே குணம்; இதொழிந்ததடைய அப்ராப்தம். (எ)

தத்தினுடைய ஸௌக்ரஹத்வமுமென்று இரண்டர்த்தம். இத்தையருளிச்செய்கிறார் - இதுதன்னை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "ஸம்ஸாரத்திலே" என்கிறதென்? நித்யவிபூதியிலேயன்றோவுள்ளது? என்ன - இவ்வர்த்தத்துக்கு இத்யாதி. "எவ்வுயிர்க்கும்" என்றதுக்கு ஹாவம்-இது அதிக்ருத இத்யாதி. "சிற்ற" என்றால் ஆயாஸத்தைக்காட்டுமோவென்ன - சிற்றுதல் இத்யாதி. "சிந்திப்பே" என்றஅவதாரணார்த்தம் - உக்திநிரபேக்ஷமான இத்யாதி. "அந்தோ" என்றதுக்கு ஹாவம் - நற்சரக்கு இத்யாதி. கிட்டினதனையும் - கிட்டவிருக்கச்செய்தேயும். கீழ்ச்சொன்னநன்மைகள் ஆவன-ஸர்வோபாயாதிகத்வ ப்ரதிபத்திவிஷயத்வ ஸௌலப்யத்வ ஸர்வாதிகாரத்வ அநாயாஸத்வ உக்திநிரபேக்ஷத்வரூபமான இவ்வாநுகூல்யங்கள். உத்தரார்த்தத்துக்கு ஸம்வாதம் - யோவஸாதஇத்யாதி:— "ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி மோவிநேதீவஜம் தாம்! ப்ராஹ்மணோஹவாவராஹ்மணோ யோவஸாதஸ்ஸஉச்யதாம்." அவஸாதஃ - து:கம். "குற்றமன்று" என்றதுக்கு ஹாவாந்தரம் - இவ்வுபாயத்துக்கு இத்யாதி. ஏகார்த்தமாகவுமாம். பெற்றம் - கன்றும் பசுவும். பிறந்தபின்பு பெற்றத்தாயனென்றதே "பெற்றத்தாயன்பிறந்தான்" என்றதுக்கு ஹாவம் - வந்துபிறப்பதற்கு இத்யாதி. ஹலிதம் - வந்தவதரிப்பதாக இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு, "சீர்" என்று - குணகார்யசேஷ்டிதங்களைச்சொல்லுகிறது. "பிறப்பில்புரையற்றிருக்கும்" என்றதுக்குப்ரமாணம் - அஹம்வோபாந்தவ இத்யாதி. "நாஹம்தேவோநகந்தர்வோ ந யக்ஷோநதாநவஃ! அஹம்வோபாந்தவோஜாதோ நைதச்சிந்த்யமிதோந்யதா" இதி ஸங்காங்குர்வதோ மோபாந்ப்ரதி ஶ்ரீக்ருஷ்ணஃ. "கற்றுவைகல்வாழ்தல்" என்ற பதச்சேர்த்திக்கு ஹாவம் - கற்பதொருகாலாய் இத்யாதி. "வாழ்தல்கண்டீர்குணம்" என்றந்வயித்து, அவதாரணார்த்தம் - இதொன்றுமே இத்யாதி. துணம் - ப்ராப்தம். "சுருங்கச்சொன்னோம்" என்றதுக்கு, "சிந்திப்பேயமையும்" என்றத்தோடே அந்வயம். (எ)

எட்டாம் பாட்டு.

வாழ்தல்கண்டீர்குணமிது அந்தோ மாயவனடிபரவி
போழ்துபோகவுள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு
வாழ்துணையா வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
வீழ்துணையாப்போமிதனில் யாதுமில்லைமிக்கதே.

ஆ.—(வாழ்தல்கண்டீர்.) - தன்னுடைய கல்யாணகுணாநுஸந்தாநைகாத்மதாரணரான சீரியர்க்கு வாழ்துணையாக வடமதுரையிலே வந்து பிறந்தருளின ஸர்வேஶ்வரனுடைய கல்யாணகுணாநுஸந்தாநத்துக்குமேற்பட்ட புருஷார்த்தோபாயமில்லையென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமான் இங்கேவந்து திருவவதாரம்பண்ணியருளுகைக்கு நிதானத்தைச்சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமித்தனைபோக்கி ஒருவர்க்கும் வேறொரு ப்ரயோஜநமில்லை என்கிறார்.

[மாயவனடி பரவியென்று தொடங்கி] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடையனான தன்னுடைய திருவடிகளை இனிதாய்க்கொண்டு பேசியே போதுபோக்க வேணுமென்று அத்யவஸிக்கவல்லராய், அநந்யப்ரயோஜநரானவர்க்கு உஜ்ஜீவநஹேதுவாக வடமதுரையில் பிறந்த ஸர்வேஶ்வரனுடைய கல்யாணகுணங்களையே மேவும் துணையாக பற்றும் இதுபோக்கிச் சீரியது ஒன்றுமில்லை. [வீழ்துணையென்றது] - ஆசைப்படும் துணையென்றவாறு.

ப.—அநந்தரம், அநந்யப்ரயோஜநரான அதிகாரிகளுக்கு உஜ்ஜீவநஹேதுவான க்ருஷ்ணனுடைய குணங்களை யபிநிவேஶித்தநுபவிக்குமதொழிய, இதில்விஞ்சினதொரு வாசியில்லையென்கிறார்.

வாழ்தல் - வாழுகிற, இது - இதுவன்றோ, குணம் - (எல்லார்க்கும்) குணமாவது! கண்டீர் - இதுலோகப்ரஸித்தமன்றோ? அந்தோ! - ஐயோ! (வாழும்ப்ரகாரம் அறிகிறதில்லையே. ஏதென்னில்?) மாயவன் - ஆஶ்சர்யகுணசேஷ்டிதனான ஸர்வேஶ்வரனுடைய, அடி - திருவடிகளை, பரவி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸ்தோத்ரம்பண்ணி, போழ்துபோக - காலக்ஷேபம்பண்ணவேணுமென்று, உள்ளகிற்கும் - நினைக்கவல்லவர்களாய், புன்மை - (ப்ரயோஜநாந்தரஸம்பந்தமாகிற) புல்லிமை, இலாதவர்க்கு - இல்லாதவர்களுக்கு, வாழ்-ஸ்வரூபாநுரூபமானவாழ்ச்சிக்கு, துணையா-உபாயபூதனாகைக்காக, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - வந்துபிறந்த க்ருஷ்ணனுடைய, வண் - ஆஶ்ரிதாநுஸாவ்யமான, புகழே - குணங்களையே, வீழ் - அபிநிவேஶவிஷயமான, துணையா - ஶ்ரமஸஹாயமாய்க்கொண்டு, போம் - நடக்கிற, இதனில் - இதில், மிக்கது - விஞ்சினது, யாதும் - ஏதேனுமொருவாழ்வும், இல்லை -. வீழ்துணை - விழுமிய துணையென்றுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், அவதாரத்துக்கு நிதானத்தைச் சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமதொழிய வேறு விலக்ஷணமாயிருப்பதோராபாஶ்ரயமில்லை என்கிறார்.

[வாழ்தல்கண்டீர் குணமிது] - அவன் குணங்களை அநுஸந்தித்து வாழுமதே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்புதின்னக் கூலி கொடுப்பாரைப்போலே இவர்களை அபேக்ஷிக்கவேண்டுவதே எனக்கு. [மாயவணித்யாதி] - ஆச்சர்யமான ஸௌசீல்ய ஸீலாதிகளையுடையவனுடைய திருவடிகளை ப்ரீதியாலே அக்ரமமாக ஏத்தி அத்தாலே காலக்ஷேபம் பண்ணவேணுமென்று அத்யவஸிக்கவல்லரான அநந்யப்ரயோஜநர்க்கு. புன்மையில்லாதவர்கள் - சீரியவர்கள். உள்ளகிற்கை - உள்ளவல்லராகை, அத்யவஸிக்கவல்லராகை. [வாழ்துணையா வடமதுரைப் பிறந்தவன்] - கண்ணாலே கண்டநுபவிக்கைக்காக, "ஸஹஸ்வௌ வாஸுதேவோ ஜாத:" என்கிறபடியே துணையாய்வந்து பிறந்தவன். "வஸிஷ்டாணாயஸாய ஜநாந்" என்றிறே அவதாரத்துக்கு ப்ரயோஜநமிருப்பது. [வண்புகழே வீழ்துணையாப் போமிதனில்] - கல்யாணகுணங்களையே ஆசைப்படும் துணையாகப் பற்றுமிதுபோக்கி. [வீழ்துணை] - ஆசைப்படுந் துணை. "தாம் வீழ்வார்" என்னக்கடவதிறே ஆசாயுக்தரை. [யாதுமில்லை மிக்கதே]- இதிற்காட்டில் மேற்பட்டதொன்றுமில்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவதாரத்துக்கு நிதாநத்தைச்சொல்லி, அவனையேரக்ஷகனாகப் பற்றுமிதொழிய, வேறுவிலக்ஷணமாயிருப்பதோர் அபாஸ்ரயமில்லையேன்கிறார்.

[வாழ்தல்கண்டீர்குணமிது] - அவன் குணங்களை யநுஸந்தித்து வாழுமிதுவே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்புதின்னக் கூலிகொடுப்பாரைப்போலே, இவர்களை யபேக்ஷிக்கவேண்டுவதே எனக்கு. வாழ்ச்சி உங்களதாயிருக்க, இரந்துதிரிவேன் நானுவதே! [மாயவணித்யாதி]-ஸௌசீல்யஸீலாதிகளால் ஆச்சர்யபூதனாயிருந்துள்ள வஸ்துவினுடைய குணஜ்ஞராய், ப்ரீதியாலே அவன் திருவடிகளை யக்ரமமாகவேத்தி, அத்தாலே காலக்ஷேபம் பண்ணுவதாக அத்யவஸிக்கவல்லரான நன்மையையுடையவர்கள், சீரியவர்கள். அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. * தேரித்தெழுதிவாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்குமவர்கள். "இந்தமாயவனடிபரவுகை சூதுசதுரங்கத்தோபாதி காலக்ஷேபமாக்குகிற புன்மையில்லாதவர்கள்" என்றுபட்டர். [வாழ்துணையித்யாதி] - புன்மையுடையவர்களும்அக்கப்படக் கழித்து அதுவேபோதுபோக்காக நின்றபின்பு, முதலிலே அதுகுடிபுகுராதவனுக்கு ஆஸ்ரிதஸம்ஸ்லேஷமொழிய வேறு

எட்டாம்பாட்டு.—வாழ்தல் இத்யாதி. "வாழ்துணையா" என்றுதொடங்கி, "யாதுமில்லைமிக்கது" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - அவதாரத்துக்து இத்யாதி.

"வாழ்தல் கண்டீர்குணம்" என்றது அநுவாதம். அவன் குணாநுபவத்தினுடைய ரஸ்யதையைச்சொல்லி, "அந்தோ" என்றதுக்குபாவம் - கரும்புதின்ன இத்யாதி. ஃபலிதம் - வாழ்ச்சி இத்யாதி. போழ்துபோக - காலக்ஷேபம்பண்ணுவதாக, உள்ளகிற்கும் - அநுஸந்திக்கவல்லரான. புன்மையிலாதவர்க்கு - நன்மையுடையவர்க்கென்று பர்யவஸிதார்த்தம். "கிற்கும்" என்றதுக்கர்த்தம் - வல்லரான் என்று. உள்ளுகை - நினைக்கை. "சீரியவர்கள்" என்றத்தை விவரிக்கிறார் - அநந்யப்ரயோஜநர் இத்யாதி. ஸப்ரமாணகமாக உக்தவிவரணம் - தேரித்து இத்யாதி. நாலாந்திருவந்தாதி, அறுபத்துமூன்றாம்பாட்டு, "தரித்திருந்தேனாகவே" இத்யாதி. வழிபடுகை - அதுதானே யாத்ரையாகை. தேரித்து - தெரிந்து; அறிந்தென்றபடி. பட்டர் நிர்வாஹத்துக்கு, போழ்துபோக உள்ளகிற்கிறது புன்மை, அதில்லாதவர்களுக்கென்றபடி. அதாவது - போகரூபமாகவன்றிக்கே காலக்ஷேபார்த்தமாக வுள்ளுகிறது. புன்மை - பொல்லாங்கென்றபடி. வாழ்துணையாகைக்கோ இவன்பிறந்ததென்ன - புன்மையுடையவர்களும் இத்யாதி. கழித்து - புன்மைபோகப்பண்ணி.

ப்ரயோஜநமில்லையிறே. அவர்கள் தன் குணங்களையநுபவித்து வாழ்கைக்குத்துணையாக வடமதுரையிலேவந்து அவதரித்தவனுடைய: அவதாரப்ரயோஜநம் "பரித்ராணாய ஸாதூநாம்" (பரித்ராணுயஸாதூநாம்) என்றிறேயிருப்பது. [வண்புகழித்யாதி] - அவனுடைய கல்யாணகுணங்களையே யாசைப்படுந்துணையாகப்பற்றுமிதுபோக்கி. [வீழ்துணை]- ஆசைப்படுந்துணை. †"தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர்" என்னக்கடவதிறே ஆசாயுக்தரை. [இதனில்] - இதிற்காட்டில். [யாதுமில்லை மிக்கதே] – இதனில் மேலாயிருப்பதோன்றுண்டாய், "இதில்நின்று" என்னவேணுமே; இதுக்கு மேலாயிருப்பதொன்றுமில்லை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

யாதுமில்லைமிக்கதனில்என்றென்றதுகருதி
காதுசெய்வான்கூதைசெய்து கடைமுறைவாழ்க்கையும்போம்
மாதுகிலின்கோடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த
தாதுசேர்தோட்கண்ணனல்லால் இல்லைகண்டீர்சரணே.

ஆ.—(யாதுமில்லை.) - எல்லாவற்றிலும் மேற்பட்ட புருஷார்த்தமன்றோ ஸாம்ஸாரிக து:கநிவ்ருத்திரூப கைவல்யமென்று அத்தை புருஷார்த்தமென்று பற்றில், காதுபெருக்கவென்றுபுக்கு, பண்டுள்ளத்தையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே, பண்டுள்ள ஸாம்ஸாரிக ஸுகத்தையும் இழக்குமித்தனை; ஆதலால், ஸ்ரீமதுரையிலே திருவவதாரம்பண்ணுகையாலே புதுக்கணித்த அழகையுடையனான கண்ணனே பரம ப்ராப்யமென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமானையொழிய வேறொன்று ரக்ஷக முண்டென்று பற்றினவர்கள், பண்டுநின்ற நிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவன்போக்கி ஶரணமில்லையென்கிறார்.

[யாதுமில்லையென்று தொடங்கி] - இவனொழிய மற்றொன்று ரக்ஷகம் இல்லை என்றேதேனுமொன்றைச்சொல்லி அத்தை ரக்ஷகமாகக்கொண்டு, காதுபெருக்கவென்று புக்கு பண்டுள்ளத்தையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே பண்டுதாங்கள் வாழ்ந்து வருகிற வாழ்வையும் இழப்பர்கள். [தாதுசேர்தோள் கண்ணன்] - வைஜயந்தீ ப்ரப்ருதி மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணன். "இவற்றைத்தவிர்ந்து கைவல்

இதுவே - ஐகவதநுபவமே. அது - புன்மை. ஶப்தார்த்தம் - அவர்கள் இத்யாதி. "ஆஶ்ரித ஸம்ரக்ஷணமே அவதாரத்துக்கு ப்ரயோஜநம்" என்னுமதுக்கு ப்ரமாணம் - அவதாரப்ரயோஜநம் இத்யாதி. "வீழ்" என்று - ஆசையைச்சொல்லுமோவென்ன - தாம் வீழ்வார் இத்யாதி. "தாம் வீழ்வார் தம்வீழப்பெற்றவர்பெற்றாரே - காமத்தின்காழில்கனி' என்றகுறள். நாயகியை முந்துற ஆசைப்பட்டவர்கள் தங்களை அந்நாயகி யாசைப்படப்பெற்றார்களாகில், காமத்தின் கொட்டையில்லாத ஃபலத்தை லபித்தாரொன்று இதுக்குப் பொருள். காழ் - கொட்டை. கேவலம் ரஸரூபமான கனியென்றபடி.

(அ)

யத்தை புருஷார்த்தமாகப் பற்றினாலோவென்னில்: பகவத்ஸமாச்ரயணத்துக்கு யோக்யமுமாய்; சப்தாதிவிஷயங்களை அநுபவித்து ஸம்ஸாரத்திலே இருக்குமித்தையும் இழக்குமித்தனை யதில் ப்ரயோஜநம்; ஆனபின்பு, தாதுசேர்தோள் கண்ணனல்லதில்லை கண்டீர் சரண் என்கிறார்'' என்றுஞ் சொல்லுவர்.

ப.—அநந்தரம், வேறொன்றை ப்ரயோஜநமாக நினைத்தால் முன்புள்ள போகத்தையும் இழக்குமித்தனை. நிரதிசயபோக்யனான க்ருஷ்ணனையொழிய ப்ராப்ய மில்லை என்கிறார்.

அதனில் - அதிற்காட்டில், மிக்கு - மிஞ்சின ப்ரயோஜநம், யாதும்-ஏதேனு மொன்றும், இல்லை-; என்றென்று - என்று பலகாலும், அது - அந்த ஐச்வர்யகைவல்ய ரூபமான ப்ரயோஜநாந்தரத்தை, கருதி - அநுஸந்தித்து, காது செய்வான் - காதுசெய் யப்புக்கு, கூதைசெய்து-(ஆச்ரயமுங் குலைந்து) கூதைபாய்விடுமாபோலே, கடைமுறை வாழ்க்கையும் - முன்புபோகிற போயப்ரயோஜநமும், போம் - நசித்துப்போமித்தனை; (ஆனபின்பு), மா - பெரிய, துகிலின் - துகில்களாலுண்டான, கொடி - கொடிகளை, கொள் - உடைய, மாடம் - மாடங்களை யுடைத்தாயிருக்கிற, வடமதுரை - வடமதுரை யிலே, பிறந்த - அவதரித்தவனாய், தாதுசேர் - தளவி வைஜயந்த்யாதி மாலாலங்க்ருத மான, தோள் - தோள்களையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனை, அல்லால்-ஒழிய, சரண் - ப்ராப்யதயா புகலிடமாவது, இல்லை - ஒன்றுமில்லை; கண்டீர் - இது நிருபகர்க்குக் கண்டு கொள்ளலாம். தாது - புஷ்பகேஸரம்.

இ.—ஒன்பதாம் பாட்டில், இவனையொழிய வேறொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டுநின்ற நிலையுங் கெட்டு அநர்த்தப்பட்டுப் போவர்கள்; ஆனபின்பு இவனைப்போக்கி வேறு சரணமில்லையென்கிறார்.

[யாதுமில்லை இத்யாதி] - பகவத்வ்யதிரிக்தமாயிருப்பதொன்றைப் பற்றி "இதொழிய வேறுரக்ஷகமாயிருப்பதொன்றுமில்லை'' என்று சொல்லி அத்தை ரக்ஷக மாகநினைத்து, 'ஸகிமேஹாசரகனகதேவி'' என்கிற ப்ரதிபத்தியை அதிலே வேணு மென்று பண்ணியிருக்கை. [காது செய்வான் கூதை செய்து]-காது பெருக்கப்புக்கு பண் டுள்ள யோக்யதையையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே. [கடைமுறை வாழ்க் கையும்போம்] - தண்ணிய முறையான வாழ்க்கையும் அழியும். ஆபத்தில் அது ரக்ஷகமா காது; அதின் பக்கலிலே ந்யஸ்தபரனாகைபாலே தான் செய்து கொள்ளுமத்தையுமிழக் கும். [மாதுகிலித்யாதி]- கம்ஸன் வாழ்கிறவூரில் படைவீட்டைக்கொடிகட்ட இவர் அத்தை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கு உடலாக்குகிறார். ஸ்ரீமாலாகாரன் விவாஹார்த்தமாகச் செய்த சடங்குகளைத் தனக்குஉடலாக்கிக் கொண்டாற்போலே. [தாதுசேர்தோள் கண் ணனல்லால்] - வைஜயந்தி உள்ளிட்ட தோள்மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணனை யொழிய வேறுப்ரயோஜநம்வேண்டாவென்கை. [இல்லை கண்டீர் சரணே] - புறம்பு ரக்ஷகமில்லைகிடீர்கோள். அதவா, இப்பாட்டு கைவல்யநிந்தையென்றுமாம். ஆத்மாநுபவ ஸுகத்திற் காட்டில் மிக்கதொருபுருஷார்த்தமில்லை யென்றே புத்தி பண்ணி. [கடை முறை வாழ்க்கையும்போம்] - பகவத்ஸமாச்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத் திலே சப்தாதி விஷயங்களையநுபவித்திருக்குமத்தையுமிழக்கும். ஆனபின்பு ஸர்வாதி கனாய் ஸுலபனான க்ருஷ்ணனே பரமப்ராப்யன் என்கை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவனை யொழிய வேறே யொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்றநிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவனல்லது சரணமில்லையென்கிறார். அன்றிக்கே, கைவல்யபுருஷார்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்.

[யாதுமித்யாதி] - ஸம்ஸாரத்வ்யதிரிக்தமா யிருப்பதொன்றைப்பற்றி, "இதொழிய வேறுரக்ஷகமாயிருப்ப தொன்றுமில்லை" என்று சொல்லி, அத்தை ரக்ஷகமாக நினைத்து. "ஸமர்த்தோ த்ருஸ்யதே கஸ்சித்" (ஸமர்த்தோத்ருஸ்யதேகஸ்சித்) என்கிற ப்ரதிபத்தியை அதிலேபண்ணி. [காது செய்வான் கூதைசெய்து] - காதுபெருக்கப்புக்கு, பண்டுள்ளயோக்யதையையுங் கெடுத்துச் கூதையாக்கினாற்போலே. [கடைமுறைவாழ்க்கையும்போம்] - தண்ணிதான முறைமையாலே வாழக்கடவவாழ்வுஉண்டு - ஸம்ஸாரத்திலே பசலுங் குட்டியுமாய் அளாய்குளாயாய்ப் போருமது: அதுவுங்கூடக் கெடுமித்தனை. ஆபத்தில்அது ரக்ஷகமாக மாட்டாது; அதின்பக்கலிலே ந்யஸ்தபரனாயிருக்கையாலே, தான்செய்துகொள்ளுமத்தனையுமிழக்கும். [மாதுகிலித்யாதி] - கம்ஸன் வாழ்கிறானாய், அலங்காரமாகக்கட்டினகொடியை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கென்றே நினைத்திருக்கிறாராயிற்று இவர். சிசுபாலன், பாணிக்ரஹணத்துக்கு உடலாகச்செய்த சடங்குகளடையத் தனக்கு உடலாக நினைத்துக்கைப் பிடித்தானிறே. [தாதித்யாதி] - வைஜயந்திதொடக்கமான மாலைகளாலே யலங்க்ருதமான திருத்தோள்களையுடையவன். வேறொருப்ரயோஜநந்தான் வேண்டா. [அல்லாலில்லைகண்டீர்சரணே] - அவனை யொழிய வேறு ரக்ஷகமாகவல்ல தொருவஸ்து இல்லைகிடிகோள். கைவல்யபரமானபோது. [யாதுமித்யாதி] - "இவ்வாத்மாநுபவஸுகத்துக்கு மேற்பட்டிருப்பதொன்றில்லை" என்று, அவ்வருகே பகவதநுபவஸுகமுண்டேயாகிலும் அத்தையே

ஒன்பதாம்பாட்டு.—யாதுமில்லை இத்யாதி. "யாதுமில்லை மிக்கதனில்" என்றுதொடங்கி, "கடைமுறைவாழ்க்கையும்போம் - கண்ணனல்லாலில்லைகண்டீர்சரண்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இவனையொழிய இத்யாதி. இந்தபதங்களைக் கடாக்ஷித்து ஆத்மாநுபவத்தைச் சொல்லுகிறதென்று யோஜநாந்தரம் - அன்றிக்கே இத்யாதி.

"இதனில் - மிக்கது - யாதுமில்லை என்றென்றதுகருதி" என்றந்வயம். ஸம்ஸாரத்பராயிருப்பார், "அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகளுக்கு ஈஸ்வரனையொழியவேறொரு சக்திமானில்லை" என்று புத்திபண்ணுமத்தை, இத் தேவதைபக்கலிலே இவர்கள்புத்திபண்ணுவர்களென்கிறார் - ஸமர்த்த இத்யாதி. "ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே । ஸமர்த்தோ த்ருஸ்யதே கஸ்சித் தம் விநா புண்டரீகாக்ஷம்". அதுகருதி - வ்யதிரிக்ததேவதையை நினைத்து. கூதை - மூளி. கடை - தண்ணிமை. பசலும் குட்டியுமாய் - குஞ்சும் குழந்தையுமாய். அளாய்குளாயென்று - ஸம்ப்ரம வ்யாபாரம். ஸம்ஸாரத்தில் வாழுகிறது கேடாம் ப்ரகாரமென்? என்ன அருளிச்செய்கிறார் - ஆபத்தில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. அது - தேவதாந்தரம். "மாதுகிலின் கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த - பெரிய துகிலையுடைத்தான கொடிகளையுடைய மாடங்களையுடைத்தாயிருக்கிற வடமதுரையிலே யவதரித்தவென்று பதார்த்தம். துகில் - ஆடை. கொடிகளாலுண்டான வலங்காரத்தைச் சொல்லி, அநந்தரம், "பிறந்த" என்றதுக்கு பாவம் - கம்ஸன் இத்யாதி. இப்படி பிறர்க்காகச்செய்தது அவனுக்கானவிடமுண்டோவென்ன - சிசுபாலன் இத்யாதி. சடங்கு - க்ரியை. "தாது" என்று - உள்ளிதழாய், மாலையைலக்ஷிக்கிறது. பதார்த்தம்-வைஜயந்தி இத்யாதி. இத்தால் பலிதம் - வேறொரு இத்யாதி. "கண்ணனல்லால் - சரண் - இல்லைகண்டீர்" என்றந்வயித்தர்த்தம்-அவனையொழிய இத்யாதி. "அதுகருதி" என்றதுக் கர்த்தம் - அவ்வருகே இத்யாதி. "அதுகருதி" என்றது - ஆத்மாநுபவத்தை புத்திபண்ணியென்ற

புத்திபண்ணி, காதுபெருக்கப்புக்கவன் அத்தைப் பலகாலும்அறுத்துவைத்து முன்புத்தை யோக்யதையுங்கூடக் கெடுக்குமாபோலே, ஹநுவத் ஸமாஶ்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே ஶப்தாதிவிஷயங்களை யநுபவித்திருக்கும் அத்தையும்இழக்கும்; ஆன பின்பு,ஸர்வாயிகனான க்ருஷ்ணனே பரமப்ராப்ய னென்கை. (க)

பத்தாம் பாட்டு.

கண்ணனல்லாலில்லைகண்டீர் சரணதுநிற்கவந்து
மண்ணின்பாரம்நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான்
திண்ணமாநும்முடைமையுண்டேல் அவனடிசேர்த்துய்ம்மினோ
எண்ணவேண்டாநும்மதாதும் அவனன்றிமற்றில்லையே.

ஆ.—(கண்ணனல்லால்) - க்ருஷ்ணனல்லது சரணில்லையென்றிங்ஙனே தன்னுடைய ரக்ஷகத்வத்தை நிலைநிறுத்துகைக்காக ஸ்ரீமதுரையிலேவந்துபிறந்தருளி, பூபாராவதரணம்பண்ணி, ஜகத்தைரக்ஷித்தருளினான்; ஆதலால், அவனேரக்ஷகன்; ஆன பின்பு, உங்களுக்காக வபிமாநிக்கப்படுகிற வஸ்துக்களையும் உங்களையும் அவன் திருவடிகளிலே மோக்ஷத்தேவ ஸமர்ப்பியுங்கோள்; உங்களுக்காக அபிமாநிக்கப்படுகிறவையும் நீங்களும் அவனுக்கே மோக்ஷம், இதிலொருஸம்ஶயமில்லையென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், தானேயெல்லார்க்கும் சரணமென்னும்இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காகவந்து திருவவதாரம் பண்ணியருளின க்ருஷ்ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[கண்ணனென்று தொடங்கி] - க்ருஷ்ணனல்லது ஶரண் இல்லை என்னும் இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும் அதுக்குஉறுப்பாகபூபாரத்தைப்போக்கியருளுகைக்காகவும் ஸ்ரீமதுரையிலேவந்து திருவவதாரம் பண்ணினான். உங்களுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் அவன்திருவடிகளிலே மோக்ஷத்தேவ த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். [எண்ணவேண்டா நும்மதாதுமவனன்றி மற்றில்லையே] - "இப்படியேயோ அன்றோ" என்று விசாரிக்கவேண்டா. அத்தனையுமன்று. உங்களுக்கு ஸாத்யமானவையெல்லாம் ஸாதித்துத்தருவான் அவனே. உங்களினவாகநீங்கள்அபிமானித்திருக்கிறவையெல்லாம்அவனினவே; அதிலொரு ஸந்தேஹமில்லையென்றுமாம்.

ப.—அநந்தரம், தானேப்ராப்யமும் ப்ராபகமுமென்னுமிடம் நிலைநிறுத்துகைக்காக அவதரித்து பூபாரநிரஸநம்பண்ணின க்ருஷ்ணன் திருவடிகளிலே, நீங்கள் ப்ராப்ய ப்ராபகமென்று நினைத்திருக்கிறவற்றையெல்லாம் த்ருடமாக ஸமர்ப்பியுங்கோளென்கிறார்.

படி.'அத்தையுமிழக்கும்'என்ற சப்தத்தாலே ஹநுவதநுஹவத்தை ஸூசிக்கிறது. இந்தபக்ஷத்தில், "சரண்" அன்றது - ப்ராப்யமென்றபடி. 'அதனில் - மிக்கது - யாதுமில்லை - என்றென்றது கருதி' யென்றுதொடங்கி, 'வாழ்க்கையும்போம்' ஆனபின்பு, 'மாதுகிலின்' இத்யாரப்ய, 'கண்ணனல்லாலில்லைகண்டீர் சரண்'என்றந்வயம். (க)

கண்ணன் - க்ருஷ்ணன், அல்லால் - அல்லது, சரண் - வேறுப்ராப்யப்ராபகங்கள், இல்லைகண்டீர் - இல்லைகிடீர்கோள்; அது - அந்த தன்னுடைய ப்ராப்யப்ராபகபாவம், நிற்க - லோகத்திலே நிற்கைக்காகவும், மண்ணின்பாரம் - தத்விரோதிகளான ஆஸுரப்ரக்ருதிகளாகிற பூபாரத்தை, நீக்குதற்கு - போக்குகைக்காகவும், வந்து - பரமபதத்தைவிட்டுவந்து, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதரித்தான், (ஆனபின்பு), நும் - உங்களுக்காகநினைத்திருக்கிற, உடைமை - பதார்த்தம், உண்டேல் - உண்டாமாகில், அவனடி - அவன்திருவடிகளிலே, திண்ணமா - த்ருடமாக, சேர்த்துய்ம்மினோ - ஸமர்ப்பியுங்கோள்; (இது), எண்ணவேண்டா - விசாரிக்கவேண்டா; நும்மது - உங்களுடைய, ஆதும் - ப்ராப்ய ப்ராபகரூபமான ஸமஸ்தபதார்த்தங்களும், அவனன்றி - "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்று ஸர்வவித பந்துவானவனையொழிய, மற்று - வேறு ஸ்வநிஷ்டமாயிருப்பதொரு வஸ்து, இல்லை - இல்லை.

இ.—பத்தாம்பாட்டில், தானே சரணமென்னும் இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக வந்தவதரித்த க்ருஷ்ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[கண்ணனல்லாலித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறு ஶரணமாவாரில்லையென்னுமிவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும் அதுக்குஉறுப்பாக பூபாரத்தைப்போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; உங்களுடைய ஆத்மாத்மீயங்களை, ஶேஷியாய் ஸுலபனானவன் திருவடிகளிலே ஶேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். உண்டேலென்கிறது - ஸ்வபக்ஷத்தாலில்லை; அவர்களுடைய அந்யதாப்ரதிபத்தியாலே வந்தன உண்டாகிலென்கை. எண்ணவேண்டா - "அவனதோ நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா; உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கேஶேஷம். அதவா, உங்களுக்கு ஸாத்யமானவையெல்லாம் ஸாதித்துத்தருவான் அவனொழிய வேறில்லை. ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாய்உங்கள் தலையிலுஞ் சிறிது கிடக்கிறதன்று. அவனே நிரபேக்ஷோபாயமென்றுமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. தான் ஶரணமென்னும் அர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக அவதரித்த க்ருஷ்ணன் திருவடிகளை யாஶ்ரயியுங்கோளென்கிறார்.

[கண்ணனித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறுஶரணமாவாரில்லை என்னும் இவ்வர்த்தம் நிலைநிற்கைக்காக, இவ்வர்த்தத்தை ஸ்த்தாபிக்கைக்காகவும், அதுக்கு உறுப்பாக பூபாரத்தைப்போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; ஆனபின்பு, நீங்களும், உங்களுடைமையென்று நினைத்திருந்தனவுண்டாகில் கடுக அவன்திருவடிகளிலே ஶேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள்! உண்டேலென்றது - ஸ்வபக்ஷத்தா

பத்தாம்பாட்டு.—கண்ணன் இத்யாதி. "கண்ணனல்லாலில்லைகண்டீர் சரணது நிற்க வந்து-வடமதுரைப்பிறந்தான் - அவனடிசேர்த்துய்ம்மினோ" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை- தான்சரணம் இத்யாதி.

"அது" என்றதுக்குப்பொருள் - இவ்வர்த்தம் என்றது. "மண்ணின்பாரம் நீக்குதற்கு" என்றிருக்க, "சரணதுநிற்க" என்கிறமாத்ரத்தைச் சொல்லுவானென்னென்ன - இவ்வர்த்தத்தை இத்யாதி. இவ்வர்த்தத்தை ஸ்த்தாபிக்கை ப்ரதாநப்ரயோஜநம், பூபாரநிரஸநமே ததுபயுக்தமென்றபடி. "நீக்குதற்கே" என்கிற ஏவகாரம் நிரர்த்தகாவ்யயமாதல்; "அதுநிற்க" என்கிறவிடத்திலே கூட்டி, அதுநிற்கவேயென்னுதல். திண்ணமா - த்ருடமாக. "உண்டேல்" என்கிற யஷிஶப்தார்த்தம் - உண்டேல் இத்யாதி. நும்மதாதும் - உங்களுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம், அவனன்றி -

லில்லை ; அவர்களுடைய அஜ்ஞாதாஜ்ஞாநத்தாலுண்டான ப்ரதிபத்தியாலேவந்தன வுண்டாகிலென்கை. [எண்ணவேண்டா] - "இதுதான் அவனதோ, நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா ; உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கேசேஷம். [மற்றில்லையே] - வேறில்லை. அன்றிக்கே, உங்களுடையஹ்ருதயத்தில் கர்த்தவ்யாம்ஶமடைய உங்கள்தலையிலே கிடக்கிறதல்ல ; எல்லாம் அவன்பக்கலிலே கிடக்கிறதென்னுதல். [மற்றில்லை] - ஃபலஸித்திக்கீடான ஸாதநமும் அவனை யொழியவில்லை. ஸமிதைபாதி, ஸாவித்ரிபாதியாக நீங்களும் ஒருதலை கூட்டுப்படவேண்டுவதில்லை. (க0)

பதினோராம் பாட்டு.

ஆதுமில்லைமற்றவனில் என்றதுவேதுணிந்து
தாதுசேர்தோள் கண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தீதிலாதவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்
ஓதவல்லபிராக்கள்நம்மையாளுடையார்கள்பண்டே.

ஆ.—(ஆதுமில்லை.) - ஆத்மாத்மீயங்களெல்லாம் அவனுக்கேசேஷமென்று துணிந்திருந்த சடகோபன், தாதுசேர்தோள்கண்ணனைச்சொன்ன, நிரவத்யமாய் கல்யாணமான இத்திருவாய்மொழியை ஓதவல்ல மஹாத்மாக்கள், நமக்குப்பண்டே ஸ்வாமிகளென்கிறார்.

ஒ —நிருத்தில் "ஸயெ்யஷ்ஷெவயஐஜீ" என்று தொடங்கி எம்பெருமான் அருளிச்செய்தாற்போலே, இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

[ஆதுமில்லைமற்றவனிலென்றதுவே துணிந்து] - அவனையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்கள் இல்லையென்று அத்யவஸித்து. [தாது சேரென்று தொடங்கி] - ஆழ்வார் அருளிச்செய்த நிர்தோஷமாய் ஸகலகுணமான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லவர்கள் பண்டேநமக்குஸ்வாமிகள்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குஃபலமாக, இதுகற்றவர்களைப் பற்றவுண்டான ஸ்வஶேஷத்வத்தை யருளிச்செய்கிறார்.

அவனில் - அவனையொழிய, மற்று - வேறு, ஆதும் - ப்ராப்யப்ராபகமாயிருப்பதொருவஸ்துவும், இல்லை -, என்றதுவே - என்னுமத்தையே, துணிந்து - அத்யவ

அவனுக்குஶேஷமன்றி, மற்றில்லை - ஸ்வநிஷ்டமாயிருப்பதில்லை; த்விதீயார்த்தத்துக்கு, நும்மதாதும் - உங்களுடையஸர்வபரங்களும், அவனன்றி - அவன்பக்கலொழிய, மற்றில்லை - உங்களிடத்திலில்லை யென்றபடி. உபாயாந்தரங்களும் ஸாத்யஸமமாகாநிற்க, "மற்றில்லை" என்பானென்னென்ன - ஃபலஸித்திக்கு இத்யாதி. "அவனையன்றிமற்றில்லை" என்றும், ஏவகாரார்த்தம் - ஸமிதை இத்யாதி. ஆவணியாவட்டத்துக்கு ஐந்நூறுஸமித்தும் ஐந்நூறுகாயத்ரியும் பண்ணலாகாதாற்போலே, அவனோடு நீங்களும் ஒருகூட்டுப்பட வொண்ணாதென்றபடி. கண்ணனல்லாலென்று தொடங்கி, நீங்குதற்கே - வந்து - வடமதுரைப்பிறந்தான், நும்முடைமையுண்டேல் - திண்ணமா - அவனடிசேர்த்துய்ம்மினே; எண்ணவேண்டா இத்யாப்யாந்வயஃ. (க)

ஸித்து, தாதுசேர் - மாலாலங்க்ருதமான, தோள் - தோள்களையுடையனுகையாலே நிரதிசயபோக்யனுய், கண்ணனை - ஆச்ரிதஸுலபனுனக்ருஷ்ணனை, குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தீது - ஶப்தார்த்தங்களிற்குற்றம், இலாத - அற்று, ஒண் - ஸஹ்ருதயமாய், தமிழ்கள் - த்ராமிடரூபமான, இவை ஆயிரத்துள் -, இப்பத்தும் - இப்பத்தையும், ஓதவல்ல - அப்யஸிக்கவல்ல, பிராக்கள் - உபகாரகரானவர்கள், பண்டே - இந்தஅப்யாஸார்த்தமான ஶரீரபரிக்ரஹம் பண்ணினகாலமே தொடங்கி, நம்மை - நமக்கு, ஆளுடையார்கள் - நாயகர். இது கலித்துறை. இது சீர்வகையொழித்த "கலிவிருத்தம்" என்பாருமுளர்.

இ.—நிகமத்தில் "அத்யேஷ்யதேசயஇமம்" என்று தொடங்கி அவன் அருளிச்செய்தாற்போலே இத்திருவாய்மொழியை அப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

[ஆதுமில்லை மற்றவனிலென்றதுவே துணிந்து] - அவனையொழிய வேறுப்ராப்யப்ராபகங்களில்லையென்று அத்யவஸித்து. [தாதுசேர்தோள் கண்ணனை] - இவர்க்குஇவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தாரார் என்னில்?—தோளுந் தோள்மாலையுமான அழகைக் காட்டியாயிற்று இவர்க்குஇவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தது. [தீதிலாதவொண் தமிழ்கள்] - அர்த்தாந்தரப்ரஸ்தாவமின்றி யிருக்கையும் ஸ்வார்த்தங்களைத் தானே வெளியிடவற்றாகையும். நிர்தோஷமாய் ஸகுணமானவை யென்றுமாம். ஓதவல்லபிராக்கள் - இப்பத்தை அப்யஸிக்கவல்ல உபகாரகர். ஸம்ஸாரத்தின் தண்மையும், ஈச்வரனே ப்ராப்யப்ராபகங்களென்றுமிறே யிதிற் சொல்லிற்று. இத்தை அப்யஸித்துநல்வழி போமிதுவேயிறே இவர்க்கு உபகாரகராகையாவது. [நம்மையாளுடையார்கள் பண்டே] - இத்தை அப்யஸிக்கைக்கு ஹேதுவான ஶரீரபரிக்ரஹம்பண்ணினகாலமே பிடித்து நாயகரென்கிறார்.

ஈடு.—பதினோராம் பாட்டு. நிகமத்தில், "அத்யேஷ்யதேசயஇமம்" (அத்யேஷ்யதேசயஇமம்) என்று தொடங்கி அவனருளிச்செய்தாற்போலே, இத்திருவாய்மொழி யப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரேன்கிறார்.

[ஆதுமில்லைமற்றவனிலென்றதுவேதுணிந்து] – அவனையொழிய வேறுப்ராப்யப்ராபகங்களில்லை யென்றத்யவஸித்து. இவர்க்குஇப்படி இந்த வ்யவஸாயத்தைக் கொடுத்

நிகமம் - ஆதுமில்லை இத்யாதி. "ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள் பண்டே" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - அத்யேஷ்யத இத்யாதி. "அத்யேஷ்யதேசயஇமம்தர்ம்யம்ஸம்வாதமாவயோ: । ஜ்ஞாநயஜ்ஞேநதேநாஹமிஷ்டஸ்ஸ்யாமிதி மேமதி:" இதிகீதாஸ்வஷ்டாதஶே. "நம்மையாளுடையார்கள்" என்னுநிற்க, "ப்ரியகரர்" என்பானென்னென்னில்?—அவர் ஸ்வஸ்வரூபத்துக்கீடாக அருளிச்செய்தாலும், வஸ்துஸ்திதியா ஸ்வப்ரவ்ருத்திகர்த்தாக்கள் தமக்கு ப்ரியவிஷயமென்னலாயிறே யிருப்பதாகையாலே இப்படியருளிச்செய்யக் குறையில்லை யென்றுகருத்து.

"அவனில் - மற்று - ஆதுமில்லை - என்றதுவே துணிந்து" என்றந்வயிப்பது. அவனையொழிய வேறேதுமில்லையென்கிறத்தையே யத்யவஸித்தென்று ஶப்தார்த்தம். "சதுரமென்று" என்கிறபாட்டாலே, "அவனையொழிந்தவிஷயங்கள் அபோக்யங்கள்" என்கையாலே - அவனே போக்யனென்றும், "மற்றொன்றில்லை" என்கிறபாட்டிலே, உபாயஸௌகர்யத்தைச்சொல்லுகையாலே - அவனேயுபாயமென்றும் ஸித்தித்ததிறே; அத்தையுட்கொண்டு 'வேறுப்ராப்யப்ராபகங்களில்லையென்றத்யவஸித்து' என்கிறார், மேலுக்கவதாரிகை - இவர்க்கு இத்யாதி.

தார்ஆர்? என்றால்,—வேறுண்டோ? அவனுடையதோளும் தோள்மாலையுமன்றோ? [தாது இத்யாதி]-அவனுடைய ஸௌந்தர்யமாயிற்று,இவரை இப்படி துணியப்பண்ணிற்று. [தீதிலாத] - கஶாந்தரப்ரஸ்தாவமின்றிக்கேயிருக்கை. [ஒண்தமிழ்கள்] - உள்ளுண்டான அர்த்தத்தையடைய வெளியிட்டுக்கொடுக்கவற்றாயிருக்கை. நிர்தோஷமாய், ஸகுணமானவையென்றுமாம். [ஓதவல்லபிராக்கள்] - இப்பத்தை யப்யஸிக்கவல்லஉபகாரகர். ஸம்ஸாரத்தின்தண்மையும், ஈஶ்வரனுடைய ப்ராப்யப்ராபகத்வமுமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று; இத்தை யப்யஸிக்கவே, தீயவழியைத்தவிர்ந்து நல்வழிபோகத் தொடங்குவர்கள். இதுக்குமேற்பட இவர்க்கு உபகாரமில்லையிறே இவர்கள்பண்ணுவது. [நம்மையாளுடையார்கள்பண்டே] - ஒருஜந்மத்திலே யித்தையப்யஸிக்கைக்கீடான அதிகாரத்தை யுடையராயிருப்பாராகில்,அவர்கள் பண்டேநமக்கு நாதஹஸ்தர். "அத்யேஷ்யதே" (அத்யேஷ்யதே) என்கிறபடியே, இத்தையப்யஸிக்கைக்கீடான யோக்யதையுள்ள ஜந்மந்தொடங்கி நமக்கு நாயகர். (கக)

இத்தால் ஃபலிதம் - அவனுடைய இத்யாதி. ப்ரபந்தத்துக்குத் தீதேதென்ன - கதாந்தர இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு, லக்ஷணஹாநியில்லாதவென்றபடி. ஒண்மை - அழகு. அழகேதென்ன - உள்ளுண்டான இத்யாதி. நிர்தோஷமாயென்றது - லக்ஷணஹாநியாகிற தோஷமின்றிக்கேயென்றபடி. இத்தையப்யஸித்தவர்கள் இவர்க்குச்செய்த உபகாரமேதென்ன - ஸம்ஸாரத்தின் இத்யாதி. "பண்டே" என்றதுக்கு - பூர்வஜந்மமேதொடங்கி நமக்கு நாதஹஸ்தரென்று விவக்ஷித்து, அன்றே தொடங்கி இவர்கள் தமக்கு நாதஹஸ்தரென்கைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - ஒரு ஜந்மத்திலே இத்யாதி. உக்தார்த்தத்தை ப்ரமாணமுகத்தாலே ஸ்த்திரீகரிக்கிறார் - அத்யேஷ்யத இத்யாதி. அதாவது - யஃ - ஆவயோஃ - இமம் ஸம்வாதம் - அத்யேஷ்யதே - அத்யயநம் பண்ணக்கடவனென்று பவிஷ்யதர்த்தமாகச் சொன்னாற்போலே, "பண்டே-நம்மையாளுடையார்கள்" என்றதுமென்றபடி. "பண்டே" என்றது - யோக்யதையுள்ள ஜந்மந்தொடங்கியென்றபடி. "அதீதே" என்னாதே, "அத்யேஷ்யதே" என்கையாலே - யோக்யதையுள்ள அன்றேதொடங்கி எனக்கு ப்ரியகரரென்றுதோற்றுகிறது" என்றருளிச்செய்வர். ஆதுமில்லை இத்யாரப்ய, க்ரமேணாந்வயஃ. "தாது" என்று - உள்ளிதழாய் மாலையைலக்ஷித்து, மாலையோடேசேர்ந்த தோளையுடைய க்ருஷ்ணனை யென்று ஃபாவார்த்தம். (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி

கொண்டபெண்டிர்தாம்முதலாக்கூறமுற்றூர்கன்மத்தால்
அண்டினவரென்றேயவரைவிட்டு - தொண்டருடன்
சேர்க்குந்திருமாலைச்சேருமென்றான் ஆர்க்குமிதம்
பார்க்குப்புகழ்மாறன்பண்டு.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்

இரண்டாந்திருவாய்மொழி--பண்டை நாள் ப்ரவேசங்கள்.

ஆ.—(பண்டைநாளாலே) - இப்படி எம்பெருமானுடைய உறவுடைமையை யநுஸந்தித்து, "இவ்வுறவுடையனான அவனோடே கலந்து பரிமாறவேணும்" என்று மநோரதித்துக்கொண்டு திருப்புளிங்குடியிலே போய்ப்புக்கு, அவ்விடத்தில், தன் திறத்து ஸாமாந்யகடாக்ஷமல்லது வேறொரு விசேஷகடாக்ஷம் பண்ணியருளக்காணாமையாலே சால இன்னாதாராய், "என்னை உன் அழகிய திருக்கண்களாலே நோக்கியருளவேணும்: திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணும்: திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட இருந்தருளவேணும்: எழுந்திருந்து என்னெதிரே வந்து அருளவேணும்" என்று இப்புடைகளிலே தம்முடைய மநோரதங்களை யடைய அபேக்ஷிக்கிறார்.

ஒ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே அவனுடைய நிருபாதிகஸம்பந்தத்தையறிவித்த ஆழ்வார் இப்படி பரமஸம்பந்தியானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே, அவனோடே யெல்லாப்பரிமாற்றமும் பரிமாறவேணுமென்று ஆசைப்பட்டுச்சென்றபடி பெறாமையாலே விஷண்ணராய்த்தம்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணியிருந்ததுக்குமேலே ஒரு சேஷ்டைகள் பண்ணாதே ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளுகையாலே "திருமேனியலசுகிறது" என்று அதிபீதருமாய் "என்னை உன்னழகிய திருக்கண்களாலே நோக்கியருளவேணும்: திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணும்: திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட விருந்தருளவேணும்: எழுந்திருந்து என்னெதிரே வந்தருளவேணும்" என்று தொடங்கி தம்முடைய மநோரதங்களையடைய அபேக்ஷிக்கிறார்.

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், கீழே, நிருபாதிகபந்துவான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபதயா ப்ராப்யதையை யருளிச்செய்து, அவன்கண்வளர்ந்தருளில் கைங்கர்யம்பண்ணுகையை மநோரதித்து, கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியானவனுடைய புண்டரீகாக்ஷத்வத்தையும், அநுரூபஸம்பந்தத்தையும், லக்ஷ்மீஸஹாயத்வத்தையும், ஊர்ஜஸ்வியாகாரதையையும், மந்தஸ்மிதஸம்பாஷணையையும், ஆச்ரிதார்த்தமான வாஹநாயுதவத்தையையும், அஸாதாரண பரிகரயோகத்தையும், அகிலலோக வந்த்யத்வத்தையும், அதிசயித ஸௌகுமார்யத்தையும், ஸ்ரீபூமி ஸேவ்யத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிசிஷ்டனான நீ, உனக்கு அஸாதாரண சேஷபூதராய்ப்போந்த எங்களுக்கு க்ருபைபண்ணி பூர்ணகடாக்ஷம்பண்ணவும், திருவடிகளையெடுத்துத் தலையிலேவைக்கவும் அங்கீகரிக்கும்போது, பிராட்டியோடேகூட எழுந்தருளியிருந்து அங்கீகரிக்கவும், ஆசாநுரூபமாக நடந்தெழுந்தருளிவரவும், முகமும் முறுவலுமாய்க்கொண்டு என் முன்னே நிற்கவும், நிற்கும்போது பெரியதிருவடியை மேற்கொண்டு திவ்யாயுதங்களையுமேந்திக்கொண்டு வரவும், அஸாதாரண பரிகரத்தோடேவந்து என்முன்னே எழுந்தருளிவந்திருக்கவும், ஸர்வலோகங்களுங்கண்டு வாழும்படி எழுந்தருளியிருக்கவும், இந்த ஸுகுமாரமானவடிவை நான் அநுபவிக்கும்படிபண்ணவும், நாய்ச்சிமாரை அடிமைகொண்டருளுகிறாப்போலே உன் திருவடிகளிலே யடிமைகொண்டருளவும் வேணு

மென்று, தம்முடைய மநோரதபரம்பரைகளை, திருப்புளிங்குடியிலே கிடந்தருளுகிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ப்ரார்த்தித்தருளுகிறார்.

இ.—இரண்டாம் திருவாய்மொழியில் கீழ்த்திருவாய்மொழியிலே "அல்லாதாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள்; அவனே நிருபாதிகபந்து" என்கிற அர்த்தத்தை அநுஸந்தித்து அதுக்கநுகுணமான பரிமாற்றத்துக்காக, பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே அவனோடே எல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டுச் சென்றபடி பெறாமையாலே விஷண்ணராய், அதுக்குமேலே ஒரு சேஷ்டைகள் பண்ணாதே ஏகரூபமாகக்கண்வளர்ந்தருளுகையாலே திருமேனியலைகிறதென்று அத்தலையிலே நோவைக்குறித்து அதிஶங்கிகளுமாய், "என்னார்த்தியுந் தீர்க்கிறிலன், தன் ஆர்த்தியுந் தீர்க்கிறிலன்" என்று வெறுக்கிறார். ஆராவமுதில் "என்னார்த்தி தீர்க்கிறிலன்" என்று வெறுத்தார். இரண்டையுங்குறித்து வெறுக்கிறாரிதில். "கோடியார் மாடக்கோளூர்" என்றதுவே தலையெடுத்து தம்மாற்றாமையெல்லாம் தோற்றும்படி, "என்னார்த்தி தீரக்குளிர நோக்கவேணும்; அநுகூலஸ்பர்ஶத்தாலே அகவாயில் ஸந்தோஷந்தோற்ற விக்ருதனாய்ப் பண்ணும் ஸ்மிதத்தை நான் காணப்பெறவேணும்; பிராட்டியும் தேவருமாயிருக்கிற இச்சேர்த்தியைக்காட்டியருளவேணும்; திருவடிகளை என்தலையிலேவைத்தருளவேணும்; நான்வந்து கிட்டினவித்தால் வந்த ப்ரீதிதோற்ற எழுந்திருந்து என்னெதிரே வரவேணும்" என்றுகொண்டு தம்முடைய மநோரதங்களடைய அபேக்ஷிக்கிறார். ப்ராப்தியை அநுபவித்தார் கீழ்; ப்ராப்திபலத்தை அபேக்ஷிக்கிறார் இதில்.

ஈடு.—கீழ்த்திருவாய்மொழியிலே - "அவனையொழிந்தாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள்: அவனொருவனுமே நிருபாதிகபந்து" என்றார்; நிருபாதிகபந்துவானால் பின்னை பந்துக்ருத்யம்பண்ணாதிருக்க வொண்ணாதிறே. இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டு இவர்சென்று கிட்டினவிடத்தில், இவரையேன்னென்னுதல், திருக்கண்களாலேகுளிரநோக்குதல், ஒரு வார்த்தைசொல்லுதல் செய்யக்கண்டிலர்; காணாமையாலே மிகவும் அவஸந்நரானார்; அது அவனுள்ளனாகத்தீருமிறே. அதுக்குமேலேயும் ஒன்றுண்டாயிற்று - "திருமேனி யலசும்படி ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளா நின்றான்: என்வருகிறதோ?" என்று ஒருபயமோடிற்று. கீழே, * ஆராவமுதிலே, "என்னார்த்தியைத்தீர்க்கிறிலன்" என்றின்னாதானார்; இங்கே "என்னார்த்தியும் தன்னார்த்தியுந் தீர்க்கிறிலன்" என்றின்னாதாகிறார். ஆக, "கோடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே" என்றஅதுவே தலையெடுத்து, பெரிய

பண்டைநாள் ப்ரவேஶம்; வ்ருத்தாநுவாத பூர்வகமாக இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - கீழ்த்திருவாய்மொழியிலே இத்யாதி. "பண்ணாதிருக்க வொண்ணாதிறே" என்று அநந்தரம் ஆகையாலே பந்துக்ருத்யம் செய்யவேணுமென்று திருப்புளிங்குடியிலேசென்று கிட்டினார் என்றிவ்வளவுங்கூட்டிக்கொள்வது. அது - அவஸாதம். அதேதென்ன - திருமேனி இத்யாதி. "திருவுடம்பசைய" என்றத்தைப் பற்ற - அலசும்படி என்றது. "எத்தனை காலம் கிடத்தி" என்றத்தைப்பற்ற - ஏகரூபமாக என்றது. அலசும்படி - அலைமாம்படி. * ஆராவமுதிலும் இப்படியன்றோ அபேக்ஷித்தது: இதுக்குவாசி ஏது? என்ன - கீழே இத்யாதி. தன்னார்த்தி தீர்க்கிறிலனென்றது அங்குமிங்கிலேயுஞ் சொல்லிற்றேயென்ன - ஆக, கோடியார் இத்யாதி. அதினுடைய அநுபாஷணமிதுவென்றபடி. 'ஆற்றாமையோடே' என்றதுக்கு, "விண்ணப்பம் செய்து" என்றத்தோடே யந்வயம். ""தாமரைக்கண்களால்நோக்காய்"" "பாதபங்கயமே தலைக்கணி

வாற்றுமையோடே, ''என்னுடையவார்த்தியெல்லாந்தீரும்படி திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேணும்; என்தலைமேலே திருவடிகளைவைத்தருளவேணும்; தேவரும் பிராட்டிமாருங்கூட எழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக்காட்டியருளவேணும்; ஸஞ்சயன் பெற்றபேற்றில் எனக்குக்குறையவொண்ணாது''. '' யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ'' (யத்ரக்ருஷ்ணௌசக்ருஷ்ணாசஸத்யபாமாசபாமிநீ) என்றுசொல்லுகிற படியே, அவ்விருப்பிலேயிறே யவனையழைத்துக்காட்சிகொடுத்தது. இப்படி ''ஸஞ்சயன் வந்தான்'' என்றறிவிக்க, ''நமக்குநல்லானொருவன்; உகவாதார்க்கும் இவ்விருப்பைப் போய்ச்சொல்லுவானொருவன்; அநுகூலனான இவனுக்கு விளைநீரடைத்தோமாகிறோம்: உகவாதார் மண்ணுண்ணும்படி கார்யம்பார்த்தோமாகிறோம்: புகுரவிடுங்கோள்'' என்றானிறே. நசாபிமந்யுர்நயமௌ தம் தேசமபிஜக்மது: (நசாபிமந்யுர்நயமௌ தம் தேசமபிஜக்மது:)- தாயுந்தமப்பனும் சேரவிருந்தவிடத்தில் ப்ரஜைகளுக்குச்சென்று கிட்டவொண்ணாமையில்லையிறே; அவர்களுக்குஞ்சென்று கிட்டவொண்ணாதபடியாயிற்றெழுந் தருளியிருக்கிறவிருப்பு; அவ்விருப்பிலேயிறே அவனையழைத்துக் காட்சி கொடுத்தது. அப்படியே ''தேவரும் பிராட்டிமாரும் எழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக்காட்ட வேணும்: என்னைக்கண்டகாட்சியிலே விக்ருதனாய் என்முன்னே நாலடியுலாவி யருள வேணும்: அநுகூலதர்சநத்தால் பிறக்கும் ஸ்மிதங்காணவேணும்: ஒருவார்த்தையருளிச் செய்யவேணும்''என்று இங்ஙனே தாமும் அவனும் அறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புக் கொண்டு ஏகாந்தத்திலே தம்முடைய மநோரதங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்து, ''இவற்றை இப்போதேபெறவேணும்'' என்று த்வரிக்கிறார். ப்ராப்தியை யநுஸந்தித்தார் கீழ்த்திருவாய்மொழியிலே; ப்ராப்திபலத்தை ஆசைப்பட்டு அபேக்ஷிக்கிறார் இதில்.

யாய்,'' ''உன் தாமரைமங்கையும் நீயும்'' இத்யாதியைப்பற்ற - திருக்கண்களாலே இத்யாதித்ரயமும். இப்படி யபேக்ஷிக்கைக்கு நாம்ஆருக்குக்காட்டினோமென்ன - ஸஞ்சயன் இத்யாதி. அவன்பெற்ற பேறேதென்ன - யத்ரக்ருஷ்ணௌச இத்யாதி. இதுக்கவதாரிகையாதல், ஸாவமாதல் - இப்படிஸஞ்சயன் இத்யாதி. விளைநீரடைக்கை - விளையும்படி யொருகாலே நீரைத் தேக்குகை. அப்படி யருளப்பாடிடும்படி ஒருவர்க்கும் கிட்டவொண்ணாதபடியிருக்குமோவென்ன - நசாபிமந்யு: இத்யாதி. ''யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ । உபௌ கௌரவஸ்ரேஷ்டௌ வாஸுதேவதநஞ்ஜயௌ'' இத்யாதி. உத்யோகபர்வணி ஏகோநபஞ்சாஸே த்ருதராஷ்ட்ரம் ப்ரதிஸஞ்ஜய:. இவ்விருப்பைக்காட்டிக்கொடுத்தானென்னுமது ஏற்றமாகைக்குஉறுப்பாக, அதொருவர்க்கும்சென்று ப்ரவேஸிக்கவொண்ணாத ஏகாந்தஸ்த்தலமென்கிறார் - தாயும் தமப்பனும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. ''பவளம்போல் கனிவாய்சிவப்ப நீகாணவாராய்'' என்றத்தைப்பற்ற - என்னைக்கண்ட இத்யாதி. ''தவழ்கதிர்முறுவல்செய்து'' என்றத்தைப் பற்ற - அநுகூல இத்யாதி. ''சோதிவாய்திறந்து'' என்றத்தைப்பற்றவாதல், ''கூவுதல்வருதல்செய்யாய்'' என்றத்தைப்பற்றவாதல் - ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும் என்றது. இப்பரிமாற்றம் லோகத்தில் நடப்பதொன்றல்லாமையாலே-தாமும் அவனுமறிந்ததாக இத்யாதி அருளிச்செய்கிறார். இதுக்கு ஸூசகஸப்தம் - ''கொடுவினையேனும்'' என்ற ஏகவசநமும், இருவருமான சேர்த்தியைச்சொல்லுகிற ''தாமரைமங்கையும்நீயும்'' என்றதுவும். இத்தால்பலிதம் - ப்ராப்தியை இத்யாதி. கீழ்த்திருவாய்மொழி - நாராயணஸப்தார்த்தம்; இது சதுர்த்யர்த்தம். ஆக, * ஆராவமுதில்பிறந்த வ்யஸநமும் * அங்குமிங்கிற் சொன்ன ஆர்த்தியும் இத்திருவாய்மொழியிலே தோற்றுகிறது. கைங்கர்ய ப்ரார்த்தனையாயிருக்கையே இதுக்கு விசேஷம்.

முதற் பாட்டு.

பண்டைநாளாலேநின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்
கொண்டுநின்கோயில்சீய்த்துப்பல்படிகாற்குடிகுடிவழிவந்தாட்செய்யும்
தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்துன்தாமரைக்கண்களானோக்காய்
தெண்டிரைப்பொருநற்றண்பணைசூழ்ந்ததிருப்புளிங்குடிக்கிடந்தானே!

ஆ.—பிராட்டி பரிக்ரஹமாகையாலே பண்டை உன்னாலே விஷயீக்ருதராய் ஸர்வவித கைங்கர்ய நிரதருமாய் எங்குங்குடியாக அடிமைசெய்துவர்த்திக்கிற அடியோங்களுக்கருளி, சோதிவாய்திறந்து உன்தாமரைக்கண்களால் நோக்காய்; தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடு கூடின அழகிய நீர்நிலஞ்சூழ்ந்த திருப்புளிங்குடியிலே வந்து கண்வளர்ந்தருளினவனே என்று ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து, விடாய்கெடும்படி திருக்கண்களாலே நோக்கியருளவேணுமென்கிறார்.

[பண்டைநாளென்று தொடங்கி] - பழையதாகவே உன்னுடைய கடாக்ஷத்தையும் அதுக்கு அடியான பெரியபிராட்டியாருடைய கடாக்ஷத்தையும் பெற்று குடிமுறையேஶாஸ்த்ரசோதிதமானவழி தப்பாதே கோயில்களிலே அஸாதாரண பரிசர்யாரூபமான அடிமைசெய்கிற அடியோங்களுக்கு க்ருபைபண்ணி. [தெண்திரையென்று மேலுக்கு] — தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடு கூடின அழகிய நீர் நிலம் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே வந்து ஸந்நிஹிதனாய்க் கண்வளர்ந்தருளினவனே!

ப.—முதற்பாட்டில், குலக்ரமாகதமாக கைங்கர்யம்பண்ணிப்போந்த அடியோங்களுக்கிரங்கி, திருப்பவளத்தைத் திறந்து ஸாந்த்வவாதத்தை யருளிச்செய்து, அழகிய திருக்கண்களாலே பார்த்தருளவேணுமென்கிறார்.

தெண் - தெளிந்த, திரை - திரையையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலையுடைத்தாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலங்களாலும், சூழ்ந்த - சூழ்ந்த, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தானே - கண்வளர்ந்தருளுகிறவனே! நின் - (நிருபாதிகபந்துவான) உன், திருவருளும் - திருவருளையும், பங்கயத் தாள் - (உன்னை யருளுவிக்கக்கடவளான) பங்கயத்தாள், திருவருளும் - திருவருளையும், ("ஜாயமாநம்ஹிவ—ஷ்டு" என்கிறபடியே), பண்டைநாளாலே - உத்பத்தி காலமே பிடித்து, கொண்டு - (உடையோமாய்க்) கொண்டு, நின் - நீ புகுந்தருளின, கோயில் - திவ்யதேசத்திலே, சீய்த்து - உசித கிஞ்சித்காரத்தைப்பண்ணி, பல்படிகால்- பல்படிகாலுண்டாம்படி, குடிகுடிவழி- குலக்ரமத்திலே (அப்படிகாலந்தோறும்புத்ரபௌத்ராதிஸஹிதராய்க்கொண்டு ஶாஸ்த்ரோக்தமார்க்கத்தைத் தப்பாதபடி), வரக்க—வராய், — வந்து ஆட்செய்யும் - வந்தடிமைசெய்து போருகிற, தொண்டரோர்க்கு - ஶேஷபூதரானவெங்களுக்கு, அருளி - நிரவதிகக்ருபையைப்பண்ணி, சோதி - உஜ்ஜ்வலமான, வாய் - திருப்பவளத்தை, திறந்து -, (ஸாந்த்வவாதம்பண்ணி), உன் - உனக்கஸாதாரணமான, தாமரை - தாமரைபோலேவிநக்கிற, கண்களால் - நக்கண்களாலே, நோக்காய் - பூர்ணமாகப்பார்த்தருளவேணும்.

இ—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து, விடாய் கெடும்படி குளிரநோக்கியருளவேணு மென்கிறார்.

[பண்டைநாளாலே நின்திருவருளும்] - நெடுநாள் கூடவே பண்ணிப் போந்த கடாக்ஷத்தையும்; எதிர்சூழல்புக்கு நெடுநாள் பட்டக்லேஶத்தின் பலமன்றோவிது? நெடுநாள் க்ருஷிபண்ணி பலவேளையிலேகைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியாக பெரிய பிராட்டியார்கடாக்ஷத்தையுங் கொண்டு; அவனுடைய அருளின் ஸ்வாதந்த்ர்யமுந்தத்தைத் தவிர்க்குமருள். ப்ராணபித்வத்தால்வந்தபாரதந்த்ர்யமிறே ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது? "என்னடியார தது செய்யார்" என்னும் உன்கடாக்ஷமும், "நகஸ்சிந் நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும் பெற்று. "க்ருபயா பர்யபாலயத்" என்று க்ருபாபரதந்த்ரனான உன்கடாக்ஷமும் அந்தபாரதந்த்ரயத்துக்கடியான அவள் கடாக்ஷமுமென்றுமாம். [நின்கோயில் சீய்த்து] - உகந்தருளின நிலங்களிலே அஸாதாரணபரிசர்யைபண்ணி தேஹாத்மாபிமாநிகள் தந்தாமுடையக்ருஹங்களைப்பேணுவர்கள், பிராட்டியடியாக ஸ்வத்ப்ரஸாதம் பெற்றவர்கள் உகந்தருளின தேஶங்களைப் பேணுவர்கள். [பல்படிகால்] - இன்று புதிதாய் வந்ததோ, நீ விஶேஷகடாக்ஷம் பண்ணத்தொடங்கினவன்று தொடங்கி வந்த தன்றோ? என்கை. [குடிகுடி] - ஸபரிகரமாக. [வழிவந்து] - ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறமுறை தப்பாதபடி வந்து ஆட்செய்யும். [தொண்டரோர்க்கருளி] - அடிமைசெய்கிற அடியோங்கள் பக்கலிலே க்ருபைபண்ணி. [சோதிவாய் திறந்து] - பூவலருமாபோலேயாயிற்று, வாய் திறந்து வார்த்தையருளிச் செய்யும்போது திருமுகத்திற்பிறக்கும் செவ்வி. "ஈஷத் ப்ரஹஸிதாக்ஷி" என்று வார்த்தையளவிலேயாயிற்று அக்ரூரன் அநுபவித்தது. தத்காலத்தில் திருமுகத்தில் செவ்வியுமத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [தாமரைக்கண்களால் நோக்காய்] - வார்த்தையில் தோற்றுதலைந்தமும் நோக்கிலேபநுபவிக்கும்படி குளிரநோக்கியருளவேணும். "ஸவ்யேநோத்ஸங்கமாரோப்ய ..." [தெண்டிரையித்பாறு] - தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடே சேர்ந்த அழகிய நீர்நிலஞ்சூழப்பட்ட திருப்புளிங்குடியிலேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே! தேவர்ஸௌகுமார்யத்துக்குச் சேரும் ஜலஸம்ருத்தியையுடைத்தான தேஶத்திலே கண்வளர்ந்தருளின வஶமுண்டு. இதின் கார்யம்பெறவேணு மென்கிறார். செய்தவம்ஶத்தில் க்ருதஜ்ஞநாக வொண்ணாதே.

ஈடு —முதற்பாட்டு. அநந்யகதிகளான அடியோங்களைக்குறித்து ஒரு வார்த்தை யருளிச்செய்து விடாய்கெடும்படி குளிர நோக்கியருளவேணு மென்கிறார்.

[பண்டைநாளாலே நின்திருவருளும்] - நெடுநாள்கூடப்பண்ணிப்போந்தஉன் கடாக்ஷத்தையும். நீ நேற்றுஇன்று பண்ணிப்போந்த க்ருஷியின்ஃபலமோ இது? * எதிர் சூழல்புக்கு நெடுநாள்பட்ட க்லேஶத்தின் ஃபலமன்றோ இது? நெடுநாள் க்ருஷியைப் பண்ணி ஃபலவேளையில்கைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியான

முதற்பாட்டு.—பண்டைநாள் இத்யாதி. "குடிகுடிவழிவந்தாட்செய்யுந்தொண்டரோர்க்கு-சோதிவாய்திறந்துஉன் தாமரைக்கண்களால்நோக்காய்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை அநந்ய கதிகளான இத்யாதி.

ஶப்தார்த்தம் - நெடுநாள் இத்யாதி. முன்பேதொடங்கி உண்டான உன்திருவருளு மென்று ஶப்தார்த்தம். "அருள்" என்று - தத்கார்யமான கடாக்ஷத்தை லக்ஷிக்கிறது. ஃலிதம் - நீ நேற்றின்று இத்யாதி. இது - தாம் பண்ணுகிற கைங்கர்யம். ஆனாலென்? என்ன - நெடுநாள் இத்யாதி. அதுக்கடியான - அவனருளுக்கடியான. இவளுடையவருள் அவன்கடாக்ஷத்துக்கு அடியாகை

பெரிய பிராட்டியார் கடாக்ஷத்தையுங்கொண்டு. அவனுடைய அருளின் ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்க்கும் அருள். ப்ரணயித்வத்தால்வந்த பாரதந்த்ர்யமிறே ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது. "என்னடியார் அதுசெய்யார்" என்னும் உன்கடாக்ஷமும் "***நகஶ்சிந்நாபராத்யதி***" (நகஶ்சிந்நாபராத்யதி) என்னும் அவள்கடாக்ஷத்தையும் பெற்று. "***க்ருபயாபர்யபாலயத்***" (க்ருபயாபர்யபாலயத்) என்று, க்ருபாபரதந்த்ரனை உன்னுடைய கடாக்ஷமும், அப்பாரதந்த்ர்யத்துக்கடியான அவள் கடாக்ஷமும் என்றுமாம். [பங்கயத்தாள் திருவருளும்] - உன்னருளின் ஸ்வாதந்த்ர்யஶங்கையைத் தவிர்க்குமவள்அருளும்படியாக வன்றோ வந்தது. அவளருள் அவன்ஸ்வாதந்த்ர்யத்தைப் பின்செல்லாதபடி பண்ணுமாயிற்று. "அவனுடைய பாரதந்த்ர்யம் ப்ரணயித்வமன்றோ? நிலைநிற்குமோ? ஸ்வாதந்த்ர்யமேயன்றோ ப்ரக்ருதி?" என்று அஞ்சவேண்டா; அவளருகேயிருக்க ஸ்வாதந்த்ர்யம் ஜீவியாது. ஆகையிறே, முற்கூற்றில் அவள் புருஷகாரமாகப் பற்றுகிறது. [நின்கோயில் சீய்த்து] - உகந்தருளினநிலங்களிலே, அஸாதாரணபரிசர்யை பண்ணி, தந்தாமுடைய ஸுக்ருதத்தாலே ஶ்ரவதநுக்ரஹ முடையரானவர்கள், தந்தாம் க்ருஹங்களைப் பேணுவர்கள்; பிராட்டி புருஷகாரமாக ஶ்ரவத்ப்ரஸாதம்பெற்றவர்கள், உகந்தருளின நிலங்களைப் பேணுநிற்பர்கள். "***நகிஞ்சிதபிகுர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத்***" (நகிஞ்சிதபிகுர்வாணோ விஷ்ணோராயதநேவஸேத்) - ஒருதுரும்பு நறுக்கேன் என்னுமவர்களுக்கும், உகந்தருளின நிலத்தைப் பற்றிக்கிடக்கவேணும். ஶரீரஸம்பந்தமற்றால் பெறவேணுமென்று ஆசைப்படுகிற அடிமையை, இஶ்ஶரீரத்தோடே கிடைக்குமாகில் விடானிறே. "வயலணியனந்தபுரங் கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாமே-" ப்ராப்யத்தை லக்ஷிக்கவே, ப்ராப்ய விரோதிகளைப் போக்கலாமா

---

பொன் - கநகமயமான, மலையின் - மஹாமேருவின், மீமிசை - மேலேபடிந்த, கார்முகில்போல - காளமேகம்போலே, காய்-(விரோதிவிஷயத்திலே) வெவ்விய, சினம் - சீற்றத்தையுடைய, பறவை - பெரியதிருவடியை, ஊர்ந்து - நடத்திக்கொண்டு, காய் - ப்ரதிபக்ஷங்களிலே காலாக்நிகல்பமான, சினம் - சினத்தைபுடைய, ஆழி சங்கு வாள் வில் தண்டு - ஸ்ரீபஞ்சாயுதத்தையும், ஏந்தி-, மா-பெரிய, சினம் - சினத்தையுமுடைய, மாலி-, மான் - மஹானான, மாலி - சுமாலி, என்று - என்றுப்ரஸித்தரான, அவர் - அவர்கள், அங்கு - அந்தயுத்தபூமியிலே, பட - நசிக்கும்படி, ("கோஸ்ரீ ஸைந்யம் ஸோரமே" என்கிற கணக்கிலே), கனன்று - பெரியசீற்றத்தோடே, முன் - (உகவாதார்)முன்னே, நின்ற - (இவ்வழகைக்காட்டி) நின்றவனாய், ("அங்கருளில்லாத்தன்மையாளன்" என்னும்கணக்கிலே), காய் - விரோதிகளுக்குஉபஸம்ஹாரகமான, சினம் - க்ரோதகுணத்தையுடைய, வேந்தே — ஸ்வாமியாய், கதிர் - விரோதிவர்க்கம் மடிகையாலே ஒளிவிடுகிற, முடியானே - திருவபிஷேகத்தை யுடையவனாய், (ஆஸ்ரிதார்த்தமாக), கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானாய், (அவ்வழியாலே), எம் - எங்களுடைய, இடர் - அநுபவாலாபரூபமான து:கத்தை, கடிவானே - கழிக்கக் கடவனாயிருக்கிறவனே ! அந்த வாஹநத்தோடும் ஆயுதங்களோடும் திருவபிஷேகத்தோடும் நான் காணும்படியாகவந்து நின் திருக்கண்தாமரைதயங்க நின்றருளாய்! என்று கீழே அந்வயம்.

இ—ஆறும்பாட்டில், உம்முடைய அபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி ஆனையிற்காட்டில் ப்ரபல ப்ரதிபந்தகங்களுண்டே யென்ன; மாலிப்ரப்ருதி ராக்ஷஸரிலும் வலிதோ என்னுடைய ப்ரதிபந்தகம் ? என்கிறார்.

[காய்சினப் பறவையூர்ந்து] - ப்ரதிபக்ஷத்தில் உனக்குத் தண்ணளியுண்டாகிலும் கண்ணற்றழியச் செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்] - அப்போதிருக்கும்படி மேருவைக்கினிய ஒரு காளமேகம் படிந்தாற்போலே. இப்போது இதுசொல்லுகிறது - பெரியதிருவடி முதுகில் இருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] - பெரியசினத்தை யுடையனாய்க் கொண்டு வந்தமாலி [மாலி மான்] - மஹானான மாலி, ஸுமாலி யென்றபடி. [என்று அங்கவர்பட] - என்கிறவர் அங்கே முடியும்படியாக. [கனன்று முன்நின்ற] - சீறி; அவர்கள்முன்னே நின்ற; வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே]- திருநாமம். காயுஞ்சினத்தையுடைய நிர்வாஹகனே! [கதிர்முடியானே] - விளங்காநின்ற திருவபிஷேகத்தை யுடையவனே! நீர் ரக்ஷகத்வத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - நீ தூரஸ்தனென்று தான் இழக்

கிறேனே? ஸம்ருத்தமான வயலையுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளின வனே! [காய்சினவாழி இத்யாதி] - காயுஞ் சினத்தையுடைய திருவாழி முதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆச்ரிதருடைய ஆபத்துக்களைப் போக்குகைக்கன்றோ? மேலிற்பாட்டிலே இப்பாட்டுக்குக் க்ரியை.

ஈடு.—ஆறும்பாட்டு. உம்முடைய அபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி ப்ரதிபந்தகங்கள் ப்ரவலமன்றோ என்னில்? — 'மாலி, சுமாலி, மால்யவான் இவர்களிலும் வலிதோ என் ப்ரதிபந்தகம்?' என்கிறார்.

[காய்சினப்பறவையூர்ந்து] - ப்ரதிபக்ஷத்தில் உனக்குக் கண்ணோடிலும் கண்ணற்றழியச்செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின்மீமிசைக்கார்முகில் போல்] - அப்போதிருக்கும்படி. மேருவைக்கினிய காளமேகம் படிந்தாற்போலேயாயிற்று இருப்பது. இப்போது இது சொல்லுகிறது - பெரியதிருவடி முதுகிலிருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] - பெரியசினத்தை யுடையனாய்க்கொண்டு வந்த மாலி. [மாலிமான்] - மஹானான மாலி. சுமாலியென்றபடி. [என்று அங்கவர்பட] - என்கிறவர்கள் அங்கே முடியும்படியாக. [கனன்றுமுன்னின்ற] - சீறி அவர்கள்முன்னேநின்ற. வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியாயிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே] - திருநாமம். காயுஞ்சினத்தையுடைய நிர்வாஹகனே! [கதிர்முடியானே] – விளங்காநின்ற திருவபிஷேகத்தை யுடையவனே! நீ ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - நீ ஸுரஸ்த்தனாய்த்தான் இழக்கிறேனோ? ஸம்ருத்தமானவயலையுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [காய்சினவாழி இத்யாதி]-காயுஞ்சினத்தையுடைய திருவாழிமுதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆச்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்காகவன்றோ? "எம்மிடர்கடிவானே - திருக்கண்தாமரைதயங்க நின்றருளாய்" என்று கீழிற்பாட்டிலே இப்பாட்டுக்கு க்ரியை. (௬)

ஆறும்பாட்டு.—காய்சினம் இத்யாதி. "மாசினமாலிமாலிமான்" என்று தொடங்கி "கனன்று" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - உம்முடைய இத்யாதி.

"காய்சினம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ப்ரதிபக்ஷத்தில் இத்யாதி. அன்றிக்கே, "காய்சினப்பறவை காய்சினவேந்தே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து பாவமாதல். கண்ணற்று - நிர்த்தயமாய். கண்-க்ருபை. இப்போதுஇது சொல்லுகிறதென்றது - வகுத்துச்சொல்லுகிறதென்றபடி. மீமிசை - மேலே. கினிய - கபளீகரிக்க. மாலியையும் சுமாலியையுஞ்சொன்னது - மால்யவானுக்கும் உபலக்ஷணம். சுமாலியும் மால்யவானும் ஓடிப்போகையாலே, "அவர்பட" என்று - தேஜோவதத்தைச் சொல்லுகிறது. "மான்மாலி-" மஹானானமாலி. "என்று - அவர் - அங்கு - பட -" என்று ப்ரஸித்தரானவர்கள் அந்தயுத்தபூமியிலே படவென்று ஸப்தார்த்தம். கனன்று - சீறி. ஸஹியாதே, சீறி முன்னே நிற்பானென்னென்ன - வடிவை இத்யாதி. அந்வர்த்தநாமமென்கிறார் - காயுஞ்சினத்தை இத்யாதி. இதுக்குபாவம் - நீ ரக்ஷணத்துக்கு இத்யாதி. கலி - ஸம்ருத்தி. "திருப்புளிங்குடியாய்" என்றதுக்குபாவம்-நீ தூரஸ்த்தனாய் இத்யாதி. "எம்" என்று - ஆச்ரிதரைச்சொல்லுகிறது. இப்பாட்டுக்கு க்ரியையைக் காட்டுகிறார் - எம்மிடர் இத்யாதி, 'பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல - காய்சினப்பறவையூர்ந்து - காய்சினவாழிசங்கு வாள்வில்தண்டேந்தி - மாசினமாலிமாலிமானென்று அவர் - அங்கு - படக் கனன்று முன்னின்ற காய்சினவேந்தே' என்று தொடங்கி, 'திருப்புளிங்குடியாய் - எம்மிடர்கடிவானே - நின்திருக்கண்தாமரை தயங்க நின்றருளாய்' இத்யன்வயம். (௬)

ஏழாம் பாட்டு.

எம்மிடர்கடிந்திங்கென்னையாள்வானே! இமையவர்தமக்குமாங்கனையாய்!
செம்மடல்மலருந்தாமரைப்பழனத்தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய்!
நம்முடையடியர்கவ்வைகண்டுகந்து நாம்களித்துளநலங்கூர
இம்மடவுலகர்காணநீயொருநாளிருந்திடாயெங்கள்கண்முகப்பே.

ஆ.—(எம்மிடர்.) உத்கர்ஷாபகர்ஷவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுக்கும் நீயல்லது வேறு ரக்ஷகருளரோ? ஆனபின்பு, உனக்கு நல்லராயிருப்பார் நீயிருந்தருளு மிருப்பைக் கண்டால் படும் பாடு கண்டு நாங்கள்வாழும்படியாக, இந்தலோகத்திலுள்ளவர்கள் காணும்படி எங்கள் கண்ணெதிரே நீ ஒருநாள் இருந்திடாய் என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், துர்பலரோடு ப்ரபலரோடு வாசியின்றிக்கே ரக்ஷகனான நீ, நாங்கள் வாழும்படி எங்கள் கண்ணெதிரே ஒருநாளிருந்திடாய் என்கிறார்.

[எம்மிடரென்று தொடங்கி] - ஸாம்ஸாரிகஸகலது:க்கங்களையும் போக்கி இங்கே என்னை ஆளுகிறவனே! எத்தனையேனும் அபிமானிகளான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! ஸம்ருத்தமான பழனங்களையுடைத்தாய் ஶ்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [நம்முடையடியர் என்று தொடங்கி] - திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுடைய ஸம்ப்ரமத்தைக்கண்டு நாங்கள் களித்து மிகவும் ப்ரீதராக, இந்த லோகத்திலுள்ள ஸாதுக்கள் காணும்படி.

ப.—அநந்தரம், அளவிலிகளான எங்களோடு அளவுடையாரோடு வாசியற ரக்ஷகனான நீ, அஸாதாரணசேஷபூதரான ஸூரிகளநுபவிக்கிற கிளர்த்தியைக் கண்டு நாங்களுகக்கும்படி எங்கள் கண்முகப்பே யிருந்தருளவேணுமென்கிறார்.

எம் - எங்களுடைய, இடர் - அவித்யாதி க்ருதமான ஸகல து:க்கங்களையும், கடிந்து - போக்கி, இங்கு - இந்த பூமியிலேவைத்து, என்னை-, ஆள்வானே - அடிமை கொண்டு போருமவனே, இமையவர்தமக்கும் - அநிமிஷரான ப்ரஹ்மாதி தேவர்களுக்கும், ஆங்கு - அங்கு, அனையாய் - அப்படி அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து ரக்ஷிக்குமவனே, செம் - சிவந்த, மடல் - இதழ், மலரும் - மலருகிற, தாமரை - தாமரையையுடைத்தான, பழனம் - நீர்நிலங்களையுடைய, தண் - குளிர்ந்த, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தாய் - ஆஶ்ரிதார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே! நம்முடை - நம்முடையாரென்னும்படி, அடியர் - உனக்குஅஸாதாரண சேஷபூதரான ஸூரிகளுடைய, கவ்வைகண்டு- (அநுபவஜநிதமான) கோலாஹலத்தைக் கண்டு, நாம் - நாங்கள், உகந்து - உகந்து, களித்து - ஆநந்திகளாய், உளம் - நெஞ்சிலே, நலம் - ப்ரேமமானது, கூர - வர்த்திக்கும்படியாக, மடம் - வாசியறியாத, இ - இந்த, உலகர் - லோகத்தாரும், காண - காணும்படி, நீ - (நித்யஸூரிகளை என்றுமிருந்து அநுபவிப்பிக்கிற) நீ, ஒருநாள் - ஒருநாளாகிலும், எங்கள் கண்முகப்பே— இருந்திடாய் - இருந்தருளவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், துர்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணுமென்கிறார்.

[எம்மிடர் கடிந்து]-எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலது:கங்களையும் போக்கி. [இங்கு என்னையாள்வானே] - ஸம்வஜ்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே அடிமைகொள்ளுகிறவனே! [இமையவர் தமக்குமாங்கனையாய்] - அகிஞ்சநரான எங்களுக்கேயன்றிக்கே, ‘‘ஸம்ஸ்வரோஹம்’’ என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி]-சிவந்தமடல் மலராநின்றுள்ள தாமரையையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய் ஸ்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [நம்முடையித்யாதி] - உன்னடியார் உன்னையநுபவிக்கிற ஆரவாரத்தைக் கண்டு நாங்களுகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] - அஜ்ஞரான ஸம்ஸாரிகளநுபவிக்கும்படி எங்கள் கண்வட்டத்திலே ஒருநாளிருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்ஸந விஷயமான நீ, ஒரு நாள் எங்கள் கண்ணுக்கு விஷயமாயிருந்தாலாகாதோ? உன்னுடைய தர்ஸநம் அதிக்ருதாதிகாரமாகவேணுமோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. துர்ப்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ, நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணு மென்கிறார்.

[எம்மிடர்கடிந்து] - எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலது:கங்களையும் போக்கி. [இங்கென்னையாள்வானே] - ஸம்வஜ்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே என்னை அடிமைகொள்ளுகிறவனே! [இமையவர் தமக்குமாங்கனையாய்] - அகிஞ்சநரான எங்களுக்கே யன்றிக்கே, ‘‘ஸம்ஸ்வரோஹம்’’ (ஸம்ஸ்வரோஹம்) என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி] - சிவந்த மடல் மலராநின்றுள்ள தாமரைகளையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய், ஸ்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! உள்ளும் புறம்புமெல்லாம் தாமரையாயிற்று. [நம்முடையித்யாதி] - உன்னடியார் உன்னையநுபவிக்கிற ஆரவாரத்தைக்கண்டு நாங்கள் உகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு, ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] - இந்த ஸம்ஸாரத்தில் அறிவுகேடராய், இடக்கை வலக்கையறியாதவர்களும் கண்ணாலே காணும்படியாக. [நீ ஒருநாளிருந்திடாய் எங்கள்கண்முகப்பே] - எங்கள்கண்வட்டத்திலே ஒருநாள் இருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்ஸநவிஷயமான நீ, ஒருநாள் எங்கள்கண்ணுக்கு விஷயமாயிருந்தா லாகாதோ? உன்னுடைய தர்ஸநம் அதிக்ருதாதிகாரமாக வேணுமோ? (எ)

ஏழாம்பாட்டு - எம்மிடர் இத்யாதி. ‘‘என்னையாள்வானே, இமையவர் தமக்குமாங்கனையாய் - எங்கள் கண்முகப்பே - இருந்திடாய்’’ என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - துர்ப்பலரோடு இத்யாதி. ‘‘எம்’’ என்கையாலே - துர்ப்பலரோடு என்றது. ‘‘இமையவர்’’ என்கையாலே - ப்ரபலரென்றது.

‘‘இங்கு’’ என்று விசேஷித்ததுக்குபாவம் - ஸம்வஜ்ஜ்ஞாநத்துக்கு இத்யாதி. ஆங்கு - அந்த லோகத்திலே. அனையாய் - அப்படிப்பட்டவனே இத்யர்த்த:. இமையவர்க்குமென்னாதே, ‘‘தமக்கும்’’ என்று விசேஷித்ததுக்குபாவம் - அகிஞ்சநரான இத்யாதி. ‘‘செம்மடல் மலரும் தாமரை’’ என்று - புறத்தியில் தாமரையைச்சொல்லி, ‘‘கிடந்தாய்’’ என்று அவனைச் சொன்னதுக்குபாவம் - உள்ளும் இத்யாதி. ‘‘நம்முடை -’’ உம்முடைய என்றபடி. உன்னடியார் என்றது - திருப்புளிங்குடியில் ஸ்ரீவைஷ்ணவர்களை. கவ்வை - ஆரவாரம். நலம் - ஸ்நேஹம். கூர - மிக்குவர. மடப்பம் - அஜ்ஞாநம். கீழ்வாச்ய விவரணம் - நித்யஸூரிகளுக்கு இத்யாதி. ‘‘எங்கள்’’ என்றதுக்குபாவம் - உன்னுடைய இத்யாதி. எம்மிடர் இத்யாதி, க்ரமேணாந்வய: (எ)

எட்டாம் பாட்டு.

எங்கள்கண் முகப்பேயுலகர்களேல்லாமிணையடி தொழுதெழுதிறைஞ்சித்
தங்களன்பாரத்தமதுசொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்துபூசிப்பத்
திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய்! திருவைகுந்தத்துள்ளாய்தேவா!
இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாள் இருந்திடாய்வீற்றிடங்கொண்டே.

ஆ.—(எங்கள்.) - "நீர்சொல்லிற்றெல்லாம் திருநாட்டிலேசெய்கிறோம்" என்றோ பேசாதிருந்தருளுகிறது? அங்ஙனே செய்தருளவமையாது; எங்கள்கண்ணெதிரே லௌகிகரெல்லாரும் உன்திருவடிகளிரண்டையும் நிரந்தரமாகத்தொழுது க்ருதார்த்தராய், தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய பக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட, இந்தலோகத்திலே இத்திருப்புளிங்குடியிலே பிராட்டியும் நீயுங்கூட ஒருநாளிருந்திடாய்! என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், திருநாட்டிலேயன்றோ நீர் அபேக்ஷிக்கிறபடி செய்யலாவதென்னில்; ஸகலலோகங்களும் கொண்டாடும்படி எங்கள் கண்ணெதிரே இஸ்ஸம்ஸாரத்திலே திருப்புளிங்குடியிலே உன்னுடைய வேண்டற்பாடுதோற்ற ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார்.

[எங்கள் கண்முகப்பேயென்று தொடங்கி] - எங்கள் கண்ணெதிரே லௌகிகர் எல்லாம் உன்திருவடிகள் இரண்டையும் நிரந்தரமாகத்தொழுது க்ருதார்த்தராய்த் தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய பக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட. [திங்களென்று தொடங்கி] - சந்த்ரபதத்தளவும் உயர்ந்த மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! அவ்வளவன்றி ஸ்ரீவைகுண்டத்திலேவந்து நின்றருளி மிகவும் விளங்காநின்றுள்ளவனே!

ப.—அநந்தரம், அந்தவிபூதியிலன்றியே, ஸகலலோகங்களுங் கண்டு உன் திருவடிகளிலே விழுந்து தொழுது வாழும்படி, இந்தவிபூதியிலும் திருப்புளிங்குடியிலே உன்வாசிதோற்ற எழுந்தருளியிருக்கவேணுமென்கிறார்.

திங்கள் - (தேவலோகத்தில் மேலெல்லையிலே வர்த்திக்கிற) சந்த்ரன், சேர் - சேரும்படியோங்கின, மாடம் - மாடங்களையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானாய், திருவைகுந்தத்து - திருவைகுந்தத்திலே, உள்ளாய் - எழுந்தருளி நிற்பானாய், தேவா - இந்த ஸௌலப்ய தேஜஸ்ஸையுடையனானவனே! எங்கள் கண்முகப்பே-, உலகர்கள் - லோகத்திலுள்ளார், எல்லாம் - எல்லாரும், அடி - உன் திருவடிகள், இணை - இரண்டையும், தொழுது - தொழுது, எழுது - எழுவதாய்க்கொண்டு, இறைஞ்சி - பாரதந்த்ர்யம் தோன்றும்படி ஸஸம்ப்ரமராய், தங்கள் - தங்களுடைய, அன்பு - ஐக்தியானது, ஆர - வர்த்தியாநிற்க, (அத்தாலே), தமது - தங்களுடைய, சொல் வலத்தால் - உக்திபலாநுரூபமாக, தலைத்தலைச்சிறந்து - ஒருவர்க்கொருவர் அஹமஹமிகையாலே மேல்விழுந்து, பூசிப்ப - ஸ்வஹஸ்தமாக ஸ்தோத்ரங்களைப் பண்ணும்படி, இ - இந்த, கண் - இடமுடைத்தாய், மா - (நீ வருகைக்கிடாக) ச்லாக்யமான, (ஸ்ரீமத்தான), ஞாலத்து - பூமியிலே, இதனுளும் - திருப்புளிங்குடிக்

குள்ளேயும், வீற்றிடங்கொண்டு - உன்மேன்மை இடங்கொண்டு தோன்றும்படி, ஒரு நாள் இருந்திடாய் - ஒருநாள் இருந்தருளவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், பரமபதத்திலேயன்றே இருப்பழகு காட்டலாவ தென்ன அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார்.

[எங்கள் கண்முகப்பே இத்யாதி] - எங்கள் கண்முகப்பே இருக்கவேணும். அது செய்தருளுமிடத்தில் லௌகிகரெல்லாம் திருவடிகளிற் சேர்த்தியழகு கண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய் ஆச்ரயித்து. [தங்களன்பார] - தங்கள்ப்ரேமம் மிக்குவர. [தமது சொல்வலத்தால்] - பாக்ய நுகுணமான சொற்களாலே யென்னுதல், தாந்தாம் சொல்லவல்லவளவாலே என்னுதல். "பொன்னாலே பூணுநூலிடுவீர்: நூறுபிராயம் புகுவீர்; "விஜயஸ்வ" என்னுதல். [தலைத்தலைச் சிறந்து பூசிப்ப] - மிகவும் மேல்விழுந்து கொண்டாட. [திங்கள் இத்யாதி] - ஸஞ்சாரசீலனான சந்த்ரனுக்கும் இளைப்பாறலாம்படியான மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! [திருவைகுந்தத்துள்ளாய்] - அவ்வளவன்றிக்கே, ஸ்ரீவைகுண்டத்திலே நின்றருளினவனே! [தேவா] - பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் நிலையால்வந்த புகர். [இங்கண் இத்யாதி] - இம்மஹாப்ருதிவியிலே திருப்புளிங்குடியிலே பரமபதத்திலிருக்கும் வேண்டற்பாட்டோடே ஒருநாள் இருந்தருளவேணும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. பரமபதத்திலேயன்றே இருப்பழகுகாட்டலாவதென்ன? - அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாளிருந்தருளவேணுமென்கிறார்.

[எங்களித்யாதி] - எங்கள்கண்முகப்பே இருக்கவேணும். அது செய்யுமிடத்தில், லோகத்திலுள்ளாரடங்க, திருவடிகளிலுண்டான சேர்த்தியழகுகண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய்க்கொண்டு ஆஸ்ரயித்து. [தங்களன்பார] - தங்கள் ப்ரேமம் மிக்குவர. [தமது சொல்வலத்தால்] - பாக்யநுரூபமான சொற்களாலே யென்னுதல்; தாந்தாஞ் சொல்லவல்லவளவாலேயென்னுதல்; "யதாஜ்ஞாநந்த்வக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம்" (யதாஜ்ஞாநந்துவக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம்) என்னக்கடவதிறே. அதாவது - "நூறுபிராயம்புகுவீர், பொன்னாலே பூணுநூலிடுவீர்" என்றாற்போலே சொல்லுகை. வங்கிப்புரத்துநம்பி "விஜயஸ்வ" (விஜயஸ்வ) என்ன, ஆண்டான் சொன்னவார்த்தையை

எட்டாம்பாட்டு.—எங்கள் இத்யாதி. "இதனுளனமொருநாளிருந்திடாய் வீற்றிடங் கொண்டே" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - பரமபதத்திலே இத்யாதி.

'எங்கள் கண்முகப்பே யிருக்கவேணும்' என்றது - அந்வயித்துச்சொன்னபடி. "தமது - வலத்து - சொல்லால்" என்றந்வயித்து, தந்தாமுடைய பலத்துக்கிடான சொற்களாலே யென்னுதல்; வலம் - பலம்; தாந்தாம் சொல்லவல்ல வளவாலே யென்னுதல். இரண்டாமர்த்தத்துக்கு ப்ரமாணம் - யதாஜ்ஞாநம் இத்யாதி. "யதாஜ்ஞாநந்த்வக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம் । தஸ்யைவ ஸஹிதம் ஸர்வே வக்ஷ்யாமி புருஷம் ஸ்துதம்" இதி ஸ்ரீநாராயணே ப்ரஹ்மருத்ரஸம்வாதே. அறிந்தவறிந்தவளவுகளிலே சொல்லுகையாவதேதென்ன - அதாவது இத்யாதி. இந்த ப்ரஸங்கத்திலே ஐதிஹ்யம் - வங்கிப்புரத்து நம்பி இத்யாதி. அதாவது - வங்கிப்புரத்து நம்பி, பெருமாளை சேவிக்க வெழுந்தருளினவளவிலே, இடைச்சிகளண்டையிலே யிருந்து ஸேவித்தாராய், அத்தையாண்டான் கண்டருளி, "ப்ராப்யமான ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயமிருக்க அவர்களண்டைக்கெழுந்தருளுவானென்" என்ன; "நாம் அல்பம் † விரகமாயிருப்போம், 'இவர்களொன்றுமறியாத கொச்சைகளாகையாலே, 'யஜமாநோ ப்ரவஸ்யதி' என்கிறபடியே ஈஸ்வரனுடைய

† விரகம் - தந்த்ரமுடையோர்.

நினைப்பது. [தலைத்தலைச்சிறந்துபூசிப்ப] - ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து மிகவும் ஆஸ்ரயித்துக் கொண்டாட. [திங்களிந்யாதி] - சந்த்ரனுக்கு இதஸ்ததஸ்ஸஞ்சரிக்கையாலுண்டான இளைப்பெல்லாம்ஆறும்படியிருக்குமாயிற்று மாடங்களினுடையவோக்கம்; அதிலே ஸந்நிஹிதனானவனே. [திருவைகுந்தத்துள்ளாய்] - அவ்வளவேயன்றிக்கே, திருவைகுந்தத்திலே நின்றருளினவனே. [தேவா] - பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் நிலையால் வந்த புகர். [இங்கண்மாஞாலத் திதனுளுமொருநாளிருந்திடாய்] - இந்த மஹாப்ருதிவியிலே, திருப்புளிங்குடியிலேயும் ஒருநாளிருந்தருளவேணும். இருக்குமிடத்தில்[வீற்றிடங்கொண்டு]- பரமபதத்திலிருக்குமாபோலே, உன்னுடைய வ்யாவ்ருத்திதோற்ற இருக்கவேணும். "இதனுளும்" - என்கிறதுக்குக் கருத்தென்னேன்னில்?—சாய்ந்தருளினவழகு கண்டோமுக்கு, "இவனிருந்தால்எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், "இப்படியிருக்கிறவன்றான் நின்றால் எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், இங்ஙனே சில அபேக்ஷைகள் பிறக்குமிறே இவர்களுக்கு; அது வேறொருபடியிறே நமக்கு. இவையெல்லாம் நரகாவஹமான விஷயங்களிலேயுண்டு; இவ்விஷயத்தில் தெரியாது. செய்ததெல்லாம் பரிதாகையும், அவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப்படுகையு மெல்லாம் நமக்கு ப்ராக்ருதவிஷயங்களிலே யுண்டாயிருக்கும். இப்படியிருக்குமோ வென்று அறியுமித்தனை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

வீற்றிடங்கொண்டுவியன்கோள்மாஞாலத்திதனுளுமிருந்திடாய்அடியோம்
போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்புதுமலராகத்தைப்பருக
சேற்றிளவாளைசெந்நெலூடுகளுஞ்செழும்பணைத்திருப்புளிங்குடியாய்!
கூற்றமாய்அசுரர்குலமுதலரிந்தகோநிவினைப்படைகள்வல்லானே!

கடாக்ஷமிவர்களிடத்திலே பள்ளமடையாயிருக்குங்காணும்' என்றங்கேயிருந்தேன்" என்ன; "'அவர்கள் சொன்னதேது, தேவரீரருளிச்செய்ததேது" என்று ஆண்டான் கேட்க; "'பாலுண்பீர், பழமுண்பீர்; பொன்னாலே பூணுநூலிடுவீர்; நூறுபிராயம் புகுவீர்; அழுத்த இரட்டையுடுப்பீர்" என்கிற இது அவர்கள் சொன்னவார்த்தை: 'விஜயஸ்வ, விஜயீஸ்வ' என்று நான் சொன்னவார்த்தை" என்று நம்பியருளிச்செய்ய; "அங்கே போயும் முருட்டு ஸம்ஸ்க்ருதம் விட்டீரில்லையே, எங்கேயிருந்தாலும் நாம் நாங்காணும், இங்கே யெழுந்தருளீர்" என்று ஆண்டானருளிச்செய்தவார்த்தை. தலைத்தலை - ஒருவர்க்கொருவர். சிறந்து - கிட்டி. பூசிப்ப - ஆஸ்ரயிக்க. திங்கள் சேருகைக்கு ஹேதுவேதென்ன - சந்த்ரன் இத்யாதி. சேருகை - படிகையாய், விஸ்ரமிக்கையாகிறது. இங்கே தீப்தியேதென்ன - பரமபதத்தில் இத்யாதி. "திவ்யகேஷா" இத்யாதி. "கண்" என்று - இடமாய், இடமுடைத்தான இம்மஹாபூமியிலென்றபடி. "இதனுளும்" என்றசப்தார்த்தம் - பரமபதத்தில் இத்யாதி. அது நமக்குக்காண்கிறோமில்லையேயென்ன - அது வேறே இத்யாதி. "வேறொருபடி" என்றத்தை விவரிக்கிறார் - இவையெல்லாம் இத்யாதி. இவ்விஷயத்தில் - ஐஹவத்விஷயத்தில். ஏதத்விவரணம் - செய்ததெல்லாம் இத்யாதி. பரிதாகை - ஸ்தூலமாகை. அதாவது - போராதேயிருக்குமென்றபடி. 'திங்கள் சேர்மாடம்' இத்யாரப்ய, 'தேவா - உலகர்களெல்லாம்' என்று தொடங்கி, 'இங்கண்மாஞாலத்திதனுளும் - இடங்கொண்டு - எங்கள் கண்முகப்பே - ஒருநாள் - வீற்று - இருந்திடாய்' இத்யந்வய:. (அ)

ஆ.—(வீற்றிடங்கொண்டு.) - என்னுடைய கண்ணிணையானது விடாய் தீர்ந்து குளிர உன்னுடைய செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை ஓவாதே பருகும்படியாக விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும்; ஆஶ்ரிதருடைய து:கத்தைப் போக்கவல்லையாயிருந்து அவை செய்யாதொழியலாமோவென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீறற்றியாதஸம்ஸாரத்திலே யிருக்கிறதென் என்னில்? ஆசையுடைய நாங்கள் நிரந்தரமாகக் கண்டுவாழுகைக்குஎன்கிறார்.

[வீற்றிடங்கொண்டென்றுதொடங்கி] - உன்னைக்கொண்டு கார்யமின்றிக்கே செல்லுகிற விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வேண்டற்பாடு தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும். இதில் உமக்கு ப்ரயோஜநம் என்னென்னில்?- அநந்யப்ரயோஜநரான நாங்கள் கண்களின் விடாய் கெடும்படி செவ்விப்பூப்போலே யிருக்கிற திருமேனியை வாழ்ந்தி நிரந்தரமாக அநுபவிக்கும்படி. [சேறுஎன்றுதொடங்கி] - செந்நெலின் நடுவே சேற்றிலே இளவாளைகள் களித்துத் துள்ளாநின்றுள்ள அழகிய நீர்நிலத்தையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! ம்ருத்யுபோலே அஸுரருடைய குலங்களைப்போக்கவல்லையாய் அதுக்கு உபாயமாய்க் கொடிய ப்ரவ்ருத்திகளையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே! இது பண்டு தம்முடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தம்.

ப.—அநந்தரம், நிரதிஶயஸௌகுமாரமான உன் வடிவை நாங்கள் கண்டநுபவிக்கை ப்ரயோஜநமாக இந்த விபூதியிலே எழுந்தருளியிருக்கவேணுமென்கிறார்.

சேறு - தண்ணிலமான சேற்றிலே வளருகையாலே, இளம்வாளை - இளகிப்பதித்தவாளைகள், செந்நெலூடு - செந்நெலூடே, உகளும் - உகளிக்களித்து வர்த்திக்கக்கடவதாய், செழு - ஸம்ருத்தமான, பணை - நீர்நிலங்களையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திக்கிறவனே, கூற்றமாய் - ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவாய்க்கொண்டு, அசுரர்குலம் - அசுரகுலத்தை, முதல் - கர்ப்பபர்யந்தமாக, அரிந்த - அறுத்துப்போகடுமவனே, கொடுவினை - அதுக்கீடான கொடுந்தொழிலையுடைய, படைகள் - ஆயுதங்களை, வல்லானே - விதேயமாகவுடையனானவனே! அடியோம்-உனக்கு அஸாதாரண ஶேஷபூதரான நாங்கள், போற்றி-மங்களாஶாஸநம் பண்ண, ஓவாதே - இடைவிடாதே, கண்ணிணை - கண்ணிணையானது, குளிர - பரிதாபம் தீர்ந்து குளிரும்படியாக, ("ஶோவநாஹ்யாம்ஶீதலீவ" என்கிறபடியே), புதுமலர் - செவ்விப்பூப்போலே புஷ்பஹாஸஸௌகுமாரமான, ஆகத்தை - உன்வடிவை, பருக - த்ருஷ்ணநுரூபமாக அநுபவிக்கும்படி, வீற்றிடங்கொண்டு - (உன்னுடைய ஸர்வாதிகத்வத்தால்வந்த) வேறுபாடு விஸ்த்ருதமாய்க்கொண்டுதோற்றி, வியன்கொள் - விஸ்தாரவத்தாய், மா - ஶ்லாக்யமான, ஞாலத்து இதனுளும் - இந்த ஜகத்தினுள்ளேயும், இருந்திடாய் - இருந்தருளவேணும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீறற்றியாத ஸம்ஸாரத்தில் இருக்கிறதென்னென்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டு அநுபவிக்கைக்கென்கிறார்.

[வீற்றிடங்கொண்டு] - ஶேஷித்வத்தால்வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்கொள்இத்யாதி] - விஸ்மயநீயமான மஹாப்ருதிவியான இதிலேயுமிருந்திடாய்,

உன்னைக்கொண்டுகார்யமின்றிக்கே அந்யபரமான ஸம்ஸாரத்திலே உன்னையொழியச் செல்லாமையுடையார் முன்பேயிருக்குமது உனக்கேற்றமோ? இதில் உமக்குப்ரயோஜநமென்னென்னில்,—[அடியோம்] - அநந்யப்ரயோஜநரான நாங்கள். [போற்றி] - அவ்விருப்பு நித்யமாய்ச்செல்லவேணுமென்று மங்களாஸாஸநம் பண்ணி. [ஓவாதே] - உச்சிவீடுவிடாதே. [கண்ணிணைகுளிர] - கமர்பிளந்தகண்கள் விடாய்கெட்டுக் குளிரும்படி. [புதுமலராகத்தைப்பருக] - செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியையநுபவிக்கும்படியாக புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை "ஜௌவநாஹ்ரம்ஸவிஷனிவ" என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளவாளை இத்யாதி] - செந்நெலின் நடுவே சேற்றிலே பஞ்சவிம்ஸதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத்துள்ளாநிற்பதான அழகிய நீர்நிலத்தையுடைய தேஸம். [செழும்பணை]- அழகிய மருதநிலமென்றுமாம். [கூற்றமாயித்யாதி] - ம்ருத்யுபோலே ப்ரதிபக்ஷத்தை நிஸ்ஸேஷமாகப் போக்கவல்லையாய். அதுக்குஉறுப்பாகக் கொடிய தொழிலையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே! ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதமென்னவுமாம். இதுக்கு முன்பு தம்முடைய ப்ரதிவந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக்கென்ன அஸக்தி உண்டாய் நான் இழக்கிறேனென்னுதல்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. 'இவ்விருப்பில் வாசியறியாத ஸம்ஸாரத்திலேயிருக்கிறதென்?' என்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டநுபவிக்க என்கிறார்.

[வீற்றிடங்கொண்டு] - ஸேஷித்த்வத்தால்வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்கோள் இத்யாதி]-விஸ்மயநீயமான மஹாப்ருதிவியானஇதிலேயுமிருந்திடாய் உன்னைக்கொண்டு ஒருகார்யமில்லாத ஸம்ஸாரத்திலே. [இதனுளும்இருந்திடாய்] - இந்தத் திருப்புளிங்குடியாகிற திருப்பதியிலேயும் இருந்திடாய். உன்னை யொழியச் செல்லாமையுடையார் முன்னேயிருந்தாயென்னும் இது போருமோ?[இதனுளும்இருந்திடாய்] - சாய்ந்தருளினபோதிருக்கும் இருப்பை யநுபவிப்பித்தருளிற்று. இனி, இருந்தால் இருக்குமழகையும் அநுபவிப்பித்தருளவேணும். "நமக்கு இவையெல்லாம் இங்கேகாணலாமிறே: சாய்ந்தருளினஅழகு, பெரியபெருமாள்பக்கலிலேகாணலாம்; நின்றருளினவழகு, நம்பெருமாள் பக்கலிலே காணலாம்; இருப்பிலுண்டானவழகு, பெரியபிராட்டியார்பக்கலிலே காணலாம்"என்று பட்டர் அருளிச்செய்வர். நாம் இங்கிருந்து நீர் பெறப்புகிற பேறு ஏதென்ன"- [அடியோமித்யாதி] - அடியோம் - அவ்விருப்பைப்படிவிட, அதுவே ஜீவநமாகவிருக்கிற

ஒன்பதாம்பாட்டு.—வீற்றிடம் இத்யாதி. "வீற்றிடங்கொண்டு" என்று தொடங்கி "புதுமலராகத்தைப்பருக" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இவ்விருப்பில் இத்யாதி.

இடங்கொண்டு - இத்தை ஸ்தாநமாகக் கைக்கொண்டு. "இதனுளும்" என்றதுக்கு இரண்டர்த்தம். மாஞாலமான இந்த பூமியிலும் என்று முந்தினது; இத்தையருளிச்செய்கிறார் - விஸ்மயநீயமான இத்யாதி. மாஞாலத்தில் வைத்துக்கொண்டு இந்தத் திருப்புளிங்குடியிலுமென்று இரண்டாமர்த்தம்; இத்தை யருளிச்செய்கிறார் - இந்தத் திருப்புளிங்குடி இத்யாதி. "இதனுளும்" என்கைக்கு இதுக்குத்தண்மையேதென்ன - உன்னைக்கொண்டு இத்யாதி. நித்யஸூரிகள் நடுவேயிருக்கக்கடவ நமக்கு இங்கே யிருக்கவேண்டுவானென்னென்ன - உன்னையொழிய இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு "இதனுளும்" என்ற ஸப்தார்த்தம் - சாய்ந்தருளின இத்யாதி. இங்கே காணலாம் என்றது-கோயிலிலே காணலாமென்றபடி. இவையெல்லாம் என்றது - கிடையழகும், இருப்பழகும், நிலையழகும். ஆகத்தை - திருமேனியை, ஆகம் - திருமேனி. விவரணம் - புஷ்ப

நாங்கள். [போற்றி]-இவ்விருப்புஇங்ஙனே நித்யமாகச் செல்லவேணுமென்று மங்களாஶாஸநம்பண்ணி. [ஓவாதே] - உச்சிவீடுவிடாதே. [கண்ணிணைகுளிர] - காணப்பெறுமையாலே கமர்பிளந்துகிடக்கிறகண்கள், விடாயெல்லாந்தீர்ந்து குளிரும்படியாக. [புதுமலர் இத்யாதி] - செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை யநுபவிக்கும்படியாக. புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை, "ஶோசநாஹ்ராத்ர் வஹிவ" (லோசநாப்யாம்பிபந்நிவ) என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளம் இத்யாதி] – அவ்வூரில் பதார்த்தங்களுடைய அபிமதலாபத்தாலே களித்துவர்த்திக்குமாயிற்று. செந்நெலின் நடுவே சேற்றிலே, பஞ்சவிம்ஶதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத் துள்ளாநிற்பதான அழகியநீர்நிலத்தையுடைய. [செழும்பணை] - அழகியமருதநிலமென்றுமாம். [கூற்றமாய்இத்யாதி] - ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டிருக்கிறவனென்னுதல்; அன்றிக்கே, ப்ரதிபக்ஷத்துக்குக் கூற்றமாய்க்கொண்டு அவர்களுடைய குலத்தை முதலிலேயரிந்து போகடுமவனாய், அதுக்கு உடலாகக் கொடியதொழில்களையுடைய திவ்யாயுதங்களையுடையனாயிருக்கிறவன் என்னுதல். இப்போது இதுசொல்லுகிறது— இதுக்குமுன்பு, தம்முடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக்கு என்னகுறையுண்டாய் இழக்கிறேன் என்னுதல். (௯)

பத்தாம் பாட்டு.

கொடுவினைப்படைகள்வல்லையாய்அமரர்க்கிடர்கெடஅசுரர்கட்கிடர்செய்
கடுவினைநஞ்சே!என்னுடையமுதே!கலிவயல்திருப்புளிங்குடியாய்
வடிவிணையில்லாமலர்மகள்மற்றைநிலமகள்பிடிக்கும்மெல்லடியை
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே.

ஆ.— (கொடுவினை.) - ஆஶ்ரிதவிரோதிநிரஸந ஸமர்த்தனுமாய், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாய், எனக்கு நிரதிஶயபோக்யனுமாய், திருப்புளிங்குடியிலே வந்து ஸந்நிஹிதனானவனே! வடிவழகுக்கொப்பில்லாத பெரியபிராட்டியாரும், அப்படியே

த்ராஸ இத்யாதி. "தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ராமோ வசநமப்ரவீத் । வவஸாவாஹுயி
தேவநம் ஶோசநாஹ்ராத்ர் வஹிவ" இதியுத்தகாண்டே. (கூ௯-எ) "புதுமலராகத்தை-ஓவாதே-
பருக" என்றந்வயிப்பது. இப்பதத்துக்கு பாவம் - அவ்வூரில் இத்யாதி. உகளுகை - ஸம்ப்ரம
மாக ஸஞ்சரிக்கை. செழும்பணை - ஸம்ருத்தமானவயல். மருதநிலம் - நாடுசார்ந்தப்ரதேசம்.
ஜலஸ்த்தலமாதல். "கூற்றமாய்" என்றது - திவ்யாயுதவிஶேஷணமாதல்; ஈஶ்வரவிஶேஷண
மாதல். இரண்டையும் அருளிச்செய்கிறார் - ப்ரதிபக்ஷத்துக்கு இத்யாதி வாக்யத்வயத்தாலே.
த்விதீயார்த்தத்திலே "கொடுவினைப்படைகள்வல்லானே" என்றதுக்கர்த்தம் - அதுக்குஉடலாக
இத்யாதி. இதுசொல்லுகிறதுக்கு ப்ரயோஜநத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இப்
போது இத்யாதிவாக்யத்வயத்தாலே. என்னகுறையுண்டாய்இழக்கிறேன் என்றது-விரோதியைப்
போக்கப் பரிகாரமில்லாமலோ, ஶக்தியில்லாமலோ இழக்கிறேன்? என்றபடி. 'சேற்றிளவாளை' என்று
தொடங்கி, படைகள்வல்லானே - அடியோம்போற்றி - கண்ணிணைகுளிரப் புதுமலராகத்தை -
ஓவாதே பருகும்படி - வியன்கொள்மாஞாலத் திதனுளும் - இடங்கொண்டு - வீற்று இருந்திடாய் இத்யந்வய: (௯)

யிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும் கூசிஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸௌகுமாரமான உன்னுடைய திருவடிகளை, அதில் போக்யதையையறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப் பண்ணின நானும்பிடிக்கும்படி, என்னையொருநாள் அங்கே யழைத்துக் கொள்ளுதல், இங்கே வருதல் செய்தருளவேணுமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், மிகவும் போக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமைசெய்யும்படி என்னை அங்கே அழைத்துக்கொள்ளுதல், இங்கேவருதல் செய்தருளவேணு மென்கிறார்.

[கொடுவினைப்படைகள வல்லையாய்] — உனக்கு ஶேஷமாய்வைத்தே உன்னோடு ப்ரதிகூலித்த சேதநர்பக்கல், நீரிலே நெருப்பெழுந்தாற்போலே சீறி ஆயுதமெடுக்கவல்லையாய். [அமரர்க்கென்று தொடங்கி] - தேவர்களுடைய ஸர்வ து:கங்களும் போம்படி அஸுரர்க்கு து:ஸ்ஸஹமான து:கத்தை விளைக்கும்படியான ப்ரத்யௌஷயமில்லாத நஞ்சாய் எனக்கு நிரதிஶய போக்யனாய்த் திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே! [வடிவிணையென்று மேனுக்கு]-வடிவழகுக்கு ஒப்பில்லாத பெரிய பிராட்டியாரும் அப்படியிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியாரும கூசி ஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸௌகுமாரமான திருவடிகளை அதில் போக்யதையை யறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணின நானும் பிடிக்கும்படி.

ப.—அநந்தரம், நாய்ச்சிமாரை யடிமைகொண்டருளினாற்போலே நானும் உன் திருவடிகளிலே யடிமைசெய்யும்படி, என்னை யங்கேயழைத்தல் இங்கே வருதல் செய்தருளவேணு மென்கிறார்.

கொடுவினை - விரோதிவிஷயத்தில் கொடுந்தொழிலான, படைகள் - ஆயுதங்களை, வல்லையாய் - (கார்யங்கொள்ள) வல்லையாய், அமரர்க்கு - அநுகூலரான தேவர்களுடைய, இடர் - து:கம், கெட - தீரும்படி, அசுரர்கட்கு - ப்ரதிகூலரானவசுரர்கட்கே, இடர் - து:கத்தை, செய் — விளைக்குமிடத்தில், கடு - சடக்கென்னும், வினை - ப்ரவ்ருத்தியையுடைய, நஞ்சே - நஞ்சானவனாய், என்னுடை - (அநந்யப்ரயோஜநனாய் அநந்யகதியான) எனக்கு, அமுதே-(அலப்யமான) அம்ருதமாய், (அத்யாஸந்நமாம்படி), கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைய, திருபபுளிங்குடியாய் - திருபபுளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! (''சுலிதெக்ஷணா'' என்னும்படி), வடிவு - வடிவழகுக்கு, இணையில்லா-நீயும் தகுதியில்லாதபடியான அதிஶயிதவைலக்ஷண்யத்தையுடைய, மலர்மகள் - கமலவாஸிநியானலக்ஷ்மியும, மற்றை - ஏவம்பூதவைலக்ஷண்யத்தையுடைய, நிலமகள் - ஸ்ரீபூமியும், பிடிக்கும - (தஙகளுடைய ஸ்வாபாவிக மார்த்தவத்தையுடைய திருக்கைகளாலே) பிடிக்குபபடியான, மெல - நிரதிஶயஸௌகுமார்யத்தையுடைய, அடியை - திருவடிகளை, கொடுவினையேனும் - (ப்ராபதனாய்வைத்து நெடுங்காலமிழக்கும்படி) கொடியபாபத்தையுடைய நானும், பிடிக்க - பிடிக்கும்படியாக, நீ கூவுதல் - நீ அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல்-(நான் அபேக்ஷித்தபடி இங்கே) வந்தருளுதல், ஒருநாள் செய்யாய் - ஒருநாள் செய்யவேணும்.

இ.—பத்தாம்பாட்டில், நிரதிஶயபோக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி என்னை யங்கேயழைத்தல் இங்கேவருதல் செய்தருளவேணு மென்கிறார்.

[கொடுவினைப் படைகள் வல்லையாய்] - உனக்கு ஶேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல் நீரிலே நெருப்பெழுந்தாற் போலே சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். "சிலரை அழியச்செய்ய" என்றால் ஶக்தனன்றிக்கேயிருக்கை. "யதிவா ராவணஸ்ஸ்வயம்" என்றிறேயிருப்பது. "நநமேயம்" என்று ப்ராதிகூல்யம் மிகைத்தாலும், "மஹாராஜாநாதி" என்று பின்பு கண்ணுங் கண்ணநீருமாய் நின்றிறே கொல்லுவது? [அமரர்க்கிடர் கெட] - அஸுரர்களாலே தேவர்களுக்குஉண்டான து:க்கந் தீரும்படி. [அசுரர்க்கிடர் செய்] - அஸுரர்க்கு து:கத்தை விளைக்கும். [கடுவினை நஞ்சே] - சடக்கென முடிக்கவற்றாய் ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சானவனே! [என்னுடை அமுதே] - எனக்கு நிரதிஶயபோக்யனானவனே! ஸாத்யமான தேவர்கள் அமுதன்று. [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - ஸ்வர்க்கத்திற் போகவேண்டா; கடலைக் கடையவேண்டா; திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்று இவருடைய அம்ருதம். [கலிவயல்] - ஸம்ருத்தமான வயல். [வடிவிணை இத்யாதி] - இவ்வடிவில்வந்தால் ஒப்பில்லை. ஐஶ்வத்தத்த்வமும் ஒப்பன்று; "தமேநயவேலிதேக்ஷணா" என்று எற்றயாய் நின்றதிறே. [மற்றை நிலமகள்] - அப்படிப்பட்ட நிலமகள். ஸஹவாஸத்தையென்னுமித்தனை. [பிடிக்கும் மெல்லடியை] - அவர்களும் கூசித் தொடவேண்டும்படி ஸுகுமாரமான திருவடிகளை. [கொடுவினையேனும் பிடிக்க] - "அவர்கள் ஸந்நிதியுமுண்டாயிருக்க இழப்பதே!" என்னும்இன்னாப்பாலே சொல்லுகிறார். * கண்கள் சிவந்துக்குப் பின்பு நிகர்ஷாநுஸந்தாநமில்லை. நிரதிஶயபோக்யனாய் ஸந்நிஹிதனான நீ ஸத்தையை நோக்குகைக்கு ஒருநாள் அங்கே அழைத்தல், இங்கேவருதல் செய்தருளவேணும். வருதல் என்கிற இத்தை முந்துறச் சொல்லாதொழிந்தது, அந்தஸமுதாயத்தைக் காணவேணுமென்னும் நசையாலே.

ஈடு.—பத்தாம்பாட்டு. நிரதிஶயபோக்யமான உன்னுடைய திருவடிகளிலே நானும் வந்து அடிமைசெய்யும்படி, என்னையங்கேயழைத்தல், நீ இங்கேவருதல் செய்யவேணுமென்கிறார்.

[கொடுவினைப்படைகள்வல்லையாய்] - நீரிலேநெருப்பெழுந்தாற்போலே, உனக்கு ஶேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல்சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். அவன் மாட்டாதது சிலரையழியச்செய்கையாயிற்று; "யதிவா ராவணஸ்ஸ்வயம்" (யதிவா (ராவணஸ்ஸ்வயம்) என்னுமவனிறே. கடலையணைசெய்து, ஊரைச்சூழப்போந்து, பின்னை அங்கதப்பெருமாளைப்புகவிட்டு, கையிலேவந்தகப்பட்டவனை. "மஹாராஜாநாதி"

பத்தாம்பாட்டு.—கொடுவினை இத்யாதி. "வடிவிணையில்லா மலர்மகள்" என்று தொடங்கி, "கூவுதல்வருதல்செய்யாய்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - நிரதிஶய இத்யாதி.

கீழெல்லாம் ஸந்நிஹிதனாக அருளிச்செய்து, இங்கே, "கூவுதல்வருதல் செய்யாய்" என்றது - மாநஸாநுபவ வைஶத்யத்தாலே ஸந்நிஹிதனாகவும், அது கலங்கினவாறே, தாம் இங்கும்; அவன் அங்குமாகத்தோற்றுகையாலே. கொடிதான வ்யாபாரத்தையுடைய ஶத்ருஸேநையை முடிக்கவல்லையாயென்று ஶப்தார்த்தம். * ப்ரஸக்தஸ்யஹி ப்ரதிஷேத: அன்றோ? "வல்லையாய்" என்று, ஸர்வஶக்திக்கு அஶக்திப்ரஸங்கமேதென்ன - நீரிலே இத்யாதி. அப்படிமாட்டாதேனென்ன - யதிவா இத்யாதி. "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தோஸ்யாபயம்மயா । விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்ஸ்வயம்" இதியுத்தகாண்டே ராம:. ஆனாலும் ஸம்ஹரித்தானேயென்ன - கடலை இத்யாதி. "மஹாராஜாநாதிரணாதுத்தஸ்தம் ப்ரவிஶ்யாத்ரிம் ஹராராஜ

(கச்சாநுஜாநாமி) என்று தப்பவிட்டது, "இன்னமோருகால் அநுகூலிக்குமோ?" என்று; "நான்முடிந்தேபோமித்தனை" என்று அவன்அதிலேமுதிரநின்றபின்பு, கண்ணுங்கண்ணீருமாயிறே நின்றுகொன்றது. இவர்கள் பண்ணும்ப்ராதிகூல்யத்தாலே யழியச்செய்யுமித்தனை போக்கி, தானாகஅழியச்செய்யமாட்டானாயிற்று. [அமரர் இத்யாதி] – அஸுரர்களாலே தேவர்களுக்கு உண்டான து:கந்தீரும்படி, அஸுரர்களுக்கு து:கத்தைவிளைக்கும். [கடுவினைநஞ்சே] - அப்போதே சடக்கெனமுடிக்கவற்றாய், ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சானவனே! [என்னுடை யமுதே]-அந்நஞ்சுதானே இவர்க்கு அம்ருதமாயிருக்கிறபடி. தேவர்களுடையஉப்புச்சாறன்று.[கலிவயல்இத்யாதி]- இவ்வம்ருதத்துக்குக் கடல்கடைதல்,ஸ்வர்க்கத்திலேபோதல் செய்யவேண்டா;திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்றிவ்வம்ருதம். [கலிவயல்]-ஸம்ருத்தமான வயல். [வடிவிணையித்யாதி]-வடிவில்வந்தால் ஒப்பின்றிக்கேயிருக்கும். ஸ்ரீவத்ஸத்வமும் ஒப்பன்று; "தஞ்சேயமஸிதேக்ஷணா" (தஞ்சேயமஸிதேக்ஷணா) என்றுஏற்றமாயே நிற்கிறதிறே. [மற்றைநிலமகள்]-ஏவம்ஸம்பந்தை யென்னுமத்தனையவளையும். [பிடிக்கும்மெல்லடியை]-அவர்களுந்திருவடிகளைப் பிடிக்கப்புக்கால், பூத்தொடுவாரைப்போலே "கன்றுகிறதோ!" என்றுகூசித் தொடவேண்டும்படியாயிற்று ஸௌகுமார்யமிருப்பது; அப்படிப்பட்ட திருவடிகளை. [கொடுவினையேனும்பிடிக்க] - * கண்கள்சிவந்துக்குப்பின்பு இவர்க்கு நிகர்ஷாநுஸந்தாநமல்லையிறே. "அவர்களும் ஸந்நிஹிதராய், ப்ராப்தியுமுண்டாயிருக்க, நான்இகழ்ந்திருப்பதே!" என்று, "பாவியேன்" என்பாரைப்போலே, 'கொடுவினையேன்' என்கிறார். [நீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே] - † (நிரதிசயபோக்யனாய் ஸந்நிஹிதனான நீ, ஸத்தையைநோக்குகைக்குஒருநாள் அங்கேயழைத்தல், இங்கேவருதல் செய்தருளவேணும். முற்பட 'வருதல்' - என்றிலராயிற்று, அஸ்ஸமுதாயத்தைக் குலைக்கவொண்ணாதென்னுமத்தாலே. அபேக்ஷையுடையார்பக்கல் அவனைத்தனிவிட்டிரார்களிறே, கூடக்கொடுவருவர்களென்னுமத்தைப்பற்றச் சொல்லுகிறார். (௧0)

ஸர்கம் । ஸுஸ்ரூஷஸ்வ பிதரம் ஸ்ரீஸமீக்ஷ்ய தாபஸம் ஊர்த்வம் க்ஷுபிதேரயஸ: " இதியுத்தகாண்டே. "ரேணாஹா நிபேவராண்" "ஸஜ்ஞாதபாஷ்ப: ஸ்வரவீரஹாஹா" இத்யாத்யுக்த ஸ்வபாவத்தைப்பற்ற - கண்ணுங்கண்ணீருமாய் என்றது. கண்ணும் கண்ணீருமானால் கொல்லக்கூடுமோவென்ன - இவர்கள்பண்ணும் இத்யாதி. க்ரூரவ்யாபாரத்தையுடைய நஞ்சேயென்று ஸப்தார்த்தம. நஞ்சின க்ரௌர்யத்தை த்வேதா அருளிச்செய்கிறார் - அப்போதே இத்யாதி. 'அந்நஞ்சுதானே' இத்யாதிக்கு - அஸுரவர்க்கத்துக்கு விநாசகனாயிருக்குமிருப்பு, தமக்கு போக்யமாயிருக்குமென்றுகருத்து. "என்னுடை யமுதே" என்றதுக்கு வ்யாவர்த்யம் - தேவர்களுடைய இத்யாதி. "கலிவயல் திருப்புளிங்குடியாய்" என்கிறத்தாலும் அவ்வம்ருதத்தில் வ்யாவ்ருத்தி - இவ்வம்ருதத்துக்கு இத்யாதி. கலி - ஸம்ருத்தி. இணை - ஒப்பு. ஒப்பில்லாமையின் சரமாவதி - ஸ்ரீவத்ஸத்வமும் இத்யாதி. ஆதிக்யமேதென்ன - தஞ்சேயம் இத்யாதி. "தாஸ்யே ஸ்ரீவைபோக்யந்தாந் தாஸ்யாஹிஜநகேக்ஷணா। ராவணோ ஹந்த்ரிவெவேஷீம் தஞ்சேயமஸிதேக்ஷணா" இதி ஸுந்தரகாண்டே ஹநுமாந். மற்றை - தத்துல்யையான. "மெல்லடி" என்றுவிசேஷித்ததுக்குபாவம் - அவர்களும் இத்யாதி. "கொடுவினையேன்" என்றவிது, அயோக்யதாநுஸந்தாநபரமோவென்ன; அன்று என்கிறார் - கண்கள் இத்யாதி. ஆனால் "கொடுவினை" என்கிறதுக்கர்த்தமேதென்ன - அவர்களும் இத்யாதி. முந்துற "வருதல்" என்னுதொழிவானென்னென்ன - முற்பட இத்யாதி. பிற்படத்தான் "வருதல்" என்றால் அஸ்ஸமுதாயங்குலையாதோவென்ன - அபேக்ஷை இத்யாதிவாக்யத்வயம். க்ரமேணாந்வய:. (௰)

பதினோராம் பாட்டு.

கூவுதல் வருதல் செய்திடாயென்று குரைகடல் கடைந்தவன்தன்னை
மேவிநன்கமர்ந்தவியன்புனல்பொருநல் வழுதிநாடன் சடகோபன்
நாவியல்பாடலாயிரத்துள்ளும்இவையுமோர்பத்தும்வல்லார்கள்
ஓவுதலின்றிஉலகமூன்றளந்தான்அடியிணைஉள்ளத்தோர்வாரே.

ஆ.—(கூவுதல்) - குரைகடல்கடைந்தவன் தன்னை பரமப்ராப்யமாகப்பற்றி, கூவுதல் வருதல் செய்திடாயென்று அபேக்ஷித்த வியன்புனல் பொருநல்வழுதிநாடன் சடகோபன் நாவியல்பாடலாயிரத்தில் இத்திருவாய்மொழியைவல்லார், ஆச்ரிதஸுலபனான எம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப்பெறுவரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் எம்பெருமானை நிரந்தரமாக ஸேவிக்கப்பெறுவரென்கிறார்.

“கூவுதல் வருதல்” என்றுதொடங்கி - இப்பாட்டுக்கெல்லாம் ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுடைய அபேக்ஷிதம் பூர்க்கைக்காக. கடலைக் கடைந்தருளின - எம்பெருமானை இத்தன்மையை யுடையையான நீ, என்னை அங்கேயழைத்தல் இங்கே வருதல்செய்து என் அபேக்ஷிதத்தைப் பூர்க்கருளவேணும் என்றர்த்தித்து, அப்படியே பூர்ணமாகப் பெறுகையாலே ஸம்ருத்தமான திருவழுதி நாட்டையுடைய ஆழ்வாருடைய அநாயாஸமான வாக்ப்ரவ்ருத்தியையுடைய ஆயிரம் திருவாய்மொழியிலும் விலக்ஷணமான இத்திருவாய்மொழி வல்லார்கள் ஆச்ரிதஸுலபனான எம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்தில் அநுபவிக்கப்பெறுவர் ;—ஆராவமுதில் ஆர்த்தருடைய ஆர்த்திதீர்க்கும் ஸ்வபாவனாயிருந்து வைத்து என்னுடைய ஆர்த்தி தீர்க்கிறிலனென்று இன்னாதானார் ; இதில் - பரமவேகதவாய்வைத்து என்னை அங்கீகரித்திலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளினால் திருவுடம்பலசாதோவென்றும் இன்னாதாகிறார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக ஸம்வத்ஸரலாபத்தை யருளிச்செய்கிறார்.

(ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக) குரை - அதிகோஷத்தை யுடைத்தான, கடல் - கடலை, கடைந்தவன்தன்னை - கடைந்தவனான ஸர்வேச்வரனை, கூவுதல் - அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல் - (நானிருந்தவிடத்தில்) வருதல், செய்திடாய் - செய்யவேணும், என்று - என்றபேக்ஷித்து, மேவி - அவனுடைய அங்கீகாரத்தைப் பெற்று, (அத்தாலே), நன்கு - நன்றாக, அமர்ந்த - தரித்தவராய், வியன் - ஸம்ருத்தமான, புனல் - ஜலத்தையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலையுடைத்தான, வழுதிநாடன் - திருவழுதிநாட்டுக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, நாவியல் - ஜிஹ்வாவ்யாபாரமான, பாடல் ஆயிரத்துள்ளும் - பாடல் ஆயிரத்துள்ளும்வைத்துக் கொண்டு, ஓர் - அத்விதீயமான, இவையும்பத்தும் - இப்பத்தையும், வல்லார்கள் - வல்லவர்கள், மூன்றுலகம் - த்ரைலோக்யத்தையும், அளந்தான் - அளந்துகொண்ட ஸர்வ

ஸாலஹன், அடி - திருவடிகள், இணை - இரண்டையும், ஓவுதல் - ஓவுதல், இன்றி -, உள்ளத்து - நெஞ்சிலே, ஓர்வார் - அநுஸந்திக்கப்பெறுவர்கள். இது எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் அவனை நிரந்தரமாக அநுஹவிக்கப்பெறுவர் என்கிறார்.

[குரைகடல் கடைந்தவன் தன்னை] - கூவுதல்வருதல் செய்திடாய் என்று ப்ரயோஜநாந்தரபரருடைய அபேக்ஷிதம் பூரிக்கைக்குக் கடல்கடைந்தவனை யாயிற்று ஆச்ரயித்தது. இச்சீலத்தையறிந்து, முறைகெடவாகிலும் முறையாலேயாகிலும் கண்டுகொண்டு நிற்கவேணுமென்றாயிற்றுச் சொல்லிற்று. [மேவி நன்கமர்ந்த] - இஸ்ஸ்வபாவத்தை யநுஸந்தித்து அத்தாலே „ரித்த. [வியன்புனல் இத்யாதி] - அத்தாலே விஸ்மயநீயமான ஜலத்தையுடைய திருப்பொருநலையுடைத்தான திருவழுதிவள நாட்டையுடைய ஆழ்வார். [நாவியல் பாடல்] - மனஸ்ஸஹகாரமின்றிக்கே சொன்னவை. [ஆயிரத்துளிவையும் பத்தும் வல்லார்கள்] - விலக்ஷணமான இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் ஆச்ரிதஸாலஹனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுஹவிக்கப்பெறுவர். "யதி நாமஸஹவிதே ததாவதாஷிக்ருதீவஷா" என்று இது தன்னைப் பேறாகச் சொல்லிற்றிறே. * ஆராவமுதில் ஆர்த்தரக்ஷணம் பண்ணுமவன் என்னுடைய ஆர்த்தி தீர்க்கிறிலன் என்றார். இத்-பரமபதஸ்யவாய் வைத்து என்னை அங்கீகரித்திலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளினால் திருவுடம்பலசாதோ என்றும் இன்னதாகிறார்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், அவனை நிரந்தரமாக அநுஹவிக்கப்பெறுவரேன்கிறார்.

[கூவுதல்இத்யாதி] - 'குரைகடல்கடைந்தவன்றன்னை கூவுதல்வருதல்செய்திடாய்'என்றாயிற்றுஇவர்சொல்லிற்று. முறைகெடவுமாம். முறையிலேயாகவுமாம், காணுமித்தனையேவேண்டுவது. [குரைகடலித்யாதி] - இவ்வபேக்ஷையில்லாதார்க்கும் உடம்புநோவக்கடல்கடைந்து அம்ருதங்கொடுக்குமவனையாயிற்று இவர் அபேக்ஷித்தது [மேவிநன்கமர்ந்த] - இந்தஸ்வபாவாநுஸந்தாநத்தாலேபொருந்திக் கால்தரையிலேபாவினாராயிற்று. [வியனித்யாதி] - விஸ்மயநீயமான நீரையுடைய திருப்பொருநலையுடைய திருவழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகரான ஆழ்வார். [நாவியல்பாடல்] - மநஸ்ஸஹகாரமுமொழியவா

நிகமம் - கூவுதல் இத்யாதி. "இவையும்பத்தும்வல்லார்கள்" என்றுதொடங்கி, "உள்ளத்தோர்வாரே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

அந்வயித்தர்த்தம் - குரைகடல் இத்யாதி. "வருதல்" என்றதே, "கூவுதல்" என்று முற்படவழைப்பானென்னென்ன - முறைகெடவுமாம் இத்யாதி. உடைமையிருந்தவிடத்தே யுடையவன் வந்து கைப்பிடித்துக்கொண்டுபோகை ப்ராப்தமாகையாலே, வருகைமுறை; பார்யையை யாளிட்டழைக்கை முறைகேடானவோபாதி, கூவுகையும் முறைகேடு. குரை - கோஷிக்கிற. "குரைகடல்கடைந்தவன்றன்னை" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - இவ்வபேக்ஷை இத்யாதி. "குரைகடல்கடைந்தவன்றன்னை - கூவுதல்வருதல்செய்யாய்" என்றுசொல்லி, 'இந்தஸ்வஹாவாநுஸந்தாநத்தாலே' இவனைக்கிட்டி யென்றுகூட்டுவது. நன்கமர்ந்த - நன்றாகத் தரித்த. தரையில் கால்பாவிநின்றவென்றபடி. பொருநல் - திருத்தாம்ரபர்ணி. "நாவியல்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - மநஸ்ஸஹகாரம் இத்யாதி. நாவியல்பாடல் - ஜிஹ்வாவ்யா

யிற்றுச்சொல்லிற்று. [ஓவுதலித்யாதி] - ஆஶ்ரிதஸௌலப்யனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப்பெறுவர். இத்தனைபோதும், இவர்தாம் "இவற்றைப்பெறவேணும்" என்னும் அபேக்ஷையோடே, "திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணும், திருவடிகளைத்தலைமேலேவைத்தருளவேணும்; தேவரேழுந்தருளியிருக்குமிருப்பைக்காணவேணும்; நாய்ச்சிமாரும் தேவரீருமாயிருக்கும்படிகாணவேணும்; உலாவும்படி காணவேணும்; ஸ்மிதம் இருக்கும்படி காணவேணும்" என்று ஆசைப்பட்ட இவர்க்கு அப்போதே கிடையாமையாலே, "இவற்றைப்பெறவேணும்" என்னும் மநோரதந்தானே பேறாய்த் தோற்றிற்று; இத்தையப்யஸித்தவர்களுக்கும் இம்மநோரதம் மாறாதே முடியச்செல்லும் என்கிறார். "[illegible]" (யதிநாஸம்நவிந்தேததாவதாஸ்மிக்ருதீஸதா) என்கிறபடியே. (கக)

பாரமான பாடலென்று ஶப்தார்த்தம். "உலகமூன்றளந்தானடியிணை - ஓவுதலின்றி - உள்ளத்தோர்வார்" என்றந்வயிப்பது. "ஓவுதலின்றி" என்றதுக்கர்த்தம் - நிரந்தரமாக என்று. ஓர்வார் - அநுஸந்திக்கப் பெறுவார்: அநுபவிக்கப்பெறுவாரென்றபடி. இது கற்றார்க்கு ப்ராப்தியை ஃபலமாகச்சொல்லாதே, மநோரதத்தை ஃபலமாகச்சொல்லுவானென்? என்ன - இத்தனைபோதும் இத்யாதிவாக்யத்வயம். மநோரதமும் ஃபலமோவென்ன, அதுக்குப்ரமாணம் - யதிநாஸம் இத்யாதி ஜிதந்தாயரம், "[illegible]" இதி பூர்வார்த்தம். 'குரைகடல்கடைந்தவன்தன்னை - கூவுதல்வருதல் செய்திடாய்' என்றுதொடங்கி, 'இவையும்பத்தும்வல்லார்கள் - உலகமூன்றளந்தானடியிணை - ஓவுதலின்றி - உள்ளத்தோர்வாரே' இத்யந்வயः.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி

பண்டையுறவானபரனைப் புளிங்குடிக்கே
கண்டெனக்கெல்லாவுறவின்காரியமும் - தண்டறநீ
செய்தருளென்றேயிரந்த சீர்மாறன்தாளிணையை
உய்துணையென்றுஉள்ளமே! ஓர்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்

மூன்றுந்திருவாய்மொழி--ஓராயிரம் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(ஓராயிரம்.) - இப்படி ஆழ்வார் அபேக்ஷிக்க, "நீர் இங்ஙனே ப்ரார்த்திக்க வேணுமோ? நம்மோட்டைக் குடற்றுடக்கறியீரோ?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, அவற்றையநுஸந்தித்து இனியராகிறார்.

ஒ.—மூன்றாம் திருவாய்மொழியில், கீழிற்றிருவாய்மொழியிலே, "கூவுதல் வருதல் செய்யவேணும்" என்று எம்பெருமானை ப்ரார்த்தித்த ஆழ்வார்க்கு, அவனும் "நான் நாராயணனல்லேனோ? நீர்அபேக்ஷித்தபடியே செய்கிறோம்" என்று தன்னுடைய நாராயணத்வத்தைக் காட்டியருள; அந்த நாராயணத்வப்ரகாரத்தை அநுஸந்தித்து "அவனைக் காணவேணும்" என்றுஆசைப்பட்டுக் காணப்பெறாமையாலே ஶிதிலஹ்ருதயராய், "ஏதேனுமொருபடி அவனிருந்தவிடத்திலே சென்றாகிலும் அவனுடைய ஶீலவத்தையின் மிகுதியாலே அடிமைசெய்ய விரகில்லை" என்று அவனுடைய ஸௌஶீல்யாதிஶயத்தைப் பேசிமுடிக்கிறார்.

ப.—மூன்றாந்திருவாய்மொழியில், கீழே - கைங்கர்யப்ரார்த்தனையைப் பண்ணி "கூவுதல்வருதல்செய்யவேணும்" என்றுஅபேக்ஷிக்க, அவனும் தன் நிருபாதிகஸம்பந்தத்தாலே "நீர்அபேக்ஷிக்கவேணுமோ நம்முடையகார்யஞ்செய்கைக்கு?" என்று தன்னுடைய ப்ரகாரப்ரகாரி ஸம்பந்த த்யோதகமான நாராயணத்வத்தை ப்ரகாசிப்பிக்கக் கண்டு; அதினுடைய கார்யமான ஸர்வலோகரக்ஷண ஸமர்த்தமாயுள்ள திவ்யநாம ஸம்பத்தையும், ரக்ஷணார்த்த வ்யாபாரத்தையும், அகிலவேதவேத்யதாப்ரகாரத்தையும், நித்யஸூரிபோக்யதையையும், அதினுடைய நிருபமவைலக்ஷண்யத்தையும், அநிஷ்டநிவ்ருத்திஇஷ்டப்ராப்திஹேதுவான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், ப்ரபலாநிஷ்டநிரஞ்சநத்வத்தையும், அபீஷ்டதேசவர்த்தித்வத்தையும், ஆஶ்ரயணம் மிகையான அதிஶயிதஶீலத்வத்தையும், அதினுடைய வாசாமகோசரமஹத்தையையும் அநுஸந்தித்து, ஏவம்வித ஸ்வபாவனான ஸர்வேஶ்வரனை யநுபவிக்க ஆசைப்பட்டு அவனுடையஶீலத்திலே வித்தராய் அநுபவந்தன்னிலும் அக்ஷமரான ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

இ.—மூன்றாந்திருவாய்மொழியில், "கூவுதல்வருதல் செய்யாய்" என்றார் கீழே; அவன் உம்மைப் பெறுகைக்கு நாமன்றோ ப்ரார்த்திக்கக்கடவோம் என்று நாராயணத்வத்தால்வந்த தன்னோட்டை ப்ராப்தியைக் காட்டிக்கொடுக்க; அந்தநாராயணத்வப்ரகாரத்தை யநுஸந்தித்து, "அவனைக் காணவேணும்" என்றுஆசைப்பட்டுக் காணப்பெறாமையாலே ஶிதிலஹ்ருதயராய் நாராயணத்வத்தில் எல்லையான ஶீலகுணத்தை அநுஸந்தித்து ஏதேனுமொருபடி அவனிருந்தவிடத்தே சென்றாகிலும் அவனுடைய ஶீலப்ராசுர்யத்தாலே அடிமைசெய்ய க்ஷமரமன்றிக்கே யிருக்கையாலே, அந்தஶீலாதிஶயத்தையே பேசிமுடிக்கிறார். அவன் ஶீலவத்தையைப் பார்த்தவிடத்து, தாமொன்று செய்கை மிகையாம்படியாயிருந்தது. தம்மைப் பார்த்தால் அந்தஶீலத்திலே கால் தாழ்ந்து ஒன்றுஞ்செய்ய க்ஷமரயன்றிக்கே யிருக்கையாலே, அந்த ஶீலாதிஶயத்தைப் பேசிமுடிக்கிறார். "கிட்டியடிமை செய்யவேணும்" என்று அபேக்ஷித்தாலும் ஒரு குணத்தை அவன் ஆவிஷ்கரித்தால் அவ்வழியே போகவேண்டும்படியிறே யிருப்பது.

ஈடு.—"நீர் இங்ஙனே யர்த்திக்கவேணுமோ? நம்மோட்டைக்குடற்றுடக்கை யறியீரோ?" என்ன; அத்தை யநுஸந்தித்து இனியராகிறார். "கூவுதல்வருதல்செய்யாய்" என்று ப்ரார்த்தித்தார் கீழ்; "ஆர் ப்ரார்த்திக்கக்கடவற்றை யார் ப்ரார்த்திக்கிறார்? உம்முடையலாபத்துக்கு நாம் ப்ரார்த்திக்கவேண்டும்படியன்றோ உம்மோடு நமக்கு உண்டான ரக்தஸ்பர்சம்? ஆனபின்பு, உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களுஞ் செய்யக்கடவோம்; நீர்வெறுக்கவேண்டா" என்று ஸமாதாநம்பண்ணினான். "மையலேற்றிமயக்கவுன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்னக்கடவதிறே; ஸ்ரீகௌஸல்யையார், "ஏகபுத்ரையான நான் உம்மைப்பிரிந்து தனியிருக்கமாட்டேன்: கூடப்போருமித்தனை" என்று பின்தொடர, புரிந்துபார்த்து, "ஆய்ச்சீ! நீர் என்னைப்பின்தொடருகிறவிடம் தர்மஹாநிகிடீர்" என்று முகத்தைப்பார்த்து ஒருவார்த்தை யருளிச்செய்ய, மீட்கைக்காகப்போன இவள் மங்களாசாஸநம்பண்ணிமீண்டாளிறே; இதிறே அவனுடைய பார்வைகளும் உக்திகளுமிருக்கும்படி. அவன் ஒருவார்த்தை சொன்னால் பின்னை அவன்வழியே போகவேண்டும்படியாயிறே யிருப்பது. ஆக, அவன் நாராயணனாயிருக்கிற இருப்பை யநுஸந்தித்தார்; அந்நாராயணசப்தத்தினுடைய அர்த்தத்தை ஆராயவென்றிழிந்தவாறே, ஒருவஸ்துவுக்கும் தன்னுடைய பேறிழவுக்குத் தனக்கு ப்ரார்த்திக்கைக்கு ப்ராப்தியற்றிருந்தது; இப்படியிருக்கிறவன் தன்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணினபடியையும், இந்நாராயணசப்தார்த்தத்துக்கு எல்லையான அவனுடைய சீலகுணத்தையும் அநுஸந்தித்து, "இப்போதே இப்படி சீலவானானவனைக்காணவேணும்" என்னும்அபேக்ஷை பிறந்தது; அதில் தமக்கு அவ

ஓராயிரம் ப்ரவேசே:—"நாராயணன் நங்கள்பிரானவனே" என்றத்தைக்கடாக்ஷித்து ஸங்க்ரஹ ஸங்கதி - நீர்இங்ஙனே இத்யாதி. விஸ்தாரஸங்கதி - கூவுதல் இத்யாதி. கீழே "குடற்றுடக்கு" என்றதின்விவரணம் - ரக்தஸ்பர்சம் என்றது. "ஸமாதாநம்பண்ணினான்" ஸமாஹிதராணுமென்று கூட்டுவது ஒருக்திமாத்ரத்தாலே ஸமாஹிதராக்கக்கூடுமோவென்ன - மையலேற்றி இத்யாதி. உன்னுடைய தாழ்ந்தபேச்சுக்களும் வ்யாபாரங்களும் எங்களைப்பிச்சேற்றி யறிவுகெடுக்க, உன்முகம் அம்மான்பொடியோ இத்யர்த்தம். நாய்ச்சியார்திருமொழி, "பெய்யுமாமுகில்" இத்யாதி. "உக்தி ஆகர்ஷகம்" என்னுமதுக்கு உதாஹரணம் - ஸ்ரீகௌசல்யையார் இத்யாதி. "[illegible]" என்றத்தைப்பற்ற - ஏகபுத்ரையான இத்யாதி. "[illegible]" என்றத்தைப்பற்ற - கூடப்போரும் இத்யாதி. புரிந்துபார்த்து - திரும்பிப்பார்த்து. "[illegible] கேவலம் [illegible]" இத்யாதியைப்பற்ற - ஆய்ச்சீ இத்யாதி. "[illegible]" இத்யாதியைப்பற்ற - மீட்கைக்காக இத்யாதி. பார்வைகளுமென்றது - "மையலேற்றி" இத்யாதியிலே விவக்ஷிதம். உக்திகளுமென்றது - "ஆய்ச்சீ, நீர்" இத்யாதிகளை. "உக்திகளுமிருக்கும்படி" என்றத்தை விவரிக்கிறார் - அவன்ஒரு இத்யாதி. இத்திருவாய்மொழியில் ப்ரமேயத்தை விசதமாக உபபாதியாநின்றுகொண்டு, இவர் ஸமாஹிதரானபடியை விஸ்தரிக்கிறார் - ஆக இத்யாதி. முதற்பாட்டில் அர்த்தம் - அவன்நாராயணனாய் இத்யாதி. இரண்டாம்பாட்டைப்பற்ற - ஒருவஸ்துவுக்கும் இத்யாதி. "அறிந்தனமே," "நங்கள்பிரான்" என்றத்தைப்பற்ற - விசேஷகடாக்ஷம் பண்ணினபடியையும் என்றது. "கடைவதுங் கடலுளமுதம்" என்றத்தைப்பற்ற - சீலகுணத்தையுமென்றது. "என்மனமேகமெண்ணும் இராப்பகலின்றி" என்றத்தைப்பற்ற - காணவேணுமென்னும் அபேக்ஷை பிறந்ததென்றது. அபேக்ஷைபிறந்தால் அவனிருந்தவிடத்தே போகவொண்ணாதோவென்ன - அதில்தமக்கு

னிருந்தவிடத்தளவும் கால்நடைதாராதபடிக்கீடாகவாயிற்று,அவனுடைய சீலாதிகளிலே ஈடுபட்டுத் துவக்குண்டபடி. இனித்தான், இவர்போலுலும் ஒன்றுசெய்கை மிகையாம்படி யிருப்பானொருவனுயிருந்தான் அவன் ; இவர்தாம், ஒன்றுசெய்தநுஸவிக்கவல்லவரன்றிக் கேயிருந்தார்: அவனுடைய சீலகுணங்களிலே கால்தாழ்ந்திருக்கு மவராகையாலே. இப்படிப்பட்டவனுடைய ஶீலகுணப்ராசுர்யத்தையேசொல்லித் தலைக்கட்டுகிறது, இத்திருவாய்மொழி. அன்றிக்கே, * கண்கள்சிவந்திலே - ப்ரணவார்த்தத்தை யநுஸந்தித்தார் ; அதில் முதலிரண்டரைப்பாட்டாலே - அகாரார்த்தத்தை யருளிச்செய்து, மேல் ஒன்றரைப்பாட்டாலே - சதுர்த்யர்த்தத்தையும் மத்யமாக்ஷரத்தில் அர்த்தத்தையும் த்ருதீயாக்ஷரத்தில்அர்த்தத்தையும்அருளிச்செய்து,—அவைபிரித்தருளிச்செய்யாதொழிந்தது;சதுர்த்யர்த்தமும் மத்யமாக்ஷரத்திலர்த்தமும் ஸாஶ்ரயமாயல்லதிராமையாலே கூடவருளிச்செய்தார்;—மேல்நாலுபாட்டாலே - த்ருதீயாக்ஷரவாச்யனுடைய வைலக்ஷண்யத்தையருளிச்

இத்யாதி. அவனிருந்தவிடத்தளவுமென்றது - "நின்றவேங்கடம்" என்றத்தைப்பற்ற. கால்நடைதாராதபடி என்றது - "தேவர்கள் கைதொழுவார்கள்" என்றத்தைப்பற்ற. "சீலமெல்லையிலான்" என்றத்தைப்பற்ற - சீலாதிகளிலே இத்யாதி. துவக்குண்டபடி - வசீகரிக்கப்பட்டபடி. "எழுதுமென்னுமிதுமிகை" என்றத்தைப்பற்ற - இனித்தான் இத்யாதி. ஒன்றுசெய்கை - ஒருகைங்கர்யத்தைச்செய்கை. "தழுவுமாறறியேன்" என்றத்தைப்பற்ற - இவர்தாம் இத்யாதி. "சீலமெல்லையிலானடிமேல்" என்றத்தைப்பற்ற - இப்படிப்பட்டவனுடைய இத்யாதி. யோஜநாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. * கண்கள்சிவந்துதொடங்கி * ஓராயிரமளவும் திருமந்த்ரார்த்தத்திலே ஏறிடுகிறார். இதுவே இரண்டாம்யோஜனைக்கு வாசி. அநுஸந்தித்தபடி யெப்படியென்ன - அதில் முதலிரண்டரை இத்யாதி. அதாவது - முதற்பாட்டாலே ப்ராப்யமாயிருந்துள்ள விக்ரஹவைலக்ஷண்யத்தையும் இரண்டாம்பாட்டாலே ததாதாரமான திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் அநுஸந்திக்கையாலே, அகாரத்தில் பதரூபத்தாலேவந்த ஶேஷித்வத்திலும், அர்த்தபலத்தால்வந்த ஶ்ரிய:பதித்வத்தாலும் ஸித்தமான ப்ராப்யத்வத்தையும், மேல் அரைப்பாட்டாலே - "அவனதருளால்" என்று - "அவர்க்கே" என்கிற தாத்வர்த்தமானரக்ஷகத்வத்தாலும், ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வத்தாலும் ஸித்தமான வுபாயத்வத்தையும் அருளிச்செய்கையாலே, முதலிரண்டரைப் பாட்டாலே அகாரார்த்தத்தை அருளிச்செய்தாரென்றபடி. இந்தப்ரகாரம், "[illegible] [illegible] [illegible] [illegible]" என்று தீபஸங்க்ரஹத்திலே சொல்லப்பட்டது. 'மேலொன்றரைப்பாட்டாலேயித்யாதி' அதாவது - "இறவேறி" என்று ஆத்மஸ்வரூபம் தனக்கு அத்யந்த ஶேஷமென்னுமிடத்தைக் காட்டித்தந்தானென்கையாலே - லுப்தசதுர்த்யர்த்தமான ஶேஷத்வத்தையும், "யானுந்தானாயொழிந்தான்" என்று ஸமாநாதிகரணமாக அருளிச்செய்கையாலே - மத்யமாக்ஷரப்ரதிபாத்யாநந்யார்ஹ ஶேஷத்வத்தையும், "தேனும்பாலுங்கன்னலுமமுதுமாகித்தித்தித்து" என்று - த்ருதீயாக்ஷர வாச்யனான ஆத்மாவினுடைய "மநஜ்ஞாநே" என்கிற தாதுஸித்தஜ்ஞாநாநந்த விசிஷ்டதையால்வந்த போக்யதையையும் அருளிச் செய்கையாலே - மேல் ஒன்றரைப்பாட்டாலே சதுர்த்யர்த்தத்தையும், மத்யமாக்ஷரத்திலர்த்தத்தையும், த்ருதீயாக்ஷரத்திலர்த்தத்தையும் அருளிச்செய்தென்றபடி. ஆனால் "இது ஶேஷத்வம், இது அநந்யார்ஹத்வம், இது ததாஶ்ரயமானவாத்மா" என்று பிரித்துச்சொல்லாதே, த்ருதீயாக்ஷர வாச்யனை ஆத்மாவோடேகூட்டியருளிச்செய்வானென்னென்ன - அவை இத்யாதி. வைலக்ஷண்யத்தை-ஜ்ஞாநாநந்தாதிவைலக்ஷண்

செய்து, மேலிரண்டுபோட்டாலே - இவ்வடைவிலே ப்ரணவார்த்தாநுஸந்தாநம்பண்ணாத ஸாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்து. ஆக, ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்து, மேல், நமஸ்ஸப்தார்த்தத்தை * கருமாணிக்கமலை, * நெடுமாற்கடிமை இரண்டாலும் அருளிச்செய்து,—நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமாகவும் ஆர்த்தமாகவும் இரண்டிறே அர்த்தம். அதில் ஸாப்தமானவர்த்தத்தை * கருமாணிக்கமலையிலே யருளிச்செய்து, ஆர்த்தமானவர்த்தத்தை * நெடுமாற்கடிமையிலே யருளிச்செய்தது.— நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமானவர்த்தம் - "நானெனக்குரியேனல்லேன்" என்கையிறே. ஒருகந்யகையானால் ஒருவனுக்கேயாயிருக்கையும், தான் தனக்கு உரியளன்றிக்கேயிருக்கையுமிறே ஸ்வரூபம்; அத்தையருளிச்செய்தார். * கருமாணிக்கமலையாலே;—மேல், * நாராயணஸப்தார்த்தத்தை யருளிச்செய்தார்- * கொண்டபெண்டிராலே; நாராயணஸப்தத்துக்கு அர்த்தம் - ஸ்வாமித்வவாத்ஸல்ய உபாயத்வோபேயத்வ வ்யாபகத்வம் இத்யாதியிறே; மேலே, சதுர்த்யர்த்தத்தை யருளிச்செய்தார் - * பண்டைநாளாலே; சதுர்த்திக்குஅர்த்தம் - கைங்கர்யப்ரார்த்தனையிறே. ப்ரணவார்த்தமும், நமஸ்ஸப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும், அல்லாத வ்யாபகமந்த்ரங்களிலுமுண்டு; அதில், தாம் ஆதரித்தருளிற்றுத் திருவஷ்டாக்ஷரமென்னும் இடத்தை - * ஓராயிரத்தாலே யருளிச்செய்கிறார். இது நடுவில் திருவீதிப்பிள்ளை யருளிச்செய்யும்படி.

யத்தையென்றபடி. அருளிச்செய்த ப்ரகாரமெதென்ன - நமஸ்ஸப்தத்துக்கு இத்யாதி. ஸாப்தமான அர்த்தமெது, ஆர்த்தமானவர்த்தமெது? என்ன - நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமான இத்யாதி. இது "கருமாணிக்கமலையிலே" எப்படி ஸித்திக்கிறதென்ன - ஒருகந்யகை இத்யாதி. "ஆர்த்தமானவர்த்தம்" - ததீயஸேஷத்வபர்யந்தமாகை. அத்தை யருளிச்செய்தார் * நெடுமாற்கடிமையிலே என்றுகூட்டுவது. அதெப்படி யென்ன - நாராயணசப்தத்துக்கு இத்யாதி. நந்புருஷனாலே - ஸ்வாமித்வமும், பஹுவ்ரீஹியாலே - வ்யாபகத்வ வாத்ஸல்யங்களும், அயநசப்தத்தில் வ்யுத்பத்தி த்வயத்தாலும் - உபாயோபேயத்வங்களும் சொல்லப்பட்டதிறே. இந்த ஸ்வாமித்வாதிகளாகிற நாராயணசப்தார்த்தத்தை * கொண்டபெண்டிரிலே யருளிச்செய்தார். எங்ஙனேயென்னில்; "நும்மதாதுமவனன்றிமற்றில்லை," "தொண்டரோமாய்" இத்யாதியாலே-ஸ்வாமித்வத்தையும், "வனே புகழே" என்றும், "கிளையொன்றாலே பேழ்பாமுமெட்த" என்றும் - ஆஸ்ரிதரிருந்தவிடத்தே சென்று †கார்யம் என்று வாத்ஸல்யத்தையும், "கண்ணனல்லாலில்லைகண்டீர்" என்று - உபாயத்வத்தையும், "குற்றமில்சீர்கற்றுவைகல்வாழ்தல்கண்டீர்" என்று - உபேயத்வத்தையும் அருளிச்செய்தார். "நும்மதாதுமவனன்றி மற்றில்லை" என்றதிலே - வ்யாபகத்வமும் ஸித்தம். அதெப்படியென்ன - சதுர்த்திக்கு இத்யாதி. அர்த்தத்தை யருளிச்செய்தால் போராதோ, இத்திருவாய்மொழியிலே ஸப்தத்தை யருளிச்செய்வானென்னென்ன - ப்ரணவார்த்தமும் இத்யாதி. ஆதரித்தப்படைக்காக ஆட்கொள்ப திஷ்டமென்கிறார் - இதுநடுவில் இத்யாதி. சரமசதுர்த்தியில் தாதர்த்ய சதுர்த்தியென்று ஸேஷத்வத்தைச் சொல்லுமளவில், அது லுப்தசதுர்த்தீ ஸித்தமாகையாலும், "வியக்த்யுஷகேஷு ப்ரபோ" என்று ப்ராப்தார்த்தத்தில் விதி கோசரியாமையாலும், "நாகிஷித்ய கர்ம ஸேஷத்வம்" என்கிற ந்யாயத்தாலே - ஸேஷத்வ ஸ்த்திரீகரணரூபமான கைங்கர்யத்தை சரமசதுர்த்தி சொல்லுகிறது. "ஈத்ருஸகைங்கர்யந்தான் ஸித்தமோ, அஸித்தமோ" என்று விசாரிக்குமளவில்; அது ஸித்தமாகையாலே, தத்ப்ரார்த்தனை உபபத்திவைலத்தாலும், "ஆய நாராயணாய" என்கிற ஸாப்திகப்ரக்ரியையாலும், ஸித்திக்கிறது.

---

† இங்கேஅந்வயிக்கவில்லை; கோஸாந்தரங்களைப் பார்க்கவேணுமென்று தோன்றுகிறது.

முதற் பாட்டு.

ஓராயிரமாய் உலகேழளிக்கும்,
பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்
"மாமலர்நீர்சுடர்தூபங்கொண்டு-தொழுது-எழுதுமென்னுமிது மிகை" என்று அந்வயித்து அர்த்தம் - ஶ்லாக்யமான இத்யாதி. "மா" என்றத்தை - மலர் நீர் சுடர் தூபமெங்கும் கூட்டுவது. "இப்படிஇவன் ஸ்வாராதன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - அந்யத் இத்யாதி "அந்யத்பூர்ணாதபாம் கும்பாதந்யத்பாதாவநேஜநாத் । அந்யத்குஶலஸம்ப்ரஶ்நாந்நசேச்சதி ஜநார்த்தந:" இதி ஸஞ்சய:. அதுக்கடியாக - ஸ்வாராததைக்கடியாக. இத்தால் - திருவநந்தாழ்வான் அல்பாநுகூல்யங்கொண்டு அங்கீகரிப்பிக்குமென்றபடி. விரகறியாமைக்கு ஹேதுஎது? என்ன - பலஹாநியாலே இத்யாதி. 'மாமலர்நீர்சுடர் தூபங்கொண்டு - தொழுது - எழுதும்' இத்யாரப்யஅந்வய:. (கூ)

பத்தாம் பாட்டு.

தாளதாமரையான்உனதுந்தியான்
வாள்கொள்நீள்மழுவாளிஉன்னாகத்தான்
ஆளராய்த்தொழுவாரும்அமரர்கள்
நாளும்என்புகழ்கோஉனசீலமே ?

ஆ.— (தாளதாமரையான்.) - தம்முடைய அநர்ஹாநுஸந்தாநத்தாலே அவன்திருவடிகளில் அடிமைசெய்கையில் தமக்குப்பிறந்த கூச்சமெல்லாம் போம்படியாகத் திருவேங்கடமுடையானுடைய நிரவதிக ஸௌசீல்யகுணத்தைக் கண்டு புகழுகிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஜ்ஞாஸ்யச்சுவடறியாத க்ஷுத்ரரான தேவர்களுக்குங்கூட ஸமாச்ரயணீயனாயிருக்கிற உன்னுடைய திருவடிகளில் ஸௌசீல்யம் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்துமுடிக்க வொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையானென்று தொடங்கி] - அத்யஸிமாநியான கமலாஸநன் உன்னுடைய திருநாபியிலான். அநந்யஸாதாரணமான ஒளியையுடைத்தாய் நீண்டமழுவையுடைய ருத்ரன் உன்னுடைய திருமேனியில் ஒருப்ரதேசத்திலான்; பரிசர்யை பண்ணுகிறார் அடிமைக்குத் தகாத தேவாதிகள்.

ப.—அநந்தரம், ப்ரயோஜநாந்தரபரர்க்கும் முகங்கொடுக்கும் உன்னுடைய சீலம் வாசாமகோசரமஹிமாவன்றோ ? என்கிறார்.

தாள - தாளையுடைத்தான, தாமரையான் - தாமரையிலேபிறந்த ப்ரஹ்மா, உனது உந்தியான் - உனதுஉந்தியை யாச்ரயமாகவுடையவன்; வாள்-ஒளியை, கொள்-உடைத்தான, நீள் - பெரிய, மழு - பரசுவை, ஆளி - ஆண்டுகொண்டுபோருகிற ருத்ரன், உன் ஆகத்தான் - உன் திருமேனியிலொருபக்கத்தான்; ஆளர் ஆய் - ஸூரிகளோபாதிசேஷபூதராய், தொழுவாரும்-தொழுமவர்கள், அமரர்கள் - ப்ரயோஜநாந்தரபரரானதேவதாந்தரவர்க்கம்; (இப்படி டாவஸ்திதமான); உன - உன்னுடைய, சீலம் - சீலத்தை, நாளும் - காலதத்த்வமெல்லாங்கூடினாலும், என் - எத்தைச்சொல்லி, புகழ்கோ - புகழ்வேன் ?

இ.—பத்தாம்பாட்டில், ஜ்ஞாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஸமாச்ரயணீயனாயிருக்கிற உன்னுடைய சீலம் என்னாற் புகழ்ந்துமுடிக்கவொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையான் இத்யாதி] - தாமரைப்பூவை உத்பத்திஸ்தாநமாகவுடைய ப்ரஹ்மா உன்திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான். கமலயோநித்வத்தால் வந்த ஜந்மாநத்தை உடையவனுக்கிறே உடம்புகொடுத்தது. ஒளியையுடைத்தாய்த் தொடங்கின கார்யத்தை முடியநடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன் உன்திருமேனியில் ஏகதேசத்திலான். அநந்யஸாதாரணத்வலக்ஷணமான தொடையொத்த துளபமுங் கூடையுமாய்ப் புகழ்ந்து நிற்கிறானல்லனே. அடியராய் பரிசர்யை பண்ணுகிறார் தேவர்கள். நித்யஸூரிகள் செய்யும் அடிமையிறே, தேவத்வஸாம்யத்தாலே, "நான்

ஈஶ்வரன்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [உனசீலம் - நாளும் என்புகழ்கோ]- உன்னுடைய ஶீலகுணத்தைக் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்துமுடிய வொண்ணுமோ?

ஈடு.—பத்தாம்பாட்டு. தாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஸமாஶ்ரயணீயனாயிருக்கிறஉன்னுடைய ஶீலம் என்னால் புகழ்ந்து முடிக்கவோண்ணாதென்கிறார்.

[தாளதாமரையான் உனதுந்தியான்] - தாமரைப்பூவை யுத்பத்தி ஸ்த்தாநமாக வுடைய ப்ரஹ்மா, உன் திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான். கமலயோநித்வத்தால் வந்த துர்மாநத்தையுடையவனுக்கிறே உடம்புகொடுத்தது. [வாள்இத்யாதி] – ஒளியையுடைத்தாய், தொடங்கினகார்யத்தை முடிய நடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன், உன்திருமேனியில் ஏகதேசத்தைப்பற்றி வர்த்தியா நின்றான். அநந்யஶரணத்வ லக்ஷணமான* தொடையொத்த துளபமுங் கூடையுமாய்ப் புகுந்திருக்கிறானல்லனே. [ஆளர்ஆய்த் தொழுவாருமமரர்கள்]-அடியாராய் ஆஶ்ரயிக்கிறவர்களும் தேவர்கள். நித்யஸூரிகள்செய்யும் அடிமையிறே அமரத்வ ஸாம்யத்தாலே "நாங்களும் ஈஶ்வரர்கள்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [நாளும்இத்யாதி] - காலத்தையடைய ஒரு போகியாக்கி எனக்குப்புகழுகைக்கு உறுப்பாக்கினால்தான், என்னாலே புகழ்ந்து தலைக்கட்டலாயிருந்ததோ உன்னுடைய ஶீலகுணம்? உனசீலம் - நாளுமேன்புகழ்கோ. (௧௦)

பதினோராம் பாட்டு.

சீலமெல்லையிலான் அடிமேல்அணி
கோலநீள்குருகூர்ச்சடகோபன் சொல்
மாலையாயிரத்துள் இவைபத்தினின்
பாலர் வைகுந்தமேறுதல் பான்மையே.

ஆ.—(சீலம்.) - சீலமெல்லையிலானாயிருந்த திருவேங்கடமுடையான் திருவடிகளுக்குத் திருவணிகலமாயிருந்த இத்திருவாய்மொழியோடே ஒருஸம்பந்தமுடையார், வைகுந்தமேறுகை ஆஶ்சர்யமன்றென்கிறார்.

பத்தாம்பாட்டு.—தாளதாமரையான் இத்யாதி. "தாள்தாமரையான்" இத்யாரப்ய, "உனசீலமே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - தாஸ்ய இத்யாதி.

"தாளதாமரையான், வாள்கொள் நீள்மழுவாளி" என்று - திருநாபீகமலத்திலே பிறந்தவன், ஹிம்ஸாபரிகரமான மழுவையுடையவன்; "அமரரும்" என்று - என்றுமொக்கச் சாகாதிருக்கிறவர்கள் என்கிற விசேஷணங்கள், 'தாஸ்யச்சுவடறியாத' என்னுமத்தைக் காட்டுகிறது. தாளையுடைய தாமரையென்று ஶப்தார்த்தம். இது ஶீலமானபடி யென்னென்ன - கமலயோநித்வ இத்யாதி. வாள்-காந்தி. மழு - பரசு. மழுவாளி - மழுவையாளும் ருத்ரன், "நீள்" என்றதுக்கர்த்தம் - தொடங்கின இத்யாதி. இதுசீலமோவென்ன - அநந்யஶரணத்வ இத்யாதி. அநந்யஶரணத்வலக்ஷணமான - பாரதந்த்ர்ய லக்ஷணமான வென்றபடி. இது சீலகார்யமோவென்ன - நித்யஸூரிகள் இத்யாதி. "நாளும்" என்று சொல்லி, "உனசீலம் - என்புகழ்கோ" என்றதுக்குபாவம் - காலத்தை இத்யாதி. ஒருபோகியாக்கி - ஏகவிஷயமாக்கி. நாளும் - ஸர்வகாலமும். என்புகழ்கோ - என்னவென்று ஸ்தோத்ரம்பண்ணப் போகிறேனென்றபடி. எத்தைச்சொல்லிப் புகழ்வேனென்றபடி. (௧௦)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் ஸ்ரீவைகுண்டத்திலே செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார்.

[ஶீலமென்று தொடங்கி] - அமர்யாதஶீலனை எம்பெருமானுடைய திருவடிகளிலே விலக்ஷணமான அழகுமிக்கிருக்கிற திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொற்றொடையான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியோடு ஸம்பந்தமுடையார். பான்மை - கடன்.

பி.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக பரமபதப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

சீலமெல்லையிலான் - அபர்யந்தமான ஶீலத்தையுடையவன்; அடிமேல் - திருவடிகளின்மேலே, அணி - அணியப்பட்டதாய், கோலம் - தர்ஶநீயமானரூபமாய், நீள் - ஆயாமவிஸ்தாரவத்தான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, சொல் - ஶப்தாத்மகமான, மாலை - மாலையாயிருக்கிற, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவைபத்தினின் - இப்பத்தினுடைய, பாலர்-பரிஸரத்திலே(ஶப்தமுகத்தாலேயாதல் அர்த்தமுகத்தாலேயாதல்) அந்வயமுடையவர்கள், வைகுந்தம் - பரமபதத்தில், ஏறுதல் - ஏறப்பெறுகை, பான்மை - ஸ்வபாவம். இது-கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்திற் செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்த மென்கிறார்.

[சீலமெல்லையிலான் அடிமேல்] - அமர்யாதஶீலனை அவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது; ஶீலாதிக்யமாயிற்று. அத்தை நிகமிக்கிறார்: [அணியித்யாதி] - அழகுமிக்கிருந்துள்ள திருநகரி. அன்றியே "கோலநீள்" என்று - ஶப்தந்தானே உண்டாகையாலே. அடிமேலணி-மாலை - என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள் இவைபத்தினின்பாலர்] - இப்பத்தின் பரிஸரத்திலே யுளராமவர்கள். உக்திமாத்ரம், பாடதாரணம் அர்த்தாநுஸந்தாநம். ஒருவழியாலே இதிலே அந்வயமுண்டாகையாலே பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். "மாக வைகுந்தங் காண்பதற்கு" என்று இவர் ப்ரார்த்தித்தார். இவரை ஆஶ்ரயித்தவர்களுக்கு ப்ரார்த்யமன்று; ப்ராப்தம். பித்ருதநம் புத்ரனுக்கு தாயப்ராப்தமாய் வருமதிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்தே செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார்.

[சீலமெல்லையிலானடிமேல்]- †அமர்யாதஶீலனானவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது - ஶீலாதிக்யமாயிற்று; அத்தை நிகமிக்கிறார். [அணிகோலநீள் குருகூர்ச்சடகோபன்சொன்மாலை] - அழகுமிக்கிருந்துள்ள திருநகரி

நிகமம்.—சீலம் இத்யாதி. "பத்தினின்பாலர் வைகுந்தமேறுதல்பான்மையே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை-இத்திருவாய்மொழி இத்யாதி.

இத்தால்ஹாவம் - இத்திருவாய்மொழியால் இத்யாதி. "கோலநீள்" என்றத்தை - * குருகூருக்கு விஶேஷணமாக்கி யருளிச்செய்து, "கோலநீள் - அடிமேலணி" என்று - திருவடிகளுக்கு

---

† மர்யாதா - எல்லை, அமர்யாதஶீலன் - எல்லையில்லாத சீலகுணத்தை யுடையவன்,

யையுடைய ஆழ்வார். அன்றிக்கே, கோலநீளென்று - ஶப்தந்தானே யுண்டாகையாலே, 'அடிமேலணி - மாலை' - என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள்ளிவைபத்தி னின்பாலர்] - இப்பத்தின் பரிஸரத்திலேயுளராமவர்கள். உக்திமாத்ரம், பாடயாரணம், அர்த்தாநுஸந்யாநம், ஒருவழியாலே இதிலேயந்வயமுடையவர்கள். [வைகுந்தம்இத்யாதி]- பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். * மாகவைகுந்தம்காண்பதற் கேகமெண்ணினார்- இவர்; இப்பாசுரத்தே யந்வயித்தவர்களுக்கு ப்ரார்த்யமன்று, ப்ராப்தம். பித்ருயநம் புத்ர னுக்கு ஊயப்ராபதமாயிருக்குமிறே. (கக)

விசேஷணமாக அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. அர்த்தத்வபத்திலும், "அணி" என்றது - சாத்தப்பட்டவென்றாய், சொன்மாலைக்கு விசேஷணம். யத்வா, முந்தினவர்த்தத்தில், "அணி" என்றது - விலக்ஷணமென்றாய், குருகூருக்கு விசேஷணமாதல். இப்பத்தின் பரிஸரத்திலேயுள ராகையாவதென்? என்ன - உக்திமாத்ரம் இத்பாதி. இவர்க்கு "ஏகமெண்ணும்" என்று ப்ரார்த்யமா யிருக்க, இவர்களுக்கு ப்ராப்தமாகக் கூடுமோவென்ன - மாகவைதுந்தம் இத்யாதி. பான்மை-ப்ராப் தம். அதெப்படியென்ன - பித்ருதநம் இத்யாதி. சீலமெல்லையிலானடிமே லணியப்பட்டதாய், கோல நீள் குருகூர்ச் சடகோபனுடைய சொல்மாலை யித்யாரப்யாந்வயஃ (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — நாராயணேऽபி ஸதி ஸௌஶீல்யா... விஹ்நா நாஸ்ப்ருதவேதி விஷாதா பஹுதோ ஜநாஜ: । க்ருவிக்ஷ்யதாஜிரவயிஜி ஜஶீலவத்தா தேந்யாஜ்யஶீ தேநாவஹ்யவதோநிஸ்த்ருதீயெ ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — நைகஶ்ரீநாதவக்த்ராஜம உபயஸஸம்ஸ்தாவ நாதெஷ்யஸம்ஸ்கிவா ஜூநாநோக்ஷஸ்யஹய ப்ருதிஸட்வடிக ஶ்ருணிஸ தித்தாக: । ப்ருஹ்யாஜாஹ்யாஜகவா த்ருஷிமிரிகட்கெ ஸஞியாநாஜி க்ருதெத்ய ஶ்வப்ரஜெஸ்வாஜஜாநாஜகயி பஜவதிஶ்ரீஶ்ரந்தாகரோஸள ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஓராநீர்வேண்டினவையுள்ளதெல்லாஞ்செய்கின்றேன்
நாராயணனன்றோநானென்று - பேருறவைக்
காட்டவுமன்சீலத்திற்கால்தாழ்ந்தமாறனருள்
மாட்டிவிடும்நம்மனத்துமை.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

நான்காந்திருவாய்மொழி—மையார் ப்ரவேசங்கள்.

ஆ.—(மையார்கருங்கண்ணி) - இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யாதி ஸம்யோகத்தாலே நிர்ப்பிகராய், தத்அநுபவத்திலே ப்ரவ்ருத்தராய் அது கைவாராமையாலே தாம் அவஸந்நராய், அவஸந்ந ஸர்வகரணருமாயிருந்த ஆழ்வார்

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும் அநுஸந்திக்கையாலே, அப்போதே இந்த்ரியங்களும் தாமும் "அவனைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டபடி பெறாமையாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் தூணிலே வந்து தோற்றி ஹிரண்யனால் வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குத் தீர்த்தருளினாற்போலே, தம்முடைய ஆர்த்தியைத் தீர்த்தருளின படியை அநுஸந்தித்து ப்ரீதராய் முடிக்கிறார்.

ப.—நாலாந்திருவாய்மொழியில், கீழே அவன் ஸௌசீல்யத்தை யநுஸந்தித்து ப்ரீதிலரானவர், "சீலவானைப் ஸ்ரீய:பதியானவனை யநுபவிக்கவேணும்" என்று அபிநிவேசித்து, அந்த அபிநிவேசாநுரூபமான லக்ஷ்மீவிசிஷ்டத்வத்தையும், அபிநிவேசவிஷயத்வத்தையும், ஆஸ்ரிதரக்ஷகத்வத்தையும், அமோகப்ரதிஸம்ஹ்ருதத்வத்தையும், காரணத்வாதி குணயோகத்தையும், பரமபத நிலயத்வத்தையும், ஹ்ருத்யதாதிசயத்தையும், ஸர்வாந்தராத்மத்வாதிகளையும், கிஞ்சித்காரவிஷயத்வத்தையும், க்ருபாதிகஸம்பந்தத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்பூதனானவனை யநுபவிக்கவேணும்" என்கிற ஆகாங்க்ஷையாலே, தம்மோடு கரணங்களோடு வாசிபற நோவுபட்ட இவருடைய ஆர்த்தி தீரும்படி முகங்காட்ட அநுபவித்து ஸந்துஷ்டராய், ஆஸ்ரிதாநுபாவ்யமான திருவாய்மொழியை அவன்திருவடிகளிலே பாடி உஜ்ஜீவிக்கப்பெற்றேன் என்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், கீழே-அவனுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும் அநுஸந்திக்கையாலே "அப்போதே பெறவேணும்" என்னும் சாபலம் பிறந்து, பெறாமையாலே* முடியானேயிற்போலே தாமும் விடாய்த்து தம்முடைய கரணக்ராமங்களும் சேதநஸமாயியாலே விடாய்த்து மிகவும் அவஸந்நரானார்; இவருடைய அவஸாதந்தான் அவன் "க்ரமத்திலே வந்து முகங்காட்டுகிறோம்" என்னவொண்ணாதபடியாயிருக்கையாலே, அவன் தூணிலேவந்து தோற்றி ஹிரண்யனால் வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதனுக்குத் தீர்த்தருளினாற்போலே தம்மார்த்தி தீரவந்து முகங்காட்டினபடியை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய்க் காணப்பெற்றேன் என்கிறவளவேயன்றிக்கே "வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன்" என்று தாம் பெற்ற பேற்றைப் பேசி ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு.—ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்குஅடி-அவன் தானாயிருக்கும்; சீலாதிகுணங்களுக்குஅடி-பிராட்டியாயிருக்கும். இதிலேவந்தவாறே ஸ்வாதீநமன்றிக்கே யொழிகிறதோ

---

* மையார்ப்ரவேசே: கீழில்திருவாய்மொழியிலே - சீலகுணத்தையும், அதுக்கடியான ஸ்ரிய:பதித்வத்தையும் அருளிச்செய்தாரென்று விவக்ஷித்து, "சீலகுணத்துக்குஅடி பிராட்டியாலே, ஔபாதி

வேன்னில்? - அங்ஙனுமாயிராது; நிரூபித்தால், அந்த ஸ்வாதந்த்ர்யத்தோபாதி இவளோட்டைச்சேர்த்தி நித்யமாயிருக்கையாலே. ஹாஷ்யகாரர் மேலே "ஸ்ரீவல்லபஃ" (ஸ்ரீவல்லபஃ)என்ன நினைத்து, ஸ்வரூபத்தை நிரூபிக்கிறவிடத்திலே, ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே "ஸ்ரிய:பதிஃ" (ஸ்ரிய:பதி:) என்றாரிறே. இப்படியிருக்கிறவனுடைய ஸீல குணத்தையும், அதுக்குஅடியான ஸ்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்தார் - கீழில்திருவாய் மொழியிலே; கடுகப்பெறவேண்டும்படி குணாதிகனுமாய்ப்பெறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்கையாலே, இப்போதே .பெறவேண்டும்படியான சாபலம் பிறந்தது; அப்போதே பெறக்காணாமையாலே விஷயாநுரூபமாக விடாய்த்தார். பெறவேண்டும்படி குணாதிகனுமாய்,பெறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்கப்பெறாவிட்டால்ஆறியிருக்கப்போகாதே ஆகையாலே, சேதநஸமாதியாலே தனித்தனியே கரணங்களும்விடாய்த்துத் தாமும்விடாய்த்தார், * முடியானேயில் வாஸனையாலே. இதுதான் எல்லாத்திருவாய்மொழியோடுங்கூடியிருப்பதொன்றாயிற்று: ஒரு "சேஞ்சொற்கவி." "வீற்றிருந்தேழுலகு." "என்றைக்குமேன்னை," "முடியானே," இவைபித்தனையிலும் ஓடுகிற ஹாவவ்ருத்தியையுடைத்தாயாயிற்றிருப்பது இப்படி இந்த்ரியங்களுந் தனித்தனியேவிடாய்த்துத் தாமும் விடாய்த்தபடி- ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்திக்குத்தோற்றின இதுதான் க்ரமத்திலே வந்தானேன்னலாம்படி, ஆற்றாமைக்கு க்ரமத்திலேதோற்றப்பற்றாதே தூணிலேவந்துதோற்றினாற்போலே தோற்றவேண்டும்படியாயிற்று. இப்படிப்பட்ட தம்முடைமையையும், அதுக்கடி

கமாகையாலே அநித்யமாகாதோ" என்று சங்கித்துப்பரிஹரிக்கிறார் - ஈஸ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு இத்யாதி. 'ஈஸ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு அடி யவளாயிருக்கும்' என்கிற இத்தை இப்போதருளிச் செய்தது - ஸ்வாதந்த்ர்யம் ஸ்வாதீநமாகையாலே, அதுக்கு அநித்யத்வப்ரஸக்தியில்லை யென்று தோற்றுகைக்காக. 'இதிலே' என்றது - ஸீலாதிகுணங்களிலே யென்றபடி. ஸ்வாதீநமன்றிக்கே யொழிகிறதோ - ஸ்வாபாவிகமல்லாமையாலே ஔபாதிகமாய் நித்யமன்றிக்கே யொழிகிறதோ வென்றபடி. அங்ஙனுமாயிராது - ஔபாதிகமானாலும் அநித்யமாயிராதென்றபடி. அதுக்கு ஹேதுவேதென்ன- அந்த ஸ்வாதந்த்ர்ய இத்யாதி. அதாவது - உபாதியான பிராட்டியோட்டைச்சேர்த்தி நித்யமாகையாலே இதுவும் நித்யமென்றபடி. நித்யமாகைக்கு அடி ஸ்வரூபநிரூபகையாகையாலே என்னப்பார்த்து, அப்படி ஸ்வரூபநிரூபகையாகையோ? என்ன - ஹாஷ்யகாரர் இத்யாதி. 'ஸ்ரிய:பதிஃ' என்றாரிறே? ஸ்ரீபாஷ்யத்திலேயென்றபடி."ஸ்ரிய:பதிர்நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூபஃ" இத்யாரப்ய, "ஸ்வாபிமதாநுரூபநித்ய நிரவத்ய ஸ்வரூபரூபகுண விபவைஸ்வர்யஸீலாத்யநவதிகாதிஸயாஸங்க்யேய கல்யாணகுணகணஸ்ரீவல்லபஃ" இதி ஸ்ரீ ஸ்ரீபாஷ்யே. ப்ராஸங்கிகஸங்கையைப் பரிஹரித்து, இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - இப்படி இத்யாதி. ஸ்ரிய:பதித்வத்தையும் என்றது - "அணியார்மலர்மங்கைதோள்" என்றத்தைப்பற்ற. சீலாதிகுணங்களும் ஸ்ரிய:பதித்வமும் இத்திருவாய்மொழியில் இவர்க்குஉண்டான விடாய்க்கு உத்தம்பகமென்னுமத்தை யருளிச் செய்கிறார் - கடுக இத்யாதி. விடாய்க்கிறதென்? ஆறியிருக்கவொண்ணாதோ? என்ன - பெறவேண்டும்படி இத்யாதி. உக்தார்த்த நிசமநபூர்வகமாக விடாயினுடைய எல்லையை யருளிச்செய்கிறார் - ஆகையாலே இத்யாதி. விடாய்மாத்ரமோ, ஸந்தோஷமில்லையோவென்ன-இதுதான் இத்யாதி. ஏதத்விவரணம் - ஒருசெஞ்சொல் இத்யாதி. இவர்க்கு இத்திருவாய்மொழில் பிறந்த விடாயினுடைய உறைப்பு எவ்வளவென்ன - இப்படியிந்த்ரியங்களும் இத்யாதி. தனித்தனியே என்றது - "கண்ணே," "என்கருத்தே" "உன்னையுள்ளுமென்னுள்ளம்" இத்யாதியைப்பற்ற. தாமும்விடாய்த்து என்றது - "நானழைப்பன்" "பேதுறவன்" இத்யாதியைப்பற்ற. தூணிலே வந்து என்றது - "நரசிங்கமதாய்" என்றத்தைப்பற்ற. இத்திருவாய்மொழியில் பத்துப்பாட்டில் ப்ரமேயங்களையும் தொகுத்துப்பிடித்தருளிச்செய்கிறார் - இப்படிப்பட்ட இத்யாதி. "என்னுள்ளமுகந்தே" என்றத்தைப்

யான விடாயையும், அவன்விடாயறிந்து அதுக்கு உதவவந்து முகங்காட்டினபடியையும் அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், "நான் க்ருதக்ருத்யனானேன்: அடிமைசெய்யப்பெற்றேன்: வாழ்ந்தேன்: ஸ்ரீவைஷ்ணவர்களுக்குமெல்லாம் நான் உபகாரகனும்படியானேன்: இதோருவன் பேறும்பேறிருந்தபடியே!" என்று தமக்குப்பிறந்த லாபத்தை யநுஸந்தித்து இனியராய், அத்தைப்பேசித் தலைக்கட்டுகிறார்.

முதற் பாட்டு.

மையார்கருங்கண்ணிகமலமலர்மேல்
செய்யாள்திருமார்வினிற்சேர்திருமாலே!
வெய்யார்சுடராழிசுரிசங்கமேந்தும்
கையா! உன்னைக்காணக்கருதுமென்கண்ணே.

ஆ.—லக்ஷ்மீகடாக்ஷ ஸம்ஶ்லேஷைக போக்யனாய், தத்பரவஶனாய், ஶங்க சக்ர திவ்யாயுத விபூஷிதகரனான உன் அழகை என்கண்ணானது காண ஆசைப்படாநின்றதென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ஸ்ரிய:பதியான எம்பெருமானைக் காணவேணும் என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்திற்குப் பிறந்த சாபலத்தை அருளிச்செய்கிறார்.

[மையாரென்று தொடங்கி] - மேகத்திலே மின் சேர்ந்தாற்போலே மையார்ந்து கறுத்த திருக்கண்களையுடையளாய்ப் பரமபோக்யமாய்ச் சிவந்த திருநிறத்தையுடைய பெரிய பிராட்டியார் சேரும் திருமார்வையுடையையாய் அவள்பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! [வெய்யாரென்று தொடங்கி] - மிகவும் வெவ்விதான தேஜஸ்ஸையுடைய திருவாழி, கண்ணுக்கிலக்காம்படி சுரியையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம் இவற்றை ஏந்தும் திருக்கையையுடையவனே! இப்படி ஸந்நிஹிதனான உன்னைக் காண ஆசைப்படாநின்றது என்னுடைய கண்.

ப.—முதற்பாட்டில், நிரதிஶயபோக்யதாப்ரகாஶகமான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், அந்தபோக்யதையைக் காத்தூட்டும் ஆயுதபூர்த்தியையுமுடைய உன்னைக் காண ஆசைப்படாநின்றது என் கண் என்கிறார்.

மையார் - அஞ்சநாலங்காரத்தையுடைத்தாய், கரு - "அஸிதேக்ஷணா" என்னும்படி ஸ்வாபாவிகமான கருமையையுடைத்தான, கண்ணி - திருக்கண்களையுடையளாய், கமலமலர்மேல் - தாமரைப்பூவின்மேலேயிருப்பாளாய், செய்யாள் - (பத்மவர்ணையாகையாலே) சிவந்தநிறத்தையுடையளான லக்ஷ்மியானவள், ("அகலகில்லேனிறையும்" என்று), திருமார்வினில் - திருமார்பினழகிலே (ஈடுபட்டு), சேர் - சேரும்படியாய், (அவ

பற்ற - ஹ்ருஷ்டராய் என்றது. "கண்டுகொண்டேனே" என்றத்தைப்பற்ற - க்ருத க்ருத்யனானேன் என்றது. "தொண்டர்க்கமுதுண்ணை" இத்யாதியைப்பற்ற - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் இத்யாதி. "உய்ந்தவாறே" என்றைத்தைப்பற்ற - இதோருவன் இத்யாதி. அஞ்சுபாட்டு - * முடியானேயில்ப்ரமேயம்; மூன்றுபாட்டு - * வீற்றிருந்தேழுலகில் ப்ரமேயம்; ஒன்பதாம்பாட்டு - * என்றைக்கும் ப்ரமேயம்; பத்தாம்பாட்டு - * செஞ்சொற்கவியில் ப்ரமேயம்.

ளுடைய அவயவசோபையிலும் ஆபிஜாத்யத்திலும் துவக்குண்டு), திரு - அவள்பக்கலிலே, மாலே - அதிசயிதவ்யாமோஹத்தைப்பண்ணுமவனாய், (இந்தச்சேர்த்திக்கு அஸ்யாநேஹயஸங்கிகளாய், ரக்ஷணோத்யமத்தாலே ப்ரதிபக்ஷத்திலே), வெய்யார் - வெம்மைமிஞ்சின, சுடர் - ஜ்வாலையையுடைய, ஆழி - திருவாழியையும், சுரி - (வடிவுதானே யெதிரிகளையும் அழித்து ஆச்ரிதர்க்கநுபாவ்யமாம்படியான வடிவிலே) ரேகாவலயத்தை யுடைய, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஏந்தும் —, கையா - திருக்கையையுடையவனே! உன்னை - (இப்படி ச்ரிய:பதியாய் ஸங்கசக்ரமஹாயுதனான) உன்னை, என் - என்னுடைய, கண் - (சபலமான) கண்ணானது, காண - (ஸூரிகளோபாதி) ஸாக்ஷாத்கரணம்பண்ண, கருதும் - மநோரதியாநின்றது.

இ.—முதற்பாட்டில், ச்ரிய:பதியானவனைக் காணவேணுமென்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[மையார் கருங்கண்ணி] - ஸ்வாபாவிகமான கறுப்பையுடைத்தாய் அஞ்ஜநத்தாலே அலங்க்ருதமான திருக்கண்களை யுடையவள். ஒன்றால் ஸமாதானம்பண்ண வேண்டாதபடி அழகு ஸ்வாபாவிகமாயிருக்கையாலே, கண்ணுக்கு அஞ்ஜநம் மங்களார்த்தமாயித்தனையிறே. [கமலமலர்மேற் செய்யாள்] - ஸௌகுமார்யத்தால் வந்த ஸோக்யதையை யுடையவள். [திருமார்வினிற்சேர்] - மேகத்திலே மின்சேர்ந்தாற்போலேயாயிற்று, சேர்த்தியால் வந்த அழகு; அப்பூவடிக்கொதித்துக் கால்வாங்கித் திருமார்விலே ஏறவேண்டும்படியாயிற்று, அவளுக்குத் திருமார்விற் சேர்த்தியிருப்பது. [திருமாலே] - அவள் பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! அவள் திருமார்விற் பண்ணின வ்யாமோஹத்தை இவன் அவயவங்கள் தோறும் பண்ணுமென்கை. இப்படி அந்யோந்யம் சேர்ந்த சேர்த்தியிலேயிறே கைங்கர்யம்பண்ண ஆசைப்பட்டது. இச்சேர்த்தியைப் பற்றவிறே அவள்முன்னாகப் பற்ற ஆசைப்படுவார் ஆசைப்படுவது. "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவளும் "என்னடியார் அதுசெய்யார்" என்னுமவனுமான இச்சேர்த்தியிறே ஸம்ஸாரிகளுக்குத் தஞ்சம். [வெய்யார்சுடராழி] - ப்ரதிபக்ஷத்தின்மேலே வெம்மைமிக்கிருந்துள்ள தேஜஸ்ஸையுடைய திருவாழி. [சுரிசங்கம்] - ஒருகார்யம் செய்யவேண்டாதே ஸந்நிவேசந்தானே தர்சநீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்தும் கையா] - கையும் திவ்யாயுதமுமான சேர்த்தியழகையாயிற்று இவர் காணவேண்டியிருப்பது. [உன்னை] - "ஸஜலஜலதாப: ஸ்ரீவத்ஸவக்ஷா:" என்கிறவடிவையுடைய உன்னை, [காணக் கருதும்] - காண ஆசைப்படாநின்றது. இவ்வஸ்துவைப்பார்த்தால் கண்டுகொண்டிருக்கையிறே ஸத்ருசம். நித்யஸூரிகளும் ஸாக்ஷாத்காரமிறே பண்ணுவது. [என் கண்ணே] - ஸம்ஸாரிகளில் இவர்க்குள்ள வ்யாவ்ருத்தி போருமாயிற்று, இவரிற்காட்டில் இவர் கண்ணுக்கு.

ஈடு.—முதற்பாட்டு. "ஸ்ரிய:பதியானவனைக் காணவேணும்" என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[மையார்கருங்கண்ணி] - "அவனைப்பெறவேணும்" என்றிருப்பார் ஆசைப்படுவதும் அவள் முன்னாகவாய், பெற்றால் பின்னை கைங்கர்யம்பண்ணுவதும் இருவருமான

முதற்பாட்டு.—மையார் இத்யாதி. "திருமாலே" என்னுமளவும், "உன்னைக்காணக் கருதுமென்கண்ணே" என்றவற்றையும் கடாக்ஷித்தவதாரிகை - ஸ்ரிய:பதி இத்யாதி.

பிராட்டிசேர்த்திசொன்னதுக்கு பாவமேதென்ன - அவனை இத்யாதி. ஆசைப்படுவதும் என்றது - உபாயமாக ப்ரார்த்திப்பதுமென்றபடி. இது, பூர்வகண்டத்தைப்பற்ற. "கருங்

சேர்த்தியிலேயாயிருக்குமிறே. [மையார்கருங் கண்ணி] - †ஒன்றால் ஸமாதாநம் பண்ண வேண்டாதபடி ஸ்வாபாவிகமான அழகையுடைத்தாயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. இனி மங்களார்த்தமாக தரிக்குமித்தனையிறே அஞ்சநம். "கருங்கண்ணி" என்றுநிற்கச்செய்தே 'மையார்' என்னும்போது, மங்களார்த்தமாக அஞ்சநம் தரித்ததாமித்தனையிறே. [கமலமலர்மேற்செய்யாள்] - இதுவாயிற்று ஸௌகுமார்யமிருக்கும்படி. [திருமார்வுஇத்யாதி] - தாமரைப்பூவில் பரிமளமும் தாதும் அடிக்கோதித்தால் உன்மார்விலே யடிமாறியிடவேண்டும்படி மார்வுபடைத்தவனே! இவள் இவ்வேற்றமெல்லாங் கொண்டும் அம்மார்வுக்குஅவ்வருகுபோகமாட்டாள். அவ்வகலமெல்லாம் போக்யமாயிருக்கையாலே, அவ்வருகுபோகவேண்டாவே. [திருமாலே] - அவனும், இவள் மார்வில் படும்பாட்டை இவளுடைய ஸர்வாவயவங்களிலும் பிச்சேறியிருக்குமாயிற்று. அவனுக்குத் திருக்கண்கள் சிவந்தாயிற்றிருப்பது. அவன் இவளை நிரந்தரகடாக்ஷம்பண்ணுகையாலே, அவன்கண்ணின்சிவப்பு இவள்மேலேயூறி இவள்திருமேனி சிவந்திருக்கும்; இவள் அவனை நிரந்தரகடாக்ஷம் பண்ணுகையாலே, இவள் கண்ணிற்கறுப்பு அவன் திருமேனியிலேபரந்து அவன் திருமேனி ஶ்யாமளமாயிருக்கும். இவளுக்குத் திருக்கண்கள் குளிர்ந்திருக்கும்; அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருக்கும். அவனோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று இவளுக்குத் தண்ணளி விஞ்சியிருப்பது; இவளோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருப்பது. ஆக, இருவர்க்கும் இரண்டும் குறைவற்றிருக்கும்,ப்ரணயித்வத்தாலே. வரவிட்ட ஆள் அழியச்செய்யப்புக, "நகஶ்சிந்நாபராத்யதி" (நகஶ்சிந்நாபராத்யதி) என்னுமிவள், "என்னடியாரதுசெய்யார்" என்று அவள்தன்னோடே

கண்ணி" என்றதுக்குபாவம் - ஒன்றால் இத்யாதி. ஆனால் "மையார்" என்பானென்னென்ன - இனி இத்யாதி. "மங்களார்த்தம்" என்கிறதென்? அழகுக்குடலாமேலோவென்ன - கருங்கண்ணி இத்யாதி. இத்தால் ஸௌந்தர்யஞ்சொல்லிற்று; மேல் ஸௌகுமார்யம் சொல்லுகிறதென்கிறார் - இதுவாயிற்று இத்யாதி. அதாவது - மலர்மேலேயிருப்பதத்தனை போக்கி, மற்றையிடம்பொறாத ஸௌகுமார்யமென்கை. "திரு" என்று - அழகைவிவக்ஷித்துபாவமாதல், "சேர்" என்றதுக்குபாவமாதல் - தாமரைப்பூவில் இத்யாதி. "மார்வு" என்று ஏகாவயவகதாத்துக்குபாவமாதல், "சேர்" என்கிறவர்த்தமாநார்த்தமாதல் - இவள்இவ்வேற்றம் இத்யாதி. இவ்வேற்றம் என்றது - கீழ்ச்சொன்ன ஸௌந்தர்யஸௌகுமார்யாதிகளை. மாட்டாமைக்குஹேதுவேதென்ன - அவ்வகலம் இத்யாதி. அகலம் - வைபுல்யம்: மார்வு என்று ஸ்வபாவார்த்தம். "மார்வு" என்று ஓரவயவத்தை விசேஷியாதே, வெறுமனே "திருமால்" என்றதுக்குபாவம் - அவனும் இத்யாதி. திருவினிடத்திலே வ்யாமுக்யனென்று பதார்த்தம். அஞ்சநாலங்க்ருதமாய் ஸ்வாபாவிகமான கருமையையுடைத்தான திருக்கண்களையுடையளாய், தாமரைப்பூவின்மேலேயிருப்பாளாய், பத்மவர்ணையாகையாலே சிவந்ததிறத்தையுடைய லக்ஷ்மியானவள், அழகியமார்விலே சேரும்படியாய், திருவினிடத்திலே வ்யாமோஹத்தையுடையவனேயென்று பதார்த்தம். "மையார்கருங்கண்ணி, செய்யாள்" என்றப்ரஸங்கத்திலே, பரஸ்பரகடாக்ஷங்களாலே திருமேனிகளுக்கு நிறம்வந்ததாக ரஸோக்தி - அவனுக்குத் திருக்கண்கள் இத்யாதி. இருவருடையவும் திருமேனியில் சிவப்பும் கறுப்பும் பரஸ்பரகடாக்ஷங்களால் வந்தவையென்று; இவர்களுடைய தயாவாத்ஸல்யங்களும் பரஸ்பரகடாக்ஷங்களாலே வந்ததென்கிறார் - இவளுக்கு இத்யாதி. தத்விவரணம் - அவனோட்டை இத்யாதி. அந்யோந்யம் சேர்த்தியாலே க்ருபாவாத்ஸல்யங்களானால், ஔபாதிகமாய் அநித்யமாகாதோவென்ன; உபாதி நித்யமாகையாலே நித்யமென்கிறார் - ஆக இத்யாதி. கறுப்பு - குளிர்த்தியாய், க்ருபையைச்சொல்லுகிறது. அப்படி இருவர்க்கும் இரண்டும் விஞ்சியிருக்குமென்கைக்கு நியாமகமேதென்ன, இருவருடையவும் உக்திகளென்கிறார் - வரவிட்டஆள்

---

† ஒன்றால் ஸமாதாநம்பண்ண - அழகுக்காக ஒன்றைக்கொண்டு வைக்க.

மறுதலைக்கும்படியாயிற்று அவன்இருப்பது; ஆகையாலே, இருவருமானசேர்த்தியிலே இவை இருவர்க்கும் குறைவற்றிருக்குமென்றுமாம். வ்யதிரேகித்தஅன்றும் தனித்தனியேகுறைவற்றிருக்குமென்றுமாம். [திருமார்வினில்சேர்] - நித்யாநுபவம் பண்ணுநிற்கச்செய்தேயும், "அகலகில்லேனிறையும்"என்று இன்று வந்து கிட்டின புதியார்படுவத்தையெல்லாம் படாநிற்கும். சேரென்கிற வர்த்தமாநம் - இத்தைக் காட்டுகிறது. [வெய்யாரித்யாதி] - இவள் கையில் லீலாரவிந்தம் அவனுக்கு போக்யமாயிருக்குமாபோலேயாயிற்று, அவன்கையில் திவ்யாயுதங்கள் இவளுக்குஇனிதாயிருக்கும்படி. இவள் உகப்புக்காக ஆஶ்ரிதவிரோதிகளை யழியச்செய்கைக்குமுதலாய் தர்ஶநீயமாயிருக்குமாயிற்று. ப்ரதிபக்ஷத்தின்மேலே மிக்கவெம்மையையுடைத்தாய்ப் புகரோடு கூடியிருக்கிறதிருவாழி, ஸந்நிவேஶமேயமைந்து வேறொருகார்யங் கொள்ளவேண்டாதே வைத்தகண்வாங்காதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியான ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்துங்கையா] - வெறும்இவையுமன்று, கையுமன்று: இரண்டினுடையவுஞ்சேர்த்தியாயிற்று, இவர்ஆசைப்படுகிறது. "கூராராழிவெண்சங்கேந்தி - வாராய்" என்னுமவிறே. [உன்னை] - லக்ஷ்மீஸம்பந்தத்தோடும், திவ்யாயுதங்களோடும், திவ்யவிக்ரஹத்தோடுங் கூடியிருக்கிற உன்னை. இவருடைய உத்தேஶ்ய வஸ்து இருக்கிறபடி இதுகாணும். [காணக்கருதும்] - "**ஶங்கசக்ரகதாதர: - ஸ்ரீவத்ஸவக்ஷா:**" (ஶங்கசக்ரகதாதர: - ஸ்ரீவத்ஸவக்ஷா:) என்கிற உன்வடிவைக்காண ஆசைப் படாநின்றது. அவனை யாசைப்படுவார் ஆசைப்படுவது ஒருகார்யங்கொள்ளவன்று, காணவாயிற்று. * திருவேங்கடத்தானைக் காணவிறே. * காரார்திருமேனிகாணுமளவுமிறே.

இத்யாதிவாக்யத்வயத்தாலே. கீழ் - பரஸ்பரம் சேர்த்தியாலே க்ருபாவாத்ஸல்யங்கள் வந்ததாகச் சொல்லி,இவளுக்கு அவிமேதக்ஷணத்வமும், அவனுக்கு புருஷோத்தமத்வப்ரயுக்தமான புண்டரீகாக்ஷத்வமும் ஸ்வதஸ்ஸித்தமாகையாலே, க்ருபாவாத்ஸல்யங்களும் பரஸ்பரம் சேர்த்தியால்வந்ததன்றிக்கே ஸ்வாபாவிகங்களென்கிறார் - வ்யதிரேகித்த இத்யாதி. இவள் அம்மார்வுவிட்டுஅவ்வருகு போகமாட்டாமையின் எல்லையயருளிச்செய்யாநின்றுகொண்டு, இது "சேர்" என்கிறவர்த்தமாநவிஷத்தமென்று முக்தகண்டமாகவருளிச்செய்கிறார் - நித்யாநுபவம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. பிராட்டியைச்சொல்லி, அநந்தரம் ஆயுதங்களைச்சொன்னதுக்கு பாவம் - இவள்கையில் இத்யாதி. இவ்விடத்திலே - "**ஸாரோந்ஹோஹவிகஸத்ஸஹஸ்ரவேஜயஷீவஜ்ஞாயஸ்யாதிரீணை:ஸ்வயமேவஷ்டே । தத்தாரவேதவிவதேவுஷிதத்ருகாஶ்ரீரஜயாமணிஜ்ஞதி மாஹதேகவா**" இத்யாத்யநுஸந்தேயம். ஸ்ரீகுணரத்நகோஶே(௩௭). ஆனால், "வெய்யார் சுடர்" என்று விசேஷிப்பானென்னென்ன - இவள்உகப்புக்காக இத்யாதி. ஶப்தார்த்தம் - ப்ரதிபக்ஷத்தின் இத்யாதி. "சுரி" என்றதுக்கு பாவம் - ஸந்நிவேசம் இத்யாதி. ஸந்நிவேசம் - ஸம்ஸ்தாநம். "**ஸந்நிவேஶஸ்து ஸம்ஸ்தாநம்**" இதி நிகண்டு. "ஏந்தும்கையா" என்றதுக்கு பாவம் - வெறும்இவையும் இத்யாதி. இரண்டினுடையவும் சேர்த்தியழகை யாசைப்பட்டிருப்பரென்னுமதுக்கு ப்ரமாணம் - கூராராழி இத்யாதி. கீழெல்லாவற்றையும் கடாக்ஷித்து - லக்ஷ்மீஸம்பந்தம் இத்யாதி. திவ்யவிக்ரஹத்தோடுமென்றது - "ஏந்தும்கையா" என்றத்தைப்பற்ற. இவர்க்குஅநுபாவ்யவஸ்து இப்படிப்பட்டதென்கிறார் - இவருடைய இத்யாதி. "காண" என்றதுக்கு பாவம் - ஶங்கசக்ர இத்யாதி. "**தத: ஶங்ககதாசக்ரதர: । ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஶ்ரீரஜய்ய: ஶாஶ்வதோ த்ருவ:**" இதி ராவண வதாநந்தரே மண்டோதரீ. ஸ்ரீஶ்சவத்ஸஶ்சவக்ஷஸி யஸ்யஸ:-ஸ்ரீவத்ஸவக்ஷா: என்றஇங்குஸமாஸம் விவக்ஷிதம். வத்ஸம்-மறு. "காண" என்கிறதென்? கார்யம்கொள்ளவேண்டாவோவென்ன - அவனை இத்யாதி. காண்கைக்கே யாசைப் பட்டிருப்பரென்னுமதுக்கு ப்ரமாணம் - திருவேங்கடத்தானை இத்யாதி. ஸ்பஷ்டோர்த்த:. அங்கும்

நித்யஸூரிகளும் ஸதாதர்சநம்பண்ணும் இத்தனையிறே. "அணியரங்கனென்னமுதினைக் கண்டகண்கள் மற்றென்றினைக்காணா" என்று இவ்வளவிலே தேக்கிட்டுவிடுவோர்கள் இங்குள்ளார்; "ஏதத்தேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி" (ஏதத்தேவாம்ருதம்த்ருஷ்ட்வாத்ருப்யந்தி) என்று இவ்வளவிலே தேக்கிட்டுவிடுவோர்கள் அங்குள்ளார். [என்கண்ணே] - ஸம்ஸாரிகளில் தமக்கு உண்டான சாபலத்தோபாதியும் போருமாயிற்று, இவர்தம்மிற்காட்டிலும் இவருடைய திருக்கண்களுக்கு. இவர்க்கு நேத்ரபூதரான எற்றமுண்டிறே சுவற்றுக்கு.

இரண்டாம் பாட்டு.

கண்ணே! உன்னைக்காணக்கருதிஎன்னெஞ்சம்
எண்ணேகொண்ட சிந்தையதாய்நின்றியம்பும்
விண்ணோர்முனிவர்க்கென்றுங்காண்பரியாயை
நண்ணுதொழியேனென்றுநான் அழைப்பனே.

ஆ —(கண்ணே.) - என்னெஞ்சம் உன்னைக்காண ஆசைப்படாநின்றது. ப்ரஹ்மாதிகளுக்கும் காணஅரிதாயிருக்கச்செய்தே, எனக்கு த்ருஷ்டிபூதனாயிருந்த உன்னையொழிய வேறு எனக்குச் செல்லாமையாலே உன்னைக் காணுதொழியில் தரியேனென்று நான் கிடந்து கதறுகின்றேனென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய ஹ்ருதயத்துக்கும்உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே என்றுதொடங்கி] - எனக்கு த்ருஷ்டியானவனே! உன்னைக் காண ஆசைப்பட்டு வஹுமநோரதங்களைப்பண்ணி என்னுடைய ஹ்ருதயம் நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். [விண்ணோரென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்குங்கூட அரியையாயிருக்கச்செய்தே என்னுடைய சாபலத்தாலே நான் உன்னைப்பெற்று முடிவன் என்று கூப்பிடாநின்றேன். [நண்ணுதொழியேன்] - உன்னைப் பெறுவிடில் தரியேனென்றுமாம்.

ப.— அநந்தரம், "உன்னைக்காணவேணும்" என்கிற அபிநிவேசத்தாலே, என்னெஞ்சும் நானும் அலற்றுகின்றோமென்கிறார்.

கண்ணே - (எனக்கு சர்மநயநஸ்தாநத்தனுய்க்கொண்டு) த்ருஷ்டியானவனே! உன்னை - (ஸாயநஸ்தனான) உன்னையே, காண - ஸதா தர்சநம்பண்ணி யநுபவிக்க, கருதி, (என்னிலும் சபலமான), என் நெஞ்சம் - என் நெஞ்சானது, எண்ணே கொண்ட - வஹுஸங்க்யாதமான, சிந்தையதாய் - மநோரதங்களைப்பண்ணி நின்று, (காண்கையிலும் ப்ரதிபந்தகம்போகையிலும் அடிமைசெய்கையிலுமுண்டான அபிநிவேசத்தாலே), இயம்பும் - அலற்றுநிற்கும்; நான் - (கரணியான) நான், விண்ணோர்-

---

அப்படியென்கிறார் - நித்யஸூரிகளும் இத்யாதி. இவ்விரண்டுக்குமடைவே ப்ரமாணங்கள் - அணியரங்கன் இத்யாதி. "என்" என்ற விசேஷணத்துக்கு ஹாவம் - ஸம்ஸாரிகளில் இத்யாதி. நேத்ரபூதர் - ப்ரதாநர், க்ரமேணாந்வய:.

ப்ரஹ்மாதிகளுக்கும், முனிவர்க்கு-ஸநகாதிகளுக்கும், என்றும் -, காண்பு அரியாயை-காணஅரிய உன்னை, நண்ணுதொழியேன் - கிட்டாமல்விடேன், என்று - என்று வ்யவஸிதனாய்க்கொண்டு, அழைப்பன்-(த்வரையாலே) கூப்பிடாநின்றேன்.

இ.—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய நெஞ்சுக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே]—எனக்கு த்ருஷ்டியானவனே! [உன்னைக் காணக்கருதி] - நிரதிசயபோக்யனான உன்னைக் காண ஆசைப்பட்டு; காண்கைக்கு ஸாதநமான கண்ணும் காணப்படும் விஷயமும் அவனே என்கிறார்; "சக்ஷுஸ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" என்னக்கடவதிறே. அவன் தன்னாலே அவனைப்பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் நியதிபோலேயிறே இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும். [என்னெஞ்சம்] - "இயற்றுவாய் எம்மொடுநீகூடி" என்னவேண்டும்படியான நெஞ்சும். [எண்ணேகொண்ட சிந்தையதாய்] - எண்கொண்ட மனோரதத்தை யுடைத்தாய்: பஹுமனோரதங்களைப் பண்ணி, "காணவேணும்' காணாதேபட்ட ஊனத்தைப் போக்கவேணும். அடிமை செய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] - நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். வாக்வ்ருத்தியையும் தானே ஏறிட்டுக்கொள்ளாநிற்கும். [விண்ணோர் இத்யாதி] — தம்முடைய கூப்பீட்டைச் சொல்லுகிறார். ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும்என்றும் கிட்டஅரிய உன்னை. [நண்ணுதொழியேன் இத்யாதி] - "பெறுதொழியேன்: பெற்றுமுடிவன்" என்று நான் கூப்பிடாநின்றேன். ப்ரஹ்மாதிகளுக்கு துர்லபனாயிருக்கிற உன்னை "பெற்றுமுடிவன்" என்கிறது என்கொண்டென்னில்?—தந்தாம் தலையிலே ஸாதநம் கிடந்தவர்களுக்கு விளம்பஹேதுவுமுண்டு. முதலிலே ந்யஸ்தபரனாயிருக்கிற எனக்கு விளம்பஹேதுவில்லை. [நண்ணுதொழியேன்] - அவனைக் கிட்டாதொழியில் நான் தரியேனென்றுமாம். இது ஆய்த்தான் நிர்வாஹம். 'கண்ணே' என்றஇடம் - "அவனே உபாயம்" என்கிறது ; 'உன்னைக் காணக்கருதி' என்றஇடம் - "உபேயமும் அவனே" என்கிறது ; 'எண்ணேகொண்ட சிந்தையதாய்' - என்றஇடம் ஸ்வீக்ருதோபாயருடைய யாத்ரை சொல்லுகிறது. 'நண்ணுதொழியேன்' என்றஇடம் - மஹாவிஸ்வாஸஞ் சொல்லுகிறது.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தமக்கும் தம்முடைய நெஞ்சுக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே] - எனக்கு த்ருஷ்டியானவனே! [உன்னைக்காணக்கருதி] - நிரதிசயபோக்யனான உன்னைக் காண ஆசைப்பட்டு. கண்ணைக்கொண்டே கண்ணைக்காணவிருக்குமாபோலேகாணும் இவர் இருக்கிறது. காண்கைக்கு ஸாதநமான கண்ணும், காணப்படும் விஷயமும் அவனென்கிறார்: "சக்ஷுஸ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" (சக்ஷு-

இரண்டாம்பாட்டு.—கண்ணே இத்யாதி. "என்னெஞ்சமெண்ணேகொண்டசிந்தையதாய்" என்றத்தையும் 'நானழைப்பன்" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - தமக்கும் இத்யாதி.

ரஸோக்தி - கண்ணைக்கொண்டே இத்யாதி. இத்தால் பலிதம் - காண்கைக்கு இத்யாதி. அப்படி யிரண்டுமவனேயென்ன - சக்ஷு இத்யாதி. "சக்ஷுஸ்ஸாம், அத்தால் காணப்படுகிற பதார்த்தமும், அவனுக்கு ப்ரகாரதயாவாம்" என்று இந்த ஸ்ருதிக்கு "ப்ரகார ப்ரகாரி

ஸ்சத்ரஷ்டவ்யஞ்ச நாராயண:)என்னக்கடவதிறே. அவன் தன்னாலே அவனைப் பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் நியதிபோலே, இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும். [என்னெஞ்சம்] - ஸங்கஹேதுவாய்க்கொண்டு, விஷயங்களிலே "பரகுபரகு" என்று வாராநிற்குமிறே ஸம்ஸாரிகளுடைய நெஞ்சம்; * மயர்வறமதிநலமருளப்பெற்றார் நெஞ்சிறே, "தொழுதெழு" என்பது. [எண்ணேயித்யாதி] - எண்கொண்ட மநோரதத்தையுடைத்தாய்: பஹுமநோரதங்களைப்பண்ணி, "காணவேணும், காணாதேபட்ட து:கத்தைப் போக்கவேணும், அடிமைசெய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] - நிரந்தரமாகக்கூப்பிடாநிற்கும். ப்ரவ்ருத்தியையுந் தானே யேறிட்டுக்கொள்ளாநிற்கும். 'கண்ணே' என்கையாலே - "ப்ராபகனவனே" என்றதாய், "உன்னைக்காண" என்கையாலே - "ப்ராப்யவஸ்துவும்அவன்" என்றதாய், "எண்ணேகொண்ட" என்கையாலே - அந்தப்ராபகத்தைக்கொண்டு இந்த ப்ராப்யத்தைப் பெறவேணும்"என்றிருக்கும் அதிகாரியுடைய யாத்ரையிருக்கும்படி சொல்லிற்று. [விண்ணோரித்யாதி] - இதுதான் நெஞ்சுக்கேயாய் நான் கைவாங்கியிருக்கிறேனோ ? ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் என்றுமொக்கக் காணஅரியையா யிருக்கிற உன்னை நான் கிட்டாதொழிவனோ? "பெற்றுமுடிப்பன்" என்று நான் கூப்பிடாநின்றேன்."பெற்றுமுடிப்பன்"என்கிறது இவர்என்கொண்டென்னில்?-"விலக்ஷணதேசவாஸிகளாய்த் தங்களுக்கென்ன ஒருகைம்முதலுண்டாயிருக்கிறவர்களாகையாலே, விளம்பஹேதுவுண்டு அவர்களுக்கு; அங்ஙன்ஒருகைம்முதலில்லாதவர்களுக்கு விளம்பஹேது உண்டோ?" என்று கூப்பிடாநின்றேன். [நண்ணாதொழியேன்] - அவனைக்கிட்டாதொழியில் நான் தரியேன். இது ஆய்த்தான் நிர்வாஹம். "நண்ணாதொழியேன்" என்றவிடம் - மஹாவிஶ்வாஸஞ் சொல்லுகிறது. அவர்கள் விலக்ஷண தேசத்திலே யிருக்கையாலே க்ரமத்திலே யபேக்ஷிக்கலாம் ; அங்ஙனன்றிக்கே, ஸம்ஸாரத்தே யகப்பட்டுநிற்கிற

ஹாவமன்றிக்கே சக்ஷுஸ்ஸாம் சக்ஷுஸ்ஸாலே காணப்படும் விஷயமும் அவனே" என்ற இதுவும் ஓரர்த்தம் இவர்க்கு விவக்ஷிதம். உபாயாந்தரங்களாலும் அவனைப் பெறலாமேயென்ன - அவன் தன்னாலே இத்யாதி. இந்நிர்ப்பந்தத்துக்கு அடியென்னென்ன - ப்ராப்யத்தில் இத்யாதி. "என்" என்றதுக்கு ஹாவம் - பந்தஹேதுவாய் இத்யாதி வாக்யத்வயம். பரகுபரகு என்று - பரபரப்பாய்க்கொண்டு, "எண்ணேகொண்ட -" எண்ணிக்கையை - ஸங்க்யையை, கொண்ட - க்ரஹித்த. ஸங்க்யையை யதிக்ரமித்திருக்கிறஎன்றபடி. விவரணம் - பஹுமநோரத இத்யாதி. பஹுமநோரதங்களாவது? என்ன - காணவேணும் இத்யாதி. இயம்பும் - கூப்பிடும். நெஞ்சுக்கு ஸ்மரணமொழிய கூப்பிடக்கூடுமோவென்ன - ப்ரவ்ருத்தியை இத்யாதி. "கண்ணே" என்று தொடங்கி, "சிந்தையதாய்நின்றியம்பும்" என்னுமளவாலே - ஜ்ஞாதவ்யார்த்த த்ரயமும் ஸித்தித்ததென்கிறார் - கண்ணே இத்யாதி. உத்தரார்த்தத்துக்கு ஸங்கதி - இதுதான் இத்யாதி. பதார்த்தம் - ப்ரஹ்மாதிகளுக்கும் இத்யாதி. பெற்று முடிப்பன் என்றது - பலிதார்த்தம். ப்ரஹ்மாதிகளுக்கு அஶக்யமான வஸ்துவைக் கிட்டுவேனென்கிறது என்னஹேதுவைக்கொண்டென்று சங்காவாக்யத்துக்குக் கருத்து. பரிஹாரம் - விலக்ஷண இத்யாதி. அதாவது - போகங்களெல்லாவற்றாலும் குறைவற்றதேசத்தி லிருக்கிறவர்களாகையாலே, "இப்போதே யவனைப்பெறவேணும்" என்னுமது பிறவாதாகையாலும், தந்தாம் ஸாதநம்முற்றி பலிக்கவேணுமென்னும் அபிஸந்தி நடக்கையாலும் அவர்களுக்குவிளம்பமுண்டென்றபடி. அர்த்தாந்தரம் - அவனை இத்யாதி. "நண்ணதபோது, ஒழியேன் - தரியேன்" என்ற ஆய்த்தான் நிர்வாஹம். "கிட்டியே விடுவன்" என்றத்தால் பலிதமான அர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் - நண்ணாதொழியேன் இத்யாதி. 'அங்ஙனொருகைம்முதல்' இத்யாதிவாக்யத்திலே, "முனிவர்" என்ற - யநநசீலரென்றதுக்கு ப்ரதிகோடிகாட்டி, "விண்ணோர்" என்றதுக்கு ப்ரதிகோடிகாட்டுகிறார் -

இவரையிறே க்கேவேடுக்கவேண்டுவது. எடுக்கவேண்டும் நிலத்திலே யிருந்தேன்; எடுக்கவேணுமென்றிருந்தேன்; எடுப்பான் தானுமிருந்தான்; எடுத்தால் பெறுவது தன்னையாயிருந்தது; ஆனபின்பு, எனக்கு என்னகண்ணழிவு உண்டு? (உ)

மூன்றாம் பாட்டு.

அழைக்கின்றவடிநாயேன்நாய்கூழைவாலாற்
குழைக்கின்றதுபோலஎன்னுள்ளங்குழையும்
மழைக்குஅன்றுகுன்றமெடுத்துஆநிரைகாத்தாய் !
பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே.

ஆ.—(அழைக்கின்ற.) - என்னெஞ்சானது, தன்னுடைய அயோக்யதையையும், ஸாமக்ரீவைகல்யத்தையும் பாராதே, தன்னுடைய சாபலத்தாலே யுன்னையாசைப்பட்டு விடமாட்டுகிறதில்லை; இப்படி என்னுடைய ஸர்வகரணங்களும் தளராநிற்கச்செய்தே பேசாதிருந்தருளுகையாலே, உபாயசூந்யராய் ஆபந்நராயிருப்பாரை ரக்ஷிக்கக்கடவதான உன்னுடைய நிரவதிக காருண்யவெள்ளத்திலும் நான் அகப்படேனோ? என்றஞ்சாநின்றேன் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு மிகவும் அவஸந்நராகச்செய்தே அவன் வரக்காணாமையாலே, நிஸ்ஸாதநராய் ஆர்த்தராயிருந்தவர்களைத் தானே கைக்கொண்டு ரக்ஷிக்கக்கடவதான இக்குணத்துக்குப் புறம்பானேனோ என்று நோவுபடுகிறார்.

[அழைக்கின்றவென்று தொடங்கி] - அயோக்யனுமாய் அதிக்ஷுத்ரனுமாயிருந்துவைத்து ஆர்த்தனாய்க் கூப்பிடுகிற என்னுடைய ஹ்ருதயமானது நாய் தன்னுடைய கூழைவாலாலே பிறர்க்குத் தெரியாதபடி ஸ்வாபேக்ஷிதஸூசகமான சேஷ்டைகளைப் பண்ணுமாபோலே, ஒருவர்க்குமறிய நிலமல்லாதபடி நோவுபடாநின்றது நிஸ்ஸாதநனாய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கு அன்றென்று தொடங்கி]- பசுக்களும் இடையரும் நோவுபடும்படி இந்த்ரன் வர்ஷித்த வர்ஷத்துக்கு மலையை எடுத்துப்பரிஹரித்தருளின உன்னுடைய குணத்துக்குப்புறம்பாகாநின்றேன் என்று நோவுபடாநின்றேன்.

ப.—அநந்தரம், ஆர்த்தியேபற்றாசாக ஆஸ்ரிதரக்ஷகனான உன்னுடைய க்ருபையானது என்னை நழுவவிடுகிறதோ? என்றஞ்சாநின்றேனென்கிறார்.

அழைக்கின்ற - (அஸ்நிவேஸாதிஶயத்தாலே) அழைத்துக்கூப்பிடாநிற்பேனாய், அடி - அநந்யகதியான ஸம்பந்தத்தையுடையேனாய், நாயேன் - அதனில் அவத்யாவஹமான நிகர்ஷத்தையுடைய என்னுடைய, என்னுள்ளம் - து:கக்ஷீணமானநெஞ்சானது, (உன்னுடையஸந்நிதியிலே), நாய் - நாயானது, (தன்னினைவை), கூழை -

அவர்கள் விலக்ஷண இத்யாதிவாக்யத்வயத்தாலே. பாட்டெல்லாவற்றாலும் ஸித்தித்தவர்த்தத்தைக் கொய்துபிடித்து நிகமிக்கிறார் - 'எடுக்க' 'எடுக்கவேண்டும்' இத்யாதி. "விண்ணோர்" என்றதுக்கு ப்ரதிகோடியை விவக்ஷித்து "அழைப்பன், கண்ணே, உன்னைக்காண" என்ற பதத்ரயத்தையும்பற்ற - எடுக்கவேணும் இத்யாதிவாக்யத்ரயமும். என்ன கண்ணழிவுஉண்டு என்றது - உக்தஹேதுக்களைப்பற்ற. கண்ணழிவு - விளம்பமும், குறையும். க்ரமேணாந்வய:. (உ)

கூழையான, வாலால் - வாலையசைத்து, குழைக்கின்றதுபோல - ப்ரகாசிப்பிக்குமா போலே; குழையும் - சிதிலமாகாநின்றது; (இந்த்ரன்), அன்று - (அப்படிவர்ஷமுகத்தாலே ஆர்த்தியைஜநிப்பித்த) அன்று, மழைக்கு - அந்தவர்ஷத்துக்கு நிவாரணமாம்படி, குன்றம் - மலையை, எடுத்து - எடுத்து, ஆ - (ரக்ஷாபேக்ஷைபண்ணக்கடவதாக) பசுக்களுடைய, நிரை - திரளை, காத்தாய் - ரக்ஷித்தவனே! (உன்னுடைய), அருள் - நிரவதிகக்ருபையானது, (என்னளவில்), பிழைக்கின்றது - தப்புகிறதோ, என்று—, பேதுறுவன் - கலங்காநின்றேன். உனக்குத் தப்புகிறதோவென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், இப்படிக் கூப்பிடச் செய்தேயும் அவன் வரக்காணாமையாலே ஆர்த்தியேமுதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ என்கிறார்.

[அழைக்கின்றவடிநாயேன் இத்யாதி]-அயோக்யனாய்க் க்ஷுத்ரனாயிருந்து வைத்து ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினால் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்று தம்முடைய நிலை. அது தன்னையுடையவனுக்குத் தன் அபிமதத்திலே ருசியைத் தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அதுதான் கூழையானால், தெரிவிக்கை அரிதாமிறே; அதுபோலே என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால், தமக்குஓடுகிற க்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நிஸ்ஸாதநனாய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கன்று இத்யாதி] - இந்த்ரன்வர்ஷிக்கிற ஊணையிலே மலையை எடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்ற தருளென்று பேதுறுவனே] - "வரையாதே ரக்ஷித்த அந்த மஹாகுணம் எனக்கு உதவாமையாலே பிழைக்கப்புகாநின்றாய் என்று பேகணியாநின்றேன் என்று ஆளவந்தார் நிர்வாஹம். "அந்த மஹாகுணத்துக்குப் புறம்பாகிறேனோ என்றஞ்சாநின்றேன்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. இப்படிக் கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே, ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ என்கிறார்.

[அழைக்கின்றவடிநாயேன்இத்யாதி] - அயோக்யனாய் க்ஷுத்ரனாயிருந்து வைத்து, ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினால் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்றுத் தம்முடைய நிலை. நாய், தன்னையுடையவனுக்குத் தன்னபிமதத்தில் ருசியைத்தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அவ்வால்தான் கூழையானால் தெரிவிக்கையரிதாமிறே; அதுபோலே, என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால் - தமக்குஓடுகிறக்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நிஸ்ஸாதநனாய்வைத்து ஆசைப்படாநின்றே

மூன்றாம்பாட்டு.—அழைக்கின்ற இத்யாதி. "பிழைக்கின்றதருளென்றுபேதுறுவன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இப்படி இத்யாதி.

"அடிநாய் - நாயேனான நான், அழைக்கின்றேன்" என்றந்வயித்து அருளிச்செய்கிறார் - அயோக்யனாய் இத்யாதி. "நாய்" என்கையாலே - அயோக்யத்வமும், க்ஷுத்ரத்வமும் ஸித்தம். அடி - அடியனாய், நாயேன் - நிஹீநனான என்னுடையவென்று பலிதார்த்தம். அயோக்யனானால் கூப்பிடுகிறதென்? தவிரலாமேயென்ன - ருசியாலே இத்யாதி. வாலென்றதே, "கூழை" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - நாய், தன்னை இத்யாதி. "கூழைவாலால்" என்றத்ருஷ்டாந்தத்துக்கு அநுகுணமாக ஹாவத்வயமருளிச் செய்கிறார் - இத்தால் தமக்குஇத்யாதி வாக்யத்வயத்தாலே. த்ருஷ்

னென்றுமாம். [மழைக்குஇத்யாதி] – இந்த்ரன் அஶ்மவர்ஷத்தை வர்ஷிக்கிறவளவிலே, மலையையெடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்றதருளென்றுபேதுறுவனே] - "'வரையாதேரக்ஷித்தமஹாகுணம் எனக்கு உதவாமையாலே யிழக்கப்புகாநின்றாய்' என்று பேகணியாநின்றேன்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இது, பொருளழகிது: ஆனால், இப்போது இவர்க்குஓடுகிற உசைக்குச் சேராது; ஆனபின்பு,'பசுக்களும்இடையரும் வர்ஷத்திலே நோவுபடாதபடி மலையையெடுத்துமறித்த இம்மஹாகுணத்துக்கு நான் புறம்பாகிறேனே?' என்று பேதுறாநின்றேன்" என்று. (௩)

நான்காம் பாட்டு.

உறுவதிதுவென்றுஉனக்காட்பட்டுநின்கண்
பெறுவதெதுகொலென்று பேதையேன்நெஞ்சம்
மறுகல்செய்யும் வானவர்தானவர்க்கேன்றும்
அறிவதரியஅரியாயஅம்மானே!

ஆ.—(உறுவதிது) - நீ ஆஶ்ரிதஸுலபனாயிருக்கச்செய்தே சிலருக்கு அரியையாயிருக்கையாலே, எனக்கும் அரியைபாயிருக்கிற்செய்வதென்? என்று என்னெஞ்சு நடுங்காநின்றதென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும், அரியையாயிருக்கக் காண்கையாலே நெஞ்சு கலங்காநின்றது என்கிறார்.

[உறுவதிதுவென்று தொடங்கி] - இது பரமப்ரயோஜநம் என்று அடிமை புகுந்து, உன்பக்கல் அடிமைசெய்யப் பெற்றேனோ என்று மிகவும் முக்யமான என்னுடைய ஹ்ருதயமானது கலங்காநின்றது; தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்று மொக்க அறியவொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேஶ்வரனே!

ப.—அநந்தரம், உத்தேஶ்யமான ஶேஷத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியான உனக்கு அடிமையாய்வைத்து,என்பேறு ஏதாயிருக்கிறதோ? என்று என்னெஞ்சுகலங்காநின்றதென்கிறார்.

(ஸம்பந்தமொத்திருக்கச் செய்தேயும்), வானவர் - அநுகூலரானவானவரோடு, தானவர்க்கு - ப்ரதிகூலரானதாநவரோடுவாசியற, (ஆஶ்ரித ஸௌலப்யத்திலும் ஸர்வேஶ்வரத்வத்திலும், என்றப் - என்றுமொக்க, அறிவது-அறிய, அரிய - அரியை

டாந்தத்துக்குத் தெரிவிக்கையரிதென்கிறமாத்ரமே அபேக்ஷிதம். ஆளவந்தார்நிர்வாஹத்துக்கு, அவ்வருள் உன்னைத் தப்பிப்போகிற தென்று பேதுறுநின்றேனென்று ஸப்தார்த்தம். அருளென்னைத் தப்பிப்போகிறதென்று பேதுறுநின்றேனென்று எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு ஸப்தார்த்தம். பேகணியாநின்றேன் - *க்லேசியாநின்றேன்.* இவர்க்கோடுகிறதசைக்குச் சேராது *என்றது - அலாஹத்தாலே நோவுபடாநிற்க அவனிழவுக்குநோவுபடுகை சேராதென்றபடி.* பேதுறுகை - *து:கப்படுகை. 'அழைக்கின்றஅடிநாயேனை - என்னுள்ளம் - நாய் கூழைவாலால் குழைக்கின்றது போல - குழையும்; இவ்வவஸ்த்தையிலும் வரக்காணாமையாலே, மழைக்குஅன்றென்றுதொடங்கி, அருள் - பிழைக்கின்றது என்று பேதுறுவன் இத்யந்வய:.* (௩)

யாம்படியான, அரிஆய - நரஸிம்ஹமான, அம்மானே - ஸ்வாமியே! இது - இந்த ஶேஷத்வமாகிறஸ்வரூபமே, உறுவது - உத்தேஶ்யம், என்று - என்றறுதியிட்டு, உனக்கு - (தத்பாதிஸம்பந்தியான) உனக்கு, ஆட்பட்டு - தாஸ்யாநுமதியைப்பண்ணி, நின்கண் - (ஸ்வாமியான) உன்பக்கல், பெறுவது - பலமாக லபிக்கவருகிறது, எதுகொல் - (ஸ்வரூபாநுரூபகைங்கர்யமோ, ஸம்ஸாரஸ்திதியோ?) எதாயிருக்கிறது? என்று—, பேதையேன் - (ஏதேனுமொன்றை நீ செய்தபடிகண்டிருக்கை ப்ராப்தமென்னும்) அறிவில்லாத என்னுடைய, நெஞ்சம் - நெஞ்சானது, மறுகல்செய்யும் - கலங்காநின்றது.

இ.—நாலாம்பாட்டில், நீர் இங்ஙன் பயப்படுகிறதென்னென்ன? "தேவாதிகளுக்குஅரியையாகையாலே எனக்கும் அரியையாகிறாயோ?" என்று என்னெஞ்சு கலங்காநின்றதென்கிறார்.

[உறுவது இதுவென்று] - சீரியது அடிமைசெய்யுமது என்று. [உனக்காட்பட்டு]-உனக்கு அடிமைபுகுந்து. "ஸ்வரூபம் ஶேஷத்வபாரதந்த்ர்யம்" என்று உணர்ந்தால் சீரிய ப்ரயோஜநம் கைங்கர்யமிறே. [நின்கண்பெறுவதேது கொலென்று] - உன்பக்கல் பெறுவதேதோவென்று. ஸ்வரூபத்தையும் உணர்ந்து, "கைங்கர்யமே சீரியது" என்றும் அறிந்து, "ஈஶ்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக் கொடுத்துவிடுவான் ஒருத்தனல்லன்" என்றும் அறியும் இவர், "உன்பக்கல் பெறுவதேதோ?" என்கைக்கு ஹேது என்னென்னில்?—க்ரமத்திலேவந்து முகங்காட்டுகிறோம் என்று ஸம்ஸாரத்தி விருப்பே ஶேஷித்துவிடப் புகுகிறதோ? என்த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன்நெஞ்சம் மறுகல்செய்யும்] - நாம் அபிஸந்திபண்ணினபடியே பலிக்கும் என்னும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சு கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்கு அடியென்னென்னில்? [வானவர் இத்யாதி] - "தேவாநாம் தாநவாநாஞ்ச" என்று ஸம்பந்தமொத்திருக்க தேவதாநவர்களுக்கும் என்றுமொக்க அறியவொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேஶ்வரனே! ஆஶ்ரிதஸௌலப்யத்தோடு ஸர்வேஶ்வரத்வத்தோடு வாசியற அவர்களுக்கு அறியவரியனென்கை. இத்தால், 'ப்ரஹ்லாதனுக்கு எளியையான கோடியிலேயாகிறேனோ, தேவாதிகளுக்கு அரியையாகிற கோடியிலேயாகிறேனோ?' என்று அஞ்சாநின்றேன். தேவாஸுரவிபாகம் பண்ணின ஸமநந்தரம் "நாம் எக்கோடியிலேயாகிறோமோ?" என்று அர்ஜுநன் அஞ்சினாற்போலே அஞ்சாநின்றேன்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'நீர் இங்ஙன் பயப்படுகிறதென்?' என்ன,—"தேவாதிகளுக்குஅரியையாகையாலே எனக்கும் அரியையாகிறாயோ?" என்று என்னெஞ்சுகலங்காநின்றதென்கிறார்.

[உறுவதிதுவென்று] - சீரியது அடிமைசெய்யும்இது என்று. [உனக்காட்பட்டு] - உனக்குஅடிமைபுகுந்து. "ஸ்வரூபம் ஶேஷத்வபாரதந்த்ர்யம்" என்றறிந்தால் சீரிய

நாலாம்பாட்டு.—உறுவது இத்யாதி. "என்னெஞ்சம்மறுகல்செய்யும், வானவர்தானவர்க்கென்றும் அறிவதரிய" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - நீர்இங்ஙன் இத்யாதி. இந்தஅவதாரிகை, "மழைக்கன்று" இத்யாதிக்கு - எம்பெருமானார் நிர்வாஹத்தைப்பற்ற.

உறுவது - யோக்யமானது. சீரியதென்றபடி. சீரியதென்றறிந்தபடியென்னென்ன - ஸ்வரூபம் இத்யாதி. இவ்விடத்தில் - "ஶ்ருத்வாபிஜநாநாம்ஸணவாஸுரஷாயபூர்வ

ப்ரயோஜநம் கைங்கர்யமேயிறே. [நின்கண் பெறுவதெதுகோலென்று] - உன்பக்கல் பெறுவதுஏதோவென்று: ஸ்வரூபத்தையுமுணர்ந்து, ''கைங்கர்யமே சீரியதும்'' என்றறிந்து, 'ஈஶ்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக்கொடுத்துவிடுவா னொருவனல்லன்'' என்றும் அறியும்இவர், ''உன்பக்கல் பெறுவதெது?''என்கைக்கு ஹேதுவென்னேன்னில்;—''க்ரமத்திலேசெய்கிறோம்'' என்று ஸம்ஸாரத்திலிருப்பேயபேக்ஷித்துவிடப்புகுகிறதோ? என் த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன் நெஞ்சம்மறுகல்செய்யும்] - ''நாம் அபிஸந்தி பண்ணினபடியே பலிக்கும்'' என்னும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சம் கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்குஅடியேன்? என்னில்,—நெஞ்சினுடைய விவேகஶூந்யதையிறே இதுக்கடி; நீதானும்இதுக்கடி. [வானவரித்யாதி] - ''தேவாநாம் தாநவாநாம்'' (தேவாநாம்தாநவாநாம்) அம்மானாயிருந்துவைத்து - ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து, தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்றுமோக்க அறியவரியையாய், அந்நிலை தன்னிலே ஒரு சிறுக்கனுக்கு உன்னை யுள்ளபடியறியலாயிருந்தாய்: அதில் நான் எக்கோடியிலே யாகிறேனோ? என்றறியாமை. தேவாஸுரவிபாகம்பண்ணின வநந்தரம், அர்ஜுநன் 'நான் எக்கோடியிலேயாகிறேனோ''என்றஞ்சினாற்போலே. பின்னை அவன் இதுக்குப்பண்ணின பரிஹாரமேன்? என்னில்;—தன் ஸௌலப்யத்தை ப்ரகாசிப்பிக்கையிறே. எளியோமாகையும் ஒருகோடியுண்டாக நீர் சொன்னீராகில், நீர்தாம் அக்கோடியிலேயுள்ளா ரொருவராய் இருந்தீராகில் உமக்கு இனி நாம் கைப்புகுந்தோமென்றிருக்கையமையாதோ? என்கையிறே. (ச)

ஸ்யா। ஸம்வத்ஸரஸஹஸ்ராணி ப்ராப்ய ஸாந்த்வயதே'' என்று, பிள்ளையருளிச்செய்த வசநத்தை ஸம்வாதமாக அருளிச்செய்வர். ''க்ரமத்திலேசெய்கிறோம்'' இத்யாதி பரிஹாரவாக்யத்துக்குக்கருத்து - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு உதவினாற்போலே சடக்கெனவுதவுகிறாயோ? ஸ்ரீபரதாழ்வானுக்குப்போலே க்ரமத்திலே செய்கிறாயோ?'' என்றருளிச்செய்வர். மேலுக்கவதாரிகை - நீதானும்இதுக்கடி என்று. இதுக்கு - விவேகஶூந்யதைக்கு. ''அம்மான்'' என்றத்தைப்பற்ற - தேவாநாம் இத்யாதி. ''தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யமதிதைவதம்। ஸர்வதா சரணத்வந்த்வம்'' இத்யாதி. எக்கோடியிலே யாகிறேனோ வென்றது - தேவாஸுரகோடியிலே யாகிறேனோ, ப்ரஹ்லாதகோடியிலே யாகிறேனோ? என்றபடி. ஆழ்வாருடைய ஸம்ஶயம் விளம்பாவிளம்ப கோடிகமாகையாலும், அர்ஜுநனுடையஸம்ஶயம் தேவாஸுரகோடிகமாகையாலும், ஸம்ஶயமாத்ரத்திலே த்ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் - தேவாஸுர இத்யாதி. இவ்விடத்திலே - ''த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச। தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா। த்விவிதோ பூதஸர்கோயம் தைவ ஆஸுர ஏவ ச। விஷ்ணுபக்திபரோ தைவோ விபரீதஸ்ததாஸுர:'' என்று அவர்கள் ஸ்வரூபத்தைச் சொல்லி, இதுதன்னை, 'மோஹாத் தாநவஸ்த்ரீம்வாயு' இத்யாதியாலும், 'ஆஸுரீம் யோநி மாபந்நா:' இத்யாதியாலும்விஸ்தரித்து, 'மாஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ' என்று பரிஹரிப்பதும்செய்தான்'' என்றருளிச்செய்வர். இதுக்கு - ''மறுகல்செய்யும்'' என்றதுக்கு. ''உகந்தே யுன்னையுள்ளுமென்னுள்ளம்'' என்கிற ஏழாம்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - தன் ஸௌலப்யத்தை இத்யாதி. விவரணம் - எளியோம் இத்யாதி. 'சொன்னீராகில்' என்றவநந்தரம், ''நரசிங்கமதாயவுருவே - உகந்தேயுன்னை யுள்ளும்'' என்றுநீரே சொல்லுகையாலே என்றுகூட்டுவது. 'அம்மானாய்வைத்து - வானவர்தானவர்க்கென்றும் அறிவதரியையாய் அரியானவனே - உறுவதிது' என்றுதொடங்கி, 'மறுகல்செய்யும்' என்றந்வயம். (ச)

ஐந்தாம் பாட்டு.

அரியாயவம்மானையமரர்பிரானைப்
பெரியானைப்பிரமனைமுன்படைத்தானை
வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற
கரியான்கழல்காணக் கருதுங்கருத்தே.

ஆ.—(அரியாய)- உம்முடைய அபேக்ஷிதந்தானேதென்னில்,—அண்டாதிபதியான ப்ரஹ்மாவுக்கும் காரணபூதனாகையாலே ஸர்வேச்வரனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், ஸகலஜநமநோஹரதிவ்யமங்கள விக்ரஹவிசிஷ்டனாய், ஆச்ரிதர்க்காத்மஸமர்ப்பணம்பண்ணுகைக்காகத் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற கரியான் கழல் காண ஆசைப்படாநிற்கு மென்னெஞ்சு என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வேச்வரனாய்வைத்து ஆச்ரிதஸம்ச்லேஷைகஸ்வபாவனானவன் கழல்காணக் கருதுமென்னெஞ்சம் என்கிறார்.

[அரியாயவென்று இப்பாட்டுக்கு]- அபரிச்சேத்யனாய் அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து ஜகத்ஸ்ருஷ்டிக்கு உறுப்பாக ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்குவதுஞ்செய்து ஆச்ரிதர்க்கு அத்யந்த ஸுலபனாய் ஆச்ரித ஸம்ச்லேஷைகஸ்வபாவனாய் நிரதிசய ஸௌந்தர்யனானவன் திருவடிகளைக்காண வேணுமென்று நினையாநின்றது என்கருத்து.

ப.—அநந்தரம், காரணத்வாதி குணயோகத்தையுடையனான உன் திருவடிகளைக் காணவேணுமென்று என்னுடைய நெஞ்சானது நினையாநின்றதென்கிறார்.

அரி ஆய - விரோதிநிரஸநசீலனான, அம்மானை - ஸ்வாமியாய், அமரர் - நிரஸ்தஸமஸ்தவிரோதிகளான ஸூரிகளுக்கு, பிரானை - போகப்ரதனாய், பெரியானை - அவர்களாலும் பரிச்சேதித்து அநுபவிக்கவொண்ணாத பெருமையையுடையனாய், (முமுக்ஷுஸிஸ்ருக்ஷையாலே ஜகத்தைஸ்ருஷ்டிக்கைக்கு); முன் - முற்படவே, பிரமனை - ப்ரஹ்மாவை, படைத்தானை - உத்பாதித்தவனாய், (உத்பந்நஜகத்ரக்ஷணார்த்தமாக,) வரி - வரியையும், வாள் - ஒளியையுமுடைத்தான, அரவின் அணை - திருவரவணைமேலே, பள்ளிகொள்கின்ற - பள்ளிகொண்டருளுகிற, கரியான் - (படுக்கைக்குப் ப்ரபாகமான) ச்யாமளவிக்ரஹத்தையுடையவனை, கழல் - திருவடிகளிலே, காண - காணவேணுமென்று, கருத்து - புத்தியானது, கருதும் - நினையாநின்றது. கரியானையென்கிற இரண்டாம்வேற்றுமை எஞ்சிக்கிடக்கிறது. கரியான்றனையென்றும் பாடஞ்சொல்லுவர்.

இ.—அஞ்சாம்பாட்டில், நாம் எளியோமான கோடியிலேயன்றோ நீர், உமக்குப் பேறு கைபுகுந்திருக்க இங்ஙன் பதறுகிறதென்? என்ன,—என்னெஞ்சு காண்கையிலே பதறுநின்றதென்கிறார்.

[அம்மானை] - ஸர்வாயிகனானவனை. [அமரர்பிரானை] - நித்யஸூரிகளுக்குத் தன்னை உபகரித்துக் கொண்டிருக்கிறவனை. [பெரியானை] - அவர்களுக்கும் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனை முன்படைத்தானை] - ஜகத்தைஸ்ருஷ்டிக்கைக்காக ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்கினவனை. அரியாயவென்று கீழோடே கூட்டுவது.

ஸ்ருஷ்டமான ஜகத்திலே ஆஸ்ரிதார்த்தமாகத் தன்னை அழியமாறிவந்து அவதரித்தவனை. [வரிவாள் இத்யாதி] - ஆஸ்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே தத்ஸம்ஸ்லேஷைக ஸ்வபாவனானவனை. [வரிவாளரவு]-வரியையும் ஒளியையுமுடைய அரவு. [கரியான்] - வெளுத்த திருநிறத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே காளமேகம் சாய்ந்தாற்போலேயாயிற்று கண்வளர்ந்தருளுவது. [காணக்கருதுங் கருத்தே] - காண்கையிலே த்வரியாநின்றது என் மநஸ்ஸு. படுக்கைக்கு பரபாகமானவடிவும் அதுக்குப் பரபாகமான திருவடிகளும் இத்தையாயிற்று ஆசைப்படுகிறது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நாம் எளியோமானகோடியிலேயன்றே? உமக்குப் பேறு கைபுகுந்திருக்க நீர இங்ஙன் படுகிறதென்னென்ன,—என்னெஞ்சுகாண்கையிலே த்வரியாநின்றதென்கிறார்.

[அம்மானை] - ஸர்வேஸ்வரனை. [அமரர்பிரானை] - நித்யஸூரிகளுக்குத் தன்னைக்காட்டிக்கொடுத்துஅநுபவிப்பிக்கும் உபகாரகனை. [பெரியானை] - அவர்களுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தன்னதீநமாய், தன்னை யவர்களால் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனைமுன்படைத்தானை] - சதுர்முகனுக்கு ஜநகனுமுள்ளவனை, அரியாயவென்று - கீழேகூட்டுவேது. ஸ்ருஷ்டமானஜகத்திலே, ஆஸ்ரிதார்த்தமாக அவன்ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தன்னை யழியமாறிவந்து அவதரித்தவனை. [வரிவாளித்யாதி] - ஆஸ்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே, தத்ஸம்ஸ்லேஷஸ்வபாவனுமுள்ளவனை. [வரிவாளரவு] - வரியையும் ஒளியையுமுடைய அரவு. வரி - அழகு. [கரியான்] - வெளுத்ததிருநிறத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே ஒருகாளமேகம் சாய்ந்தாற்போலேயாயிறுக் கணவளர்ந்தருளுவது. [காணக்கருதும்கருத்தே] - காண்கையிலே த்வரியாநின்றது, என மநஸ்ஸு. படுக்கைக்குப் பரபாகமானவடிவும், அதுக்குப் பரபாகமான திருவடிகளும் இத்தையாயிற்றுக்காண ஆசைப்படுகிறது. (ரு)

அஞ்சாம்பாட்டு.—அரியாய இத்யாதி. "அரியாய" என்றத்தையும், "காணக்கருதும் கருத்து" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - நாம்எளியோமான இத்யாதி.

கருத்து - நெஞ்சு. கீழேகூட்டுவதென்றது - "பிரமனை முன்படைத்தானை" என்றதுக்குப் பிற்பாடு கூட்டுவதென்றபடி. "அரியாய" என்றவிசேஷணத்துக்கர்த்தம் - ஸ்ருஷ்டமான இத்யாதி. 'ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே' என்றவிடத்திலே - "ப்ரஹ்லாதஸ்ய ஸமயாரக்ஷிதவாநுஹரி: । ஸமயாரக்ஷிதவாநுஸ்ருஷ்ணோதித்ருணிதம்ஸஹா" என்று ப்ரஸாதிப்பர். "அரியாய" என்றவநந்தரம், "வரிவாளரவினணை" இத்யாதிக்குஸங்கதி - ஆஸ்ரிதர்க்கு இத்யாதி. வரி - அவயவஸௌந்தர்யம். வாள் - ஸமுதாயஸோபை. "அரவினணைப்பள்ளிகொள்கின்றகரியான்" என்றத்தால் பலித்தபாவம் - வெளுத்த இத்யாதி. "கரியான்" என்றத்தைக்கடாக்ஷித்து - படுக்கைக்கு இத்யாதி. அதுக்கு - வடிவுக்கு. கரியானையும் கழலையும்காண - கருத்து - கருதுமென்றந்வயமாதல்; அன்றிக்கே, அம்மானாய், அமரர்பிரானாய், பெரியானாய் பிரமனை முன்படைத்தானாய் - அரியனாய் - வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற கரியானுடைய கழலைக்காண - கருத்து - கருதுமென்றந்வயமாதல்; இந்தயோஜனையில், த்விதீயை வாக்யாலங்காரம். (ரு)

ஆறும் பாட்டு.

கருத்தே!உன்னைக்காணக்கருதிஎன்னெஞ்சத்து
இருத்தாகவிருத்தினேன் தேவர்கட்கெல்லாம்
விருத்தா!விளங்குஞ்சுடர்ச்சோதியுயர
தோருத்தா! உன்னையுள்ளுமென்னுள்ளமுகந்தே.

ஆ — (கருத்தே.) - இப்படி நான் உன்னைக்காண இச்சிக்குமளவில், திருநாட்டிலிருக்கும்படியேவந்து என்னெஞ்சிலே புகுந்தருளின உன்னை என்னெஞ்சு உகந்து புஜியாநின்றதென்கிறார்.

ஓ — ஆறும்பாட்டில், தாம் காண ஆசைப்படுமளவிலே எம்பெருமான் தம்முடைய திருவுள்ளத்திலே வந்து புகுந்தருளினவாறே நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச் செய்கிறார்.

[கருத்தே என்று தொடங்கி]- எனக்கு மிடுக்கானவனே! உன்னைக்காணவேணுமென்று அல்பம் மநோரதித்தேன். இனி ஒருகாலும் போகாதபடியாக என்னெஞ்சிலேயிருத்தினேனென்றுமாம். [தேவர்கட்கெல்லாம்விருத்தாவிளங்கும் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா] - அயர்வறுமமரர்களதிபதியாய் விலக்ஷணதேஜோரூபமாய் உச்ச்ரிதமான திருநாட்டிலே எழுந்தருளியிருந்தருளின அத்விதீயனானவனே!

ப. — அநந்தரம், நான் மநோரதித்தபடியே, பரமபதநிலயனாய் ஸூரிஸேவ்யனான உன்னை என்னெஞ்சானது கண்டு அநுபவியாநின்றதென்கிறார்.

கருத்தே - நான் தளராதபடி எனக்கு ஸஹகாரனாகக்கொண்டு நெஞ்சுவலியானவனே! உன்னைக் காண - உன்னைக் கண்டநுபவிக்கவேணுமென்று, கருதி - மநோரதித்து, என் நெஞ்சத்து - என் நெஞ்சுக்குள்ளே, இருத்தாக - எழுந்திராதபடி, இருத்தினேன் - இருத்திக்கொண்டேன்; தேவர்கட்கு எல்லாம் - ஸூரிகளுக்கெல்லாம், விருத்தா - மூப்பானசேஷியாய், விளங்கும் - உஜ்ஜ்வலமான, சுடர் - ப்ரபையையுடைத்தாய், சோதி - தேஜோமயமாய், உயரத்து - ("விஸ்வதஃப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு" என்று) ஸர்வோத்தரமான பரமபதத்திலே, ஒருத்தா - அத்விதீயனாயிருக்குமவனே! என் - என்னுடைய, உள்ளம் - அந்தஃகரணமானது, உன்னை - (நிரதிசய ப்ராப்யபூதனான) உன்னை, உகந்து - அத்யந்தப்ரேமவிசிஷ்டமாய்க்கொண்டு, உள்ளும் - அகவாயிலேயநுபவியாநின்றது.

இ — ஆறும்பாட்டில், காண ஆசைப்பட்ட வளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச் செய்கிறார்.

[கருத்தேயித்யாதி] - எனக்குமிடுக்கானவனே! உன்னைக்காண ஆசைப்பட்ட வளவிலே முகங்காட்டினாய். இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியே அமையுமென்கை. "கண்ணே உன்னைக்காணக்கருதி" என்றார் கீழே; "கருத்தே உன்னைக்காணக்கருதி" என்றார் இங்கே. [என்னெஞ்சத்திருத்தாக விருத்தினேன்] - "மறுகல்செய்யும்" என்கிற நெஞ்சிலே பரமபதத்திலிருக்குமாபோலே யிருத்தினேன். ஐஸ்வத்யாமஸ்யாஹ்ருத

மான நெஞ்சிறையிது. [தேவர்கட்கெல்லாம் விருத்தா] - நித்யஸூரிகளுக்கெல்லாம் நிர்வாஹகனானவனே! தமிழர் கிழவனென்றும் கிழத்தியென்றும் தலைமகனையும் தலைமகளையுஞ் சொல்லுவர்கள். [விளங்குமித்யாதி] - மிக்கபுகரையுடைய தேஜஸ்ஸை வடிவாகவுடைத்தாய் ஸர்வோத்க்ருஷ்டமான பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற அத்தியனே! [உன்னையுள்ளும் என்னுள்ள முகந்தே] - சடக்கென முகங்காட்டின உன்னைக் கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தே அநுபவியாநின்றது.

ஈடு.—ஆறும்பாட்டு. காண ஆசைப்பட்டவளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலேபுகுந்தருள, தம்முடையநெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

[கருத்தேயுன்னைக்காணக்கருதி] - எனக்கு மிடுக்கான உன்னைக் காண ஆசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய்; இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியேயமையுமென்கை. "கண்ணேயுன்னைக்காணக்கருதி" என்றார் - கீழ்; "கருத்தேயுன்னைக்காணக் கருதி" என்றார்- இங்கே. அநுபபத்தியைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தல், அநுமாநத்தாலே அதீந்த்ரியமென்றறிதல்செய்யும் வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்று மநோரதிக்கிறார். இவர்க்குக் கண்ணுங் கருத்தும் அவனாயிற்று. [என்னெஞ்சத்திருத்தாக விருத்தினேன்] - * மறுகல்செய்தநெஞ்சிலே, * மறுகலிலீசனைப் பரமபதத்திலேயிருக்குமாபோலே யிருத்தினேன். "இவர்பக்கல் இசைவுபெற்றிலோம்" என்றிருக்கிறவன் இத்தனை இசைவுபெற்றால் பின்னைத் தள்ளிக்கதவடைத்தாலும் போகானிறே. "யதீஹஸம்ரக்ஷா

ஆறும்பாட்டு.—கருத்தே இத்யாதி. "என்னெஞ்சத்திருத்தாகவிருத்தினேன் - உன்னையுள்ளுமென்னுள்ளமுகந்து" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - காண ஆசைப்பட்ட இத்யாதி. கருத்து - மிடுக்கு. "கருதி" என்றது - முகங்காட்டினதுக்கும் உபலக்ஷணமாதல்; "இருத்தாகவிருத்தினேன்" என்றத்தைக்கடாக்ஷித்து - முகங்காட்டினாய் என்கிறாராதல். "ஆசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய்" என்றத்தால் ஃபலிதம் - இவ்விஷயத்தை இத்யாதி. அஜ்ஞாநஶக்திகளை முன்னிட்டுப் பெறவிருக்கிற எனக்கு, அவனுடைய ஜ்ஞாநஶக்திகளே பேற்றுக்கு பர்யாப்தமென்னுமிடந்தோன்ற அருளிச்செய்கிறார் - கண்ணே இத்யாதி வாக்யத்வயத்வயத்தாலே. 'கருத்தேயுன்னைக்காணக்கருதியென்றாரிங்கே' என்றவநந்தரம், 'இவர்க்குக்கண்ணும் கருத்தும் அவனாயிற்று' என்றந்வயித்துக்கொள்வது. ஜ்ஞாநஶக்திகளிரண்டும் அவனாயிற்றென்றபடி. த்வந்யர்த்தம் - "கண்ணும்கருத்தும் நன்றாயிருக்கவேணும்" என்று லௌகிகவார்த்தை. "உன்னைக்காணக்கருதி" என்கையாலே - ஸாத்யப்ராபனான ஈஶ்வரனைக் காணவாசைப்படுகிறாரென்னுமிடந் தோன்றுகிறதென்கிறார் - அநுபபத்தியை இத்யாதி. அநுபபத்தியைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தலாவது - மஹீமஹீதராதி ரூபேண வேறொருவரால் செய்யமுடியாத விசித்ரகார்யங்களைக்கண்டு, "இவையெல்லாம் உண்டாக்குகைக்கு யோக்யமான விசித்ரஜ்ஞாநஶக்திகளையுடையானொருவன் கர்த்தாவாகவேணும்" என்று ஓரீஶ்வரனைக் கல்பிக்கை. "க்ருஷ்டோ ஶ்ருதோ வா ர்த்தோ ந்யதா நோபபத்யதே । யேநார்த்தேந விநா ஸோऽர்த்த: கல்ப்யதே ஸா ஹ்யர்த்தாபத்தி:" இதி அர்த்தாபத்திலக்ஷணம். அர்த்தாபத்திவாதீ - ப்ரபாகரன். அநுமாநத்தாலே அதீந்த்ரியனென்னறிகையாவது - யுக்தியாலே இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டிருப்பானொருவன் கர்த்தாவாகவேணுமென்றறிகை. மஹீமஹீதராதி நிஷ்டகார்யத்வாநுமாநத்தாலே தந்நிர்மாணாநுகுணவிசித்ரஜ்ஞாநஶக்திகனாய் நிரவயவனான ஈஶ்வரனைக் காரணத்வேந கல்பிக்குமவன் - தார்க்கிகன். "இருத்தாக" என்றதுக்கு - ஸ்த்தாவரமாகவென்று விவக்ஷித்தர்த்தம் - மறுகல் இத்யாதி. ஸர்வாதிகன் பரமபதத்திலிருக்குமாபோலே இவர்திருவுள்ளத்திலேயிருக்கக் கூடுமோவென்ன - இவர்பக்கல் இத்யாதி. ஸர்வாதிகன் இப்படி ஸாலபனான இடமுண்டோவென்ன - யதீஹ இத்யாதி. "யதீஹஸ

நைகாஶ்ரயாஶாயுக்ஷிப்தே", "ஜஹவக்த்ராதிஷ்வஸௌமித்ரேஶாயுக்தேநபக்ஷிணா" (யதீஹஸரதோநேகாஸ்த்வயாஸார்த்தமந்நிதே', 'ஜிஹவத்ஸ்டாமிஸௌமித்ரேஸார்த்தமேதேநபக்ஷிணு) — ஐயர் கண்வட்டத்திலே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம்; நடுவிலாய்ச்சிக்கு ப்ரியஞ்செய்யவேண்டுகையாலே அதுசெய்யப்பெற்றிலோம்; இனி,இவர் சிறகின்கீழேயாகிலும் வர்த்திக்கப்பாராநின்றோமென்றாரே அன்றிக்கே, [இருத்தாக]-மித்ரபாவமேகிடீர் என்பக்கலுள்ளதென்னுதல். [தேவர்கட்கெல்லாம் விருத்தா] - "இனியவ்வருகில்லை" என்னும்படி உயர்ந்தவர்களுக்கும் அவ்வருகானவனே! தலைமகனையும் தலைமகளையும் "கிழவனும்கிழத்தியும்" என்று தமிழர் சொல்லக்கடவர்களிறே. அவளையும் "மலர்க்கிழத்தி" என்றார்களிறே. [விளங்கும் இத்யாதி] - "அதயதஃபரோதிவோஜ்யோதிர்தீப்யதே" (அதயததஃபரோதிவோ ஜ்யோதிர்த்தீப்யதே) என்கிறபடியே, எப்போதுமொக்க விளங்காநிற்பதாய், நிரவதிகதேஜோரூபமாயிருக்கிற பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற அத்விதீயனே! ப்ரகாரத்திலேயிறே நாநாத்வமுள்ளது; ப்ரகாரி ஒருவனேயிறே. [உன்னையித்யாதி] - சடக்கென முகங்காட்டின உன்னை, கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தேயநுபவியாநின்றது. "தேவர்கட்கெல்லாம்விருத்தா, விளங்குஞ் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா" - என்று சொல்லுகிற இவ்விசேஷணங்களுக்குக் கருத்து-மேலானார்க்கும்மேலாய்ப்பரமபதத்திலே யெழுந்தருளியிருந்து அவர்களை யநுபவிக்குமாபோலே தன்னை யநுபவிப்பிக்க அநுபவித்த என்னெஞ்சம் ப்ரீதமாகாநின்றதென்கை.

ஏழாம் பாட்டு.

உகந்தேஉன்னை உள்ளும் என்னுள்ளத்துஅகம்பால்
அகந்தானமர்ந்தே இடங்கொண்டஅமலா!
மிகுந்தானவன்மார்வகலம் இருகூறு
நகந்தாய் நரசிங்கமதாயவுருவே.

ரதோநேகாஶ்ரயாஶாயுக்திநிதே! ஐக்ஷ்ணேநவத்ராதி நகோம்ஹோக்ஷ்ணப்ரேய க்ஷ்ருதி" இதி சித்ரகூடே ஸீதாம் ப்ரதிராமஃ. "ஜஹம்வைக்ஷ்ணேநவத்ராதிஹம்ஸௌமித்ரிஹம்வைஹமேஹம ஸிஹ! ஐஹவக்த்ராதிஷ்வஸௌமித்ரேஶாயுக்தேநபக்ஷிணா" இதி பஞ்சவட்யாம் ராமஃ. அண்டஜேநவென்னுதே, "பக்ஷிணு" என்றதுக்குபாவம் - ஐயர் இத்யாதி. "இருத்தாக" என்றதுக்கு - இருக்கவேணுமென்கிற நினைவுமாத்ரத்தாலேயென்றர்த்தாந்தரம் - மித்ரபாவமே இத்யாதி. விருத்தா - வ்ருத்தா என்றபடி. "விருத்தன்" என்று - ப்ரயோகமுண்டோ? சொல்லுமோவென்ன - தலைமகனையும் இத்யாதி. தலைமகளை "கிழத்தி" என்றவிடமுண்டோவென்ன - அவளையும் இத்யாதி. கிழத்தி - கிழவி. "பூதலக்கிழத்தி" என்னவும் கடவதிறே. "அதயதஃபரஃ" இத்யாதி சாந்தோக்யே. "அதஃ திவஃ பரஃ யதஜ்யோதிர்தீப்யதே" என்றந்வயம். பரஃ - பரஸ்தாத் என்றபடி. இந்த்ரப்ரஹ்மலோகாதிகளுக்கெல்லாம் மேலாயிருக்கிற வைகுண்டரூபமான யாதொருஜ்யோதிஸ்ஸு விளங்காநின்றது என்று இந்தஶ்ருதிக்கு இங்கிப்படி அர்த்தம் விவக்ஷிதம். பாஷ்யத்திலே, ஜ்யோதிஶ்ஶப்தநிர்த்திஷ்டம் - பரம்ப்ரஹ்மமென்றர்த்தம். "விளங்கும்" என்றவர்த்தமாநார்த்தம் - எப்போதுமொக்க என்றது. "சுடர்ச்சோதி" என்று-மீமிசைச்சொல்லாய், நிரவதிகதேஜோரூபமாய் என்கிறது ஒருவனேயுள்ளது நித்யஸூரிகளில்லையோவென்ன - ப்ரகாரத்திலே இத்யாதி. 'என்னுள்ளம் - உன்னை - உகந்தே - உள்ளும்' என்றந்வயம். (சு)

ஆ.—(உகந்தே.) - என்னுள்ளே புகுந்தருளின உன் அழகையும் செயலையும் என்னெஞ்சு உகந்துகொண்டு அநுஸந்திக்க, இதுகாரணமாக நீ மிகவும் ப்ரீதனாய், உன்னைக் காணப்பெறாமையாலே கலங்கின என்னெஞ்சு தெளியும்படி என்னெஞ்சை எற்றைக்கும் இடமாகக் கொண்டருளினாய்! என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய ஆர்த்தியைத் தீர்த்தருளினாற்போலே தம்முடைய ஆர்த்தியை எம்பெருமான் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ப்ரீதராய் அவனை ஏத்துகிறார்.

[உகந்தேயென்று தொடங்கி] - ப்ரீதியோடே உன்னை அநுபவியாநின்றுள்ள ஹ்ருதயத்தினுடைய உள்ளுக்குள்ளே நிர்மலனாய்வைத்து நிர்ஹேதுகமாக அத்யபிநிவேசத்தைப்பண்ணி வர்த்தித்தருளுகிறவனே! [மிகுந்தானவனென்று தொடங்கி] - கிளர்ந்திருந்துள்ள ஹிரண்யனுடைய அகன்றமார்வை இருகூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையையுமாய், ஆர்த்தருடைய ஆர்த்தியைத் தீர்க்கும் நரஸிம்ஹரூபியானவனே! நகத்தாயை நகந்தாயென்று மெல்கிக் கிடக்கிறது.

ப.—அநந்தரம், ஹ்ருதயனாய்க்கொண்டு என்னெஞ்சிலேயிருந்து விரோதிநிரஸந சீலனான உன்னை என்னகவாய் உகந்தநுபவியாநின்றதென்கிறார்.

அகந்தான் - அகவாயிலே, அமர்ந்து - பொருந்தி, இடங்கொண்ட - இடங்கொண்டு (அதுதானே ப்ரயோஜநமாக)இருந்த, அமலா-உஜ்ஜ்வலஸ்வபாவனாய், (ப்ரபலமான துர்மாநத்தை யழித்திருந்தமைக்கு ஸூசகமென்னலாம்படி), மிகும் - வரபலபுஜபலங்களாலே மிக்க, தானவன் - அஸுரனான ஹிரண்யனுடைய, மார்வு - மார்பத்திலே, அகலம் - பெரியவிடத்தை, † இருகூறு - இருகூறும்படியாக, நகம் - நகத்தை, தாய் - தாவும்படிபண்ணின, நரசிங்கமதாய - நரஸிம்ஹமான, உருவே - ரூபத்தையுடையவனே! என் உள்ளத்து-என் உள்ளத்தின், அகம்பால் - அகவாயானது, உன்னை உகந்தே, உள்ளும் - அநுபவியாநின்றது.

இ—ஏழாம்பாட்டில், தூணிலே தோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத் தீர்த்தாற்போலே தம்மார்த்தியைத் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ஏத்துகிறார்.

[உகந்தே உன்னை உள்ளும்] - பிரிந்துக்லேஶத்தோடே தலைக்கட்டும் உகப்பன்றிக்கே ஏகரூபமாக உன்னை அநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து] - எண்ணே கொண்ட சிந்தை என்கிற மநஸ்ஸிலே. [அகம்பாலகந்தான்] - உள்ளுக்குள்ளே. "உள்ளுளாவி" என்னுமாபோலே கமர்பிளந்தவிடமெங்கும் மறுநனையும்படி. [அமர்ந்தே] - தன்பேறாக அத்யபிநிவேஶத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] - அவகாசமுள்ளவிடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. [அமலா] - இவ்விருப்புக்கு அவ்வருகு ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்தன்றிக்கே ஒரு ஹேதுவைப் பற்றியுமன்றிக்கேயிருக்கை. "எண்ணே கொண்ட சிந்தையதாய் நின்றியம்பும்" என்கிறத்தை ஸாபேக்ஷமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] - ப்ராதிகூல்யத்தில் ஓரளவில் நில்லாதவன். தன்னை யில்லைசெய்கையன்றிக்கே தன்னுயிர்நிலையிலே நலிந்தவன்: "ஜீதா நீத்வா தெ²வ" என்னக்கடவதிறே. [மார்வகலமிருகூறு நகந்தாய்] - அகன்றமார்வானது இரண்டுகூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே! நகத்தாயென்ற வல்லொற்றை மெல்லொற்றாக்கிக் கிடக்கிறது. [நரசிங்கமதாய வுருவே] - ஸதைகரூபமான வடிவை உடையவன் தன்னை இங்ஙனே யழிய மாறுவதே!

என்கிறார். இத்தால் - என்னெஞ்சு உகக்கும்படி தூணிலேவந்து தோற்றினாற்போலே சடக்கென முகங்காட்டி என்னை அநுபவிப்பித்தானென்கிறார்.

ஈடு —ஏழாம்பாட்டு. தூணிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத்தீர்த்தாற்போலே தம் ஆர்த்தியைத் தீர்த்தபடியை யநுஸந்தித்து ஏத்துகிறார்.

[உகந்தேஉன்னைஉள்ளும்] - பிரிந்து க்லேசத்தோடே தலைக்கட்டும் உகப்பன்றிக்கே, ஏகரூபமாக உன்னையநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து] - * எண்ணே கொண்ட சிந்தையுடைத்தான என்உள்ளத்து. [அகம்பால்அகந்தான்]- உள்ளுக்கும் உள்ளே. "உள்ளுளாவி" என்னும்படியே கமர்பிளந்த விடமெங்கும் மறு நனையும்படி. [அமர்ந்தே] - தன்பேறாக அத்யபிநிவேஶத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] - அவகாஶமுள்ள இடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. [அமலா] - இவ்விருப்புக்குஅவ்வருகு ஒருப்ரயோஜநத்தைக்கணிசித்தன்றிக்கே,ஒருஹேதுவைப்பற்றியும் அன்றியேயிருக்கை "எண்ணேகொண்ட சிந்தையதாய்" என்றத்தை ஸாதநமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] - ப்ராதிகூல்யத்தில்ஓரளவில் நில்லாத தானவன். தன்னை யில்லைசெய்கையன்றிக்கே, தன்னுயிர் நிலையிலே நலிந்தவன்; "*ஜ்ஞாநீத்வாத்மைவ*" (ஜ்ஞாநீத்வாத்மைவ) என்னக்கடவதிறே. [மார்வகலமிருகூறுநகந்தாய்] - அகன்றமார்வானது இரண்டு கூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே! நகத்தாயென்கிற வல்லொற்றை மெல்லொற்றாக்கிக்கிடக்கிறது. [நரசிங்கமதாயவுருவே] - "*ஸதைகரூபரூபாய*" (ஸதைகரூபரூபாய) என்கிற விக்ரஹத்தையே இப்படிகொள்வது! இரண்டுவடிவைக்கொள்வதே! இத்தால்சொல்லிற்றாயிற்றேன்னேன்னில்; - ஆஶ்ரிதருடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்து தோற்றுமவனாகையாலே, தூணிலேதோற்றினாற்போலேவந்துதோற்றி, ஹ்ருதயாவகாஶமுள்ளவிடமெங்கும் புகுந்து, கமர்பிளந்தவிடமெங்கும் நீர்பாய்ச்சுமாபோலே, நிரம்ப என்னையநுபவிப்பித்தானேன்கிறார். (எ)

ஏழாம்பாட்டு.—உகந்தே இத்யாதி. "இருகூறுநகந்தாய் நரசிங்கமதாயவுருவே" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தூணிலே இத்யாதி.

ஏவகாரார்த்தம் - பிரிந்து இத்யாதி. விவரணம் - உள்ளுளாவி இத்யாதி. "அமலா" என்றதுக்குபாவம் - இவ்விருப்புக்கு இத்யாதி. ஸ்வயம்ப்ரயோஜநமாகவும், நிர்ஹேதுகமாகவுமிருக்கை அமலத்வமாவது என்றபடி. "ஒருஹேதுவைப்பற்றியன்றிக்கே" என்கிறதென்? "எண்ணேகொண்டசிந்தையதாய்" என்றது ஸாதநமன்றோ? என்ன - எண்ணேகொண்ட இத்யாதி. 'மிகுதி' எத்தாலேயென்ன - ப்ராதிகூல்யத்தில் இத்யாதி. ஏதத்விவரணம் - தன்னை இத்யாதி. தானவன் - தானவன், ப்ரஹ்லாதனுயிர்நிலையோவென்ன - ஜ்ஞாநீது இத்யாதி. "உதாராஸ்ஸர்வஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" இதிகீதாயாம்(எ-கஅ). நகத்தாயென்றாலன்றோ, நகத்தையுடையவனென்னக் காட்டுமென்ன - நகத்தாயென்கிற இத்யாதி. ஹார்த்தபாவம் - ஸதைகரூப இத்யாதி. "ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே" இதிஸ்ரீவிஷ்ணுபுராணே. "நரசிங்கம்" என்றதுக்குபாவம்-இரண்டு இத்யாதி. பாட்டால்பலித்தபாவம் - இத்தால் இத்யாதி. இத்தால் என்றது - இப்பாட்டாலென்றபடி. 'மிகுந்தானவன்' என்று தொடங்கி; 'உருவே - உகந்தேயுன்னையுள்ளும்படி யென்னுள்ளத் தகம்பால்' என்று தொடங்கி, 'ஏத்துகிறார்' இத்யந்வய: (எ)

எட்டாம் பாட்டு.

உருவாகியஆறுசமயங்கட்கெல்லாம்
பொருவாகிநின்றானவன்எல்லாப்பொருட்கும்
அருவாகியஆதியைத்தேவர்கட்கெல்லாம்
கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேனே.

ஆ.—(உருவாகிய.)-வேதபாஹ்யமான ஷட்ஸமயங்களில் நான் புகாதபடி பரிஹரித்து, ஸர்வாத்மபூதனான தன்னை எனக்குக்காட்டியருளினவனை நான் காணவும் பெற்றேனென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமானைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகியவென்று தொடங்கி] - ஆபாத ப்ரதீதியில் "இவையும் சில தர்ஸநமோ" என்று தோற்றுகிற பாஹ்யமான ஷட்ஸமயங்களாலும் அவிசால்யமானபடியையுடையனாய் ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரதாநனுமானவனை. [தேவர்கட்கென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை.

ப.—அநந்தரம், ஸர்வாந்தராத்மாவாய், ஸர்வகாரணபூதனாய், ஸர்வஸுலபனான உன்னைக் காணப்பெற்றேனென்கிறார்.

உருவாகிய - ஆபாதப்ரதீதியிலொன்றுபோலேயிருக்கக்கடவதான, ஆறுசமயங்கட்கெல்லாம - சார்வாக பௌத்த க்ஷபண வைசேஷிக ஸாங்க்ய பாசுபதரூபமான பாஹ்யஸமயங்களாறுக்கும், பொருவாகி - "அறுவகைச்சமயமு மறிவருநிலையினை" என்கிறபடியே ப்ரதிபடனாய்க்கொண்டு, நின்றானவன் - அப்ரகம்ப்யனாயிருக்குமவனாய், எல்லாப்பொருட்கும் - ஸமஸ்தபதார்த்தங்களுக்கும், அருவாகிய - அந்தராத்மாவாய்க்கொண்டு, ஆதியை - ப்ரதாநனாய், தேவர்கட்கெல்லாம் - ப்ரஹ்மாதிதேவர்களுக்கடங்க, கருவாகிய - காரணபூதனாய், கண்ணனை - ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாய்அவதரித்தவனை, கண்டுகொண்டேன் - கண்டநுபவிக்கப்பெற்றேன். பொரு - எதிர்.

இ.—எட்டாம்பாட்டில், கிருஷ்ணனானவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகியவாறு சமயங்கட்கெல்லாம்] - விஹிதாநுஷ்டாநங்களும் நிஷித்த பரிஹாரங்களுமாக உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப் போருகையாலே, ஆபாதப்ரதீதியிலொன்று போலேயிருக்கிற பாஹ்ய ஸமயங்களுக்கெல்லாம் அவிசால்யமானபடியையுடையனாய் நின்றான். [பொருவென்று] - தடை. அவற்றால் மேலிடவொண்ணாதபடி நிற்கை. [எல்லாப்பொருட்கும் அருவாகிய வாதியை]-ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் நியாமகத்வத்தாலே ப்ரதாநனுமானவனை [தேவர்கட்கெல்லாம் கருவாகிய]-ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை. [கண்ணனை] -கார்யங்களிலேயொன்றுக்குத்தான் கார்யமானவனை. [கண்டுகொண்டேனே]-அவதாரத்துக்குப்பிற்பாடராயிருக்க, கண்டுகொண்டேனே என்கிறாரிறே; ப்ரேமார்த்ரசித்தர்க்கென்றுங் காணலாம்; அவதார ஸமகாலத்திலுங் காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவி

சால்யனுய்ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டுஸர்வநியந்தாவாய் ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனுயிருந்துவைத்து ஆஶ்ரிதர்க்கு ஸுலபனுயிருக்கிறவனைக் காணப்பெற்றேனென்கிருர்.

ஈடு.—எட்டாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரஹ்மாதிகளுக்குக் காரணபூதனுனவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிருர்.

[உருவாகிய வாறுசமயங்கட்கெல்லாம்] - ஆபாதப்ரதீதியில் ஒன்று போலேயிருக்க, சிலவற்றைவிதிப்பது, சிலவற்றைநிஷேதிப்பது, நிஷ்கர்ஷிஹாரத்தைச் சொல்லுவதாய்க்கொண்டு உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப்போருகிற பாஹ்யஸமயங்களெல்லாவற்றாலும். [பொருவாகிநின்றானவன்] - பொருவென்று தடை. அவற்றால் தன்னை இல்லைசெய்யவொண்ணாதபடி அப்ரதிஹதனாய் நின்றான். [எல்லாப்பொருட்கும் அருவாகியவாதியை] - ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய், நியாமகத்வத்தாலே ப்ரயோஜனுமானவனை. [தேவர்கட்கெல்லாம்கருவாகிய] - ப்ரஹ்மாதிதேவர்களுக்கெல்லாம் காரணபூதனாயுள்ளவனை. [கண்ணனை] - கார்யங்களிலே யொன்றுக்குத் தான் கார்யமானவனை. [கண்டுகொண்டேனே] - அவதாரத்துக்குப் பிற்பாடராயிருக்க, 'கண்டுகொண்டேன்' என்கிருரிறே; ப்ரேமார்த்ரசித்தர்க்கென்றுங்காணலாம்: அவதாரஸமகாலத்திலுங்காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவிசால்யனாய், ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டு ஸர்வநியந்தாவாய், ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாயிருந்துவைத்து, ஆஶ்ரிதஸுலபனுனவனைக் காணப்பெற்றேனென்கிருர். (அ)

ஒன்பதாம் பாட்டு.

கண்டுகொண்டு என்கண்ணிணையாரக்களித்து
பண்டைவினையாயின பற்றோடறுத்து
தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள்சொன்னேன்
அண்டத்தமரர்பெருமான்அடியேனே.

ஆ.—*(கண்டுகொண்டு) - இப்படி கண்ணாரக்கண்டுகொண்டு அவனை வாழ்த்தவும் பெற்றேனென்கிருர்.*

எட்டாம்பாட்டு.—உருவாகிய இத்யாதி. "எல்லாப்பொருட்குமருவாகிய - தேவர்கட்கெல்லாம் கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேன்" என்ற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - ஸகலபதார்த்தங்களுக்கும் இத்யாதி.

"உருவாகிய வாறுசமயங்கட்கெல்லாம்" - அழகியதாயிருக்கிற ஆறுஸமயங்களெல்லாவற்றுக்குமென்று பதார்த்தம். அபார்த்தங்களைச்சொல்லுகிற ஸமயங்களுக்கு அழகேதென்ன - ஆபாத இத்யாதி. உருவாகிய - ஆபாதப்ரதீதியிலொன்றுபோலே யிருக்கிற என்றுபதார்த்தமாகவுமாம். பொருவாகிநின்றான் - தடையாய்நின்றான்; ப்ரதிபடனென்றபடி. "தடை" என்றத்தால்பாவம் - அவற்றால் இத்யாதி. அப்ரதிஹதனாய் நிற்கைபாவது - த்ருடப்ரமாணஸித்தனாய் நிற்கை. மேலே "கருவாகிய" என்று - காரணத்வஞ்சொல்லுகையாலே, "ஆதியை" என்று - ப்ரயோஜனைச்சொல்லுகிறது. கருவென்று - கர்ப்பமாய், அத்தாலே காரணத்வஞ்சொல்லுகிறது. காரணத்வமேயாகில் ஸௌலப்யமில்லையோவென்ன - கார்யங்களிலே இத்யாதி. ஒன்றுக்கு - வசுதேவர்க்கு. 'கண்டுகொண்டேனென்கிருரிறே' என்றவநந்தரம், இதுக்குக்கருத்தென்னென்னில்?—என்றுகூட்டுவது. பாட்டை நிகமிக்கிருர் - பாஹ்ய இத்யாதி. (அ)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தன்னை அநுபவிக்கவும்பெற்று ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

[கண்டுகொண்டேனென்று தொடங்கி] - என்னுடைய ஸகலஇந்த்ரியங்களும் க்ருதார்த்தமாம்படி கண்டுகொண்டு. நானும் களித்துக் காண்பதுக்கு முன்புபட்ட து:க்கத்தை நிஶ்ஶேஷமாகப்போக்கி. [அண்டத்தென்று தொடங்கி] - நான் ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன்.

ப.—அநந்தரம், என்னுடைய ஸ்வரூபாநுரூபமாகக் கண்டநுபவித்து விரோதியுங்கழிந்து, ப்ராப்யபூதனானவன் விஷயத்திலே ஸாமவதர்க்கு போக்யமாம்படி வாசிககிஞ்சித்காரம் பண்ணப்பெற்றே னென்கிறார்.

(ஜ்ஞாநப்ரமாத்மகமான), என்கண் - என்கண்கள், இணை - இரண்டும், ஆர - வயிறு நிறையும்படி, கண்டுகொண்டு களித்து -, (இந்த ஸ்வரூபஜ்ஞாநமடியாக), பண்டை - அநாதிஸித்தமான, வினை ஆயின - அஹங்காரமமகாராதி ஸமஸ்தவிரோதிகளையும், பற்றோடு - ஸவாஸநமாக, அறுத்து - போக்கி, அண்டத்து - பரமபதத்திலே, அமரர் பெருமான் - * அயர்வறுமமரர்களதிபதியான ப்ராப்யபூதனுக்கு, அடியேன் - (நித்ய கிங்கரனான) நான், தொண்டர்க்கு - அவனடியார்க்கு, அமுதுண்ண - உகந்தநுபவிக்கலாம்படி, சொல்மாலைகள் - ஶப்தஸந்தர்ப்பரூபமான வாசிக கைங்கர்யத்தை, சொன்னேன் - பண்ணினேன். இப்பாட்டில் - மந்த்ரத்தில் ப்ரதமபதார்த்தமான ஸ்வரூப ஜ்ஞாநத்தையும், மத்யமபதார்த்தமான விரோதிநிவ்ருத்தியையும், சரமபதார்த்தமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும், கைங்கர்யவ்ருத்திவிஶேஷத்தையும், மந்த்ர தாத்பர்யமான ததீயஶேஷத்வத்தையுஞ் சொல்லிற்றாயிற்று.

இ.—ஒன்பதாம்பாட்டில், தன்னை யநுபவிக்கப்பெற்று அதுக்குமேலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்கிறார்.

[கண்டுகொண்டு] - "நான் அழைப்பனே" என்ற விடாய் எல்லாங்கெடக் காணப்பெற்று. [என் கண்ணிணையார] - "காணக்கருதும் என்கண்ணே" என்கிற கண்களின் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] - கலியர் "வயிறு நிரம்பவுண்டேன்" என்னுமாபோலே களித்து - மறுகினநெஞ்சு களிக்கும்படி. [பண்டையித்யாதி] - இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தந கர்மங்களானவற்றை ஸ்வாஸநமாகப்போக்கி, காண்பதற்கு முன்புள்ள து:க்கத்தை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கு இத்யாதி] - என்னளவன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன். இப்பேறு என்னால் வந்ததாகமாட்டாது; நான் ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தன்னையநுபவிக்கப்பெற்று, அதுக்குமேலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும்பெற்றே னென்கிறார்.

[கண்டுகொண்டு] - "நான் அழைப்பன்" என்ற விடாயெல்லாங்கெடக் காணப்பெற்று. [என்கண்ணிணையார] - "காணக்கருது மென்கண்ணே" என்ற கண்

ஒன்பதாம்பாட்டு.—கண்டுகொண்டு இத்யாதி. "கண்டுகொண்டென்கண்ணிணையாரக் களித்து - தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்" என்ற பதங்களைக் கடாக்ஷித் தவதாரிகை - தன்னை இத்யாதி.

கண்டென்றதே, "கண்டுகொண்டு" என்றதுக்குவாஸநை - நான்அழைப்பன் இத்யாதி. "ஆர" என்றதுக்கர்த்தம் - கலியர் இத்யாதி. கலியர் - பசியர். ஆர - பூர்ணமாக,

கள் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] - கலியர் "வயிறாரவுண்டு" என்னுமாபோலே. [களித்து] - மறுகின நெஞ்சு களித்து. [பண்டைவினையாயின பற்றோடறுத்து] - இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தநகர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்] - என்னளவும் அன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன். "நானுமுண்டு என்பரிகாரமும் ஜீவித்து, என்பந்துக்களுக்கும் விருந்திடவல்லேனானேன்" என்பாரைப்போலே. [சொல்மாலைகள்சொன்னேன்] - ததீயசேஷத்வபர்யந்தமான பேற்றைப் பெற்றேன். பெற்ற பேற்றின் கனமிருந்தபடியாலே, இது தான்றோன்றியான கைப்பற்றடியாகவந்ததொன்றல்ல. [அண்டத்தமரர்பெருமானடியேனே] - ஸர்வேச்வரனாலே விஷயீக்ருதனானேன்.

பத்தாம் பாட்டு.

அடியானிவனென்று எனக்காரருள்செய்யும்
நெடியானை நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின்
கொடியானைக் குன்றமலுலகமளந்த
அடியானையடைந்து அடியேன்உய்ந்தவாறே !

ஆ.—(அடியானிவன்.) - பெரியதிருவடி தன்திருவடிகளிற்செய்யும் வ்ருத்திகளெல்லாவற்றையும் என்னையிட்டு நிர்ஹேதுகமாகச் செய்வித்துக் கொண்டருளினனொருவனையாச்ரயித்து நானுய்யும்படியே! என்கிறார்.

ஓ.—பத்தாம்பாட்டில், எம்பெருமானைப் பெற்று க்ருதார்த்தனானேன் என்கிறார்.

[அடியான் இவனென்று தொடங்கி] - அடியான் என்றொரு வ்யாஜத்தாலே நிர்ஹேதுகமாகத் தன்னளவிலே எனக்கு ப்ரஸாதத்தைப் பண்ணும் ஸர்வேச்வரனை. [நிறைபுகழென்று மேலுக்கு]-சௌர்யவீர்யாதிகுண ப்ரஜையையுடைய பெரியதிருவடியைத் தன்னுடைய நிர்ஹேதுகரக்ஷணத்துக்குக் கொடியாக எடுப்பதுஞ்செய்து குணாகுண நிரூபணம்பண்ணாதே ஜகத்தையெல்லாம் அந்தரப்படாதபடி அளந்துகொண்டு ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனைப்பெற்று நான் க்ருதார்த்தனானபடியென்? பெரியதிருவடியை விஷயீகரித்தாற்போலே என்னை விஷயீகரித்தது என்பக்கல் என்ன நன்மை கண்டென்னில் ?— திருவுலகளந்தருளினாற்போலே நிர்ஹேதுகமாக என்றுமாம்.

பண்டை - ப்ராக்தநமான. பற்றோடு - வாஸனையோடு. இடைச்சுவர் - ப்ரதிபந்தகம். நானுமுண்டு என்றது - "கண்டுகொண்டு" என்றதைப்பற்ற. "என்கண்ணிணையாரக்களித்து" என்றதைப்பற்ற - என்பரிகாரமும் இத்யாதி. "தொண்டர்க்கமுதுண்ண" என்றதைப்பற்ற - என்பந்துக்களுக்கும் இத்யாதி. ஸவிதார்த்தம் - ததீயசேஷத்வ இத்யாதி. அதாவது - வாசிக கைங்கர்யம் பண்ணப் பெற்றேனென்று கருத்து. மேலுக்கவதாரிகை - பேற்றபேற்றின் இத்யாதி. தான்றோன்றியான கைப்பற்று - ஸ்வயத்நமூலமான ஸாதநம். 'அண்டத்தமரர்பெருமானடியேன் - களிக்கும்படி - என்கண்ணிணையார - கண்டுகொண்டு - பண்டை' என்றுதொடங்கி, 'சொல்மாலைகள்சொன்னேன்' இத்யந்வயம். (க)

ப.—அநந்தரம், இந்த அநுபவத்துக்கடியான நிருபாதிகஸம்பந்தத்தை யுடையவனைக் கிட்டி நான் உஜ்ஜீவித்த ப்ரகாரமென்? என்று ஹ்ருஷ்டராகிறார்.

இவன் அடியான் - இவன் நமக்கு ஸ்வதஸ்ஸேஷபூதன், என்று - என்று திருவுள்ளத்திலேகொண்டு, எனக்கு ஆர் - எனக்கு பரிபூர்ணமான, அருள் - க்ருபையை, செய்யும் - பண்ணியிருக்கச்செய்தே, நெடியானை - ஒன்றுஞ்செய்யாதபடி மேன்மேலெனப் பாரிப்பையுடைய பெரியவனும், நிறை - இந்தரக்ஷணத்துக்கு அநுரூபமான, புகழ் - ஸீல ஸௌலப்ய ஜ்ஞானஸக்திப்ரமுவமான ப்ரதையை யுடையனும், அம் - விலக்ஷணமான, சிறை - சிறகையுடைய, புள்ளின் - பெரியதிருவடியை, கொடியானை - ரக்ஷணப்ரதைக்குக் கொடியாகவுடையனும், குன்றாமல் - அந்யாபிமானமாகிற குறைவுவாராமல், உலகம் - லோகத்தை, அளந்த - அளந்துகொண்ட, அடியானை - நிருபாதிகஸம்பந்த ப்ரகாஸகமான திருவடிகளையுடையவனை, அடைந்து - கிட்டி, அடியேன் - ப்ரகாஸிதமான ஸேஷத்வஸ்வரூபத்தையுடைய நான், உய்ந்தவாறே - உஜ்ஜீவிக்கப்பெற்றபடியே!

தி.—பத்தாம்பாட்டில், இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

[அடியானிவனென்று] - "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்று தோற்றுகைக்காக "அடியான்" என்றுஒருபேரையிட்டாயிற்று உபகரித்தது. [எனக்காரருள்செய்யும் நெடியானை] - கொள்ளுகிற என்னளவன்றிக்கே தன்னளவிலே உபகரித்த ஸர்வேஸ்வரனை. [நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின் கொடியானை] - ஸௌர்யவீர்யாதி குணப்ரதையையுடையனும் நிரந்தரபகவதநுபவத்தாலே தர்ஸநீயனுமான பெரியதிருவடியைக் கொடியாகவுடையவனை; ரக்ஷணத்துக்குக் கொடிகட்டி ரக்ஷிக்குமவனை; பெரியதிருவடியை விஷயீகரித்தாற் போலே என்னை விஷயீகரித்தவன் என்கை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில் என்னநன்மையுண்டென்னில்?-[குன்றாமலித்யாதி] - குறைதுணை நிரூபணம்பண்ணாதே திருவுலகளந்தருளினாற் போலே நிர்ஹேதுகமாக என்கிறார். தன்பெருமையையும் ஸௌலப்யத்தையும் என்னை அநுபவிப்பித்தான். [அடைந்தடியேன் உய்ந்தவாறே] - ஸேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியென்? ஸேஷத்வஜ்ஞானத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ?

ஈடு.—பத்தாம்பாட்டு. இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

[அடியானிவனென்று] - "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்றுசொல்லுகைக்காக, "அடியான்" என்றுஒருபேரையிட்டாயிற்று உபகரித்தது. [எனக்காரருள்செய்யும்நெடியானை] - கொள்ளுகிறஎன்னளவன்றிக்கே, தன்னளவிலேயுபகரித்த ஸர்வேஸ்வரனை. * அருள்பெறுவார் அடியாரிறே:புத்ரர்களுக்கு அம்ஸமேயிறே

பத்தாம்பாட்டு.—அடியான் இத்யாதி. "அடைந்தடியேனுய்ந்தவாறே" என்றத்தைப் பற்ற அவதாரிகை - இப்படி இத்யாதி.

அருள்செய்யுமென்னாதே, "அடியானிவன்" என்று விசேஷித்ததுக்குபாவம் - மேல் பண்ண இத்யாதி. அருள்செய்கைக்கு ஹேது "அடியான்" என்கிறஇதுஎன்றபடி. "ஆரருள் செய்யும்" என்றவநந்தரம், "நெடியான்" என்றதுக்கு பாவம் - கொள்ளுகிற இத்யாதி. அடியார்க்கருள்செய்கை ப்ராப்தமோவென்ன - அருள்பெறுவார் இத்யாதி. அருள்பெற ப்ராப்தியுள்ளது புத்ரர்களுக்கன்றோவென்ன - புத்ரர்களுக்கு இத்யாதிவாக்யத்வயம். அடியாரிடத்திலே

யுள்ளது; எல்லாவற்றிலும் கூறுண்டாயிருக்குமிறே யதுபார்த்த. பிள்ளை யகளங்கப்ரஹ்ம ராயர், பட்டரை ஸமாதாநம் பண்ணவேணும் என்று. "இருகைமதவாரணம்" என்கிறவனை வரக்காட்டினராய், "அவனைத் திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பது" என்னுமத்தைப்பற்ற; அவனும்வந்து சிலவார்த்தைகளை விண்ணப்பஞ்செய்து, திருவள்ளமும் ப்ரஸந்நமாயிருக்கிறவளவிலே; "இவனுடைய வைஷ்ணவத்வமிருக்கும்படி திருவுள்ளம் பற்றியிருக்கையுண்டே" என்றார்களாய்; "சொல்லவேணுமோ, அர்ஹநாகர்க ளன்றோ" என்றது தொடக்கமாக, இப்பாட்டை யருளிச்செய்தார். [ஆருள்செய்யும்] - பெறுகிற என்னளவிலேயன்றிக்கே, தருகிற தன்னளவிலே தந்தான். தனக்களவுதானேன்னேன்ன? - [நெடியானை] - "ஸர்வேஶ்வரன்" என்னுமித்தனை. [நிறையித்பாதி] - இதுதான் நான்இன்றிருந்து உபபாதிக்கவேண்டியிருந்ததோ ? கட்டிக்கொண்டிருக்கிற கொடியிலே தெரியாதோ ? ஶௌர்யவீர்யாதி குணப்ரதையையுடையனாய் நிரந்தரஸம்வஹநஸவத்தாலே துர்த்தர்ஶநீயமான வேஷத்தையுடையனா யிருக்கிற பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனை. பெரியதிருவடியை விஷயீகரித்தாற்போலே என்னை விஷயீகரித்தவனை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில்என்ன நன்மையுண்டேன்னில்? [குன்றுமலுலகமளந்தஅடியானை] - குணதுணநிருபணம்பண்ணாதே திருவுலகளந்தருளினாற்போலே, நிர்ஹேதுகமாகவேன்கிறார். ஓரடியுங்குறையாமே பூமிப்பரப்பை யளந்து கொண்ட திருவடிகளையுடையவனை. தன்பெருமையையும், ஸௌலப்யத்தையும் என்னை யநுபவிப்பித்தான். [அடைந்தடியேன்உய்ந்தவாறே] - ஶேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியேன் ? ஶேஷத்வ ஜ்ஞாநத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ? (௧0)

ஈஶ்வராநுக்ரஹம் அதிஶயித்திருக்குமென்னுமதுக்கு ஸம்வாதம் - பிள்ளையகளங்க இத்யாதி. ஆழ்வான் ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்த பிள்ளையகளங்கப்ரஹ்மராயர், பட்டரிடத்திலே அபசாரப்பட, அதுநிமித்தமாகக் கோயிலைவிட்டு பட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்தருள, "இருகைமதவாரணம்" என்கிறவனை பட்டர்திருவள்ளத்திலே விஷயீகரித்திருப்பரென்னு மத்தைப்பற்ற ஸமாதாநம்பண்ணவேணுமென்று அந்தத் † திருவெள்ளைக்காரனை வரக்காட்டினரென்று சிலவ்யாஹரித்துக்கொண்டு அந்வயித்துக்கொள்வது. இருகைமதவாரணமென்கிறவன் - நம்பெருமாளுக்குப் பரிவனான கைக்கோளன். 'இவனுடைய' இத்யாதிவாக்யம் - தடஸ்தஜநவசனம். 'சொல்லவேணுமோவித்யாதி'- பட்டர் ஸ்ரீஸூக்தி. "கொள்ளுகிற" இத்யாதிவாக்யவிவரணம் - பெறுகிற இத்யாதி. இதுதான் என்றது - ஸர்வேஶ்வரத்வத்தாலென்றபடி. மேலுக்கவதாரிகை - இப்படி இத்யாதி. இப்படி விஷயீகரிக்கைக்கு என்றது - "ஆருள்செய்யும்" என்றதைப்பற்ற. தாத்பர்யஸித்தார்த்தம் - குணதுண இத்யாதி. ஶப்தார்த்தம் - ஓரடியும் இத்யாதி. கீழே - "நெடியானை" என்று தொடங்கி "உலகமளந்தவடியானை" என்னுமளவும் - அருளுகைக்கு ஶேஷமாக யோஜித்து, இங்கே - பரத்வஸௌலப்யங்களை யநுபவிப்பித்தானென்று ப்ரத்யேகமாக்கி ஸாவாந்தரம் - தன்பெருமையையும் இத்யாதி. கீழே "அடியான்" என்று சொல்லியிருக்க, மீளவும் "அடியேன்" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் - ஶேஷத்வமே இத்யாதி. "உய்ந்தவாறே!" என்கிற ஸ்வரத்துக்கு அர்த்தமாதல், விவரணமாதல் - ஶேஷத்வ ஜ்ஞாநத்துக்கு இத்யாதி. க்ரமேணாந்வயஃ. (௧0)

---

† *திருவேளைக்காரனை என்றிருக்குமோ ? என்று தோன்றுகின்றது.*

பதினோராம் பாட்டு.

ஆருமதயானை யடர்த்தவன்தன்னை
சேறார்வயல்தென்குருகூர்ச்சடகோபன்
நூறேசொன்னஓராயிரத்துள் இப்பத்தும்
ஏறேதரும் வானவர்தம்இன்னுயிர்க்கே.

ஆ.—[ஆருமதயானை] - ப்ரதிகூலநிரஸநம்பண்ணினாற்போலே என்னுடைய து:கத்தையெல்லாம் போக்கியருளினவனைச் சொன்ன இப்பத்தும், வானவர்தம் இன்னுயிர்க்கேறானவனைத் தரும் என்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி தன்னுடைய ரஸ்யதையாலே அயர்வறுமமரர்களுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆருமதயானையடர்த்தவன்றன்னை]- குவலயாபீடத்தை முறித்தாற்போலே நம்முடைய விரோதத்தைப் போக்கினவனை. [சேறார்வயலென்றுமேலுக்கு]-ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார், ஹாரதாராமாயணாதிகளில் காண்ட பர்வாதிபேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி நூறுநூறாக அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழிலும் இத்திருவாய்மொழி வானவர்தம் இன் உயிர்க்கு ஏறானவனைத் தருமென்றுஞ் சொல்லுவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக இதனுடைய நித்யஸூரிபோக்யதையை யருளிச்செய்கிறார்.

ஆரு - ஒருகாலும் மட்டுப்படாத, மதம் - மதத்தையுடைய, யானை - குவலயாபீடமாகிறவானையை, அடர்த்தவன்தன்னை - நிரஸித்தக்ருஷ்ணனைப்பற்ற, சேறு - சேறு, ஆர் - மிக்க, வயல் - வயலையுடைத்தான, தென் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், நூறே - நூறுநூறாக, சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் - , வானவர்தம் - நித்யஸூரிகளுடைய, இன் - உகந்த, உயிர்க்கு - நெஞ்சிலேசென்று, ஏறேதரும் - ஏறுநிற்கும். வானவர்தம்இன்னுயிர்க்கு ஏறான ஸர்வேஶ்வரனைத்தருமென்றுமாம். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி தன்போக்யதையாலே நித்யஸூரிகளுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆருவித்யாதி] - ஒருநாளும்மாறாத மதத்தையுடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை; அத்தை நிரஸித்தாற்போலே என் விரோதியைப் போக்கினவனை. ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார். [நூறே சொன்னவாயிரம்] - கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே, நூறுநூறாக அருளிச்செய்தபடி. ஹாரதராமாயணாதிகளில் காண்டபர்வாதி பேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள் ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்கு ஏறான ஸர்வேஶ்வரனைத் தருமென்னுதல்.

ஈடு.—பதினோராம்பாட்டு. நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்போக்யதையாலே நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆறுமதயானையடர்த்தவன்தன்னை] - ஒருநாளும் மாறாத மதத்தையுடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை. அத்தைநிரஸித்தாற்போலே என்விரோதியைப்போக்கினவனை. [சேறார்வயல்] - குவலயாபீடமோதான், திருநகரியில் வயலையுழுவது நடுவதாகவொட்டாதேகிடந்தது! [நூறேசொன்னவோராயிரம்] - கீழ்கீழாகக்கொடுப்பாரைப் போலே, நூறுநூறாகச்சொன்னபடி. ஸாரதராமாய ஶ்ருதிகளில் காண்டவர்வாதிலேதப் போலே, யரிப்பார்க்கு எளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள் ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்குள்ளான ஸர்வேஶ்வரனைத்தருமென்னுதல். (கக)

நிமம்.—ஆறு இத்யாதி. "இப்பத்தும்ஏமேதரும்வானவர்தமின்னுயிர்க்கு" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி. நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவு படுத்துகைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - தன்போக்யதையாலே என்று.

ஆறுகை - மாறுதல். ஸார்த்தபாவம் - அத்தை இத்யாதி. "யானையடர்த்தவன்றன்னைச் சேறார்வயல்" என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - குவலயாபீடமோதான் இத்யாதி. இது வ்யாக்யாதாவின் ரஸோக்தி. அதாவது - அங்குத்தைக்கு ஒருதிங்குவரில் ஆழ்வாருளராகமாட்டார்; ஆழ்வார்க்கொரு திங்குவரில் திருநகரியிலுள்ளார் ஸத்தையின்றிக்கே இருக்கையாலே யவ்வூரில் வயலுழுவாரில்லை; ஆகையாலே, ப்ரதிபக்ஷம்போனவாறே ஸம்ருத்தமான வயலையுடைய திருநகரியென்கை. "நூறு" என்கிறதுக்கு பாவம் - கீழ் இத்யாதி. கீழ் - சாளிகை. நூறுநூறாகச் சொன்னதுக்கு பாவமேதென்ன - பாரத இத்யாதி. முதல் த்ருஷ்டாந்தத்தாலே - ஸாரஸ்யமும், இரண்டாம் த்ருஷ்டாந்தத்தாலே - ஸௌகர்யமும் சொல்லுகிறது. "வானவர்தம்இன்னுயிர்க்கு-ஏமேதரும்" என்றந்வயித்தர்த்தம் - இத்திருவாய்மொழி இத்யாதி. "ஏம" என்று - ப்ரஹாரமாய், நோவாய். ஒருவனொருவன்கையிலே யடிபட்டால் "அவனையேமண்டான்" என்று லோகத்தார்சொல்லக் கடவர்களிறே. த்விதீயார்த்தத்துக்கு, "ஏம" என்று - ரக்ஷகமாய், நித்யஸூரிகளுக்கு ப்ராணனான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. "உயிர்" என்று - நெஞ்சு. இன்னுயிர் - உகந்தநெஞ்சு. 'ஆறுமதயானை' இத்யாதிப்ய; 'பத்தும் - வானவர்தம் இன்னுயிர்க்கு - ஏமேதரும்' இத்யந்வய:.

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.—ஶ்ரீமாயிக: ப்ரியஸுஹ்ருத்ஸமஶோகயா நோதவ்யாத்தேவத்விஜமுகநிஶாமநேத்ருவிஜ்ஞ: । ஸ்வாந்தஸ்ஸக்லேஶிதஸ்ஸ்வக்ருவா கடாக்ஷைர்த்ராக்ஷ்யந்ஸதிதிஸப்ரஜநஸந்துஷ்டஸ்தாவோத்ய ॥

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—†அக்ஷிவக்ஷஸ்ஸ்தநாக்ஷ்வஜநவஸ்துஸ்தாவலம்பநேதாஸாரணாநேத்ரபக்ஷஜ்ஞபக்ஷதாத்வாராதீநேவிஷு சிந்தயாநாகிநாம்வ்ருஷாலாக । வ்ருஷாம்ஶுஸ்வாலிதாயா: ஸுஜநவஶதயாதத்வா ஸக்திஸம்ஶ்ரித்ய । ஸ்வஸ்வாமித்வாதிவ்யூஹநஜநவதிஸரித்ஸ்வத்வஶாணீத்ஸாரிவி:

திருவாய்மொழி நூற்றந்தாதி

மையார்கண்மாமார்பில் மன்னும் திருமாலைக்
கையாழிசங்குடனே காணவெண்ணி - மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக்கண்டுகந்தமாறன்பேர்
ஓதவுய்யுமே இன்னுயிர்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

† அக்ஷிவக்ஷஸ்ஸ்தநாக என்று இருக்கலாம்.

ஐந்தாந்திருவாய்மொழி--இன்னுயிர் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(இன்னுயிர்ச்சேவலும்) - இப்படி எம்பெருமானை ப்ரத்யக்ஷித்தாற்
போலே திருவுள்ளத்தாலே விஶதமாக அநுஸந்தித்து, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ர
வ்ருத்தராய், அது கைவாராமையாலே, எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொருபிராட்
டியைப்போலே வ்யஸநராய், அவளுடைய பாசுரத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப்
பேசுகிறார். இப்பிராட்டிதான், எம்பெருமானைப் பிரிந்திருக்கிற ஸமயத்திலே சில குயில்க
ளுடைய கூக்குரல்களைக்கேட்டுத் தனியே சிந்திக்கிறாள். எம்பெருமான் "என்னை
முடிக்கவேண்டும்" என்றுகோலி, முடிக்குமிடத்தில் ஸ்வவிஶ்லேஷத்தாலல்லது முடிக்க
வொண்ணாமையாலே, விஶ்லேஷந்தான் ஸம்ஶ்லேஷத்தை யொழியக் கூடாமையாலே,
விஶ்லேஷார்த்தமாக ஸம்ஶ்லேஷித்து, பின்னை விஶ்லேஷிப்பதுஞ் செய்து, "இந்தவிஶ்
லேஷத்தாலும் முடியாதொழியிலோ?" என்னும் ஶங்கையாலே, "பக்ஷி விஶ்லேஷத்திலும்
கொடிதான என்குணங்களை யவளுடைய ஸந்நிதியிலே சொல்லி யவளை முடியுங்கோள்!"
என்றுசொல்லிக் குயில்களைப் போரவிட்டானென்று தன்னிலே சிந்தித்து;

ஒ.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழிற்றிருவாய்மொழியில் எம்பெரு
மானை ஸாக்ஷாத்கரித்து ப்ரீதராய், பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய், அப்
போதே தம்அபேக்ஷிதம் பெறாமையாலே மிகவும் அவஸந்நராய், தமக்கோடுகிற வ்யஸ
நம் பொறுக்குமளவன்றிக்கே லௌகிக பதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை
அந்யபரமாக்கித் தரிக்கவேணும் என்று அவற்றையநுஸந்திக்கப்புக, அவையும் அவ
னுக்கு ஸ்மாரகமாக அவற்றாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் தம்முடைய தஶையை
அந்யாபதேஶத்தாலே பேசுகிறார்: எப்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறாளொரு
பிராட்டி, பெருவிடாய் பட்டார்க்குத் தண்ணீர் குடித்ததாறுதே அதிலே மிகவும்
அபேக்ஷை பிறக்குமாபோலே பண்டை ஸம்ஶ்லேஷமும் மிகவும் த்ருஷ்ணை பிறந்து
நோவுபடுகைக்கு உடலாய், அவனைக் காணப்பெறாமையாலே போதுபோகாமே ஒருபடி
போதுபோக்குகைக்காகத் தன்னுடைய நிரதிஶய போக்யமான உத்யானத்திலேசென்று
புக்கு, பரஸ்பர ஸம்ஶ்லேஷப்ரவணமாய் மிதுநமாய்க்கொண்டு வர்த்திக்கிற பக்ஷிகளுடைய
வடிவுகளையும் ப்ரவ்ருத்திகளையும் பேச்சுக்களையும் அநுஸந்தித்து, அவை எம்பெருமா
னோடேக் கலவியையும் அவன் தன்னையும் ஸ்மரிப்பிக்க அத்தாலே மிகவும் கலங்கி,
"என்னை முடிக்கைக்கு உபாயம் விஶ்லேஷம்" என்று பார்த்து விஶ்லேஷந்தான் ஸம்ஶ்
லேஷத்தை யொழியக் கூடாமையாலே அதுக்காக என்னோடே கலந்து பிரிந்தவிடத்
திலும் நான் முடியாமையாலே, "நாம் முகங்காட்டாதே நமக்கு ஸ்மாரகமான பதார்
த்தங்களைப் போகக்காட்ட அவற்றைக்கண்டு இவள்முடியும்" என்றுபார்த்து இவன் வரக்
காட்ட வந்தனவாகக் கொண்டு, "முசல்வேட்டைக்கு அரணைப் பண்ணினாற்போலே
என்னை முடிக்கைக்கு இத்தனை பரிகரம் வேணுமோ?" என்று மிகவும்நொந்து மத்யந்தர
மில்லாமையாலே ஸாத்விகாநுஸந்தாநத்தாலே தரிக்கிறாள்.

ப.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழ் - மாநஸமாக அபரோக்ஷித்தது
ஸவித்து ப்ரீதரானவர், அவ்வநுபவாநுரூபமாக பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே அபிநிவே

ஸம்பிறந்து; அநுபாவ்யனை ஸர்வேஶ்வரனுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்தையும், ஸௌஶீல்யத்தையும், தந்நிபந்தநமான ஆகர்ஷகத்வத்தையும், ஆஶ்சர்யகுணசேஷ்டிதத்தையும், அநந்யார்ஹத்வாபாதநத்தையும். அநுபாவ்யமான அவயவஶோபையையும், ஶைதில்யஜநகமான ரூபவைலக்ஷண்யத்தையும், அவஸாதகமான மார்தவத்தையும், போக்யமான புண்டரீகாக்ஷத்வத்தையும், ப்ராப்யதேஶவர்த்தித்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனானவனோடே யதாமநோரதங்கலந்து பரிமாறப்பெறாதே ஆர்த்திக்கு மேலே, ஸ்வச்சந்தவர்த்திகளான லௌகிகபதார்த்தங்களும் தத்குணவிக்ரஹாதிகளுக்கு ஸ்மாரகமாக, அத்தாலே ஶிதிலராய், முத்பந்தராமர்த்தபதையாலே அவனுடைய குணாநுஸந்தாநத்தாலே தரித்த ப்ரகாரத்தை, நாயகனை ஈஶ்வரனைப் பிரிந்ததொரு நாயகி, தன்னாற்றாமையாலே 'லௌகிகமான பக்ஷ்யாதி பதார்த்தங்களைக் கண்டாகிலும் போது போக்குவோம்" என்று அபிஸந்திபண்ணி, பரஸ்பர ஸம்ஶ்லிஷ்டங்களாய் ரஸித்துத்திரிகிறஅவை அவனுடைய ஸம்ஶ்லேஷத்துக்கும் வடிவுக்கும் பேச்சுக்கும் ஸ்மாரகமாய்க் கொண்டுநலிய, அத்தாலே ஈடுபட்டுப் போலிகண்டு இரங்கினவள், பின்னும் போக்கில்லாமையாலே அவனுடைய குணங்களை ஸ்மரித்து தரித்தபாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

இ.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே அவனை ஸாக்ஷாத்கரித்து ப்ரீதராய் பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய் அப்போதே கண்ணாலே காணுதல், அணைத்தல், வார்த்தைசொல்லக் கேட்டல் செய்யப் பெறாமையாலே அவஸந்நராய், "லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிக்கவேணும்" என்று அவற்றை அநுஸந்திக்கப்புக, அவையும் அவனுக்கு ஸ்மாரகமாக, அவற்றாலே நோவுபட்டவர் தம்முடைய தஶையை அந்யாபதேஶத்தாலே அருளிச்செய்கிறார். "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றவர் தம் ப்ராணரக்ஷணத்துக்கு ஒரு திர்யக்கின் காலிலே விழுகிறார் இறே. "அடியேன் உய்ந்தவாறே" என்றவர், ஸ்மாரகங்கள் கையிலே நோவுபடும்படியாய் விழுந்ததிறே. கலந்துபிரிந்து நோவுபடுவாள் ஒருபிராட்டி, அவன் வரக்காணாமையாலே லௌகிகபதார்த்த தர்ஶநத்தாலே போதுபோக்குகைக்காகத் தன்னுடைய உத்யாநவனத்திலேபுக்கு, ப்ரேமப்ரவணமாய் மிதுநமாயிருக்கிற பக்ஷிகளுடைய வடிவுகளையும், ப்ரவ்ருத்திகளையும், பேச்சுக்களையுங்கண்டு, "இவை அவனோடேக் கலவிக்கும், அவன் வடிவுக்கும், பேச்சுக்கும் ஸ்மாரகமாய்நலிய, இவற்றுக்கு நம்மோடே பகை பெரிதன்று; அவன வரவிட்டவையாகவேணும்: அவன்தான் நம்மைமுடிக்கைக்கு உபாயம் விஶ்லேஷமென்றுபார்த்து, அதுதான் ஸம்ஶ்லேஷத்தையொழியக் கூடாமையாலே அதுக்காகக் கலந்துபிரிந்தான்: நாம் அவ்வளவிலும் முடியாமையாலே சென்றற்ற ஸமயத்திலே, ஸ்மாரகங்களைமுன்னிட இவள்முடியுமென்று பார்த்து அவன் வரக்காட்ட வந்தன" எனக்கொண்டு, "என்னைமுடிக்கைக்கு முசல்வேட்டைக்கு அரணைப்பண்ணினாற்போலே இத்தனை பாரிப்புவேணுமோ?" என்று நொந்து கத்யந்தரமில்லாமையாலே அவன்குணங்களையே அநுஸந்தித்து தரித்தாளாய்த் தலைக்கட்டுகிறது. நம்மைப் பார்த்தால் இழவேயாயிருந்ததேயாகிலும் அவனைப்பார்த்தால் இழக்கவேண்டாதபடியிறே அவன்குணங்களிருப்பது.

ஈடு.—"தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்" என்று களித்தவர், தம்முடைய ப்ராணரக்ஷணத்துக்கு திர்யக்குக்களின் காலிலேவிழும்படி

யாயிற்று. "தேவர்கட்கெல்லாம் கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேனே" என்னும்படி வைஶத்ய ப்பிறந்தபோதே, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே யபேக்ஷைபிறந்தது. "இவர்க்குஇன்னம் விடாயைப்பிறப்பித்து முகங்காட்டவேணும்" என்று இவர் அபேக்ஷித்ததைச் சடக்கெனத்தலைக்கட்டிற்றிலன் ஈஶ்வரன். நினைத்தபோதே அபேக்ஷிதம் பெறுமையாலே தளர்ந்து, லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை யந்யபரமாக்கி தரிப்போம்" என்றும், "அவனோடுபோலியான பதார்த்தங்களைக்கண்டாகிலும் தரிப்போம்" என்றும் லௌகிகபதார்த்தங்களிலே கண்வைத்தார். அவை ஆஶ்வாஸஹேதுவன்றிக்கே, ஸ்மாரகமாய் பாதகமாகப்புக்கது. ஏதேனுமொருபதார்த்தம் தோற்றிலும், அவற்றினுடையஸத்பாவம் அவனையொழியவில்லாமையாலே, அவனைக்காட்டிக்கொண்டிறே தோற்றுவது.

லௌகிகபதார்த்தங்கள் அவனுக்கு ஸ்மாரகமாய் நலிய, அவற்றால் நோவுபடுகிறபடியை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். எம்பெருமானோடேகலந்து பிரிந்தாளொரு பிராட்டி, தன்னாற்றாமையாலே "அவனோடு போலியான பதார்த்தங்களைக் கண்டாகிலும் தரிப்போம்" என்று, அவ்வாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலேபுறப்பட, அங்குண்டான குயில்மயில்தொடக்கமானவை அவனுடைய பேச்சுக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய்நலிய, "இவைநலிகைக்கு இவற்றோடு நமக்கொருபகையில்லை, இவை நலிகைக்கு ஓரடியுண்டாகவேணும்; அவன் நம்மை முடிக்கவேணும்' என்று பார்த்தான்; 'அதுக்கு உபாயம்விஶ்லேஷம்' என்றுபார்த்து, பிரிவு கலவியை யொழியக் கூடாமையாலே கலந்தான், பிரிந்தான், பிரிந்தவிடத்திலும் நாம் முடியாதிருந்தோம், பிரிந்து நோவுபட்டிருக்கிற ஸமயத்திலே 'நம்மோடுபோலியான பதார்த்தங்களைக்காட்டி முடிப்போம்' என்று பார்த்து வரவிட்டானித்தனை; "உங்களுக்கு நினைவு இதுவாகில் இப்பாரிப்பெல்லாம்வேணுமோ" என்று அவற்றுக்கு வார்த்தைசொல்லி, "நம்மைப் பார்த்தாலிறே இப்படிநோவுபடவேண்டுவது? அவனைப் பார்த்தால் நோவுபடவேண்டாவிறே!" என்று அவன் குணஜ்ஞாநத்தாலே, வருந்தி தரித்துத் தலைக்கட்டுகிறதாயிருக்கிறது.

இன்னுயிர்ப்ரவேஶம்: கீழ்நற்றிருவாய்மொழியில் - ப்ரமேயத்தையும், இதில்-ப்ரமேயத்தையும் அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு – தோண்டர்க்குஇத்யாதி. விஸ்தாரஸங்கதி - தேவர்கட்கு இத்யாதி. ஆனால், ஈஶ்வரன நுபவிப்பியா தொழிவானென் ? என்ன - இவர்க்கு இன்னம் இத்யாதி. 'அபேக்ஷிதம்பெறுமையாலேதளர்ந்து' என்ற வநந்தரம், "லௌகிகபதார்த்தங்களிலே கண்வைத்தார் : விரக்தராயிருக்கிறவர்இதிலே கண்வைப்பானென்னென்னில்" என்று இத்தனையும் அத்யாஹரிப்பது. இதுக்கு பரிஹாரத்வயம் - லௌகிக இத்யாதி. அதாவது ஹ்ருதயத்தை யந்யபரமாக்கி யரிப்போமென்றும், போலியான பதார்த்தர்ஶநத்தாலே யரிப்போமென்றும் கண்வைத்தாரென்றபடி. போலியான பதார்த்தம் பாதகமானமையைக்காட்டுகிறார் - அவையாஶ்வாஸ இத்யாதி. ஹ்ருதயத்தை அந்யபரமாக்கி யரிக்கப்போகாமையைக் காட்டுகிறார்- ஏதேனும் இத்யாதி. "நிற்கின்றதெல்லாம்நெடுமால்" என்னக்கடவதிறே.

அந்யாபதேசத்தாலேபேசும் ப்ரகாரத்தை விஸ்தரிக்கிறார்-எம்பெருமானோடே இத்யாதி. குயில் - பேச்சுக்கும், மயில் - வடிவுக்கும் ஸ்மாரகம். நம்மைப்பார்த்தால் - நம்முடைய தோஷபூயஸ்தையைப்பார்த்தாலென்றபடி. அவனைப்பார்த்தால் - ஔதார்யகுணவிசிஷ்டனான அவனைப் பார்த்தாலென்றபடி. "தன்புகழேத்த" என்றத்தைப்பற்ற - குணஜ்ஞாநத்தாலே இத்யாதி. இத் திருவாய்மொழியால் - "முமுக்ஷுவுக்கு விஷயதர்ஶநம் பாதகம்" என்கிறது. "இதுஎம்பெருமானார் உகந்ததிருவாய்மொழி" என்று அந்தப்ரஸங்கத்திலே ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் கதையைப்ப்ரஸாதிப்பர்.

முதற் பாட்டு.

இன்னுயிர்ச்சேவலும்நீருங்கூவிக்கொண்டிங்கெத்தனை
யென்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள்
என்னுயிர்க்கண்ணபிரானை நீர்வரக்கூவுகிலீர்
என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்கும் இத்தனைவேண்டுமோ ?

ஆ.—இக்குயில்களை நோக்கி "அவன் திருநாமங்களைச் சொல்லிக்கூவி என்னை நோவுசெய்யாதே கொள்ளுங்கோள் ! இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ ?" என்ன, இக்குயில்கள் "உன்னை நோவுசெய்கைக்காகவோ அவனை நாங்கள் கூவுகிறது" என்ன, அன்றாகில், அவனை வரக்கூவுகிறிலிகளோ, என்னை முடிக்கவிறே கூவுகிறது; என்னை முடிக்கும்போது இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்புவேணுமோ? என்கிறார்.

[இன்னுயிர்ச்சேவலென்று தொடங்கி]-விரஹவ்யஸநம் அறிந்திருக்கிற குயிற்பேடைகாள் ! உங்களுக்கு நற்சீவனான சேவல்களும் அவற்றுக்கு அநுரூபதைகளான நீங்களும் பரஸ்பரஸம்ச்லேஷார்த்தமாக அழைத்துக்கொண்டு விச்லேஷத்தாலே தளர்ந்திருக்கிற என் உயிர்நோவ மிகவும் ப்ரணயகூஜிதத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள்! [என்னுயிர்க் கண்ணபிரானென்று மேலுக்கு]-பொதுகரைச் சொல்லுமாபோலே எங்களை இங்ஙனே சொல்லுவானேன் ? என்றினவாகக்கொண்டு யாரகனான க்ருஷ்ணனைவரக் கூவுகிறிலீகோள் ; ஆனபின்பு, என்னை முடிப்பார்க்கு இத்தனைபாரிப்பு வேணுமோ ?

ப.—முதற்பாட்டில், ஆஸ்ரிதஸுலபனான க்ருஷ்ணனை வரவழையாதே உங்களில் நீங்கள் அழைத்து மிழற்றி என்னைநலியாதே கொள்ளுங்கோளென்று, சேவலோடே சேர்ந்த சில குயிற்பேடைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

குயில்பேடைகாள் - ! இன்னுயிர் - வஹிச்சரமான ப்ராணன்போலே போக்யமாய் தாரகமான, சேவலும்-, இன்னுயிர் நீரும் - அதுக்கு இனியவுயிராய் என்னோடு ஸ்த்ரீத்வஸாஜாத்யத்தையுடைய நீரும், கூவிக்கொண்டு - (ஒருவர்க்கொருவர் ஸம்ச்லேஷார்த்தமாக) அழைத்துக்கொண்டு, இங்கு - என் ஸந்நிதியிலே, எத்தனை-மிகவும், என் உயிர் - என் ப்ராணனானது, நோவ - ஈடுபடும்படிக்கீடாக, மிழற்றேன்மின் - அநக்ஷரரஸமான ஸம்ச்லேஷ சப்தங்களைப் பண்ணாதே கொள்ளுங்கோள் ! என்-எனக்கு, உயிர் - தாரகனாயுள்ள, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரானை - உபகாரகனை, நீர் - நீங்கள், வரக்கூவுகிலீர் - வரும்படி அழைக்கிறிலீகோள்! (உங்கள் கூவுதலால்) என் உயிர் - என் ப்ராணனை, கூவி - அபஹரித்து, கொடுப்பார்க்கும் - அவனுக்குக் கொடுப்பார்க்கும், இத்தனை - இத்தனை வ்யாபாரம், வேண்டுமோ - வேணுமோ ?

இ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனைபாரிப்பு வேணுமோ? என்கிறாள்.

[இன்னுயிர்ச் சேவலும்] - நற்சீவனான சேவலும் வஹிச்சரப்ராணனைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்துபடுகுலையடிக்கும் சேவலைப்போ

லன்றிக்கே, பேடைக்கு தாரகமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! போக்யமுமாய்
தாரகமுமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! [நீரும்]-சேவலுக்குஇன்னுயிரான நீரும்.
[கூவிக்கொண்டு] - சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்குமேலே, பேச்சாலும் நலியவே
ணுமோ! ஸம்ஶ்லேஷார்த்தமாக பரஸ்பரம் பேரைச்சொல்லி அழைத்துக்கொண்டு.
[இங்குளத்தனை] - இந்த எத்தனைக்கு விஷயமுண்டோ? பிரிவாலே சென்றற்ற இதில்
உங்கள்பாரிப்புக்கு விஷயமுண்டோ? அன்றிக்கே, [எத்தனை என்னுயிர்நோவ மிழற்றேன்
மின்] - பிரிவாலேதளர்ந்திருக்கிற என்னுயிர்நோவ மிகவும் ப்ரணய கூஜிதத்தைப்பண்
ணாதே கொள்ளுங்கோள். 'உயிர்நோவ' - என்கையாலே உடல் சென்றற்றதென்கை.
ராமஶரம்போலே உயிரிலேபுக்கு வ்யாபரிக்கவற்றாயிற்று இந்த்வநி. என்னுயிரென்
கையாலே - இவற்றின் பேச்சுக்கேட்கத் தளிர்க்கும் அவனில் தனக்கு உண்டான
வ்யாவ்ருத்தி. [மிழற்றுகையாவது] - நிரம்பாமென்சொல். ஸம்ஶ்லேஷதஶையிற் சொல்
லத்தொடங்கித் தலைக்கட்டாத பேச்சுக்கள். [நோவமிழற்றேன்மின்] - இப்பேச்சைக்
கேட்கில் இவள்முடியுமென்று அறிந்து பேசாதிருக்கவேண்டாவோ? ஸ்த்ரீவதமென்
றறிந்தால் மீளவேண்டாவோ? [குயிற்பேடைகாள்] - விஜாதீயர் செய்யுமத்தை நீங்
களுஞ் செய்யவேணுமோ? சேவலைக்கொண்டு காரியங்கொள்ள நினைத்தாலும் பேடை
யின் காலைப்பிறேபிடிப்பது. [என்னுயிர் இத்யாதி] - எங்களை வாதுகரைச்சொல்லுமா
போலே சொல்லுகிறதென்? என்றனவாகக்கொண்டு எனக்கு தாரகனான க்ருஷ்ணனை
வரக்கூவுகிறிலீகோள். தாரகங்கள் வ்யக்திதோறும் வ்யவஸ்திதமாயிறேயிருப்பது. திர்
யக்குக்களுக்கு த்ருணம், மனுஷ்யர்களுக்குச் சோறு, தேவர்களுக்கு அம்ருதம், இவ
ளுக்கு க்ருஷ்ணன். [கண்ணபிரான்] - பாரார்த்யமாகத் தன்னையோக்கி வைக்குமவன்.
[நீர்] - அந்வயத்தில் ரஸமறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவு அறியவேண்டாவோ?
[வரக்கூவுகிலீர்] - நீங்கள் அவன்முன்னே சென்று த்வநித்திகோளாகில் அத்தாலே
என்செல்லாமையை நினைத்துவாரானோ? அது செய்கிறிலீகோள்; என்னை நலிகைக்கு
வேண்டுவது செய்கிறீகோள் அத்தனை; நானும் அவனுஞ் சேருகைக்கு வேண்டுவது
செய்கிறிலீகோள். அழிக்கவல்லவை சேர்க்கவும்வற்று என்றிருக்கிறாள். அவன்கார்யம்
இவற்றின் கையது என்றிருக்கிறாள். கடகரானவர்கள் வாதுகரேயாகிலும் ரக்ஷ
கர் என்றிறேயிருப்பது. [என்னுயிர் இத்யாதி] - என்னையும் அவனையுஞ் சேர்க்கிறிலீ
கோள்; அல்லாதபின்பு, இனி என்னை முடிக்கைபாயிருந்ததிறே உங்களுக்குக் கருத்து;
அதுக்கு இப்பாரிப்பெல்லாம் வேணுமோ? பண்டே சென்றற்ற என்னுயிரைவாங்கி
அவன்கையிலே கொடுக்கையாகில் கருத்து. அதுக்கு இதெல்லாம் வேணுமோ? நீங்
கள் சேரவிருக்கையும் கலக்கையும் அந்யோந்யம் நாமக்ரஹணம்பண்ணுகையும், ப்ரணய
முஷ்டமுஷ்டத்வநியும் இதெல்லாம் வேணுமோ? நொந்தாரை ஜீவிப்பிக்கையன்றோ அரி
யது? முடிக்கையிற் பணியுண்டோ?

ஈடு.—முதற்பாட்டு. சில குயிற்பேடைகளைக்குறித்து, என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறாள்.

முதற்பாட்டு - இன்னுயிர் இத்யாதி. "குயிற்பேடைகாள் - என்னுயிர் கூவிக்கொடுப்
பார்க்குமித்தனைவேண்டுமோ" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலகுயில் இத்யாதி.

[இன்னுயிர்ச்சேவலும்] - நற்சேவலான சேவலும். வஹ்நிசரப்ராணனைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்து படுதலையடிக்கும் சேவலைப்போலன்றிக்கே, பேடைக்கு ப்ராணாதாரகமாயிருக்கும் சேவலும் உண்டாகாதே! போக்யமுமாய் தாரகமுமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! [நீரும்] - சேவலுக்கு இன்னுயிரான நீரும். [கூவிக்கொண்டு] - சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்கு மேலே, பேச்சாலும் நலிய வேணுமோ? ஸம்ஶ்லேஷார்த்தமாக பரஸ்பரநாமக்ரஹணம் பண்ணிக்கொண்டு. [இங்கு எத்தனை] - இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ? இங்குற்ற பிரிவாலே சென்றற்றது. உங்கள் பாரிப்புக்கு விஷயமுண்டோ? "அயிகம்ஸோபஹதே" (அதிகம்ஸோபஹதே) என்னுமா போலே நலியாநின்றதாயிற்று; அன்றிக்கே, [எத்தனையென்னுயிர்நோவமிழற்றேல்மின்] - பிரிவிலே தளர்ந்திருக்கிற என்னுயிர்நோவ மிகவும்ப்ரணயகூஜிதத்தைப்பண்ணுதேகோள்ளுங்கோள். "உயிர்நோவ" என்கையாலே-உடல் பண்டேசென்றற்றதென்கை. ராமஶரம் போலே உயிரிலேபுக்குவ்யாபரிக்கவும்வற்றாயிற்று இந்தத்வநி. "என்னுயிர்" என்கையாலே இவற்றின்பேச்சுக்கேட்கத்தளிர்க்குமவனில் வ்யாவ்ருத்தி. மிழற்றுகையாவது-நிரம்பா மென்சொல்; ஸம்ஶ்லேஷதஶையில் சொல்லத்தொடங்கித் தலைக்கட்டாதபேச்சுக்கள். [நோவமிழற்றேல்மின்]-இப்பேச்சு இவள் செவிப்படில் முடியுமென்றறிந்து, பேசாதிருக்க வேண்டாவோ? ஸ்த்ரீவத்யமென்றறிந்தால் மீளவேண்டாவோ? [குயிற்பேடைகாள்]-விஜா

இன்னுயிரான சேவலென்கிறார் - நற்சேவலான் இத்யாதி. விவரணம் - வஹ்நிசர இத்யாதி. பேடை கண்வட்டத்தைவிடாதே வர்த்திக்கிறமையைப்பற்ற "நற்சேவல்" என்கிறதென்றபடி. இதுக்கு ஹார்த்தஹாவம் - பிரிந்து இத்யாதி. படுதலையடிக்கும் - ஹிம்ஸிக்கும். இனிதுமாய் உயிருமான சேவலென்றர்த்தாந்தரம் - போக்யமுமாய் இத்யாதி. பேச்சு, நலிவான படியைக் காட்டாநின்றுகொண்டு, ஸந்தார்த்தம் - ஸம்ஶ்லேஷார்த்தமாக இத்யாதி. "இங்கு" என்றது - என்னிடத்திலே என்றபடியாய், "எத்தனை" என்று - அல்பமாய், உங்கள் பாரிப்புக்கு அல்பமும் விஷயமில்லையென்று முந்தினவர்த்தம் - இங்கு அத்தனைக்கு இத்யாதி. அத்தனைக்கு - சேர்த்திக்கும் நாமக்ரஹணத்துக்கும். "அத்தனைக்கு விஷயம்" என்றதின்விவரணம் - இங்குற்ற பிரிவாலே இத்யாதி. இவைதன்னை நலிகையாவது - அத்தலையை ஸ்மரிப்பித்து பாதகமாகை யாகையாலே, அத்தை உதாஹரணபூர்வகமாகத் தெரிவிக்கிறார்-அதிகம் இத்யாதி. "அயிகம்ஸோபஹதே வியோகவிஜித்யஹரணேஹ: । ஸ்வயமேவஸந்தோஷம் விவ்யாதபி ஸாக்ஷீஜா:" இதி கிஷ்கிந்தாகாண்டே ப்ரதமே. (கoo) "அயிகம்ஸோபஹதே" என்கையாலே - விஷயத்தினளவல்லாத பாதகத்வஞ்சொல்லுகிறது. இரண்டாமர்த்தம் - அன்றிக்கே எத்தனை இத்யாதி. அதாவது - "இங்கு" என்று - இந்தஸ்தலமாய், "எத்தனை" என்று - மிகுதியாய், என்னுயிர்நோவ இந்தஸ்தலத்திலே மிகவும் மிழற்றேல்மின் என்றபடி. இந்த அர்த்தத்துக்கு, "எத்தனை" என்றது-"மிழற்றேல்மின்" என்றத்தோடே அந்வயிப்பது. "என்னுயிர்" என்கிறதுக்கு அர்த்தஸ்வரூப பூர்வகமாக ஸ்வவாக்யவிவரணம் - பிரிவிலே இத்யாதி. "உயிர்நோவ" என்றதுக்குவ்யாவ்ருத்தி - உயிர்நோவ இத்யாதி. "உயிர்நோவ" என்றதுக்குஹார்த்தவாக்யம் - ராமஶரம்போலே இத்யாதி. அதாவது - உடல்குறியழியாதிருக்க உயிரிலே நலியவற்றென்றபடி. "என்னுயிர்" என்றதுக்கு வ்யாவர்த்த்யம் - என்னுயிரென்கையாலே இத்யாதி. † "மிழற்றலும் மிழற்றலும் நிரம்பாமென் சொல்." நிரம்பாமென்சொல் என்றது - அர்த்தோக்தியான மருஹாவஷணம். "நிரம்பாமென் சொல்" என்றதின்விவரணம் - ஸம்ஶ்லேஷதஶையில் இத்யாதி. எங்களுக்கு ப்ரக்ருதியான மிழற்றுதலைத்தவிரப்போமோவென்ன - இப்பேச்சு இத்யாதி. விவரணம் - ஸ்த்ரீவதமும் இத்யாதி. "பேடைகாள்" என்றதுக்குஹாவம் - விஜாதீயர் இத்யாதி. விஜாதீயர் - புமான்கள். சேவலைக்

---

† திவாகரம்—(கo-ந் தொகுதி.

தீயர்செய்வதை நீங்களுஞ்செய்யவேணுமோ? சேவலைக்கொண்டு கார்யங்கொள்ளநினைத்தாலும் பேடையின்காலையிறே பிடிப்பது. [என்னுயிர்க் கண்ணபிரானை] - "எங்களை யாதுகரைச்சொல்லுமாபோலே சொல்லுகிறதென்?" என்றினவாகக்கொண்டு; எனக்கு தாரகனை க்ருஷ்ணனை வரக்கூவுகிறிலிகோள். தாரகங்கள், வ்யக்திதோறும் வ்யவஸ்த்திதங்களாயிறேயிருப்பது. திர்யக்குக்களுக்கு த்ருணம், மநுஷ்யர்களுக்கு அந்நம், தேவர்களுக்கு அம்ருதம், இவளுக்கு க்ருஷ்ணன்; * எல்லாங்கண்ணனிறே. [கண்ணபிரான்] - பராதீநமாகத் தன்னை ஒக்கிவைக்குமவன். [நீர்] - அந்வயத்தில் ரஸமறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவுமறியவேண்டாவோ? [வரக்கூவுகிலீர்] - நீங்கள் அவன்முன்னேசென்று யாசித்திகோளாகில், தானேசெல்லாமையை நினைத்துவாரானோ? அதுசெய்கிறிலிகோள். என்னைநலியவேண்டுவன செய்திகோள் இத்தனை. நானும்அவனும் சேருகைக்குவேண்டுவன செய்திலிகோள். அழிக்கவல்லவை சேர்க்கவும்வற்று என்றிருக்கிறார். இவற்றின்வாயது வாணாளென்றிருக்கிறாள். [என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்குமித்தனைவேண்டுமோ] - என்னையும் அவனையுஞ்சேர்க்கிறிகோளல்லாதபின்பு, இனிஎன்னைமுடிக்கையாயிருந்ததிறே உங்களுக்குக்கருத்து; அதுக்கு இப்பாரிப்பெல்லாம்வேணுமோ? பண்டேசென்றற்றஎன்னுயிரைவாங்கி அவன்கையிலே கொடுக்கையாகில்கருத்து, அதுக்கு இதெல்லாம்வேணுமோ? நீங்கள்சேரவிருக்கையும், கலக்கையும் அந்யோந்ய நாமக்ரஹணம் பண்ணுகையும் ப்ரணயகத்கதத்வநியும், இதெல்லாம்வேணுமோ? நொந்தாரைஜீவிப்பிக்கையன்றோஅரிது? முடிக்கையில் பணியுண்டோ?

இரண்டாம் பாட்டு.

இத்தனைவேண்டுவதன்றந்தோ! அன்றிற்பேடைகாள்!
எத்தனைநீரும்நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்
வித்தகன்கோவிந்தன்மெய்யல்லனொருவர்க்கும்
அத்தனையாம்இனியென்னுயிர்அவன்கையதே.

கொண்டு கார்யங்கொள்ள நினைத்தமைதோற்ற "இன்னுயிர்ச்சேவல்" என்று முந்துறவெடுத்து, இங்கே "பேடைகாள்" என்றத்தை ப்ரதாநமாகச்சொல்லுவானென்? என்ன - சேவலை இத்யாதி. "கூவுகிலீர்" என்றதுக்கு அவதாரிகை - எங்களை இத்யாதி. என்றினவாக - என்று சொன்னதுகளாக. இவளுக்குக்ருஷ்ணன் தாரகமானபடியென்? என்ன - தாரகங்கள் இத்யாதி. "வ்யவஸ்த்திதங்கள்" என்றத்தைக்காட்டுகிறார் - திர்யக்குக்களுக்கு இத்யாதி. "இவளுக்கு க்ருஷ்ணன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - எல்லாம் இத்யாதி. "பிரான்" என்றதுக்கர்த்தம் - பாரார்த்யமாக இத்யாதி. உனக்கு பாதகமாகிறது எங்களுக்குத்தெரியுமோவென்ன - அந்வயத்தில் இத்யாதி. அந்வயம் - ஸம்ஸ்லேஷம். வ்யதிரேகம் - விஸ்லேஷம். நாங்கள்கூவினால் அவன் வருவனோ? என்ன - நீங்கள் இத்யாதி. விவரணம் - என்னைநலிய இத்யாதிவாக்யத்வயம். பக்ஷிகள் சேர்ப்பிக்கவற்றோவென்ன - அழிக்கவல்லவை இத்யாதி. விவரணம் - இவற்றின் இத்யாதி. வாயதுவாணாள் - என்றது - வார்த்தையாலேவாழும்நாளான ஆயுஸ்ஸென்றபடி. நாங்கள்முடிக்க வந்ததுக்கு நியாமகமேதென்ன - என்னையும் இத்யாதி. ஸப்தார்த்தம் - பண்டே இத்யாதி. கீழ்ச்சொல்லாவற்றை ஸங்கடாக்ஷித்து "இதெல்லாம்" என்றத்தைக்காட்டுகிறார் - நீங்கள் இத்யாதி. "வேண்டுமோ?" என்ற ஸ்வரத்துக்கு ஸாவம் - நொந்தாரை இத்யாதி. குயிற்பேடைகாள் - இன்னுயிர்ச்சேவலும் இத்யாரப்யாந்வய:. (க)

ஆ.—(இத்தனை.) - "அன்றிற்பேடைகாள்! நீரும் நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்; என்னுயிர் கூவிக்கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுவதில்லை" என்று சொல்ல, அவையும், "உன்னோடுள்ளகலவியே தாரகமாயிருக்கிறவன் ஒருக்ஷணமும் உன்னைப்பிரியுமளவில் அவனை இங்ஙனே கொடுமை சொல்லவேணுமோ? தானே வருகிறானிறே!" என்ன; "அவன் அங்ஙனே ப்ரணயஸ்வபாவனைப்போலேயிருக்கு மத்தனை காண்! அவனொருவர்க்கும் மெய்யாக ஸ்நேஹியல்லன்; ஆனபின்பு, அவன்வருகையென்றொரு பொருளுண்டோ? இனியென்னுயிரானது முடிந்ததிறே?" என்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், 'உங்கள் சேவலும் நீங்களுமாய்க்கொண்டு ப்ரணயகூஜிதங்களாலே என்னைநலியாதே கொள்ளுங்கோள்!' என்று சிலவன்றிற்பேடைகளை தயநீயமாக இரக்கிறாள்.

[அன்றிற்பேடைகாள்] - 'பெண்பிறந்தீர்காள்! [எத்தனைநீரும் நுஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்] - நாங்களென்செய்தோம்?' என்ன, மிகவும் கரைந்து ஏங்காநின்றீர்கோள். [வித்தகன்கோவிந்தன் மெய்யனல்லனொருவர்க்கும்] - 'உன்னோடுள்ள கலவியே தாரகமாயிருக்கிற அவன் ஒருக்ஷணமும் பிரியுமளவில் அங்ஙனே எங்களைவிட்டு நலிவிக்கிறானைக் கொடுமை சொல்லவேணுமோ? அவன்தானே வருகிறானிறே' என்ன,- அவன் அங்ஙனே ப்ரணயஸ்வபாவரைப்போலே இருக்குமத்தனை. [ஒருவர்க்கும் மெய்யனல்லன்] - உங்களுக்கும் இத்தனையே பலிப்பது. [அத்தனையாம் இனியென்னுயிர் அவன்கையதே] - இப்படிச் சொல்லவும் அவைவிடாதே கூவப்புக்கவாறே முடிந்தேனாகாதே என்கிறாள்.

ப.—அநந்தரம், பசுக்களுக்கும் ரக்ஷகனும்படி ஸௌசீலனான க்ருஷ்ணனை மெய்யனாகநினைத்து, என்னை யவனுக்காக என்செய்யநலிகிறீகோளென்று, சிலஅன்றிற்பேடைகளைச்சொல்லுகிறாள்.

அன்றிற்பேடைகாள் - (பிரிவில் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தையுடைய) அன்றிற்பேடைகாள்! நீரும் - (சேவலின் நினைவறிந்து பரிமாறும்) நீங்களும், நுஞ்சேவலும் - (உங்கள் நினைவறிந்து பரிமாறும்) சேவலுமாய்க்கொண்டு, எத்தனை - எத்தனை ப்ரகாரம், கரைந்து - ஸம்ஶ்லேஷரஸத்தாலே [illegible], ஏங்குதிர் - சப்திக்கிறீகோள்? இத்தனை - இத்தனைப ப்ரவ்ருத்தி, வேண்டுவதன்று - ; அந்தோ -! (என்னை நலியும்படி யுங்களைவரக்காட்டின), வித்தகன் - விஸ்மயநீய சேஷ்டிதனும், கோவிந்தன் - பசுக்களையும் ரக்ஷிக்குமவனென்கிற ஸௌசீல்யத்தை ப்ரகாசிப்பித்து லோகத்தை வசீகரிக்கும் க்ருஷ்ணனானவன், ஒருவர்க்கும் - (நட்டாரோடு நல்லவர்களோடு வாசியற) ஒருவர்க்கும், மெய்யன் அல்லன் - மெய் பரிமாறுவானொருவனல்லன்; (ஆனபின்பு, அவன் நினைவின்படி உங்கள் ப்ரவ்ருத்தியுண்டாகையாலே), இனி என்னுயிர் - இனி என்ப்ராணனானது, அவன்கையதே ஆம் அத்தனை-.

இ.—இரண்டாம்பாட்டில், சில அன்றிற்பேடைகளைக் குறித்து, உங்கள் சேவலும் நீங்களுமாய்ப் ப்ரணயகூஜிதங்களாலே யென்னை நலிகிறதென்? என்கிறாள்.

[இத்தனை வேண்டுவதன்று] - என்னை முடிக்கைக்கு இத்தனை வேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து "இத்தனை வேண்டுமோ?" என்றுநிற்க, இடையிலே அன்றில்களினுடைய த்வநி நலிய, 'இத்தனைவேண்டா' என்னவேண்டும்படியிறே இவள்

உரை. குயில்களினுடைய த்வநியிலே பணிபோந்து செல்லாநிற்க நடுவே, † ஒளியம்பு விடுவாரைப்போலே அன்றில்கள் த்வநிக்க, புரிந்துபார்த்து, இவையடையயோதோ! நீங்களும் வேணுமோ! என்கிறாளிறே. இப்படி சொன்னவிடத்திலும் மேன்மேலென த்வநிக்கத் தொடங்கிற்று; அதிலேதான் சேர்ந்து பாவமாத்ரையாய், "ஐயோ!" என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - குயிற்பேடைகளிற்காட்டில் உங்கள்பக்கல் ஒரு வாசிகண்டிலோம்; அவற்றிற்காட்டில் வ்யதிரேகத்தில் ஆற்றாமைமிக்கிறே யிவற்றுக் கிருப்பது. உங்கள் சேவலிற்காட்டிலும் ஒருவாசிகண்டிலோம்; குயிற்பேடைகளிற் காட்டிலும் ஒருவாசி கண்டிலோம். நலிவுக்கு விஜாதீயரிலுமவ்வருகாய், ஸஜாதீயரிலும் அவ்வருகாயிருந்தீர்கோள். "நாங்கள் என்செய்தோம்" என்ன? - [எத்தனைநீரும் நுஞ் சேவலுங் கரைந்தேங்குதிர்] - [நீரும்] - சேவலினுடைய கருத்தறிந்து பரிமாறுகிறநீரும். [நுஞ்சேவலும்] - உங்கள் கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள் சேவலும். [எத்தனைகரைந் தேங்குதிர்] - ப்ரணயத்திலே இழிந்தமைதோற்றப் பரிமாறுநின்றீர்கோள். இருவர் கூடக்கலக்கும் ஸமயமோவிது? என்னை நலிகைக்காகக் கலந்துகொளித்தனையன்றோ; கலந்தால்தான் உங்கள்உகவைதோற்ற வாய்விடவேணுமோ! உங்களை யழியமாறியன்றோ என்னை நலிகிறது. [வித்தகன் இத்யாதி] - "அவனொரு க்ஷணகாலம் தாழ்க்குமளவில் உங்களையிட்டு அவன் நலிவிக்கிறானாகச் சொல்லவேணுமோ?" என்ன, அவன்படிகளை என்வாயிலே கேளுங்கோளென்கிறாள். வித்தகன் - விஸ்மயநீயன். இப்போது அநு கூலர்க்கு அரியவித்தகனாயிருந்தவன். கோவிந்தன் - ஸர்வரக்ஷகன். இத்தால் ரக்ஷக ராவாரைப்போலேயிருந்து பாதகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது; பாதக னென்று விடப்போகாது. [மெய்யனல்லனொருவர்க்கும்] - "பரமப்ரணயி, ஸர்வ ரக்ஷகன்" என்றிருக்கிற உங்களுக்கும் பொய்யே ஸித்திப்பது. "ராமோத்விர்நாபிபா ஷதே" "நத்யஜேயம்," "ஏதத்வ்ரதம்மம" என்னும் ராமாவதாரத்தைப்போலேயிறே நீங்கள் நினைத்திருக்கிறது; பரதனுக்கும் மெய்சொல்லி, திருவடிக்கும் மெய்சொல்லு மவனல்லனோ! "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலையிரவாக்குகையு மிறே இவ்வவதாரத்தில் க்ருத்யம். இப்படி சொல்லவும் அவைவிடாதே கூவிற்றின; முடிந்தேனாகாதே! என்கிறாள். [அத்தனையாம் இனி] - இனி, அத்தனையாகாதே என் கிறாள். [என்னுயிர் அவன் கையதே] - என்னுடைய ப்ராணனானது அவன் கைப்பட் டது. அவன் நினைவேயாய்த் தலைக்கட்டினபின்பு, என்னுடைய ப்ராணரக்ஷணத்துக்கு உங்கள் காலபிடிக்க வேண்டாவாகாதே.

ஈடு.—இரண்டாம் பாட்டு. சிலஅன்றிற்பேடைகளைக்குறித்து, உங்கள்சேவல் களும் நீங்களுமாய் ப்ரணயகூஜிதங்களாலே என்னை நலிகிறதேன்? என்கிறாள்.

[இத்தனைவேண்டுவதன்று] - என்னைமுடிக்கைக்கு இத்தனைவேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து, "இத்தனைவேண்டுமோ!" என்றுநிற்கச்செய்தே, இடையிலே அன்றி

இரண்டாம் பாட்டு - இத்தனை இத்யாதி. "அந்தோவன்றிற்பேடைகாள் எத்தனைநீரும் நுஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்" என்றவர்களைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலஅன்றில் இத்யாதி.

இதே குயில்களுக்குச்சொன்ன வார்த்தையையே அன்றில்களுக்கும் சொல்லுவானென்? என்ன - குயில்களை இத்யாதி. அதாவது - ஆற்றாமையின் அதிசயத்தாலேயென்றபடி. ஸ

---

† ஒளியம்பு - மறைந்திருந்து எய்யும் அம்பு.

லினுடைய த்வநி நலிய, அப்பாசுரமே இவற்றுக்குச்சொல்லவேண்டும்படியிறே பிறந்த தசை. மஹாராஜரும் வாலியும் போராநிற்க நடுவே ஒளிப்பட்டாகப் பெருமாள்விட்டாற் போலே, குயில்களும் இவளுடைய "கூவாதே கொள்ளுங்கோள்" என்பது அவை யுயரக்கூவுவது ஆகாநிற்கச்செய்தே, நடுவே அன்றிலானது, செவிவழியே நெருப்பையுருக்கி வார்த்தாற்போலே த்வநிக்க, புரிந்துபார்த்து, "இவையே யமையாதோ! நீங்களும் வேணுமோ!" என்கிறாள். இவள் இப்படி சொல்லச்செய்தேயும் த்வநிக்கத்தொடங்கிற்று. [அந்தோ!] - "சரணம்" என்றவாயை அம்பாலே சிறைப்பாரைப்போலே, உங்கள்படி யிருந்தபடியென் ! ஐயோ! என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - குயிற்பேடைகளிற்காட்டில் உங்களுக்குஒருவாசிகண்டிலோம். உங்கள் சேவலிற்காட்டில் ஒருவாசியும் கண்டிலோம். நலிகைக்கு, ஸஜாதீயரிலும் விஜாதீயரிலும் அவ்வருகா யிருந்திகோள். "நாங்கள் என் செய்தோம்?" என்ன, - [எத்தனை] - மிகவும். [நீரும் நுஞ்சேவலும்] - சேவலின் கருத்தறிந்து நடத்துகிற நீரும், உங்கள்கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள் சேவலும். "அந்தர்ஜாதமபி வ்யக்தம்" (அந்தர்ஜாதமபிவ்யக்தம்) என்னுமாபோலே, பேடை யின்கருத்தறிந்து பரிமாறுகின்றதாயிற்றுச் சேவல். [கரைந்தேங்குதிர்] - பிறரை நலிகைக்காகத் தந்தாமை யழித்துக்கொள்வாருண்டாகாதே! ப்ரணயதாரையில் தானழிந் தமைதோற்றப் பரிமாறுகின்றன. இருவர் கூடக்கலக்கும் ஸமயமோ இது? கலந்தாற்றான், உங்கள் தசைதோற்ற வாய்விடவேணுமோ? [வித்தகன் இத்யாதி] - "அவன்

த்ருஷ்டாந்தமாக விவரணமாதல், "இத்தனையேண்டுவதன்று" என்றதுக்கு ஸாவகாசத்வமாதல் - மஹாராஜரும் இத்யாதி. இவையே யமையாதோவென்றது - குயில்களே யமையாதோவென்றபடி. "அந்தோ!" என்றதுக்கவதாரிகை - இவளிப்படி இத்யாதி. "அந்தோ!" என்றதுக்கு வாஸனை - சரணம் இத்யாதி. இதுக்குபாவம் - குயிற்பேடைகளில் இத்யாதி. அதாவது - குயிற் பேடைகளைப்பற்ற அன்றிற்பேடைகளுக்கு, வாயலகு நெகிழ்க்கிலும் பொறுக்கமாட்டாத விஸ்லேஷாஸஹிஷ்ணுத்வமுண்டாகையாலே, அதிசயிக்கவில்லையென்றபடி. "பேடைகாள்" என்றதுக்குபாவம் - உங்கள்சேவலில் இத்யாதி. அதாவது - சேவல் பரிமாறுகையாலே, கடினப்ராக்ருதியாய்ப் பெண்ணினுடைய வ்யஸநமறியாத ஆகாரத்தையுடையனாயிருக்கும்; அப்படி யன்றிக்கே, பெண்கள்படும் வ்யஸநம் பெண்களுக்குத்தெரிந்தபடியான சற்றுமுண்டேயுங்களுக்கு. இப்போது நிர்த்தயமாய் நலிகையாலே அதிசயங்கண்டிலோமென்றபடி. விவரணம் - நலிகைக்கு இத்யாதி. ஸஜாதீயர் - குயிற்பேடைகள். விஜாதீயர் - சேவல்கள். பேடையின்கருத்தறிந்து பரிமாறுகைக்கு த்ருஷ்டாந்தம் - அந்தர்ஜாதம் இத்யாதி. "தஸ்யாஸ்ச பர்த்தா த்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே। அந்தர்ஜாதமபி வ்யக்தமாக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா। தஸ்யா பூயோ விசேஷேண மைதிலீ ஜநகாத்மஜா" இதி பாலகாண்டே ஸர்கே. (எ) "அஸ்யார்த்த: ; தஸ்யாஸ்ச ஹ்ருதயே ராம:, த்விகுணம்- ப்ரும்ம், பரிவர்த்ததே; தஸ்மாத் ஸ ராம:, தஸ்யா: அந்தர்ஜாதமபிஹ்ருதயம் - அபிப்ராயம், ஹ்ருதா - மநஸா, வ்யக்தமாக்யாதி - ஜாநாதி. தஸ்ய - ராமஸ்ய. ஹ்ருதயே, மைதிலீ, பூயோவிசேஷேண - அதிசயேந, பரிவர்த்ததே; தஸ்மாத், தஸ்ய-ராமஸ்ய, ஹ்ருதயம் - அபிப்ராயம், மைதிலீ, மநஸா; ஆக்யாதி - ஜாநாதி, ஏதத்தக்தம்பவதி: - பரஸ்பரஹ்ருதயாந்தர்வர்த்தநேந பரஸ்பராபாவம் உபஜாநீத இத்யர்த்த இதி" என்றுஉடால். "கரைந்து" என்றதுக்குபாவம் - பிறரை இத்யாதி. "ஏங்குதிர்" என்றதுக்குபாவம் - ப்ரணயதாரையில் இத்யா கரைந்து - கூப்பிட்டு. ஏங்குதிர் - ஸோகாதிசயத்தாலே வார்த்தை சொல்லப்புக்குத் தலைக் கட்டமாட்டாதே நடுங்குதிர். இத்தாற்பாவம் - இருவர்கூட இத்யாதிவாக்யத்வயம். கலக்கும் ஸமயமோஇது என்றது - தன்தசையைப்பற்ற. வாய்விடவேணுமோவென்றது - "ஏங்குதிர்"

† ஒரு க்ஷணகாலம் தாழ்க்குமளவில் எங்களைவிட்டு அவன் நலிகிறனுகச்சொல்ல வேணுமோ?" என்ன; அவன்படிகளையுட்டுக்க என்பக்கலிலேகேளுங்கோள்! [வித்தகன்]- விஸ்மயநீயன். இப்போது, அநுகூலர்க்கு * அரியவித்தகன். [கோவிந்தன்] - ஸர்வ ரக்ஷகன். இத்தால் - ஸர்வரக்ஷகரைப்போலேயிருந்து வாபகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது, வாபகனென்று விடப்போகாது. [மெய்யனல்லனொருவர்க்கும்] - "பரம ப்ரணயி, ஸர்வரக்ஷகன்" என்றுநினைத்து அவன்கார்யம் செய்யப்போந்த உங்களுக்கும் பொய்யே ஸலிப்பது. "ராமோத்விர்நாபிபாஷதே," (ராமோத்விர்நாபிபாஷதே) "நத்யஜேயம்," (நத்யஜேயம்) "ஏதத்வ்ரதம்மம" (ஏதத்வ்ரதம்மம) என்னும் ராமாவ தாரம்போலேயென்றிறே நீங்கள் நினைத்திருக்கிறது; பகலையிரவாக்குவது, "ஆயுதமெடேன்" என்றுஆயுதமெடுப்பதாகையிறே இவ்வவதாரத்துக்கு க்ருத்யம். "ராமாவதாரத்தில் மெய்யும், க்ருஷ்ணவதாரத்தில் பொய்யுமிறே, ஆஸ்ரிதர்க்குத்தஞ்சம்; அவன் பொய்யனுகிலேன் ? மெய்யனுகிலேன்? இருந்தபடி யுகக்குமத்தனையன்றே நாங்கள்" என்றுதொடங்கின கார்யத் திலே முதிரநின்றன. [அத்தனையாம் இனி] - இனியத்தனையாகாதே! இவற்றின் ஒருப்பா டிருந்தபடியால், அவன்நினைவே தலைக்கட்டிவிட்டதாகாதே! என்கிறாள். என்ப்ராணன் அவன்கைப்பட்டபின்பு, என்னுடைய ரக்ஷணத்துக்கு உங்கள் கால்பிடிக்கவேண்டாவே?

---

*என்றத்தைப்பற்ற. பரமப்ரணயியாய் ஸர்வரக்ஷகனை - அவன் ஒருக்ஷணகாலம் தாழ்க்குமளவில் என்று கூட்டுவது. "விஸ்மயநீயன்" என்றத்தாலே அவனுடைய காபட்யம் சொல்லிற்றே றென்ன - இப்போது இத்யாதி. * பிரகட்கரியவித்தகனன்றிக்கே, இப்போது அநுகூலர்க்கு * அரியவித்தகனென்றபடி. ஸர்வரக்ஷகத்வம் காபட்யமல்லவேயென்ன - ஸர்வரக்ஷகன் இத்யாதி. மேலே, "மெய்யனல்லன்" என்றிருக்கையாலே, "வித்தகன்-" ப்ரணயிபோலே யிருக்கிற னென்றும் அநுகூலர்க்கு ப்ரணயியல்ல, துர்லபனென்றும், "கோவிந்தன்" - 'ரக்ஷகரைப்போலே இருந்து வாபகனுமவன்' என்றும், வ்யங்க்யமாக வ்யாக்யாநம் பண்ணுகிறார். "கோவிந்தன்" என்ற தற்கு ஸலிதம் - ரக்ஷகனென்று இத்யாதி. ரக்ஷகனென்று பற்றப்போகாது, இப்போது வாபக னுகையாலே; வாபகனென்றுவிடப்போகாது, முன்பு பசுக்களை ரக்ஷிக்கையாலே. "ஒருவர்க் கும்" என்ற சப்தத்துக்கு ஸாவம் - பரமப்ரணயி இத்யாதி. "வித்தகன்" என்றத்தைப்பற்ற - பரமப்ரணயிஎன்றது. "கோவிந்தன்மெய்யனல்லன்" என்று கூட்டிஸாவம்-ராமோத்விர் இத்யாதி. "தஸ்மை ஸஹிவஸநம்தேவி ராஜ்யஞ்சஹிகாநி ஸம்ப்ரக்ஷிந்த்யாம் ஸர்வ ஸம்ப்ராஜா நிஜாமேவராமோ த்விர் நாபிபாஷதே" இதி கைகேயீம் ப்ரதி ராமஃ. (அயோத்யா ௧௮-௩௦) "அவன்வஞ்சகன்" என்னுமத்தை அவன் செயலே ஸூசிப்பிக்குமென்கிறார் - பகலை இத்யாதி. மேலுக்கவதாரிகை - ராமாவதாரத்தில் இத்யாதி. 'ஆஸ்ரிதர்க்குத்தஞ்சம்' என்றவநந்தரம், "ஆகையாலே" என்றுகூட்டு வது. தொடங்கினகார்யத்தில் - இவளை நலிகையில். விவரணம் - இவற்றினுருப்பாடு இத்யாதி. ஒருப்பாடு - உத்யோகம். "என்னுயிர் அவன்கையதே" என்றதுக்கு ஸாவம் - என் ப்ராணன் இத்யாதி. 'அன்றிற்பேடைகாள், எத்தனை நீரும் நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர் - இத்தனைவேண் டுவதன்றந்தோ ! வித்தகன் கோவிந்தன் - ஒருவர்க்கும் - மெய்யனல்லன்; இனியென்னுயிர் அவன்கையதே யாமத்தனை' என்று அந்வயம். (௨)

+ 'க்ஷணம் கால் தாழ்க்குமளவில்' என்று பாடாந்தரம்.

மூன்றாம் பாட்டு.

அவன்கையதேயெனதாருயிர் அன்றிற்பேடைகாள்!
†எவன்சொல்லிநீர்குடைந்தாடுதிர் புடைசூழவே
தவஞ்செய்திலா வினையாட்டியேனுயிரிங்குண்டோ?
†எவன்சொல்லிநிற்றும்? நும்மேங்குகூக்குரல்கேட்டுமே.

ஆ.—(அவன்கையதே.) - எம்பெருமானோடே கலந்து பரிமாறுகைக்கு பாக்யஹீனையான என்னுயிர், நும் ஏங்குகூக்குரல்கேட்டு மயங்கிக் கிடக்கச்செய்தே, அதின் மேலே ஏதேனுஞ்சொல்லிக்கொண்டு ஏன் குடைந்து ஆடுகிறீர்கள் என்னருகே நின்று? என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற்பேடைகளை மீளவும் இரக்கிறாள்.

[அவன்கையதே யென்று தொடங்கி] - அன்றிற்பேடைகாள்! என்னுடைய ப்ராணன் அவன்கையிலேயா யிருக்கச்செய்தே என்னை "முடிக்கவேணும்" என்று எனக்கு துஸ்ஸஹமாம்படி ப்ரணய ரோஷாபிலேயுள்ளன சில உக்திகளைப் பண்ணிக்கொண்டு ஒன்றிலேயொன்று அவகாஹித்து ஸஞ்சரியா நின்றீர்கள்; உங்களுக்கு நலியலாம்படி ப்ராணனைத் தருகைக்கிடான பாக்யத்தைப் பண்ணாதிருக்கிற என்னுடைய ப்ராணன் என்பக்கல் உண்டோ? தவஞ்செய்திலா வினையாட்டியேனென்கிறது - விஸ்லேஷித்தாலும் அவனைப்போலே தரித்திருக்கைக்கு பாக்யம் பண்ணிற்றிலேனென்றுமாம். [எவனென்று தொடங்கி] - ப்ரணயபரவசமாய்க்கொண்டு ப்ரவ்ருத்தமான உங்களுடைய த்வநியைக்கேட்டு எத்தைச்சொல்லி தரிப்போம்.

ப.—அநந்தரம், அவனுடைய விஸ்லேஷஸந்தாபத்தாலே ஆக்ருஷ்டப்ராணையாயிருக்கிற நான் உங்கள் ஸப்தத்தைக்கேட்டும் எத்தைச்சொல்லி தரிப்பேனென்று, பின்னையும் அவ்வன்றிற்பேடைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

அன்றிற்பேடைகாள் - ! அவன்கையதே - அந்த ஸர்வேஸ்வரனான கோவிந்தன் கையதே, எனது ஆர் உயிர் - என்னுடைய ப்ராணனானது; நீர் - நீங்கள், எவன்சொல்லி - எத்தனை உக்திவிசேஷங்களைப்பண்ணி, குடைந்து - ஒன்றுக்கொன்று உள்ளேயாம்படி ஸம்ஸ்லேஷித்து, புடைசூழவே - என்னுடையபரிஸரத்திலே, ஆடுதிர் - ஸஞ்சரிக்கிறீர்கள்! தவம் - அவனைப்போலே பிரிவுக்காற்றியிருக்கும் பாக்யத்தை, செய்திலா - பண்ணாதே, வினையாட்டியேன் - போலிகண்டுகெடும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய, உயிர் - ப்ராணன், (அங்கே போனபடியாலே), இங்கு உண்டோ - ? நும் - உங்களுடைய, ஏங்கு - ஸம்ஸ்லேஷத்திலுமான, கூக்குரல் - ஸப்தங்களை கேட்டும், எவன் - எத்தை, சொல்லி நிற்றும் - சொல்லிநிற்பது?

இ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற்பேடைகளையே திரியவும் இரக்கிறாள்.

† 'எவம்' என்று வழங்கும்.

[அவன்கையதே எனதாருயிர்] - என்னுடைய ப்ராணன் அவன்கையதே. மிதுநமானால் ப்ராணன்கள் மாறாடியன்றோ இருப்பது? உங்களுக்கு இது அவ்யுத்பந்நமோ! "ஸஹஸ்ராத்மஸ்ஸஹஸ்ராஸ:." [அன்றிற்பேடைகாள்] - வ்யதிரேகத்தில் ஆற்றாமையை அறியும் நீங்கள் இதில் இழிபாடறியவேண்டாவோ! "உன்னை நலிகிறோமோ! எங்களுக்குக் கலவிஸ்வபாவமன்றோ?" என்ன. [எவன்சொல்லி] - ப்ரணயரோஷமையிலே உள்ளனவாய் எனக்கு துஸ்ஸஹமான சிலவுக்திகளைப்பண்ணி; அவைசொன்னபாசுரம் தன்வாயாற் சொல்லமாட்டுகிறிலள். [நீர்குடைந்து] - ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] - பரிமாறுநின்றீர்கோள். ஆட்டம் - நடையாட்டம், [புடைசூழவே] - சுற்றிலே ஸஞ்சரியாநின்றீர்கோள்; அடைமதிட்படுத்துகைக்குச் சுற்றிலே விட்டுக்கொண்டிருப்பாரைப் போலே. செவியைப்புதைத்துப் பிழைப்பேனோ! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனோ! [தவஞ்செய்திலா இத்யாதி] - என்னை முடிக்க நினைத்துவந்த உங்களுக்கு, என்ப்ராணனை இங்கேவைத்துத் தருகைக்கீடான பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன். கபோதம்போலே உங்களுக்கு உபகரித்து உங்கள் ப்ரீதிபங்சாணைப்பெறாத பாபகர்மாவானேன். "அவனைப்போலே பிரிவுக்கு இளைபாதபடி பாக்யத்தைப்பண்ணப் பெற்றிலேன்" என்று பிள்ளான் நிர்வாஹம். [உயிரிக்குண்டோ] - என்னுயிரோவ மிழற்றினவன்றே அங்கேபோய்த்தே என் ப்ராணன்; என்பக்கலுண்டோ?" என்று விளக்கேற்றிக் காட்டுவாரைப்போலே யிருக்கிறது. [எவன்சொல்லிநிற்றும்] - எத்தைச்சொல்லித் தரிப்போம்? உங்கள் ஒருப்பாடு இதுவானபின்பு, தரிக்கவிரகுண்டோ? [நும்மேங்குகூக்குரல் கேட்டுமே] - ப்ரணயபரவசமான உங்களுடைய த்வநியைக்கேட்டும், பிரிவாற்றாமைக்கு தரிக்கிலும் உங்கள் த்வநிக்குப் பிழைக்கவல்லேனோ! உங்கள்த்வநி கேட்டாரை முடிக்குமதன்றோ! உங்கள்செவியைப் புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது? "நிஹ்நஸநுஹா வாகா நாம நிஸ்ஸ்ருஷஹவாஹிணாம் । வஹ்நுர்நீகவிஸாஸாஜுக்கீகயமெஷாஹவிஷ்ய்தி".

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவ்வன்றிற்பேடைகள் தம்மையே, திரியவும், தன் சேயலறுதியாலே யிரக்கிறாள்.

[அவன்கையதே எனதாருயிர்] - என் ப்ராணன், அவன்கையதே. மிதுநமானால் ப்ராணன்கள் மாறாடியன்றோவிருப்பது? உங்களுக்கு இது அவ்யுத்பந்நமோ? [அன்றிற்பேடைகாள்] - அந்வயரஸம்அறிவார், பிரிந்தார்படுவதும் அறியவேண்டாவோ? [எவன்சொல்லி] - ஏதேனும் சிலவற்றைச் சொல்லி. அவைசொல்லுகிற பாசுரஞ் சொல்லில் தன்வாய் வேம்போலேகாணும். [நீர்குடைந்து] - ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] - பரிமாறுநின்றீர்கோள். [புடைசூழவே] - சுற்றிலே ஸஞ்சரியா

மூன்றாம் பாட்டு - அவன் இத்யாதி. மீளவும் அன்றிற்பேடைகளை இரப்பானென்? என்ன- அவ்வன்றில் இத்யாதி.

"அவன்கையதே" என்று அறியும்படி யென்? என்ன - மிதுநம் இத்யாதி. "ஸஹஸ்ராத்மஸ்ஸஹஸ்ராஸ:" இத்யாதி அநுஸந்தேயம். கீழிற்பாட்டிலே - "அவன்கையதே" என்றது - நைராஸ்யத்தால் சொன்னவார்த்தை; இதிலே ப்ரணயித்வத்தாலே சொன்னவார்த்தை. "பிரிவில் நீங்கள் செய்கிறவையெல்லாம் பாதகமாகச் சொல்லாநின்றாய்: பிரிவு உனக்குபாதகமென்கிற இதுஎங்களுக்குத் தெரியுமோ?" என்ன - அந்வயரஸம் இத்யாதி. அந்வயரஸம் - ஸம்ஸ்லேஷ ரஸம். இன்னதென்னாதே, "எவன்" என்பானென்? என்ன - அவைசொல்லுகிற இத்யாதி. நீர் - நீங்கள். சூழ - ஸஞ்ச

நின்றிகோள். அடைமதிட்படுத்துவார் சுற்றிலேவிட்டுக்கொண் டிருக்குமாபோலே. செவியைப் புதைத்துப் பிழைப்பேனே! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனே! பெருமாளும் பரிகரமும் லங்கையை யழிக்கைக்குச் சூழப்போந்தாற்போலேகாணும் இவளுக்கு இது இருக்கிறது. பாவியேன்! உங்கள்பாரிப்புக்கு இங்கு விஷயமுண்டாகப் பெற்றதில்லை; [தவஞ்செய்தில்லா] - உயிரை இங்கேவைத்து உங்களுக்கு உபகரிக்க பாக்யம்பண்ணிற்றிலேன். "அவனைப்போலே பிரிவுக்குச் சிளையாதபடி பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன்" என்று பிள்ளான்பணிக்கும். [உயிரிங்குண்டோ!] - வல்லடிக்காரர்க்கு விளக்கேற்றிக் காட்டுமோபோலேகாணும், "இங்குண்டோ!" என்று காட்டுகிறபடி. [எவஞ்சொல்லிநிற்றும்] - எத்தைச் சொல்லித் தரிப்பது? [நும் இத்யாதி] - ப்ரணயபரவஶரான உங்களுடைய த்வநியைக்கேட்டும்.பிரிவுக்குத் தரித்திருக்கிலும்,உங்கள் த்வநிக்குப் பிழைக்கவல்லோமோ! உங்கள் த்வநி, கேட்டாரை முடிக்குமதன்றோ! உங்கள்செவியைப்புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது? "*நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய ஸஹசாரிணாம் | புண்டரீகவிஶாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி*" (நிஸ்வநம்சக்ரவாகாநாம் நிஸம்யஸஹசாரிணாம் | புண்டரீகவிஸாலாக்ஷீகதமேஷாபவிஷ்யதி.) (௩)

நான்காம் பாட்டு.

கூக்குரல்கேட்டும்நங்கண்ணன்மாயன்வெளிப்படான்
மேற்கிளைகொள்ளேன்மின் ‡நீருஞ்சேவலுங்கோழிகாள்!
வாக்குமனமுங்கருமமும் நமக்காங்கதே
ஆக்கையும்ஆவியும் அந்தரம்நின்றுழலுமே.

ரிக்கிறதுக்கு த்ருஷ்டாந்தம் - அடைமதிள் இத்யாதி. அடைமதிட்படுத்துகை - முற்றுகை போடுகை. "எவஞ்சொல்லி, புடைசூழ" என்கிற இரண்டுபதங்களாலும் - தனக்கு இவற்றால்வந்த நலிவைத் தப்பவிரகில்லை என்கிறார் - செவியை இத்யாதி. "எவஞ்சொல்லி" என்றதைப்பற்ற - செவியை இத்யாதி. "புடைசூழவே" என்றதைப்பற்ற - கண்ணை இத்யாதி. "அடைமதிட் படுத்தவார்" என்றதை விஶேஷஸ்பஷ்டமாகக் காட்டுகிறார் - பெருமாளும் இத்யாதி. மேலுக்கவதாரிகை - பாவியேன் இத்யாதி. "தவஞ்செய்திலா" இத்யாதிக்கர்த்தம் - உயிரை இத்யாதி. அர்த்தாந்தரம் - அவனைப்போலே இத்யாதி. பாக்யத்தைப்பண்ணாத பாவியேனை என்னுடைய ப்ராணன்கள்இங்குண்டோ? என்று ஶப்தார்த்தம். உயிருண்டோவென்றதே, "இங்கு" என்று விஶேஷித்ததுக்கு ஹாவம் - வல்லடிக்காரர் இத்யாதி. வல்லடிக்காரர் - ஹிம்ஸகர். நிற்றும் - தரிப்போம், "எங்குகூக்குரல்" என்றதுக்கு ஹாவமாதல், "கேட்டும்" என்ற ஶப்தத்துக்கு ஹாவமாதல் - பிரிவுக்கு இத்யாதி. பிழைக்கப்போகாதோவென்ன - உங்கள் இத்யாதி. தனக்கு வ்யாபகமாகையாலே அவற்றுக்கும்இதுவ்யாபகமென்றுநினைத்து ஹாவம்- உங்கள்செவியை இத்யாதி.தனக்கு வ்யாபகமென்றத்தைக்கொண்டு இப்படி நினைத்தபேருண்டோ வென்ன - நிஸ்வநம் இத்யாதி. "*நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய ஸஹசாரிணாம் | புண்டரீகவிஶாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி*" *இதி (கிஷ் - ௩௦ - ௬௦) ராமஃ. 'அன்றிற்பேடைகாள் - எனதாருயிர் - அவன் கையதே; எவஞ்சொல்லி நீர்' என்றுதொடங்கி, 'உயிரிங்குண்டோ? நும்மெங்கு கூக்குரல்கேட்டும் எவஞ்சொல்லிநிற்றும்', இத்யந்வயஃ.* (௩)

---

‡ '*நீரும் நுஞ்சேவலும்*' *என்பதும் பாடம்.*

ஆ.—(கூக்குரல்) - கோழிகாள்! நீரும் நுஞ்சேவலும் மேன்மேலும் அவனை என்செய்யக் கூவுகிறீர்கள்? என்ன; "நாங்கள் அவனை வரக்கூவுகிறோம்" என்று அவை சொல்ல; அவன்வருகைக்குக் கூவுகிறீர்களாகில் அவன் வாராதொழிகிறதென்? ஆதலால், அவன்வரக்கூவுகிறீரல்லீர்; என்னை முடிக்கைக்காகக் கூவுகிறீர்தாமோ? முன்னமே என்னுடைய ஸர்வகரணங்களும் முடிந்தன; இனி என்செய்ய வருந்துகிறீர்கள்? என்ன; கரணங்கள் முடிந்தனவாகில் உன்னுடைய பேச்சும் இச்சேஷ்டிதங்களுங் கூடுகிறபடி யெங்ஙனே? என்னில்,—முடியச்செய்தே, என்னுடைய ஆக்கையும் ஆவியும் நடுவே நின்று பண்டு வ்யஸநவாஸநையாலே அழைக்கிறனவத்தனை யென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிலகோழிகளைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூக்குரலென்று தொடங்கி] - உங்களுடைய கூக்குரலைக் கேட்டுவைத்தும் ஆஶ்சர்யஶீலனாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன் "இவள் பிழைபாள்" என்று பார்த்துத் தோற்றியருளுகிறிலன். கோழிகாள்! உங்களுடைய சேவல்களும் நீங்களும் உங்களுடைய ஜாத்யுசிதமாய் ப்ராணபர்வ்ருத்தமான உச்சஶப்தத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள்! [வாக்கும்மனமும் என்றுதொடங்கி] - "உன்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரித்து உன்னை முடிக்கவென்றுவந்த நாங்கள் கூவாதிருப்போமோ?" என்றனவாகக்கொண்டு என்னுடைய ஸர்வகரணமும் பண்டே அவன்பக்கலின; இனியென் செய்ய வருந்துகிறீர்கோள்? என்ன; ஆகில், இப்பேச்சும் இச்சேஷ்டிதமுங் கூடினபடி எங்ஙனே என்னில்?—அவை போகச்செய்தே வ்யஸநவாஸநையாலே தேஹமும் ப்ராணனும் நடுவேநின்று துக்கப்படுகிறன வித்தனை.

ப.—அநந்தரம், ஆஶ்சர்யகுணசேஷ்டிதனான க்ருஷ்ணன் வருகிறிலன், நீங்கள் எனக்கு வ்யாகுலமாம்படி கூப்பிடாதே கொள்ளுங்கோளென்று, சில மயிற்பேடைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

கோழிகாள் - மயில்காள், கூக்குரல் - நீங்கள் ஒன்றுக்கொன்று அழைக்கிற குரல், கேட்டும் - அவனிருந்தவிடத்திலும் கேட்கும்படியாயிருக்கச்செய்தேயும், நம் - (எல்லாரும் "நம்முடையவன்" என்னும்படி) ஸுலபனாய், மாயன் - கிட்டினாரை ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களாலே ஈடுபடுத்தும், கண்ணன் - க்ருஷ்ணன், வெளிப்படான் - வருகிறிலன்; நும் - உங்கள், சேவலும் நீரும் - சேவலும் நீருமாகச் சேர்ந்துகொண்டு, மேல் - மேலே, கிளைகொள்ளேன்மின் - திரளாகக்கூப்பிடாதே கொள்ளுங்கோள்! நமக்கு - எங்களுக்கு, வாக்கும் மனமும் கருமமும் - வாங்மந:காயங்கள், ஆங்கே - அவன்பக்கலிலேயாயிற்று; ஆக்கையும் - ஶரீரமும், ஆவியும் - ப்ராணனும், அந்தரம் நின்று - நடுவே, உழலுமே - அலமருகிறவித்தனை. கோழி - மயில். கிளைத்தல் - ஶப்தித்தல்.

இ.—நாலாம்பாட்டில், சிலமயில்களைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றீர்கோள் என்கிறாள்.

[கூக்குரல் கேட்டும்] - நீங்கள்கூவுகிற த்வநியைக் கேட்டுவைத்தும். இவற்றினுடைய த்வநிசெல்லாதவிடமில்லை யென்றிருக்கிறாள். [நங்கண்ணன்] - வடயக்ஷ ப்ரஸித்திபோலே இதொருப்ரஸித்தி யுண்டாக்கிவைப்பதே. [மாயன்] - ஆஶ்சர்ய ஶீலன்; பிரிந்தால் தரிக்கவொண்ணாதபடி கிட்டினபோது கையைக் காலைப்பிடித்துத் தாழ

நின்று பரிமாறுமவன். [வெளிப்படான்]-"இவள் பிழையாள்" என்று தோற்றுகிறிலன்; "தாஸாஸ்ஸவிரஹக்ருத:" என்னுமவன்கிடீர்! ருஷியும் 'ஆவிரபூத்' என்றான்: இவளும் 'வெளிப்படான்' - என்றாள். கைகழியப்போகான்; மறைந்துநின்று தோற்று மென்றிருக்கிறாள். [மேற்கிளை கொள்ளேன்மின்] - மேலான கிளை உச்சையான த்வநி. ஜாத்யுசிதமாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சஸ்வரத்தைப் பண்ணாதே கொள் ளுங்கோள். இவள் பிரிவாலே நோவுபட்ட தசையிலே உயர்ந்த தானத்திலே த்வ நிக்கத்தொடங்கிற்று. [நீரும் சேவலும்] - ஒன்றுதொடங்கின தானத்திலே ஸஹ சரமுந் தொடங்கிக் குறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] - மயில்களைச்சொல்லு கிறது. [வாக்கும்என்று தொடங்கி] - உன்னுடைய ஸர்வசரணங்களையும் அபஹரிக்க வந்த நாங்கள் நீ நிஷேதித்தவாறே தவிருவுதோமோ! என்ன,—அதுவாகில், அவையும் அவன்பக்கலின: அதுக்கும் அங்கே செல்லுங்கோள். அங்கே போய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்பரிதாய் வந்து முகங்காட்டுமென்னும் நினைவாலே சொல்லுகிறாள். ஆகில், இப்பேச்சும் சேஷ்டிதமுங் கூடினபடி யென்? என்ன. [ஆக்கையும் ஆவியுமந்தரம் நின்றுழலுமே] - வ்யவஸாயஸநபிறே சேஹமும் ப்ராணனும் நடுவேநின்று க்லேசப் படுகிற இத்தனை. பிடித்துவிட்ட கொப்புபோலே வாஸனையேயுள்ளது. நோவுபட வேண்டுவதுண்டு; உங்களுக்கு நலிகைக்கு ஆஸ்ரயமில்லை.

ஈடு.—நாலாம்பாட்டு. சில மயில்களைக்குறித்து, நீங்கள்உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றீர்கோள்! என்கிறாள்.

[கூக்குரல்கேட்டும்] - நீங்கள் கூவுகிற த்வநியைக்கேட்டு வைத்தும். இவற் றின் த்வநி செல்லாதவிடமில்லை என்றிருக்கிறாள். [நங்கண்ணன்] - வடயக்ஷப்ரஸித்தி போலேகிடீர் ஸவ்யனென்னும் இது. [மாயன்] - ஆஸ்சர்யசீலன்; கலக்கும் ஸம யத்தில் மெய்போலே பரிமாறவல்லவன். [வெளிப்படான்] - "இவள் பிழையாள்" என்று, தோற்றுகிறிலன்; "தாஸாஸ்ஸவிரஹக்ருத:" (தாஸாமாவிரபூத்) என்னுமவன் கிடீர்! ருஷியும், "ஆவிரபூத்" (ஆவிரபூத்) என்றான்; இவளும், "வெளிப்படான்" என்றாள். [மேற்கிளைகொள்ளேன்மின்] - மேலான கிளை - உச்சமான த்வநி. ஜாத்யுசித

நாலாம்பாட்டு - கூக்குரல் இத்யாதி. "நீரும்சேவலும்கோழிகாள் - மேற்கிளைகொள் ளேன்மின்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலமயில்களை இத்யாதி. பரமபதஸ்த்தருக்கு இதுகேட்குமோவென்ன - இவற்றின் இத்யாதி. மேலே, "மேற்கிளை கொள்ளேன்மின்" என் றத்தைப்பற்ற - செல்லாத விடமில்லை என்றது. "நம்" என்றதுக்கர்த்தம் - வடயக்ஷ இத்யாதி. "நம்" என்று - ப்ரஸித்தி, வடயக்ஷப்ரஸித்தியாவது - இந்தவடபக்ஷஸ் திஷ்டதி-இந்தஆலமரத் திற் பேயுண்டென்னுமது. இத்தால், ஸவ்யனென்கிறது; ப்ரஸித்திமாத்ரமொழிய அநுஷ்டான மில்லையென்கிறது. "வெளிப்படான்" என்றதுக்குச்சேர, "நங்கண்ணன்மாயன்" என்றதுக்கு வேறுப்பாக வ்யாக்யானம் பண்ணுகிறார். மாயன் - ஆஸ்சர்யபூதன். ஆஸ்சர்யமென்? என்ன - கலக்கும் இத்யாதி. வெளிப்பட ப்ரஸக்தியென்ன - இவள் இத்யாதி. அதாவது - "இந்தத்வநி இவளுக்கு பாதகம்" என்றால் ஓடிவரவேண்டியிருக்க, அதுசெய்கிறானில்லையென்றபடி. அப்படி விஸ்லேஷ தசையில் தோற்றுமோவென்ன, ப்ரமாணம் - தாஸாம் இத்யாதி. "தாஸாஸ்ஸவிரஹக்ருதுஷா ஸ்மியமாநமுகாம்புஜ:" இத்யாதி, கோபிகாதிதாஸமகந்தமே. ஸம்பந்தமொத்திருக்கிறதென் கிறார் - ருஷியும் இத்யாதி. அதாவது - கோபிமார்க்கு ஸமயஸ்தனாய்த் தோற்றுதிருந்தானென்றாற் போலே, இவளும் ஸந்நிஹிதனாயிருக்குமவைத்தே வெளிப்படானென்கிறாளென்றபடி. "கிளை" என்று-

மாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சசப்தத்தைப் பண்ணுதேகோள்ளுங்கோள். இவள் ஈடுபடப்பட, ஒரு தான மேழவைத்துக் கூவாநின்றன வாய்த்து. [நீருஞ்சேவலும்]-ஒன்று தோடங்கின கார்யத்தை ஸஹசரமுந்தோடங்கிக் குறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] - ஸ்த்ரீவதம்பண்ணுகைக்கு ஒருஜாதியாக ஒருப்படவேணுமோ? கோழியேன்கிறது - மயிலே. "'நீர் நலியாதே கொள்ளுங்கோள்' என்னுமளவும் பார்த்தன்றே நாங்களிருக்கிறது? ஸர்வகரணங்களையும் அபஹரிக்கவந்த நாங்கள் தவிருவோமோ? தோடங்கினகார்யம் தலைக்கட்டவேணுமே, எங்களுக்கு" என்று கருத்தாக, அதுக்காகில் பின்னை அங்கே போங்கோளேன்கிருள். [வாக்கும் மனமும் கருமமும் நமக்காங்கதே] - என்னுடைய ஸர்வ கரணங்களும் அவன்பக்கலின. "அங்கேபோய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்புஅரிதாய் வந்து முகங்காட்டும்" என்னும் நினைவாலே சோல்லுகிருள். அங்கேயாகில், இப்பேச்சும் சேஷ்டிதங்களும் கூடினபடியேன்னேன்ன? - [ஆக்கையுமாவியுமந்தரம்நின்றுழலுமே] - வ்யஸநவாஸநையாலே, தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேசப்படுகிற இத்தனை. பிடித்துவிட்ட கோம்புபோலே வாஸநையேயுள்ளது. நோவுபடவேண்டுவதுண்டு, நலிகைக்கு ஆஶ்ரயமில்லை. (ச)

ஐந்தாம் பாட்டு.

அந்தரம் நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்!
நுந்தறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ
இந்திரஞாலங்கள்காட்டி இவ்வேழுலகுங்கோண்ட
நந்திருமார்வன்நம்மாவியுண்ணநன்கெண்ணினன்.

ஆ.—(அந்தரம்நின்று.)-'உங்களுக்கு நான்என்னஅநிஷ்டம் பண்ணினேன்? நீங்கள் நடுவேநின்று, அவன்திருநாமங்களைச்சொல்லி என்னைவாயியாதேகொள்ளுங்கோள்!' என்று பூவைகளை நோக்கிச்சொல்லி, 'பண்டு இந்தலோகத்தைத் தனக்காக்கிக் கொள்ளுகைக்குச் சிலபொய்செய்தாற்போலே என்னோடேகலந்து பரிமாறுகிறுனுகத் தோற்றும்படி சிலபொய்களைச் செய்தகன்றுபோன இது; என்னைமுடிக்கைக்கு நல்ல விரகுபார்த்தான்; என்ன சதுரனே!' என்று தன்னிலேநொந்து சொல்லுகிருள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து, "அவன்தான் என்னை முடிக்கைக்கு அழகிதான விரகுபார்த்தான்; உங்களுக்கு இங்கு விஷயமில்லை" என்கிறுள்.

பஞ்சிபப்தமாகையாலே, 'ஜாத்புசிதமாய்' என்கிருர். "ஆந்தை கிளைக்கூட்டிற்று"
திரை. "மேல்" என்றதுக்குஹாவம் - இவள்படட இத்யாதி. "நீரும்சேவலும்" என்றிரண்டையும் சொல்லி, "கிளை" என்று ஏகவசநமாகச் சொன்னதுக்கு ஹாவம் - ஒன்றுதோடங்கின இத்யாதி. "கோழிகாள்" என்கிற வஹுவசநத்துக்கர்த்தம் - ஸ்த்ரீவதம் இத்யாதி. பேச்சும் சேஷ்டிதமும் என்றது - "மேற்கிளைகொள்ளேன்மின், உழலும்" என்றத்தைப்பற்ற. விவரணமாதல், தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேஸப்படுகிறதுக்கு த்ருஷ்டாந்தமாதல் - பிடித்துவிட்ட இத்யாதி. ஸலிதம் - நோவுபட இத்யாதி. "உழலும்" என்றதுக்கு ஹாவமாதல். 'கூக்குரல்கேட்டும் நங்கண்ணன் மாயன் வெளிப்படான் - வாக்கும்' என்றுதொடங்கி, 'உழலுமே; கோழிகாள் நீரும்சேவலும் மேற்கிளைகொள்ளேன்மின்' இத்யந்வயம். (ச)

[அந்தரமென்று தொடங்கி] – நலிகைக்கொரு காரணமின்றிக்கே யிருக்கச் செய்தே, என்னை நலிந்துகொண்டு ஸஞ்சரிக்கிற என்னுடைய பூவைகாள்! உங்களுடைய பாரிப்புக்கு என்பக்கல் அவகாசமில்லை. குழறாதே கொள்ளுங்கோள்! [இந்திரஞால மென்று தொடங்கி] - ப்ரணயித்வ ப்ரஸித்தியையுடையனாயிருந்துள்ள எம்பெருமான் பண்டு இந்தலோகத்தைத் தனக்காக்கிக் கொள்ளுகைக்குச் சிலபொய் செய்தாற்போலே என்னோடேகலந்து பரிமாறுகிறானாகத் தோற்றும்படி சிலபொய்களைச் சொல்லி விச்லேஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாயமென்று அவன்தானே நல்விரகு பார்த்தான்: என்னைமுடிக்கப் பார்த்த பார்வை, அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்றுமாம்.

ப.—அநந்தரம், க்ருத்ரிமசேஷ்டிதங்களைக்காட்டி ஸர்வலோகத்தையும் பிறர்க்காகாதபடி பண்ணுமவன் உள்ளாளான உங்களையிட்டு நம்முடைய ப்ராணாபஹாரம்பண்ணுகைக்கு நன்றாக எண்ணினனென்று, தன்னுடைய பூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

நலிகைக்கு விஷயமின்றிக்கே யிருக்கச்செய்தே, அந்தரம் நின்று-நடுவே, உழல்கின்ற - நிஷ்ப்ரயோஜநமாக அலமருகிற, யானுடைப்பூவைகாள் - நான் என்னுடையவை என்று அபிமாநித்த பூவைகாள்! நுந்திறத்து - உங்கள் இடையாட்டத்தில், (என்னை நலிகைக்கு), ஏதும்இல்லை-ஓர்அவகாசமில்லை; குழறேன்மின்-(நீங்கள்) அநக்ஷரரஸமாம்படி ஸப்தியாதே கொள்ளுங்கோள்! இந்திரஞாலங்கள்காட்டி - இந்த்ரஜாலங்கள் போலே மெய்யென்று ப்ரமிக்கும்படியாக குணவிக்ரஹ சேஷ்டிதங்களைக்காட்டி, இவ்வேழுலகும் - இந்த ஸப்தலோகத்தையும், கொண்ட - (பராபிமாநத்தையும் ஸ்வாபிமாநத்தையும் அறுத்துத் தனக்கேயாம்படி) பண்ணிக்கொண்டு, நம்திருமார்வன் - நமக்கு(தன்) திருமார்விலேயிருக்கிற பிராட்டிபக்கல் ப்ரணயித்வத்தைக்காட்டி பகப்படுத்தினவன், நம் - நம்முடைய, ஆவி - ப்ராணனை, உண்ண - க்ரஸித்துக்கொள்ளுகைக்கு, நன்கு எண்ணினான் - நன்றாக நிரூபித்தான்.

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து அவன்தான் என்னைமுடிக்கைக்கு நல்விரகுபார்த்தான்; இனி, உங்களுக்கு இங்கு விஷயமில்லை என்கிறாள்.

[அந்தரம்நின்றுழல்கின்ற] - உங்களுக்கு இங்குநலிகைக்கு விஷயமின்றிக்கேயிருக்க நடுவேநின்று வ்யர்த்தமே க்லேசப்படுகிறீர்கோள் இத்தனை. [யானுடைப் பூவைகாள்] - என்னுடைய பூவைகாள்! ஸர்வஸாதாரணராயிருப்பார் செய்யுமத்தை, சிலர்க்கு ஸ்வம்மாயிருப்பார் செய்யக்கடவதோ? ஸ்வதந்த்ரன் செய்யுமத்தை பரதந்த்ரரான நீங்களும் செய்யக்கடவதோ? நான் எனக்கு என்னவமையுமாகாதே பாதகமாகைக்கு? அவனும் என்னுடையவனாகையிறே நலிந்தது. கலந்தார் செய்யக்கடவத்தை வயிற்றிற் பிறந்தார் செய்யக்கடவதோ? [நுந்திறத்தேதுமிடையில்லை] - உங்கள்இடையாட்டத்தில், என்னைநலிகைக்கு ஓர்அவகாசமில்லை; உங்கள்பாரிப்புக்கு என்பக்கல் ஓர்அவகாசமில்லையென்றுமாம். [குழறேன்மினோ] - அநக்ஷரரஸமானபேச்சைக் காட்டி முடியாதே கொள்ளுங்கோள். "உருவினவாள் உறையிலிடுங்கோள்" என்னுமாபோலே. கெடுவிகாள்! உங்கள்வாயைப் புதையுங்கோளென்கிறாள். [இந்திரஞாலங்கள் காட்டி]-

கண்டார்க்கு விடவொண்ணாத வடிவையும், ஶீலத்தையும், சேஷ்டிதத்தையுங்காட்டி. 'இவை நிலைநில்லாமையாலே பொய்காண்' என்கிறாள். [ஏழுலகுங்கொண்ட] - பிறருடைமை கொள்ளுமிடத்தில் ஶேஷியாதபடி கொள்ளுமவன். [நந்திருமார்வன்] - ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி. பிராட்டியோடு பழகிற்றும் ப்ரணயிபாப் அன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக. சில பொய்களைக்காட்டி மஹாபலிபக்கல் நின்றும் பூமியைக் கொண்டாற்போலே, கலந்து பரிமாறுகிறானென்று தோற்றும்படி சிலபொய்களைச் செய்து விஶ்லேஷிக்கை. என்னை முடிக்கைக்கு உபாய மென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] - நம்மை முடிக்கைக்கு நல்விரகு தானேபார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாஶமில்லை. ஸர்வஶக்தியானவன் உத்யோகித்த கார்யத்திலே குறைகிடப்பதாய் அதிலே நீங்கள் ஸஹகரிக்கிறீகோளோ? நம்மை முடிக்கப் பார்த்தபார்வை அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாள் என்றுமாம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னிலவாயிருந்துநலிகிற பூவைகளைக்குறித்து, அவன்தான் என்னை முடிக்கைக்கு நல்ல விரகு பார்த்தான்; இனி உங்களுக்கு இங்கு விஷயமில்லை என்கிறாள்.

[அந்தரம்நின்றுழல்கின்ற]—உங்களுக்கு இங்கு நலிய விஷயமின்றிக்கேயிருக்க, நடுவேநின்று வ்யர்த்தமே க்லேஶப்படுகிறீகோளித்தனை. [யானுடைப்பூவைகாள்] - என்னுடைப்பூவைகாள்! ஸர்வஸாதாரணராயிருப்பார் செய்பவற்றை, சிலர்க்கு ஸ்வம்மாயிருப்பார் செய்யக்கடவதோ? நான் எனக்குளன்ன வமையுமாகாதே வ்யாயிக்கைக்கு? அவனும், என்னுடையவ ளுகையிறே நலிந்தது! [நுந்திறத்தேதுமிடையில்லை] - உங்கள் இடையாட்டத்தில், என்னைநலிகைக்கு ஓர் அவகாசமில்லை; உங்கள் பாரிப்புக்கு என்பக்கல் ஓரவகாசமில்லையென்றுமாம். [குழறேன்மின்] - அக்ஷர ரஸமானபேச்சைக் காட்டி முடியாதேகொள்ளுங்கோள்! அவன்தான் அதிகரித்தகார்யத்தில் நெகிழநின்றானுகிலன்றோ, நீங்கள் இப்படி முதிரநிற்கவேண்வேது? அதுக்கு உங்களுக்கு அவகாசம் வைத்தானோ! [இந்திரஞாலங்கள்காட்டி] - கண்டார்க்குவிடவொண்ணாதவடிவையும், சீலத்தையும்,

---

அஞ்சாம்பாட்டு - அந்தரம் இத்யாதி. "யானுடைப்பூவைகாள் - நம்மாவியுண்ணநன்கெண்ணினான் - நுந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - தன்னிலவாய் இத்யாதி. தன்னிலவாய் என்றது - "யானுடைப்பூவைகாள்" என்றத்தைப்பற்ற. தன்னிலவாய் - தன்னுடையவைகளாய்; தனக்கு ஶேஷங்களாய் என்றபடி.

"யானுடைப்பூவைகாள்" என்று விசேஷிக்கிறவளுடைய ஹார்த்தபாவம் - ஸர்வஸாதாரண இத்யாதி. ஸர்வஸாதாரணராயிருப்பார் என்றது - காட்டிலேவர்த்திக்கையாலே ஸர்வஸாதாரணமான மயில்தொடக்கமான பக்ஷிகளையாதல், கீழ்ப்பாட்டில் "நங்கண்ணன்" என்ற க்ருஷ்ணனையாதல், "நந்திருமார்வன்" என்றத்தைக்கடாக்ஷித்து, என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக பாதிக்கிறீகோளென்று பாவாந்தரம் - நான்எனக்கு இத்யாதி. விவரணம் - அவனும் இத்யாதி. இடை - அவகாஶம். உங்களிடையாட்டத்தில் என்றது - உங்களுக்கென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, "திறம்" என்று - ஸமூஹமாய், பாரிப்பைச் சொல்லுகிறது. மேலுக்கெல்லாம் அவதாரிகை - அவன்தான் இத்யாதி. அவகாஶம் வையாமல் அவன்செய்த வ்யாபாரங்களைச் சொல்லுகிறது மேல். "இந்திரஞாலங்கள்" என்கிற பஹுவசந விவக்ஷிதங்களையும், அவற்றை இந்திரஞாலமாக அருளிச்செய்கைக்கு ஹேதுவையும் அருளிச்செய்கிறார் - கண்டார்க்கு இத்யாதி. அதாவது - இந்திரஞாலமாவது, கண்டல்லது நிற்கவொண்ணாதபடி ஆகர்ஷகமாயிருப்பதொரு வித்யையிறே; அப்படி ஸௌந்தர்யாதி

சேஷ்டிதத்தையுங் காட்டி. இவை நிலைநில்லாமையாலே, "போய்கள்" என்கிறாள். இந்திரஜாலமென்றும், பொய்யென்றும் பர்யாயம். [ஏழுலகுங்கொண்ட] - பிறருடைய வஸ்துவை அபஹரிக்கப்புக்கால், அவர்களுக்குஒன்றும் சேஷியாதபடி அபஹரிக்குமவன். [நந்திருமார்வன்] - ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி. பிராட்டியோடே பழகிற்றும் ப்ரணயியாய்அன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை யகப்படுத்திக் கொள்ளுகைக்காக. சிலபொய்களைக்காட்டி ஸூழ்மையைக்கொண்டாற் போலே, கலந்து பரிமாறுகிறானென்றுதோற்றும்படி சில பொய்களைச் செய்து விஸ்லேஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாயமென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] - நம்மை முடிக்கைக்கு நல்விரகுபார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாசமில்லை. ஸர்வசக்தி யுத்யோகித்த கார்யத்திலே குறைகிடப்பதாய், அதிலே நீங்களும் ஸஹகரிக்கிற்கோளோ! நம்மை முடிக்கப்பார்த்த பார்வை அழகிதாகப்பார்த்தான் என்று, தன்னிலே நோக்கு சொல்லுகிறாளென்றுமாம். (ரு)

ஆறாம் பாட்டு.

நன்கெண்ணிநான்வளர்த்த சிறுகிளிப்பைதலே
யின்குரனீமிழற்றேல் என்னாருயிர்க்காகுத்தன்
னின்செய்யவாயொக்கும்வாயன் கண்ணன்கைகாலினன்
னின்பசுஞ்சாமநிறத்தன் கூட்டுண்டு நீங்கினான்.

ஆ.—(நன்கெண்ணி.) - 'அவன்பிரிந்த வேளையில் அவன்திருநாமங்களையும் சொல்லாமைக்கன்றோ உன்னை நான் வளர்த்தது? ஆனபின்பு, அவன்திருவடிவுபோலே

களும் அநுபவித்தாலொழிய நிற்கவொண்ணாதபடி ஆச்ரயமாயிருக்குமத்தைப்பற்ற. இவற்றை "இந்திரஜாலங்கள்" என்கிறதென்றபடி. வேஷவசநவிசேஷங்கள் - வெளிர்த்தாயாதிகள். பொய்யாக அர்த்தாந்தரம் - இவை இத்யாதி. "இந்திரஜாலம்" என்றால், பொய்யைச் சொல்லுமோவென்ன - இந்திரஜாலமென்றும் பொய்யென்றும் பர்யாயம் என்று. "ஏழுலகும்" என்ற சப்தத்துக்கு ஸ்வாவம் - பிறருடைய இத்யாதி. "நம்" என்ற ப்ரஸித்திக்கு ஸ்வாவம் - ப்ரணயித்வத்தால் இத்யாதி. ப்ரஸித்தனான திருமார்வனென்று ஸப்தார்த்தம். பிராட்டியோட்டைச் சேர்த்தியைக்காட்டி என்னை யகப்படுத்திக்கொண்டவனென்று தாத்பர்யார்த்தம். "திருமார்வன்" என்றதுக்கு வேறுப்பாகவர்த்தம். பிராட்டியோடே இத்யாதி. "இந்திரஜாலங்கள்" என்றுதொடங்கி, "நன்கெண்ணினான்" என்னுமளவும் - பக்ஷிகளைப்பார்த்துச்சொல்லுகிறாளென்றும், தன்னிலே நோக்கு சொல்லுகிறாளென்றும், இத்தை த்வேதாவிவக்ஷித்து முந்தினவகையைக்காட்டுகிறார் - சிலபொய்களை இத்யாதியாலே; இரண்டாம்வகையைக்காட்டுகிறார்-நம்மை முடிக்க இத்யாதி முடிவில் வாக்யத்தாலே. "நன்கு" என்கிறதுக்கு அர்த்தத்வயம் - நன்றாகவென்றும், வ்யதிரேகலக்ஷணையாய், க்ரூரமாகவென்றும். இந்தஇரண்டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - நல்விரகுபார்த்தான் என்றும், அழகிதாகப்பார்த்தான் என்றும். அழகிதாக - க்ரூரமாகவென்றபடி. "அவனும்செய்துபோகிறான், அவன்செய்தகுறைகளை நாங்கள்முடிக்கிறோம்" என்ன-ஸர்வசக்தி இத்யாதி. 'அந்தரம்நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்! இந்திரஜாலங்கள்' என்றுதொடங்கி, நன்கெண்ணினான்-நந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ?' இத்யன்வயம். 'நம்மாவியுண்ணநன்கெண்ணினான்' - நம்முடையப்ராணன்களை க்ரஸித்துக்கொள்ளுகைக்கு நன்றாக நிரூபியாநின்றானென்று உரையில் ஸப்தார்த்தம். (ரு)

யிருக்கும் உன்வடிவைக்காட்டி, அதின்மேலே அவன் திருநாமங்களையுஞ்சொல்லி என்னை நோவுசெய்யாதேகொள்ளாய்!' என்று தன்கிளியைக் குறித்துச்சொல்லுகிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக் குறித்து நான் ஸ்வஸ்தையாயிருந்தபோது எனக்குஇனிதாகத் திருநாமத்தைச் சொல்லக் கேட்கைக்கன்றோ உன்னை நான் வளர்த்தது. எனக்கு அஸாத்யமான தசையில் திருநாமத்தைச் சொல்லாதேகொள்! என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[என்னுயிர்க் காகுத்தனென்று மேலுக்கு] - உன்னுடைய சிவந்தவாயும் கண்ணும் கையும் காலும்போலேயிருக்கிற திருப்பவளந் தொடக்கமான திவ்யாவயவங்களையுடையவனுமாய் உன்னுடைய குளிர்ந்த ஶ்யாமமாயிருந்துள்ள திருநிறத்தையுடையனாய் எனக்கு நல்லுயிராயிருக்கிற காகுத்ஸ்தன் இனி என்னோடே ஸம்ஶ்லேஷித்து என்ப்ரக்ருதியை அறிந்துவைத்தே பிரிந்தான்.

ப.—அநந்தரம், தர்ஶநீயமான அவயவஶோபையையுடைய சக்ரவர்த்தித் திருமகன் கலந்துபிரிந்தான்; அவனுக்கு ஸ்மாரகமான வடிவோடேயிருந்து உன்னுடைய ம்ருதுபாஷணத்தாலே நலியாதேகொள்! என்று தான் வளர்த்ததொரு கிளியைச் சொல்லுகிறாள்.

என் ஆருயிர் - எனக்கு வ்யதிரேகத்திலே தரிக்கவரிதான ப்ராணனாய், காகுத்தன் - "மற்றிலேன் தஞ்சமாகவே" என்னும்படியான சக்ரவர்த்தித்திருமகன்; நின் - உன்னுடைய, செய்ய - சிவந்த, வாய் - வாயை, ஒக்கும் வாயன் - ஒக்கும் வாயையுடையனாய், கண்ணன் - அத்தோடொக்கும் கண்ணையுடையனாய், கைகாலினன் - அத்தோடொக்கும் கைகாலையுடையனாய், நின் - உன்னுடைய, பசும் சாமம் - பசுமை யழியாத ஶ்யாமநிறம்போலேயிருக்கிற, நிறத்தன் - நிறத்தையுடையனாய்க்கொண்டு, கூட்டுண்டு - (என்னோடே) ஸம்ஶ்லேஷித்து, நீங்கினான் - பிரிந்தான்; நன்கு- (எனக்கு ஆபத்துக்கு உதவுதியென்கிற) நன்மையை, எண்ணி - எண்ணி, நான் வளர்த்த - நான் வளர்த்துப்போந்த, சிறு - சிறியவடிவையுடைத்தாய், பைதல் - முக்யமான, கிளியே - கிளியே! இன் - இனிமையாலே என்னைஈடுபடுத்துகிற, குரல் - குரலை, நீ - (அவன் வடிவுக்கு ஸ்மாரகமாய் நலிகிற) நீ, மிழற்றேல் - அர்த்தோக்தி ஸரஸமாகப் பண்ணாதேகொள்:

இ.—ஆறும்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக்குறித்து எனக்கு அஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னை வளர்த்தது? என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[நன்கெண்ணி] - திருநாமம் ஸாத்மிக்கும் தசையையறிந்து சொல்லவும், அஸஹ்யமான தசையில் தவிரவுமன்றோ உன்னைவளர்த்தது? [நான்வளர்த்த] - ஏகபுத்ரைகளைப் போலேயாய்த்து வளர்த்தது. நானொன்றை ஆதரிக்கவமையுமாகாதே அநந்யார்ஹையாகைக்கு! அவனும் கிளியோபாதி ஸவ்யனாயிறேயிருப்பது. [சிறுகிளிப் பைதலே]-சிறுமை - பருவம். பைதல்-வயஸ்ஸுக்குத்தக்க பாசுரமுமின்றிக்கேயிருக்கை. உன் பசற்றனமிறே நலிகைக்கடி. [இன்குரல்]-"கூரியவேல் என்னுமாபோலே. [நீமிழற்றேல்] - நிரம்பாமென்சொல்லாலே என்னை முடியாதேகொள். மாத்ருவதத்திலேயும் ப்ரவ்ருத்திப்பார் உண்டோ? [என்னாருயிர்க் காகுத்தன்] - வ்யதிரேகத்தில் தரிக்க

அரிதாம்படியிறே கிட்டினபோது பரிமாறும்படி. "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாக" என்றிறே இவர் இருப்பது. [நின்செய்யவாயொக்கும்வாயன்] - உன்னுடைய சிவந்தவாய்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமாநத்தைச் சொல்லிச் சேர்த்துவிடுமித்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. உன்னைப்போலே சிவந்தகண்ணையும், கையையும் திருவடிகளையும் உடையவன். [நின்பசுஞ்சாமநிறத்தன்] - உன்னுடைய குளிர்ந்த ஶ்யாமமான நிறத்தையுடையவன். பசுஞ்சாமம் - ஶ்யாமமாய், எரித்திருக்கையன்றிக்கே குளிர்ந்திருக்கை. பச்சைநிறமென்னவுமாம். ஒருடம்பிலே இத்தனைபகை தேடிவைக்கலாமோ! [கூட்டுண்டு நீங்கினான்] - கலந்து என்ப்ரக்ருதியை அறிந்துவைத்துப் பிரிந்தான்: அவன் கூடவிருந்தாலன்றோ உன்படிகள் அநுகூலமாயிருப்பது! தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ! அநுகூலர் நலிவரோ?

ஈடு.—ஆறும் பாட்டு. தன்தசையறியாதே திருநாமத்தைச்சொல்லுகிற கிளிப்பிள்ளையைக்குறித்து, எனக்குஅஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னைவளர்த்தது? என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[நன்கெண்ணி] - திருநாமம் ஸாத்மிக்கும் தசையறிந்து சொல்லவும் அஸஹ்யமானதசையில் தவிரவுமன்றோ உன்னைவளர்த்தது? [நான்வளர்த்த] - ஏகபுத்ரைகளைப்போலே யாயத்துவளர்த்தது; நானென்றைஆதரிக்கவமையுமாகாதே அந்யமாவாகைக்கு! அவனும் கிளியோபாதி லவ்யனுமிறே யிருப்பது. [சிறுகிளிப்பைதலே] - சிறுமை-பருவம். பைதல் - வயஸ்ஸுக்குத்தக்க பாகமுமின்றிக்கேயிருக்கை. உன் பசற்றனமிறே நலிகைக்கடி. [இன்குரல்] - "கூரியவேல்" என்னுமாபோலே. [நீ மிழற்றேல்] - நிரம்பாமென்சொல்லால் என்னை முடியாதேகோள்! மாத்ருவதத்திலேயும் ப்ரவர்த்திப்பாருண்டோ? [என்னாருயிர்க் காகுத்தன்] - வ்யதிரேகத்தில் தரிக்கையரிதாம்படியிறே கிட்டினபோது பரிமாறிற்று. "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாக" என்றிறே இவரிருப்பது; [நின்செய்யவாயொக்கும்வாயன்] - உன்னுடைய வாய்போலேயிருக்கும் வாயையுடையவன். உபமாநத்தைச்சொல்லிச் சேர்த்துவிடுமித்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. [கண்ணன்கைக்காலினன்] -உன்னைப்போலே சிவந்த

௭ம் பாட்டு—நன்கெண்ணி இத்யாதி. "நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே - இன்குரல் நீமிழற்றேல்" என்ற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - தன்தசை இத்யாதி.

வளர்க்கையிலே, நன்றாகவெண்ணி வளர்க்கையாவதெதென்ன, அருளிச்செய்கிறார்-திருநாமம் இத்யாதி. "கிளிப்பைதலே" என்ற ஏகவசநத்தைக்கடாக்ஷித்தாதல், "வளர்த்த"என்ற மாத்ரத்துக்காதல் அர்த்தமருளிச்செய்கிறார் - ஏகபுத்ரைகளை இத்யாதி. இத்தால் ஹார்த்தஸூசகமாதல், "நான் வளர்த்த" என்றதுக்கர்த்தமாதல் - நானென்றை இத்யாதி. நீ யாதரித்தாரில் அப்படி யப்பதாவாருண்டோவென்ன - அவனும் இத்யாதி. சிறுமையும் பைதலும் புநருக்தமன்றோவென்ன - சிறுமை இத்யாதி. "பைதல்" என்றத்தால்ஸூசம் - உன்பசற்றனம் இத்யாதி. பசற்றனம் - பால்யம். விஶ்லேஷதசையில் இதின்குரல், விரஹிணிகளுக்கு வேதநாகமாயிருக்குமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - கூரியவேல் இத்யாதி. நிரம்பாமென்சொல் - அபூர்ணமாய் ம்ருதுவானஅர்த்தோக்திகள். "யான்வளர்த்த" என்றத்தைக்கடாக்ஷித்து, "மிழற்றேல்" என்றதுக்குஹார்த்தபாவம் - மாத்ருவதத்திலேயும் இத்யாதி. கூட்டுண்டுநீங்கினவனை "என்னாருயிர்" என்பானென்? என்ன - வ்யதிரேகத்தில் இத்யாதி. வ்யதிரேகத்தில் - விஶ்லேஷத்தில். பெருமானை இவர்தஞ்சமென்றிருப்பாரோவென்ன - தயரதற்கு இத்யாதி. செய்யவாயனென்றால் போதாதோ? "செய்யவாயொக்கும்" என்பானென்? என்ன - உபமாநத்தை இத்யாதி. உன்னைப்போலேசிவந்த என்றது - உன்வாயைப்போலே சிவந்த

கண்ணையும், கையையும், திருவடிகளையுமுடையவன். [நின் பசுஞ்சாமநிறத்தன்] - உன்னுடையகுளிர்ந்த ஶ்யாமமான நிறத்தையுடையவன். [பசுஞ்சாமம்] - ஶ்யாமமாய் எரித்திருக்கையன்றிக்கே, குளிர்ந்திருக்கை. ஓருடம்பிலே இத்தனை பகைதேடிவைக்கலாமோ? [கூட்டுண்டு நீங்கினான்] - கலந்து என் ப்ரக்ருதியையறிந்துவைத்துப் பிரிந்தான்; அவன் கூடவிருந்தாலன்றோ உன்படிகள்அநுகூலமாயிருப்பது? தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ? அநுகூலரும் நலிவரோ? (௬)

ஏழாம் பாட்டு.

கூட்டுண்டுநீங்கிய கோலத்தாமரைக்கண்செவ்வாய்
வாட்டமிலேன்கருமாணிக்கம் கண்ணன்மாயன்போல்
கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்
காட்டேன்மின்நும்முரு என்னுயிர்க்குஅதுகாலனே.

ஆ.—(கூட்டுண்டு) - என்னோடே கூட்டுண்டுநீங்கி, அதினால் ஒருவாட்டமின்றியே ஆஶ்சர்யமான அழகையுடையவனாய், ஶார்ங்காதிதிவ்யாயுதோபேதனாய், ஹாரகேயூராதி திவ்யபூஷண பூஷிதனாயிருந்த கண்ணனைப்போலேயிருந்த, கோட்டிய வில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்! இந்த வ்யஸநத்தின்மேலே, காட்டேன்மின் நும் உரு; என்னுயிர்க்கு அதுகாலன் என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், அவனுடைய திருநிறம்போலேயிருக்கிற நிறத்தையுடைய மேகமாலையைக் கண்டு பொறுக்கமாட்டாமை' உங்கள் வடிவைக்காட்டி என்னை முடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டென்றுதொடங்கி]-என்னோடேகலந்து பிரிகையாலே அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த திருப்பவளத்தையும் எனக்கு மறக்கவொண்ணாதபடி ஶ்லாக்யமான கறுத்த திருநிறத்தையுமுடையனாய் அத்யாஶ்சர்யமான வடிவழகையுடையனுமாய், என்னைப்பிரிந்து ஒருவாட்டமின்றிக்கேயிருக்கிற க்ருஷ்ணனைப் போலே. [கோட்டியவில் என்று மேனுச்கு] - வளைந்த வில்லோடேகூட மின்னுகின்றுள்ள, மேகஸமூஹங்காள்! உங்கள்வடிவைக் காட்டாதே கொள்ளுங்கோள்; என்செய்யவென்னில்,-என்னுடைய ப்ராணனுக்கு அது ம்ருத்யு. அதுவென்று மேகங்களுடைய வடிவைக் காணமாட்டாமை பராங்முகியாயிருந்து சொல்லுகிறாள்.

ப.—அநந்தரம், தன்னை ஈடுபடுத்தின க்ருஷ்ணன்வடிவுக்குப் போலியான மேகஸமூஹத்தைக்கண்டு, என்னைமுடிக்கைக்கு ஹேதுவான உங்களுடைய ரூபத்தைக் காட்டாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

என்றபடி. பசுமை - குளிர்த்தி. சாமம் என்றால் போராதோ? 'பசு' என்று குளிர்த்தியை விசேஷிப்பானென்? என்ன - ஶ்யாமமாய் இத்யாதி. "நின்செய்யவாயொக்கும்" இத்யாதியால் ஸூசிதம் - ஓருடம்பிலே இத்யாதி. இவைபகையோ, அவனுக்குஸ்மாரகமாய் அநுகூலமாயிராதோவென்ன - அவன் கூட இத்யாதி. "நீமிழற்றேல்" என்றக்ரியாபதத்துக்குச்சேர பாவம்-தனியிருப்பில் இத்யாதி வாக்யத்வயம். 'நன்கெண்ணி - நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே - என்னாருயிர்க்காகுத்தன்' என்று தொடங்கி, 'நீங்கினான் - இன்குரல்-நீமிழற்றேல்' இத்யந்வயம். (௬)

கூட்டுண்டு - என்னோடு ஏகரஸமாம்படி ஸம்ச்லேஷித்து, நீங்கிய - பிரிந்த தசையில், கோலம் - தர்சநீயமான, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண் - கண்ணையும், செம்-சிவந்த, வாய்-அதரத்தையுமுடையனாய், வாட்டமில் என் கருமாணிக்கம் - இடைவிடாமலெனக்கு ஸ்ம்ருதிவிஷயமான நீலரத்நம்போலேயிருக்கிற வடிவையுடையனாய்க்கொண்டு, (எனக்கு), கண்ணன் - (ஸ்வபனான) க்ருஷ்ணனாகிற, மாயன்போல்- ஆச்சர்யசேஷ்டிதனைப்போலேயிருக்கிற, கோட்டிய - வளைக்கப்பட்ட, வில்லொடு-வில்லோடே கூட, மின்னும் - மின்னுகிற, மேகக்குழாங்கள்காள் - மேகஸமூஹங்கள்காள்! என் - என்னுடைய, உயிர்க்கு - ப்ராணனுக்கு, அது காலன் - அது ம்ருத்யுரூபமாயிருக்கும்; நும்உரு - உங்கள்வடிவை, காட்டேன்மின் - காட்டாதேகொள்ளுங்கோள்.

இ.—ஏழாம் பாட்டில், அவன்வடிவுக்குப் போலியான மேகமாலையைக் கண்டு உங்கள் வடிவைக்காட்டி என்னைமுடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டு நீங்கியவென்று தொடங்கி]-"ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவசோபையிருந்தபடி என்னுதல்; இவளோடே கலக்கையாலேவந்த சோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண் செவ்வாய்] - தர்சநீயமான தாமரைபோலேயிருக்கிற கண்ணையும் சிவந்தவாயையும் உடையவனாய். [வாட்டமில் என்கருமாணிக்கம்] - பிரிந்தபின்பும் மறக்கவொண்ணாதபடி ஸ்மாரகமாய் நலிகிற நீலரத்நம்போலேயிருக்கிற நிறத்தையுடையனாய்; கலந்தபோது வடிவிற்பிறந்த செவ்வி பிரிந்தபின்பும் அப்படியேயிருக்கிறபடியைச் சொல்லிற்றாகவுமாம்; இத்தலையை வெறுந்தரையாக்கினபின்பு நிறம் இரட்டித்தபடி. "நைவதம்ஸாந்மசகாந்" என்று அவனிருக்க, அரைக்ஷணம் தாழ்த்தானென்று இவ்வார்த்தையைச் சொல்லுகிறாளிறே! [கண்ணன் மாயன்போல்] - ஆச்சர்யசேஷ்டிதனான க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக் கையைப்பிடித்துப் பரிமாறி ஸ்வபனாயிருந்தபடி. [கோட்டிய இத்யாதி] - வளைத்த வில்லோடே கூடி மின்னாநின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபஸ்தாநீயமிறே மின். [காட்டேன்மின் நும்உரு] - ம்ருத்யுஸத்ருசமான உங்கள் வடிவைக்காட்டாதே கொள்ளுங்கோள். அவ்வடிவைக்கொண்டு அகலவிருந்தவனோடு உங்களோடு வாசியற்றிருந்ததி! "அதுவென்" என்னில் ?-[என்னுயிர்க்கது காலனை]-பண்டே விரஹந்தின்ற என்னுடைய ப்ராணனுக்கு ம்ருத்யு. 'குழாங்கள்காள்' என்றுவைத்து, 'அது' என்கிறது காணமாட்டாமையாலே முகம்மாறிச் சொல்லுகிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன்வடிவுக்குப்போலியான மேகமாலையைக்கண்டு, உங்கள் வடிவைக்காட்டி என்னைமுடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டுஇத்யாதி] - "ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவசோபையிருந்தபடி யென்னுதல்; இவளோட்டைக் கலவியால்வந்த சோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண்செவ்வாய்] - அழகியதாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையும், சிவந்த அதரத்தையுமுடையனாய். [வாட்டம் இத்யாதி] - கலந்த

ஏழாம்பாட்டு.—கூட்டுண்டு இத்யாதி. "கண்ணன்மாயன்போல்கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவன்வடிவுக்கு இத்யாதி.

"கோலத்தாமரைக்கண்செவ்வாய்"—அவயவசோபைசொன்னதுக்கு பாவத்வயம்-ஏகதத்த்வம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. முந்தினபாவம் - வெறுப்பிலே. கீழ்ப்பதத்தில் பாவத்வயாநு

போதைச்சேவ்வி, விரஹத்திலும் தலைச்சாவி வெட்டப்போகிறதில்லைகாணும்; இத்தலையை வெறுந்தறையாக்கினபின்பு இரட்டித்தபடி. [என்கருமாணிக்கம்] - பிரிந்தபின்பும் மறக்கவொண்ணாதபடி நலிகிற நீலரத்நம்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையனாய். "நைவதம்ஸாந்நமஸாகாந்" (நைவதம்ஸாந்நமஸாகாந்) என்று அவனிருக்க, அரைக்ஷணந் தாழ்த்தானேன்னு இவ்வார்த்தையைச் சோல்லுகிறாளிறே! [கண்ணன் மாயன் போல்] - ஆஶ்சர்யபூதனான க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக்கையைப் பிடித்துப் பரிமாறி ஹவ்யனாயிருந்தபடி. [கோட்டியவில்இத்யாதி] - வளைத்தவில்லோடே கூடி மின்னாநின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபம் திருமேனிக்கு ப்ரகாஶகமானாப் போலே இராநின்றது மின். [காட்டேன்மின் நம் உரு] - ம்ருத்யுஸத்ருஶமான உங்கள் வடிவைக் காட்டாதேகோள்ளுங்கோள்! அவ்வடிவைக்கொண்டு அகல இருந்தவனோடு உங்களோடு வாசியில்லையா யிருந்தது! "அதுவேன்?" என்னில், - [என்னுயிர்க்கு அது காலனே]-விரஹம்தின்று பண்டே தற்புஅற்ற என்ப்ராணனுக்கு அது ம்ருத்யுவாகாநின்றது. 'குழாங்கள்காள்காட்டேன்மின்நம்உரு' - என்றுவைத்து 'அது' - என்கிறது, காணமாட்டாமை, முகத்தைமாறவைத்துச் சோல்லுகிறாள். (எ)

எட்டாம் பாட்டு.

உயிர்க்கதுகாலனேன் றுஉம்மையானிரந்தேற்கு நீர்
குயிற்பைதல்காள்!கண்ணன்நாமமேகுழறிக்கோன்றீர்
தயிர்ப்பழஞ்சோற்றோடு பாலடிசிலுந்தந்து சோல்
பயிற்றியநல்வளமூட்டினீர் பண்புடையீரே!

குணமாக வ்யுத்க்ரமமாக ஸாவத்வயம் - கலந்தபோதை இத்யாதிவாக்யத்வயம். தலைச்சாவிவெட்டப் போகிறதில்லை - எழுச்சியறுக்கப்போகிறதில்லை. தலைச்சாவிவெட்டுகையாவது - பயிர் மதாளித்துப் போனால் தனிச்சிலையறுத்துப் போகடுகை. இத்தால் - கலந்தபோதைச் செவ்வியின் ஆதிக்யஞ்சொல்லுகிறது. "என்" என்றதுக்கு ஸாவம் - பிரிந்தபின்பும் இத்யாதி. வாட்டமின்றிக்கேயிருக்கிற, என்னுடைய நீலரத்நம்போன்ற வடிவையுடையவனென்று ஶப்தார்த்தம். "என்-" எனக்கு எப்போதும் ஸ்ம்ருதிவிஷயமான என்றபடி. "நஜீவேயம் க்ஷணமபி" என்றிருக்கிறவனை, விஶ்லேஷத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறானென்பானென்? என்ன - நைவதம்ஸாந் இத்யாதி. ஆற்றாமையாலேஎன்றபடி. "நைவதம்ஸாந்நமஶகாந்நகீடாந்நஸரீஸ்ருபாந் ராகவோபநயேத்காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா" இதி வைதேஹீம்ப்ரதி மாருதிः. ஸாந்-(௩௬-௪௨) ஆஶ்சர்யமேதென்ன-கலந்தபோது இத்யாதி. கோட்டுதல் - வளைத்தல், "மின்" என்றதுக்கு த்ருஷ்டாந்தமேதென்ன - கௌஸ்துபம் இத்யாதி. "கோட்டியவில்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஶார்ங்கமென்று கண்டுகொள்வது. "நம்" என்றதுக்கு ஸாவம் - அவ்வடிவை இத்யாதி, என்னுதல்; ஆஶ்வஸிப்பிக்கவந்த எங்களையிங்ஙன் சொல்லுவானென்? என்ன - அவ்வடிவை இத்யாதி என்னுதல். அதுவேன்னேன்னில் என்றது - உம்முருவைக் காட்டாதேகொள்ளுங்கோ ளென்கிறதுக்கடி என்? என்னில் என்றபடி. தற்புஅற்ற- பலமற்ற. "நம்முரு" என்று ப்ரத்யக்ஷமாகச்சொல்லிவைத்து, "அது" என்கிறதென்? என்ன - குழாங்கள்காள் இத்யாதி. அடைவே அந்வயம்.

(எ)

ஆ —(உயிர்க்கது) - 'கண்ணனுடைய திருநாமங்களைச்சொல்லில் நான் முடிவன்: அவற்றைச் சொல்லவொழியவேணும்' என்று உங்களை நான் இரக்க, பின்னையும் அவற்றையேசொல்லிக்கொன்றிகோள்! நான் உங்களை வளர்த்தப்ரயோஜநம் அழகிதாகப் பெற்றேனென்று, தன் குயில்களை இன்னாதாகிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், சிலகுயில்களைக்குறித்து, வேண்டாவென்று ப்ரார்த்திக்க மேன்மேல் திருநாமத்தைச்சொல்லி நலிந்திகோள்: உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேனிறே என்று இன்னாதாகிறாள்.

[உயிர்க்கென்று தொடங்கி] - 'குயிற்பிள்ளைகாள்! அவனுடைய திருநாமங்களை நீங்கள் சொல்லில் நான்முடிவன்; அவற்றைச் சொல்லவொழியவேணும்' என்று உங்களை இரந்த எனக்கு, க்ருஷ்ணனுடைய திருநாமங்களையே சொல்லி என்னைக் கொன்றிகோள். [தயிர்ப்பழஞ்சோறென்று தொடங்கி] - காலந்தோறும் உங்களுக்கு அபேக்ஷிதமானவற்றையே தேடியிட்டு உங்களைச்சொல்ல அப்யஸிப்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள்! சாலத் தக்காராயிருந்திகோள்!

ப.—அநந்தரம், அவஸாநிகரமான க்ருஷ்ணன்நாமங்களைச்சொல்லவேண்டாவென்கைச்செய்தே சொல்லிமுடித்திகோளே!' என்று, தான்வளர்த்த சிலகுயில்களைச் சொல்லுகிறாள்.

நான் - நான், (இவ்வவஸ்தையில்), அது - அது, உயிர்க்கு - ப்ராணனுக்கு, காலமென்று - ம்ருத்யுரூபங்கிடீகோளென்றுசொல்லி, உம்மை - உங்களைக்குறித்து, இரந்தேற்கு - ப்ரார்த்தித்த எனக்கு, குயிற்பைதல்காள் - குயிற்பிள்ளைகாள்! நீர் - நீங்கள், (உங்கள் பிள்ளைத்தனத்தாலே), கண்ணன்நாமமே - ஐயபனான க்ருஷ்ணனுடைய திருநாமங்களை, குழறி - அநக்ஷரமஶ்ராமாகச்சொல்லி, கொன்றீர் - முடித்துவிட்டிகோளிறே! (உங்கள்பால்யத்துக்கீடாக), தயிர்ப்பழஞ்சோற்றொடு - இளம்போதைக்குத் தயிரையுடைத்தான பழஞ்சோற்றோடே, பாலடிசிலும் - பிற்காலுக்குப்பாலுஞ்சோறுமாக, தந்து - (உங்களுக்குத்)தந்து, சொல் - (அவன் திருநாமங்களாகிற) சொற்களை, பயிற்றிய - அப்யஸிப்பித்த, (அதுக்குப்ரத்யுபகாரமாக), நல்வளம் - நல்லஸம்பத்தை, ஊட்டினீர் - அநுபவிப்பித்தீர்! பண்பு - நல்லசீர்மையை, உடையீர் - உடையீராயிருந்தீர்!

இ.—எட்டாம் பாட்டில், சில குயில்களைக்குறித்து திருநாமஞ் சொல்ல வேண்டாவென்றிரக்க, அத்தையே சொல்லி நலிந்திகோள்! உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேன்! என்கிறாள்.

[உயிர்க்கு] - தோற்புரையேபோமதன்று அது என்கிறாள், தன்வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலமென்று] - நலிகையன்றிக்கே முடிக்குமென்று. [உம்மை]-நீங்களேயிரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்]-உங்களுக்கு ஜநநியாய் மறக்கவொண்ணுத நான். [இரந்தேற்கு] - உங்களை நியமித்தேனோ? என்செல்லாமையாலேசரணம்புகுந்த எனக்கு. [நீர்]-நியாம்யரான நீங்கள், ப்ராணும்தவாதகரானிகோள். [குயிற்பைதல்காள்] - உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திறே! பருவம்நிரம்பாமை ‾ ' தாய்வாசியறியவேண்டாவோ? "நாங்கள்செய்ததென்?" என்ன, [கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்]-தீரா மாற்றாலே நெஞ்சைப் புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன் திருநாமங்களையே அவ்யக்தமாகச்சொல்லி முடித்திகோள், ம்ருதஸஞ்ஜீவநமான ராம

ஞாணங்களை ஒருகால் சொல்லலாகாதோ ? [தயிர் இத்யாதி] - தயிரும் பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களுக்கு உசிதமாகத்தந்து திருநாமங்களைக்கற்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள். [நல்வளமூட்டினீர்] - நல்லஸம்பத்தை புஜிப்பித்திகோள் ! நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப் போந்தேன்; நீங்களும் இவ்விடங்களிலே நலிந்துபோந்திகோள் ! [பண்புடையீரே] - ப்ராப்தியும் ஸஹ்யதையும் கிடக்க, சாலநீர்மையுடையீரா யிருந்திகோள் ! ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயரா யிருந்திகோள் ! பண்பு - குணம்.

ஈடு.—எட்டாம் பாட்டு. சில குயில்களைக்குறித்து, திருநாமஞ்சொல்லவேண்டாவென்று நான் இரக்க, அத்தையேசொல்லி நலிந்திகோள் ; உங்களை வளர்த்த ப்ரயோஜநம்பெற்றேன் என்கிறாள்.

[உயிர்க்குஅது] – தோற்புரையேபோமதன்று அது வென்கிறாள், தன்வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலனென்று] - நலிகையன்றிக்கே முடிக்குமென்று. [உம்மை] - இரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்] - உங்களுக்கு மறுக்கவொண்ணாதபடி ஜநநியான நான். [இரந்தேற்கு] - உங்களை நியமித்தேனோ? என்செல்லாமையாலே சரணம்புகுந்த எனக்கு. [நீர்] - நிபாம்யரான நீங்கள். ஸாரஜ்ஞதயாதுகரானிகோள். [குயிற்பைதல்காள்] - உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திறே! பருவம் நிரம்பாமையிலும் தாய்வாசியறிய வேண்டாவோ? "நாங்கள்செய்ததென்?" என்ன, [கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்] - தீரா மாற்றாலே நெஞ்சைப்புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன் திருநாமங்களையே அவ்யக்தமாகச்சொல்லி முடித்திகோள். * ம்ருதஸஞ்சீவநமான ராமகுணங்களையும் ஒருகால் சொன்னலாகாதோ ! [தயிர்இத்யாதி] - தயிரும்பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களிலேதந்து திருநாமங்களைக்கற்பித்த அதுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள் ! [நல்வளமூட்டினீர்] - நல்லஸம்பத்தை புஜிப்பித்திகோள் ! நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப்போந்தேன் ; நீங்களும் இவ்விடங்களிலேவந்து நலிந்துபோந்திகோள். இக்குயில்களுக்கு அந்நதோஷம்ஃபலித்து

எட்டாம் பாட்டு - உயிர்க்கு இத்யாதி. " உம்மைநானிரந்தேற்கு - கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர் - சொல்பயிற்றியநல்வளமூட்டினீர் " என்ற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலகுயில்களை இத்யாதி. வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேன் என்றது - வெறுப்பு. " உயிர்க்கு " என்றதுக்குவாக்யை - தோற்புரை இத்யாதி. இன்னதென்னாதே, "அது" என்கிறதென்னென்ன - அதுவென்கிறள் இத்யாதி. "அது" என்கிறது - வக்ஷ்யமாணமான கண்ணன் நாமத்தை. " இரந்தேற்கு - கொன்றீர் " என்றகூட்டி ஹார்த்தபாவம் - ஸாரஜ்ஞத இத்யாதி. * ப்ரார்த்தநாமதியிறே ஸாரஜ்ஞதியாவது. "பைதல்காள்" என்றதுக்கு இரண்டுபாவம். அர்த்தமறியாத பருவமென்று முந்தினது; அத்தையருளிச்செய்கிறார் - உங்கள்பால்யம் இத்யாதி. தாய்வாசியறியாத பருவம் என்று பாவாந்தரம் - பருவம்நிரம்பாமையிலும் இத்யாதி. அதாவது - தாய்க்கும் பேய்க்கும் வாசியறிந்து முடித்த க்ருஷ்ணனைப்போலே யிருக்கவேண்டாவோ? என்றபடி. தீராமாற்றலே- மாற்றாலேதீராத ; ப்ரதிபௌஷதத்தாலே தீராதபடி. மாற்று - ப்ரதியௌஷதம். "கண்ணன் நாமமே" என்றஅவதாரணார்த்தம் - ம்ருதஸஞ்சீவநீ இத்யாதி. சொல் - திருநாமங்களை. பயிற்றிய - பயில்வித்ததுக்கு; அப்யஸிப்பித்ததுக்கென்றபடி. இத்தால்பாவம் - நான் காலந்தோறும் இத்யாதி. ரஸோக்தி - இக்குயில்களுக்கு இத்யாதி. அதாவது - பலிபுக்கினுடைய அந்நத்தை புஜிக்குமென்று ரஸோக்தி ; நானிட்ட சோறு விஷமாய்விட்டதேயென்று ஸ்வபாவார்த்தம். "பண்புடையீர்" என்றது - வ்யங்க்யோக்தி. பண்பு - ஸ்வபாவம். நீர்மையுடையீராய் என்று - விபரீதலக்ஷணை. விவரணம் - ரக்ஷகவிஷயத்

விட்டதோ? [பண்புடையீரே] - ப்ராப்தியும் லக்ஷணத்தையும்விடக்க, சால நீர்மையுடையீரா யிருந்திகோள்! ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயராயிருந்திகோள்! (அ)

ஒன்பதாம் பாட்டு.

பண்புடைவண்டொடுதும்பிகாள்!பண்மிழற்றேன்மின்
புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும்நும்இன்குரல்
தண்பெருநீர்த்தடந்தாமரை மலர்ந்தாலொக்கும்
கண்பெருங்கண்ணன்நம்மாவியுண்டெழநண்ணினன்.

ஆ.—(பண்புடை.)-'பண்புடைவண்டொடுதும்பிகாள்! அவனைப்பிரிந்த வ்யஸநத்தின்மேலே அவன் திருநாமங்களைப்பாடுகிற இதுவொன்றும் பொறுக்கலாயிருந்ததில்லை; பண்மிழற்றேல்மின்' என்ன; "அவன் திருநாமங்களைப்பாடுகை உனக்கு அத்யந்த ப்ரியமல்லவோ?" என்று அவைசொல்ல, 'அவன் தன்னழகைக்காட்டி என்னை மாய்த்துப்போனான் காண்!' என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், மதுபானமத்தமாய்க்கொண்டு பாடுகிறன சில வண்டுகளையும் தும்பிகளையும் குறித்து 'உங்களுடைய த்வநிகள் ப்ராணஹரமாயிருந்தன. நீங்கள் பாடாதே கொள்ளுங்கோள்' என்கிறாள்.

[பண்புடையென்று தொடங்கி] - நீர்மையையுடைய வண்டோடுகூடினதும்பிகாள்! பண்மிழற்றாதே கொள்ளுங்கோள். 'பண்புரை' என்று பாடமானபோது, பண்ணை புரளாநின்றுள்ள வண்டோடு கூடினது. [புண்புரையென்று தொடங்கி] - புண்ணின் ‡ விவரத்திலே வேலைக்கொடு குத்தாற்போலேயிராநின்றது, உங்களுடைய இனியத்வநிகள். [தண்பெருநீரென்று மேலுக்கு] - குளிர்ந்த நீர்வெள்ளத்திலே பெரிய தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரிய கண்களையுடைய க்ருஷ்ணன் அவ்வழகைக்காட்டி என்னை மாய்த்துப் பிரிந்துபோனான். குளிர்ந்த நீர்வெள்ளத்தையுடைய தடாகம் தாமரை பூத்தாற்போலே பெரியகண்களையுடைய க்ருஷ்ண னென்றுமாம்.

ப.—அநந்தரம், நிரதிசயபோக்யமான கண்ணழகையுடைய க்ருஷ்ணன் எங்களுடைய ப்ராணபஹாரம் பண்ணிப்போனான்; புண்ணிலேவேலைக்கொடு குத்தினாற்போலே பாடாதே கொள்ளுங்கோள்! என்று சிலவண்டுகளையும் தும்பிகளையுங் குறித்துச் சொல்லுகிறாள்.

பண்புடை - பாட்டின்நீர்மையையுடைத்தான, வண்டொடுதும்பிகாள்-வண்டுகளோடுகூடின தும்பிகாள்! நும் இன் குரல் - உங்களுடைய இனியகுரலானது, புண்புரை - புண்ணின்புரையிலே, வேல்கொடு - வேல்கொண்டு, குத்தாலொக்கும் - குத்தினாற்போலேயிராநின்றது; (நீங்கள்), பண்மிழற்றேன்மின் - பண்ணைமதுரமாகஜல்பியாதேகொள்ளுங்கோள்! தண் - குளிர்ந்து, பெரு - நிரம்பின, நீர் - நீரையுடைய,

தில் இத்யாதி. 'குயிற்பைதல்காள் - உயிர்க்கதுகாலன் என்று தொடங்கி, 'இரக்கேதற்கு, நீர்-கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்; தயிர்ப்பழம்' என்று தொடங்கி, 'பண்புடையீர்' இத்யாதயஃ (அ)

‡ விவரம் - தொளை,

தடம் - தடாகம், தாமரைமலர்ந்தாலொக்கும் - தாமரைமலர்ந்தாற்போலே, பெருங்கண் - கண்ணின்பெருமையையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனானவன், நம் - நம்முடைய, ஆவி - ப்ராணனை, உண்டு - அபஹரித்து, எழநண்ணினன் - அகலப்போனான். ‘பண்புரை’ என்று பாடமானபோது, ஸ்வாபாவிக ஶப்தத்தையுடையவை என்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், மது‌பாநமத்தமாய்க்கொண்டு பாடுகிறன சில வண்டுகளையும் தும்பிகளையுங் குறித்து உங்கள் த்வநிகள் து:ஸ்ஸஹமாயிருந்தன நீங்கள் பாடாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[பண்புடை இத்யாதி] - நீர்மையுடைய வண்டோடேகூடின தும்பிகாள்! பண்மிக்க ஆளத்தியையாதே கொள்ளுங்கோள். ‘பண்புரை’ - என்று பாடமானபோது பண்பான உரையாய் மூரலுகையைச் சொல்லுகிறது ; பண்ணைமூரலாநின்ற வென்றுமாம். [புண் இத்யாதி] - புண்ணின் விவரத்திலே வேலைக்கொண்டு குத்தாப்போலே யிராநின்றது. உங்கள் இனிய த்வநி. கீழில் பதார்த்தங்களெல்லாங்கூடப் புண்படுத்தின, அதிலேநலிகிறன இவை. [தண்பெருநீர் இத்யாதி] - குளிர்ந்து பெரியநீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரியகண்களையுடைய க்ருஷ்ணன். [நம்மாவியுண்டெழ நண்ணினன்] - அவ்வழகைக்காட்டி என்னை முடித்துப் பிரிந்துபோனான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ம்துபாநமத்தமாய்ப்பாடுகிறன சிலவண்டுகளையும் தும்பிகளையுங் குறித்து, உங்கள் த்வநி எனக்கு து:ஸ்ஸஹமாயிருந்தது, நீங்கள்பாடாதே கொள்ளுங்கோள் ! என்கிறாள்.

[பண்புடை வண்டொடுதும்பிகாள்] - நீர்மையுடைய வண்டோடேகூடின தும்பிகாள் ! [பண்மிழற்றேன்மின்] - பண்மிக்க ஆளத்தியையாதேகொள்ளுங்கோள். “பண்புரை” - என்று பாடமானபோது, பண்பானவுரையாய், மூரலுகையைச் சொல்லுகிறது ; பண்ணைமுரலாநின்றவென்றுமாம். [புண்புரைவேல் கொடுகுத்தாலொக்கும் நும் இன்குரல்] - முன்பே மற்றையவற்றின் த்வநியாலே புண்பட்டிறேயிருக்கிறது: அதிலே வேலைக்கொடு குத்தினாற்போலேயிராநின்றது உங்கள் த்வநி. [தண்பெருநீரித்யாதி] - குளிர்ந்த பெரியநீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ அலர்ந்தாற்போலேயாய்

ஒன்பதாம்பாட்டு - பண்புடை இத்யாதி. “வண்டொடுதும்பிகாள் - வேல்கொடுகுத்தாலொக்கும் நும்மின்குரல் - மிழற்றேன்மின்” என்ற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - மதுபாநமத்தமாய் இத்யாதி.

நீர்மையென்று - காநாநுகுணமான ஸ்வபாவமூர்ச்சநங்களையறிகை ; “வண்டு” என்றும், “தும்பி” என்றும் - ப்ருங்கஜாதியில் அவாந்தரபேதம். ஆளத்தி - ஆலாபம். “பண்புரை” என்ற பாடத்திலே, “பண்பு” என்று - அழகாய், “உரை” என்று - ஶப்தமாய், அழகிதான ஶப்தத்தையுடைய வண்டென்றபடி. பண்ணைமுரலாநின்ற என்றத்விதீயார்த்தத்துக்கு, “பண்” என்று - காநமாய், “புரை” என்று - செருக்காய், காநப்ராசுர்யத்தையுடைய வண்டென்று ஶப்தார்த்தம். “புண்புரை”- புண்ணினுடைய, புரையிலே - வாயிலேயென்றபடி. இவளுக்குப் புண்ணேதென்ன - முன்பே இத்யாதி. “பெருங்கண் - கண்ணன்” என்றந்வயிப்பது. நம்மாவியுண்டு - நம்முடைய ப்ராணனை †அபஹரித்து. எழநண்ணினன் - அகலப்போனான் ; பிரிந்துபோனான் என்று ஶப்தார்த்தம். ‘பண்

† ‘அபஹரித்து’ என்று பாடமானால் பன்னீராயிரப்படிக்குச் சேரும்.

அவ்வளவன்றிக்கே பெரிய கண்ணையுடைய க்ருஷ்ணன். [நம்மித்யாதி] - அவ்வடிவழகைக்காட்டி என்னை முடித்துப் பிரிந்துபோனான். (௯)

பத்தாம் பாட்டு.

ஏழநண்ணிநாமும் நம்வானநாடனோடொன்றினோம்
பழனநன்னாரைக்குழாங்கள்காள்பயின்றெனினி
இழைநல்லவாக்கையும் பையவேபுயக்கற்றது
தழைநல்லவின்பந்தலைப்பெய்து எங்குந் தழைக்கவே.

ஆ.—(ஏழநண்ணி.) - அவன்கருத்துப்படியே நானும் முடிந்தேன்; என்னுடைய ஆக்கையுந் தளர்ந்தது; 'பழனநன்னாரைக் குழாங்கள்காள்! பயின்றெனினி?' என்றுசொல்லி, பின்னையும், 'நான்பட்டபாடு ஒருவரும் படாதொழிந்திடுக' என்று சொல்லிக்கொண்டு முடிந்தாளென்கிறது, இப்பாட்டு.

ஒ.—பத்தாம் பாட்டில், 'திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னைமுடிக்க மந்த்ரிக்கிறனவாகக்கொண்டு, 'நான் முடிந்தேன்: இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?' என்கிறாள்.

[ஏழநண்ணியென்று தொடங்கி] - இங்கேயிருந்து அவனை ஜீவிக்கும் ஆசையைத்தவிர்ந்து, அவன்கருத்தின்படியே நானும்முடிந்தேன்; பழனங்களிலேயிருப்பதுஞ்செய்து நீங்கள் கோலினபடியேமுடிக்கவல்ல நாரைக்குழாங்கள்காள்! திரண்டு என், இனி? [இழையென்று தொடங்கி] - விலக்ஷணமான ஶரீரமும் க்ரமேண பசைபற்றது. [தழையென்றுதொடங்கி] - இப்படி தளர்ந்து முடியப்புகுகிறவள், எம்பெருமானுடைய விஶ்லேஷஸம்ருத்தமாக என்கிறாள்.நான்பட்ட து:க்கம் ஒருவரும் படாதொழியவேணும் என்று தன்னுடைய கோலின் மிகுதியாலே சொல்லுகிறாளென்றுமாம். நான்போக லோகமெல்லாமடைய என்னார்த்திகாணாதே பிழைக்குமாகாதே! என்றுமாம்.

ப.—அநந்தரம், 'பரமபதநிலயனோடே நாங்கள் ஒன்றுபட்டுவிட்டோம்; இனி, உங்கள் திரட்சிக்கு ப்ரயோஜநமென்?' என்று, சில நாரைத்திரளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

(அவன் நினைவுக்கீடாக), நாமும் - நாமும், ஏழநண்ணி - போக்கிலேயொருப்பட்டு, நம் வானநாடனோடு - நமக்கு ப்ராப்யமான பரமபதத்திலே யிருக்கிறவனோடே, ஒன்றினோம் - ஏகஸ்வபாவராய்விட்டோம்; பழனம் - நீர்நிலத்திலே, நல் - தர்ஶநீயமாய்க்கொண்டு, நாரைக்குழாங்கள்காள் - (திரண்டிருக்கிற)நாரைக்குழாங்கள்காள்! இனி பயின்றுஎன் - இனிச் செறிந்து விசாரிக்கிறதுக்கு என்னப்ரயோஜநமுண்டு? இழைநல்ல - (அவனுக்கு)ஆபரணம்போலே ஸ்ப்ருஹணீயமான, ஆக்கையும் - ஶரீரமும், பையவே - க்ரமத்திலே, புயக்கற்றது - கைவிட அப்யஸியாநின்றது; (இனி, என்னுடைய வேண்டாமை யாலே), எங்கும் - எல்லாத் தேசமும், தழை - விஸ்தீர்ணமாய், நல்லவின்பம் - நன்றான

புடைவண்டொடு தும்பிகாள்! தண்பெருநீர்' என்று தொடங்கி, 'ஏழநண்ணினான்;' ஆகையாலே, நும்மின்குரல் - புண்புரைவேல்கொடு குத்தாலொக்கும்-பண்மிழற்றேன்மின்' இத்யர்த்தம் (௯)

ஸாவத்தை, தலைப்பெய்து - பெற்று, தழைக்க - ஸம்ருத்தமாகக்கடவது. †புயக்குதல்-புயத்தல்: வாங்குதலாய் விடுகையைச் சொன்னபடி.

இ.—பத்தாம்பாட்டில், திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னை முடிக்க மந்த்ரிக்கிறனவாகக்கொண்டு, 'நான் முடிந்தேன், இனி, நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?' எனக

[எழநண்ணி இத்யாதி] - போக்கிலேயொருப்பட்டு, நாமும் நம்வானநாடனோடொன்றினோம். கடலைக் குளப்படியிலேமடுத்தாற்போலே தன்னையிலக்காக்கி இத்தலையை வெறுந்தறையாக்கித் தன்னைக்கொண்டு அகன்றான். நாமும் அயர்வறுமமரர்கள் அதிபதியோடே ஒருமிடறானோம். நித்யஸூரிகளும் அவனுமாயிருந்து நம்மைமுடிக்க எண்ணினபடியே நாமும் இசைந்தோம். அவன் முடிக்கநினைக்க, நாம் ஜீவிக்கவெண்ணி இடக்கைப்புரி முறுக்குகை தவிர்ந்து நாமும் முடிகையிலே துணிந்தோம். நித்யஸூரிகளும் சந்தாநுவர்த்திகளாகையாலே அவன்கருத்தே கருத்தாயிருப்பர்களிறே. [பழனநன்னாரைக் குழாங்கள்காள்] - நீர்நிலங்களிலே வர்த்திப்பதாய், தொடங்கினகார்யம் முடிக்கவல்ல ஸாமர்த்யத்தையுடைத்தான நாரைக்குழாங்கள்காள்! [பயின்றென்னினி] - திரண்டு ப்ரயோஜநமென்? நான் அவன்கருத்தைப் பின்செல்ல நினைபாதவன்றன்றோ உங்கள்மந்த்ரத்துக்கு ப்ரயோஜநமுள்ளது? முதலிகள் திரள்திரளாகவிருந்து பெருமாளையும் பிராட்டியையுஞ் சேர்க்கைக்கு விரகுபார்த்தாற்போலே, இவை திரள்திரளாக விருந்து தன்னையும் அவனையும் பிரிக்கைக்கு விசாரிக்கிறன என்றிருக்கிறாள். "அவன் வேண்டுவாரைச் சேர்க்கையும் வேண்டாதாரை முடிக்கையும், திர்யக்குக்கள்பணி" என்றிருக்குமிறே, ராமாவதாரத்தில் வாஸனையாலே. [வானநாடன்] - 'நாரைக்குழாங்கள்காள், என்கையாலே, உபயவிபூதியும் வேணுமோ ஓர்அபலையைமுடிக்கைக்கு! [இழைநல்ல வாக்கையும்] - ஆபரணத்தாலே அழகிதான சரீரமென்னுதல். ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிற விலக்ஷணசரீரமென்னுதல். [பையவே புயக்கற்றது] - க்ரமேண பசைபற்றதென்னுதல். க்ரமத்திலே போகத்தொடங்கிற்றென்னுதல். புயத்தலென்று -போதலாதல், புயக்கென்று - ஆகர்ஷகத்வமாதல். [தழைநல்ல இத்யாதி] - ஈஶ்வர விபூதி ஸம்ருத்தமாகவேணும் என்கிறாள். நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலிறே. "தாந்தாம் முடியநினைப்பார் 'நாடுவாழ்க' என்பாரைப்போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார் நிர்வாஹம். "நான்பட்டபாடு நாடுபடாதொழிய வேணும்" என்று எம்பெருமானார். "நான் முடிய என்னார்த்திகாணாதே லோகமடையப் பிழைக்கும்" என்று பட்டர்.

ஈடு.—பத்தாம்பாட்டு. திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னை முடிக்க மந்த்ரிக்கிறனவாகக்கொண்டு, 'நான் முடிந்தேன்: இனி, நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்?' என்கிறாள்.

[எழநண்ணி] - போக்கிலே ஒருப்பட்டு. [நாமும் நம்வானநாடனோடொன்றினோம்] - கடலைக் குளப்படியிலே மடுத்தாற்போலே தன்னை யிலக்காக்கி இத்தலையை வெறுந்தறையாக்கித் தன்னைக்கொண்டகன்றான். நாமும், * அயர்வறுமமரர்க ளதிபதி

பத்தாம்பாட்டு - எழநண்ணி இத்யாதி. "நாமும் நம் வானநாடனோடொன்றினோம், நாரைக குழாங்கள்காள் பயின்றென்னினி" என்ற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - திரள இத்யாதி. மந்த்ரிக்கிறனவாகக்கொண்டு என்றது - "பயின்றென்னினி" என்றதைப்பற்ற. போக்கிலே ஒருப்பட்டு என்றது - திருவடிச்சாருகையிலே யொருப்பட்டென்றபடி. "வானநாடு" என்று விசேஷித்ததுக்கு

---

† புயக்கற்றதுஎன்பதற்குப் பன்னீராயிரப்படியில் அருளியதைப்பார்க்குமிடத்து, புய்க்குதல், புய்த்தல்-வாங்குதலாய், விடுகையைச்சொன்னபடி என்று இருக்கலாமென்று தோன்றுகிறது.

யோடே ஒருமிடமுன்றேம். நித்யஸூரிகளும் அவனோடாகவிருந்து நம்மைமுடிக்கவெண்ணின படியே, நாமும் இசைந்தோம். அவன் முடிக்க நினைக்க, நாம் ஜீவிக்கவெண்ணி, இடக் கைப்புரி முறுக்குகைதவிர்ந்து, நாமும் முடிகையிலே துணிந்தோம். நித்யஸூரிகளும் ஸந்தாநுவர்த்திகளாகையாலே, அவன்கருத்தே கருத்தாயிருப்பர்களிறே. [பழனநன்னாரைக் குழாங்கள்காள்] - நீர்நிலங்களிலே வர்த்திப்பனவாய்த் தொடங்கின காரியம் முடிக்கவல்ல ஸாமர்த்யத்தையுடைத்தான நாரைக்குழாங்கள்காள்! [பயின்றெனினி] - இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென்? நான் அவன்கருத்தைப் பின்செல்லாதவன்றன்றே உங்கள் மந்த்ரத்துக்கு ப்ரயோஜநமுள்ளது? முதலிகள் திரள்திரளாகவிருந்து பெருமாளையும் பிராட்டி யையும் சேர்க்கைக்கு விரகு பார்த்தாற்போலே, இவை திரள்திரளாகவிருந்து தன்னையும் அவனையும் பிரிக்கைக்கு விரகு பார்க்கிறன வென்றிருக்கிறாள். "அவன் வேண்டுவாரைச் சேர்க்கையும், வேண்டாதாரை முடிக்கையும், திர்யக்குக்களுக்குப் பணி" என்றிருக்குறே, ராமாவதாரத்தில் வாஸனையாலே. 'வானநாடன் - நாரைக்குழாங்கள்காள்' - என்கை யாலே, உபயவிபூதியும்வேணுமோ ஓரபலையை முடிக்கைக்கு? [இழைநல்லவாக்கையும்]- ஆபரணத்தாலே அழகிதான ஶரீரமென்னுதல், ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிற விலக்ஷண ஶரீரமென்னுதல். [பையவே புயக்கற்றது] - க்ரமேண பசையற்றதென்னு தல், க்ரமத்திலே போகத்தொடங்கிற்றென்னுதல். புயத்தலென்று - போதலாதல், புயக் கென்று - ஆகர்ஷகமாதல். [தழைநல்லவித்யாதி] - ஈஶ்வரவிபூதி ஸம்ருத்தமாக வேணுமென்கிறாள். "தாந்தாம் முடியநினைப்பார் 'நாடுவாழ்க' என்பாரைப்போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார் நிர்வாஹம்; "நான் பட்ட பாடு நாடு படாதொழிய வேணும்" என்று எம்பெருமானார்; "நான் முடிய என்னார்த்திகண்டு நோவுபடாதே, லோகமடங்கப் பிழைக்குமாகாதே!" என்று பட்டர். (௧௦)

ஸாவம் - நித்யஸூரிகளும் இத்யாதி. "ஒன்றினோம்" என்றதுக்கு ஸாவம் - அவன்முடிக்க இத்யாதி. இடக்கைப்புரி முறுக்குகையாவது - வலக்கைப்புரி முறுக்குகைக்கெதிராக இடக்கைப்புரியாக முறுக்குகை. அதாவது - ப்ராதிகூல்யஞ்செய்கை யென்றபடி. "ரக்ஷிஷ்யஸி ..." என்ற ஶியாளுக்களான நித்யஸூரிகள் ஊமையிலே பொருப்பகொள்களோவென்ன - நித்யஸூரிகளும் இத் யாதி. சந்தாநுவர்த்திகள் என்றவிடத்திலே, "பெருமாளையநுவர்த்தித்து இளையபெருமாள் பிராட்டி யைக் காட்டிலே விட்டுவந்தாரிறே" என்றருளிச்செய்வர். "நல்" என்றதுக்கர்த்தம் - தொடங்கின இத்யாதி. திரண்டு ப்ரயோஜநமென் - மந்த்ரித்து ப்ரயோஜநமென்? என்றபடி. பயிலுகை - திரண்டு மந்த்ரிக்கை. ப்ரயோஜநமில்லையோவென்ன - நான் அவன் கருத்தை இத்யாதி. திரளாகவிருந்து முடிக்க மந்த்ரிக்கிறபடியை த்ருஷ்டாந்த பூர்வகமாகக் காட்டுகிறார் - முதலிகள் இத்யாதி. பக்ஷிகளுக்கு பிரிக்க ப்ரஸக்தியுண்டோவென்ன - அவன் வேண்டுவாரை இத்யாதி. ஆபரணத்தாலே அழகிதான வென்றது - பூர்வாவஸ்தையைப்பற்ற. பையவே க்ரமேண "புயக்கற்றது" என்றதுக்கர்த்தத்வயம். பசுமையற்றதென்னுதல்; புயக்கிலே - போகையிலே, அற்றது - உத்யோகித்த தென்னுதல். இவ்வர்த் தத்வயத்துக்கும் வ்யுத்க்ரமமாக ஶப்தநிர்வாஹம் - புயத்தல் இத்யாதி. பசையாலே, ஆகர்ஷகத்வம் ஸித்தம். "எங்கும் - தழைநல்லவின்பம் தலைப்பெய்து - தழைக்க" என்றதன்வயிப்பது. எங்கும் - விபூதியெங்கும், தழைத்து - நன்றானவின்பத்தைப்பெற்று, தழைக்க - ஸம்ருத்தமாகவேணுமென்ற ஶப்தார்த்தம். தாத்பர்யம் - ஈஶ்வரவிபூதி இத்யாதி. தான்முடிகிறவள் "லோகம் ஸம்ருத்தமாக வேணும்" என்கிறதென்னென்ன, த்ரிவிதபாவம் - தாந்தாம் இத்யாதி. பட்டர் நிர்வாஹம், வெறுப்பிலே. 'பழனநன்னாரைக் குழாங்கள்காள் - எழநண்ணி, நாமும் நம்வானநாடனோடொன்றி னேம்;- பயின்றெனினி? இழை நல்லவாக்கையும பையவேபுயக்கற்றது; எங்கும் தழைநல்லவின் பந் தலைப்பெய்து தழைக்கவே' இத்யந்வயம். (௧௦)

பதினோராம் பாட்டு.

இன்பந்தலைப்பெய்துஎங்குந்தழைத்த பல்லூழிக்குத்
தன்புகழேத்தத் தனக்கருள்செய்தமாயனைத்
தென்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள்இவை
ஒன்பதோடொன்றுக்குமூவுலகும்உருகுமே.

ஆ. — (இன்பம்.) - பின்னையும், "விரோணஸம்ஜ்ஞாம் ப்ரதிஜ்ஞாஹ" என்னும் படியாலே தாமுளராய் மேல் அருளிச்செய்கிறார். அநுபவிதாக்களுக்கு நிரவதிக ஸுகாவஹமாய் லோகமெல்லாம் நிறைந்த தன்புகழை, ஸர்வகாலமும் ஏதேனும் துர்த்தசைகளிலும் ஏத்தும்படி தனக்கருள்செய்த மாயனை, தென்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள் இத்திருவாய்மொழியில் சொன்ன ஆர்த்தியை அநுஸந்திப்பார் என்படுவார்களோ ? என்கிறார்.

ஒ.— நிகமத்தில், இத்திருவாய்மொழியினுடையநீர்மை ஹ்ருதயத்திலே படில் ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார்.

[இன்பமென்று தொடங்கி] - லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிஶயப்ரீதியையுடையராய்க்கொண்டு காலதத்த்வமுள்ளதனையும் தன்புகழை ஏத்தும்படி தனக்கு அருள்செய்த ஆஶ்சர்யபூதனை. [தென்குருகூர்ச்சடகோபன் என்று மேலுக்கு] — ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் "ஒன்பது பாட்டிலுண்டான வ்யஸநம் ஸுவம்" என்னும்படி வ்யஸநம் மிக்கிருக்கிற பத்தாம்பாட்டொன்றையுமுடைய இத்திருவாய்மொழி கேட்டால், விஶேஷஜ்ஞரோடு அவிஶேஷஜ்ஞரோடு வாசியன் றிக்கே ஸ்திதிலராவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃபலமாக, இதுகேட்ட ஸர்வலோகத்தினுடையவும் மநோவிகாரத்தை யருளிச்செய்கிறார்.

இன்பந்தலைப்பெய்து - இன்பத்தை உண்டாக்காநின்றுகொண்டு, எங்கும் தழைத்த-எங்கும் வ்யாப்தமான, தன்புகழ்-தன்னுடைய குணப்ரதையை, பல்லூழிக்கு-காலதத்த்வமுள்ளதனையும், ஏத்த - ஏத்துமபடியாக, தனக்கு - தமக்கு, அருள்செய்த - நிரவதிக க்ருபையைப்பண்ணின, மாயனை - ஆஶ்சர்யபூதனை, தென் - கட்டளைப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் சொல் - ஆழ்வார் அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, இவை ஒன்பதோடொன்றுக்கு - கீழொன்பதுபாட்டில் க்லேஶம்ஒருகூறும், (பத்தாம்பாட்டில் க்லேஶம்ஒரு கூறுமான இவற்றுக்கு); மூவுலகும் - த்ரைலோக்யமும், உருகும் - ப்ரேமத்தாலே த்ரவியாநிற்கும். இது கலித்துறை.

இ — நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் பாசுரம் ஹ்ருதயத்திலேபடில், ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார்.

[இன்பமித்யாதி] - எங்கும் தழைத்த இன்பம். [தலைப்பெய்து] - லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிஶயப்ரீதியையுடையராய்க்கொண்டு. [பல்லூழிக்குத்தன் புகழேத்த] - காலமுள்ளதனையும் தன் குணங்களை ஏத்தும்படி. [தனக்கருள்செய்த]-ஸம்

ஸாரிகளிலே அந்யதமரானவர்க்கு மயர்வறமதிநலமருளிச்செய்தபடி. [மாயனை] - ஸம்ஸாரிகள் நடுவே என்னை ஒருவனையும் விசேஷகடாக்ஷம்பண்ணின ஆச்சர்யபூதனை. அங்ஙனன்றிக்கே, [இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த-தன்புகழை பல்லூழிக்கு தனக்கருள்செய்த மாயனை]-அநுபவிப்பார்க்கு நிரதிசய ஆநந்தத்தை விளைப்பதாய் எங்குமொக்கப்பரம்பின தன்கல்யாணகுணங்களை காலதத்த்வமுள்ளதனையும் நான் அநுபவிக்கும்படிபண்ணினான் என்றுமாம். இவர், ''குணஜ்ஞாநத்தாலே தரித்தார்'' என்கிறது, 'தன்புகழேத்தத் தனக்கருள்செய்த' என்றத்தைக் கொண்டிறே. நித்யஸூரிகளநுபவத்தையும், தமக்கு அவர்களோபாதி ப்ராப்தியையும் அநுஸந்தித்து நோவுபட்டார்; என்றுமொக்க இழந்திருக்கிற ஸம்ஸாரிகள் படியைப் பார்த்தவாறே அவர்களில் ஆவ்விருப்புத்தானே பேறாய்த்தோற்றிற்று. உபயரிலும் வ்யாவ்ருத்தியுண்டிறே இவர்க்கு. சடகோபன்சொல் என்றபரோக்ஷ நிர்த்தேசமாகையாலே தனக்கருள்செய்த என்னலாயிற்று; ''வால்மீகிர்பகவாந்ருஷி:'' என்னுமாபோலே. [ஒன்பதோடொன்றுக்கும்]-''கீழொன்பது பாட்டிலும் உண்டானவ்யஸநம்ஸர்வம்'' என்னும்படி வ்யஸநம்மிக்க பத்தாம்பாட்டையுடைய இவை. ஸ்மாரகபதார்த்தங்களாலே ஜீவநத்தில் நசைபோடே நோவுபட்ட ஒன்பதுபாட்டோடே, ஜீவநத்தில் நசையற்ற ஒரு பாட்டுக்கும், விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற ஸர்வ்விலராவர். கீழே, ''நம்மூர்த்தயர் வநிகேட்டு நாட்டுக்கு நோவுபடவேண்டா'' என்றார்; பின்னையும் நாட்டுக்கு மையாயில்பமே மோக்ஷித்துவிட்டது.

ஈடு.—நிகமத்தில், இத் திருவாய்மொழியிற் பாசுரம் ஹ்ருதயத்திலேபடில், ஆரேனுமாகிலும் தரியார் என்கிறார்.

[இன்பந்தலைப்பெய்து எங்குந்தழைத்த]-எங்குந்தழைத்த இன்பந்தலைப்பெய்து லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிசயப்ரீதியையுடையராய்க்கொண்டு. [பல்லூழிக்குத் தன்புகழேத்த] - காலமுள்ளதனையும் குணங்களை ஏத்தும்படி. [தனக்கருள்செய்த] - ஸம்ஸாரிகளிலே அந்யதமரானவர்க்கு, * மயர்வறமதிநலமருளிச்செய்தபடி. [மாயனை] - ஸம்ஸாரிகள் நடுவே என்னையொருவனையும் விசேஷகடாக்ஷம்பண்ணின ஆச்சர்யபூதனை. அங்ஙனன்றிக்கே, [இன்பந்தலைப்பெய்தெங்குந்தழைத்த – தன்புகழேத்த - பல்லூழிக்கு - தனக்கருள்செய்தமாயனை] - அநுபவிப்பார்க்கு நிரதிசயாநந்தத்தை விளைப்பதாய் எங்குமொக்கப் பரம்பின தன்கல்யாணகுணங்களை, காலதத்த்வமுள்ளதனையும் நான்அநுபவிக்கும்படி பண்ணினனென்றுமாம். இவர் ''குணஜ்ஞாநத்தாலே தரித்தார்'' என்கிறது, ''தன்புகழேத்தத் தனக்கருள்செய்த'' என்ற இத்தைக்கொண்டிறே. நித்யஸூரி

நிகமம் - இன்பம் இத்யாதி. ''ஒன்பதோடொன்றுக்கும் மூவுலகும் உருகும்'' என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இத் திருவாய்மொழியில் இத்யாதி. ஆரேனுமாகிலும் என்றது - ''உலகும்'' என்றத்தைப்பற்ற.

''இன்பந்தலைப்பெய்தெங்குந்தழைத்த'' என்றது - ஆழ்வாருக்கு விசேஷணமானபோது; ''எங்குந்தழைத்த - இன்பந்தலைப்பெய்து'' என்றந்வயம்; புகழுக்கு விசேஷணமானபோது, இருந்தபடியே. அந்வயாநுகுணமாகவர்த்தம் - லோகமெல்லாம் இத்யாதி. யோஜநாந்தரத்துக்கு அர்த்தம்- அநுபவிப்பார்க்கு இத்யாதி. ப்ரவேசத்திலே ''குணஜ்ஞாநத்தாலேதரித்தார்'' என்றதுக்கு நியாமகம் காட்டுகிறார் - இவர் குணஜ்ஞாநத்தாலே இத்யாதி. ''தன்புகழேத்த'' என்கைக்கு, அவனோடே ஸம்ஶ்லேஷித்து குணாநுபவம் பண்ணிறோமென்ன - நித்யஸூரிகள் இத்யாதி. இவ்விடத்திலே,

கள்அநு஭வத்தையும், தமக்கு அவர்களோடொத்த ப்ராப்தியையும் அநுஸந்தித்து நோவுபட்டார்; என்றுமொக்க இழந்திருக்கிற ஸம்ஸாரிகள்படியைப் பார்த்தவாறே, இந்நோவு தானே பேருய்த்தோற்றிற்று. ''சடகோடன்சோல்'' என்று பரோக்ஷநிர்த்தேஶத்தாலே, தனக்கருள்செய்த என்னலாமிறே; ''வால்மீகிர்பகவாந்ருஷி:'' (வால்மீகிர்ப் பகவாந்ருஷி:) என்னுமாபோலே. [ஒன்பதோடொன்றுக்கும்] - ''கீழொன்பதுபாட்டிலும் உண்டான வ்யஸநம் ஸர்வம்'' என்னும்படி வ்யஸநம் மிக்க பத்தாம்பாட்டையுடைய இவை. ஸ்மாரகபதார்த்தங்களாலே ஜீவநத்தில் நசையோடே நோவுபட்ட ஒன்பது பாட்டோடே, ஜீவநத்தில் நசையற்ற ஒருபாட்டுக்கும். [மூவுலகும்உருகுமே] - ஆரேனுமாகிலும் தரியார். என்னுடைய ஆர்த்தநாதத்தாலே நாடுஅழியவேண்டாவாகாதே என்றவர்க்கு, பின்னையும் நாட்டார்க்கு ஸௌஶீல்யமே பலித்துவிட்டது. 'எங்குந்தழைத்த- இன் பந்தலைப்பெய்து - பல்லூழிக்குத் தன்புகழேத்த - தென்குருகூர்ச்சடகோபன் - தனக்கருள் செய்த மாயனை-சொல்லாயிரத்துள் இவையொன்பதோ டொன்றுக்கும் மூவுலகு முருகும்.'

''உவாஸ்ய வாபிவஸஶ்ருஷு ஸ்யைவஷிஶ்ருதி । கயோகயோரஶ்லோகஸ்யஹிஸோ நோவஜாயதே''(ராம பால-௨-௧). என்றத்தை அருளிச்செய்வர். எனக்கருள்செய்தவென்னாதே, ''தனக்கு'' என்கிறதென்? என்ன - சடகோபன் இத்யாதி. பரோக்ஷநிர்த்தேஶம் பண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம் - வால்மீகிர் இத்யாதி. பத்தென்னாதே, ''ஒன்பதொடொன்று'' என்றதுக்குபாவம்-கீழொன்பது இத்யாதி. ஏதத்விவரணம் - ஸ்மாரக இத்யாதி. ''தழைநல்ல'' இத்யாதியில் பட்டர் நிர்வாஹத்துக்குச்சேர வ்யாக்யாதாவின் ஈடுபாடு - என்னுடைய இத்யாதி. (௧௧)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— ஶ்லோகாநந்தரவாக்ஷேஷுத்ருஶ்யா தேஜாஷ்ட்யூஷ்டாக்ஷஸ்மரணமோதவாயுஜாதம் । ஶ்ரீஸஹஹாநிகதயாவஸித ஸ்வஸஞ்ஜாதா:வேநதஸ்வஹதஜாணவஸ்வஜ்ஜஹோஶ: ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ப்ராணஸ்வா தத்ஹ்ருதி ஸ்வா தவிவஸாவிஷிதகேஶந, ஸவ்யஸவ்யோமா ஶுக்தீவக்ஷஸ்வஹாவா ஶ்ரூவாகாஶ ஜநநா ந்நீலநதாஹிதேஶ்தத்ர்யா । க்ருஷ்ணஸ்வா தவைஜக்ஷ்ய தரவேஷிதயா வேஶ்வாரம் ஸம்ப்ரீதாநாதேஶ்வேயீஶாம்ஶ்வாஸி: ஸ்வமாணமஸீஸம்ஶ்வாரகம்ஸவஜதஶ்ரீ ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

இன்னுயிர்மால்தோற்றினது இங்கென்னெஞ்சிலென்று கண்ணால்
அன்றவனைக்காணவெண்ணி ஆண்பெண்ணாய் - பின்னை அவன்
தன்னைநினைவிப்பவற்றால் தான்தளர்ந்தமாறனருள்
உன்னுமவர்க்குஉள்ளமுருகும்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஆறாந்திருவாய்மொழி—உருதுமால் ப்ரவேசங்கள்.

ஆ.—(உருதுமால்.) - இப்படி எம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தாலே முடிந்து பின்னையும் நெடும்போதுகூட லப்தஸஂஜ்ஞராயிருந்த ஆழ்வார்

ஏ.—ஆறாந் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியில் பிறந்த வ்யஸநத்தின் மிகுதியாலே முடிகல் எம்பெருமானைப்பெற்றுதரிக்க லான ஆழ்வாரை, இப்போது ஒருஸம்ச்லேஷமின்றிக்கேயிருக்கச்செய்தே இவருடைய ஜீவநாத்ருஷ்டம், இருத்தும் வியந்தில் எம்பெருமான் தம்மோடே தலைதடுமாறாகப் பரிமாறின பரிமாற்றத்தை ஸ்மரிப்பிக்க, அத்தாலே உணர்ந்து, இன்னுயிர்ச்சேவலில் விஶ்லேஷத்தாலே ஸாத்விகோதந்தவங்களுக்குப் பாத்தமில்லாதபடியான தஶையிலே,—பிராட்டி "ஸமா த்வாதஶ தத்ராஹம்" என்று ராமகுணஸ்மரணம்பண்ணி அதிப்ரீதையானாற்போலே ஸம்ச்லேஷதஶையில் அவனுடைய வ்யாமோஹத்தை மிகவும் ஸ்மரித்து,ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார்.

ப.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் இவர் ஸ்மாரகதர்ஶநத்தாலே அத்யந்தம் அவஸந்நரானவளவிலே, ஆஶ்வாஸகரமாம்படி ஈஶ்வரன் தன்குணங்களை ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய ஆஶ்சர்யப்ரகாரத்தையும், அநுபதிதஸௌந்தர்யத்தையும், ஔதார்ய ஸ்வபாவத்தையும், அதிஶயிதஶீலத்தையும், ஆஶ்ரிதஸுலபதையையும், அத்யந்தவ்யாமோஹத்தையும், வ்யாமோஹபர்யவஸாநத்தையும், அபேக்ஷா நிரபேக்ஷமான நித்யாதாரத்தையும், அநுபாவ்யஸௌந்தர்யத்தையும், அதிநிவேஶமைக்யத்தையும், அநுஸந்தித்து, இந்தகுணங்களினுடைய வைலக்ஷண்யாநுபவத்தால் பிறந்த ப்ரீத்யதிஶயத்தாலே, மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

இ—ஆறாந்திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியில் • நாமும் நம் வானநாடனோடொன்றினோம் என்று விரஹத்தாற்றாட்டாமையாலே முடிகையிலே வ்யவஸிதராய் நின்றாராயிருந்தது; இத்திருவாய்மொழியில், அவன் குணங்களை அநுஸந்தித்து அத்தால்வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஹ்ருஷ்டராகிறார் பிராட்டி. குணாநுஸந்தானம் பண்ணுகைக்கு அவன் முகங்காட்டவேணும்; இப்போது இங்கொரு ஸம்ச்லேஷமில்லை; ஸம்ச்லேஷமில்லாமையேயன்றிக்கே குணாநுஸந்தானம் பண்ணுகைக்கும் ஆஶ்ரயமில்லாதபடியான வ்யஸநம் செல்லுகிறது. ஆனபின்பு, இது ஸங்கதமானபடியென்னென்னில், பெறில்,தரித்தல் அல்லாதபோது முடிதல்செய்யுமளவான இவர் தஶையைப் பார்த்து இவர் ஜீவநாத்ருஷ்டத்தாலே, இருத்தும் வியந்தில் தம்மோடே தலைதடுமாறாகப் பரிமாறின பரிமாற்றத்தை அவன் ஸ்மரிப்பிக்க, அத்தாலே யுணர்ந்து பிராட்டி "ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ ॥" என்று ராமகுணத்தை ஸ்மரித்து அதிப்ரீதையானாற்போலே, ஸம்ச்லேஷதஶையில் தாழநின்று பரிமாறின அவனுடைய வ்யாமோஹாதிஶயத்தை தத்காலத்திற்போலே விஶதமாக ஸ்மரித்து அத்தால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அத்யந்த ஹ்ருஷ்டராகிறார். ஆளவந்தார் 'அப்ரீதி'ஹர்ஷ மோஹாநுஸந்தாநம் என்றருளிச்செய்வர்.

ஈடு.—"எழுநண்ணிநாமும் நம் வானநாடனோ டொன்றினோம்" என்று தம் ஜீவநத்தில் நசையற்றுச் சொன்னவார்த்தையிறே - கீழ் ; இவ்வளவில் வந்து முகங்காட்டி இவரைப் பெறுதல், இல்லையாகில் இழத்தல் செய்யவேண்டும்படியான ஊமையாய்த்து. இவ்வவஸ்த்தையிலே, திருவடிசென்று கிட்டினபோது, முன்பு நெடுநாள்பட்ட வ்யஸநமுங் கிடக்கச்செய்தே, பெருமாளும் வாராதிருக்க, "ஸமாத்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ" (ஸமாத்வாதஶ தத்ராஹம் ராகவஸ்யநிவேஶநே | புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ) என்கிறபடியே, பன்னிரண்டாண்டு பெருமாளுந் தானும் ஒருபடிப்படக் கலந்த கலவி வந்து பிராட்டிக்கு ஸ்ம்ருதிவிஷயமானாற்போலே, * இருத்தும்வியந்தில் தலைதடுமாறாகப்பிறந்த கலவிவந்து ஸ்ம்ருதிவிஷயமாய்த்து. அதுக்கடி, இவர் அதிகரித்த கைங்கர்யத்தை முடியச்செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான இவருடைய ஜீவநாத்ருஷ்டமாவது ; அன்றிக்கே, இவர் சொல்லக்கேட்கையிலே பாரித்துக்கொண்டிருக்கிற ஈஶ்வரனுடைய பாக்யமாவது; ஸம்வாதஸப்ரீதி உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட இவர் சொல்லுக்கேட்டு ஸம்வாத விஷயத்திலே ருசிபிறக்கவிருக்கிற சேதநருடைய பாக்யமாவது. இப்படி, * இருத்தும் வியந்தில் ஸம்ஶ்லேஷம் வாரா ஸ்ம்ருதிவிஷயமாய்த்து. "ஸமாத்வாதஶ" (ஸமாத்வாதஶ) - பிள்ளாய் ! இன்று இங்ஙனே வெறுந்தறையாயிருக்கிற நான், எங்கள் மாமனார் மாளிகையிலே பன்னிரண்டாண்டு ஒருபடிப்பட ராமகுணங்களை விளைநீரடைத்துக்கொண்டேன்காண் ! என்றாளிறே. இங்கு, * இருத்தும் வியந்து தன்னில் "மூவலகுந்தன் னெறியா வயிற்றிற்கொண்டு - சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தான்" என்று புறம்பெங்கும் முறையிலே பரிமாறினவன், இவரொருவரளவிலுமிறே முறைகேடப் பரிமாறிற்று ; அப்படிப்பட்ட பரிமாற்றந்தான், இப்போது ஒரு

---

*உருகுமால் ப்ரவேஶ; வ்ருத்தாநுவாதபூர்வகமாக ஸங்கதி - எழுநண்ணி இத்யாதி. விவரணம் - இவ்வளவில் இத்யாதி. இத்தால் - கீழ்இவர்க்கோடின வ்யஸநம் வாசாமகோசரமென்றபடி. இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - இவ்வவஸ்த்தையிலே இத்யாதி. பிராட்டிக்கு, திருவடியைக்காண்கையாலே ஸ்ம்ருதிகூடும், இவர்க்குக்கூடும்படியென் ? என்னில்; "ஸத்ருஶாத்ருஷ்டசிந்தாத்யா: ஸ்ம்ருதிபீஜஸ்ய போதகா:" என்கிற ஸ்ம்ருதிஹேதுக்களில், இவ்விடத்தில் அத்ருஷ்டம் ஸ்ம்ருதிஹேதுவென்று விவக்ஷித்து, இத்தை த்ரிவிதமாகக்காட்டுகிறார் - அதுக்கடி இத்யாதிவாக்யத்ரயத்தாலே. ப்ரஸ்துதஶ்லோக வ்யாக்யாநம் - ஸமாத்வாதஶ இத்யாதி. ஒருபடிப்பட என்றது - "காலாத்வநோரத்யந்தஸம்யோகே" என்கிறஸூத்ரத்தில், * அத்யந்தஸம்யோகத்தைப்பற்றத்விதீயை இந்தஸூத்ரத்துக்கு உதாஹரணம்-"மாஸமதீதே," "க்ரோஶம் குடிலா நதீ" என்று. மாஸமதீதே என்றால் - ஒருமாஸமிடைவிடாதே அத்யயநம்பண்ணினான்என்றும், க்ரோஶம் குடிலாநதீ என்றால் - இரண்டரைநாழிகைதூரம் இடைவிடாதே வக்ரையாயிருக்கிறது நதியென்றுமிறேயர்த்தம். * வீற்றிருந்தேழுலகு முதலானவற்றிற் கலவியிருக்க, * இருத்தும் வியந்தில் அநுபவம் ஸ்ம்ருதிவிஷயமாய்த்தென்னுமதுக்கு நியாமகமேதென்ன ; உபயமும் ஏகார்த்தமாகையாலேயென்கிறார் - இந்து இருத்தும்வியந்து இத்யாதி. முறைகேடப்பரிமாறுகையாவது - இவரை ஶேஷியாகவைத்து, தான் ஶேஷபூதனாகப் பரிமாறுகை. "பரிமாறிற்று என்றார் அங்கு, அப்படியே. இங்கும் 'அறிகிலேன்றன்னுள்ளனைத்துலகும்நிற்க' என்று தொடங்கி 'சிறியவென்னுருயிருண்ட' என்றார், முறைகெடப்பரிமாறினபடி தன்னையே*

ஸ்ம்ருதிமாத்ரமாயிருக்கையன்றிக்கே, தசாந்தரபத்திப்ரந்தத : அப்படியே. மேன்மை யுடையவன், அம்மேன்மையுங்கிடக்கச் செய்தே தாழநின்று பரிமாறின குணத்தையும் வடிவழகையுஞ்சொல்லி, அதுதான் "இப்போதையபூபவமே" என்னும்படி பரிரும்ப தோரு புத்திபிறந்து, அவனுடைய சீலகுணாநுஸந்தாநத்தாலே சிதிலராகிறார். "கடலைத் தரைகாண்பாரைப்போலே, * இருத்தும்வியந்தில் அநுபவத்தை இத்தலே கொண்டுவந்து சேர்ப்பதே நம்முதலிகள்!" என்று வித்தராயருளிச்செய்வர். அப்ராப்தியுங் கிடக்கச் செய்தே, சீலகுணாநுஸந்தாநத்தாலே சிதிலராகிறாரித்து. "அப்ரதிமப்ப குணாநுஸந்தாநம்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யுஞ்சந்தை இதுக்கு. "[illegible]" (பஹவோந்ருப) - சக்ரவர்த்தி, "பெருமாளைத் திருவபிஷேகம் பண்ணவேணும்" என்று கோலி, "நாம் அறுபதினாயிரமாண்டுகூட ஒருதலைமிதிக்க ஒருதலைகிளா இப்படி வருந்தி யடிப்படுத்தின ராஜ்யத்தை இன்று சிறியவன்தலையில்வைத்தால் இதுபோறுக்குமோ?" என்றுபார்த்து, "இதுதன்னை நாட்டோடே சேரவிசாரித்துச்செய்வோம்" என்று, ராஜ லோகத்தோடே கூட்டினவிடத்து, "[illegible]" (ஜநௌகோத்குஷ்டஸந்நாதோ விமாநம்கம்பயந்நிவ) என்று - சக்ரவர்த்தி மாளிகையழித்துச் செய்யவேண்டும்படி ஆர்த்துக்கொள்ள. அத்தைக்கேட்டு, "நாம் நினைத்த கார்யம் வாய்க்கப் போய்த்து; ஆனாலும் இவர்கள் நினைவுதன்னை இவர்கள் வாக்காலே சொல்லக்கேட்டா லாகாதோ?" என்னுமத்தைப்பற்ற, "வாரீர்கோள்! '[illegible]' (கதம்நுமயிதர்மேண) என்று - அறுபதினாயிரமாண்டு சிறியத்தைப் பேரியது நலியாதபடியாகப் பூமிப்பரப்படைய நோக்கிக்கொண்டு, '[illegible]' (பாண்டரஸ்யாதபத்ரஸ்யச் சாயாயாம்ஜரிதம்மயா) என்று "முத்தின்குடைநிழலிலேதிரிந்து எனக்கென்ன ஒருஸாகம்கோலாதே உங்களுடைய

சொன்னர்; ஆகையாலே இரண்டும் ஏகார்த்தமாகையாலே, * இருத்தும்வியந்தில் அநுபவம் ஸ்ம்ருதிவிஷயமாய்த்து" என்று அத்யாஹார்யம். "நினைதொறும்" என்றத்தைப்பற்ற - ஸ்ம்ருதி விஷயமாய்த்து என்றது- பரித்தபோது கண்டவத்தை நினைத்தாற்போலே, * இருத்தும்வியந்தில் அநுபவம் ஸ்ம்ருதிவிஷயமானால் இப்போது ஸாக்ஷாத்கரிக்கும்படியோவென்ன - அப்படிப்பட்ட இத்யாதி. இவ்விடத்திலே - "[illegible]" இத்யாதியையருளிச்செய்வர். இத்வாக்யவிவரணம் - அப்படியே,மேன்மை இத்யாதி. அம்மேன்மையும் என்றது - * இருத்தும் வியந்தில் மேன்மையுமென்றபடி. தாழநின்று பரிமாறின் குணத்தையுமென்றது - "ஏறாளச்சாட் செய்யும்சீர்மை" என்றத்தைப்பற்ற. "கார்முகில்வண்ணன்" இத்யாதியைநினைத்து - வடிவழ கையும் என்றது. * "இருத்தும்வியந்திற் கலவி ஸ்ம்ருதிவிஷயமாய்த்து" என்னுமதுக்கு ஆப்த ஸம்வாதம் - கடலை இத்யாதி. 'அருளிச்செய்வர்' - நஞ்சீயரென்றபடி. திருவாய்மொழி யிலே தன்னைக்காணவேணுமென்று வ்யஸநப்பட்டவர்க்கு, இங்கே தன்னை யநுபவிப்பித்தானோ? என்ன - அப்ராப்தியும் இத்யாதி. அப்ராப்தியும் என்றது - ப்ரத்யக்ஷ ஸமாநாகார மாநஸாநுபவ மன்றிக்கே ஸ்ம்ருதிமாத்ரத்தால் வந்த வ்யஸநமும் கிடக்கச்செய்தேயென்றபடி. யத்வா, இவ்வாக் யம் - கீழே "குணஜ்ஞாநத்தாலே தரித்தார்" என்றதுக்குச்சேர ஸங்கத்யந்தரமாய், * இன்னு யிர்ச்சேவலில் வ்யஸநமுங் கிடக்கச்செய்தே யென்னுதல். இதுக்குஸம்வாதம் - அப்ரதிமப்ப இத்யாதி. 'இதுக்கு - ஆளவந்தாரருளிச்செய்யும் சந்தை - அப்ரதிமப்பகுணாநுசந்தாநம்' என் றந்வயிப்பது. இதுக்கு - இத்திருவாய்மொழிக்கு. குணங்களநுபவித்ததுமோவென்ன. ப்ரமாணம் - பஹவ இத்யாதி. இதுக்கவதாரிகை - சக்ரவர்த்தி இத்யாதி. "[illegible]" என்றதுக்கர்த்தம் - சிறியத்தை இத்யாதி. முத்துக்களால் வந்த பாண்டரத்வமென்று

ரக்ஷணதர்மத்தையே செய்துகொண்டுபோந்தேன்: நான்ஒருவார்த்தைகேட்டவிடத்து‘இப்போது நீயிருக்கச்செய்தேவேணுமோ ? க்ரமத்திலேசெய்துகொள்ளுகிறோம்’ என்னுதல், அன்றியே ‘கார்யமாகில் செய்யலாகாதோ?’ என்று வார்த்தைசொல்லுகையன்றிக்கே, படுகுலையடித்தவனைத் தப்ப ஒருதார்மிகன்கீழே யொதுங்க நினைப்பாரைப்போலே, என்னை விட்டு என்மகனையமையு மென்று நீங்கள் விரும்புகைக்கு நான் உங்களுக்குப்பண்ணின அபராதமேன் ?’’ என்ன ; ‘‘நீ எங்களுக்குப் பண்ணிற்று ஓர்அபராதமில்லை ; உன்மகனுடைய குணாபராதங்கள் இதுக்கடி: நீ நோக்கிக்கொண்டு போந்தபடிகளில் ஒரு குறையில்லை ; குணவானாயிருப்பானொரு புத்ரனைப்பெற்று நாட்டைப்படுகுலையடித்தாய்காண் ! ‘‘**பஹவ:**’’ (பஹவ:) - உன்னளவல்லகாண் ரக்ஷணதர்மத்தில் அவர்க்கு உண்டான பரிப்பு. ‘‘**தாதூநாமிவ**’’ (தாதூநாமிவ) - நாட்டிலே சிலரை குணஹீநரென்று நிந்தித்தும், சிலரை குணவான்களென்று கொண்டாடுகிறதும், ‘‘இன்ன ஆகரத்திற் போன்’’ என்று விலைபெறுமாபோலே, ‘‘இவ்வாஶ்ரயத்திலே கிடக்கிறகுணம்’’ என்றுய்த்து புறம்பு விலைபோவது. ‘‘**ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்ய குணவத்தயா**’’ (ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்யகுணவத்தயா.)

முதற் பாட்டு.

உருகுமால்நெஞ்சம்உயிரின்பரமன்றிப்
பெருகுமால்வேட்கையும் என்செய்கேன்தொண்டனேன்
தெருவெல்லாங்காவிகமழ் திருக்காட்கரை
மருவியமாயன் தன் மாயம் நினைதோறே.

ஆ.—திருக்காட்கரைமருவியமாயன் பண்டு என்னோடு கலந்து பரிமாறின பரிமாற்றங்களை நினைக்க நினைக்க ப்ரீதப்ரீதியாபத்தினாலே என் நெஞ்சு அழிஞ்சு நீராய்

*திருவுள்ளம்பற்றி - முத்தின்துடை என்றது. படுகுலையடித்தவனை - குலையிலே பட்டுவிழும்படியடித்தவனை ; ஹிம்ஸகனை என்றபடி. ‘‘**பஹவ:**’’ என்ற பஹுத்வம்ஆபேக்ஷிகமாகையாலே - உன்னளவல்லகாண் என்கிறார். அப்படிகுணங்களுண்டோவென்ன - **தாதூநாம்** இத்யாதி. தாதூ - ரத்நஸுவர்ணாதிகள். சிலரைநிந்திக்கிறது - இவருடையகுணம் இல்லாமையாலேயென்று கருத்து. குணமீடுபெறுத்துமென்னுமதுக்கு ப்ரமாணாந்தரம் - ஹ்ருதயாநி இத்யாதி. ஆமமந்தேவ - கடைந்தவர்போலே யானாரென்றபடி.* ‘‘**பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே**’’ *இத்யயோத்யாகாண்டே தஶரதம்ப்ரதி ராஜலோக: தத்ரைவ,* ‘‘**ஸ்நிக்தா ஜாநாதி ஸுஜேதாக்ருதஸத்வஸீமிக: । ஜநஸ்ய ஸஹோஸாக்ஷாவிஹிதம் கர்யஹிவ। க்ஷயம் ந்ய ஹிதயஹித்வம்யிவிநீநாயாஸதி । ஸுவந்தோஷம்துஹிதஸ்ய ராஜம் ஹித்ஜம் ! ஜநம்ஸ்ரீரங்கங்க்ஷஸ்யலோகஸ்யபாதாஹிதம் । வாணஸ்யா தவ ஸ்யயாபாம்ஜிதம்யா**’’ *இதி.* ‘‘**ஜ்ஞாநவிஜ்ஞாநஸம்பந்நோ நிதேஶநிரத: பித்ரு: । தாதூநாமிவ ஶைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்**’’ *. இதி கிஷ்கிந்தாகாண்டே வாலிநம் ப்ரதி தாரா.* ‘‘**விராஜயந்ராஜஸுதோ ராஜமார்கம் நரைர்வ்ருதம் । ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்ய குணவத்தயா**’’ *இத்யயோத்யாகாண்டே.*

உருகாநின்றது; இப்படிப்படாநின்றால் மாயங்களை நினைக்கை தவிரலாமிறே; என்னுடைய நிரவதிகமான அபிநிவேசமானது தவிரவொட்டுகிறதில்லை; நான் என்

ஒ—முதற்பாட்டில், திருக்காட்கரையில் எம்பெருமானுடைய ஆச்சர்யமான பரிமாற்றங்களை நினைத்தோறும் என்னெஞ்சு மிகவும் ஶிதிலமாகாநின்றதென்கிறார்.

[உருகுமாலென்று தொடங்கி]- ஸ்வரூபாநுபவத்துக்கு ப்ரயோபகரணமான நெஞ்சு உருகாநின்றது; ஆத்மாவுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அபிநிவேசமானது மிகாநின்றது. இவ்வபிநிவேசாதிஶயமானது படர்ந்து தரிக்கவொட்டுகிறதில்லை. அதிசபலனான நான் என்னசெய்வேன்? [மாயன்] - ஆச்சர்யமான ஸௌந்தர்யாதிகளையுடையவன்.

ப.—முதற்பாட்டில், திருக்காட்கரையில் நிற்கிற ஸர்வேஶ்வரனுடைய ஆச்சர்ய ப்ரகாரத்தை யநுபவித்து, அபிநிவேசத்தாலே என்னெஞ்சு ஶிதிலமாகாநின்றதென்கிறார்.

தெருவெல்லாம் - வீதிகள்தோறும், காவி கமழ் - செங்கழுநீர் மணங்கமழும்படியான, திருக்காட்கரை - திருக்காட்கரையிலே, மருவிய - பொருந்தி வர்த்திருக்கிற, மாயன்தன் - ஆச்சர்யபூதனுடைய, மாயம் - அத்யாச்சர்யமான ஸௌந்தர்யசீலாதிகளை, நினைதோறும் - அநுஸந்திக்குந்தோறும், நெஞ்சம் - (அநுபவப்ரயோபகரணமான) நெஞ்சு, உருகும் - ஶிதிலமாய் த்ரவியாநின்றது; (அநுபவ ஸாரஸ்யாதிஶயத்தாலே), உயிரின் பரமன்றி - ஆத்மாவுக்குப் பொறுக்கவரிதாம்படி, வேட்கை - அபிநிவேசம், பெருகும் - அதிப்ரவ்ருத்தமாகாநின்றது; தொண்டனேன் - அத்யந்த சபலனான நான், என்செய்கேன் - (மனஶ்ஶைதில்யத்தை மாற்றவோ, அபிநிவேசத்தை பகஞ்சுரிப்படுத்தவோ, அநுபாவ்யகுணங்களை விலக்கவோ, ஆச்சர்யமான சாபல்யத்தைத் தவிர்க்கவோ?) எதுசெய்வேன்? 'ஆல்' என்ற அசை - விஸ்மயத்தைக் காட்டுகிறது.

இ—முதற்பாட்டில், திருக்காட்கரையில் நின்றருளின அவனுடைய ஆச்சர்யமான பரிமாற்றங்களை நினைத்தோறும் என்னெஞ்சு ஶிதிலமாநின்றதென்கிறார்.

[உருகுமால் நெஞ்சம்] - அநுபவத்துக்கு ப்ரயோபகரணமான மனஸ்தத்வம் ஶிதிலமாகாநின்றது. அநுபவிக்கைக்கும் அநுபவித்து நிர்வ்ருதராகைக்கும் நெஞ்சு வேணுமே. "தொழுதெழு" என்கைக்கும் "மேயநாளும் நேர்நிற்கில்மேல் மற்றோர் நோயும் சார்கொடான்" என்கைக்கும் நெஞ்சுவேணுமிறே. நீஞ்சப்புக்கவனுக்கு வாய்க்கரையிலே தெப்பமொழுகுமாபோலே பரிகரமான நெஞ்சு ஶிதிலமாகாநின்றது. எதிர்த்தலையுமுண்டாம்படி பரிமாறஅறியான். அநுபவத்துக்கு இருவர் வேணுமென்றிரான். [உயிரின்பரமன்றிப் பெருகுமால்வேட்கையும்] - ஆத்மாவுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அபிநிவேசம் பெருகாநின்றது. அணுபரிமாணமான இவ்வஸ்துவினளவன்றிக்கே ஆறு பெருகுமாபோலே மேன்மேலெனப் பெருகாநின்றது. ஆலும் ஓவும் விஷாதாதிஶய ஸூசகம். "நெஞ்சம் உருகுமால் - வேட்கையும் பெருகுமால்" என்று தம்மால் நியமிக்கவொண்ணாத விஷாதமும் தோற்றச்சொல்லுகிறார். [என்செய்கேன்] - நெஞ்சுஉருகாதபடி தரிப்பேனோ? பெருகுகிற அபிநிவேசத்தையடைப்பேனோ? இதுக்கடியான அவன்

ரூணங்களைத்தவிர்ப்பேனோ? [தொண்டனேன்] - அதுக்கடியான என் சாபலாதிஶயத்தைத் தவிர்ப்பேனோ? சாபலம் அஹங்கியென்று கைவாங்கவொட்டுகிறதில்லை. மறந்து பரிக்க வொட்டுகிறதில்லை. [தெருவெல்லாம் காவிகமழ்] - வேட்கைக்கு ஹேதுசொல்லுகிறதுமேல்முடிய. குறுந்தெருவோடு பெருந்தெருவோடு வாஸிபறச் செங்கழுநீரின் பரிமளம் பரக்கிறபடி. ஊரோடுசேர்ந்த பொய்கைகளாகையாலே உள்ளோடு புறம்போடு வாஸிபறப் பரிமளம் அலைபெறிகிறபடி. தெருவெல்லாம் ஒருபரிமளம், உள்ளுலவழுமு: [திருக்காட்கரைமருவிய] - பரத்வத்திற்காட்டிலும் அவதாரத்திற்காட்டிலும் ஏற்றஞ்சொல்லுகிறது. பரத்வம் நெடுங்கைநீட்டு; அவதாரம் காலாவதியையுடைத்து. [மாயன்] - ஆஶ்சர்யமான ஸௌஶீல்யாதிகளையுடையவன். [மாயம்] - கிட்டினபோது தாழநின்று பரிமாறினபடி. [நினைதோறே] - ஊரைநினைத்தபோதும், ஸௌஶீல்யத்தைநினைத்தபோதும், ஒருவரும் ஒருவடிவும் இல்லாதாரைப்போலே தாழநின்ற ஶீலத்தை நினைத்தபோதும். ஸஹஸ்ரப்ரகாரததாலே அநுபவிப்பிக்கவல்லன்அவன், ஒன்றிலே காலதத்த்வமுள்ளதனையும் கால்தாழ்ந்து புதியராய் அநுபவிக்கவல்லர் இவர்; "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்றவரிறே.

ஈடு.—முதற்பாட்டு. திருக்காட்கரையில் எம்பெருமானுடைய ஆஶ்சர்யங்களான பரிமாற்றங்களை நினைதோறும் என்னெஞ்சு ஶிதிலமாகாநின்றதென்கிறார்.

[உருகுமால்நெஞ்சம்] - அநுபவத்துக்கு ப்ரதமோபகரணமான நெஞ்சு ஶிதிலமாகாநின்றது. அநுபவிக்கைக்கும் அநுபவித்து நிர்வ்ருதராகைக்கும் நெஞ்சுவேணுமிறே. நீஞ்சப்புக்கவனுக்குவாய்க்கரையிலேதெப்பமோழ்குமாபோலே, பரிகரமான நெஞ்சு ஶிதிலமாகாநின்றது. "தொழுதெழு" என்கைக்கும், "நீயுநானுமிந்நேர்நிற்கில்" என்கைக்கும் நெஞ்சுவேணுமே. எதிர்த்தலையையுண்டாக்கிக் கலக்கவறியான் காணும்! கலக்கைக்கு இரண்டு தலையும் வேணுமென்றிரான். [உயிரின்பரமன்றிப் பெருகுமால்வேட்கையும்] - ஆத்மாவுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அபிநிவேஶம் பெருகாநின்றது. பிள்ளாய், அணுபரிமாணமான இவ்வஸ்துவின் அளவல்ல, ஆற்றுப் பெருக்குப்போலே மேன்மேலெனப் பெருகாநின்றது. [ஆல்] - விஷாதாதிஶயஸூசகம். "நெஞ்சம் உருகுமால் - வேட்கையும் பெருகுமால்" என்று, தம்மால் நியமிக்கவொண்ணாத விஷாதந்தோற்றச்

முதற்பாட்டு.—உருகுமால் இத்யாதி. "திருக்காட்கரைமருவிய மாயன்தன்மாயம் நினைதோறும் - உருகுமால்நெஞ்சம்" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - திருக்காட்கரையில் இத்யாதி

காணுந்தாங்களும்உருகாநிற்க நெஞ்சை விசேஷிப்பானேன்? என்ன - அநுபவத்துக்கு இத்யாதி. நெஞ்சுக்கு ப்ரதமோபகரணத்வமெப்படியென்ன - அநுபவிக்கைக்கும் இத்யாதி. அநுபவோபகரணமான நெஞ்சு ஶிதிலமானால் அநுபவிக்க விரகில்லையென்னுமதுக்கு த்ருஷ்டாந்தம். நீஞ்ச இத்யாதி. வாய்க்கரையிலே - ஆற்றருகே. "அநுபவிக்கைக்கும் அநுபவித்து நிர்வ்ருதராகைக்கும் நெஞ்சுவேணும்" என்னுமதுக்குஅடைவே ப்ரமாணத்வயம் - தொழுதெழு இத்யாதி. "ஆல்" என்றதுக்கு பாவம் எதிர்த்தலையை இத்யாதி. விவரணம் - கலக்கைக்கு இத்யாதி. கீழ்வாக்யத்துக்கு பாவமாதல், "பெருகும்" என்கிற வர்த்தமானார்த்தமாதல் - பிள்ளாய் இத்யாதி. பிள்ளாய் என்றது - வார்த்தைப்பாடு. விஷாதாதிஶயமேதென்ன - நெஞ்சம் இத்யாதி. அதாவது - "ஒருசீலம்ருந்தபடியென்" என்று படுகிற மநஸ்ஶைதில்யத்தையும், "இந்தசீலாதிகளை உத்தரோத்தரம் அநுபவிக்கவேணும்" என்கிற அபிநிவேஶப்பெருக்கையும் தம்மால் நியமிக்கப்போகாத விஷாதாதிஶயமென்றபடி. தம்மால்இதுக்கொரு ப்ரதிக்ரியையில்லை என்னுமத்தை மூன்றுவாக்யத்

சொல்லுகிறார். [என்செய்கேன்] - நெஞ்சை உருகாமல் காக்கவல்லேனோ? வேட்கை பெருகாமல் தகைகவல்லேனோ? இவற்றுக்கடியான அவன் குணங்களைத் தவிர்ப்பேனோ? [தொண்டனேன்] - அதுக்கடியான என் சாபலாதிசயத்தைத் தவிர்ப்பேனோ? சாபலம், அஸ்வாமி என்று கைவாங்கவொட்டுகிறதில்லை; வைலக்ஷண்யம் - மறந்து பிழைக்கவொட்டுகிறதில்லை. [தெருவெல்லாங் காவிகமழ்] - நெஞ்சு உருகுகைக்கும் வேட்கை பெருகுகைக்கும் ஹேது சொல்லுகிறது. [தெருவெல்லாம்] - குறுந்தெருவென்று தவிர கட்டவொண்ணாதபடி, குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியறச் செங்கழுநீரின் பரிமளம் பரக்கிறபடி. ஊரோடுசேர்ந்த பொய்கைகளாகையாலே, உள்ளோடு புறம்போடு வாசியறப் பரிமளம்அலையெறிகிறபடி. தெருவில் ஒரு பரிமளம், உள் ஒரு * ஸவபூமஜ்ஜ:. [திருக்காட்கரைமருவிய] - இத்தால், பரத்வத்திலும் அவதாரத்திலும் ஏற்றஞ்சொல்லுகிறது. பரத்வம், நெடுங்கைநீட்டு; அவதாரம், காலாவதியுடைத்து. [மாயன்] - ஸௌந்தர்ய சீலாதிகளாலே பிறரைப் பிச்சேற்றவல்லவன். [மாயம்] - கிட்டினபோது தாழநின்று பரிமாறினபடி. குறைவாளர் நிறைவாளரைப்பற்றி யநுவர்த்திக்குமாபோலே யாய்த்து அநுவர்த்தித்தபடி. [நினைதொறே] - ஊரை நினைதோறும், ஸௌந்தர்யத்தை நினைதோறும், ஒரு ஊற்றமும் உடைமையில்லாதாரைப்போலே தாழநின்ற சீலவத்தையை நினைதோறும். [நினைதோறும்] - எத்தனைகாலம் நினைக்கப்புக்கார்? எத்தனைகாலம் மீண்டார்? ஒன்றோடொன்று சேராதன ஸமுதாயத்தை யநுபவிப்பிக்கவல்லனவன்; ஒரு குணந்தன்னையே காலதத்த்வமுள்ளதனையும் கால்தாழ்ந்து க்ஷணந்தோறும் புதுமை பிறந்து அநுபவிக்கவல்லரிவர்; "அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதம்" என்னுமவரிறே. (க)

தாமே தர்ப்பிக்கிறார் - நெஞ்சை இத்யாதி. அவன்குணங்களை என்றது - "மாயன்" என்றதைப்பற்ற. ஆனால் கைவாங்கிவிடலாமோவென்ன - சாபலம் இத்யாதி. மறந்தாலோவென்ன - வைலக்ஷண்யம் மறந்து இத்யாதி. "தெருவெல்லாம்" இத்யாதிக்கவதாரிகை - நெஞ்சுருகுகைக்கும் இத்யாதி. காவி - செங்கழுநீர். "தெருவெல்லாம்" என்றதுக்கர்த்தமாவது:—"தெரு" என்று குறுந்தெருவாய், "எல்லாம்" என்று - நெடுந்தெருவாய், 'குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியற' என்று முந்தினவர்த்தம்; இத்தை யருளிச்செய்கிறார் - குறுந்தெருவென்று தவிர இத்யாதி. "தெரு" என்று - புறம்பாய், "எல்லாம்" என்று - உள்ளாய், 'உள்ளோடு புறம்போடு வாசியற' என்றுஇரண்டாமர்த்தம்; இத்தை அருளிச்செய்கிறார் - உள்ளோடு இத்யாதி. தெருவெல்லாம் செங்கழுநீர் பரிமளமாகைக்கு ஹேது - ஊரோடுசேர்ந்த பொய்கையாகையாலே என்று. தெருவிலே யன்றோ பரிமளமுள்ளதென்ன - தெருவில்ஒரு இத்யாதி. "காட்கரை" என்கையாலே - பரத்வவ்யாவ்ருத்தி; "மருவிய" என்கையாலே - அவதாரவ்யாவ்ருத்தி. அவற்றுக்குக் குற்றமேதென்ன - பரத்வம் இத்யாதி. "மாயம்" என்று - பரிமாற்றம். தாழநின்றதுக்குக் குற்றமேதென்ன - பாத்வம் இத்யாதி. பரிமாறினதின் சாமாவதி - குறைவாளர் இத்யாதி. "நினைதொறும்" என்கைக்கு நினைவில் வைவித்யமேதென்ன; விஷயபேதத்தாலே நினைவும் விவிதமாயிருக்குமென்கிறார் - ஊரை இத்யாதி. இந்த விஷயபேதத்தாலே ஸ்ம்ருதிபேதமாக அருளிச்செய்வது; "மாயம்நினைதொறும்" என்கிற பதஸ்வாரஸ்யத்துக்காக ஏகவிஷயந்தன்னிலே ப்ரேமபாரவஶ்யத்தாலே நினைக்கப்புகுவது - மாட்டாதொழிவது, பின்னையும் நினைக்கப்புகுவது ஈடுபாட்டாலே மாட்டாதொழிவதாய் இப்படி ஸ்ம்ருதிபேதமென்று விவக்ஷித்து "நினைதொறும்" என்கிறதென்று ஸாவகாசம் - எத்தனைகாலம் இத்யாதி. இப்படி முடியச்செல்லுகைக்கு ஹேதுவேதென்ன; திருவர்ப்படியாலுமென்கிறார் - ஒன்றோடொன்று இத்யாதி. அப்படி யநுபவிப்பரோவென்ன - அப்பொழுதைக்கு இத்யாதி. 'தெருவெல்லாம்' என்றுதொடங்கி, 'நினைதொறும் - நெஞ்சம்-உருகுமால் - உயிரின் பரமன்றி - வேட்கை பெருகுமால் - தொண்டனேன் என்செய்கேன்' இத்யந்வய:. (க)

இரண்டாம் பாட்டு.

நினைதொறுஞ்சொல்லுந்தொறும்நெஞ்சிடிந்துகும்
வினைகொள்சீர்பாடிலும்வேமெனதாருயிர்
சுனைகொள்பூஞ்சோலைத்தென்காட்கரையென்னப்பா!
நினைகிலேன்நானுனக்காட்செய்யும்நீர்மையே.

ஆ.—(நினைதொறும்.) - எல்லாருடைய துக்கங்களையும் போக்கக்கடவதான உன்னுடைய இக்குணங்களை நினைத்தல், சொல்லுதல், பாடுதல் செய்யில், என்னெஞ்சும் இவ்வாத்மாவும் மாயாநின்றன; "நீர் இங்ஙனே ஈடுபடுகைக்கு உம்முடைய திறத்தில் நான் செய்ததென்?" என்னில், - நான் "உன்னையடிமை கொள்ளுகிறோம்" என்று கொண்டு வந்து நீ என்திறத்துச் செய்தருளின செயல்களை, நினைக்கலாமோவென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், திருக்காட்கரையில் எம்பெருமானைக் குறித்து உன்னேடு நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[நெஞ்சுஇடிந்துகும்] - ஹ்ருதயம் கட்டழிந்து நீராகாநின்றது. [வினைகொள் சீர்] - எல்லாருடைய துக்கங்களையும் போக்கக்கடவியவான கல்யாணகுணம்; சேஷ்டிதங்களோடு கூடின குணங்களென்றுமாம். குணமாவது - ஸௌசீல்யம்: சேஷ்டிதமாவது - இக்குணக்ருதமான தாழ்ந்த பரிமாற்றம்; "ஸ ஸ்ரீ வஹாயஜீவதி" ஐதிஹ்யம். [ஆருயிர்] - ஆத்மா. [சுனைகொள் பூஞ்சோலை] - சுனைகளோடுகூடின அழகியசோலை. [என்னப்பா] - எனக்கு ஸந்நிதானானவனே! எம்பெருமான் தம்மோடு அக்ரமமாகப் பரிமாறினபடியை, விசேஷத்தாலே ஆட்செய்யும் நீர்மை என்கிறார்.

ப.—அநந்தரம், நிருபாதிகவைலக்ஷண்யவான உன்னுடைய ஸம்ஶ்லேஷப்ரகாரத்தை யநுஸந்திக்க க்ஷமனாகிறிலேனென்று அவன்தன்னை நோக்கி யருளிச்செய்கிறார்.

சுனைகொள் - தடாகங்களையுடைத்தான, பூஞ்சோலை- பூஞ்சோலைகளையுடைய, தென் - ஔதார்யமான, காட்கரை - திருக்காட்கரையிலே, என் அப்பா - எனக்கு நிருபாதிகபந்துவாய்க்கொண்டு நிற்கிறவனே! வினைகொள் - உன்னுடைய ஸம்ஶ்லேஷாதிசய வ்யாபாரப்ரகாசகமான, சீர் - சீலஸௌலப்யாதிகுணங்களை, நினைதொறும்-ப்ரதிக்ஷணம் அநுஸந்திக்குந்தோறும், நெஞ்சு-அநுஸந்தாநோபகரணமான நெஞ்சானது, இடிந்து-சிதிலமாய், (அவ்வநுஸந்தாநம் அபிநிவேசவாஸனையாலே வாக்வ்யவஹார விஷயமாய்க் கொண்டு), சொல்லுந்தொறும்-சொல்லத்தொடங்கின க்ஷணந்தோறும், உருகும்-நெஞ்சு தான் நீராயுருகாநின்றது; (அவ்வபிநிவேசமொட்டில்† நில்லாமையாலே), பாடிலும் - ("பாடியிளைப்பிலம்" என்கிறபடியே அக்குணங்களைப்)பாடி யநிக்கத்தேடிலும், எனதாருயிர் - காணியான என் ஆத்மாவானது, வேம் - (ரஸாதிசயம்ஆற்றமாட்டாமையாலே) பரிதப்தமாகாநின்றது; (ஆதலால்), நான் - (ஏவம்விதனான) நான், உனக்கு ஆட்செய்யும் - உனக்கு சேஷவ்ருத்தி பண்ணுகைக்குஉறுப்பான, நீர்மை - ப்ரகாரத்தை, நினைகிலேன் - நினைக்கவும் க்ஷமனாகிறிலேன்.

---

† 'அவ்வபிநிவேசமொருமட்டில்' என்று ஒரு ஸ்ரீகோசம்.

இ.—இரண்டாம்பாட்டில், அவன் தன்னைக் குறித்து, உன்னோடு நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலேன் என்கிறார்.

[நினைதொறும்] - நினைக்க உபக்ரமிப்பர்; அந்நினைவைப் பாற்செல்லவொண்ணாதபடி பலஹாநி மிகும், மறக்கமாட்டார், திரியட்டும் நினைக்கவென்றிழிவர். இப்படிப் பலகால் நினைக்க உபக்ரமித்துத் தலைக்கட்டமாட்டாதே சொல்லுகிறபடி. [சொல்லுந்தொறும்] - நினைக்கவரிய விஷயம் சொல்லவொண்ணாதென்னுமிடம் சொல்லவேண்டாதிருக்க, 'சொல்லுந்தொறும்' என்கிறது - "என்னுமிப்போதுமென்வாசகம்" என்கிறபடியே மநஸ்ஸஹகாரமொழிய வாஸநையாலே வாக்குப் பேசத்தொடங்கும்; செவி வழியாலே புக்கு நெஞ்சை அழிக்கும். [நெஞ்சிடிந்துகும்] - நெஞ்சுகட்டழிந்து சிதிலமாகின்றது; பெருக்காற்றிற் கரையிடிந்து விழுந்து பின்பு கரைக்கரைந்து போமாபோலே சிதிலமாகின்றது. [வினைகொல்சீர்] - பாபஹரமான கல்யாணகுணம்: ஸர்வதுக்கநிவர்த்தகமான குணங்கள், என்னையொருவனையும் அழியாநின்றது. அன்றியே, சீரென்று - சீலமாய், வினையாவது - சேஷ்டிதம்: அதாவது நிலகாரயமான தாழ்நின்று பரிமாறும் பரிமாற்றம்: "[illegible]" என்னக்கடவதிறே, என்றுமாம். [பாடிலும்] - அடைவுபடப் பேசமாட்டிற்றிலோம் ப்ரமேயத்தாலே பாடவேதொன்றுண்டு, அத்தைச் செய்யினும். [வெம்மைதாநுயிர்] - மனஸ்ஸையன்றியே அணுவான ஆத்மவஸ்துவையும் தஹியாநின்றது. வயிரத்தைப்பற்ற வேவாநின்றது. "அதாஹ்ய" என்கிறது அக்நிக்கு: இவன் குணம் அழிக்கமாட்டாததில்லை. புறம்புள்ளார்க்கு ஆஶ்வாஸஹேதுவான குணங்கள் என்னையொருவனையும் முடியாநின்றது; எல்லார்க்கும் குளிர்த்தியைப்பண்ணும்பனி தாமரையை அழிக்குமாபோலே. [கனைகொள்பூஞ்சோலை] - கனைகளோடுகூடின ஊர்ஜிதமான சோலை. [தென்காட்கரை என்னப்பா] - நிருபாதிகபாந்தவம் தோற்ற ஸந்நிஹிதனாய் நின்றவனே! இவையாய்த்து இவரை யழிக்கிறது. கனைகள் - சீலத்துக்கு ஸ்மாரகம். சோலை - வடிவுக்கு ஸ்மாரகம். ஸந்நிதி - ஸௌலப்யத்துக்கு ஸ்மாரகம். [நானுனக்காட்செய்யும் சீர்மை - நினைகிலேன்] - நான் உனக்கடிமை செய்யும் ப்ரகாரம் நினைக்கமாட்டுகிறிலேன். "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்று பாரித்தவன். [உனக்கு] - வகுத்தசேஷியான உனக்கு. [ஆட்செய்யும் சீர்மையே] - அவன் தாழநின்று பரிமாறினபடியை, விரோதத்தாலே 'ஆட்செய்யும் சீர்மை' என்கிறார். [நினைகிலேன்] - நினைப்பனாகில் நெஞ்சழியாநின்றது.

ஈடு.—இரண்டாம் பாட்டு. திருக்காட்கரையில் எம்பெருமானைக் குறித்து, உன்னோடே நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[நினைதொறும்] - நினைக்கவென்று உபக்ரமிப்பர்; அந்நினைவு மாறாதே செல்லவொண்ணாதபடி பலஹாநி மிகும்; ஆனாலும் மறக்கமாட்டார்; திரியநினைக்கவென்று உபக்ரமிப்பர்; தலைக்கட்டமாட்டார்; எத்தனைகாலம் நினைக்கப்புக்கார்? எத்தனைகாலம் மீண்டார்? [சொல்லுந்தொறும்] - நினைக்கவே யரிதானவிஷயத்தைச் சொல்லவொண்ணு

இரண்டாம்பாட்டு - நினைதொறும் இத்யாதி. "தென்காட்கரை யென்னப்பா - நானுனக்காட்செய்யும் சீர்மை - நினைகிலேன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - திருக்காட்கரையில் இத்யாதி.

"நினைதொறும்" என்று நினைவில் வைவித்யமேதென்ன - நினைக்கவென்று இத்யாதி மீண்டார் என்னுமளவும். நினைக்கவே யரிதான இத்யாதி வாக்யாந்தரம் "பின்னை சொல்லும்படி

தென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே. "மநஃபூர்வோ வாகுத்தர:" (மநஃபூர்வோவாகுத்தர:) - என்கிற கணக்கன்றிக்கே, "குறளாகியவஞ்சனே யென்னு மெப்போது மென்வாசகம்" என்கிறபடியே, இவருடைய வாக்குத்தான் எப்போதும் பேசாநிற்குமே; அந்த வாஸநையாலே அஹ்ருதயமாகச் சொல்லாநிற்பர்; அதுதான் செவிவழியாலே உள்ளே புக்கு ஊற்றிருந்து. குணாநுஸந்தாநமாகையாலே நெஞ்சையழிக்கும். [நெஞ்சிடிந்துகும்]- நெஞ்சு கட்டழிந்து நீராகாநின்றது. பெருக்காற்றின்கரை யிடிந்து பின் நீராய்க் கரைந்து போமாபோலே, ஓர் அவயவியாக்கிக் காணவொண்ணாதபடி உக்குப் போகாநின்றது. [வினைகொளித்யாதி] - பாபஹரமான கல்யாணகுணம். ஸர்வர்க்கும் து:கநிவர்த்தகமான குணங்கள், என்னையொருவனையும் அழியாநின்றன; அன்றியே, சீரென்று - சீலமாய், வினை யென்று – சேஷ்டிதம், அதாவது - சீலகார்யமாய்த் தாழநின்று பரிமாறும் பரிமாற்றம். "ஸுக்ரீவம் நாதமிச்சதி" (ஸுக்ரீவம்நாதமிச்சதி) என்னக்கடவதிறே, என்றுமாம். [பாடிலும்] - அடைவுபடப் பேசுமதொழிய, ஆர்வத்தாலே பாடுவதொன்றுண்டு; அத்தைச் செய்யிலும். [வேமெனதாருயிர்] - மநஸ்ஸையன்றிக்கே, அதாஹ்யமான ஆத்மவஸ்து வையும் தஹியாநின்றது. எல்லாவற்றுக்கும் குளிர்த்தியைப் பண்ணக்கடவதான பனி தாமரை யொன்றையும் கருகப்பண்ணுமாபோலே, ஸகலது:கநிவர்த்தகமான குணங்கள் எனக்கு பாதகமாகாநின்றன. [வேமெனதாருயிர்]-"அதாஹ்ய:"(அதாஹ்யம்) என்கிறது அக்நிக்கு, ஸௌசீல்யத்துணங்கள் புக்கழிக்கமாட்டாததில்லை [சுனையித்யாதி]- தம்மைக்குமிழ் நீரூட்டின ப்ரதேசங்கள். சுனைகளையும் தர்சநீயமான சோலைகளையு முடைத்தாயிருக்கிற திருக்காட்கரையிலே நிருபாதிகபந்துவாய் ஸந்நிஹிதனானவனே! [நினைகிலேன்நான் உனக்காட்செய்யும் நீர்மையே] - நான்உனக்கடிமைசெய்யும் ப்ரகாரம் நினைக்கமாட்டுகிறி லேன். [நான்] -"வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்றிருந்த நான். [உனக்கு] - வகுத்த சேஷியானவனக்கு அவன்தாழநின்று பரிமாறினபடியை, விநயத்தாலே 'ஆட்செய்யும்நீர்மை'

யென்னென்னில்" என்ற சங்கையைப் பூரிப்பது. பரிஹாரம்-மந:பூர்வ இத்யாதி. நினைதொறும் நெஞ்சிடிந்துகக்கூடும்; சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்படி யென்? என்ன - அதுதான் இத்யாதி. த்ருஷ்டாந்தவிவரணம் - பெருக்காற்றில் இத்யாதி. கொள்கை - ஐபிக்கை. பாபத்தை ஐபிக்கையாவதே தென்ன-பாபஹரமான இத்யாதி. "எனது" என்றத்தைக் கடாக்ஷித்து கீழ்வாக்யத்துக்குஹேலிதம்-ஸர்வர்க்கும் இத்யாதி. ஸ்வகார்யமான சேஷ்டிதத்தையுடைய சீலமென்றிரண்டாமர்த்தம். வினை - சேஷ்டிதம். கொள்கை - உடைத்தாகை. தாழநின்று பரிமாறினதுக்கு ப்ரமாணம் - ஸுக்ரீவம்நாதம் இத்யாதி. "[illegible] லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" இதி மாருதிம் ப்ரதிலக்ஷ்மண:. என்றுமாம் என்றது - "வினைகொள்சீர்" என்றதுக்கு அர்த்தாந்தரங்காட்டினபடி. "சொல்லுந்தொறும்" என்றதுக்கும், "பாடிலும்" என்றதுக்கும் ஹேதுவென்னென்ன-அடைவுபட இத்யாதி. ஆர்வத்தாலே-ப்ரீதியாலே. "ஆருயிர்" என்றதுக்கு பாவம் - மநஸ்ஸை இத்யாதி. "எனது" என்றது - எனக்கொருவனுக்குமென்றபடியாய், ஸர்வர்க்கும் து:கநிவர்த்தகமானகுணங்கள் உமக்கு பாதகமாவானென்னென்ன, த்ருஷ்டாந்தமாகக் காட்டுகிறாரென்னுதல். "ஸர்வர்க்கும் து:கநிவர்த்தகமான" இத்யாதிவாக்யத்தை த்ருஷ்டாந்தபூர்வகமாக விவரிக்கிறாராதல்-எல்லாவற்றுக்கும் இத்யாதி. அதாஹ்யமானதை வேவக்கூடுமோவென்ன - அதாஹ்யமென்கிறது இத்யாதி. சுனைகளையும் சோலைகளையும் உரைபுஞ் சொன்னதுக்கு பாவம்- தம்மை இத்யாதி. குமிழ்நீரூட்டின - தலஸ்பர்சியாக அமிழப் பண்ணின. பப்தார்த்தம் - சுனைகளையும் இத்யாதி. "நான், உனக்கு" என்ற பதத்வயத்துக்கும் பாவம்-வழுவிலா இத்யாதி. அவன் தாழநின்று பரிமாறுகிற ப்ரகரணத்திலே, "நீ எனக்காட்செய் யும் நீர்மை" என்னாதே, "நானுனக்காட்செய்யும் நீர்மை" என்பானென்? என்ன - அவன்தாழ

என்கிறார். அவன் தமக்காட்செய்த நீர்மையை 'நாம் ஆட்செய்யும் நீர்மை - நினைகிலேன்' என்கிறார், இச்சோலையையும் இழக்கவொண்ணாதென்று. 'நானுனக்காட்செய்யும்நீர்மை' என்பானேன்? "நீயெனக்காட்செய்யும் நீர்மை என்றுமல்" என்ன,— "இச்சோலையையு மிழப்பரோ பாவியார்" என்று எம்பார். (உ)

மூன்றாம் பாட்டு.

நீர்மையால்நெஞ்சம் வஞ்சித்துப்புகுந்துஎன்னை
ஈர்மைசெய்துஎன்னுயிராய் என்னுயிருண்டான்
சீர்மல்குசோலைத் தென்காட்கரையென்னப்பன்
கார்முகில்வண்ணன்தன் கள்வம்அறிகிலேன்.

ஆ.— (நீர்மையால்.) - உம்மையடிமைகொண்டுனைக்கு மேற்படச்செய்தது ண்டோவென்னில்,— 'அடிமைகொள்ளுவாரைப்போலே என்னெஞ்சை வஞ்சித்துப் புகுந்து, தன் குணங்களாலும் செயல்களாலும் என்னை யாய்த்து, என்னுயிராய், என் னுயிரை ஹ்ஜித்தருளினன்; முந்துற மெய்யரைப்போலே வந்துபுகுந்தபடியும், பின்னைச் செய்தபடியும், ஒருவன்வஞ்சித்தபடி ஒன்றுமறிகிறிலேன் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், "அடிமைகொள்ளுகிறேன்" என்று க்ருத்ரிமத்தாலே என்னை விஸ்வஸிப்பித்து என்னுள்ளேபுகுந்து தன் குணங்களாலும் அக்ரமப்ரவ்ருத்திகளாலும் அவன் என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினபடிகள் அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[நீர்மையாலென்று தொடங்கி] - தான் ஸாக்ஷியாகவும் நான் மோக்ஷமாகவும் நான் நினைத்தபடியே என்னோடே பரிமாறுவாரைப்போலே க்ருத்ரிமித்துப் புகுந்து தன் குணங்களாலே என்னைஈடுபடுத்தி எனக்குத் தன்னைஅல்லது செல்லாதபடிபண்ணி என்னை ஹ்ஜிப்பதுஞ் செய்து அத்தால் தனக்குப்பிறந்த பௌஷ்கல்யம் தெரியும்படியிருக்கிற திருச்சோலையையுடைய திருக்காட்கரையிலே எழுந்தருளியிருப்பதுஞ் செய்து எனக்குப் பரமபந்துவுமாய் என்னோட்டைக் கலவியாலே புதுக்கணித்த திருநிறத்தையுடையனாயிருந்துள்ளவனுடைய என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணின குணசேஷ்டிதங்களை அறிய க்ஷமனாகிறிலேன்.

ப.—அநந்தரம், உதாரமான காளமேகஸ்வபாவனானவன் முறையிலே வருவாரைப்போலேகிட்டித் தான் தாழநின்று பரிமாறின முறைகேடான க்ருத்ரிமத்தையே யறுதியிட்டு அறியமாட்டுகிறிலேனென்கிறார்.

நின்று இத்யாதி. விநயத்தாலே - நைச்யத்தாலே. அவன் தாழநின்று பரிமாறினானாகில் விநயத்தாலே சொன்னதுக்கு ப்ரயோஜநமேதென்ன - அவன் தமக்கு இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - நானுனக்கு இத்யாதி. 'சுனைகொள்' என்று தொடங்கி, 'என்னப்பா - வினைகொள்சீரை - நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்: பாடிலும் - எனதாருயிர் - வேம்; ஆகையாலே, நானுனக்காட்செய்யும் நீர்மை - நினைகிலேன்' இத்யந்வயஃ. (உ)

நீர்மையால் - ஸ்வஸ்வாமிஸம்பந்தமாகிற நீர்மையை ப்ரகாஶிப்பிக்கையாலே, நெஞ்சம் - என்னெஞ்சை, வஞ்சித்து - தன்வசமாக்கி, புகுந்து-, (தன்ஶீலஸௌலப்யாதிகளுக்கு ப்ரகாஶகமான சேஷ்டிதங்களாலே), என்னை ஈர்மைசெய்து - என்னை ஈருந்தன்மையைப்பண்ணி, என்உயிர்ஆய் - (இவ்விரண்டாகாரத்தாலும்) எனக்கு யூராகனாய், என்உயிர்உண்டான் - என்னைப்புஜிக்குமவனாய்க்கொண்டு, சீர் மல்கு - மதுபுஷ்ப ஸம்பத்ஸம்ருத்தியையுடைத்தான, சோலை - சோலையையுடைய, தென் - அழகிய, காட்கரை - திருக்காட்கரையில் ஸந்நிதியாலே, என் அப்பன் - எனக்குஉபகாரகனாய். கார்முகில்வண்ணன்தன் - கார்காலத்துமேகம்போலே அதிஶயித ஔதார்ய ஸ்வபாவனானவனுடைய, கள்வம் - முகப்பொன்றும் முடிவொன்றுமான க்ருத்ரிமசேஷ்டிதத்தை, அறிகிலேன் - இன்னபடியிருக்கிறதென்று அறியமாட்டுகிறிலேன். நீர்மையென்று - ஶீலாதிகளாய், ஈர்மையோடே சேர்க்கவுமாம்.

இ—மூன்றாம்பாட்டில், அடிமைகொள்ளவென்று புகுந்து தன்படிகளைக் காட்டி என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினபடிகள் அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்தென்னை நீர்மையால் ஈர்மைசெய்து] - தான் ஶேஷியாய் நான்ஶேஷமான முறையிலே "பரிமாறவாரும்" என்று நெஞ்சை இசையப்பண்ணி க்ருத்ரிமித்துப் புகுந்தான்; முறைகெடப் புகுரவென்னில் இசையாரிறே. க்ருத்ரிமிக்கையாகிறது - ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச் செய்கையிறே. அது ஏதென்னில் [நீர்மையால் - என்னை ஈர்மைசெய்து] - நீர்மையாகிறது — தாழநின்று பரிமாறுகையும், அதுக்கடியான ஶீலமும். [என்னை] - "முறையிலே பரிமாறவாரும்" என்றத்தை மெய்யென்றிருந்த என்னை; [ஈர்மைசெய்து] - ஈரும்தன்மைகளைச்செய்து. தான் தாழ்ந்தசெயலாலே ஈடுபடுத்தி என்னுதல்; ஈரப்பாட்டை விளைத்தென்னுதல்; என்னை நீராம்படிபண்ணி என்கை. [என்னுயிராய் என்னுயிருண்டான்] - எனக்கு யூராகராவாரைப்போலே புகுந்து என்னையழித்தான்; ஸாயூகனாய்ப்புகுரில் இவர் இசையாரிறே; இருவரும் கூட ஹரிக்கவிழிந்து ஹோதா தானேயானான்; அன்றியே, [என்னுயிராயென்னுயிருண்டான்] - எனக்குத் தன்னையல்லது செல்லாதபடிபண்ணி, என்னை ஹரிப்பதுஞ் செய்தானென்றுமாம். [சீர்மல்குசோலை] - அழகுமிக்கசோலை. என்னோடு கலந்த இத்தால் தனக்குப்பிறந்த பௌஷ்கல்யம் அவ்வூர்ச் சோலையே கோட்சொல்லித்தாரா நின்றது. [தென்காட்கரை யென்னப்பன்] - ஸௌலபனுமாய் நிருபாதிக ஸம்பந்தமானவன். என்கார்யத்துக்குத் தானே கடவனாயிருக்கிற ஸம்பந்தம் தோற்ற ஸந்நிஹிதனானவன். [கார்முகில்வண்ணன்] - என்னோட்டைக் கலவியாலே கடலைமுழுக்கப்பருகின காளமேகம்போலேயாய்த்து அவன்வடிவிற் செவ்வியிருப்பது. "தூநீர்முகில்போல் தோன்றாய்" என்று இவர் ஆசைப்பட்டபடியே தோற்றி அநுபவிப்பித்துப் போகநின்றபின்பு, அத்தலையிற் செவ்வியிருந்தபடி. [தன்கள்வம் அறிகிலேன்]-முகப்பிலேபொன்றாய் முடிவிலேயொன்றான செயல்கள் தெரிகிறதில்லை. அடிமைகொள்ளவென்று புகுந்து அச்செயலைத் தான் செய்து நிற்கிறதிலே எனக்கொன்றும் தெரிகிறதில்லை. [அறிகிலேன்] - ஸர்வாதிகன் இப்படி தாழப்பரிமாறுகை கூடாது; நான் ப்ரமித்தேனோ? ஸம்ஶ்லேஷத்திலும் "மருள்தானீதோ" என்றவரிறே.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அடிமைகொள்ளவென்று புகுந்து, தன் படிகளைக் காட்டி ஸர்வஸ்வஹரணம் பண்ணினபடிகளை அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[நீர்மையால் நெஞ்சம்வஞ்சித்துப் புகுந்தென்னை ஈர்மைசெய்து] (நெஞ்சம் வஞ்சித்துப்புகுந்து என்னை - நீர்மையால் - ஈர்மைசெய்து)—தான் ஶேஷியும் நான் ஶேஷபூதனுமான முறையிலே பரிமாறவேணுமென்று நெஞ்சை இசைவிப்பன்னாதே, க்ருத்ரிமித்துப்புகுந்தான்; முறைகேடப் புகுராவென்னில் இசையாரிறே. க்ருத்ரிமிக்கையாவது - ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச்செய்கையிறே. அதேதென்னில்: [நீர்மையால்-என்னை ஈர்மைசெய்து] - நீர்மையாவது - தாழநின்று பரிமாறுகையும், அதுக்கடியான ஶீலமும். [என்னை]-"முறையிலே பரிமாறவாரும்" என்றத்தைப் பொய்யென்றிருந்த என்னை. [ஈர்மை செய்து] - ஈரும்தன்மைகளைச் செய்து. தன் தாழ்ந்த செயல்களாலே ஈடுபடுத்தி என்னுதல்; ஈரப்பாட்டை விளைத்து என்னுதல்; என்னை நீராம்படிபண்ணி என்கை. [என்னுயிராய் என்னுயிருண்டான்] - எனக்கு தாரகரைப்போலேபுகுந்து என்னையழித்தான். ஶாயகனாய்ப் புகில் இவர் இசையாரே! இருவருங்கூட ஸஜ்ஜிக்கப்புகுந்து போக்தா தானேயானான்; அன்றிக்கே, [என்னுயிராயென்னுயிருண்டான்] - எனக்குத் தன்னாலல்லது செல்லாதபடி பண்ணி என்னை ஸஜ்ஜிப்பதுஞ் செய்தானென்றுமாம். [சீர்மல்கு சோலை] - அழகுமிக்க சோலை. என்னோட்டைக் கலவியால் அவனுக்கு உண்டான பௌஷ்கல்யம் அவ்வூர்ச்சோலையே கோட்சொல்லித்தாரா நின்றது. [தென்காட்கரை யென்னப்பன்] - ஸுலபனுமாய் க்ருபாதிகளுக்கு வசமானவன்; என்கார்யத்துக்குத் தானேகடவனாயிருக்கிற பந்தந்தோற்ற ஸந்நிஹிதனாயிருக்கிறவன். [கார்முகில்வண்ணன்] - என்னோட்டைக் கலவியாலே, கடலை முழுக்கப்பருகின காளமேகம்போலேயாய்த்து, அவன் வடிவிற் செவ்வியிருப்பது. "கார்முகில்போல் தோன்றுமே" என்று

மூன்றாம்பாட்டு.—நீர்மையால் இத்யாதி. "நீர்மையால் நெஞ்சம்வஞ்சித்துப் புகுந்து - கள்வம் அறிகிலேன்" என்ற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - அடிமை இத்யாதி.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், அப்ராப்திகர்ப குணஸ்மரணத்தாலே மிகவும் ப்ரீதரானவர், போக்யஹாநியாலே அப்ராப்த்யம்ஶமே தலையெடுத்து அவனைப்பெறில் ஜீவித்தல், பெறாவிடில் முடிதலாம்படியான தம்முடைய தஶையை அந்யாபதேஶத்தாலே

அருளிச்செய்கிறார். இயற்கையிலே புணர்ந்துபிரிந்தாள் ஒருபிராட்டி, அவன் அழகிலே ஈடுபட்டு அவஸந்நையாய்த் தன்னாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலே சென்று அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, 'பின்னானார் வணங்குஞ் சோதி திருமூழிக்களம்' என்கிறபடியே தூதுபோவார்க்கு அருமைப்பட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலே வந்துநின்றருளினான், தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம்தசையை அறியாதிருந்தானத்தனை. க்ருபாஸ்வபாவனாகையாலே நம்தசையை அறிவிக்க வரும்; தன்னழகைக்கண்டு பிரிந்தார் தரிப்பரோ? என்றுஅறிவிக்கவேணுமென்று, அவற்றை ஸவிநயமாக இரக்கிறாளொருபிராட்டி பேச்சாலே தம்தசையை அருளிச்செய்கிறார். அஞ்சிறையமடநாரையில் "இத்தலையில் அபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை" என்று அவனுடைய அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டார்; வைகல் பூங்கழிவாயில் "நல்லதுகண்டால் கால்தாழுமவனாகையாலே மறந்திருந்தானித்தனை; நம் ஆர்த்தியை யறிவித்தால் தன்னினிமையிலே நெஞ்சுவைப்பானொருவனல்லன்" என்று அதுபற்றாசாகத் தூதுவிட்டார்; பொன்னுலகாளியில் "ஐச்வர்யப்பரப்பாலே மறந்திருந்தானத்தனை. ஆச்ரிதரோடு ஏகரஸனென்று அறிவிக்கவே வரும்" என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிட்டார்; இதில் தனக்கு நல்லாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானித்தனை. "தன்வடிவழகது, குணங்களவை; ஆனபின்பு பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ" என்று அவ்வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூது விடுகிறது.

ஈடு.—கீழ் அப்ரீதிகர்ப்பஜ்ஞாநுஸந்தாநத்தாலே மிகவும்ப்ரீதரானவர், ஸாக்ய ஹாநியாலே அப்ரீத்யம்சமே தலையெடுத்து, அவனைப்பெற்றுப் பிழைத்தல், பெறுவிடில் முடிதலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டி, அவன்வடிவழகிலே யீடுபட்டு அவஸந்நையாய், தன்ஆற்றாமை கைகொடுக்கத் தன்உத்யாநத்திலேசென்று, அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, "'பின்னானார்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்கிறபடியே தூது போவார்க்கு அருமைப்பட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலேவந்து நின்றருளினான்; தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே. நம்தசையையறியாதிருந்தானத்தனை; க்ருபாவானாகையாலே நம் தசையையறிவிக்கவரும்; "உம்மைப்பிரிந்தார் தரிப்பரோ?" என்றுஅறிவிக்கவேணும்" என்று அவற்றை ஸவிநயமாக இரக்கிறாளொருபிராட்டி பேச்சாலே தம்தசையை அருளிச்செய்கிறார். * அஞ்சிறையமடநாரையிலே, "நம்பக்கல் அபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை: அவனுடைய அபராத ஸஹத்வத்தை யறி

எங்கானல் ப்ரவேசம்: ஸங்க்ரஹஸங்கதி - கீழ் அப்ரீதிகர்ப்ப இத்யாதி. பெறுவிடில் முடிதலாம்படியான என்றது - " என்னகமேனியொழியும்" என்றதைப்பற்ற.*

"அந்யாபதேசத்தாலே" என்றதை உபபாதிக்கிறார் - இயற்கையிலே - யாத்ருச்சிகமாக வென்றபடி. அவஸந்நையாகில், உத்யாநகமநங்கூடுமோவென்ன - தன் ஆற்றாமை இத்யாதி. ஆனால் வாராதிருப்பானென்னென்ன - தனக்குநல்லாரை இத்யாதி. "தமரோடங்குறைவார்க்கு" என்றதைக் கடாக்ஷித்து - நல்லாரைவிடமாட்டாதவனாகையாலே என்றது. "தான் தம்மைக்கொண்டகல்தல் தகவன்று" என்றதைப்பற்ற - க்ருபாவானாகையாலே என்றது. "அங்கால்களென்றலைமேற் கெழுமீரோ" என்றதைப்பற்ற - ஸவிநயமாகஇரக்கிறாள் என்றது. கீழே, தூதப்ரேஷணம்பண்ணின மூன்றுதிருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் வாசியேதென்ன - அஞ்சிறைய இத்யாதி. அபராதத்தாலே என்றது- "என்பிழையே நினைந்தருளி" என்றதைப்பற்ற. அபராதஸஹ

விக்கவரும்'' என்று அபராதஸஹத்வம் பற்றுசாகத் தூதுவிட்டாள்; * வைகல்பூங்கழி வாயில், ''நல்லதுகண்டால் கால்தாழுமவனாகையாலே திருவண்வண்டூரில் ஸம்ருத்தியைக்கண்டு கால்தாழ்ந்தானத்தனை. நம்மார்த்தியை யறிவித்தால் தன்இனிமையில் நெஞ்சுவைப்பானொருவனல்லன்'' என்று அதுபற்றுசாகத் தூதுவிட்டாள்; *பொன்னுலகாளியில், ''திருக்கோளூரேறப்போக'' என்று தன்னுடைய ந௱ரோபவநத்தளவுஞ்சென்று ஶைலஹாநியாலே போகமாட்டாதேயிருக்கிற பிராட்டி, பின்னையும், அவன்வரக்காணாமையாலே, ''வாராதொழிகைக்கு நிவந்தநம் - தன்ஐஶ்வர்யப் பரப்பாலே; தான் ஆஶ்ரிதரோடு ஏகரஸனாகையாலே வரும்'' என்று ஐகரஸ்யம் பற்றுசாகத் தூதுவிட்டாள்; இதில், ''தனக்கு நல்லராயிருப்பாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானுமித்தனை; தன்வடிவழகது; குணங்களவை; ஆனபின்பு, பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ?'' என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றுசாகத் தூதுவிடுகிறாள்.

முதற் பாட்டு.

எங்கானலகங்கழிவாய் இரைதேர்ந்திங்கினிதமரும்
செங்காலமடநாராய்! திருமூழிக்களத்துறையும்
கொங்கார்பூந்துழாய்முடியெங்குடக்கூத்தர்க்கென்தூதாய்
நுங்கால்கள்என்தலைமேற் கெழுமீரோநுமரோடே.

ஆ.—'தன்னைப்பிரியில் நான் தரிக்கமாட்டாததொருபடி, தன்அழகாலும் தன்செயலாலும் என்னைத் தோற்பித்து அடிமையாக்கி, என்னோடே கலந்தருளிப்போய், திருமூழிக்களத்திலே இருந்தருளின எம்பெருமானுக்கு என்திறஞ்சொல்லவேணும்; உங்களுக்கடிமையே நானிருக்கிறேன்' என்று நாரைகளை இரக்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், சிலநாரைகளைக் குறித்து எம்பெருமான் தன்னுடைய அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி அவனுக்கு என் உண்மையை அறிவித்து வந்து உங்களுடைய திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணுமென்கிறாள்.

[எங்கானலென்று தொடங்கி] - எங்கள் உத்யாநத்தில் உள்ளிற்கழியிலே இரைதேடி இங்கே இனிதாகவர்த்திக்கிற சிவந்தகாலையுடைய ஶ்லக்ஷ்ணமான நாராய்! [எங்குடக் கூத்தர்க்கு] - ஆத்மநிவேதநம். குடக்கூத்தாடின அழகைக்காட்டி என்னை யகப்படுத்திக் கொண்டவனுக்கு. [நுங்கால்களென்று தொடங்கி] - ஸபரிகரமாக உங்கள் திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணும்.

த்வம் என்றது - ''என்பிழைத்தாள் திருவடியின்தகவினுக்கு'' என்றத்தைப்பற்ற. ஸம்ருத்தியை என்றது - ''சிறந்தசெல்வம்'' என்றத்தைப்பற்ற. அதுபற்றுசாக - ஆர்த்தரக்ஷணதீக்ஷை பற்றுசாக; இது ''என்னையுமுளளென்மின்கள்'' என்றத்தைப்பற்ற. ஐஶ்வர்யப்பரப்பாலே என்றது - ''யாவையும் யாவருமாய்'' என்றத்தைப்பற்றவாதல், ''மூன்னுலகங்களெல்லாம்படைத்த'' என்றத்தைப்பற்றவாதல். ஐகரஸ்யம் பற்றுசாக என்றது - ''தண்அழாய்நமக்கன்றி நல்கான்'' என்றத்தைப்பற்ற. வடிவழகு என்றது - ''அக்கமலத்திலைபோலுந்திருமேனி'' என்றத்தைப்பற்ற. ''தமரோடங்குறைவார்க்கு'' என்றத்தைப்பற்ற - குணங்களவை என்றது.

ப—முதற்பாட்டில், அதிசயிதமான போக்யதா ப்ரகாரத்தை யுடையனா யுள்ள க்ருஷ்ணனுக்கு என் தூதாகப்போன உபகாரத்துக்காக என்தலையிலே உங்கள் கால்களைவைக்கவேணுமென்று சிலநாரைகளை ஆதரித்து அபேக்ஷிக்கிறாள்.

எங்கானல்அகங்கழிவாய்-உங்களுக்கு விதேயோன்றாற்போலாப்படி எங்கள் பவனை யிலே வர்த்திக்கிற கடற்கரையிற் சோலையிலகவாயிற் கழியிடத்திலே, இரைதேர்ந்து - உங்கள் ஸங்கல்பாநுரூபந்தோற்றாப்படி இரைத்தை வல்லுவை போக்யமாக விரும்பி, இங்கு - ஸந்நிதியிலே, இனிது - ப்ரணயப்ரீதியோடே, அமரும் - வர்த்திக்கக்கடவை யாய், செம் - என்தலைக்குஅலங்காரமென்னலாம்படி சிவந்திருக்கிற, கால் - காலையுடைத் தாய், மடம் - நியமித்துக் கார்யங்கொள்ளலாம்படி பவ்யதையையுடைய, நாராய்-, திரு மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - ஆச்ரிதஸம்ச்லேஷணுப்கொண்டு நித்யவாஸம்பண்ணுமவராய், கொங்குஆர் - தேன்மிஞ்சி, பூ - தர்சநீயமான, துழாய் முடி - திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையராய், எங்குடக்கூத்தர்க்கு - குடக்கூத்தாடுகிற மனோஹாரிசேஷ்டிதத்தாலே எங்களுக்கு நிரதிசயபோக்யபூதரான வர்க்கு, என்தூதாய் - என்னுடைய தூதக்ருத்யத்திலே சென்று, (அந்தவுபகாராதிசயத் தாலே), நுமரோடே - ([illegible]" என்கிறபடியே, உன்பந்துக் களான) தாரபுத்ராதிகளோடேகூட, நுங்கால்கள் - எனக்காக வழிநடந்த உங்கள் கால்களை, என்தலைமேல் - அதுக்குப்பாத்ரபூதமாகையாலே உத்தமாங்கமான என் தலையிலே, கெழுமீர் - சேர்க்கவேணும். உபகாரகன் ஆசார்யனேயாகிலும் உபகார ஸ்ம்ருதி தத்ஸம்பந்தி பரம்பரையளவுஞ் செல்லுமிறே. "நாராய்" என்கிற ஒருமை ஜாத்யேகவசநம்.

இ.—முதற்பாட்டில், சிலநாரைகளைக் குறித்து அவன் தன்அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி என்நிலையை அவனுக்கு அறிவித்துவந்து உங்களுடைய திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணுமென்கிறாள்.

[எங்கானல்] - ஸம்வத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸ்யம் ப்ராப்தமாயி ருக்க 'எம்' என்கிறது - உபகாரஸ்ம்ருதியாலே ஒன்றைத் தன்னதாக்கிக் கொடுத்தல்லது தரிக்கமாட்டாதபடியாலே சொல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்கு உறுப்பாகவரும் மமகாரம் உத்தேச்யமாயிருக்குமிறே. ஸம்வத்விஷயத்துக்கு ஆக்கினவன்றே தன்ன தடங்க வடகர்க்கு போஷமாயிருக்க உபகாரஸ்ம்ருதி ஆறியிருக்க வொட்டாமையாலே வருமதிறே. ஆத்ம ஸமர்ப்பணத்திற்கும் அடி இதுவிறே. [கானலென்று] - கடற்கரைச் சோலையாதல், நெய்தல் நிலமாதல். [அகங்கழிவாய்] - உள்ளான கழியிடத்திலே. அந்தர் க்ருஹப்ரவேசத்திற்கு அநுமதிவேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிற படி. "கம்பிதாநிர ஹஸ்யாநி" என்கிறபடியே வர்த்தியாநின்றன. [இரைதேர்ந்து] - இரைதேடி; "ஸ்ருஹஹாநுக்ஷேஷிதம்" என்கிறபடியே; பண்டுதனக்கு உபகரித்த படியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக. [இங்கு] - இத்தலையை யழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலவிருந்தவனைப் போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றேன் என்கிறாள். [இனிதமரும்] - இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப் பெறுகை; விலக்ஷணபோகங்களை புஜித்து வர்த்திக்குமென்றுமாம். [செங்கால] - சிவந்தகாலையுடைய. என்மடியிலேயிருக்கும் கால்போலேயிருந்ததீ, நான் தலையிலே

வைத்துக்கொள்ளப் புகுகிறகாலும். [மடநாராய்] - ஸ்வயமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்] - தூதுபோவார்க்கு அடுத்து அணித்தாக நிற்கையாலே பரமபதத்திற் காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [கொங்கார் பூந்துழாய்முடி யெங் குடக்கூத்தர்க்கு] - ஒப்பனையையும் மநோஹாரி சேஷ்டிதங்களையும் எனக்காக்கி வைத்தவர்க்கு; 'எம்' என்கிறது ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலும் இரண்டிலுமாகிறது. 'எம்' என்று - ஆத்மநி பஹுவசநம். [என்தூதாய்] - ஒப்பனையிலும் செயலிலுந் தோற்று வெறுந்தரையாயிருக்கிற என்னுடைய தூதக்ருத்யத்திலே அதிகரித்து. [நுங்கால்கள் என்தலைமேல்] - உபகாரகரான உங்களுடைய காலை உபக்ருதையாய் உஜ்ஜீவிக்க இருக்கிற என்தலையிலே. இவளுடைய தலையிலே வைக்கக்கண்டதாய்த்து இவற்றின்கால்; இவற்றினுடைய காலைவைக்கக் கண்டதாய்த்து இவள்தலை; இரண்டும் பாரார்த்யமாகக் கண்டதாய்த்து. [செழுநீரோ] - அவனுக்கு ஶேஷமாக்கினபோதே வடகர்க்கு ஶேஷமாகையாலே என்னியிகொண்டு வைக்கவேண்டாவிறே; என்தலைமேலே சேரீகோளோ? [நமரோடே] - "ஸவாத்ருவஸத்ருஸமணை:" என்கிறபடியே ஸபரிகரமாக. "ஸ்வாமிஸ்வாபவாஸதேவவ்ருத்தி:" என்னக்கடவதிறே.

ஈடு.—முதற்பாட்டு. சிலநாரைகளைக் குறித்து அவன் தன்னழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச்சொல்லி, என்தசையை அவனுக்குஅறிவித்துவந்து உங்கள்திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணு மென்கிருள்.

[எங்கானல்] - ஸமவத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க, 'எம்' என்றது - ஒன்றைத் தம்மதாக்கிக் கொடுத்தல்லது யரிக்கமாட்டாத உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்காகவரும் மமகாரம் உத்தேஶ்யமாயிருக்குமிறே. தன்னை ஸமவத்விஷயத்துக்குஆக்கினவன்றே தன்னதடங்கலும் அங்குத்தைக்கு ஶேஷமாயிருக்க, உபகாரஸ்ம்ருதியிறே இப்படி சொல்லுவித்தது. ஆத்மஸமர்ப்பணத்துக்கும் அடி இதுவிறே. கானலென்கிறது - கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். [அகங்கழிவாய்] - உள்ளான கழியிடத்து. அந்தர்க்ருஹப்ரவேஶத்துக்கு அநுமதி வேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. "க்ஷயிதா நிரஹஸ்யாநி"

முதற்பாட்டு - எங்கானல் இத்யாதி. "செங்கால மடநாராய்" என்று தொடங்கி "செழுநீரோ" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - சிலநாரைகளை இத்யாதி. குணங்களாலும் என்றது "திருமூழிக்களத்துறையும்" என்றத்தைப்பற்ற.

'ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க' என்றவநந்தரம், "எம் என்று மமகரிப்பானென்னென்ன" என்று கூட்டுவது. பரிஹாரம் - எம் என்றது இத்யாதி. உபகாரமாவது-இத்தசையிலேவந்து முகங்காட்டினது. எல்லாமென்றாலும் மமகாரம த்யாஜ்யமன்றோவென்ன - பிறர்க்கு இத்யாதி. "ஸமவத்விஷயத்தில்" இத்யாதி வாக்ய விவரணம் - தன்னை ஸமவத்விஷயத்துக்கு இத்யாதி. அங்குத்தைக்கு என்றது - வடகர்க்கு என்றபடி. இப்படி சொல்லுவித்தது என்றது - "எங்கானல்" என்னும்படி சொல்லுவித்ததென்றபடி. அப்படி உபகாரஸ்ம்ருதியாலே மமகாரம்பண்ணின இடமுண்டோவென்ன -ஆத்மஸமர்ப்பணத்துக்கும் இத்யாதி. இதுக்கு "எனதாவி தந்தொழிந்தேன்" என்றதிலே நோக்கு. நெய்தல் நிலமாவது - கடற்கரைமாத்ரம். எங்களுடையகானலில் உள்ளானகழியிடத்து என்று ஸமுதார்த்தம். "அகங்கழிவாய்" என்ற பதங்களுக்கு பாவம் - அந்தர்க்ருஹ இத்யாதி. அந்தரங்கத்வ கார்யத்தைக்காட்டுகிறார்-க்ஷயிதாநி இத்யாதி. "க்ஷயிதாநிரஹஸ்யாநி ... ...:" இதி மஹாபாரதே கர்ணவசநம் (க). இவற்

(கதிதாநிரஹஸ்யாநி) என்கிறபடியே வர்த்திக்கின்றன. [இரைதேர்ந்து] - இரைதேடி; “க்ருஹேபுக்தமஸங்கிதம்” (க்ருஹேபுக்தமஸங்கிதம்) என்கிறபடியே: பண்டு தனக்கு உபகரித்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக. [இங்கு]-இத்தலையை யழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலவிருந்த அவனைப்போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றேனென்கிறாள். [இனிதமரும்] - இனிதாக நம்மோடே ஸஹவாஸம் பண்ணப் பெறுகை; விலக்ஷணபோகங்களை ஸம்ஜித்து வர்த்திக்குமென்றுமாம் [செங்கால]-சிவந்த காலையுடைய. என்மடியிலேயிருக்கும் கால்போலேயிருந்தத் நான் தலையிலே வைத்துக் கொள்ளப்புகுகிற காலும். [மடநாராய்]-ஸவ்யமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்]- தூதுபோவார்க்குஅடுத்தணித்தாகத் திருமூழிக்களத்திலே நிற்கையாலே, பரமபதத்திற்காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [கொங்கார்பூந்துழாய்முடி யெங்குடக்கூத்தர்க்கு] - ஒப்பனையையும் மநோஹாரிசேஷ்டிதத்தையும் இரண்டையும் எனக்கு ஆக்கிவைத்தவர்க்கு. “எம்” என்கிறது - ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலு மிரண்டிலுமாகிறது. ‘எம்’ என்று - ஆத்மநி பஹுவசநம். [என்தூதாய்] - அவ்வொப்பனையிலும் சேஷ்டிதத்திலுந்தோற்று அவனைப் பெற்று ஜீவித்தல், இல்லையாகில் முடிதலாயிருக்கிற என் தூதக்ருத்யத்திலே யதிகரித்து. [நுங்கால்களென்றலைமேல்] - உபகாரகரான உங்களுடையகாலை, நீங்கள் உபகரிக்க ஜீவிக்கவிருக்கிற என்தலைமேலே; மயிர்கழுவிப் பூச்சூட விருப்பாரைப்போலே. அவற்றின் காலாகில் இவள் தலையிலே யிருக்கக்கண்டன; இவள் தலையாகில் அவற்றின் கால்வைக்கக் கண்டிருந்தது; இரண்டும் பரார்யமாயிருந்தபடி. [கெழுமீரோ]-ஒரு விதிகொண்டு ப்ரவர்த்திக்க வேண்டாவாய்த்து இங்கு; † அவனுக்காக்கினவாறே உங்களதாயிருக்குமிறே. கோடு வந்துசேரீகோளோ: [நுமரோடே] - “ஸவாத்யஸாத்யஸாதந:” (ஸூத்ரபௌத்ர

றைத் தூதுவிட நினைக்கிறவள் இரைதேடினத்தைச் சொல்லுவானேனென்னென்ன - பண்டு தனக்குதித்யாதி. பண்டு உபகரிக்கையாவது-தூதுபோவதற்குமுன்னே தன் சுழியிலே இரைதேடுகை. “இனிதமரும்” என்றதுக்கு அர்த்தத்வயம் - அமருகை - பொருகை - பொருந்துகையாய். இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப் பெறுகையாதல், சேவலும் பேடையும் விலக்ஷண போகங்களை ஸம்ஜித்து வர்த்திக்கையாதல்; இந்தஅர்த்தத்வயத்தையும் அருளிச்செய்கிறார்-இனிதாக இத்யாதிவாக்யத்வயத்தாலே. இத்தால் - “உபசிதாநிகலேந்ராணி” என்றதைச் சொல்லுகிறதென்றுக் கண்டுகொள்வது. காலில் சிவப்பைச் சொல்லுகிறதுக்கு ப்ரயோஜனம் - என்மடியிலே இத்யாதி. மடியிலிருக்குங்கால் - நாயகன் கால். அடுத்தணித்தாக - மிகவும் ஸந்நிஹிதமாக. கொங்கு - பரிமளம், ஆர் - பூர்ணமான, பூந்துழாய்முடி - ஒப்பனைக்குடைய திருக்கோலத்தை முடியிலேயுடைய வென்று பதார்த்தம். “இரண்டையு மெனக்காக்கிவைத்த” என்றதுக்கு ப்ரமேயமென்ன - எம் என்கிறது இத்யாதி. “தலைமேல்” என்னவமைந்திருக்க, “என்றலைமேல்” என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - மயிர்கழுவி இத்யாதி. அதாவது - தன்தலை அவற்றின் காலுக்கு அர்ஹமென்றுமிடர் தோற்றுகைக்காக விசேஷிக்கிறதென்றபடி. “நுங்கால்கள், என்தலை” என்ற பதச்சேர்த்திக்கு ஹாவம் - அவற்றின் இத்யாதி வாக்யத்வயம். இத்தால் ஃபலிதம் - இரண்டும் இத்யாதி. “கெழுமீரோ!” என்ற ஸ்வரத்துக்குஹாவம் - ஒருவிதி இத்யாதி. அதுக்கடியேதென்ன - அவனதாக்கின இத்யாதி கெழுமீரோ-சேருங்கோள். “ந தஜ்ஞாதவ்யா நாராயணஸ்ய ஸம் நாராயணாஸ்ய: ஸவாத்யஸாத்ய ஸாதந: ஸ்வஸ்த்யஸ்மை ஸஹிதாய தே” இதி ஸங்க்ஷேபே (கக). அப்படி பத்நிகளும் உத்தேச்யரோவென்ன-ஆசார்யவத் இத்யாதி. “ஆசார்யவதாசார்யதாரேவ்ருத்தி:, ததாஸவர்ணேஷு ப்ராவயதிவ்ருத்தஸ்வவஸ்வஹ்வாமிநி, உச்சிஷ்டாஸநவர்ஜம்; ஆசார்யவதாசார்ய

† ‘அவனுக்கு’ என்கிற இந்தப்பாடம் அடையவளைந்தானரும்பதத்துக்குச் சேரும், நீயாரும்பதத்துக்கு ‘அவனது’ என்று பாடமாகத் தோற்றுகிறது.

ஸ்ஸகண:)என்னுமாபோலே,ஸபரிகரமாக.“ஆசார்யவதாசார்யபுத்ரே வ்ருத்தி:” (ஆசார்யவதாசார்யபுத்ரேவ்ருத்தி:) என்னக்கடவதிறே. (க)

இரண்டாம் பாட்டு.

நமரோடும்பிரியாதேநீரும்நுஞ்சேவலுமாய்
அமர்காதற்குருகினங்காள்! அணிமுழிக்களத்துறையும்
எமராலும்பழிப்புண்டு இங்குஎன்? தம்மாலிழிப்புண்டு
தமரோடங்குறைவார்க்குத்தக்கிலமே? கேளீரே!

ஆ.—(நமரோடும்) - “அவருக்குச் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கோள்” என்று குருகுகளையழைத்துவைத்து, நடுவே, தன்னோவாலே, “தம்மாலும் உபேக்ஷிதையாய் ஸ்வஜனங்களாலும் கர்ஹிதையாயிங்கேயிருக்கும் இவ்விருப்பென் செய்ய! இவ்விருப்பில் முடிகையேநன்று” என்று தன்னிலேசொல்லி இன்னாதாய், பின்னையும் அவனை விடமாட்டாமையாலே, “தாமும் தம் பரிஜனங்களுமாயிருந்த இருப்புக் காண்கைக்கு நான் அனர்ஹையாயிழந்துபோமித்தனையோ?” என்று கேளீரென்று கொண்டு,தான் சொல்லப்புக்கவார்த்தையை அவற்றுக்குச் சொல்லிமுடிக்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், சிலகுருகுகளைக்குறித்து திருமூழிக்களத்து எம்பெருமானுக்குத் தாமும் தமக்கு நல்லாருமாயிருந்தஇருப்பை நான் இழந்தேபோமித்தனையோ? என்று அறிவியுங்கோள் என்கிறாள்.

[நமரோடும் என்றுதொடங்கி] - உங்களுடைய பந்துக்களோடும் பிரியாதே நீங்களும் உங்களுடைய சேவல்களும் ஸம்ச்லேஷியா நிற்பதுஞ்செய்து பரஸ்பரம் காதலையுடைய குருகினங்காள்! [அணிமூழிக்களத்துறையும் என்றுமேலுக்கு] - குருகினங்களைக்குறித்து வார்த்தை சொல்லுகிறவள், அரோசகத்திலே அத்தைத் தவிர்ந்து பந்துக்களாலும் இகழப்பட்டு திருமூழிக்களத்திலே உறைகிற தம்மாலும் உபேக்ஷிக்கப்பட்டிருக்கும் இவ்விருப்பில் முடிகையே நன்று என்று தன்னிலே விஷண்ணையாய் மீளவும் அவற்றைக்குறித்து தாம் தம்பரிஜனங்களோடே அங்கே நித்யஸம்ச்லிஷ்டரானவர்க்குநாங்களாகோமோ என்று கேளுங்கோள் என்று,தொடங்கின வார்த்தையை முடியச்சொல்லுகிறாள்.

ப.—அநந்தரம், “அஸாதாரணபரிஜனங்களோடே அநுபாவ்யராயிருக்கிற தமக்கு நாங்கள் அநுரூபரல்லோமோ?” என்று கேளுங்கோள் என்று சில குருகுகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நமரோடும் - சந்தாநுவர்த்திகளான பந்துஜனங்களோடும், பிரியாதே-, நீரும் - (சேவலையநுவியாநப்பண்ணும்) நீங்களும், நுஞ்சேவலுமாய் - உங்களையநுவியாநம்பண்ணுஞ்சேவலுமாய், அமர்காதல் - ஸம்ச்லேஷித்து வர்த்திக்கும்படியான ப்ரணயத்தை

த்ரே வ்ருத்தி:” இத்யாபஸ்தம்ப யர்மே. ‘எங்கானலகம்’ என்று தொடங்கி, ‘என்தூதாய் - நமரோடே - நுங்கால்களென்றலைமேல் கெழுமீரோ’ இத்யந்வய:. (க)

யுடைய, குருகினங்காள் - ! அணி - உஜ்ஜ்வலமான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற, தம்மால் - தம்மாலே, இழிப்புண்டு - காதாசித்க ஸம்ஶ்லேஷாநந்தரம் உபேக்ஷிக்கப்பட்டு, (அதடியாக), எமராலும் - என்னோடு அநுபந்தமுடையவராலும், பழிப்புண்டு - பழிக்கப்பட்டு, இங்கென் - இங்குத்தை யிருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு! தமரோடு - அஸாதாரணபரிஜநத்தோடே, அங்கு - அங்கே, உறைவார்க்கு - நித்யவாஸம்பண்ணுகிற தமக்கு, தக்கிலமே - நாங்களாகோமோ? கேளீரே - கேளுங்கோள்.

இ.—இரண்டாம்பாட்டில், சிலகுருகுகளைக் குறித்து தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற விருப்பை நான் இழந்தேபோமித்தனையோ? என்று அறியுங்கோள் என்கிறாள்.

[நுமரோடும் பிரியாதே] - "தமரோடங்குறைவார்" என்றதுக்கு, ப்ராப்யவஸ்துவைச்சொல்ல நினைக்கிறது; அதுக்கீடாக இவையும் குறைபற்றிருக்கிறபடி. குறைவாளர் கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ? [நீரும்நுஞ்சேவலுமாய்] - சேவலின் நினைவறிந்து பரிமாறும்நீரும்உம்முடையகருத்தறிந்து பரிமாறுஞ்சேவலுமாய் ஸம்ஶ்லேஷரஸம் அறியும் நீங்கள். பிரிந்தாருடைய செல்லாமையும்அறியவேண்டாவோ! உண்டார்க்கு உண்ணாதார் பசி தீர்க்கவேண்டாவோ? [அமர்காதல் குருகினங்காள்] - பரஸ்பரம்பொருந்தின காதல்; ஆசையிலே விஶ்லேஷத்தை ஸஹிப்பித்த ஆசையுண்டாகாதே! ஆசையிலுங்குறைவற்று, விஶ்லேஷமின்றியிலே கருத்தறிந்து பரிமாறவுங் கடவதாயிருக்கப்பெறுவதே நீங்கள்! [குருகினங்காள்] - என்று ஸம்போதித்து வைத்துத் தொடங்கின வார்த்தை முடியச்சொல்லமாட்டாதவலஸாதிபாலே அர்த்தோக்தியிலே அத்தைமுடித்துத் தானிருக்கிற இருப்பிலே விஷண்ணையாகிறாள். [எமராலும் பழிப்புண்டு அணிமூழிக்களத்துறையும் தம்மாலும் இழிப்புண்டு] - காதாசித்க ஸம்ஶ்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள். காதாசித்கமாக ஸம்ஶ்லேஷித்தவளவிலே தாமும் உபேக்ஷித்தார்; பந்துக்கள் கைவிட்டதுவே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும். பிறப்பட்டார்க்குக் காட்டிக் கொடுக்கவந்து நிற்கிற நிலையாலும் கைக்கொள்ளவேணும். இரண்டும் என்னளவிலே உபேக்ஷா ஹேதுவாவதே! [இங்கு என்] - இவ்விருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு? "ஸம்ஸாரத்தில் ஒருதேஶவிஶேஷத்திலே பெறவேண்டித்தான் ஆறியிருக்கிறேனோ?" என்று தன்னிலே விஷண்ணையாய்ப் பின்னையும் தன்செல்லாமையாலே அவற்றைக் குறித்து வார்த்தை சொல்லுகிறாள். [தமரோடு இத்யாதி] - தம் பரிஜநங்களோடே பக்கே நித்யவாஸம்பண்ணுகிற தமக்கு நாங்களாகோமோ என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற இருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றிருப்பாராகாரோ என்று கேளுங்கோள்!

ஈடு.—இரண்டாம்பாட்டு. சில குருகினங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமாயிருந்தவிருப்பை நானிழந்தேபோமித்தனையோ?" என்றறிவியுங்கோளென்கிறாள்.

இரண்டாம்பாட்டு — நுமரோடும் இத்யாதி. "தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமே கேளீர்" என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை - சிலகுருகினங்களை இத்யாதி.

[நுமரோடும்பிரியாதே] - "தமரோடங்குறைவார்" என்றுய்த்து ப்ராப்யவஸ்துவைச்சொல்ல நினைக்கிறது; அப்படியே இவையும் குறைவற்றிருக்கிறபடி. குறைவாளர் கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ! உண்டார்க்கு, பட்டினிகிடந்தார் பசி பரிஹரிக்க ப்ராப்தமிறே. [நீரும் நுஞ்சேவலுமாய்] - சேவல்நினைவறிந்து பரிமாறும் நீரும், உம்முடைய கருத்தறிந்து பரிமாறும்சேவலுமாய். ஸம்ச்லேஷரஸமறியும் நீங்கள், பிரிந்தாருடைய செல்லாமையும் அறியவேண்டாவோ! [அமர்காதல் குருகினங்காள்] - பரஸ்பரம் பொருந்தின காதல். ஆசையிலே, விச்லேஷத்தை ஃபலிப்பியாதவாசையுண்டாகாதே! ஆசையிலுங்குறைவற்று, விச்லேஷமுமின்றியிலே, கருத்தறிந்து பரிமாறவுங்கடவதாயிருப்பதே நீங்கள்முன்னம்! "குருகினங்காள்" என்று ஸம்போதித்துவைத்து, தொடங்கின வார்த்தை முடியச்சொல்லமாட்டாத பலஹாநியாலே அர்த்தோக்தியிலே யத்தை முடித்து, தானிருக்கிறவிருப்பிலே விஷண்ணையாகிறாள். [எமராலும்பழிப்புண்டு - அணிமுழிக்களத்துறையும் தம்மாலு மிழிப்புண்டு] - காதாசித்க ஸம்ச்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள்; காதாசித்க ஸம்ச்லேஷத்தளவிலே தாமும் உபேக்ஷித்தார். பந்துக்கள் கைவிட்டதே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும்; பிற்பாடர்க்குக் காட்சி கொடுக்கவந்துநிற்கிற நிலையாகையாலும் கைக்கொள்ளவேணும்; இரண்டும் என்னளவில் உபேக்ஷாஹேதுவாவதே! [இங்கென்] - இவ்விருப்புக்கு என்ன ப்ரயோஜநமுண்டு? தம்மைப்பெற்றிருக்கிறேனோ, பந்துக்களைப் பெற்றிருக்கிறேனோ? இங்குள்ளார்கைவிட்டால் பின்பு தம்மேல்லைக்குள்ளே யாக்கிக்கொள்ளவேண்டாவோ? பகவத் விஷயத்திலே புட்புக புட்புக, அன்றுதொடங்கிக் கைவிடுவர்களிறே ஸம்ஸாரத்திலுள்ளார். †("சரீர ஸமநந்தரத்திலே ஒருதேசவிசேஷத்திலே பெறவேண்டித்தான் ஆறியிருக்கிறேனோ?" என்று தன்னிலே விஷண்ணையாய், அத்தை) அவ்வளவிலேவிச்சேதித்து, பின்னையும், தன்செல்லாமையாலே அவற்றைக்குறித்து வார்த்தைசொல்லுகிறாள்:—[தமரோடங்குறைவார்க்கு] - தம்பரிஜனங்களோடே அங்கே நித்யவாஸம் பண்ணுகிறதமக்கு, நாங்களாகோமோ?

"நுமரோடும்" என்றிவற்றைச்சொன்னதுக்கு பாவம் - தமரோடு இத்யாதி. இவை குறைவற்றால் தனக்கு ப்ரயோஜநமேதென்ன-குறைவாளர் இத்யாதி. "தீர்க்கவேணும்" என்கிறநிர்ப்பந்தமேதென்ன,- லௌகிக த்ருஷ்டாந்தத்தாலே யத்தை த்ருடீகரிக்கிறார் - உண்டார்க்கு இத்யாதி. இத்தால்பாவம் - ஸம்ச்லேஷ இத்யாதி. "அமர்காதல்" என்றதுக்கு - பரஸ்பரஸத்ருசமான காதலென்று கீழருளிச்செய்தது, அமருதல் - காலத்தோடேபொருந்துதலாய், நித்யமான காதலென்றர்த்தாந்தரமாதல், கீழ்வாக்யத்துக்கு ஃபலிதமாதல் - ஆசையிலே இத்யாதி. "அமர்காதல், நுமரோடும் பிரியாதே, நீரும் நுஞ்சேவலுமாய்" என்கிற பதத்ரயங்களாலும் ஃபலிதம் - ஆசையிலும் இத்யாதி. "இங்கென்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - குருகினங்காள்என்று இத்யாதி. "தக்கிலமேகேளீர்" என்று முடியச்சொல்லமாட்டாத பலஹாநியாலேயென்றபடி. பதத்வயதுக்கும்பாவம் - காதாசித்க இத்யாதி வாக்யத்வயம். கீழ்வாக்யத்வயஃபலிதம்-பந்துக்கள் இத்யாதிவாக்யத்ரயம். என், ப்ரயோஜநமில்லையோ? என்ன-தம்மைப்பெற்று இத்யாதி. ஆனால் செய்யவடுப்பதென்? என்ன - இங்குள்ளார் இத்யாதி. காதாசித்க ஸம்ச்லேஷமாத்ரத்திலே பந்துக்கள் விடுவார்களோவென்ன - பகவத்விஷயத்திலே இத்யாதி. மேலுக்கவதாரிகை - அவ்வளவிலே இத்யாதி. அவ்வளவிலே - விஷண்ணையானவளவிலே. விச்சேதித்து - விஷாதத்தைவிட்டு. தக்கிலமே - தகோமோ? கீழ்வாக்யத்துக்குபாவம் -

---

† குண்டலிதம் சில ஸ்ரீகோசங்களில் இல்லையென்கிறார்கள்.

என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற விருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" என்றிருப்பாராகாரோ? என்று கேளுங்கோள். (உ)

மூன்றாம் பாட்டு.

தக்கிலமே?கேளீர்கள்தடம்புனல்வாய்இரைதேரும்
கொக்கினங்காள்குருகினங்காள்குளிர்மூழிக்களத்துறையும்
செக்கமலத்தலர்போலும் கண்கைகால்செங்கனிவாய்
அக்கமலத்திலைபோலும் திருமேனியடிகளுக்கே.

ஆ —(தக்கிலமே.)-தன்னைக்காண்கைக்கு நான் அர்ஹையன்றியே அவ்வழகையுங் காணப்பெறாதே இழந்துபோமித்தனையோ? என்றுகேளீர் என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், சிலகொக்கினங்களையும், குருகினங்களையும் நோக்கித் தன்னழகைக் காண்கைக்கு நாங்கள் போக்யதையை உடையோமல்லோமோ? என்று கேளீர் என்கிறாள்.

[தடம்புனல்வாய்இரைதேரும்]- பொய்கைகளுடைய நீரிலே இரைதேடுகிற. [செக்கமலம்] - செந்தாமரை. [அடிகள்] - ஸ்வாமி.

ப.—அநந்தரம், அவயவங்களோடு ஸமுதாயத்தோடு வாசியற அபிமதபோக்யமான வடிவையுடையவர்க்கு நாங்கள் அபோக்யரோ? கேளுங்கோள்! என்று சில சில கொக்கினங்களையும் குருகினங்களையுங்கூட அபேக்ஷிக்கிறாள்.

தட - பெரிய, புனல்வாய் - தடாகத்திலே, இரைதேரும் - ஆமிஷார்த்திகளாய்க்கொண்டு, (என்அபிநிவேசாநுகுணமாகத் தனித்தனியே திரள்திரளாயிருக்கிற), கொக்கினங்காள் குருகினங்காள்-! குளிர் - ப்ரஹ்லாதகரமான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம் பண்ணுமவராய், செம் - சிவந்த, கமலத்து - கமலத்தின், அலர்போலும் - அலர்போலேயிருக்கிற, கண் - ("ஜிதந்தே" என்னப் பண்ணும்) கண்ணையும், கை - ("ஸவ்யே ஷட்₃வ்யே ஷோட₃ஶ ஸஹஸ்ரம் பரிஷ்வங்க₃தி" என்று ப்ரார்த்திக்கும்படியே யணைக்கும்) கையையும், கால்-("உபாஸ்தே ஸ்ரீபாத₃பத்₃மம்" என்று ஆஸ்ரயிக்கும்) திருவடிகளையும், செங்கனிவாய் - ("மாஶுச:" என்று ஸாந்த்வவாதம் பண்ணும்) சிவந்தகனிநிறத் திருப்பவளத்தையும், அக்கமலத்து - அந்தக்கமலத்துக்குப்பரபாகமான, இலைபோலும் - இலைச்செறிவுபோலே யிருக்கிற ஸ்யாமளமான, திருமேனி-திருமேனியையுமுடையராய், அடிகளுக்கு - அவ்வடிவழகைக்காட்டி எனக்கு

தாழும்தமக்கு இத்யாதி. அதவா, "தமரோடு" என்று விசேஷித்ததற்கு தாவாந்தரமாதல் - தாழும் தமக்கு இத்யாதி. அதாவது - தாம் மாத்ரமன்றிக்கே ததீயபர்யந்தமாக அபேக்ஷித்த நாங்கள் அத்தைக்கு ஆகோமோவென்று வ்யங்க்யம். 'நமரோடும்' என்றதொடங்கி, 'குருகினங்காள் - எமராலும் பழிப்புண்டு - அணிமூழிக்களத்துறையும்-தம்மாலுமிழிப்புண்டு - இங்கென்?, - தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமேகேளீர்' இத்யந்வய: பழிப்புண்கை - பழிக்கப்படுகை. இழிப்புண்கை - உபேக்ஷிக்கப்படுகை. (ஊ)

ஸ்வாமியானவர்க்கு, தக்கிலமே - (இவ்வழகை யநுபவிக்கைக்கு நாங்கள்) யோக்யரல்லோமோ என்று, கேளீர்கள் - கேளுங்கோள்.

இ.—மூன்றாம்பாட்டில், சிலகொக்கினங்களையும் குருகினங்களையும் நோக்கித் தன்அழகு காண்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோவென்று கேளீர் என்கிறாள்.

[தக்கிலமே கேளீர்கள்] - ஓராறுதிபெறக் கேட்டுப்போருங்கோள்! அவர் "வேணும்" என்னில் நாமும் நம்ப்ராணனைநோக்கவும், அவர் "வேண்டா" என்றாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் நிஸ்சிதமாகக்கேட்டுப் போருங்கோள். [தடம்புனல் வாயிரைதேரும்]-பொய்கையின்னீரிலே இரைதேருகிற; உபவாஸக்ருஶையான என்னைப் போலன்றியே இரை மிடற்றுக்குக் கீழேயிழியும்படியிறே உங்கள் பௌஷ்கல்யம். [கொக்கினங்காள் - குருகினங்காள்] - "யாம்ஶ்ச பஶ்யேந் ஸஹஸா" என்கிறபடியே கண்ணால் கண்டவற்றை அடைய வவுகிறாள். "சிலவற்றைப் போகவிட்டோம், அத்தாலே நங்கார்யம் தலைக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே. [குளிர்மூழிக் களத்துறையும்] - விரஹதாப தப்தையாயிருக்கிற எனக்கு அந்தஸ்ரமஹரமான தேஶத்தில் ப்ராப்தியரிதாவதே! [செக்கமலம் இத்யாதி] - இக்குளிர்த்திக்கு அடியான அகவாயில் வாசத்தடமிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன்; முதலுறவு பண்ணும் கண், அந்நோக்குக்குத் தோற்றாரை அணைக்கும் கை, ஸ்பர்ஶத்துக்குத் தோற்றார்விழுந் திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை ஸாந்த்வநம்பண்ணி ஶ்ரிப்பிக்கும் முறுவல். [அக்கமலத்திலைபோலுந் திருமேனி] - அவர்களுக்கு உஜ்ஜீவநமான வடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரை யிலைபோலேயாய்த்து திருமேனி. வெண்டாமரையென்னில் விஜாதீயமென்று 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு]-வடிவழகையும் அவயவஶோபையையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு இவ்வடிவுக்குத் தோற்று வைவர்ண்யத்தை ஶரித்திருப்பார் யோக்யரல்லரோ? என்றுகேட்டுப் போருங்கோள்!

ஈடு.—மூன்றாம் பாட்டு. சில கொக்கினங்களையும் குருகினங்களையும்நோக்கி, தன்அழகுகாண்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோ? என்றுகேளீர் என்கிறாள்.

[தக்கிலமேகேளீர்கள்] - நாம்ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டுப் போருங்கோள். அவன் இன்னம் "இதுவேணும்" என்றிருந்தானாகில் ப்ராணன்களை வருந்தி நோக்கிக்கொண்டுகிடக்கவும், "வேண்டா" என்றிருந்தானாகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் அறுதியாகக்கேட்டுவிடுங்கோள். [தடம்புனல்வாயிரைதேரும்] - மிக்க ஜல ஸம்ருத்தியையுடைய பொய்கையில் நீரிலே இரைதேடுகிறவளவாயிருந்தது உங்களுக்கு. ("உபவாஸக்ருஶாம்" (உபவாஸக்ருஶாம்) என்கிறபடியே) † உபவாஸக்ருஶையான என்னைப்போலன்றியே, இரை மிடற்றுக்குக்கீழ் இழியும்படியிறே உங்கள்பௌஷ்கல்யம்!

மூன்றாம்பாட்டு.—தக்கிலமே இத்யாதி. "கொக்கினங்காள்குருகினங்காள் - திருமேனியடிகளுக்கு-தக்கிலமேகேளீர்கள்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலகொக்கினங்களையும் இத்யாதி.

மீளவும் "தக்கிலமேகேளீர்" என்றதுக்கு பாவம் - நாமொன்றிலே இத்யாதி. விவரணம்-அவன்இன்னம் இத்யாதி. "தடம்புனல்" என்றதிலே, ஜலஸம்ருத்தியும் அர்த்தாத்ஸித்தம். விவரணம்-உபவாஸ இத்யாதி. கோய்யடி - மெத்தென்றவடி. 'இனங்காள்' என்ற பஹுவசநார்த்தம் -

---

† குண்டலிதம் இரண்டு ஸ்ரீகோஶங்களில் இல்லையென்கிறார்கள்.

[கொக்கினங்காள் குருகினங்காள்] - குருகு - கொக்கினங்கள். "யாம்கபீநாம்ஸஹஸ்ராணி" (யாம்கபீநாம்ஸஹஸ்ராணி) என்கிறபடியே, கண்டுங் கண்டவற்றையுடைய வைக்கிறாள்; "சிலவற்றைப்போகவிட்டோம், அவை நங்கார்யம் தலைக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே! [குளிர்முழிக்களத்துறையும்] - விரஹதப்தையாயிருக்கிற எனக்கு அந்த ச்ரமஹரமான தேசத்தில் ப்ராப்தியரிதாவதே! [செக்கமலமித்யாதி] - அக்குளிர்த்திக்கு அடியான உள்ளில் வாசத்தடமிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன் முதலுறவுபண்ணும் கண்; அந்நோக்குக்குத் தோற்றாரையணைக்கும் கை; ஸ்பர்சத்துக்குத்தோற்றார் விழுந்திருவடிகள்; திருவடிகளிலே விழுந்தாரை †ஸாந்த்வநம்பண்ணி பரிப்பிக்கும் முறுவல். [அக்கமலத்திலைபோலுந் திருமேனி] - அவர்களுக்கு உஜ்ஜீவநமான வடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரையிலைபோலே யாய்த்துத் திருமேனி. வெண்டாமரையேன்னில் விஜாதீயமென்று, 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு] - அந்த அவயவசோபையையும் வடிவழகையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு. இவ்வடிவழகுக்குத் தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் அங்குத்தைக்கு அயோக்யரோ என்று கேட்டுப்போருங்கோள். அவன் புருஷோத்தமனானால், இவள் * நாரீணாமுத்தமையாய்போது இப்படியேயிருக்க வேணுமிறே. (௩)

நான்காம் பாட்டு.

திருமேனியடிகளுக்குத் தீவினையேன்விடுதூதாய்
திருமூழிக்களமென்னுஞ்செழுநகர்வாயணிமுகில்காள்!
திருமேனி அவட்கருளீரென்றக்கால் உம்மைத்தன்
திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே.

யாம்கபீநாம் இத்யாதி. "யாம்கபீநாம்ஸஹஸ்ராணி ஸுபஹூந்யயுதாநி ச | திக்ஷு ஸர்வாஸு மார்கந்தே ஸேயமாஸாதிதா மயா" இதி ஸுந்தரகாண்டே ஸ்ரீமத்திருவடி வார ஹநுமாந் (௩௦-௩). முந்துறப் போகவிட்டவை வருமளவும் ஆறியிராமல் கண்டவற்றையெல்லாம் தூதுவிடுவானென்? என்ன-சிலவற்றை இத்யாதி. திருமூழிக்களத்திலுண்டான ஸௌப்பத்தை வர்ணிக்கிறதுக்கு பாவம்-விரஹதப்தையாய் இத்யாதி. வாசத்தடம் என்றது - அவயவங்கள் தாமரைகளாய், அதுகளிருக்குமிடம் தடாகமென்னுமத்தாலே. "கண், கை, கால்" என்கிற க்ரமத்துக்கு பாவம் - முதலுறவு இத்யாதி. அவர்களுக்கு - அநுபவிப்பார்க்கு. பரபாகம் - அவயவங்களுக்கு இத்யாதி. "கமலத்திலை" என்னாதே, "அக்கமலம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - வெண்டாமரை இத்யாதி. அதாவது - ஸாமாந்யேந "கமலம்" என்றால், வெண்டாமரையையுஞ் சொல்லுமாகையாலே, வைஜாத்ய பரிஹாரார்த்தமாக "அக்கமலம்" என்று செந்தாமரையை விசேஷிக்கிறதென்றபடி. "கண்கைகால் செங்கனிவாய் - திருமேனி" என்றவனந்தரம் "அடிகளுக்கே" என்றதுக்கு பாவம் - அந்த அவயவ இத்யாதி. கீழ்வாக்யத்துக்கு பாவம்-இவ்வடிவழகுக்கு இத்யாதி. வாசஸம்பந்தமில்லாதிருக்க, "வைவர்ண்யத்தை தரித்திருப்பார்" என்கிறதென்? என்ன - அவன் புருஷோத்தமன் இத்யாதி. 'தடம்புனல்வாய்' என்று தொடங்கி, 'அடிகட்கு - தக்கிலமே கேளீர்கள்' இத்யர்த்தம். (௩)

† ஸாந்த்வநம் பண்ணுதல் - நல்வார்த்தை சொல்லுதல்.

ஆ.—(திருமேனி.) - திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாய் அணிமுகில் காள்! திருமேனி யவட்கருளீர் என்று இத்தனையுஞ்சொன்னாலும், உங்களுக்குப் பரமயநமான திருமேனியொளியை யுங்களை யிழப்பித்து, அவ்வூரில் நின்றும் போகவிடுக்குமோ? இத்தனையுஞ் சொன்னால் என்செய்யும்? என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிலமேகங்களை நோக்கி 'என்வார்த்தையை அவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியென்று தொடங்கி] - தன்வடிவழகாலே ஜகத்தையடைய அடிமைகொண்டிருக்கிறவர்க்கு அவ்வழகையிழந்து நோவுபடுகைக்கீடான பாபத்தைப் பண்ணின என்னுடைய தூதாய், திருமூழிக்களமென்று ப்ரஸித்தமாயிருக்கிற திருநகரியில், அழகிய முகில்காள்! [திருமேனியவட்கென்று மேலுக்கு] - அவளுக்கு உம்முடைய திருமேனியை அருளீர் என்று சொன்னக்கால், உங்களைத் தன்திருமேனியில் ஒளியைமாற்றி, உங்கள்அழகெல்லாம்தெரியும்படிநீங்கள்நிற்கும் நிர்மலமான ஆகாசத்தில் நின்றும் உங்களைப்போக்குமோ! திருமூழிக்களமென்னுஞ் செழுநகரில், திருமேனியடிகளுக்கு என்றுமாம்.

ப.—அநந்தரம், 'அழகாலேஅடிமைகொள்ளுமவர்க்கு என் தூதாய்ச்சென்று, உம்முடைய திருமேனியை யவளுக்கு உபகரியீரென்று ஒருவார்த்தைசொன்னால் உங்கள் ஸாரூப்யத்தையும் தேசவாஸத்தையுந் தவிர்க்குமோ' என்று சிலமேகங்களைக் குறித்து வார்த்தைசொல்லுகிறாள்.

அணி-தர்சநீயமான வடிவையுடைய, முகில்காள்-! திருமூழிக்களமென்னும்- "பின்னானார்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்னும்படி ப்ரஸித்தமான, செழுநகர்வாய் - விலக்ஷணநகரத்திலே வர்த்திக்கிறவராய், திருமேனியடிகளுக்கு - "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்று வடிவுதானே ஸர்வாதிகத்வ ப்ரகாசகமான சேஷித்வத்தையுடையவர்க்கு, தீவினையேன்-(அவரோடுஉறவுண்டாயிருக்க அநுபவிக்கப்பெறாத) க்ரூரமான பாபத்தையுடைய நான், விடு - விடுகிற, தூதாய் - தூதராய்ச்சென்று, 'அவட்கு - அவளுக்கு, திருமேனி - உம்முடைய நிரதிசய போக்யமான வடிவை, அருளீர் - உபகரித்தருளீர்' என்றக்கால் - என்று ஒருஉக்தி நேர்ந்தக்கால், உம்மை - (பாரார்த்யமாகவார்த்தைசொன்ன உங்களை), தன் திருமேனி ஒளி - (தான்அடியிலே யுங்களுக்குத்தந்த)தன்திருமேனியிலொளியை, அகற்றி - தவிர்த்து, தெளிவிசும்பு கடியுமே - விலக்ஷணமான ஆகாசத்தில் வர்த்தியாதபடிபண்ணுமோ? ஸ்வார்த்தமாக அபேக்ஷித்தார்க்குங் கொடுக்குமவன், எனக்காக அபேக்ஷித்ததுக்காக ஸாரூப்யத்தையும் விஷ்ணுபதாச்ரயத்வத்தையும் தவிர்க்கை அஸம்பாவிதமென்கிறாள்.

இ.—நாலாம்பாட்டில், சிலமேகங்களைநோக்கி 'என்ஸாவத்தை அவனுக்குச் சொன்னால் உங்களை தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியடிகளுக்கு] - ஸ்வரூபகுண விபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படியிருக்கிறவர்க்கு. வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க் கென்றுமாம். "ஸுவஸா: ப்ரக்ஷிவெஷிரெ" என்கிறபடியே, ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன் விடு தூதாய்] - ஸர்வ ஸாதாரணமான வடிவையிழந்து உங்கள்காலிலே விழவேண்டும்

படியான என்னுடைய தௌத்யத்திலே அபிகரித்து. [திருமூழிக்களமென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்கு வந்துநிற்கிற இடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] - பரமபதத்திற்காட்டிலுண்டான ஏற்றம். செழுநகர்வாய் வர்த்திக்கிற அழகிய முகில்காள்! என்னுதல், செழுநகர்வாசலிலே செப்புக்கோள் என்னுதல். செழுநகர் வாய்ச்சென்று செப்புக்கோளென்னுதல். [திருமேனியவட்கருளீர்] - பரமபோக்யமான திருவுடம்பை, ஆசைப்பட்டவர்களுக்குக் கொடுத்தாலாகாதோ? இவ்வுடம்பு உமக்கு நீர் கண்டது என்றிருக்கிறீரோ? என்று செல்லுக்கோள்! "ஜ்ஞாநீது" என்கிறபடியே இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ என்று சொல்லுக்கோள; காமினிக்கு ஸ்வரூபாபிகளிற் காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] - ப்ரணயித்வத்தாலேபோனால் க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] - "வாசாயதீந்த்ரமநஸா" என்று உங்களுக்கு ஒருவார்த்தையன்றோ சொல்லவேண்டுவது? [உம்மை] — இப்படி உபகாரகராயிருக்கிற உங்களை. [தன்திருமேனி யொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே] - உங்கள் வடிவிலுண்டான புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தில் நின்றும் உங்களையும் ஓட்டிலோ? உங்களுக்குஇல்லாதவற்றை உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றைத் தவிர்த்து உங்களைத் தண்டிக்குமோ? அல்பஸாதுர்யத்தைத் தவிர்த்து; "ஸர்வலோகைகவேத்யஸ்" என்கிறபடியே ஸர்வஸாதுர்யத்தையுந்தந்து ஆகாசமாத்ரஸ்திதியாவன்றிக்கே, பரமாகாசத்தையுந் தாராதோ? உங்களுடைய உக்தியாத்ரத்திலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநம் கனத்திருக்க, ஆறியிருக்கக்கடவீர்களோ?

ஈடு.—நாலாம்பாட்டு. சில மேகங்களைநோக்கி, 'என்வார்த்தையை அவனுக்குச்சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியடிகளுக்கு] - ஸ்வரூபகுணவிபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படி யிருக்கிறவர்க்கு; வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க்கு என்றுமாம். "அவஶாஃப்ரதிபேதிரே" (அவாமஸாஃப்ரதிபேதிரே) என்கிறபடியே ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன்விடுதூதாய்] - ஸர்வஸாதாரணமான உடம்பையிழந்து உங்கள் காலிலேவிழ வேண்டும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய தூதக்ருத்யத்திலே அதிகரித்து. [திருமூழிக்களமென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்காக வந்து நிற்கிறஇடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] - பரமபதத்திற்காட்டில் உண்டான ஏற்றம். செழுநகர்வாய்

நாலாம்பாட்டு—திருமேனி இத்யாதி. "அணிமுகில்காள் - என்றக்கால், உம்மைத் தன்திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே?" என்றவர்த்தைக் கடாக்ஷித்தவதாரிகை - சில மேகங்களை இத்யாதி.

"கண்டவாற்றால்" இத்யாதிப்படியே திருமேனியில் ஸௌலக்ஷண்யத்தாலே ஸர்வஸ்வாமி என்று தோற்றுகிறவர்க்கென்று முதலர்த்தம்; இவ்விடத்திலே, † "ஜிதஇவ ஶ்ரியாவஶ்யஸோ" இத்யாதி ஶ்லோகம் அநுஸந்தேயம். வடிவழகாலே ஜகத்தை ஶேஷமாக்கின ஸ்வாமிக்கென்று இரண்டாமர்த்தம். அநுகூலரையொழிய ஜகத்தையடைய வடிவழகாலே தோற்பிக்கக்கூடுமோவென்ன - அவஶாஃ இத்யாதி. "த்ருஷ்ட்வாஸீதாஸௌந்தர்யாபாதஸ்மாத் தவஞ்ஜீவஜஸா । யயாஸாதும்கௌஸல்யாவஶீவஶாஃ ப்ரதிபேதிரே" இதி ஸம்ப்ரவணி. (ரு) "தீவினையேன்" என்றதுக்குஹாவம் - ஸர்வஸாதாரணம் இத்யாதி. "என்னும்" என்று ப்ரஸித்தியேதென்ன - ஆர்த்தரக்ஷணத்துக்கு இத்யாதி. "செழு" என்று - அழகைச் சொன்னதுக்குஹாவம் - பரமபதத்தில் இத்யாதி. செழுநகர்வாய்-அழகியநகரத்திலே வர்த்திக்கிற

† ஸ்ரீவைகுண்டஸ்தவே - 26.

வர்த்திக்கிற அழகியமுகில்காளேன்னுதல்; செழுநகர்வாயடிகளுக்குச் செப்புமின்களேன்னுதல். [திருமேனியவட்கருளீர்] - பரார்த்தமான உடம்பை ஆசைப்பட்டார்க்குக் கொடுத்தலாகாதோ? "ஹஸ்தாநாம்" (பக்தாநாம்) என்கிறபடியே, இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ? என்றுசொல்லுங்கோள். காமினிகளுக்கு ஸ்வரூபாதிகளிற்காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] - ப்ரணயித்வமன்றோ குடிபோய்த்து; க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] - "வாசாதர்மமவாப்நுஹி" (வாசாதர்மமவாப்நுஹி) என்று உங்களுக்கொருவார்த்தையன்றோ நேரவேண்டுவது! [உம்மை]-இப்படி உபகாரகரான உங்களை. [தன்றிருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே]-உங்கள்வடிவிற் புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தினின்று உங்களையோட்டுமோ? உங்களுக்கு இதுக்கு முன்பில்லாதவற்றையும் உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றைத் தவிர்த்து உங்களை தண்டிக்குமோ? அல்ப ஸாத்ருஸ்யத்தைத்தவிர்த்து, "பரமம்ஸாம்யமுபைதி" (பரமம்ஸாம்யமுபைதி) என்கிறபடியே ஸர்வதாஸாத்ருஸ்யத்தையும்தந்து, ஆகாசமாத்ரஸ்த்திதிகளன்றிக்கே பரமகாசத்தையுந்தாரானோ? உங்களுடைய உக்திமாத்ரத்தாலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநமொத்திருக்க, ஆறியிருக்கக்கடவிகோளோ? (ச)

ஐந்தாம் பாட்டு.

தெளிவிசும்புகடிதோடித்தீவளைத்துமின்னிலகும்
ஒளிமுகில்காள்!திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்குத்
தெளிவிசும்புதிருநாடாத் தீவினையேன்மனத்துறையும்
துளிவார்கட்குழலார்க்குஎன்தூதுரைத்தல்செப்புமினே.

ஆ. — (தெளிவிசும்பு.)-அவளுக்கு அருளீர் என்னவமையுமோ? இன்னருக்கருளீரென்னவேண்டாவோ வென்னில், - யாவளொருத்தியுடைய நெஞ்சை யுமக்குத் திருநாடாகக்கொண்டு நீருறைகிறீர், அவளுக்கருளீர்! என்று சொல்லிகோளென்கிறாள்.

என்று ஸப்தார்த்தம். செப்புமின்கள் என்று - அத்யாஹார்யம். "ஹஸ்தாநாம்" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - பரார்த்தமான இத்யாதி. அருளீர்-அருளினலாகாதோ? திருமேனி பரார்த்தமோவென்ன - ஹஸ்தாநாம் இத்யாதி. ஸ்வரூபகுணாதிகளிருக்க, திருமேனியைச் சொல்லுவானென்னென்ன - காமினிகளுக்கு இத்யாதி. தன் திருமேனியோடொத்த வொளியையகற்றியென்று ஸப்தார்த்தம். "கடியுமே" என்றபிரிநிலையேகாரத்துக்குபாவம் - உங்களுக்குஇதுக்கு இத்யாதி. விவரணம் - அல்ப இத்யாதி. "என்றக்கால்" என்றத்தைக்கடாக்ஷித்துஹாவம் - உங்களுடைய இத்யாதி. எனக்கு ப்ரயோஜநம் என்றது - ஸத்தையை; உங்களுக்கு ப்ரயோஜநம் என்றது - பரமஸாம்யாபத்தியை. 'திருமூழிக்களமென்னும்' என்று தொடங்கி, 'முகில்காள் - திருமேனியடிகட்குத் தீவினையேன் விடுதூதாய் - திருமேனியவட்கருளீர் என்றக்கால்' என்று தொடங்கி கடியுமே யென்றந்வயமாதல்; அணிமுகில்காள் - தீவினையேன் விடுதூதாய் திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாய்வர்த்திக்கிற - திருமேனியடிகட்கு - திருமேனியவட்கருளீர் என்று செப்புமின்கள்: என்றக்கால், உம்மை என்று தொடங்கி, கடியுமே என்றந்வயமாதல். இதுக்கு ஸ்வாபதேசமாக, "† பூண்டநாள்" இத்யாதிசூர்ணை யநுஸந்தேயம். (ச)

---

† ஆசார்யஹ்ருதயே.

ஓ.—அஞ்சாம்பாட்டில், 'நாங்கள் உன்வார்த்தையை விண்ணப்பஞ்செய்தால், அவன் அங்கீகரிக்குமோ?" என்று கேட்பீர்களாகில், பரமபதத்திற்பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரிக்கும்; ஆனபின்பு, அவனுக்கு எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும் என்கிறாள்.

[தெளிவிசும்பென்று தொடங்கி] - நிர்மலமான ஆகாசத்திலே கடிதாக ஓடிக் கொள்ளிவட்டம்போலே மின்விளங்குகிற அழகிய முகில்காள்! [திருமூழிக்களத்துறையு மொண்சுடர்க்கென்று மேலுக்கு] - கண்ணாற் காணவொண்ணாதபடி பாபத்தைப்பண்ணின என்னுடைய ஹ்ருதயத்திலே பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தைப்பண்ணி வர்த்திப்பதுஞ்செய்து, துளியொழுகும் மதுவை உடைத்தான திருக்குழலையும் விலக்ஷணமான ஒளியையுமுடையளைக்கொண்டு திருமூழிக்களத்திலே வர்த்தித்தருளுகிறவனுக்கு என்னுடைய ஸந்தேசவாக்யத்தைச் சொல்லுங்கோள்.

ப.—அநந்தரம், பரமவ்யோமஸப்தவாச்யமான நித்யவிபூதியில் இருக்குமாபோலே என்னெஞ்சிலே யிருக்கிறவனுக்கு என் துதாய்ச்சென்று வார்த்தைசொல்லக்குறையில்லை என்று, அம்மேகங்கள்தன்னையே பார்த்துச் சொல்லுகிறாள்.

தெளிவிசும்பு - நிர்மலமான ஆகாசத்திலே; கடிதோடி - (நிலத்திலே நடப்பாரைப்போலே என்கார்யத்துக்கு த்வரிக்கிறீர்களென்னலாம்படி) கடுகவோடி, தீ வளைத்து - அலாதசக்ரம்போலே, மின் இலகும் ஒளி முகில்காள் - அழகிய மின் விளங்காநிற்க அத்தாலே வடிவில் அழகுவளர்ந்து தோற்றும்படியான முகில்காள்! திருமூழிக்களத்து - திருமூழிக்களத்தில், உறையும் ஒண்சுடர்க்கு - நித்யவாஸத்தாலே ஸௌசீல்யஸௌலப்யாதி விலக்ஷண ஸௌஜந்யத்தையுடையராய், தெளிவிசும்பு - விமலமான திவ்யாகாசத்தை, திருநாடா - நித்யவிபூதியாகவுடையராய்வைத்து, தீவினையேன்மனத்து - விஸ்லேஷமுகத்தாலே பரிதாபஹேதுவான பாபத்தையுடைய என்னெஞ்சிலே, உறையும் - முகந்தோன்றவிராநின்றுகொண்டு, துளி - துளித்து, வார் - ஒழுகுகிற, கள் - மதுவையுடைத்தான, குழலார்க்கு - மயிர்முடியழகை ப்ரகாசிப்பித்துக்கொண்டிருக்கிற அவருக்கு, என்துறைத்தல் - 'ஸம்ஸ்லேஷத்துக்கு உபாயம் இதுவன்றோ' என்கிற ஸந்தேசவாக்யத்தை, செப்புமின் - சொல்லுங்கோள்! திருக்குழல் மதுவாருகிறது - அவகாஹனம்பண்ணி பூச்சூடப்படியாலே.

இ.—அஞ்சாம்பாட்டில், நீயே ஸமாச்ரயணத்தைப் ப்ராப்பித்து, திருமேனியொளிபகற்றி என்று; ஆனபின்பு, எங்கள் வார்த்தையை அங்கீகரிக்குமோ? என்னில்,- பரமபதத்திற்பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும்! என்கிறாள்.

[தெளிவிசும்பு கடிதோடி]-நிர்மலமாய் விசாலமுமான ஆகாசத்திலே பூமியிலே ஸஞ்சரிப்பாரைப்போலே கடுகவோடி ஸஞ்சரித்து. இவற்றின் த்வரையெல்லாம் தன்கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்து மின்னிலகும்]-கொள்ளிவட்டம்போலே மின்விளங்காநிற்கிற; தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப்போலேயாய்த்து மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்] - பாலமத்தாலே அழகிதானவடிவையுடைய முகில்காள்! [திருமூழிக்களத்துறையும் ஒண்சுடர்க்கு] - திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகையாலே புகர்மிக்கிருந்தவர்க்கு.

அவன்வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. [தெளிவிசும்பு இத்யாதி] - "பரமபதம் தேஶமாயிருக்க அத்தைக் காற்கடைக்கொண்டு என் நெஞ்சிலே நித்ய வாஸம்பண்ணுகிறவன்" என்று சிற்றாட்கொண்டான் பணிக்கும். "பரமபதத்திற் பண்ணும் வ்யாமோஹத்தை என்நெஞ்சிலேபண்ணி வர்த்தியாநின்றான்" என்று எம் பெருமானார். [தீவினையேன்] - நெஞ்சிலே ப்ரகாஶியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப்பண்ணினேன். [துளிவார்கட் குழலார்க்கு] - துளியொழுகும் மதுவை யுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூதோற்றக்கடவதன்றியே, மதுவொழுகக் காணுமித்தனையிறே. [என்தூதுரைத்தல் செப்புமினே] - தலையிற்பூச் சருகாயிருக்கிற என்னுடைய தூதவாக்யத்தை அவர்க்குச் சொல்லுங்கோள். அவிநிவிஷ்டராய்த் தாமே வரக்கடவராகச் சொல்லிவைத்து, தூதுவிடவிருக்கிறபடியை அறிவியுங்கோள்.

௫.— அஞ்சாம்பாட்டு. "எங்கள் வார்த்தையை அவன் அங்கீகரிக்குமோ?" என்றிருந்தனவாக. 'பரமபதத்திற்பண்ணின ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும்' என்கிறாள்.

[தெளிவிசும்புகடிதோடி] - நிர்மலமாய் நிராலம்பநமான ஆகாசத்திலே, பூமியிலே ஸஞ்சரித்தாற்போலே கடுநடையிலே ஸஞ்சரித்து. இவற்றின் த்வரையெல்லாம் தன் கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்துமின்னிலகும்]-கொள்ளிவட்டம்போலே மின் விளங்காநிற்கிற. தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப் போலேயாய்த்து,மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்]-பரபாகத்தாலே அழகிதான வடிவையுடைய முகில்காள்! [திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு] - திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகையாலே புகர் மிக்கிருக்கிறவர்க்கு. அவன் வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. [தெளிவிசும்பித்யாதி] - பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தை என்னெஞ்சிலேபண்ணி வர்த்தியாநின்றான். [தீவினையேன்] - நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப் பண்ணினேன். இதுக்கு, சிற்றாள்கொண்டான், "கொம்பது பருத்தியாக அங்காடிபாரித்து, தனக்கு பரமபதங் கல

அஞ்சாம்பாட்டு - தெளிவிசும்பு இத்யாதி. இதிலும் கீழிற்பாட்டிற் சொன்ன மேகங்களையே தூதுவிடுகையாலே, அதுக்கீடாக "தெளிவிசும்பு திருநாடாத்தீவினையேன் மனத்துறையும்" இத்யாதியையும், "என்தூதுரைத்தல் செப்புமினே" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - எங்கள் வார்த்தை இத்யாதி. "திருமேனியொளியகற்றி" இத்யாதியாலே இவள் ஹேயஸங்கையைப் பிறப்பிக்கையாலே, அத்தைக் கேட்ட மேகங்கள், எங்கள் வார்த்தையை அங்கீகரிக்குமோ என்றிருந்தன வென்றபடி "விசும்பு" என்றதுக்கர்த்தம் - நிராலம்பநமான என்றது. "கடிதோடி" என்று விசேஷித்ததுக்குஹாவம் - இவற்றின் இத்யாதி. தீவளைத்து - தீவளைத்தாற்போலே; கொள்ளிவட்டம்போலே. கொள்ளிவட்டம் - அலாதசக்ரம். "மின்னிலகும்" என்றதுக்கு ஹாவம் - தன்வடிவில் இத்யாதி. மின்னோடே கூடுகையால்வந்த பரபாகத்தாலே யென்றபடி. ஒளி - அழகு. "ஒளிமுகில் - ஒண்சுடர்" என்றபதச்சேர்த்திக்குஹாவம் - அவன்வடிவுக்கு இத்யாதி. "தீவினையேன் மனத்தை - தெளிவிசும்பு திருநாடாகக்கொண்டு - உறையும்" என்று முந்தின நிர்வாஹம். மனத்தே யுறையாநிற்க, "தீவினை" என்கிறதென்னென்ன - நெஞ்சிலே இத்யாதி. வெறுப்பாக தாத்பர்யாந்தரம் - இதுக்கு இத்யாதி. "தெளிவிசும்பு திருநாடாயிருக்க, தீவினையேன் மனத்துறையும்" என்று சிற்றாள்கொண்டான் நிர்வாஹம். கொம்பது பருத்தியாக - பருத்தி கொம்பிலேயிருக்கச் செய்தே. அங்காடி பாரித்து - அது புடவையானதாய் அத்தை விற்

விருக்கையாயிருக்க, அத்தைக் காற்கடைக்கொண்டு ஸங்க்ருஹீதரைப்போலேயிருக்க என்னெஞ்சிலே ப்ரகாசியாநின்றான்'' என்று. இதுதான் இத்திருவாய்மொழிக்குச் சொன்ன வாக்யார்த்தத்தோடு சேராது; ஓரோர் அவஸரங்களிலே சொல்லிப்போம் வார்த்தையிறே. [துளிவார்கட்குழலார்க்கு] - துளியோழுகும் மதுவையுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூத் தோற்றக்கடவதன்றிக்கே மதுவொழுகக்காணுமத்தனையிறே. [என்தூதுரைத்தல் செப்புமினே] - தலையிற்பூச்சருகாயிருக்கிற என் உக்திவாக்யத்தை யவர்க்குச் சொல்லுங்கோள். அபிநிவிஷ்டராய்த் தாமே வருவாராகச்சொல்லிவைத்து, இப்போது தூதுவிட விருக்கிறபடியை யறிவியுங்கோள். (௫)

ஆறாம் பாட்டு.

தூதுரைத்தல்செப்புமின்கள் தூமொழிவாய்வண்டினங்காள்!
போதிரைத்துமதுநுகரும் பொழில்குழிக்களத்துறையும்
மாதரைத்தம்மார்பகத்தே வைத்தார்க்கு,என்வாய்மாற்றம்
தூதுரைத்தல்செப்புதிரேல் சுடர்வளையும்கலையுமே.

ஆ.—(தூதுரைத்தல்.) - 'தூமொழிவாய்வண்டினங்காள்! என்னுடைய சுடர்வளையும் கலையுமிழந்தேனென்று சொல்லவேணும்; சொல்லுமிடத்தில், அவன் உங்கள்வார்த்தையை அநாதரியாமே, பிராட்டி ஸந்நிதியிலே வைத்துச் சொல்லவேணும்' என்கிறாள்.

ஓ.—ஆறாம்பாட்டில், எம்பெருமானுக்கு என் இடையாட்டம் விண்ணப்பம் செய்யுமிடத்து உங்கள்வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலேவைத்துச் சொல்லுங்கோள்! என்று சிலவண்டுகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[தூமொழிவாய் வண்டினங்காள்] - வாராமலிராம் என்றிருக்கிலும் உங்கள் பேச்சாலே அவனுக்கும் வரவேண்டும்படியான இனியபேச்சையுடைய வண்டினங்காள்! [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபானம் பண்ணும்பொழில். [என்வாய்மாற்றமென்று தொடங்கி] - என் பாசுரமான உக்திவாக்யத்தைச் சொல்லுவதிகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஸ்திலமானபடியைச் சொல்லுங்கோள்.

கக் கடைபரப்பி அளப்பது விலைபேசுவதாமாபோலே யென்றபடி. அங்காடி பார்த்து - பரித்தாற்போலே யென்று கூட்டுவது. தூதப்ரகரணத்திலே வெறுப்பாகச் சொல்லுகிறது உசிதமோ என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார் - இதுதான் இத்யாதி. இதுதான் என்றது - “மனத்துறைவாரைப்போலே” என்று வெறுப்பாகச் சொல்லுவதுதானென்றபடி. வாக்யார்த்தத்தோடு என்றது - இதின் ப்ரவேஶத்திலே “வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்” என்ற வாக்யார்த்தத்தோடு சேராதென்றபடி. ஆனால் இது எங்ஙனே சேரும்படியென்ன - ஓரோரவஸரங்களிலே இத்யாதி. குழலிலே பூவொழிய மதுவுண்டோவென்ன - வல்லார் இத்யாதி. கீழ்ப்பதத்தோடே “என்” என்றத்தைக்கூட்டி பாவம் - தலையில் இத்யாதி. அவனை “துளிவார்கட்குழல்” என்கையாலே, ப்ரதிகோடியாக - தலையிற் பூச்சருகாய் என்கிறார். “தூதுரைத்தல்” என்றதுக்கு பாவம் - அபிநிவிஷ்டராய் இத்யாதி. க்ரமேணாந்வயம். (௫)

ப.—அநந்தரம், நித்யாநபாயிநியான பிராட்டியைத் திருமார்விலே யுடையவர்க்கு, உங்கள் வார்த்தை ஈடேறும்படி அச்சேர்த்தியிலே சொல்லுங்கோள் என்று, சிலவண்டுகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

தூமொழிவாய் - கந்தலற்றபேச்சில் வாய்ப்பையுடைய, வண்டினங்காள் -! போதிரைத்து - புஷ்பவிகாஸஸமயத்தில் ஹர்ஷத்தாலே கோலாஹலம்பண்ணிக்கொண்டு, மதுநுகரும் - உங்களுக்கு மதுபாநம்பண்ணலாம்படியான, பொழில் - பொழிலையுடைத்தான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - வர்த்திப்பாராய், மாதரை - நாரீணாமுத்தமையானலக்ஷ்மியை, தம் மார்பகத்தே வைத்தார்க்கு - அவளும் "அகலகில்லேன்" என்னும்படி போக்யமான தன் திருமார்விலே நித்யவாஸம்பண்ணும்படி வைத்தவர்க்கு, என்வாய்மாற்றம் - என்வாக்கின்பாசுரமான, தூதுரைத்தல் - தூதவாக்யத்தை, செப்புதிரேல் - சொல்லப்பார்த்திகோளாகில், சுடர் - உஜ்ஜ்வலமான, வளையும் - வளையையும், கலையும் - வஸ்த்ரத்தையும், தூதுரைத்தல் - தூதுக்குப்பாசுரமாக, செப்புமின்கள் - சொல்லுங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், சிலவண்டுகளைக்குறித்து, உங்கள்வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலே சொல்லுங்கோள் என்கிறாள்.

[தூதுரைத்தல் செப்புமின்கள்] - என்னுடைய தூதவாக்யத்தை அறிவிக்க அமையும்; நீங்கள் கொண்டுவரவேண்டா. [தூமொழிவாய் வண்டினங்காள்] - இனிய பேச்சையுடைய வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள்பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே உங்கள் பேச்சிருப்பது. மஹாராஜர்க்கும் பெருமாளுக்கும், "வாநராணாம் நராணாஞ்ச" என்று விஜாதீயமான இரண்டுதலையும் பொருந்தும்படி திருவடிவார்த்தை சொன்னாற்போலே. "கதமாஸீத்ஸமாகம:". [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே யிரைத்துக்கொண்டு மதுபாநம் பண்ணும்பொழில் என்னுதல். போதிலே - காலத்திலேயென்னுதல், எதிரிகளோடும் அம்பேர்க்கவும் வேண்டா. மீட்சியிலேயாகவும் வேண்டா, ததிமுகாதிகள் காத்திருப்பாருமில்லை. மதுபாநம்பண்ணுகிறவர்களுடனே கூட மதுபாநம்பண்ண அமையும். [மாதரைத் தம்மார்பகத்தே வைத்தார்க்கு] - நீங்கள் சொல்லுமத்தனையே வேண்டுவது. உங்கள்வார்த்தை கொண்டாடிக்கேட்பிக்கும் புருஷகாரமும் உண்டென்கை. [என்வாய்மாற்றம் இத்யாதி]- என்பாசுரமான தூதவாக்யத்தைச் சொல்லப் பார்த்திகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஸ்திலமானபடியைச் சொல்லுங்கோள்; செப்புவதிகோளாகில் அதுதானே யெனக்குச் சுடர்வளையும் கலையும். அறிவிக்குமதுவே குறை; வரவு தப்பாதென்கை.

ஈடு.—ஆறும்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, 'உங்கள்வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டிஸந்நிதியிலே சொல்லுங்கோள் என் தூதவாக்யத்தை' என்கிறாள்.

[தூதுரைத்தல் செப்புமின்கள்] - என்தூதவாக்யத்தை யறிவிக்கவமையும்; கொண்டுவரவேண்டா. [தூமொழிவாய் வண்டினங்காள்] - இனியபேச்சையுடைய

ஆறும்பாட்டு - தூதுரைத்தல் இத்யாதி. "வண்டினங்காள் - மாதரைத்தம்மார்பகத்தே வைத்தார்க்கு" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலவண்டுகளை இத்யாதி.

"செப்புமின்கள்" என்றதுக்கு பாவம் - என்தூதவாக்யத்தை இத்யாதி. "தூய்தானமொழி

வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள் பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே பேச்சிருப்பது. பெருமாளும் இளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு, "இவர்கள் வாலிவரவிடவருகிறார்களோ?" என்றஞ்சி மஹாராஜர் நாலுமூன்று யோஜநம்அவ்வருகேயோட, மீண்டுவந்து "வாக்யஞ்ச மதுரம் ஸ்ருதம்" (கேட்குகம் ஸுகஞ்சநேள) என்று விஜாதீயமான இரண்டுதலையும் பொருந்தும்படியாக "அத்ஸம்ஸ்காரஸம்பந்நை:" (அதஸம்ஸ்காரஸம்பந்நை) என்கிறபடியே வார்த்தைசொன்னானிறே. [போதிரைத்துமதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபாநம்பண்ணும்பொழிலென்னுதல்; போதிலே - காலத்திலேயென்னுதல். உங்களுக்கு மீட்சியிலே யாகவும்வேண்டா: ஊயிமுவாதிகள் காப்பாருமில்லை; முன்பு மதுபாநம்பண்ணுகிறவர்களோடே மதுபாநம்பண்ணவமையும். [மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கு] - நீங்கள் சொல்லுமத்தனையேவேண்டுவது. உங்கள்வார்த்தைகேட்டிருக்கவும், கேட்டுக்கொண்டாடுகைக்கும் புருஷகாரமுண்டென்கை. [என்வாய்மாற்றமித்யாதி] - என்பாசுரமான உசிதவாக்யத்தைச் சொல்லப்பார்த்திகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஶிதிலமானபடியைச் சொல்லுங்கோள்! செப்பத்திகோளாகில், அதுதானே எனக்குச்சுடர்வளையும் கலையுமென்னுதல். அறிவிக்குமதே குறை, அவர்வரவு தப்பாது. (சு)

ஐய வாயிலேயுடைய வண்டினங்காள்" என்று விசேஷிக்கைக்கு பாவம் - அவன் அநாதரிக்கிலும் இத்யாதி. இப்படி பேச்சினிமையாலே பொருந்தினான் பெருமாளென்ன - பெருமாளும் இத்யாதி. "ஸம்ப்ரேக்ஷ்ய வாலிப்ரணிஹிதௌ ஶங்கமாந: ஸமாகதௌ ...
வாக்யம் ... இதி கிஷ்கிந்தாகாண்டே (5-18). "அத்ஸம்ஸ்கார
ஸம்பந்நை: ... " இதி
யுத்தகாண்டே அபயப்ரதாநப்ரகரணே (17-48). கிஷ்கிந்தாகாண்டத்திலே திருவடி இருதலையும் பொருந்தச் சொன்ன ஶ்லோகம்-"ஸம்ஸ்காரக்ரமஸம்பந்நாம் ... உச்சா
ரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹர்ஷிணீம்" என்கிற (3-32) ஶ்லோகமாயிருக்க, யுத்தகாண்டத்தில் "அத்ஸம்ஸ்காரஸம்பந்நை:" இத்யாதி ஶ்லோகத்தையெடுத்தது, ஸ்பஷ்டமாயிருக்கையாலே. வார்த்தைசொன்னானிறே திருவடியென்றபடி. போது-பூவும்,காலமும். காலத்திலே-அலருகிறகாலத்திலே. இத்தால் பாவம்-உங்களுக்குதித்யாதி. முன்புமதுபாநம்பண்ணுமவர்கள்-நித்யஸூரிகள். "மாதரை" இத்யாதிக்கு பாவம்-நீங்கள் இத்யாதி. வாய்மாற்றம்-பாசுரம். "தூதுரைத்தல் செப்புதிரேல் - சுடர்வளையும் கலையும் - செப்புமின்கள்" என்பது முதலின யோஜநை; "செப்புதிரேல்- அதுவே யெனக்குச் சுடர்வளையும் கலையும்" என்று இரண்டாம் யோஜநை. முதல் யோஜநையில், "செப்புமின்கள்" என்று - அநுஷங்கம்; இரண்டாம் யோஜநையில் "அதுவே" என்றுஅத்யாஹார்யம். செப்புகை சுடர்வளையும் கலையுமாமோவென்ன - அறிவிக்குமதே இத்யாதி. 'தூமொழிவாய்' என்றுதொடங்கி, 'மார்பகத்தேவைத்தார்க்கு - என் வாய்மாற்றமான தூதுரைத்தல்செப்புமின்கள்; தூதுரைத்தல் செப்புதிரேல் சுடர்வளையும் கலையும்போனபடியை - செப்புமின்கள்' என்றந்வயமாதல்; தூதுரைத்தல் செப்புதிரேல் அதுதானே எனக்குச் சுடர்வளையும் கலையுமென்னுதல். (சு)

ஏழாம் பாட்டு.

சுடர்வளையுங்கலையுங்கொண்டு அருவினையேன்தோள்துறந்த
படர்புகழான் திருமூழிக்களத்துறையும்பங்கயக்கண்
சுடர்பவளவாயனைக்கண்டு ஒருநாள்ஓர்தூய்மாற்றம்
படர்பொழில்வாய்க்குருகினங்காள்! எனக்கொன்றுபணியீரே.

ஆ.—(சுடர்வளையும்) - 'படர்பொழில்வாய்க் குருகினங்காள்! உன்னழகாலே யவளை வசீகரித்து அவளோடேகலந்து பின்னை யவளைத்துறந்ததுவே புகழாகக் கொண்டிருக்கிற இருப்பு உனக்குப்போருமோ? என்று சொல்லீகோள்' என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், பின்னையும் சிலகுருகினங்களைக் குறித்து 'சிலரோடு கலந்து அவர்களைத்துறந்து அதுவேபுகழாக இருக்குமிருப்புப் போருமோ?' என்று எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்யுங்கோள் என்கிறாள்.

[சுடர்வளையும் கலையுமென்று தொடங்கி] - என்னுடைய வளையையும் கலையையும் அபஹரித்து தான்இகழ்கைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னை விஶ்லேஷித்து அதுவே பெரும்புகழாக வுடையனுய்க்கொண்டு திருமூழிக்களத்திலே நிரந்தரவாஸம் பண்ணுகிற்பதுஞ்செய்து, என்னோட்டை விஶ்லேஷத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையும் உடையவனுயிருக்கிறவனைக் கண்டு. [ஒருநாள் என்று மேலுக்கு]-பெருத்திருந்துள்ள பொழிலிலேயிருக்கிற குருகினங்காள் எனக்காக ஒருநாள் ஒருவார்த்தை அவனுக்குப் பணிக்கவேணும்.

ப.—அநந்தரம், அத்யுஜ்ஜ்வலமான அவயவஶோபையை யுடையவரைக் கண்டு எனக்குஒருவார்த்தை சொல்லுங்கோளென்று, சிலகுருகுகளை யபேக்ஷிக்கிறாள்.

படர் - பரந்த, பொழில்வாய் - பொழிலிடத்தேவர்த்திக்கிற, குருகினங்காள் -! சுடர் - ஒளியையுடைத்தான, வளையும் - வளையையும், கலையும் - கலையையும், கொண்டு - கைக்கொண்டு, அருவினையேன் - கடக்கவரியபாபத்தையுடையேனுன என்னுடைய, தோள் துறந்த - தோளிலே யதிவ்யாமுக்தனுய்ச்சேர்ந்தவன் அத்தை யநாதரித்து, (அதுதானே), படர் - லோகவ்யாப்தமான, புகழான் - புகழாகவிருக்குமவனுய், திருமூழிக்களத்துஉறையும்- († அத்யாஸக்தியாலேஆர்த்தியையபிஸயிப்பிக்கும்படி) திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுமவனுய், பங்கயக்கண் - (கலந்தபோதோடு பிரிந்தபோதோடு வாசியற செவ்வியழியாதபடி) பங்கயம்போன்ற திருக்கண்களையும், சுடர் - ஒளியையுடைய, பவளம்-பவளம்போன்ற, வாயனை - திருவதரத்தையு முடையவனை, கண்டு-, எனக்கு - (ஆர்த்தி வடிவிலேதோன்றும்படியான) எனக்காக, ஒருநாள்- (நித்யாக்நிஹோத்ரம்போலே பலநாள் வேண்டாதபடி)ஒருநாள், ஓர்-(ஆர்த்தரக்ஷணார்த்தமாகையாலே) அத்விதீயமாய், தூய்மாற்றம் - தெளிவாலே ஶ்லாக்யமானவார்த்தையை, ஒன்று - (பரப்பற) ஒன்றுயிருக்கும்படி, பணியீரே - பணிக்கவேணும்; பணியுங்கோளென்று கௌரவ்யதைதோன்றச் சொல்லுகிறாள்.

இ.—ஏழாம்பாட்டில், சிலகுருகினங்களைக்குறித்து, 'சிலரோடே கலந்து அவர்களைத்துறந்து அதுவேபுகழாக இருக்கை போருமோ? என்று அவர்க்கு அறிவியுங்கோள்' என்கிறாள்.

† அத்யாஸக்தி - நெருங்கிவசிக்கை.

[சுடர்வளையும் இத்யாதி] - இத்தலையில் தனக்கு ப்ரயோஜநமான அம்சத்தைக்கொண்டு என்னைப் பொகட்டுப்போனான். [அருவினையேன்] - ஆச்ரித்துப் பொகட்டுப்போக அவனையிழந்து உங்கள்காலிலே விழும்படியான பாபத்தைப்பண்ணினேன். [தோள்துறந்த] - கலந்தபோது தன்வ்யாமோஹமெல்லாங் கொண்டு தோளுக்குஅவ்வருகு போகமாட்டானாயிருந்தபடி. [படர்புகழான்] - "தன்னையல்லதறியாதாரைப் பொகடவல்லவன்" என்று அதுவேபுகழாகப் புகழ்வித்துக் கொண்டிருக்கிறவன். [திருமூழிக்களத்துறையும்] - உபாஸ்யமென்று ஆயிருக்கவொண்ணாதபடி திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவனை. [பங்கயக்கண்சுடர் பவளவாயனை] - பொகட்டுப்போனாலும் விடவொண்ணாதபடியான அவயவசோபையை யுடையவனை; என்னோட்டை விச்லேஷத்தாலே புதுக்கணித்த அவயவசோபையை உடையவனை என்றுமாம். [கண்டு] - அந்நோக்கையும் முறுவலையும் காண்கையாலே உங்களுக்கு என்னிற்காட்டில் பேறு முற்பட்டிருக்கிறதிறே; அவ்வடிவழகைக்காட்டி உங்களையும் போனகார்யத்தையும் விஸ்மரிப்பிக்கவல்லன். [ஒருநாள்] - ஒருநாளையனையும்; பிற்றைநாள் சொல்லவேண்டுவதில்லை. [ஓர்தூய்மாற்றம்] - அநந்யப்ரயோஜநமான நல்வார்த்தை. முடிகிறாள் ஓரபலை உஜ்ஜீவிக்கச்சொல்லுகிற வார்த்தையிறே. [படர்பொழில்வாய்க் குருகினங்காள்] - பரந்தபொழிலிடத்திலே வர்த்திக்கிற குருகினங்காள்! நான் உபவாஸக்ருசையாயிருக்க, நீங்கள் ஜீவித்துக் களித்திருக்கப்போருமோ? நான் முடிந்தால் உங்களுக்கு இச்சோலைப்பரப்பெல்லாம் நோக்குவாருண்டோ? [எனக்கு] - என்வடிவிருக்கிறபடி கண்டிகோளிறே. [ஒன்றுபணியீர்] - எனக்கு உஜ்ஜீவநமாயிருப்பதொரு வார்த்தை சொல்லுங்கோள், இரண்டாம் வார்த்தைவேண்டா. [பணியீர்] - தான் ஜநககுலத்திலே பிறக்கவுமாய்; எதிர்த்தலை திர்யக்குக்களாகவுமாம்; பகவத்விஷயத்தில் உபகாரகரைச் சொல்லக்கடவது இங்ஙனேயிறே.

ஈடு.—ஏழாம்பாட்டு. சிலகுருகினங்களைக்குறித்து, "சிலரோடே கலந்து அவர்களைத் துறந்து அதுவே புகழாக விருக்கைபோருமோ என்று அவர்க்கறிவியுங்கோள்" என்கிறாள்.

[சுடர்வளையுங்கலையுமித்யாதி] - இத்தலையில் தனக்கு ப்ரயோஜநமான அம்சத்தைக்கொண்டு என்னைப்போகட்டுப்போனான்; தனக்கு ஸாரமானவற்றைக்கொண்டு அல்லாதவற்றைப் போகட்டுப்போனான்; கைக்கடங்கினத்தையுங்கொண்டு மடிச்சரக்கையுங் கொண்டுபோனான். [அருவினையேன்] - ஆதரித்துவந்து கலந்தவன் போகட்டுப்போம்படியான பாபத்தைப்பண்ணினேன். [தோள்துறந்த] - அந்த வ்யாமோஹமெல்லாங் கொண்டு தோளுக்கவ்வருகு போகமாட்டிற்றிலன்போலேகாணும் அவன்தான். [படர்புகழான்] - "தன்னாலல்லது செல்லாதாரை இங்ஙன் விடவல்லாரில்லை" என்று இதுவே

எழாம்பாட்டு.—சுடர் இத்யாதி. "குருகினங்காள் - அருவினையேன் தோள் துறந்த படர்புகழான் - எனக்கொன்று பணியீர்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலகுருகினங்களை இத்யாதி.

"தோள்துறந்த" என்றுமளவுக்கும் பாவம் - இத்தலையில் இத்யாதி. விவரணம் - தனக்கு இத்யாதி. "சங்கஞ்சரிந்தன" இத்யாதிப்படியே எல்லாம் சிதிலமாயிருக்க, விசேஷிக்கிறதென்னென்ன - கைக்கு இத்யாதி. ப்ரதாநத்தைச் சொல்லிற்றென்றபடி. சரக்கு-கைக்கடங்கினது - வளை; மடிச்சரக்கு - புடவை. "தோள்" என்று ஏகாவயவத்தைச் சொன்னதுக்கு பாவம் - அந்த வ்யாமோஹம் இத்யாதி. இவனுக்குப் புகழேதென்ன - தன்னாலல்லது இத்யாதி.

புகழாகக் கொடியும் காளமுமெடுத்துப் புகழ்வித்துக் கொண்டிருக்கிருனுய்த்து. [திருமூழி களத்துறையும்] - தூரஸ்யனென்றுஆறியிருக்கவொண்ணுதபடி திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனை. [பங்கயக்கண்சுடர் பவளவாயனை] - போகட்டுப்போனு னென்று போகட்டிருக்கவொண்ணுத அவயவஸோபையையுடையவனை; என்னை இப் பாடுபடுத்துகையாலே புதுக்கணித்த அவயவஸோபையை யுடையவனை யென்றுமாம். [கண்டு] - அந்நோக்கையும் முறுவலையும் காண்கையாலே, உங்களுக்குளன்னிற்காட்டில் பேறு முற்பட்டிறேயிருக்கிறது. [ஒருநாள்] - ஒருநாளேயமையும், பிற்றைநாள் சொல்ல வேண்டுவதில்லை. இரண்டாநாள் சொல்லுமது பழியென்றிருக்குமவளிறே. [ஓர்தூய் மாற்றம்] - அத்விதீயமான நல்லவார்த்தை. முடிகிறளோரவலை யுஜ்ஜீவிக்கச் சொல்லு கிற வார்த்தையிறே. [படர்பொழில்வாய்க் குருகினங்காள்] - பரந்தபொழிலிடத்தே வர்த் திக்கிற குருகினங்காள்!நான் உபவாஸ க்ருஶையாயிருக்க,நீங்கள் ஜீவித்துக்களித்திருக்கை போருமோ? நான் முடிந்தால் உங்களுக்கு இந்தச்சோலைப்பரப்பெல்லாம்நோக்கித் தருவார் ஆர்?[எனக்கு]-என்வடிவிருக்கிறபடி கண்டிகோளிறே. [ஒன்றுபணியீரே] - இரண்டாம் வார்த்தை சொல்லவேண்டா. [பணியீரே] - தான் ஜநககுலத்திலேபிறக்கவுமாம், எதிர்த் தலை திர்யக்குகளாகவுமாம்,ஸம்வத்விஷயத்தில் வடகரைச் சொல்லும்படியிறே யிது.(எ)

எட்டாம் பாட்டு.

எனக்கொன்றுபணியீர்கள் இரும்பொழில்வாய்இரைதேர்ந்து
மனக்கின்பப்படமேவும்வண்டினங்காள்தும்பிகாள்
கனக்கொள்திண்மதிள்புடைசூழ் திருமூழிக்களத்துறையும்
புனக்கொள்காயாமேனிப் பூந்துழாய்முடியார்க்கே.

ஆ.—(எனக்கொன்று.)- 'வண்டினங்காள்!தும்பிகாள், உன்னழகைக்காணப் பெருதே யவளிழந்துபோமித்தனையோ? என்று சொல்லிகோள்' என்கிருள்.

ஓ.—எட்டாப்பாட்டில், சில வண்டுகளையும் தும்பிகளையுங்குறித்து அங் குத்தை யழகுக்கு என்புகுருகிறதோ?'' என்று ஐயப்படவேண்டாதபடி ஸுரக்ஷிதமா யிருப்பதொரு தேஶத்திலே எழுந்தருளியிருந்தான். இனி நம்முடைய ஆர்த்தி தீர்க்கு மத்தனையே அபேக்ஷிதம்.ஆனபின்பு,என்னுடைய ஆர்த்தியை அறிவியுங்கோளென்கிருள்.

ஆனல், விட்டிருக்கவொண்ணுதோவென்ன - தூரஸ்யன் இத்யாதி. இப்போது அவயவங்களை வர்ணித்ததுக்கு ஸாவத்யம் - போகட்டுப்போனுன் இத்யாதிவாக்யத்வயம். முந்தினது - ஸ்வாபா விகமான அழகைப்பற்ற; இரண்டாவது - வெறுப்பிலே. ''கண்டு'' என்றதுக்கு ஸாவம் - அந் நோக்கையும் இத்யாதி. வேண்டாமைக்குஅடியேதென்ன - இரண்டாநாள் இத்யாதி. இவ்விடத் திலே, ஸக்ருத்க்ருதஸ் ஸாஸ்த்ரார்த்த: என்றது விவக்ஷிதம். மேலே ''எனக்கொன்று'' என்றிருக் கையாலே, ''ஓர்'' என்றதுக்கு அத்விதீயமான என்கிருர். வார்த்தைக்குஅத்விதீயத்வமேதென்ன - முடிகிறள் இத்யாதி என்னுதல்; தூய்மைக்கு ஸாவமாதல். ''பொழில்வாய்'' என்றதுக்கு ஸாவம் - நான்உபவாஸ இத்யாதி. ''படர்'' என்று விசேஷித்ததுக்கு ஸாவமாதல், ஸாவாந்தர மாதல் - நான்முடிந்தால் இத்யாதி. ''எனக்கு'' என்றதுக்கு ஸாவம் - என்வடிவு இத்யாதி. ''ஒன்று'' என்றதுக்கு ஸாவம் - இரண்டாம் இத்யாதி. சொல்லீரென்னுதே, ''பணியீர்'' என்ற துக்கு ஸாவம் - தான் இத்யாதி. 'படர்பொழில்வாய்க் குருகினங்காள் - சுடர்வளையும்' என்று தொடங்கி, 'ஓர்தூய்மாற்றம் - எனக்கொன்று பணியீர்' இத்யந்வய:. (எ)

[இரும்பொழிலென்று தொடங்கி] - பெரியபொழிலிலே இரைதேடி மனஸ் ஸிலே இனிமை பிறக்கும்படி ஸம்ச்லேஷிக்கிற வண்டினங்காள்! தும்பிகாள்! [கனக் கொள் திண்மதிளென்று மேலுக்கு] - கனத்தை யுடைத்தாய்த் திண்ணிதான மதிள். சுற்றும் சூழ்ந்திருந்துள்ள திருமூழிக்களத்திலே வர்த்திப்பதுஞ்செய்து தன்னிலத் திலே நின்ற காயாம்பூப்போலேயிருக்கிற திருமேனியையும் ச்லாக்யமான திருத்துழா யாலே அலங்க்ருதமான திருமுடியையும் உடையவனாவர்க்கு.

ப—அநந்தரம், வடிவழகையும் ஒப்பனையையும் உடையராயிருக்கிறவர்க்கு எனக்கொருவார்த்தை சொல்லவேணுமென்று, சிலவண்டுகளையும் தும்பிகளையும் பார்த் துச்சொல்லுகிறாள்.

இரு - பெரிய, பொழில்வாய் - பொழிலிடத்தே, இரைதேர்ந்து - போக்ய மான மதுவைத் தேடாநின்றுகொண்டு, மனக்கு - மனஸ்ஸுக்கு, இன்பம்பட - இனிமை யுண்டாம்படி, மேவும் - ஸம்ச்லேஷித்து வர்த்திக்கிற, வண்டினங்காள் தும்பிகாள் - ! கனம்கொள் - கனத்தையுடைத்தாய், திண் - சிக்கென, மதிள் - மதிளாலே, புடை - சுற்றும், சூழ் - சூழப்பட்ட, திருமூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுமவராய், புனம்கொள் - தன்னிலத்தில் நிலையுடைத்தான, காயா மேனி - காயாம்பூவின் நிறத்தையுடையராய், பூந்துழாய்முடியார்க்கு - போக்யமான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவர்க்கு, எனக்கு - எனக்காக, ஒன்று - ஒருவார்த்தை, பணியீர் - சொல்லவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து 'அங்குத் தைக்கு பயப்படவேண்டாதபடி ஸுரக்ஷிதமான தேசத்திலேயிருக்கப் பெற்றோம் இனி என்னார்த்தியை அறிவியுங்கோள்' என்கிறாள்.

[எனக்கொன்று பணியீர்கள்] - நீங்கள் ஒருவார்த்தை சொல்லாவிடில் முடியு மளவாயன்றோ என்தசையிருக்கிறது. [இரும்பொழில் வாயிரைதேர்ந்து] - பரப்பான சோலை எங்கும்புக்கு இரைதேடி. [மனக்கின்பம்படமேவும்] - மனஸ்ஸிலே இனிமை பிறக்கும்படியன்றோ நீங்கள் கலக்கிறபடி. பிரிவாலுண்டான க்லேசமேயிறே எனக்கு லபித்தது. [கனக்கொள் இத்யாதி] - கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந் திருந்துள்ள திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவர்க்கு. அத்தலையில் அழகை அநுஸந்தித்தால் ரக்ஷை தேட்டமாயிறேயிருப்பது. [புனக்கொள் இத்யாதி] - தன்னி லத்திலேநிற்கும் காயாவின் நிறம்போலேயாய்த்து நிறமிருப்பது; அவ்வடிவழகுக்கு மேலே யொப்பனையழகை உடையவர்க்கு, போக்யமான திருத்துழாயாலே அலங்க்ருத மான திருமுடியையுடையவர்க்கு, அவ்வடிவையும் ஒப்பனையையும் அநுபவித்துப் பிரிந்த எனக்கு ஒன்று பணியீர்கள்.

ஈடு.—எட்டாம்பாட்டு. சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, 'அங்குத் தைக்கு ஹயப்படவேண்டாதபடி ஸுரக்ஷிதமான தேசத்திலேயிருக்கப்பெற்றோம்: இனி என்னார்த்தியை யறிவியுங்கோள்'என்கிறாள்.

எட்டாம் பாட்டு.—எனக்கு இத்யாதி. "வண்டினங்காள் தும்பிகாள், கனக்கொள் திண் மதிள்புடைசூழ் திருமூழிக்களத்துறையும் - எனக்கொன்று பணியீர்கள்" என்றபதங்களைக் கடா க்ஷித்தவதாரிகை - சிலவண்டுகளையும் இத்யாதி.

[எனக்கொன்றுபணியீர்கள்] - நீங்கள் ஒருவார்த்தை சொல்லாவிடில் முடியும் உமையாயன்றே என்னிலைமையிருக்கிறது. [இரும்பொழில்வாயிரைதேர்ந்து] - பரந்தசோலையிடமெங்கும்புக்கு இரைதேடி. [மனக்கின்பம்படமேவும்] - மநஸ்ஸிலே இனிமை பிறக்கும்படி யன்றே நீங்கள் கலக்கிறபடி. விரஹத்தால் வரும் க்லேஶம் ஸஹியாதபடியாகக் கலவாநின்றதாய்த்து - பிரிவிலும் வற்றாத ஆநந்தமுண்டாம்படி கலவாநின்றதாய்த்து - [கனக்கொளித்யாதி] - கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்திருந்துள்ள திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவர்க்கு. அத்தலையில் ஸௌஶீல்யத்தை யநுஸந்தித்தால், ரக்ஷை தேட்டமாயிறே யிருப்பது. அவனோடே கிட்டிக் கலக்கப் பெறுமையாலே வருவதும் ஓராற்றுமையுண்டு; அவனுக்கு எங்கே என்னதீங்கு வருகிறதென்றும் ஓராற்றுமையுண்டு; அதிலேயொன்று தீரப்பெற்றது முந்தறமுன்னம். [புனக்கொள் காயாமேனிப் பூந்துழாய்முடியார்க்கே] - தன்னிலத்திற் காயாவின் நிறம்போலேயாய்த்து நிறமிருப்பது. அவ்வடிவழகுக்குமேலே ஒப்பனையழகையுமுடையவர்க்கு. வடிவழகுஅது, ஒப்பனையழகுஅது. அவ்வடிவழகையும் ஒப்பனையழகையும் அநுபவித்துப்பிரிந்தவெனக்கு ஒருவார்த்தை சொல்லுங்கோள். (அ)

ஒன்பதாம் பாட்டு.

பூந்துழாய்முடியார்க்குப்பொன்னாழிக்கையாருக்கு
ஏந்துநீரிளங்குருகே! திருமூழிக்களத்தாருக்கு
ஏந்துபூண்முலைபயந்து என்னிணைமலர்க்கண்ணீர்ததும்ப
தாம்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீரே.

ஆ.—(பூந்துழாய்.) - ஏந்துநீரிளங்குருகே! ஏந்துபூண்முலைபயந்தென்னிணைமலர்க்கண் நீர்ததும்பத் தாம் தம்மைக்கொண்டகலுகை தம்முடைய க்ருபைக்குப் போராதென்று சொல்லிகோளென்கிறாள்.

ஒ —ஒன்பதாம்பாட்டில், நினைத்தது செய்துமுடிக்க வல்லதொரு குருகைக் குறித்து நிரதிஶயபோக்யரான தாம் போம்போது தம்மைவைத்துப் போகவேண்டாவோ என்று விண்ணப்பஞ்செய்! என்கிறாள்.

தும்பி - வண்டுகளிலவாந்தரபேதம். "எனக்கு" என்றதுக்கு பாவம் - நீங்கள் இத்யாதி. "இன்பம்படமேவும்" என்றதே, "மனக்கின்பம்பட" என்றதுக்கு பாவம் - விரஹத்தால் இத்யாதி. விவரணமாதல், வர்த்தமானார்த்தமாதல் - பிரிவிலும் இத்யாதி. (பிரிந்து - அநுபவிக்கிற.) "கனக்கொள்திண்மதிள்" என்று ரக்ஷையைச் சொல்லுவானென்னென்ன - அத்தலையில் இத்யாதி. ஸௌந்தர்யத்தையென்றது - "புனக்கொள்காயாமேனி" என்றத்தைப்பற்ற. இத்தால் பாவம் - அவனோடே இத்யாதி. தீரப்பெற்றது என்றது - "கனக்கொள்திண்மதிள்புடைசூழ்" என்கையாலே. "புனக்கொள்காயா" என்றதுக்கர்த்தம் தன்னிலத்தில் இத்யாதி. "பூந்துழாய் முடியார்க்கு" என்றதுக்கர்த்தம் - அவ்வடிவழகுக்கு இத்யாதி. இரண்டையுஞ் சொல்லுகிறவளுடைய ஹார்த்தபாவம் - அவ்வடிவழகை இத்யாதி. எனக்கொன்று பணியீர் - எனக்காக ஒருவார்த்தை சொல்லுங்கோள். 'இரும்பொழில்வாய்' என்று தொடங்கி, 'முடியார்க்கு - எனக்கொன்று பணியீர்கள்' இத்யந்வயம். (அ)

---

† கண்டவிசம் அநந்விதம்.

[ஏந்துநீரென்று தொடங்கி] - தரையிலே நடக்குமாபோலே நீரிலே நடக்க வல்ல இளங்குருகே! [ஏந்துபூண்முலை பயந்தென்று பேறாக்கு] - தரிக்கப்பட்டிருந்துள்ள ஆபரணங்களையுடைய முலை விவர்ணமாய், இணைமலர்போலேயிருக்கிற கண் நீர் மல்கும்படி ப்ரதிஸம்போக்யரான தாம் போம்போது தம்மைக்கொண்டு போகை, தம்முடைய க்ருபைக்குப் போராதென்று, ப்ரணயகலஹத்தைவிட்டுத் தன்னுடைய ஆர்த்தியாலே சொல்லுகிறாள்.

ப.—அநந்தரம், அஸாதாரண ஶேஷித்வசிஹ்நத்தையுடையரானவர்க்கு, தம்மைக்கொண்டு தாம்போதல் தகுதியல்லவென்று சொல்லவேணுமென்று, ஒருகுருகைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

ஏந்து நீர் - நீருக்குஅஞ்சவேண்டாதபடி அதுதானேதரிக்கும்படியாய், இள - (கமநஸாமர்த்யத்துக்குஉறுப்பான)இளமையையுடைய, குருகே-! பூந்துழாய்முடியார்க்கு- (ஸர்வஶேஷித்வ ஸூசகமாம்படி) ஸௌரப்யமான திருத்துழாயை முடியிலேயுடையராய், பொன் - ஸ்ப்ருஹணீயமான, ஆழி - திருவாழியை, கைபார்க்கு - கையிலேயுடையராய், திருமூழிக்களத்தார்க்கு - திருமூழிக்களத்திலே ஆஸந்நமாகநிற்கிறவர்க்கு, பூண் - ஆபரணத்தை, ஏந்து - ஏந்தின, முலை - முலையானது, பயந்து - பயப்பையுடைத்தாய், என் இணை மலர்கண் - இணைமலர்போலே (தன்னைக்கண்டபோதை விகஸிதமாம்படியான) என்கண்கள், நீர் ததும்ப - (விரஹத்தாலே) ஶோகாஶ்ரு நிரம்பும்படியாக, தாம் - (ஶேஷத்வத்தையும் போக்யத்வத்தையும் ஶீலத்தையுமுடைய) தாம், தம்மைக்கொண்டு- தம்மையறிந்துவைத்துக்கொண்டு, அகல்தல் - அகலப்போகை, தகவுஅன்றுஎன்று-(தம்முடைய)தயைக்குப்போராதென்று, உரையீர்-சொல்லீரென்று உபசரித்துச் சொல்லுகிறாள்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஒருகுருகைக்குறித்து 'ப்ரதிஸம்போக்யரானதாம் போம்போது தம்மைவைத்துப் போகவேண்டாவோ? என்று விண்ணப்பஞ்செய்யுங்கோள்' என்கிறாள்.

[பூந்துழாய் முடியார்க்கு] - திருமுடிக்குஒப்பனையான வளையமிருக்கிறபடி. [பொன்னாழிக்கையார்க்கு]- திருமுடிக்குவளையம்போலேயாய்த்துத் திருக்கைக்குத் திருவாழி. [ஏந்து நீரிளங்குருகே] - தரையிலே நடப்பாரைப்போலே நீரிலே நடக்கவல்ல இளங்குருகே! உன் கமநஸாமர்த்யத்தாலுண்டான லாபம் நான் பெறவேண்டாவோ? நடுவே நீர் இடைச்சுவரானாலும் தேங்கவேண்டாவிறே உனக்கு. [திருமூழிக்களத்தார்க்கு]-வளையம்போலேயும் ஆபரணம்போலேயும், அவ்வூரில்நிலையும் அழகுக்குஉடலென்றிருக்கிறாள். அவை விக்ரஹத்துக்குஆபரணமானாற்போலே ஶீலம் ஸ்வரூபத்துக்கு ஆபரணமிறே. அழகும் குணமும் ஒருதலைத்த விஷயமிறே. [ஏந்து பூண்முலை பயந்து] - ஆபரணங்களை தரிக்கக்கடவமுலை வைவர்ண்யத்தை தரித்து. ஆபரணங்கள் ஸம்ஶ்லேஷார்ஹமாகக் கழற்றுமவை; இது ஸம்ஶ்லேஷத்தாலல்லது கழலாதிறே. வ்யதிரேகத்தில் இப்படியிராதபோது பும்ஸ்த்வவ்யாவ்ருத்தி கிடையாதிறே; ஆசையும் ஸ்த்ரீத்வமுமிறே இதுக்கடி. ஆபரணம் அழகுக்கு நிறங்கொடுக்குமாபோலேயிறே, ஸ்த்ரீத்வத்துக்கும் ஆசைக்கும் வைவர்ண்யம். [என்னிணை மலர்க்கண்] - இணைமலர் போலேயிருக்கிற என்கண். தம் அழகையே இலக்காக உடைத்தான கண். அவன்சொல்லும்படி அறிந்திருக்கைபாலே சொல்லுகிறாளித்தனைபோக்கி, அல்லாதபோது தன்

கண்ணிலழகைத் தான் சொல்லுகிறு ளல்லளிறே. [நீர்ததும்ப] - ஆநந்தாஸ்ருவுக்கு இட்டுப்பிறந்த கண் சோகாஸ்ருவுக் கிலக்காம்படி. [தாம்] - கீழ்ச்சொன்ன அழகையும் ஶீலத்தையும் உடைய தாம். [தம்மைக்கொண்டகல்தல்] - தமக்கு அகல வேண்டினால், "இவ்வடிவைப்பிரிந்தார் பிழைபார்" என்று தம்மைவைத்தன்றோ போவது; தம்மைக் கண்ணுடிப்புறத்திலே கண்டறிவரே. தம்மைப்பிரிந்த ஊமைக்கு உதவுகைக்கன்றோ தம்மைக்கண்டது. "ஜீவேயம் ஜீவஹோ ரேஹவஸ்யாஜிராவஷ்". [தகவன்றென்றுரையீரே] - மென்மையும் ப்ரணயித்வமும் போனாலும் ஊமை குடிபோகவேணுமோ? நிர்கூயர் செய்யுமத்தைச் செய்தாரென்று சொல்லுங்கோள்! ஸ்த்ரீவதமென்றால் அஞ்சாதார் செய்யுமத்தைச் செய்தாரென்று சொல்லுங்கோள்! என்கிறாள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஒருகுருகைக்குறித்து, "நிரதிஶயபோக்யரான தாம் போம்போது தம்மைக்கொண்டுபோகை தம்முடைய தகவுக்குப் போருமோவென்று விண்ணப்பஞ்செய்" என்கிறாள்.

[பூந்துழாய்முடியார்க்கு] - திருமுடிக்கு ஒப்பனையானவளையமிருக்கிறபடி. [பொன்னாழிக்கையார்க்கு] - திருக்கைக்கு வளையமிருக்கிறபடி. [எந்துநீரிளங்குருகே] - மிக்கபுனலிலே, தரையிலே நடப்பாரைப்போலே நடக்கவல்ல இளங்குருகே! உன் ஸாமர்த்யத்தாலுண்டானபலம் நான் பெறவிறே புகுகிறது. நடுவே நீர்இடைச்சுவராலும் தேங்கவேண்டாவிறே உனக்கு. [திருமூழிக்களத்தார்க்கு] - வளையம்போலேயும் ஆபரணம்போலேயும் அவ்வூரில்நிலையும் அழகுக்கு உடலாயிருக்கிறபடி. அவை விக்ரஹத்துக்கு ஆபரணமானாற்போலே, ஶீலம் ஸ்வரூபத்துக்குஆபரணமிறே. அழகும் குணங்களும் ஒருதலைத்தவிஷயமிறே. [ஏந்துபூண்முலைபயந்து] - ஆபரணங்களை யரிக்கக்கடவ முலை வைவர்ண்யத்தையரித்து. ஆபரணங்கள் ஸம்ஶ்லேஷார்த்தமாகக் கழற்றுமவை; இது ஸம்ஶ்லேஷத்தாலல்லது கழலாதிறே. வ்யதிரேகத்தில் இப்படியிருக்கையிறேஸ்த்ரீத்வமாவது; இங்ஙனிராதவன்று பும்ஸ்த்வாத் வ்யாவ்ருத்தி கூடாதிறே. [என்னிணைமலர்க் கண் நீர்ததும்ப] - இணைமலர்போலேயிருக்கிற என்கண். தம்மழகையே இலக்காகவுடையகண், சோகாஸ்ருவுக்குஇலக்காம்படி. அவன் சொல்லும்படியறிந்திருக்கையாலே

ஒன்பதாம்பாட்டு.—பூந்துழாய் இத்யாதி. "குருகே-தாந்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீர்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஒருகுருகை இத்யாதி.

ஏந்துதல் - உலாவுதலாய், மிகுதியைச் சொல்லுகிறது. "நடக்கவல்ல" என்றத்தால் ஃபலிதம் - உன்ஸாமர்த்ய இத்யாதி. விவரணம்-நடுவே இத்யாதி. தேங்கவேண்டா - தடுமாறவேண்டா. "பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையார்க்கு - திருமூழிக்களத்தார்க்கு" என்றபதச்சேர்த்திக்கு பாவம் - வளையம்போலே இத்யாதி. அப்படி யழகுக்கு உடலாமோவென்ன - அவை இத்யாதி. ஃபலிதம் - அழகும் இத்யாதி. "பூண் - ஏந்து - முலைபயந்து" என்றந்வயிப்பது. ஆபரணங்களை யரிக்கக்கடவமுலை வைவர்ண்யத்தை யரித்து என்றர்த்தமருளிச்செய்கிறார் ஆபரணங்களை இத்யாதி. "ஏந்துபூணும்படி முலைபயந்து" என்றர்த்தாந்தரம்விவக்ஷித்து, பயப்பு ஆபரணமாமோவென்ன - ஆபரணங்கள் இத்யாதி. இது ஶ்லாக்யமான ஆபரணமென்றபடி. பிரிவில் விவர்ணையாகவேணுமோவென்ன - வ்யதிரேகத்தில் இத்யாதி. இப்படி ஸ்த்ரீத்வத்துக்கு வைவர்ண்யம் ஆபரணமென்று கொள்ளாதபோது அநிஷ்ட ப்ரஸஞ்சநம் பண்ணுகிறார் - இங்ஙனிராத இத்யாதி. "இணைமலர்க்கண்" என்று விசேஷித்ததுக்கு பாவம்-தம்மழகையே இத்யாதி. "என்னிணைமலர்க் கண்" என்று ஆத்மஶ்லாகைபண்ணலாமோவென்ன - அவன் சொல்லும்படி இத்யாதி. "தம்மழகையே யிலக்காகவுடைய கண்" என்றத்தால் ஃபலிதத்தை யருளிச்செய்யாநின்றுகொண்டு,

சொல்லுகிறாளித்தனைபோக்கி அல்லாதபோது தன்கண்ணை இப்படிச்சொல்லக் கூடாதிறே. [ததும்ப] - ஆநந்தாஶ்ருவுக்கு அர்ஹமான கண் ஶோகாஶ்ருவாலே நிறைந்தபடி. [தாம்] - பூந்துழாய்முடியார், பொன்னாழிக்கையார், திருமுழிக்களத்தார் என்றுவைத்து, 'தாம்' என்கிறாளிறே. "பூந்துழாய்முடியார்க்குப்பொன்னாழிக்கையார்க்கு" - என்கையாலே வடிவழகைச் சொல்லிற்று; "திருமுழிக்களத்தார்க்கு" என்கையாலே குணஞ்சொல்லிற்று; இப்படிப்பட்டவடிவழகையும் குணங்களையுமுடைய தாம். [தம்மைக்கொண்டகல்தல்] - தமக்கு அகலவேண்டிலுல் "இவ்வடிவைப்பிரிந்தார் பிழையார்" என்று அத்தைவைத்தன்றோபோவது. தம்மைக் கண்ணாடிப்புறத்திலே கண்டறிவரே. தம்மைப் பிரிந்தவுளைக்கு உதவுகைக்கன்றோ தம்மைக்கண்டது; "இமாமவஸ்தாமாபந்நோநேஹபஶ்யாமிராகவம்" (இமாமவஸ்த்தாமாபந்நோநேஹபஶ்யாமிராகவம்) என்கிறபடியே ஆற்றாமை எல்லாம் சொல்லுவிக்குமிறே. எனக்கு ஓராற்றாமையுண்டானவளவில் கிட்டி நின்று முகங்காட்டி ஈரக்கையாலேதடவி நோக்குகைக்கன்றோ தம்மைப்பெற்றது. தம்மைப்பிரிந்து நோவுபடுகிற இற்றைக்குமேற்பட ஆற்றாமையில்லையிறே எனக்கு. இவ்வளவில் நான் பெருமாளைக்காண்கிறிலேன் என்றாளிறே. அவ்வா, [தாந்தம்மைக்கொண்டகல்தல்] - தாம் என்னைக்கொண்டு அகலுமதொழிய தம்மைக்கொண்டகலக்கடவரோ? தம்மைக்கொண்டகலவேண்டிலுல் தமக்கு ஶேஷமானத்தைப்போகட்டுப் பிறர்க்கு ஶேஷமானத்தையோ கொடுபோவது? "ஸக்தாநாம்" (பக்தாநாம்) என்றிறே; அவனுடம்பு திருப்

"ததும்ப" என்றதுக்கர்த்தம் - ஆநந்தாஶ்ருவுக்கு இத்யாதி. "தாம்" என்று சுத்தைப் பாவிக்கிறதென்ன - பூந்துழாய் இத்யாதி. வடிவழகையும் குணங்களையுமுடைய தாம் என்றபடி. இதுசொல்லும்படி யென்னென்ன - பூந்துழாய் இத்யாதி வாக்யத்வயம். தம்மைக்கொண்டுபிரிகிறவிது தம்முடைய உளைக்குப்போராதென்கையாலே தம்மைவைத்துப்போகிறது நல்லதென்று தோற்றிற்றிறே; அத்தையருளிச்செய்கிறார் - தமக்குஅகல இத்யாதி. "இவ்வடிவைப்பிரிந்தார் பிழையார்" என்கைக்கு, "பூந்துழாய்முடியார்" என்றவடிவைக்ஷண்யம் தமக்குத் தெரியுமோவென்ன - தம்மைக்கண்ணாடி இத்யாதி. தன்வைலக்ஷண்யம் தனக்குத் தெரியாதோ, கண்ணாடிப்புறத்திலே காணவேணுமோவென்னில்; "பூந்துழாய்முடியார்" என்கையாலே காணவேணுமென்றகருத்து. "தம்மை" என்றதுக்கு பாவம் - தம்மைப்பிரிந்த இத்யாதி. அத்தத்வயத்துக்கும் ஸங்கதியென்? என்னில், - விக்ரஹவிஶிஷ்டரான தமமை வைத்துப் போக ப்ராப்தமாயிருக்க விக்ரஹத்தைக் கொண்டுபோகிறது தகவன்றென்றமுக்தினது; ஶ்லோகத்தால் உக்த ஆற்றாமைக்கு நிவர்த்தகராகத் தம்மை நான் அறுதியிட்டிருக்கையாலே பிரிந்த உளைக்குத் தாம் உதவ ப்ராப்தமாயிருக்க தம்மைக்கொண்டுபிரிகிறது தகவன்றென்று இரண்டார்த்தமென்று ஸங்கதி கண்டுகொள்வது. தம்மைக்கண்டது - தம்மை நிஶ்சயித்திருந்ததென்றபடி. இப்படி ஈடுக்கச் சொன்னபெருமாளோடவென்ன - இமாமவஸ்த்தா இத்யாதி. "ஏவமுக்த்வாது வைதேஹீ ஶோகஸந்தப்தமாநஸா: இமாமவஸ்த்தாமாபந்நோநேஹபஶ்யாமிராகவம்" இதி ஸமாநப்ரலாபே (அயோ. ருக - உக).

தம்மைப் பிரிந்தவுளைக்குத்தாம்உதவக்கூடுமோ? இங்ஙன் சொல்லுவானென்னென்ன - ஆற்றாமை இத்யாதி. எடுத்த ஶ்லோகத்துக்கு அர்த்தம் - எனக்கு இத்யாதி. "தாந்தம்மைக்கொண்டகல்தல்" என்றதுக்கு - தாம்போகவேண்டிலுல் தம்மைவைத்தன்றோ போவது; தம்மைக்கொண்டகலவோ? என்று அருளிச்செய்து, தாம் போகவேண்டிலுல் என்னையும் கூட்டிக்கொண்டுபோகாதே தம்மைமாத்ரத்தைக்கொண்டகலவோமோ என்றர்த்தாந்தரம் - தாம் என்னைக்கொண்டு இத்யாதி. தம்மைக்கொண்டகலத்தேவையேதென்ன - தம்மைக்கொண்டு இத்யாதி. தமக்கு ஶேஷமானத்தை - இத்தலையை. பிறர்க்கு ஶேஷமானத்தை-வடிவையென்றபடி. உடம்பு பிறர்க்கு ஶேஷமோவென்ன - ஸக்தாநாம்

பது.“தனக்கேயாக எனைக்கொள்ளவேணும்”என்றிறே இத்தலையிருப்பது [தகவன்றேன் றுரையீரே] - ப்ரணயித்வமும் மேன்மையுமெல்லாங் கிடக்கச்செய்தே, இது நிர்த்தயர் செய்யும்செயலென்று சொல்லுங்கோள். ஸ்த்ரீவதத்துக்கு அஞ்சாதார் செய்யுமவற்றைச் செய்தீரேன்று சோல்லுங்கோள். (௯)

பத்தாம் பாட்டு.

தகவன்றேன்றுரையீர்கள்தடம்புனல்வாயிரைதேர்ந்து
மிகவின்பம்படமேவும் மென்னடையவன்னங்காள்!
மிகமேனிமெலிவெய்திமேகலையுமீடழிந்துஎன்
அகமேனியொழியாமேதிருமூழிக்களத்தார்க்கே.

ஆ.—(தகவன்றென்று.) - மென்னடைய அன்னங்காள்! தாந் தம்மைக் கொண்டகல்தல் தகவன்றென்று நீங்கள் சொல்லவேணும்; சொல்லுமிடத்தில், என்னுடைய மேனியும் மிக மெலிவெய்தி மேகலையும் ஈடழிந்து என்னுத்மாவும் முடிவதற்கு முன்னே சென்று சொல்லவேணும் என்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து, எம்பெருமானுக்கு என்தசையை நான் முடிவதுக்குமுன்பே அறிவியுங்கோ ளென்கிறாள்.

[தடப்புனலென்று தொடங்கி]—பெரிய நீர்வெள்ளங்களிலே இரையைத்தேடி மிகவும் இனிமைபிறக்கும்படி ஸம்ஶ்லேஷியாநிற்பதுஞ்செய்து அத்தாலே ஸரஸமான ஸஞ்சாரத்தையுடைய அன்னங்காள்! [மிகமேனியென்று மேலுக்கு] - உடம்பு மிக மெலிந்து மேகலையும் கட்டழிந்து நான் முடிவதுக்குமுன்பே.

ப.—அநந்தரம், திருமூழிக்களத்தில் ஆஸக்தியாலே நிரவயிகஃயாவான் என்னும்படி யிருக்கிறவர்க்கு, என்ஸத்தை யழிவதற்குமுன்னே “இதுதம்முடைய ஃயாநுரூபமல்ல” என்று சொல்லுங்கோளென்று, சிலஅன்னங்களைப்பார்த்துச்சொல்லுகிறாள்.

தட - பெரிய, பொழில்வாய் - பொழிலிடத்தில், இரை - இரையை, தேர்ந்து - ஸம்பாதித்து, மிக - மிகவும், இன்பம் - ஆநந்தம், பட - உண்டாம்படி, மேவும் - சேர்ந்துவர்த்திக்கிற, மெல்நடைய - மெல்லிய நடையையுடைய, அன்னங்காள்! மேனி - ஶரீரம், மிக - மிகவும், மெலிவுஎய்தி - மெலிவையெய்தி, (அத்தாலே), மேகலையும் - பரிபட்டமும், ஈடழிந்து - கட்டுக்குலைந்து, (அதுக்குமேலே), என் அகமேனி - அகவாயில் ஸ்வரூபமும், ஒழியாமே - குலையாதபடி, திருமூழிக்களத்தார்க்கு - ஆஶ்ரிதா

இத்யாதி. இவர் அத்தலைக்கு ஶேஷமோவென்ன - தனக்கே இத்யாதி. ப்ரணயித்வமும் மேன்மையு மெல்லாங்கிடக்கச்செய்தே என்றது - ப்ரணயித்வத்துக்கும் மார்த்தவத்துக்கும் சோாதமாத்ரமேயன்றிக்கேயென்றபடி. “நிர்த்தயர்செய்யும்செயல்” என்றத்தை விவரிக்கிறார் - ஸ்த்ரீவதத்துக்கு இத்யாதி. தகவன்று - ஃயைக்குப்போராது. தகவு - க்ருபை. ‘ஏந்துநீரிளங்குருகே - ஏந்துபூண்முலை’ என்றுதொடங்கி, ‘அகல்தல்-பூந்துழாய் முடியார்க்கு’ என்றுதொடங்கி, ‘திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்றுரையீரே’ இத்யந்வயஃ. (௰)

நுக்ரஹார்த்தமாகத் திருமூழிக்களத்திலே நிற்கிறவர்க்கு. தகவன்றென்று - இத்தலையின் ப்ரயோஜநம் பெறுமையாலே இது தயையின் கார்யமல்லவென்று, உரையீர்கள் - சொல்லுங்கோளென்கிறாள்.

இ.—பத்தாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து நான் முடிவதற்கு முன்னே அவனுக்கு என் தசையை அறிவியுங்கோள் என்கிறாள்.

[தகவன்றென்றுரையீர்கள்] - அவனை அழிக்கையாவது நிர்த்தயனென்கை. அவனுக்கு நிரூபகம் தயையாகையாலே அவனுடைய மர்மமறியுமவளாகையாலே அத்தையில்லையென்கிறாள். [தடம்புனல்வாயிரைதேர்ந்து] - மிக்க நீர்வெள்ளத்தை யுடைத்தான பொய்கைகளிலே இரைதேடி. கலவிக்கு உறுப்பான வ்யாபாரமேயாயிருக்கிறபடி. [மிகவின்பம்படமேவும்] - இனிமை கரைபுரளும்படியன்றோ நீங்கள் ஸம்ஶ்லேஷிக்கிறது. பிரிவுதேட்டமாம்படி உந்மஸ்தகரஸமாய்ச் செல்லுகிறபடி. விஶ்லேஷியாவிடில் இரண்டாஶ்ரயமும் அழியும்படியாய்த்து இவை புரிமாறுகிறபடி. [மென்னடைய அன்னங்காள்] - கலவியின்மிகுதி நடையிலே தொடைகொள்ளலாம்படி ஸஞ்சாரம் இருக்கிறபடி. [மிகமேனிமெலிவெய்தி] - நான் இவ்விருப்பு இருக்க உங்களுடைய கலவியும் ஸஞ்சாரமும் ப்ரீதிஹேதுவாக ப்ராப்திபுண்டோ? உங்கள் கலவியின் மிகுதி போராதே போரும் என்வடிவில் மெலிவின் மிகுதியும். [மேகலையுமிழந்து] - பரிபட்டமும் கட்டழிந்து; மேகலை தொங்கும்போது ஆஶ்ரயம் வேணுமே. [என்அகமேனியொழியாமே] - புறம்பு கழலுமவை கழன்றது, அகவாயில் ஸ்வரூபம் கழலுவதற்குமுன்னே; நான் முடிவதற்கு முன்னே என்கை. [திருமூழிக்களத்தார்க்கு] - தம்மையொழியச் செல்லாதார் ஸத்தையை நோக்குகைக்கு எடுத்து வந்திருக்கிறவர்க்கு. [திருமூழிக்களத்தார்க்கு தகவன்றென்று உரையீரே] - பொரிபுறந்தடவி அத்தலைப்பேணிப் போந்தது அமையும்; இனி அவர்படியைச் சொல்லிப் போருங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. சில அன்னங்களைக் குறித்து, நான் முடிவதற்கு முன்னே அவனுக்கு என்தசையை யறிவியுங்கோளென்கிறாள்.

[தகவன்றென்றுரையீர்கள்] - அவனுடைய ஸத்தை அழிக்கைக்கு 'தகவில்லை' என்னுங்கோள். அதாவது - நிர்த்தயனென்கை. அவனுக்கு நிரூபகம் தயையாகையாலே, அவனுடைய மர்மம்அறியுமவளாகையாலே, அத்தை யில்லையென்கிறாள். [தடம்புனல்வாயிரைதேர்ந்து] - மிக்க நீர்வெள்ளத்தையுடைத்தான பொய்கைகளிலே யிரைதேடி. கலவிக்கு உறுப்பான வ்யாபாரமேயாயிருக்கிறபடி. [மிகவின்பம்படமேவும்] - ஸ்நேஹம் கரைபுரளும்படியன்றோ நீங்கள் ஸம்ஶ்லேஷிக்கிறபடி. பிரிவு தேட்டமாய் உந்மஸ்தகரஸமாய்ச் செல்லுகிறபடி. விஶ்லேஷியாவிடில் இரண்டாஶ்ரயமும் அழியும்படி

பத்தாம்பாட்டு.—தகவு இத்யாதி. “அன்னங்காள் - அகமேனியொழியாமே திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்றுரையீர்கள்” என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலவன்னங்களை இத்யாதி.

தடம் - மிகுதி. மீளவும் “தகவன்றென்றுரையீர்கள்” என்கிறதென்னென்ன - அவனுடைய இத்யாதி. குணோத்தரங்களிருக்க, “தயையில்லை” என்கிறதுக்குக் கருத்தென்னென்னென்ன - அவனுக்கு இத்யாதி. இத்தால் ஸூசகம் - கலவிக்கு இத்யாதி. மேலே “மிகவின்பம் - மேவும்” என்றிருக்கையாலே - கலவிக்கு உறுப்பான வ்யாபாரம் என்றது. “மிகவின்பம்” என்றதுக்கு தாத்பர்யம் - ஸ்நேஹம் இத்யாதி. இத்தால் ஸூசகம் - பிரிவு இத்யாதி. விஶ்லேஷ

யாய்த்து இவைபரிமாறுகிறபடி. [மென்னடையவன்னங்காள்] - கலவியின்மிகுதி நடையிலே தோடைகொள்ளலாம்படி ஸஞ்சரியாநின்றனவாய்த்து. [மிகமேனிமெலிவெய்தி] - ஸரஸஸஞ்சாரமெல்லாம் குலைந்ததிறேயுங்களுக்கு; கண்டிகோளிறே நானிருக்கிறபடி; என்தசையைக்கண்டால் தரித்திருக்கலாயிருந்ததோ ? உங்கள் கலவியின்மிகுதியோபாதி போரும், என்னுடம்பின் மெலிவும். [மேகலையுமீடழிந்து] - பரியட்டமும்கட்டுக்குலைந்து; மேகலை தோங்கும்போது ஆஸ்ரயம்வேணுமே. [என்னகமேனியொழியாமே]-புறம்புள்ளது அடையக் கழன்றது: இனி அகவாயில் ஸ்வரூபம் கழல்வதற்குமுன்னே; நான் முடிவதற்கு முன்னே யென்கை. [திருமூழிக்களத்தார்க்கு] - தம்மையொழியச் செல்லாதார் ஸத்தை நோக்குகைக்காகவந்து கிடக்கிறவர்க்கு [திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்றுரையீர்கள்] - பொரிபுறந்தடவி அத்தலையைப்பேணியுண்டதமையும்: இனி அவர்படியை நேராகச் சொல்லிப் போருங்கோள். அப்படி முன்பு பேணினளோ இவளென்னில்; ''எனதவளவண்ணர்தகவுகள்'' என்று திருத்தாயார்சொல்லிற்றுப் பொறுமல், ''தகவுடையவனே'' என்று, ''கெடுவாய்! ஆகரத்தில் தகவுமறுக்குமோ?'' என்றாளிறே; அத்தைச் சொல்லுகிறாள். (௧௧)

பதினோராம் பாட்டு.

ஒழிவின்றித்திருமூழிக்களத்துறையுமொண்சுடரை
ஒழிவில்லாஅணிமழலைக்கிளிமொழியாள்அலற்றியசொல்
வழுவில்லாவண்குருகூர்ச்சடகோபன்வாய்ந்துரைத்த
அழிவில்லாஆயிரத்துஇப்பத்தும்நோயறுக்குமே.

ஆ.—(ஒழிவின்றி.) - எம்பெருமானைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவையாயிருப்பாளொருபிராட்டி அவனைப்பிரிந்தலற்றின பாசுரத்தாலே, தத்ஸத்ருஸ ஸ்வபாவரான வண்குருகூர்ச்சடகோபன் எம்பெருமானைப்பிரிந்தலற்றின இப்பத்து, தத்விஸ்லேஷரூப வ்யாதியைப் போக்குமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்னை அப்யஸித்தார்க்கு எம்பெருமானைப் பிரிகைக்கீடான ஸம்ஸாரதுரிதத்தை அறுக்கும் என்கிறார்.

விஸ்லேஷியாவிடில் இத்யாதி. ''மென்னடை'' என்றதுக்குபாவம் - கலவியின் இத்யாதி. தோடைகொள்ளுகை - காண்கை. பதப்ரயோகப்ரயோஜநம் - ஸரஸ இத்யாதி. அனுக்கடியேதென்ன - கண்டிகோளிறே இத்யாதி. உனக்கு வ்யஸநமுண்டானால் ஸரஸஸஞ்சாரம் குலையவேணுமோவென்ன - என்தசையை இத்யாதி. ''மிகவின்பம் - மிகமேனி'' என்ற பதச்சேர்த்திக்குபாவம் - உங்கள்கலவியின் இத்யாதி. மெலிவும் - ஆர்த்தியும். மேகலை-வஸ்த்ரம். கட்டுக்குலைகைக்கு ஹேதுவேதென்ன - மேகலைதோங்கும் இத்யாதி. மேனிமெலிவெய்துகையாலே ஆஸ்ரயமில்லையென்றபடி. தம்மையொழியச் செல்லாதார் என்றது - திருமூழிக்களத்திலுள்ளாரை. குறுதிகளென்று சொல்லுகிற நீ இப்படி சொல்லலாமோவென்ன - பொரி புறம் இத்யாதி. அதாவது - உள்ளே ரஸமில்லாத பொரிக்கு சர்க்கராதிகளை மேலேதடவுமாபோலே, ப்ரணயித்வமில்லாதவனுக்கு ப்ரணயித்வத்தையாரோபித்து, ''தகவில்லை'' என்றவர்கள் முன்னே ''தகவுடையவன்'' என்றுசொன்னதமையுமென்றபடி. 'தடம்புனல்வாய்' என்று தொடங்கி, 'திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்றுரையீர்கள்' இத்யந்வயம். (௧௦)

[ஒழிவின்றியென்று மேலுக்கு] - திருமூழிக்களத்தில் ஸௌலப்யத்தாலே நிரந்தரவாஸம்பண்ணி அங்கே ஸந்நிஹிதனாயிருக்கிறவனை. [ஒழிவில்லா என்று தொடங்கி] - எம்பெருமானுக்குத் திருமூழிக்களத்தைப் பிரிந்து புரிக்க வியவஸாயமுண்டேயாகிலும் அவனைப்பிரியில் தரியாததன்மையை யுடையளாய் அழகியதாய் முக்தமான கிளியின் பேச்சுப்போலேயிருக்கிற பேச்சை யுடையளான பிராட்டி தன்னார்த்தியாலே ப்ரலாபித்த பாசுரத்தில் ஒன்றும் குறைபாடின்றிக்கேயிருக்கிற ஆழ்வார் நோவுபட்டு உரைத்த.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃபலமாக, ஸம்ஸாரவ்யாதியான விஶ்லேஷரூபமான வ்யாதியினுடைய ஶாந்தியை யருளிச்செய்கிறார்.

ஒழிவுஇன்றி-(ஒருகாலும்) விஶ்லேஷமில்லாதபடி, திருமூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுகையாலே, ஒண்சுடரை - விலக்ஷணமான தேஜஸ்ஸையுடையவரை, ஒழிவில்லா - பிரிவில் தரியாதபடியாய், அணி - அழகிய, மழலை - முக்தோக்தியையுடைத்தான, கிளிமொழியாள் - கிளிபோலொத்த பேச்சையுடையவள், அலற்றிய - தன்னார்த்தியாலே அக்ரமமாகச்சொன்ன, சொல் - பாசுரத்தை, வழுஇல்லா - (அந்தப்ரமத்தில்) குறையில்லாதபடியாய், வண்குருகூர் - விலக்ஷணமான திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், வாய்ந்துரைத்த - (அவனுடைய ஸ்வபாவங்களைக்)கிட்டி பாவித்துஉரைத்ததாய், ஒழிவுஇல்லா - ஶ்ரோதாக்கள் நெஞ்சில்நின்றும்போகாத, ஆயிரத்துஇப்பத்தும்-, நோய் — (ஸம்ஸாரவிஶ்லேஷஹேதுவான), ஸம்ஸாரவ்யாதியை, அறுக்கும் - தீர்த்துக்கொள்ளும். இது - ஈரடித் தாழிசை: கலிவிருத்தமென்பாருமுளர்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்கு, பிரிவுக்கடியான ஸம்ஸாரதுரிதத்தை இதுதானே அறுத்துக்கொடுக்கும் என்கிறார்.

[ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும்] - ஒருநாளும் விடாதேயாதே அவ்வூரிலே நித்யவாஸம் பண்ணுகிறவர்க்கு. [ஒண்சுடர்] - "மின்னுநீர்" வணங்குஞ்சோதி என்கிறபடியே அவ்வூரில் நிலையால்வந்த புகரிருக்கிறபடி. அவ்வூரில் ஸௌலப்யத்தால்வந்த புகர். பிற்பாடர்க்கு முகங்கொடுக்கும் சீர்மையால்வந்த புகர். [ஒழிவில்லா] - அவன் அவ்வூரை யொழியில் தரிக்கமாட்டாதாப்போலே அவனையொழியத் தரிக்கமாட்டாதவளானவளை. [அணிமழலைக்கிளிமொழியாள்] - அழகியதாய் முக்தமான கிளியின்பேச்சைப் போலேயிருக்கிற பேச்சை உடையவள். [அலற்றியசொல்] - தன் ஆர்த்தியாலே அக்ரமமாகச் சொன்ன பாசுரத்தை. [வழுவில்லா வண்குருகூர்ச்சடகோபன்] - அப்பிராட்டிபடியில் ஒன்றும் குறைவின்றிக்கேயிருக்கிற ஆழ்வார். [வாய்ந்துரைத்த] - கிட்டி உரைத்த ஸாவஸங்யத்தாலே நோவுபட்டுரைத்த. [ஒழிவில்லாவாயிரத்துஇப்பத்து]- கேட்டார்கள் நெஞ்சை ஒருநாளும் விடாதேவர்த்திக்கிற இப்பத்து. இப்பாசுரத்தைக் கேட்டார்க்கு ஸமகாலத்திற்போலே ஸர்வகாலமும் ரஸம்பிறக்கும்படியாய்த்து இருப்பது. [நோயறுக்குமே]-ஸம்ஸாரவிஶ்லேஷமாகிற நோய் அறுக்கும். கலந்து பிரிந்துநிர்பந்தக்களின் காலிலே விழுந்து க்லேஶிக்கவேண்டா, விஶ்லேஷப்ரஸங்கமில்லாத தேஶத்திலே புகப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸித்தார்க்கு, பிரிவுக்கடியான ஸம்ஸாரதுரிதத்தை இதுதானே யறுத்துக்கொடுக்கும் என்கிறார்.

[ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும்] - ஒருநாளும் விடநினையாதே அவ்வூரில் நித்யவாஸம்பண்ணுமவனை. [ஒண்சுடர்] - "பின்னானார்வணங்குஞ்சோதி" என்கிறபடியே, அவ்வூரில் நிலையால்வந்த புகரிருக்கிறபடி;—அவ்வூரில் போக்யதையால் வந்த புகர், பிற்பாடர்க்கு முகங்கொடுக்கும் நீர்மையால் வந்த புகர். [ஒழிவில்லா] - அவன் அவ்வூரையொழியில் தரிக்கமாட்டாதாற்போலே, அவனையொழியில் தரிக்கமாட்டாதவளென்கை; "[illegible]" (நசஸீதாத்வயாஹீநா) என்னுமவளிறே. [அணிமழலைக்கிளிமொழியாள்] - அழகிய முக்தமான, கிளியின் பேச்சுப்போலேயிருக்கிற பேச்சையுடையவள். [அலற்றியசொல்]-தன்னாற்றாமையாலே அக்ரமமாகச்சொன்ன பாசுரத்தை. [வழுவில்லாவண்குருகூர்ச்சடகோபன்] - பிராட்டிபடியி லொன்றும் குறைவற்றிருக்கிற ஆழ்வார். [வாய்ந்துரைத்த] - கிட்டியுரைத்த; பாவபந்தத்தாலே சொன்னவென்றபடி. [அழிவில்லாவாயிரத்துஇப்பத்து] - கேட்டவர்கள்நெஞ்சையொருநாளும் விடாதே வர்த்திக்கிற இப்பத்து. இப்பாசுரத்தைக் கேட்டார்க்கு, ஸமகாலத்திற்போலே ஸர்வகாலமும் ரஸம்பிறக்கும்படியாய்த்துஇருப்பது. [நோயறுக்குமே]-பகவத்விஶ்லேஷமாகிறநோயையறுக்கும்; கலந்து பிரிந்து திர்யக்குக்களின் காலிலேவிழுந்துக்லேஶிக்க வேண்டா; விஶ்லேஷமில்லாத தேசத்திலே புகப்பெறுவர். (கக)

நிகமம் - ஒழிவின்றி இத்யாதி. "இப்பத்தும்நோயறுக்கும்" என்றத்தைக்கடாக்ஷித்தவதரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி. நோய் - விஶ்லேஷஹேதுவான ஸம்ஸாரதுரிதம். கீழே ஸௌலப்யத்தால்வந்த புகராக அருளிச்செய்து, பாவாந்தரம் - அவ்வூரில் போக்யதையால் இத்யாதி. "பின்னானார்" இத்யாதி வாக்யவிவரணம் - பிற்பாடர்க்கு இத்யாதி. "ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும் - ஒழிவில்லா" என்கிற பதச்சேர்த்திக்குபாவம் - அவன்அவ்வூரை இத்யாதி. தரிக்கமாட்டாளென்னுமதுக்கு ப்ரமாணம் நசஸீதா-இத்யாதி. ஒழிவில்லா - பிரியில் தரிக்கமாட்டாத. "அணிமழலை" என்றது - மொழிக்கு விஶேஷணம். வழுவுதல் - நழுவுதல். கிட்டுகையாவதேதென்ன - பாவபந்தத்தாலே இத்யாதி. ஆயிரத்துக்கு அழிவில்லாமையேதென்ன - கேட்டவர்கள் இத்யாதி. போக்யதையாலேயென்றபடி. விவரணம் - இப்பாசுரத்தை இத்யாதி. "நோயறுக்கும்" என்றது - இஷ்டப்ராப்திக்கும் உபலக்ஷணமென்கிறார் - கலந்து இத்யாதி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி }
எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று
அங்காதுபற்றாசா ஆங்கவன்பா - லெங்குமுள்ள
புள்ளினத்தைத்தூதாகப்போகவிடுமாறன்தாள்
உள்ளினர்க்குத் தீங்கை யறுக்கும்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

எட்டாந்திருவாய்மொழி—அறுக்கும்வினை-ப்ரவேசங்கள்.

ஆ.—(அறுக்கும்வினை.) – இப்படி தூதப்ரேஷணம்பண்ண, பின்னையும் எம்பெருமானை வரக்காணாமையாலே அவஸந்நராய்,

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி தம்முடைய ஆர்த்தியை அறிவிக்கச்செய்தேயும் எம்பெருமான் அப்போதே வரக்காணாமையாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார் தூதப்ரேஷணத்தாலும் மநோரதங்களாலும் அவனுடைய குணாநுஸந்தாநத்தாலும் 'அவன்வந்து நம்மை விஷயீகரித்துக் திருநாவாயிலே கொண்டுபோகை நிஶ்சிதம்' என்றத்யவஸித்து, லங்கையிலேவந்து திருவடி தன்னைத் திருவடிதொழுது போனபின்பு பிராட்டி "பெருமாளைக் காண்பதெப்போதோ?" என்று பதறினாற்போலே திருநாவாயிலே புகவேணுமென்றுபதறி, 'அங்கே புகவல்லேனே?' என்றும், 'புகும் நாள் என்று?' என்றும், 'அங்கேபுக்கு என்கண்ணாரக்கண்டு அடிமைசெய்யவல்லேனே?' என்றும் தொடங்கி அநேகமநோரதங்களைப் பண்ணுகிறார். போகவிட்ட தூதர் வரப்பற்றாமை "நாம் அவனிருந்தவிடத்தே போவோம்" என்று மநோரதிக்கிறொன்றுமாம்.

ப.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி மநோரதத்தாலே ப்ராபிக்க அபிநிவேஶித்தவர், ப்ராப்யத்வராதிஶயத்தாலே, அவன்பரிபூர்ணனாய்க்கொண்டு திருநாவாயிலே எழுந்தருளியிருக்கிறபடியை ப்ரகாசிப்பிக்கக்கண்டு; அவனுடைய அநுகூலவிரோதிநிராஸக தேசவர்த்தித்வத்தையும், அநுகூலவத்ஸலத்வத்தையும், அஸாதாரண ஸம்பந்தத்தையும், நித்யகைங்கர்யவிஷயத்வத்தையும், பக்தபரிஜநஸ்தாநாதிபூர்த்தியையும், ஆஶ்ரிதஸௌலப்யத்தையும், மோக்ஷத்வரக்ஷகத்வாதியாகாரபூர்ணதையையும், அநுகூலஜ்ஞாநப்ரதத்வத்தையும், உபாயபூர்வ ஸர்வேஶ்வரத்வத்தையும், அதிரமணீயவிக்ரஹயோகத்தையும் அநுஸந்தித்து, இவ்வாகாரனான ஸர்வேஶ்வரனெழுந்தருளியிருக்கிற தேசத்தைக்கிட்டி அநுபவிப்பதெந்நாளே! என்று ஸஹர்ஷபூர்வமாக மநோரதிக்கிறார்.

இ.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி தம் ஆர்த்தியை அறிவிக்கச் செய்தேயும் அப்போதே வரக்காணாமையாலே அவஸந்நரானவர் தூதப்ரேஷணத்தாலும் அவன் குணாநுஸந்தாநத்தால் வந்த மநோரதத்தாலும் "அவன்வந்து நம்மை விஷயீகரித்து, அமர்ந்த நிலமான திருநாவாயிலே கொண்டுபோகை நிஶ்சயம்" என்று அத்யவஸித்து, க்ரமத்தாலே கொண்டுபோகப் பற்றாமையாலேபதறி, "அங்கே புகவல்லேனே, புகும் நாளென்றோ? அங்கேபுக்கு என்கண்ணாரக் கண்டு அடிமைசெய்யவல்லேனே?" என்று இப்படி அநேக மநோரதங்களைப் பண்ணுகிறார். திருவடிசென்று பிராட்டியைத் திருவடிதொழுது மீண்டபின்பு பெருமாளைக்கிட்டுந்தனையும் பிராட்டிக்குச்சென்ற மநோரதம்போலே இவர்க்குச் செல்லுகிறது. "உபாயோபேயங்கள் ஈஶ்வரனே" என்று அத்யவஸித்தார்க்கு, ப்ராப்யருசியில் கண்ணழிவற்றால் விளம்ப ஹேதுவில்லாமையாலே, ப்ராப்யஸித்தியளவும் மநோரதம் செல்லாநிற்குமிறே. அதவா, போகவிட்டதூது வரப்பற்றாமை "நாம் அவனிருந்தவிடத்தே போவோம்" என்று

மநோரதிக்கிறார். ப்ராப்யஸித்தியிலுண்டான த்வரையாலே, பெரியமுதலியார் எப்போதும் இத்திருவாய்மொழியை அநுஸந்தித்தருளுவரென்று 'பெரியமுதலியார் திருவாய்மொழி' என்றுய்த்து இத்தைச் சொல்லுவது.

ஈடு.—திருவடிசென்று பிராட்டியைத் திருவடிதொழுது மீண்டவநந்தரம் பெருமாளைக்கிட்டுவதற்குமுன்பு பிராட்டிக்குப்பிறந்த மநோரதம்போலே, கீழ்விட்டதூதர் அத்தலைப்பட்டு அவனைக்கொண்டு வருவதற்குமுன்னே நடுவே இவர்க்குப்பிறந்த மநோரதத்தைச்சொல்லுகிறது. இப்படி தம்முடைய ஆர்த்தியறிவிக்கச்செய்தேயும் அப்போதே வரக்காணாமையாலே யவஸந்நரானவர், தூதப்ரேஷணத்தாலும்அவன்குணாநுஸந்தாநத்தாலும் மநஃப்ரஸாதத்தாலும் "அவன்வந்து நம்மைவிஷயீகரித்து அமர்ந்தநிலமான திருநாவாயிலே கொடுபோகை நிஶ்சிதம்" என்று அத்யவஸித்து, க்ரமத்தால் போகப்பற்றாமையாலே பதறி, "அங்கேபுகவல்லேனே? புகும்நாள்என்றோ? அங்கேபுக்கு என் கண்ணாரக்கண்டு அடிமைசெய்ய வல்லேனே?" என்று இப்படி அநேகமநோரதங்களைப்பண்ணுகிறார். "உபாயோபேயங்களிரண்டும் ஈஶ்வரனே" என்று அத்யவஸித்தார்க்கு, ப்ராப்யருசி கண்ணழிவற்றால் விளம்பஹேதுவில்லாமையாலே, ப்ராப்யஸித்தியளவும் மநோரதம் செல்லாநிற்குமிறே. இம்மநோரதந்தான் இவனுக்குத் தவிராததுமாய், அதுதான் இனியதுமாய், இவனுடைய ஸ்வரூபத்தோடு சேர்ந்திருப்பதும் ஒன்றிறே. பெரியமுதலியார், ப்ராப்யஸித்தியில் த்வரையாலே எப்போதும் இத்திருவாய்மொழியை யநுஸந்தியாநிற்பர்; ஆகையாலே, இத்தை "பெரியமுதலியார் திருவாய்மொழி" என்றுய்த்துச்சொல்லுவது. அதவா, "விட்டதூதர்கள் தாழ்த்தார்களென்று தாமே அவன்வர்த்திக்கிற தேசத்தேறப்போகவொருப்படுகிறார்" என்பாருமுண்டு.

"அறுக்கும்வினை" ப்ரவேஶம். ஶத்ருஷ்டாந்தமாக ஸங்க்ரஹஸங்கதி - திருவடிசென்று இத்யாதி. பிராட்டிக்குப்பிறந்த மநோரதம்போலே யென்றது-"ஸம்ஸ்ருஷ்டேஷு விராமேணே ஸமாஜேநவரோஹிணீ । ஸுஹ்ருத்ஸ்வபி விஶோகஸ்ய வாரயோஸ்ய விமோசயே"

என்ற திருவடிசொல்லிப்போனவற்றையே எப்போதும்மநோரதித்துக்கொண்டிருக்கையைப்பற்ற 'மநோரதத்தைச்சொல்லுகிறது' என்றவநந்தரம், "இத்திருவாய்மொழி" என்று கூட்டுவது. அத்தலைப்பட்டு - அங்கேபோய். பிராட்டிக்குப் பெருமாள் வருவரென்று திருவடியறிவித்தபின் பாகையாலே, "எப்போது அவரைக்காணப்புகுகிறோம்?" என்று பதறக்கூடும்; இவர்க்கு அங்ஙனன்று இன்றிக்கேயிருக்க மநோரதம் கூடினபடி எங்ஙனே? என்கிற சங்கையிலே, விஸ்தாரஸங்கதி - இப்படி இத்யாதி. "குறுக்கும்வகையுண்டுகொலோ" "நாளறியேனே," "அணுகப்பெறுநாள் எவைகொலோ", "கண்ணாரக்களிக்கின்றது இங்குஎன்றுகொல்" இத்யாதியைப்பற்ற - அங்கே புகவல்லேனே இத்யாதித்ரயமும். உபாயம் அவனே என்றத்யவஸித்தால் "தத்வஸ்யஸ்ய ஸம்ஸவக" என்றிராதே மநோரதிப்பானென்? என்ன - உபாயோபேயங்கள் இத்யாதி. ப்ராப்யருசி கண்ணழிவற்றால் - ப்ராப்யத்திலாதரம் குறைவற வுண்டானாலென்றபடி. ப்ராப்ய த்வரையுண்டென்றால் ஸ்வரூபவிருத்தத்தைச் செய்யலாமோவென்ன- இம்மநோரதம் இத்யாதி. "ப்ராப்யத்வரையாலே மநோரதிக்கிறார்" என்றதுக்கு ஸம்வாதம் - பெரியமுதலியார் இத்யாதி. பெரியமுதலியார் - ஆளவந்தார். ஸங்கத்யந்தரம் - அதவா இத்யாதி.

முதற் பாட்டு.

அறுக்கும்வினையாயின ஆகத்தவனை
நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையினார்க்கு
வெறித்தண்மலர்ச்சோலைகள் சூழ்திருநாவாய்
குறுக்கும்வகையுண்டுகொலோ கொடியேற்கே.

ஆ.—ஸம்வத்ஸரஸாபேக்ஷராயிருப்பாருடைய துக்கங்களைப் போக்கும் திருநாவாயை நமக்கும் ஒருகால் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

[அறுக்குமென்று தொடங்கி] - அவனை ஹ்ருதயத்திலே நிறுத்தவேணு மென்னும் அத்யவஸாயத்திலே ஒருப்பட்ட மநோரதத்தை யுடையார்க்கு ஸகல துக்கங்களையும் போக்கும். [வெறி]-பரிமளம். [கொடியேற்கு]-அங்குப் புகப்பெறாதே நோவுபடுகைக்கிடான பாபத்தைப்பண்ணின எனக்கு.

ப.—முதற்பாட்டில், 'ஆஸ்ரிதாநுகூலவிரோதிநிரஸகமாய் நிரதிஸயபோக்ய மான திருநாவாய் எனக்குக் கிட்டும் வகையுண்டோ?' என்கிறார்.

ஆகத்து-(தங்கள்)அகவாயிலே, அவனை-(ஸகலவிரோதிநிவர்த்தகனும் நிரதிஸயபோக்யனுமான)ஸர்வேஸ்வரனானவனை, நிறுத்தும் - நிறுத்தவேணுமென்கிற;மனத்து - நெஞ்சிலே, ஒன்றிய - ஒருமைப்பட்ட, சிந்தையினார்க்கு - மநோரதத்தையுடையவர்களுக்கு, வினையாயின - அவித்யாகர்ம வாஸநாருசிகளான அநுகூலவிரோதிகளையுடைய, அறுக்கும் - போக்குவதாய், வெறி - பரிமளப்ரசுரமான, தண் - ஸ்ரமஹரமாய், மலர் - புஷ்போத்தரமான, சோலைகள்சூழ் - சோலைகளையுடைய, திருநாவாய் - திருநாவாயானது, கொடியேற்கு - (அநுபவாபிநிவேஸாநுரூபமாகக் கிட்டப்பெறாத) கொடுமையையுடைய எனக்கு, குறுக்கும்வகை உண்டுகொலோ - கிட்டும்விரகு உண்டாமோ?

இ.—முதற்பாட்டில், எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

[அறுக்கும் வினையாயின] - வினையென்று பேர்பெற்றவற்றை அடங்கலும் போக்கும்; ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்திவிரோதி, ஸரீரத்தளவில் ப்ரயவஸிக்கவொட்டாதே ப்ராரப்தமாய் வருமவை, அவற்றையடைய ஒருகாலே போக்கும். க்ரமத்தாலே போக்கவேண்டுவது தானே போக்கிக் கொள்ளுமன்றே; அவன் போக்கு மன்று "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" "ஸகலம் வேத்யகர்ம மோக்ஷயிஷ்யாமி" என்கிறபடியேயாகக் கடவதிறே. இப்படி செய்வது ஆர்க் கென்னில்? [ஆகத்தவனை நிறுத்தும்மனத்தொன்றிய சிந்தையினார்க்கு] - அவனை ஹ்ருதயத்திலே நிறுத்தவேணு மென்னும் அத்யவஸாயத்திலே ஒருமைப்பட்ட மநோரதத்தை உடையவர்க்கு. [வெறி இத்யாதி] - வினையை வர்த்திப்பிக்கிலும் புக்குக்கொடுநிற்கவேண்டும்படியாய்த்து க்ஷேமமிருப்பது. பரிமளத்தையுடைத்தாய் ஸ்ரமஹரமாய் நித்யவஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய். [குறுக்கும்வகையுண்டுகொலோ] - குறுகப்பண்ணும் விரகுஏதோவென்னுதல்; குறுகும் விரகு ஏதோவென்னுதல்; குறுக்குமென்று அக்ஷேப ஸாஷை. அந்த ஸாஷையாலே அருளிச்செய்வதே! என்று விஸ்மயப்பட்டருளினார் எம்பெருமானார். [கொடியேற்கே] - ஆஸாலேஸமுடையார்க்குப் புகலாந்தேஸமாயிருக்க, புகப்

பெறாதே நோவுபடுகைக்கடியான பாபத்தைப்பண்ணின எனக்கு. 'கொடியேற்கு - ஆகத்தவனை நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையினார்க்கு - வினையாயின - அறுக்கும் - திருநாவாய் குறுக்கும்வகை, உண்டுகொலோ?'

ஈடு.—முதற்பாட்டு. எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

[அறுக்கும்வினையாயின] - வினையென்று பேர்பெற்றவையடங்கலும் போக்கும்;—ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில்வரும் விரோதிகள், வர்த்தமாநதேஹத்தளவிலே பர்யவஸிக்கையன்றிக்கே ப்ராரப்தசேஷமாய்நின்று அவ்வருகேயும்போம்படி விளம்பிக்கக்கடவவை. நின்றநின்றநிலைகள்தோறும் உண்டாயிருக்குமிறே விரோதிகள். புதுப்புடைவை யழுக்குக்கழற்றுமாபோலே க்ரமத்தாலேபோக்க வேண்டுவது தான்போக்குமன்றிறே; பகவத்ப்ரஸாதத்தாலே போமன்று ஒருகாலே போமிறே; "மேருமந்தரமாத்ரோபி", (மேருமந்தரமாத்ரோபி) "ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே," (ஸர்வேபாப்மாந:ப்ரதூயந்தே) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி)என்கிறபடியேயாகக்கடவதிறே. ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயஶ்சித்தம்பண்ணினால், ஶோஹத்யைக்குத் தனித்துப்ராயஶ்சித்தம் பண்ணவேண்டிவருமிறே; அங்ஙன்வேண்டாவிறே பகவதநுக்ரஹங்கொண்டுகார்யங்கொள்ளுமிடத்தில். ஆர்க்குத்தான் இப்படிச்செய்வது? என்னில்-; [ஆகத்து இத்யாதி]-ஹ்ருதயத்திலே அவனைநிறுத்த வேணுமென்னும் அத்யவஸாயத்திலே ஒருமைப்பட்டமநோரதத்தையுடையார்க்கு. [வெறியி தயாதி] - வினையைப்போக்காதே வர்த்திப்பிக்கிலும் விடவொண்ணாதபடி யாய்த்து, தேசமிருப்பது. பரிமளத்தையுடைத்தாய் ஶ்ரமஹரமாய் நித்ய

முதற்பாட்டு.—அறுக்கும் வினை இத்யாதி. "கொடியேற்கு - திருநாவாய் குறுக்கும் வகையுண்டுகொலோ?" என்றதைக்கடாக்ஷித்தவதாரிகை - எனக்கு இத்யாதி.

வினைகள் அநேகமுண்டோவென்ன - ருசி இத்யாதி. ருசிவிரோதியாவது - ப்ரயோஜநாந்தரஸ்பர்த்தை, தேவதாந்தரபஜநாதிகள். உபாயவிரோதியாவது †"க்ருதக்ருத்யம் ஸக்ருதேவ" இத்யாத்யுக்தபங்காத்ரயம், ஸாதநாந்தரஸ்ப்ருஹை முதலானவை. ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில் வரும் விரோதிகள் ஆவன - "அவனே உபாயம்" என்றத்யவஸாயம்பிறந்தாலும், அவன்திருவடிகளை ப்ராபிக்குமிடத்தில் "அவித்யாகர்மவாஸநாருசிகள், ஶாரகவதாபசாரம்," என்றாற்போலே வருகிற விரோதிகள். 'வர்த்தமாநதேஹத்தளவிலே பர்யவஸிக்கையன்றிக்கே' என்கிறவிடத்திலே, "ப்ராரப்தேதர பூர்வாகவிநாஶ" இத்யாத்யநுஸந்தேயம். கண்டதுக்கெல்லாம் விரோதிகளுண்டோவென்ன - நின்றநின்ற இத்யாதி. வினைகளொருகாலே அறக்கூடுமோவென்ன - புதுப்புடைவை இத்யாதி. ஒருகாலேபோமென்னுமதுக்கு ப்ரமாணங்கள் - மேருமந்தர இத்யாதி. "மேருமந்தரமாத்ரோபி ராஶி: பாபஸ்ய கர்மண: । கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி" இதிஸ்ரீவிஷ்ணுதர்மே (எஅ-அத்யா). "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" இதிசாந்தோக்யே (ரு-உச-வைஶ்வாநர வித்யாயாம்). "புதுப்புடைவை" இத்யாதி வாக்யத்வயவிவரணம் - ப்ரஹ்மஹத்யைக்கு இத்யாதி வாக்யத்வயம். ஒருமைப்பட்ட - உத்யோகித்த. ஊரில் போக்யதையை வர்ணித்ததுக்கு பாவம் - வினையைப்போக்காதே இத்யாதி. பதார்த்தம் - பரிமளத்தை இத்யாதி. "மலர்ச்சோலை" என்று நிரூபகமாகச் சொல்லுகை

---

† இங்கே அரும்பதம் விளங்கவில்லை: ருசிவிரோதி என்று தொடங்கும் வாக்கியங்கட்கு அடையவளைந்தானரும்பதத்தில் எழுதியிருக்குமாறு:—ருசிவிரோதியாவது - பகவத்விஷயத்திலே ஆசைபிறக்கவொட்டாதபடி வருகிற விரோதி: அதாவது - ப்ரயோஜநாந்தரஸ்பர்த்தை. உபாய விரோதியாவது - ஸ்வயம் ப்ரயோஜநம் அவன் என்னும் ருசிபிறந்தாலும் அவனே யுபாயமென்று அத்யவஸிக்கவொட்டாதபடி வருகிற விரோதி: அதாவது ஸாதநாந்தரஸ்ப்ருஹை.

வஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய். [குறுக்கும்வகையுண்டுகொலோ] - குறுகப் பண்ணும்வகை ஏதோ? என்னுதல்; குறுக்கும் விரகேதோ? என்னுதல்; குறுக்குமென்று - அத்தேசஸாமீப்யம். எம்பெருமானார் திருவடிதொழவெழுந்தருளாநிற்க, "திருநாவாயெத்தனையிடம்போரும்?" என்று எதிரேவருகிறார் சிலரைக் கேட்டருள, "குறுக்கும்" என்றார்களாய், அத்தைக்கேட்டு "இப்பாசுரத்தையாலேயருளிச்செய்வதே ஆழ்வார்!" என்று போர வித்தராயருளினார். [கோடியேற்கு] - கொடியேனுக்கு. ஆஸாலேஸமுடையார்க்கு ப்ராபிக்கலாம் தேசமாயிருக்க, ஆசையும் கண்ணழிவற்றிருக்க டகப் பெறாதே நோவுபடுகைக்கடியான பாபத்தைப்பண்ணினஎனக்கு. 'ஆகத்தவனைநெஞ்சத்தும் மனத்தோன்றியசிந்தையினார்க்கு - வினையாயின அறுக்கும் - வெறித்தண்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் - கொடியேற்கு - குறுக்கும்வகை யுண்டுகொலோ?' (க)

இரண்டாம் பாட்டு.

> கொடியேரிடைக் கோகனகத்தவள்கேள்வன்
> வடிவேல்தடங் கண்மடப்பின்னைமணாளன்
> நெடியானுறைசோலைகள்சூழ்திருநாவாய்
> அடியேனணுகப்பெறுநாள்எவைகொலோ?

ஆ.—(கொடியேரிடை) - பெரியபிராட்டியாரோடும் நப்பின்னைப்பிராட்டியாரோடும் கூட அவன் எழுந்தருளியிருக்கிற திருநாவாயிலே போய்ப் புகுவதென்றோ? என்கிறார்.

ஓ.—இரண்டாம்பாட்டில், திருநாவாயிலேபுகும் நாளென்றோ? என்கிறார்.

[கொடியென்றுதொடக்கி]-கொடிபோலே அழகிய இடையையுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபனாய் கூரியவேல்போலேயாய்ப்பெருத்திருக்கிற கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு போக்தாவாய், அவ்வளவன்றிக்கே, மஹிஷீபரிஜநாதிகளுக்கு ஒருமுடிவின்றிக்கேயிருக்கிறவன் நிரந்தரவாஸம் பண்ணுவதுஞ்செய்து இவன் பரிகரமெல்லாங்கொண்டு ஒருமூலையிலே அடங்கும்படி சோலைப்பரப்பையுடைய திருநாவாயை.

ப.—அநந்தரம், மஹிஷ்யாதி போக்யதாவைபவத்தையுடையவன் வர்த்திக்கிற திருநாவாயை நான் கிட்டும்நாள்களெவை? என்கிறார்.

கொடிஏர்இடை - கொடிபோலழகிய இடையையுடையளாய், கோகனகத்தவள் - தாமரைப்பூவிற் பிறப்பாலே நிரதிஸயபோக்யையான லக்ஷ்மிக்கு, கேள்வன் - ஸத்ருஸனாய், வடி வேல் - வடித்த வேல்போலே யொளியையும் கூர்மையையுமுடைத்

யாலே - நித்யவஸந்தமான என்றது. இரண்டாமர்த்தம் - குறுகும் என்கிற மெல்லொற்றை "குறுக்கும்" என்று வல்லொற்றாக்கிக்கிடக்கிறதாய், குறுக்கும்விரகேதோ என்று. ஆனால், குறுகும்வகையென்னாதே "குறுக்கும்வகை" என்கிறதென்னென்ன - குறுக்கும் இத்யாதி என்னுதல்; மூன்றாமர்த்தமாதல். "தேஸஸாமீப்யம்" என்றதுக்கு ஸம்வாதம் - எம்பெருமானார் இத்யாதி. பாபமேதென்ன - ஆஸாலேஸம் இத்யாதி. அந்வயம் - ஆகத்தவனை இத்யாதி. "வினையாயின - அறுக்கும்" என்றது - திருநாவாய்க்கு விஸேஷணம். (க)

தான, தடங்கண் - பெரியகண்களையும், மடம் - மடப்பத்தையுமுடைய, பின்னை - நப்பின்னைப்பிராட்டிக்கு, மணாளன் - போக்தாவாய், (இவ்வளவன்றியே), நெடியான் - அபர்யந்த போக்யதாதிசயத்தையுடையவன், உறை - வர்த்திக்கிற (தேசமாய்), சோலைகள் - நாநாவிதமான சோலைகளாலே, சூழ் - சூழப்பட்ட, திருநாவாய் - திருநாவாயை, அடியேன்-(அநந்யார்ஹசேஷபூதனான) நான், அணுகப்பெறும்நாள்-அணுகப்பெறும்நாள்கள், எவைகொலோ - எவையோ? வடிவென்று - மாவடுவாய், மாவடுப்பிளவுபோலவும் வேல்போலவு மென்றுமாம்.

இ —இரண்டாம்பாட்டில், திருநாவாயிலேபுகும் நாளென்றோ ? என்கிறார்.

[கொடியேரிடையித்யாதி] - கொடிபோலே அழகிய இடையை யுடையளாய்ப் புஷ்பத்திற்பரிமளம் உபாதானமாகப்பிறந்த பிராட்டிக்கு வல்லபனானவன். "நகஸ்ஸிஹா வராயதி" என்பாரும் அருகேயிருக்க இழக்கவோ! என்கிறார். [வடிவேலித்யாதி] - கூரியவேல்போலே ஓராளுமொருநோக்கும் நேராய், போக்தாவின் அளவல்லாத போக்யதையை யுடைத்தான கண்களை யுடையளாய் ஆத்மகுணோபேதையான நப்பின்னைப் பிராட்டி செவ்விகொள்ள இட்டுப்பிறந்தவன். தன்கண்ணாலே அவனையொழியெறிந்து நமக்காக்கித்தருமவளிறே நப்பின்னைப்பிராட்டி. [நெடியான் இத்யாதி] - இவ்வளவன்றிக்கே மஹிஷீபரிஜநங்களுக்கு எல்லையின்றிக்கே யிருக்குமவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம். அவனுக்கும் அவன்பரிகரத்துக்கும் குறைவற வர்த்திக்கலாஞ் சோலைப் பரப்பையுடைத்தான தேசம். [அடியேனணுகப் பெறுநாள்] - அடிமை செய்கைக்கு இட்டுப் பிறந்த நான் வந்து கிட்டப்பெறும் நாளென்றோ ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருநாவாயிலே புகும்நாளென்றோ ? என்கிறார்.

[கொடியேரித்யாதி] - கொடிபோலேயழகிதான இடையையுடையளாய்ப் புஷ்பத்திற் பரிமளம் உபாதாநமாகப் பிறந்த பிராட்டிக்கு வல்லபனானவன். "நகஸ்ஸிஹா வராயதி" (நகஶ்சிந்நாபராத்யதி) என்பாரும்அருகேயிருக்க இழக்கவோ ? என்கிறார். [வடிவேல்தடங்கண்மடப்பின்னைமணாளன்] - கூரிய வேல்போலே ஓராளும் ஒருநோக்கும் நேராய் போக்தாவினளவல்லாத போக்யதையை யுடைத்தான கண்ணையுடையளாய், ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வி புஜிக்கைக்கு இட்டுப்பிறந்தவனாய்த்து. [நெடியான்] - இப்படிப்பட்ட மஹிஷீபரிஜநாதிகளால் எல்லைகாணவொண்ணாதவன். [உறையித்யாதி] - அவனுக்கும் அவன் விபூதிக்கும் குறைவற வர்த்திக்கலாம்படி இடமுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயை. [அடியேன்]- வநவாஸத்துக்குப் பெருமாளும் பிராட்டியுமாய்க் கலக்குமிடத்தில் * பவாம்ஸ்துவிற்படியே எல்லாவடிமைகளும் செய்கைக்கு இளையபெருமாள் நேர்பட்டாற்போலேயாய்த்து,

---

இரண்டாம்பாட்டு,—கோடியேர் இத்யாதி. "திருநாவாய் - அணுகப்பெறும்நாள் எவைகொலோ? ' என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை -திருநாவாயிலே இத்யாதி.

ஏர் - அழகு. இத்தால் பாவம் - நகஸ்ஸிஹ இத்யாதி. வடி - கூர்மை. ஓராளுமொருநோக்கும் மென்றது - ஓராளுக்கோரம்புபோலே ஒருநோக்காலே யகப்படுத்திக்கொள்ளுகையென்றபடி. பிராட்டிமாரைச் சொன்ன வநந்தரம், "நெடியான்" என்கையாலே அர்த்தம் - இப்படிப்பட்ட இத்யாதி. "சோலைகள்" என்கிற பஹுவசநத்துக்குபாவம் - அவனுக்கும் இத்யாதி. பிராட்டிமாரோட்டைச் சேர்த்தியைச்சொல்லி, அநந்தரம் "அடியேன்" என்றதுக்கு பாவம் - வநவாஸத்துக்கு இத்யாதி. புறப்பட்டு என்றுகூட்டுவது. பவாம்ஸ்துவிற்படியே - அந்த

இங்குத்தைக்கு அடிமைசெய்கைக்கு இவர் நேர்பட்டபடியும். இளையபெருமாளைப் போலே அடிமைசெய்வித்துக் கொள்ளுகிற விஷயத்திற் குறையில்லையாய்த்து இவர்க்கு. ஸ்ரீஜநகராஜன்திருமகளொருத்தியுமிறே அங்கு. [அணுகப்பெறுநாளெவைகொலோ] - அத்தேசத்தை நான் கிட்டப்பெறும் நாளேதோ? (உ)

மூன்றும் பாட்டு.

எவைகோல்அணுகப்பெறுநாள்என்றெப்போதும்
கவையில்மனமின்றிக்கண்ணீர்கள்கலுழ்வன்
நவையில்திருநாரணன்சேர் திருநாவாய்
அவையுள்புகலாவதுஓர்நாள்அறியேனே.

ஆ.—(எவைகொல்). - 'என்றோ திருநாவாயை யணுகப் பெறுவது?' என்று எப்போதும் தனேகசித்தனாய்க் கண்ணீர்சோரவிருக்கிற நான், தோஷப்ரத்யநீகனான திருநாரணன்சேர் திருநாவாயிலே அவனுடைய ஸபையிலேபோய்ப் புகுநாள் என்றென்று அறிகிலேன் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், 'திருநாவாயிற்றிருவோலக்கத்திலே புகும் நாள் என்றோ?' என்று அறிகிறிலேனென்று அவஸந்நராகிறார்.

[எவைகொல் என்று தொடக்கி] - அணுகப்பெறுநாள் எவையோவென்று ஸர்வகாலமும் மற்றொன்றறியாதே ஒருமைப்பட்டுக் கண்ணீர் பாயாநிற்பன். [நவையில் திருநாரணன்] - தூர்லபத்வாதிதோஷம் தட்டாதபடி பிராட்டியோடேகூட ஆச்ரித ஸுலபனானவன்.

ப.—அநந்தரம், 'அஸாதாரணஸம்பந்த விசிஷ்டனான நாராயணன் வர்த்திக்கிற திருநாவாயோலக்கத்திலே புகுவதொருநாள் அறிகிறிலேன்' என்கிறார்.

அணுகப்பெறுநாள் - கிட்டப்பெறுநாள், எவைகொலென்று - எவையென்று, எப்போதும் - ஸர்வகாலத்திலும், கவையில்மனமின்றி - வேறொன்றிற் புகுரும் நெஞ்சின்றியே (ஏகாக்ரசித்தனாய்க்கொண்டு), கண்ணீர்கள்-, கலுழ்வன் - பெருகாநிற்பன்; நவையில் - (தூர்லபத்வ ஸௌபாதிகத்வாதிரூபமாகிற) குற்றமின்றியே, திருநாரணன் - (ஸுலபனாய் நிருபாதிகபந்துவாய்) ஸ்ரீயப்பதியான நாராயணன், சேர் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயில், அவையுள் - அவனுடைய ஓலக்கத்திலே, புகலாவது - ப்ரவேசிக்கலாவது, ஓர்நாள்-ஒருநாள், அறியேனே - இன்னதென்றறிகிலேன். நவை - குற்றம். அவை - ஓலக்கம்.

இ.—மூன்றாம்பாட்டில், 'திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும்நாளென்று?' என்று அறிகிறிலேன் என்கிறார்.

[எவைகொலித்யாதி] - நான் வந்து கிட்டப்பெறும் நாளெவை? என்று. [எப்போதும்]- ஒருகால்இத்தைச்சொல்லி அல்லாதபோது அநுபபாதை பண்ணுகிறேனோ?

ஶ்லோகத்திற்படியே யென்றபடி. இவர்நேர்பட்டால் விஷயம் குறைபட்டிருக்குமோவென்ன - இளையபெருமாளை இத்யாதி. எற்றமுண்டென்கிறார் - ஸ்ரீஜநகராஜன் இத்யாதி. (உ)

[கவையில் மனமின்றி] - அது தன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ? இருதலைத்த நெஞ்சின்றியே. [கண்ணீர்கள் கலுழ்வன்] - கண்ணீர்கள் வெள்ளமிட விருப்பன். [நவையில் திருநாரணன்] - துர்லபத்வாதி தோஷமின்றிக்கேயிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்கூற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். [திருநாவாயவையுள் புகலாவதோர் நாளறியேனே] - திருநாவாயிலே பேரோலக்கமாகயிருக்க அத்திரளிலே சென்றுகூடப் பெறும்நாளென்றென்று அறிகிறிலேன். அவை - சபை, நவை - குற்றம். "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றிருக்கும் அவாவாகையாலே, அந்நாளை யாசைப்படுகிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. 'திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும்நாள் என்று?' என்றறிகிலேனென்கிறார்.

[எவைகொலித்யாதி] – நான் வந்து கிட்டப் பெறும்நாள் எவை என்று ? [எப்போதும்] - ஒருகால் இத்தைச் சொல்லி அல்லாதபோது அந்யபரதைபண்ணுகிறேனோ ? [கவையில் மனமின்றி] - அதுதன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ? இருதலைத்த நெஞ்சின்றிக்கே. [கண்ணீர்கள்கலுழ்வன்] - கண்ணீர்கள் வெள்ளமிடவிருப்பன். [நவையில்திருநாரணன்] - துர்லபத்வாதி தோஷம்இன்றிக்கே யிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்கூற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். 'திருநாவாயிலே பேரோலக்கமாக விருக்க, "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதுஎன்றுகொலோ?" என்று'ஆசைப்பட்ட நான் அத்திரளிலேசென்று கூடப் பெறும் நாள் என்று?' என்றறிகிறிலேன். அவை - சபை. நவை - குற்றம். (௩)

நான்காம் பாட்டு.

நாளேலறியேன் எனக்குள்ளனநாளும்
மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்
நீளார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்
வாளேய்தடங்கண் மடப்பின்னைமணாளா!

ஆறு.—(நாளேலறியேன்.) - நிரவதிக ஸௌந்தர்யகுண விசிஷ்டையான நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்ப்ருஹணீயனான உனக்கு மீளாஅடிமைப்பணிசெய்யப்புகுந்தேன்; 'அடிமைசெய்யும் நாளென்று?' என்றறிகிறிலேனென்கிறார்.

மூன்றாம்பாட்டு.—எவைகொல் இத்யாதி. "திருநாவாயவையுள்புகலாவதோர்நாளறியேன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - திருநாவாய் இத்யாதி.

இப்பதப்ரயோகத்துக்கு ஸ்வரஸம் - அதுதன்னிலும் இத்யாதி. இதுக்கர்த்தம்-இருதலைத்த நெஞ்சின்றிக்கே என்று. இருதலைத்தநெஞ்சு - இருதலையான நெஞ்சென்றபடி. முகாந்தரமுமாய் - விஷயாந்தரமுமாயென்றபடி. கவையில் மனமின்றி-கவையிலேயான மனமின்றிக்கே-வேறொன்றிற்பெருகின நெஞ்சின்றிக்கே; ஏகாக்ரசித்தனாய்க்கொண்டென்றபடி. கவை - கார்யம்; விஷயாந்தரமென்றபடி. கண்ணநீர்களாலே கலங்குவனென்று ஸப்தார்த்தம். அதாவது - கண்ணநீர் வெள்ளமிடாநிற்பனென்றபடி. "கலுழ்வன்" என்கிறதுக்கு நிகண்டு - "கலுழி - கலங்குதல், அழுதல்." "கலுழுவன்" என்று இவ்வர்த்தங்களையெல்லாஞ் சொல்லும். "திருநாரணன்" என்று தொடங்கி மேலுக்கு ஸப்தார்த்தம் - ஸௌலப்யத்துக்கு இத்யாதி. (௩)

ஒ.—நாலாம்பாட்டில், எல்லாவடிமையும் கொள்ளுகைக்குறுப்பான திருச்சோலையையுடைய திருவாய்ப்பாடியிலே நப்பின்னைப்பிராட்டியோடேகூட எழுந்தருளியிருக்கிற உனக்கு ஆத்மாந்தஸ்வாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் திருவடிகளில் அடிமையிலே அதிகரிக்கும்நாள் என்றென்று அறிகிலேனென்று பகருகிறார்.

[வாளேய்தடங்கண்] — வாள்போலேயாய் பெருத்திருக்குமவள் கண்.

ப.—அநந்தரம், நித்யகைங்கர்யத்திலே அந்விதனுப்புகுந்த நான், அந்தக் கைங்கர்யோபயுக்தமான நாள்கள் உளவானபடி யறிகிறிலேனென்கிறார்.

நீள் - ஓங்கி, ஆர் - நிறைந்த, மலர் - பூவையுடைத்தான, சோலைகள்-சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வாள்ஏய் - வாள்போலே நீண்ட ஒளியையுடைத்தான, தடங்கண் - பெரியகண்ணை யுடையளாய், மடப்பின்னை - ஆத்மகுணபூர்ணையான நப்பின்னைப்பிராட்டிக்கு, மணாளா - நித்யபோக்தாவானவனே! (ஸூரிகளைப்போலே), நானும்-, மீளாவடிமைப்பணி செய்ய - விச்சேதரஹித நிரந்தர கைங்கர்யம் பண்ணுகைக்கு, புகுந்தேன் - அந்வயித்தேன் ; (அதுக்கு), எனக்கு -, உள்ளன - உளவாகக் கற்பித்துவைத்த, நாள்நல் - நாளாகில், அறியேன் - (அவை) நானறிகிறிலேன்.

இ.—நாலாம்பாட்டில், ஆத்மாந்தஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் நப்பின்னைப் பிராட்டியோடே கூட விருக்கிறவிருப்பிலே அடிமை செய்யப்பெறும் நாளென்றென்றறிகிறிலேன் என்கிறார்.

[நாளேலறியேனெனக்குள்ளன] - பெறக்கடவ நாள்என்றென்று அறிகிறிலேன் என்னுதல். பிரிந்திருக்கக்கடவ நாளைத்தானென்று அறிகிறிலேன் என்னுதல். பேறுஸித்தமானபின்பு பதறுகிறதென்னென்னில்?-[நானும் மீளாவடிமைப்பணிசெய்யப் புகுந்தேன்] - நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலேயன்றோ நானும்அதிகரித்தது. ஒருப்ரயோஜநத்தைக் கொள்ளக்கிட்டினவனைப் ஆறியிருக்கிறேனோ? தாஸ்ய பரிமளத்தில் சுவடறியாதவனைப் ஆறியிருக்கிறேனோ? [நீளார்மலர்ச் சோலைகள்] - ஓங்கிப்பரப்புமாறப் பூத்தசோலைகளை யுடைத்தான தேசம்; அடிமைசெய்கைக்குப் புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்ற தேசமென்னுதல். நப்பின்னைப் பிராட்டியுந்தானுமாகப் புஷ்பாபசயம் பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய்தடக்கண்] - ஒளியையுடைத்தான பரந்த கண்ணென்னுதல், வாள்போலேகண்டாரை அழிக்கவல்ல பரந்த கண்ணென்னுதல் ; அவனை அநந்யார்ஹனாம்படியாக்கவல்ல கண்ணழகையுடையவள் என்கை. [மடப்பின்னை மணாளா] - அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்க வல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போன ப்ரஜை ஊர்அணித்தானவாறே தாய்மாரைப் பலகாலும் நினைக்குமாபோலே ப்ராப்யதேசம்அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'ஆத்மாந்தஹாஸ்யம்பண்ணும்படி விஷயீக்ருதனான நான், நப்பின்னைப்பிராட்டிபோடேகூடவிருக்கிற விருப்பிலே யடிமைசெய்யப்பெறும் நாள் என்று என்றுஅறிகிறிலேன்' என்கிறார்.

நாலாம்பாட்டு.—நாளேல் இத்யாதி. "மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன் - மடப்பின்னைமணாளா - நாளேலறியேன்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - ஆத்மாந்ததாஸ்யம் இத்யாதி.

[நாளேலறியேனெனக்குள்ளன] - பேறக்கடவநாள் என்றென்றறிகிறிலேன் என்னுதல்; நான் பிரிந்திருக்கக்கடவ நாள்எத்தனையுண்டென்றறிகிறிலேனென்னுதல். பேறு ஸித்தமானபின்பு பதறுகிறதேன்? என்னில் - [நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்] - நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலேயன்றோ நானும்அதிகரித்தது? ஒருப்ரயோஜநத்தைக் கொள்ளக் கிட்டினவனாய்ஆறியிருக்கிறேனோ? தாஸ்ய பரிமளத்திற் சுவடறியாதவனாய்ஆறியிருக்கிறேனோ? [நீளார்மலர்ச்சோலைகள்] - ஓங்கிப் பரப்புமாறப்பூத்த சோலைகளையுடைத்தான தேசம். அடிமைசெய்கைக்குப்புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்றதேசம் என்னுதல்; நப்பின்னைப்பிராட்டியும் தானுமாகப் புஷ்பாபசயம்பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய்தடங்கண்] - ஒளியையுடைத்தான பரந்த கண் ணென்னுதல்; வாள்போலே கண்டாரை அழிக்கவல்ல பரந்தகண் என்னுதல்; அவனை அநந்யார்ஹமாக்கவல்ல கண்ணழகையுடையவளென்கை. [மடப்பின்னைமணாளா] - அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்கவல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போனப்ரஜை ஊர்அணித்தானவாறே தாய்மாரைப் பல கால் நினைக்குமாபோலே, ப்ராப்யதேசம்அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார். (௪)

ஐந்தாம் பாட்டு.

மணாளன்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
கண்ணாளனுலகத்துயிர்தேவர்கட்கெல்லாம்
விண்ணாளன்விரும்பியுறையுந்திருநாவாய்
கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே.

ஆ.—(மணாளன்.) - லக்ஷ்மீபூமிநீளாநாயகனாய், தேவாதி ஸ்தாவராந்த நிகிலஜநநிர்வாஹகனாய், ஸ்ரீவைகுண்டநிலயனான எம்பெருமான் விரும்புறையும் திருநாவாயை, இப்ப்ரக்ருதியோடே கண்ணாரக்கண்டு களிப்பதென்றோ? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய் தீரக் கண்டு க்ருதார்த்தனாவதென்றோ? என்கிறார்.

"எனக்குள்ளன - நாளேலறியேன்" என்றந்வயிப்பது. எனக்குளவாகக் கற்பித்து வைத்த நாளானவறியேனென்று ஸப்தார்த்தம். இன்னநாளென்று விசேஷியாமையாலே இத்தை த்வேதா காட்டுகிறார் - பேறக்கடவநாள் இத்யாதி வாக்யத்வயத்தாலே. மீளா - அவிச்சிந்நமான. அடிமைப்பணி - தாஸ்யக்ருத்யம். "அடிமைப்பணி" என்றதுக்கு பாவம் - ஒரு ப்ரயோஜநத்தை இத்யாதி. "மீளாவடிமைப்பணி" என்றதுக்கு பாவம்-தாஸ்யபரிமளத்தில் இத்யாதி. "அடிமைப் பணிசெய்ய" என்றத்தையும் "மடப்பின்னைமணாளா" என்றத்தையும் கூட்டி பாவத்வயம் - அடிமைசெய்கைக்கு இத்யாதிவாக்யத்வயம். வாள் - ஒளியும், வேலும். ஏய்கை - உடைத்தாகையும், ஒப்பும். கீழ் வாக்யவிவரணம் - அவனை இத்யாதி. துவக்கவல்ல - வசீகரிக்கவல்ல. பாட்டுத் தோறும் பிராட்டிமாரை யருளிச்செய்ததுக்கு பாவம் - தேசாந்தரம் இத்யாதி. 'நீளார்மலர்' என்று தொடங்கி 'அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்: எனக்குள்ளன - நாளேலறியேன்' இத்யந்வயம். (௪)

[கண்ணாளன் உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் விண்ணாளன் விரும்பியுறையும் திருநாவாய்] - லோகத்திலுண்டான தேவமநுஷ்யாதிகளுக்கு நிர்வாஹகனாய், ஸ்ரீவைகுண்டநாயகனாயிருந்தவன் அத்தாணிப் பண்ணிக்கொண்டு வர்த்திக்கக் கூடுகிற திருநாவாயை. [இங்கு] - ப்ரக்ருதியோடே.

ப.—அநந்தரம், பத்நீபரிஜநஸ்தாநாதிபரிபூர்ணனானவன் வர்த்திக்கிற திருநாவாயை, என்கண்ணானது நிறையும்படி கண்டு அநுபவிப்பதென்றோ? என்கிறார்.

மலர்மங்கைக்கும் - பத்மவாஸிநியான லக்ஷ்மிக்கும், மண்மடந்தைக்கும் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், மணாளன் - போக்தாவாய், உலகத்து - லோகத்தில், உயிர் தேவர்கட்கெல்லாம் - ப்ராணிகள் தேவதைகள் எல்லார்க்கும், கண்ணாளன் – நிர்வாஹகனாய், விண்ஆளன் - பரமவ்யோமமப்தவாச்யமான பரமபதத்தி லுள்ளாரையும் அடிமைகொள்ளுமவன், விரும்பி-(இந்தவிபூதித்வயத்திலும்)விரும்பி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, கண் - கண்கள், ஆர - பரிபூர்ணமாம்படி, கண்டு-, இங்கு - இங்கே, களிக்கின்றது - ஸந்தோஷாநுபவிப்பது, என்றுகொல் - என்றோ?

இ.—அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய்தீரக்கண்டு உகப்பதென்றோ? என்கிறார்.

[மணாளன் இத்யாதி] - பிராட்டிக்கும், ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும் வல்லபன். புருஷகாரமாவாரும் பொறைக்குஉவாத்தாவாரும் உண்டாயிருக்க இழக்கவேணுமோ? [கண்ணாளன் இத்யாதி] - லோகத்தில் மநுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள் படுக்கைப்பற்று நோக்குகிறபடி. [விண்ணாளன்] - பிராட்டிமாரும் தானும் தனக்குத் தகுதியான பரமபதத்திலே திவ்யபர்யங்கத்திலே யிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும் திருநாவாய்] - உபயவிபூதிநாதன் பெரும்பேறாக ஆதரித்து வர்த்திக்கிற தேசம். அவன் விரும்புகிற தேசமல்லது ப்ராப்யமில்லையிறே. [கண்ணார] - காண்கையிலே விடாய்ப்பட்ட கண்கள் வயிறுநிறைய. [களிக்கின்றது இங்கு என்றுகொல்] - "களையேன்" என்று ஒரு தேசவிசேஷத்திலே களிக்கையொழிய,இங்கே களிக்கப்பெறுவதென்றோ? [கண்டே] - "காண்கை நிச்சிதம்" என்னும் விஸ்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டே களிப்பது என்றோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருநாவாயைக் கண்ணின்விடாய்தீரக்கண்டு அநுபவிப்பதென்று? என்கிறார்.

[மணாளனித்யாதி] - பெரியபிராட்டியார்க்கும் ஸ்ரீபூமிப்பிராட்டியார்க்கும் வல்லபனானவன். புருஷகாரமாவாரும் பொறைக்குஉவாத்தாவாருமுண்டாயிருக்க இழக்கவேணுமோ? [கண்ணாளனித்யாதி] - லோகத்தில் மநுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள் படுக்கைப்பற்று நோக்குகிறபடி.

அஞ்சாம்பாட்டு-மணாளன் இத்யாதி. "திருநாவாய் கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - திருநாவாயை இத்யாதி.

இத்தால் ஸாவம் - புருஷகாரம் இத்யாதி. உவாத்து - உபாத்யாயன். உயிர் - மநுஷ்யர். "பிராட்டிமார்க்கு - மணாளன்" என்றவநந்தரம் "தேவர்கட்கெல்லாம் - கண்ணாளன்" என்றதற்கு ஸாவம் - அவர்கள் இத்யாதி. படுக்கைப்பற்று - ஸ்த்ரீகளுக்குவிட்ட தேசம். "படுக்கைதானிருக்

[விண்ணுளன்] - படுக்கைதானிருக்கிறபடி ; பிராட்டிமாரும்தானும் தனக்குத்தகுதியான பரமபதத்தில் திவ்யபர்யங்கத்திலேயிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும்திருநாவாய்] - உபயவிபூதிநாயகன், பெறும்பேறாக ஆதரித்து வர்த்திக்கிறதேசம். அவன்விரும்புகிறதேசமல்லது ப்ராப்யமில்லையிறே. [கண்ணார]-காண்கையிலே விடாய்ப்பட்ட கண், ஆர - வயிறுநிறைய. [களிக்கின்றது இங்கு என்று கொல்]-"அஹமந்நமஹமந்நம்" (அஹமந்நமஹமந்நம்) என்றுஒரு தேசவிசேஷத்தே களிக்கையொழிய, இங்கே களிக்கப்பெறுவதுஎன்றோ? [கண்டே]-"காண்கை நிஶ்சிதம்" என்னும் விஶ்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டேகளிப்பதென்றோ? (ரு)

ஆறாம் பாட்டு.

கண்டேகளிக்கின்றதிங்கென்றுகொல்கண்கள்
தொண்டேயுனக்காயொழிந்தேன்துரிசின்றி
வண்டார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
கொண்டேயுறைகின்றஎங்கோவலர்கோவே.

ஆ.—(கண்டே) - எனக்காகத் திருநாவாயைக் கோயிலாகக்கொண்டுஉறைகிற கோவலர்கோவே! உன்பக்கலிலே அநந்யப்ரயோஜநமான ஸ்நேஹத்தையுடையேனை என்னுடைய கண்கள் திருநாவாயிலே உன்னைக் கண்டு களிப்பதுஎன்றோ? என்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், திருநாவாயில் எம்பெருமானைக் குறித்து, கண்கள் உன்னைக்கண்டு களிப்பதென்றோ? என்கிறார்.

[தொண்டே உனக்காய் ஒழிந்தேன் துரிசின்றி] - அந்யபரதை கெட்டு உனக்கே அடிமையானேன். [வண்டென்று மேலுக்கு] - புக்காரை மற்றொன்றறியாதபடி பண்ணவல்ல நிரதிஶய போக்யமான திருச்சோலைகள் சூழப்பட்ட திருநாவாயை ஆதரித்து அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஆஶ்ரிதஸுலபனானவனே!

ப.—அநந்தரம், திருநாவாயிலே வர்த்திக்கிற ஆஶ்ரிதஸுலபனான உன்னைக் கண்டு என்கண்கள் களிப்பதென்று? என்கிறார்.

வண்டுஆர்- வண்டுகள்நிறைந்த, மலர்ச்சோலைகள் - மலரையுடையசோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயை, கொண்டு - (வாஸஸ்தாநமாகத்திருவுள்ளத்திலே) கொண்டு, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுமவனாய், எங்கோவலர்கோவே- எனக்கும் கோபாலர்க்கும் ஸௌலப்யத்தைக்காட்டி ஸ்வாமியான க்ருஷ்ணனே! துரி

கிறபடி" என்றத்தை விவரிக்கிறார் - பிராட்டிமாரும் இத்யாதி. "கண்ணுளன் - விண்ணுளன் விரும்பியுறையும்" என்று கூட்டி பாவம் - உபயவிபூதி இத்யாதி. பரமபதத்தைவிட்டுத் திருநாவாயை "கண்ணார - கண்டு" என்கிறதென்னென்ன - அவன்விரும்புகிற இத்யாதி. "விடாய்ப்பட்ட" என்கையாலே - வயிறுநிறைய என்றது. "இங்கு" என்றதுக்கு பாவம் - அஹமந்நம் இத்யாதி. "கண்டே!" என்கிற ஏவகாரார்த்தம் - காண்கை இத்யாதி. 'மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் - மணாளன் - உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் - கண்ணுளன்-விண்ணுளன்-விரும்பியுறையும் திருநாவாய் - இங்கு - கண்ணார - கண்டே - களிக்கின்றது-என்றுகொல்?' இத்யந்வய:

சின்றி - க்ருத்ரிமமின்றியே, உனக்கே, தொண்டே பூண்டேன் - அடிமைப்பட்டேன்; கண்கள் - என்கண்கள், இங்கு - இங்கே, கண்டேகளிக்கின்றது - நேரே ஸாக்ஷாத்கரித்துக் களிப்பது, என்றுகொல் - என்றாயிருக்கிறது?

இ.—ஆரும்பாட்டில், ஊரையன்றிக்கே அநந்ய ப்ரயோஜனனான என்னை கண் களிப்பதென்றோ? என்கிறார்.

[கண்டேயித்யாதி] - நான் செய்தபடிசெய்ய; கண்களின்விடாய் தீருவதென்றோ? ஒருநாளிலேகாண்கை நிச்சிதம்; ஆனபின்பு, இந்நிர்ப்பந்தத்துக்கு ஃபலமென்? என்ன, [தொண்டேயித்யாதி] - அநந்யபரதையன்றிக்கே உன் திருவடிகளிலே அதிசபலனானேன்; அரைக்ஷணம் இழக்கமாட்டாதபடியாயன்றோ என்சாபலமிருக்கிறது? துரிசாகிறது - மநஸ்ஸுக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டாரித்யாதி] - பரிமளத்தாலே வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளை உடைத்தான தேசம். "நவவாரநாவதுஹிதே" என்கிறபடியே புக்காரை மீளவொட்டாத நிரதிசய போக்யமான தேசம். [கொண்டேயுறைகின்ற] - 'ஆஸ்ரிதரோடே அநுபவிக்கலாம் தேசம்' என்று திருவுள்ளத்திலேகொண்டு நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [எங் கோவலர்கோவே] - க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து இடையர்க்கு ஸுலபனானாற்போலே திருநாவாயிலே வந்து எனக்கு ஸுலபனானவனே!

ஈடு.—ஆரும்பாட்டு. ஊரையன்றிக்கே ஊரில் நின்றருளின உன்னைக்கண்டு களிப்பதென்றோ? என்கிறார்.

[கண்டேகளிக்கின்றது இங்கு என்று கொல்கண்கள்] - நான் செய்தபடி செய்ய; கண்களின்விடாய் கெடுவதென்றோ? ஒருநாளிலேகாண்கை நிச்சிதம்; ஆனபின்பு, இந்நிர்ப்பந்தத்துக்கு ஃபலமென் என்னில்? [தொண்டேயுனக்கா யொழிந்தேனித்யாதி] - அந்யபரதையின்றிக்கே உன்திருவடிகளிலே அதிசபலனானேன். அரைக்ஷணம் இழக்க மாட்டாதபடியன்றோ என்சாபலமிருப்பது. துரிசாகிறது - மநஸ்ஸுக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டுஇத்யாதி] - பரிமளத்தாலே வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளையுடைத்தான தேசம். "நவவாரநாவதுஹிதே" (நடையாடா வர்த்ததே) என்கிறபடியே புக்காரை மீளவொட்டாதபடி நிரதிசய போக்யமான தேசம். [கொண்டேயுறைகின்ற] - "நமக்கும் நம்மையபேக்ஷிப்பார்க்கும் நித்யநிரதிசயமாக ஸ்வதந்த்ரமாக அநுபவிக்கலாம் தேசம்" என்று திருவுள்ளத்தாலே ப்ரதிஜ்ஞைக்கொண்டு வர்த்திக்கிற தேச

ஆரும்பாட்டு - கண்டே இத்யாதி. "திருநாவாய்கொண்டே யுறைகின்ற எங்கோவலர் கோவே - இங்கு - கண்டே - கண்கள் - களிக்கின்றது - என்றுகொல்" என்று அந்வயம் அவதாரிகை - ஊரையன்றிக்கே இத்யாதி. "கோவலர்கோவே" என்று அவனை ஸம்போதிக்கை யாலே - ஊரில்நின்றருளின வுன்னை என்கிறது.

நீ தாம் ஆநந்திப்பதென்றோ என்று ப்ரார்த்திக்கவர், இப்போது கண்களினுடைய ஆநந்தத்தை ப்ரார்த்திப்பானென்? என்ன - நான் இத்யாதி. அதாவது - தாங்கு ஆநந்தமில்லா விட்டாலும் தன்னுடையப்ராணனுக்கு ஆநந்தத்தை ப்ரார்த்திக்குமாபோலே யென்றபடி. இந்தால் பாவம் - அரைக்ஷணம் இத்யாதி. இது நிர்ப்பந்தமென்ன சங்கைக்கு உத்தரமாயிருக்கிறது. "அந்ய பரதையின்றிக்கே" என்றதால் ஃபலிதம் - துரிசாகிறது இத்யாதி. துரிசு - குற்றம். ஆர்தல் - பொருந்துதலாய், படிதலைச்சொல்லுகிறது. சோலைகளை யுடைத்திருக்கைக்கு பாவம் - நவ இத்யாதி. "கொண்டே" என்றதுக்கு பாவம் - நமக்கும் இத்யாதி. "எங்கோவலர்கோவே" என்றதுக்கு

மாய்த்து. [எங்கோவலர்கோவே] - க்ருஷ்ணனுய்வந்தவதரித்து இடையர்க்கு ஸுலபனானாற்போலே, திருநாவாயிலேவந்து எனக்கு ஸுலபனானவனே! (௬)

ஏழாம் பாட்டு.

கோவாகியமாவலியைநிலங்கொண்டாய்
தேவாசுரஞ்செற்றவனேதிருமாலே
நாவாயுறைகின்றவென்னாரணநம்பீ!
ஆவாவடியானிவனென்றருளாயே.

ஆ.—(கோவாகிய) - ஆஶ்ரிதஜநஸமீஹிதப்ரதனாய், ஆஶ்ரிதஜநாநிஷ்ட நிவாரணஸ்வபாவனுமாய் ஆஶ்ரிதவத்ஸலனுமாய், ஆஶ்ரிதஸுலபத்வார்த்தமாகத் திருநாவாயிலே அவதீர்ணனுமாயிருந்த நாராயணநம்பீ! ஆவா அடியானிவனென்றருளாய், என்கிறார்.

ஒ.— ஏழாம்பாட்டில், திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற நாரணநம்பீ! ஐயோ இவன் அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

[கோவென்று தொடங்கி] - ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுக்கும் ஸ்வபாவனாய் ஆஶ்ரிதப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனுமாய் வைத்து அதுக்கடியான ஶ்ரிய:பதியுமாய் ஆஶ்ரிதர்க்கணித்தாகைக்காக திருநாவாயிலே எழுந்தருளியிருப்பதுஞ்செய்து ஆஶ்ரிதவத்ஸலனாய் இப்படி "ஆஶ்ரிதர்க்குஉறுப்பாகப் பெற்றோம்" என்றதாலே பூர்ணனானவனே!

ப.—அநந்தரம், ஶேஷித்வ ரக்ஷகத்வ ப்ராப்யத்வ ரூபமான ஆகாரபூர்த்தியையுடைய நீ, உறவைப்பார்த்து க்ருபைபண்ணவேணுமென்கிறார்.

கோவாகிய-(த்ரைலோக்யத்துக்கும்) ஶேஷியாகத் தன்னையபிமாநித்திருந்த, மாவலியை - மஹாபலியை, நிலங்கொண்டாய் - பூமியை அபேக்ஷித்துவாங்கி அதினுடைய அந்யஶேஷத்வம்போய் அநந்யார்ஹமாம்படி ஶேஷியானவனாய், (ஶேஷமான ஜகத்துக்கு), தேவாசுரம் - தேவாஸுரவிபாகத்தால் வருகிற விரோதத்தை, செற்றவனே - ஶமிப்பித்து த்வதேகஶரணனுக்குமவனாய், நாவாயுறைகின்ற - திருநாவாயிலே நிரந்தரவாஸம்பண்ணுகிற, என் -, நாரணநம்பீ - ஸமஸ்தகல்யாணகுணவிபூதி விஶிஷ்டத்வத்தால்வந்த நாராயணத்வ பூர்த்தியையுடையையாய், திருமாலே - இந்த ஶேஷித்வ ரக்ஷகத்வ ப்ராப்யத்வபூர்த்திக்கு அஸாதாரணமான ஶ்ரிய:பதித்வத்தையுடையவனே! (காருண்யரூபையானவளோட்டைச்சேர்த்தியாலே), ஆ ஆ - ஐயோ! இவன் அடியானென்று-இவன் நமக்கு ஶேஷபூதனென்று, அருளாயே-* ஆகாரத்ரயவிஶிஷ்ட ஸம்பந்தத்தைப்பார்த்து இரங்கியருளவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், ஆஶ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற தேவர் அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

ஸாவம் - க்ருஷ்ணனாய் இத்யாதி. 'வண்டார்' என்றுதொடங்கி, 'கோவே - தரிசின்றி-உனக்கு-தொண்டாயொழிந்தேன்; இங்கு - கண்டே-கண்கள்-களிக்கின்றது-என்றுகொல்?' இத்யந்வய:. (௬)

[கோவாகிய இத்யாதி] - ஈஶ்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக வைத்தான், மஹாபலி அவனைத் தள்ளி அப்பதத்தைத் தான் ஏறட்டுக்கொண்டான்; வ்யாபகனானவன் ஸ்வபலத்தாலே பெறட்டுக்கொண்டபடியாலே "ஈஶ நோபயிம்" என்று ரக்ஷகனான இந்த்ரனுக்குக் கொடுக்கைக்காக அவன் பக்கல்நின்றும் விபூதியை வாங்கினானாய்த்து. ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதத்திலேத் தன்னையழியமாறும் ஸ்வபாவனென்கை. [தேவாஸுரர்ச்செற்றவனே] - தேவாஸுரஸங்க்ராமத்திலே பரஸ்பரவதமேயாய்ச் சென்றவாறே, அநுகூலரான தேவர்களுக்காக அஸுரர்களை யழியச்செய்தவனே! மஹாபலிபக்கல் குணலேஶத்தாலே தன்னையழியமாறினான்; அஸுரர் அக்குணமொன்றில்லாமையாலே அவர்களையழியச் செய்தபடி. [திருமாலே] - ஆஶ்ரிதரை ரக்ஷிக்கைக்கும் தத்ப்ரதிகூலரை நிரஸிக்கைக்கும் அடி ஶ்ரிய:பதியாகையாலே; தான் உகவாதார்பக்கல் ஐஶ்வர்யத்தைமாற்றி உகப்பார்க்குக் கொடுக்கைக்கும் அடி ஶ்ரிய:பதியாகையாலே. [நாவாயுறைகின்ற] - ரக்ஷகனானவன் உபரஸ்த்தானத்தையன்றியே ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிறவனே! [நாரணநம்பீ] - அதுக்கு உறுப்பாக ஆஶ்ரிதவத்ஸலனாய் "அவர்களுக்கு உறுப்பாகப் பெற்றோம்" என்று அத்தாலே பூர்ணனானவனே! ஆஶ்ரிதரக்ஷணத்தை நினைத்து ஸர்வார்த்தப்ராப்தியானவன் என்றுமாம். [ஆவாவடியானிவனென்றருளாயே] - "அநந்ய ஶரணான இவன் ஹ்ரியா நோபஸ்திதே" என்று க்ருபைபண்ணியருளவேணும்; "ஸோஹஸ ஜே தேவ தே வெஶ நாவ நாத நாக . . ." இவன் ஈத்த்ரு அவா காரணனென்று, ஸம்ஹ்ருதங்கைப் பார்த்து க்ருபைபண்ணி யருளவேணும் என்றுமாம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஆஶ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணு கிற தேவர், அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

[கோவாகியமாவலியை நிலங்கொண்டாய்] - ஸர்வேஶ்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக்கிவைத்தான்; அவனைத்தள்ளி அந்தப்பதத்தைத் தானேறட்டுக்கொண்டு "நானே அரசு" என்றிருந்தானாய்த்து. நீ கொடுக்கக்கொள்கை யன்றிக்கே. அதுக்கெல்லாம் தானே நியாமகன் என்றபிமானித்திருந்தானாய்த்து; "வெறும்புறத்திலே. தன்னதல்லாதத்தை 'தன்னது' என்றேறட்டுக்கொண்டிருக்கக்கடவ அவன் கையிலே இவ் விஷயமுங்கிடக்குமாகில் நாடுதேடிக்கிடவாது" என்று பார்த்தருளி, இந்த்ரனதான விபூதியை அவன்பக்கலில்நின்றும் வாங்கினான். [தேவாஸுரர்ச்செற்றவனே] - தேவாஸுர ஸங்க்ராமத்திலே அவர்கள் படுவது இவர்கள் படுவதாய் இங்ஙனே நடவச்செல்லப்புக்க வாறே, ஒருதலையையழித்து தேவஜாதிக்குக் குடியிருப்பும் பண்ணிக்கொடுத்தானாய்த்து. [திருமாலே] - ஆஶ்ரிதரக்ஷணத்துக்கும் தத்ப்ரதிகூல நிரஸநத்துக்கும் அடி ஶ்ரிய:பதி யாகை. [நாவாயுறைகின்ற] - இப்படி ரக்ஷிக்குமிடத்தில் அடுத்தணித்தாக முகந்தோற்றத்

எழாம்பாட்டு - கோவாகிய இத்யாதி. "நாவாயுறைகின்ற என்நாரணநம்பீ - ஆவாவடியானிவனென்றருளாயே" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - ஆஶ்ரிதார்த்தமாக இத்யாதி.

"ஆகிய" என்றதுக்கு ஹாவம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. அதாவது - தனக்கில்லாதத்தை ஏறட்டுக்கொண்டானென்கிறது "ஆகிய" என்கையாலே என்றபடி. விவரணம்- நீகொடுக்க இத்யாதி. "மாவலியைநிலங்கொண்டாய்" என்றதுக்கு ஹாவம் - வெறும்புறத்திலே இத்யாதி. வெறும்புறத்திலே - நிர்நிபந்தநமாக. மாவலியை-மாவலிபக்கல்நின்றும். தேவாஸுரயுத்தத்திலே அஸுரரைச் செற்றவனே. கீழிரண்டையும்பற்ற - ஆஶ்ரித இத்யாதி. அடுத்தணித்தாக - ப்ரத்யாஸந்நமாக.

திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணுகிற. [என்நாரணநம்பீ] - ஆஸ்ரிதவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே நோக்காக ஸர்வாந்தர்யாமியானவன். [நாரணநம்பீ] - அதுக்கு உறுப்பாக ஆஸ்ரிதவத்ஸலனுய், அவர்களுக்கு உறுப்பாகப்பெற்றோ மென்றத்தாலே பரிபூர்ணனுன வனே! [ஆவா இத்யாதி] - "க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:" (க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:) என்கிறபடியே, 'ஐயோ, இவன் அநந்யகதி; இவனுக்கு வேறொருபுகலில்லை' என்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். [அடியான்] - அவன் அருளுகைக்கும் இவன் அருள்கொள்ளுகைக்கும் ஸம்பந்தஞ் சொல்லுகிறது.

எட்டாம் பாட்டு.

அருளாதொழிவாய்அருள்செய்துஅடியேனைப்
பொருளாக்கி உன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்
மருளேயின்றி உன்னைஎன்னெஞ்சத்திருத்தும்
தெருளேதரு தென்திருநாவாயென்தேவே!

ஆ.—(அருளாதொழிவாய்.) - அஜ்ஞாநகந்தமில்லாததொருபடி உன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூதிவிஷய திவ்ய ஜ்ஞாநத்தை உன்க்ருபையாலே எனக்குத் தந்தருளின நீ, இன்னமும் உன்க்ருபையாலே "நம்மடியான் இவன்" என்று விஷயீகரித்தருளி, அடியேனை உன் பொன்னடிக்கீழ்ப் புகவைத்தருளுவாய், வைத்தருளாதொழிவாய், திருவுள்ளமானபடி செய்தருள்! என்றுகொண்டு எம்பெருமானை இன்னுதாகிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், அபிலஷித்தபடி பெறாமையாலே திருவுள்ளம் கலங்கின ஆழ்வார் "அருளிலுமருள், தவிரிலும் தவிர், இப்போது கலங்காதே உன்னை அநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருளவேணும்" என்றருளிச்செய்கிறார். [அருளாதொழிவாயென்று தொடங்கி] - கிருபைபண்ணுதொழியிலுமொழி, க்ருபைபண்ணி நிரதிஸயபோக்யமான திருவடிக்கீழே என்னை வைத்துக்கொள்ளிலும் கொள். [மருளே என்ற மேலுக்கு] - தென் திருநாவாயென்தேவே! அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்நெஞ்சிலே இருத்தும்தெளிவைத் தரவேணும்.

"நம்பி" என்றதுக்கு பாவம் - அதுக்கு உறுப்பாக இத்யாதி. அதவா, கீழ்வாக்யத்திலே, அந்தர்யாமித்வஸஹித ஸௌலப்யத்தைச்சொல்லி, இவ்வாக்யத்தில் - வாத்ஸல்யஞ் சொல்லுகிறதாதல். அதுக்கு உறுப்பாக - ரக்ஷணத்துக்குஉறுப்பாக. அந்தர்யாமித்வமும் வாத்ஸல்யமும் பஹுவ்ரீஹியாலே-'க்ருபாமாத்ர இத்யாதி.' "ஸோஹமேகமேவமேவம்ஸம்ஸாரபந்தநாகுலஸ்ய! ஸாயோஜ்யவாநுக்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீதமே" இதி பஞ்சமேம்ஸே (எ - எ௦).
"அடியான்" என்றதுக்கு ப்ராப்தமான அர்த்தம் - அநந்யார்ஹ ஸேஷத்வம்; ஆர்த்தமானவர்த்தம் - அநந்யகதித்வம். ஒருவர்க்காயிருப்பாரை வேறு சிலர் ரக்ஷிக்க ப்ராப்தியில்லையிறே என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - இவன் அநந்யகதி இத்யாதி. "அடியான்" என்றதுக்கு பாவாந்தரம்-அவன் அருளுகைக்கு இத்யாதி. முந்தினது - அநந்யகதித்வம். (எ)

ப.—அநந்தரம், நீ யருளாதிருக்கவுமாம், அருளவுமாம்; ஒரு கலக்கமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலேவைத்து அநுபவிக்கும்படியான ஜ்ஞாநத்தைத் தந்தருள வேணுமென்கிறார்.

அருளாதொழிவாய் - (இவன் செய்தபடி செய்கிறான் என்று) க்ருபைபண்ணா திருக்கிலுமிருக்கிறாய்; அடியேனை - (அநந்யகதியாய் அநந்யப்ரயோஜநனாயிருக்கிற) என்னை, அருள்செய்து - நிரவதிக க்ருபைபண்ணி, பொருள் ஆக்கி - வஸ்துவாக்கி, உன் பொன்னடிக்கீழ் - உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளின்கீழே, புக - ப்ரவேசிக்கும்படி, வைப்பாய் - வைக்கிலும் வைக்கிறாய்; தென்-கட்டளைப்பட்ட, திருநாவாய் - திருநாவாயிலே, என் தேவே - எனக்குப் பரமப்ராப்யபூதனாயிருக்கிறவனே! மருளை இன்றி - ஒருகாலும் அஜ்ஞாநகந்தமில்லாதபடி, உன்னை - (ஸர்வப்ரகாரபரிபூர்ணனாய் போக்யனான) உன்னை, என்னெஞ்சத்து - (அத்யந்தாபிநிவிஷ்டனான) என்னெஞ்சிலே, இருத்தும் - இருத்தியநுபவிக்கும்படியான, தெருளை - தெளிந்த அறிவை, தரு - எனக்குத் தந்தருளவேணும். தருவென்று - தருவாயாகவேணுமென்றபடி.

இ.—எட்டாம்பாட்டில், அப்போதே அபேக்ஷிதம் பெறாமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே இருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார்.

[அருளாதொழிவாய்] - இவன் செய்தபடி செய்கிறானென்று க்ருபைபண்ணாதேயிருக்கிலும்இரு; என்னார்த்தியைக்கண்டு க்ருபைபண்ணி நிரதிசயபோக்யமான உன்திருவடிகளின்கீழே அநந்யகதியான என்னை வைத்துக்கொள்ளிலும் கொள். [மருள் இத்யாதி] - மயர்வறமதிநலமருளினபடியே அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை எப்போதும் என்மநஸ்ஸிலே வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும். [தென்திருநாவாயென்தேவே] - "திருநாவாயிலே நின்றருளின நீயே ஆஸ்ரயணீயன்" என்னுமிடத்தை எனக்கறிவித்தவனே!

ஈடு.—எட்டாம்பாட்டு. அப்போதே அபேக்ஷிதம் பெறாமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடிஉன்னை என்நெஞ்சிலே யிருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார்.

[அருளாதொழிவாய்] - என்பக்கல் க்ருபைபண்ணாதே இவன் பட்டது படுகிறான் என்றிருக்கிலும் இரு. [அருள்செய்து] - அன்றிக்கே, என்துர்க்கதியைக்கண்டு க்ருபைபண்ணி. [அடியேனை யித்யாதி]-அஸத்கல்பனாயிருக்கிற என்னை, "ஸந்தமேநம்" என்கிறபடியே ஒருவஸ்துவாம்படி பண்ணி, நிரதிசயபோக்யமான உன் திருவடிகளின் கீழே வைத்துக்கொள்ளிலும் கோள். பொருளானாரை வைத்துக்கொள்ளும் ஸ்தாநம் பொன்னடிக்கீழ்போலே காணும். [மருளேயின்றியித்யாதி] - அடியில் * மயர்வறமதிநல மருளினபடியே, அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என் மநஸ்ஸிலே எப்போதும் வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தர வேணும். [தென்திருநாவாயென்தேவே - தெருளேதரு] என்று க்ரியை; அன்றிக்கே,

---

எட்டாம்பாட்டு - அருளாதொழிவாய் இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - அப்போதே இத்யாதி. அருளாயென்றார் - அப்போதே என்று கூட்டுவது.

"ஆக்கி" என்றதுக்கு பாவம்-அஸத்கல்பனாய் இத்யாதி. "பொன்" என்கையாலே-நிரதிசயபோக்யம் என்றபடி. இத்தால் ரஸோக்தியாக பாவம் - பொருளானாரை இத்யாதி. பொருள் -

"மருளேயின்றி யுன்னை என்னெஞ்சத்திருத்தும் தெருளேதரு தென்திருநாவாய் என்தேவே! அருளாதொழிவாய், அருள்செய்து அடியேனைப் பொருளாக்கியுன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்: திருவுள்ளமானபடிசெய்" என்றும் பிள்ளான்பணிப்பது. (௮)

ஒன்பதாம் பாட்டு.

தேவர்முனிவர்க்குஎன்றுங்காண்டற்கரியன்
மூவர்முதல்வன்ஒருமூவுலகாளி
தேவன்விரும்பியுறையுந்திருநாவாய்
யாவரணுகப்பெறுவார்இனியந்தோ?

ஆ.—(தேவர்.)-ப்ரஹ்மாதிகளுடைய சக்ஷுராதி ஸர்வகரணங்களுக்கும் அகோசரனாய், ப்ரஹ்மாதி ஸ்தாவராந்த ஸமஸ்தஜந்து நிர்மாணத்ராண ஸம்ஹரண சீலனான எம்பெருமான் விரும்பிக்கொண்டு ஸர்வகாலமுமுறைகிற திருநாவாயை அணுகப்பெறுமவர்கள் என்ன பாக்யம் பண்ணினார்களோ? நான் பாக்யஹீனனாயிழந்தேன்! என்று நோகிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "ந தே மநுஷ்யா தேவாஸ்தே" என்று சக்ரவர்த்தி சொன்னாற்போலே "திருநாவாய் காணப்பெறாதே நான் முடியாநின்றேன். இனி வேறு திருநாவாய் அநுபவிக்கும் பாக்யவான்களாரோ" என்கிறார்.

[தேவரென்றுதொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் துர்ஜ்ஞேயனாய் ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனான ஸர்வேஶ்வரனாய் அத்யந்த விஸஜாதீயனானவன் அத்யாதரத்தைப்பண்ணிக்கொண்டு நிரந்தரமாக வர்த்தித்தருளுகிற திருநாவாயை.

ப.—அநந்தரம், 'அறிவுடையார்க்கும் அறியவரிய ஸர்வாதிகன் வர்த்திக்கிற திருநாவாயை, அத்யந்தாபிநிவிஷ்டனான நான் பெற்றிலேன்; இனி யார் பெறப் புகுகிறார்?' என்கிறார்.

தேவர் முனிவர்க்கு-ஸமஸ்ததேவர்களுக்கும் ஸநகாதிமுனிவர்களுக்கும், (ஸ்வயத்நத்தால்), என்றும் - ஸர்வகாலமும், காண்டற்கு - காண, அரியன் - அரியனாய், மூவர் - ப்ரஹ்மருத்ராதிகளுக்கு, முதல்வன் - ஸத்தாதிஹேதுபூதனாய், ஒரு - அத்விதீயமான, மூவுலகு - ஜகத்த்ரயத்தையும், ஆளி - (தன் ஸங்கல்பத்தாலே) நிர்வஹிக்குமவனாய், தேவன் - ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஈஶ்வரன், விரும்பி - அத்யாதரம் பண்ணி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, அந்தோ - ஐயோ! இனி - இனி, அணுகப்பெறுவார்யாவர் - அணுகப்பெறுவாரார்? இவ்வபிநிவேஶாதிஶயத்திலும் கிட்டாதது இனிக்கிட்டுகிறதோ என்று கருத்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம் இப்படிச் சொன்ன வநந்தரம் அவன்பக்கல் ஒருவாசி காணாமையாலே, "ந தே மநுஷ்யா தேவாஸ்தே" என்று சக்ரவர்த்தி சொன்

வஸ்துவும், தநமும். தரு-தரவேணும். தேன்-அழகியதான. பிள்ளான் நிர்வாஹத்துக்கு, "தெருளே தரு" என்றது - தேவுக்கு விசேஷணம். (௮)

றாற்போலே "திருநாவாய் காணப்பெறாதே முடியாநின்றேன்; இனி அத்தேசம் அநுபவிக்கும் ஸமயங்களாமோ?" என்கிறாள்.

[தேவரித்யாதி] - "ஸ்வயத்நத்தாலே காண்பேயா" என்னும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் காணவரியனாயிருக்கும். [மூவர்முதல்வன்] - ப்ரஹ்மருத்ராதிகள் நடுவே வந்தவதரித்து அவர்களுக்கு நிர்வாஹகனானவன் என்னுதல்; ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகன் என்னுதல். [ஒரு மூவுலகாளி] - கீழும் மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீயனான நிர்வாஹகன். [தேவன்] - ஸர்வவிஜாதீயன். [விரும்பியுறையும் திருநாவாய்] - இப்படி ஸர்வேஸ்வரனாயிருக்க, ஒரு குடியிருப்பில்லாதாரைப்போலே, "ஆச்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கான இடம்" என்று அத்யாதரம் பண்ணிவர்த்திக்கிற தேசத்தை. [யாவராணுகப்பெறுவாரினி] - நான் முடியாநின்றேன், இனி, இப்பேறு பெற இருக்கிறார் ஆரோ! "நதேதேமநுஷ்யா:" என்கிறபடியே மநுஷ்யர்க்குக் கூட்டல்லர். [அந்தோ] - உடைமையான எனக்கு உதவாது உடையவனுக்கின்றிக்கே ஒழிவதே!

ஈடு.- ஒன்பதாம்பாட்டு. இப்படிச் சொன்னவிடத்திலும் ஒருவிசேஷகடாக்ஷம்பண்ணாமையாலே, "நான் இவ்வாசையோடே முடியாநின்றேன்; என்னைவிடநம் பெறப்புகுகிற பாக்யாதிகர் ஆரோ?" என்கிறாள்.

[தேவர்முனிவர்க்குஎன்றும்காண்டற்கரியன்] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் ஸ்வயத்நத்தாலே என்றுமொக்கக் காணவரியனானவன். [மூவர்முதல்வன்] - ப்ரஹ்மருத்ரர்கள் நடுவேவந்து அவதரித்து, அவர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல். [ஒருமூவுலகாளி] - இந்த்ரமுகத்தாலே நின்று த்ரைலோக்யத்தையும் ரக்ஷிக்கும்படியைச் சொல்லுதல்; அன்றிக்கே, கீழும் மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீய நாயகன் என்னுதல். [தேவன்] - ஸர்வவிஜாதீயன். [விரும்பியுறையும்திருநாவாய்] - இப்படி ஸர்வநிர்வாஹகனானவன், தனக்கென்ன ஒருகுடியிருப்பு இல்லாதானொருவன் குடியிருப்புப் பெற்றாற்போலே, "ஆச்ரித ரக்ஷணத்துக்குப்பாங்கான தேசம்" என்று அத்யாதரம்பண்ணிவர்த்திக்குந் தேசத்தை. [யாவராணுகப்பெறுவாரினி] - நான் முடியப்புகாநின்றேன்; இனிப் பெறவிருக்கிறார் ஆரோ! "நதேதேமநுஷ்யா:" (நதேமநுஷ்யா:) என்கிறபடியே, அவர்கள் மநுஷ்யர்களுக்குக் கூட்டல்லர். 'இனி' - என்கிறபதத்தாலே - நான்முடிந்தேன் என்கிறது ஸூசிக்கிறது.

ஒன்பதாம்பாட்டு - தேவர் இத்யாதி. "யாவராணுகப்பெறுவாரினியந்தோ" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை - இப்படி இத்யாதி.

காண்டற்கரியன் - காண்கைக்கரியன். முதலின அர்த்தத்துக்கு, மூவரிலும் ஒருவனாய்க் கொண்டு அவதீர்ணனான தான், ப்ரதாநனாயிருக்குமென்று பாவார்த்தம். இரண்டாமர்த்தத்துக்கு, ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்குக் காரணபூதனென்று பாவார்த்தம். "மூவர்முதல்வன்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக அர்த்தத்வயம் - இந்த்ரமுகத்தாலே இத்யாதி வாக்யத்வயத்தாலே. "தேவன் - த்யோதமாநன்" என்றத்தை நினைத்து - ஸர்வவிஜாதீயன் என்றது. "விரும்பியுறையும்" என்றதுக்கர்த்தம் - இப்படி இத்யாதி. "இனி" என்றதுக்கர்த்தம் - நான்முடிய இத்யாதி. ஆரோ என்கையாலே - அவர்கள் பாக்யாதிகரென்று விவக்ஷித்து, ப்ரமாணம் - நதேமநுஷ்யா: இத்யாதி. "முடியப்புகாநின்றது" என்றதுக்கு பாவமென்னென்ன - இனியென்கிற இத்யாதி. "நதேதேமநுஷ்யா:" என்கிற ஶ்லோகத்துக்கர்த்தம் அவர்கள் இத்யாதி. "நதேதேமநுஷ்யா

'அந்தோ' - என்கிறபதத்தாலே - எனக்குள்ளது, அவனுக்கு உண்டாகப் பெறுதொழிவதே. "நதேமநுஷ்யா:" (நதேமநுஷ்யா:) - அவர்கள் செத்துப் பிறக்கிறவர்களுக்குக் கூட்டல்லர்கள். "தேவா:" (தேவா:)-அவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிறவர்களுக்குக் கூட்டாமித்தனை. "யஇத்யாதி" (யஇத்யாதி)-பதினாலாண்டும் ஒருபடி தப்பிக்கிடந்து அவர் மீண்டுவந்தால் அவ்வொப்பித்த முகத்தைக் காணப்பெறும் பாக்யாதிகர் ஆரோ? இங்கே, காதாசித்காநுபவம்பண்ணுமவர்கள், நித்யாநுபவம் பண்ணுமவர்களிலும் சீரியரே; "விண்ணுளாரிலும்சீரியரே." "வர்ஷேபஞ்சதசேபூர்ண:" (வர்ஷேபஞ்சதசேபூர்ண:) - பதினாலாண்டும் கழித்துப் பதினையாம் ஆண்டைக்கு இருப்பாரிறே காணப் பெறுவார்? காலம் முடிந்ததேன்றிருக்கிறாய்த்து சக்ரவர்த்தி. (கூ)

பத்தாம் பாட்டு.

அந்தோ! அணுகப்பெறுநாள்என்றுஎப்போதும்
சிந்தைகலங்கித்திருமால்!என்றழைப்பன்
கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்
வந்தேயுறைகின்றஎம்மாமணிவண்ணா.

ஆ.—(அந்தோ.) - இப்படி யுன்னை யாசைப்பட்டுப் பெறுதேயொழிந்தாலும் நிராசனாய்விடமாட்டாதே, பின்னையும், என்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காகத் திருநாவாயிலேவந்திருந்தருளின இக்குணத்தை யநுஸந்தித்து, என்றோ உன்னை நான் அணுகப்பெறுவதென்று எப்போதும் சிந்தைகலங்கித் திருமாலென்றழையாநிற்பன்! என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், உன்னை ஆசைப்பட்டுப் பெறுதொழிந்தாலும் விடமாட்டாதே சிந்தைகலங்கித் திருமாலே என்றழைப்பன்! என்கிறார்.

[அந்தோவென்று தொடங்கி] - 'ஐயோ! அணுகப்பெறும் நாள்என்றோ? என்று ஸர்வகாலமும் ஹ்ருதயம் கலங்கி ஶ்ரிய:பதியே!' என்று கூப்பிடாநிற்பன். [கொந்தார்மலரென்று மேலுக்கு] - நிரதிஶயபோக்யமான திருச்சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயிலே ஆஶ்ரிதர்க்கு ஸுலபனாய்வந்து வர்த்தித்தருளுவதுஞ்செய்து அதிஶ்லாக்யமான அழகை உடையவனே!

தேவாஹ்யேதேமஹாத்மாநோமநுஷ்யத்வமுபாகதா:। யஇமம் த்ரக்ஷ்யந்திராமேயுவர்ஷேபஞ்சதசேபூர்ண:" இத்யயோத்யாகாண்டே (கூச.கூக) தஶரத:." வர்ஷேபஞ்சதசே" என்றதைக் கடாக்ஷித்து - பதினாலாண்டுமோரபடி இத்யாதி. ஒருகால் பெருமாளைக்கண்டவர்கள் நித்யாநுபவம்பண்ணுமவர்களுக்குக் கூட்டாவர்களோவென்ன - காதாசித்க இத்யாதி. "த்ரக்ஷ்யந்தி" என்கையாலே - காதாசித்காநுபவம் என்றது. இதுக்கு ஸம்வாதம்-விண்ணுளாரிலும் இத்யாதி. பகவதநுபவத்துக்கு மேட்டிமையான இங்கேயிருந்து காதாசித்காநுபவம் பண்ணுமவர்கள், நித்யாநுபவம் பண்ணுகிறவர்களிலும் அதிகரென்றபடி. "பூர்ண:" என்றதுக்கர்த்தம் - பதினாலாண்டும் கழித்து இத்யாதி. பதினாலாண்டும் கழிந்து பதினையாமாண்டு வாராதோவென்ன- காலம் இத்யாதி. (கூ)

ப.—அந்தோ, விடவொண்ணாத ஸௌசீல்யத்தையுடைய உன்னைக் கிட்டப்பெறுநாளுண்டாவதுகாண்! என்று நெஞ்சுகலங்கிக் கூப்பிடாநின்றேனென்கிறார்.

கொந்துஆர் - கொத்தாகநிறைந்த, மலர்ச்சோலைகள் - பூக்களையுடைத்தான சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வந்தே - (பரமபதத்தினை விட்டே)வந்துநிற்குமவனே, உறைகின்ற - நித்யவாஸம் பண்ணுகிற, எம் மா மாயவன் நாட் - நிரதிஶயபோக்யமான தேசத்தைப்போலே யிருக்கிற வடிவையுடையவனே! அந்தோ - ஐயோ! அணுகப்பெறுநாள் என்று - உன்னை யணுகப்பெறுநாளாவதுதான் என்று, எப்போதும் - ஸர்வகாலமும், சிந்தைகலங்கி - நெஞ்சுகலங்கி, திருமாலென்று - ஸ்ரீமானே யென்று, அழைப்பன் - கூப்பிடாநின்றேன்.

இ.—பத்தாம்பாட்டில், உன்னைப்பெறுமென்றழிந்தாலும் விடமாட்டாதே மநஸ்ஸுகலங்கிக் கூப்பிடாநிற்பன் என்கிறார்.

[அந்தோ இத்யாதி] - சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத வ்யஸநத்தாலே அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள்யவை" என்னவேண்டியிருக்க அதுமாட்டாதொழிகிறாரிறே. ஒருகால்சொல்லி ஸந்நாதியாலே விடுகையன்றிக்கே, ஸர்வகாலமும் ஹ்ருதயம் கலங்கி மாதாபிதாக்களைச்சொல்லிக் கூப்பிடுமாபோலே திருமாலென்றழையாநிற்பன். "பிதாமாதாவஶ்ரயஸ்:". [கொந்தாரித்யாதி] - கொத்து மிக்க மலரையுடைத்தான சோலைகளாலே சூழப்பட்டிருந்துள்ள திருநாவாயிலே. நித்ய வஸந்தமான சோலைகளை உடைத்தாகையாலே நிரதிஶயபோக்யமான தேசமென்கை. [வந்தேயித்யாதி] - ஒருதேசத்திலேசென்றே காணக்கடவதான வடிவைக்கொண்டு ஆஶ்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனே! அவ்வடிவை எனக்குக் காட்டாதவன்று, உன்வரவு அஸத்ய்மமன்றோவென்கை.

ஈடு.—பத்தாம் பாட்டு. உன்னைக் காணப்பெறுமை நெஞ்சழிந்து கூப்பிடாநின்றேன் என்கிறார்.

[அந்தோஅணுகப்பெறுநாள் என்றேப்போதும்] - சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத வ்யஸநத்தியாலே, அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள்யவைகொல்" என்னவிறே நினைப்பது. [எப்போதும்]-ஒருகால் சொல்லப்புக்கு நினைத்தால் விடுகையன் றிக்கே, ஸர்வகாலமும். [சிந்தைகலங்கிஇத்யாதி]-ஹ்ருதயங்கலங்கி; மாதாபிதாக்கள் பேரைச் சொல்லி ஆர்த்தனை ப்ரஜை கூப்பிடுமாபோலே திருமால் என்றழைப்பன். [கொந்தார் இத்யாதி] - கொத்துமிக்க மலரை யுடைத்தான சோலைகளாலேசூழப்பட்ட திருநாவாயிலே. நித்யவஸந்தமான சோலைகளை யுடைத்தாகையாலே நிரதிஶயபோக்யமான தேசமென்கை. [வந்தேயுறைகின்ற] - ஒருதேசவிசேஷத்திலே சென்று காணக்கடவதான வடிவைக் கொண்டு ஆஶ்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம்பண்ணுகிறவனே! அவ்வடிவு எனக்குக் காட்டாதவன்று உன்வரவு அஸத்ஸமமென்கை. (கo)

பத்தாம்பாட்டு.—அந்தோ இத்யாதி. "சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - உன்னை இத்யாதி.

சொல்லத்தொடங்கினது எது? என்ன-அணுக இத்யாதி. அதாவது - "அணுகப்பெறு நாள்யவைகொலோ அந்தோ!" என்னநினைத்து, வ்யஸநத்தாலே "யவைகொல்" என்று முடியச் சொல்லமாட்டாதே, முன்னே "அந்தோ" என்கிறுமென்றபடி. யவைகோல் என்று - அத்யாஹார்யம். சோலைகளைச் சொன்னதுக்கு பாவம் - நித்யவஸந்தமான இத்யாதி. "மாமணி வண்ணா" என்றதுக்கர்த்தம் - ஒருதேசவிசேஷத்திலே இத்யாதி. ஸார்த்தபாவம் - அவ்வடிவு இத்யாதி. உத்தரார்த்தத்தை யநுஸந்தித்து பூர்வார்த்தத்தை யநுஸந்திப்பது - அந்வயம். (கo)

பதினோராம் பாட்டு.

வண்ணம்மணிமாட நல்நாவாயுள்ளானை
திண்ணம்மதிள்தென் குருகூர்ச்சடகோபன்
பண்ணார்தமிழ்ஆயிரத்திப்பத்தும்வல்லார்
மண்ணாண்டுமணங்கமழ்வர்மல்லிகையே.

ஆ.—(வண்ணம்.) - இத்திருவாய்மொழிவல்லார், ஐஹிகாமுஷ்மிக ஸகல க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவ ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பெறும்பேற்றை யருளிச்செய்கிறார்.

[வண்ணம்மணிமாடமென்று தொடங்கி]-நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிஶயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளென்று மேலுக்கு] - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. பண்ஆர்ந்த தமிழான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி வல்லார்கள், ஐஹிகாமுஷ்மிக ஸகல க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃபலமாக, உபயவிபூதியிலுண்டான ஆதரணீயத்தைத்† யருளிச்செய்கிறார்.

வண்ணம் — நாநாவர்ணங்களை யுடைத்தான, மணி - மாணிக்கங்களாலே சமைந்த, மாடம் - மாடங்களையுடைத்தாய், நல் - நிரதிஶயபோக்யமான, நாவாயுள்ளானை - திருநாவாயிலே வர்த்திக்கிறவனைப் பற்றவுண்டாய், திண் - திண்ணியதாய், அம் - அழகிய, மதிள் - மதிளையுடைய, தென்குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடையதாய், பண்ஆர் - பண்நிறைந்த, தமிழாயிரத்து - தமிழான வாயிரத்து, இப்பத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், மண் - பூம்யுபலக்ஷிதமான லீலாவிபூதியை, ஆண்டு - தங்கள் நினைவின்படியே ஸ்வதந்த்ரமாக நிர்வஹித்து நித்யவிபூதியிலும் பகவதநுபவ ஜ்ஞாநத்தாலே, மல்லிகை - மல்லிகைபோலே பரிஶுத்தமான, மணம்கமழ்வர் - யஶஸ் ஸௌரபவிகாஸத்தையுடையவராவர். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் ஐஹிகாமுஷ்மிக க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவர் என்கிறார்.

[வண்ணம்இத்யாதி]-நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிஶயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளித்யாதி] - திண்ணிதானமதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வாரருளிச்செய்த; திருநாவாய்க்கு ரக்ஷை திருநகரியிலேபோலே. ஆழ்வார்பரியவே அவ்வூர்க்கு ரக்ஷையென்னுதல். ஈஶ்வரனுக்கு யாநம் ஆழ்வாராகையாலே யாநம்கிடந்தவிடத்திலே

---

† ஆதரணீயதையை என்றிருந்தால் ஸ்வரஸம். அல்லது - பாவப்ராதாந நிர்தேசம் என்று கொள்க.

யிறே மதிளிட்டுவைத்தென்னுதல். [பண்ணார்தமிழ்] - பண்மிகுந்ததமிழ். [மண்ணோர்ந்து] - இஹலோகத்திலே வைஷ்ணவஶ்ரீயால் ஸம்பந்நராய். [மணங்கமழ்வர் மல்லிகையே] - மல்லிகை மணங்கமழ்வர் "ஸர்வகந்தஃ" என்கிற விஷயத்தோடே ஸாம்யாபன்ன ராவர். மல்லிகை மணமென்று - ஸர்வகந்தத்துக்கும் உபலக்ஷணம்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், ஐஹிகாமுஷ்மிகங்களான போகங் களையும் புஜிக்கப்பெறுவர் என்கிறார்.

[வண்ணம்மணிமாடநன்னாவாய்ள்ளானை] - நாநாவர்ணங்களான ரத்நங்க ளாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய், நித்யபோக்யமான திருநாவாயிலே நின் றருளினவனை. [திண்ணம் இத்யாதி] - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியை யுடைய ஆழ்வார் அருளிச்செய்த. திருநாவாய்க்கு ரக்ஷை திருநகரியில் மதிள்போலே காணும். ஆழ்வார்பரிவே அப்பரிவுதானே அவ்வூருக்கு ரக்ஷையென்னுதல்; ஸர்வேஶ்வர னுக்கு ரக்ஷகம் ஆழ்வாராகையாலே ரக்ஷித்துவிடத்தேயிறே மதிளிட்டுவைத்தென்னுதல். [பண் ணார்தமிழ்] - பண்மிகுந்த தமிழ். [மண்ணோர்ந்து] - இஹலோகத்திலே வைஷ்ணவஶ்ரீயால் ஸம்பந்நராய். [மணங்கமழ்வர் மல்லிகையே] - மல்லிகைமணங் கமழ்வர். இது உப லக்ஷணமாய், "ஸர்வகந்தஃ" (ஸர்வகந்தர்) என்கிறவிஷயத்தோடே ஸாம்யாபத்தியைப் பெறுவர். இவருடையமநோரதம் அவர்கள்பேற்றுக்கு உடலாம்.

நிகமம் - வண்ணம் இத்யாதி. "இப்பத்தும்வல்லார் மண்ணாண்டு மணங்கமழ்வர் மல்லி கையே" என்றதைத் தொகுத்து நமஸ்காரிதை - இத்திருவாய்மொழி கற்றார் இத்யாதி.

"நன்னாவாய்ள்ளானைத்திண்ணம் மதிள்தென்குருகூர்ச் சடகோபன்" என்ற பதத்தின் திக்கு ஶங்கை - திருநாவாய்க்கு இத்யாதி. திருநகரியில் மதிள், திருநாவாய்க்கு ரக்ஷையாவதென்ன; இரண்டுவகையாக பரிஹாரம் - ஆழ்வார் இத்யாதிகளாற்செய்யும். அதாவது - திருநகரியில் மதிள் ஆழ்வார்க்குரக்ஷையாய், ஆழ்வார் ஸாக்ஷாத்ரக்ஷகராயிருக்கையாலே, ஆழ்வார் பரிவு திருநாவாய்க்கு ரக்ஷையாகையாலே, திருநகரியில் மதிள் பரம்பரயா ரக்ஷையென்றபடி. த்விதீயபரிஹாரத்துக்கு, "திண்ணம் மதிள்" என்றது - ஆழ்வார்க்கு விசேஷணம். அர்த்தல் - ப்ரக்ருதி. இவர்மநோரதமிக்க அவர்கள் பெறும்படியென்? என்ன - இவருடைய இத்யாதி. "மல்லிகை - மணங்கமழ்வர்" என்றதுவயிப்பது. மல்லிகைபோன்ற கௌரப்யவிஶாலத்தை யடைவாரென்ற படியர்த்தம்.

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.—ராமஶேஷாஜிமஹிஷீத்ருஷ்டவிஷ்டத்வாதித்யவா வெசேஷ்யாவதீஸ்வஸ்வஸாந்த்ராநிரஸ்யாஶக்தி । தேவிஜஷ்டக்ஷ கலிதேஶவிஶேஷ ஸாராத்யாயாஞ்சேதஸ்யவமிஶ்யப்ரதக்ஷேதே ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—ஸ்ரீஹேஸ்யோபோத்ரவிஷ ஸம்விஹித ஶ்ரீவஸ்வாவஸ்தாவா ஹ்ருத்யோஸ்ர்வேஸ்யபூபோமாதவதாணசஹாவா ஸஹவபூர்ணஸ்வஸதபூர்ணஃ । ஸத்யாத்ருக்ஷாத்தோயத்ர சர்ச்சிதஸ்வஸ்கவாஸ்வ ஸாஸத்ஸவா ஶ்ரீஹ்ருஷ்யாஃ ஶ்ரீஶஶ்ரீஃ வ்யபதிஷஸோஜஜ்ஞஸ்வதாஸவேதநாயம் ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அறுக்குமிட ரென்றவன்பா லாக்குமிட ராகி
மறித்துவரப்பற்றுமனத்தா - லறப்பரிதிச்
செய்ய திருநாவாயிற்செல்லநினைந்தான்மாறன்
மையலினாற்செய்வறியாமல்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஒன்பதாந் திருவாய்மொழி--மல்லிகை - ப்ரவேஶங்கள்.

ஆ.—(மல்லிகை.) - இப்படி வ்யஸநம் அதிமாத்ரமானவாறே, அந்யாபதேஶத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப் பேசுகிறார். வண்துவரைப்பெருமானோடே கலந்தாளொருபிராட்டி, அவன்பசுமேய்க்கப்போய் மீண்டுவரக்கடவிய * அந்தியம்போதானதுவந்து, அவன்தான் வாராமையால் அத்யந்தம் அவஸந்நையாய்,

ஒ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், அறுக்கும் வினையில் "எம்பெருமானைக் காணவேணும்" என்று மநோரதித்து மிகவும்பதறி அப்போதே காணப்பெறாத வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார், தம்முடைய தஶையை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள் க்ருஷ்ணனோடே கலந்து, அவன் பசுமேய்க்கப் போகையாலே பகலெல்லாம் அவன்வரவு பார்த்திருக்க, விஶேஷஜ்ஞரோடு அவிஶேஷஜ்ஞரோடு வாசியின்றிக்கே எல்லாரையும் ஹர்ஷப்ராவண்யத்தாலே சபலராக்காநின்றுள்ள ஸந்த்யைவர, க்ருஷ்ணனும் வாராநின்றானென்று நிஶ்சிதமாயிருக்க, ஒருக்ஷணம் காணப்பெறாமையாலே அநேககாலம் விஶ்லேஷித்தால் படும் வ்யஸநத்தைப்படாநிற்க; அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தையுடைய தென்றல் தொடக்கமான ஸந்த்யாகாலத்தில் பதார்த்தங்களும் அக்காலத்திலுண்டான குழலோசைகளும் அவற்றாலே ஸ்ம்ருதமான க்ருஷ்ணனுடைய குணசேஷ்டிதாதிகளும் துஸ்ஸஹமான நிலாவும் ஸமுத்ரகோஷம் தொடக்கமான பதார்த்தங்களெல்லாம் தனித்தனியும் திரளவுங்கலிய மிகவும் நோவுபட்டு, கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி ஆர்த்திமிகுதியாலே கூப்பிட்ட பாசுரத்தை ஒருத்தி சொல்லுகிறாள். ஸந்த்யையாவது - எம்பெருமான் தம்மை விஷயீகரிப்பதுக்குமுன்பு உண்டான அல்பகாலம்; அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாகிறன — தம்மை விஷயீகரிக்கைக்கு உத்யோகிக்கிற எம்பெருமானுடைய ஶங்கஶார்ங்காதி கோஷங்களும், பெரியதிருவடியுடைய திருச்சிறகொலியும் அவன் வரவுக்கு ஸூசகமான மந:ப்ரஸாதாதிகளான நிமித்தங்களும். இவை பாதகமாகைக்குக் காரணம் - இவை அவன்வரவுக்கு ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே அவனைக் காணாமை.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ் ப்ராப்யவிஷயமான அபிநிவேஶத்தாலே ஈடுபட்டவர், அநுபவயோக்யாவஸ்தையை ஸந்நிஹிதையாயிருக்கச்செய்தேயும் அநுபாவ்யனான ஈஶ்வரன் அஸந்நிஹிதனாகையாலே, விளம்பாக்ஷமதையடியாக போக்யபூதனானவனுடைய ரஞ்ஜநீய ஸ்வபாவதையையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ரமணீயாவயவத்வத்தையும், அபிரூபவாஹநவத்தையையும், ஆஶ்ரிதஸௌலப்யத்தையும், அநவதிகஸௌஶீல்யத்தையும், அத்யுதாரரூபதையையும், அதிஶயித ஸம்ஶ்லேஷத்தையும், ஸாபிப்ராய நிரீக்ஷணாதிகளையும், விஶ்லேஷாஸஹ்யமான ஆஶ்சர்யரூபதையையும் அநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனான போக்யபூதனை யதாமநோரதம் அநுபவிக்கப்பெறாத ஆர்த்தியாலும், ஸ்மாரகமாயும் ஆஸத்திஸூசகமாயுமிருக்கிற பதார்த்ததர்ஶநத்தால்வந்த ஶைதில்யத்தாலும், அல்பகாலவிளம்பமும் பொறுக்கமாட்டாமல் கூப்பிட்ட ப்ரகாரத்தை ; பசுமேய்க்கப்போந்தக்ருஷ்ணன், ஸந்த்யைவந்திருக்கச்செய்தேயும் வாராத

விளம்பம் பொறுக்கமாட்டாமல் ஸமீபஜாக்கள் தத்காலசித்த ஸேவாப்ரகாரத்தாலே ஸித்தி பட்டு, பொழுதுகண்டு இரங்கிக்கூப்பிட்ட பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், இத்தனைக்கும் அடியிலே, "அவனைக் காணவேணும்" என்று மநோரதித்து மிகவும் த்வரித்து, அப்போதே காணப்பெறாத வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்டவர், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணனைப் பின்னிலைப் பண்ணின பெண்கள் பகலெல்லாம் பசுமேய்க்கப் போகையாலே வரவுபார்த்திருக்க, விஸ்லேஷஜ்ஞரோடு அவிஸ்லேஷஜ்ஞரோடு வாசியற எல்லாரையும் ஸோகப்ரவணராக்கும் ஸந்த்யையாய், க்ருஷ்ணன்வரவு நிச்சயமாயிருக்கச்செய்தே முற்கொழுந்திற் காணப்பெறாமையாலே அநேககாலம் பிரிந்தார்படும் வ்யஸநத்தைப்பட, அதுக்குமேலே ஸந்த்யாகாலத்திற் பதார்த்தங்களான மல்லிகையின் பரிமளத்தை யுடைத்தான தென்றல் குழலோசை ஸமுத்ரகோஷம் முதலான பதார்த்தங்களானவை தனித்தனியும் திரளவும் நலிய மிகவும் நோவுபட்டுக் கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி கூப்பிட்ட கூப்பீட்டை ஒருத்தி சொல்லுகிறாளான பாசுரத்தாலே தம் தசையை அருளிச்செய்கிறார். "திருவாய்ப்பாடியிற் பெண்களெல்லாம் ஒருராத்ரியில் க்ருஷ்ணவிரஹத்தாற் பட்ட நோவை, இவரொருவரே படுகிறார்" என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். "முன்பே ஆற்றாமையாலே தப்ப நிற்கிறவராகையாலே, அத்தனை பாடல் கொடுக்கைக்கு ஆஸ்ரயமில்லை; ஒருஸந்த்யையில் அவர்கள்பட்ட நோவைப்படுகிறார்" என்று அருளிச்செய்வர் எம்பெருமானார். ஸந்த்யையாகிறது - ஜ்ஞாநம்பிறந்த பின்பு ப்ராப்யபூமியில் கிட்டப்பெறாதே நோவுபடுகிற காலம். "ஸந்த்யாகால தேஹவிப்ரயோகவிமோக்ஷ" என்னக்கடவதிறே. அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாகிறன - ஸம்ஸ்லேஷ ஸூசகங்களான பதார்த்தங்கள். [மல்லிகை கமழ்தென்றல்]. இவை பாதகமாகைக்குக் காரணம் - ஸம்ஸ்லேஷ ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே லபிக்கப்பெறாமை.

ஈ.—"படைவீட்டிலிருந்தால் ராமனும் மாமியாருக்குக்கூசிப் பெருமாளுடன் நினைத்தபடி பரிமாறப்போகாது" என்று காட்டிலே கொண்டுபோக அநுபவிப்பதாக மநோரதித்துப் போந்த பிராட்டியை, "காந்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவகந்யாவிலலாபஸீதா" (காந்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யாவிலலாபஸீதா) என்கிறபடியே கூப்பிடப்பண்ணிற்றுப்போலே, அத்திருவாய்ப்பாடியிலே புக்கு அநுபவிப்பதாக மநோரதித்த இவர்க்கு, பாதகவர்க்கத்துக்கு அற்றைக் கூப்பீடே படியாய் விளைந்தது.

பெற்றி, ஒருநாள் நம்பிதிருவரங்கநாராயணதாஸர் என்பாரொருவர் என்பக்கலிலே திருவாய்மொழிகேட்டு அங்கேசென்றாராய், "இன்று பிள்ளைபாடு விநோதமேன்?"

மல்லிகைப்ரவேசே; ஸத்ருஷ்டாந்தமாக ஸங்க்ரஹஸங்கதி - படைவீட்டில் இத்யாதி. "ஸாராக்ஷஸீமத்யகதாசபீருர்வாக்பிர்ப்ருஸம்ராவணதர்ஜிதாச" என்ற பூர்வார்த்தம்; ஸுந்தரகாண்டே வேண்யுத்க்ரதநஸர்க்கம் (உஅ-உ).

"இத்திருவாய்மொழி மாலைப்பூசல்" என்கைக்கு ஸம்வாதம் - பெற்றி இத்யாதி. அங்கே - பெற்றிபக்கலிலேயென்றபடி. 'பெற்றி - கேட்டவாறே' என்றர்த்தமிப்பது. எல்லாரும் ரஸிக்கும்படி ச்லோகத்திகளையிட்டு வ்யாக்யாநம் பண்ணுகையாலே - விநோதம் என்கிறார். ஆகையாலே, விநோதமென்றது - அருளிச்செய்த வ்யாக்யாநமென்றபடி. இங்கே, "காவ்யஸாஸ்த்ரவிநோதேநகாலோ

என்று கேட்டவாறே, " * அறுக்கும்வினைசாற்றிஞேம் " என்ருராய், " நாளை மல்லிகை கமழ்தென்றலும் மாலைப்பூசலும் என்ருய் " என்று பணித்தாராம். " ப்ராப்யவஸ்துவைப் பெறும்படியை மநோரதித்தார் கீழில்திருவாய்மொழியிலே; மநோரதஸமநந்தரம் பெறக் காணுமையாலே, திருவாய்ப்பாடியிலுள்ளார் க்ருஷ்ணனைப்பிரிந்து ஒருராத்ரிபட்ட வ்யஸநத்தை இவரொருத்தரும் படுகிருர் " என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி- (என்று திருமாலையாண்டான்பணிக்க) அத்தை எம்பெருமாஞர் கேட்டருளி, " முன்பே ஆற்ருமையாலே தற்புஅற்றிருக்கிறவராகையாலே அத்தனை யாடல்கொடுக்கைக்குவேண்டும் ஆஶ்ரயம்போராது; ஆனபின்பு, அவனைப்பிரிந்து ஒருஸந்த்யையிற்பட்ட நோவைப்படுகிருர் " என்றருளிச்செய்வர். இது தன்னிற்செய்ததாகிறதேன்? என்னில், - ஜ்ஞாநம்பிறந்தபின்பு விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால்வாங்கவும்மாட்டாதே, ப்ராப்யபூமியில் மநோரதத்தாலும், வ்யவஸாயத்துக்கு ஈரலாம்படி பதஞ்செய்ததாய்த்து. * பொய்ந்நின்ற ஞானத்தில், "ஸம்ஸாரவத்விஷயத்தில் ஜ்ஞாநம்பிறந்தபோதே, விரோதியான ஸம்ஸாரத்தில் ஸம்பந்தத்தை யறுத்துத்தந்தருளவேணும் " என்று அபேக்ஷிக்கச்செய்தேயும், " இவரைக்கொண்டு சிலப்ரபந்தங்கள் தலைக்கட்டவேணும்" என்றிருக்கையாலே, அப்போதே அப்படிச்செய்திலன்; அந்தவிரோதியில்அருசி இவ்வளவும் வர நிலைநின்றபடி சொல்லுகிறதிறே. இங்குத்தான் செய்கிறவிது வேதாந்தங்களிற்போகிற கட்டளையில் என்னுவதென்னில்? - " தஸ்ய தாவதேவ சிரம் " (தஸ்யதாவதேவசிரம்) என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதிறே - " தஸ்ய தாவதேவ சிரம், யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே " (தஸ்யதாவதேவசிரம், * யாவந்நவிமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே) இறே -

ஶ்ருதப்ரதீபிகா " இத்யாத்யநுஸந்தேயம். நம்பி திருவரங்க நாராயணதாஸர் * அறுக்கும்வினை சாற்றினேமென்ருராயென்றபடி. பெற்றி பணித்தாராம் என்றபடி. பெற்றி யென்கிறவர் - நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலவர். நம்பிதிருவரங்க நாராயணதாஸர் என்கிறவர் - நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலவர். விஸ்தரஸங்கதி - ப்ராப்ய இத்யாதி. மாலை யென்று - ராத்ரிக்கும் ஸந்த்யைக்கும் பேராகையாலே, எத்தைச்சொல்லுகிறதென்ன; நிர்வாஹத்வயம் - மநோரத இத்யாதி. அடல் கொடுக்கைக்கு - வ்யஸநத்தையநுபவிக்கைக்கு. இத்திருவாய்மொழிக்கு ஸ்வாபதேஶம் - இதுதன்னில் இத்யாதி. அதாவது - " பகற்கண்டேன் " என்கிறவிடிவுக்கும் * இருள்தருமாஞாலமான ராத்ரிக்கும் நடுவில் முமுக்ஷுத்வாவஸ்தையை மாலையென்கிறதென்றபடி. ஜ்ஞாநம் பிறந்தபின்பு என்றது - " ஸம்ஸாரம்ஹேயம் " என்கிற ஜ்ஞாநம் பிறந்தபின்பு என்றபடி. ஈரலாம்படி-வ்யவஸாயம் குலைக்கலாம்படி. கால்வாங்கமாட்டாமற் படுகிற அருசியை * பொய்ந்நின்ற ஞானத்திலே ஈஶ்வரனுக்கறிவித்திருக்க, கார்யம்செய்யாதிருப்பானென்? என்ன - பொய்ந்நின்ற இத்யாதி. ஆக, இத்தால் - ஶரீரத்தைக் கழித்துத் தரவேணுமென்றதாயிறே இத்திருவாய்மொழியிருக்கிறது; இது வேதாந்தத்தில் எங்கே சொல்லிற்றென்கிற ஜிஜ்ஞாஸாப்ரஸங்கத்தை யநுவதிக்கிருர் - இங்குத்தான் இத்யாதி. இங்குத்தான் செய்கிறஇது என்றது-ஸம்ஸாரவத்விஷயஜ்ஞாநமும் பிறந்து இச்சேப்ராக்ருதியோடே யிருக்கிறவிருப்பும் அதிதுஸ்ஸஹமாயிருக்கிற இவ்வர்த்தந்தானென்றபடி. சிரம் - க்ஷணகாலமாத்ரமும் துஸ்ஸஹமாயிருக்கையாலே, நெடுங்காலமென்றது. "மே" என்கிற ஶப்தம் இந்த ஶ்ருதியிலில்லையேயென்ன - யாவந் இத்யாதி. அதஸம்பத்ஸ்யேஇறே அநந்தரமென்றது - " தஸ்ய தாவதேவ சிரம் " என்றதுக்கநந்தரம், " விமோக்ஷ்யே, ஸம்பத்ஸ்யே " என்கிறக்ரியை உத்தமபுருஷனுயிறே யிருக்கிறதென்றபடி. இத்தால் க்ரியை உத்தமபுருஷனைகயாலே, "மே" என்கிற இது ஶ்ருதியிலில்லையேயாகிலும்,

யுஷ்மத்யுபபதே ஸமாநாதிகரணே ஸ்தாநிந்யபி மத்யம: । அஸ்மத்யுத்தம: । ஶேஷே ப்ரதம: " என்கிற ஶாப்திகப்ரக்ரியையாலே - அஸ்மச்சப்தமும் வரக்கடவதென்ற

அநந்தரம். * முடியானேயில் தம்முடைய கரணங்களுக்குண்டான வ்யஸநத்தைச் சொன்னார்; இதில் - அந்த கரணங்களோடேகூட அவற்றுக்கு ஆச்ரயமான அவயவி தான் ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ஜ்ஞானேந்த்ரியங்களோடு கர்மேந்த்ரியங்களோடு வாசியற ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ராமாவதாரத்தில் பதினாலாண்டு போலேயாய்த்து, திருவாய்ப்பாடியிற் பெண்களுக்கு க்ருஷ்ணவிரஹத்தால் ஒருஸந்த்யை. குணாதிகவிஷயத்தைப் பிரிகையாலே அங்குப் பதினாலாண்டாய் [illegible]; இங்கு இவன்நீர்மையிலே கைபடியுண்டிருக்கையாலே, * ஒருபகல் அநேககல்பமாய்த் தோற்றுமிறே. குணங்கள்தாம் காற்கட்டுகிறது குணவான்பக்கலிலிறே; அவ்வாச்ரயத்திலே கிடந்தவையாயிறே. இங்கு ஸாம்யம் அதுவேயாய், அதுக்குமேலே தீம்புமாகில் பாடாற்றப் போகாதிறே. நாட்டார் போக்யதாபுத்திபண்ணியிருக்கிற சப்தாதிவிஷயங்களையடையத் தமக்குபாதகமாக, ப்ராப்யவஸ்துவைப்பெறாதே, நல்ல ஆண்புலியான ஸ்ரீபீஷ்மர் அர்ஜுனன்கையில் அம்புகளாலே உளைய வெண்கிடந்து துடித்தாற்போலே, கிடந்து துடிக்கிறார். திருவாய்ப்பாடியிலுள்ளார், க்ருஷ்ணன் "பசுமேய்க்க" என்று புறப்பட்டால், அவன் வருமளவும் அவர்கள்படும்பாடு சொல்லுகிறது. அதாவது - ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தநம்போலேயிறே இடையர்க்குப் பசுமேய்க்கை ஜாத்யுசித தர்மம்; ஆகையாலே தவிரவொண்ணாதிருக்குமிறே. இப்படியாலே அவனைப் பசுக்களின்பின்னே புறப்படவிட்டு, அவன்வரும் ஸந்த்யையைப் பார்த்திருக்கும்படியாய்த்து. ஆக, அவன் பசுமேய்க்கப்போனால் பகல்பொழுதைவருந்தி ஒருபடியாற்றினால், அவன்வருங்காலமான ஸந்த்யை

படி. "மல்லிகைகமழ்தென்றல்" இத்யாதியாலே - ஸந்த்யாகாலத்தில் [illegible] அழிகிறபடி சொல்லுகிறதென்று கருத்து. ஆகில் கரணங்களுக்குச்சொன்ன * முடியானேயிற்பாட்டுக்கு வாசியென்னவென்ன - முடியானேயில் இத்யாதி. அவயவிதான் என்றது - "பக்கமுள்ளாரும்" என்றத்தைப்பற்ற. வாசியற - ஜ்ஞானேந்த்ரியங்களோடு இத்யாதி. "மல்லிகைகமழ்" என்று - க்ராணமும், "தென்றல்" என்று - ஸ்பர்சமும், "குழலிசை" என்று - ச்ரோத்ரமும், "நன்மேகங்கள்" என்று - சக்ஷுஸ்ஸும், [illegible] - ஜ்ஞானேந்த்ரியங்கள் என்றது. "[illegible]" என்கையாலே - கர்மேந்த்ரியங்களோடு என்றது. "[illegible]" என்றது - [illegible] கூடுமோவென்ன - ராமாவதாரத்தில் இத்யாதி. [illegible] தென்ன - குணாதிக இத்யாதி. [illegible] - தம்முடைய [illegible] இத்யாதி. குணங்களைப் பற்றவும் தீம்பு [illegible]. கைபடியுண்டிருக்கை - [illegible]. ஆனாலும் குணங்களோடேயத் தீம்பு [illegible]வோவென்ன - குணங்கள்தான் இத்யாதி. அதுவேயாய் - குணமேயாய். பாடாற்றப்போகாது - ஸஹிக்கப்போகாது. தென்றல்முதலான [illegible]ளுக்கு ஸ்வாபதேசம் - நாட்டார் இத்யாதி. உளைய - [illegible]. வெண்கிடந்து - [illegible]. "ஸந்த்யைப்பட்ட கோலைப்படுகிறார்" என்று [illegible] - திருவாய்ப்பாடியில் இத்யாதி. இவன்தான் இவர்களைவிட்டுப் பசுமேய்க்கப் போவானேனென்ன - அதாவது ப்ராஹ்மணர்க்கு இத்யாதி. உத்தரத்தை ஸங்க்ரஹிக்கிறார் - இப்படியாலே இத்யாதி. அவன் வருகிற ஸந்த்யாகாலத்திலே நோவுபடுவானேன்? பகற்போதிலேயாயிருக்கவொண்ணாதோ? என்ன; அவன் வருங்காலமான ஸந்த்யையிலே அவன்வாராதிருக்கில் [illegible] - ஆக அவன்பசு இத்யாதி. அவன்தான் முற்கொழுந்திலேவாராதே பிற்கொழுந்திலே வருவானேனென்ன - அதாவது அவன்தான் இத்யாதி. உத்தரத்தை [illegible] ஸந்த்யாகாலத்திலே அவனைப்பிரிகையாலே வந்த நோவேயன்றிக்கே, பாத்யபதார்த்தங்களும் மேலிடத்தொடங்கிற்றென்கிறார் - அவன்வரக்கடவ இத்யாதி. "மாலையும்வந்தது" என்றத்தைப்பற்ற - ஸந்த்யையும் வந்தது என்றது. "ஆபுரமாலை

யும்வந்துமுகங்காட்டிப்பசுக்களின் முற்கோழுந்துவந்து தலைவைக்கச்செய்தே அவன்தன்னை வரக்காணுவிட்டால் ஆற்றப்போகாதிறே. அதாவது - அவன்தான் முற்கொழுந்திலே வாராதே பிற்கூழையிலேசிற்குமாய்த்து, நடுவுபடும்அலமாப்புக்காண்கைக்காக. அவன்வரக் கடவ காலமான ஸந்த்யையையும் வந்தது:கூடவரும் பசுக்களும் வந்தன: அவன்தான் வரக் காணுவிட்டவாறே, அக்காலத்தில், மல்லிகையின்பரிமளம், நல்லகுறிஞ்சியிசைதொடக்க மான அநுகூலபதார்த்தங்கள், தென்றல், நிலா, கடலோசை, அன்றில், குழலோசை முத லானவை பாதகமாகத் தொடங்கிற்று. குழலோசையும், அவ்வழியே அவனுடைய குணங்களை ஸ்மரிப்பித்து நோவுபடுகைக்கு உடலாயிருக்குமிறே. அப்படியிருக்கிற பாதக பதார்த்தங்களெல்லாம், முன்பு தனித்தனியே பருஷஹாஷணங்களைப்பண்ணி நலிந்த ஏகாக்ஷி ஏககர்ணியுள்ளிட்ட ராக்ஷஸிகள் பின்பு அவ்வளவில்நில்லாதே எல்லாரு மொக்க மேல்விழுந்து அதுக்குமேலே சிலநலிவுகளைப்பண்ண நினைத்தாற்போலே, பாதக வர்க்கமடைய, தனித்தனியும் திரளவும் மேல்விழுந்து நலிய, அவற்றாலே நலிவுபட்டவர்க ளெல்லாரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவரொருத்தருமே கூப்பிடுகிறார்.

முதற் பாட்டு.

மல்லிகைகமழ்தென்றலீருமாலோ!வண்குறிஞ்சியிசைதவழுமாலோ!
செல்கதிர்மாலையும்மயக்குமாலோ!சேக்கர்நன்மேகங்கள்சிதைக்குமாலோ!
அல்லியந்தாமரைக்கண்ணனெம்மான்ஆயர்களேறரியேறெம்மாயோன்
புல்லியமுலைகளுந்தோளுங்கோண்டு புகலிடமறிகிலம்தமியமாலோ!

மாகின்றால்'' என்றத்தைப்பற்ற - பசுக்களும் வந்தது என்றது. ''மாயன்வாரான்'' என்றத்தைப் பற்ற - அவன்தான் இத்யாதி. 'அக்காலத்தில்' என்றதுக்கு 'அநுகூலபதார்த்தங்கள்' என்றத் தோடே அந்வயம். 'அநுகூலபதார்த்தங்கள்' என்றவநந்தரம், காலாந்தரங்களிலும் அநுகூலமான 'தென்றல்' என்றுகூட்டுவது. குழலோசை எவ்வாகாரத்திலே பாதகமென்ன - குழலோசையும் இத்யாதி. பாதகபதார்த்தங்கள் நலியும் ப்ரகாரத்தையும், அவற்றாலேயவர்கள் நோவுபடுகிற ப்ரகா ரத்தையும் விசதமாக வ்யபாதியாநின்றுகொண்டு, ஸந்த்யையில் அவர்கள்பட்ட நோவை இவரொருத்த ரும் படுகிறாரென்று இம்முகமாலே நிரூபிக்கிறார் - அப்படியிருக்கிற இத்யாதி. 'பாதகபதார்த்தங்களெல் லாம்' என்றவநந்தரம், ''நலிகையாலே'' என்றுசேஷம். அதுக்குமேலே - முன்புநலிந்ததுக்குமேலே. தனித்தனியும் என்றது - பாட்டுக்கள்தோறும் ஸ்புடம். திரளவும் என்றது - ''வாலொளிவளர் முல்லை கருமுகைகள் மல்லிகை'' ''புலம்புறுமணிதென்றல்'' இத்யாதியைப்பற்ற. அன்றில் என்றது - இத் திருவாய்மொழியிலில்லை. * இன்னுயிர்ச்சேவலில் ''அன்றிற்பேடைகாள்'' என்றத்தையுட்கொண்டு, அவையும் பாதகங்களாகையாலே அத்திருவாய்மொழியிற் சொன்னவையும் இங்கு விவக்ஷிதங்க ளென்று தோற்றுகைக்காக அன்றிலென்று ஸூசிப்பிக்கிறாரென்று கருத்து. உபந்யாஸக்ரமமாவது- எம்பெருமானார் நிர்வாஹாநந்தரம், 'திருவாய்ப்பாடியில்' இத்யாதியையும், 'ஸந்த்யையைப்பார்த்திருக்கு மத்தனையாய்த்து' என்றவநந்தரம், 'ராமாவதாரத்தில்' இத்யாதியையும், அநந்தரம். 'ஆக அவன்பசு மேய்க்க' இத்யாதியையும், அநந்தரம், ''நாட்டார்'' இத்யாதிஸ்வாபதேசமும், ''ஜ்ஞாநம் பிறந்த'' என்று தொடங்கி 'ஜ்ஞாநேந்த்ரியங்களோடு' இத்யாதி வாக்யபர்யந்தம் அநுஸந்தேயம். இழே, திருவாய்ப் பாடியிலுள்ளார் பட்டதுபடுகிறார் என்றது - அந்யாபதேசத்துக்கு த்ருஷ்டாந்தம் சொல்லிற்று; ஸ்வாபதேசத்துக்கு த்ருஷ்டாந்தம் - நாட்டார் இத்யாதி.

ஆ.—மல்லிகைகமழ் தென்றல் முதலான பதார்த்தங்கள் என்னை வாட்டியா நின்றன ; ஆஶ்சர்யமான சேஷ்டிதங்களை யுடையனான கண்ணபிரானைப் புல்கி அதுவே யாத்ரையாயிருந்த இம்முலைகளையும் தோள்களையும் கொண்டு புகலிடமறிகிலோம்; முடிவுற்றோம்!' என்று கூப்பிடுகிறாள்.

ஓ.—முதற்பாட்டில், ஸந்த்யாகாலத்தில் தென்றல் தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியை அருளிச்செய்கிறார்.

[மல்லிகையென்று தொடங்கி] - வெளிப்புறத்திலே பொறுக்கவொண்ணாத தென்றலானது நஞ்சூட்டினாற்போலே மல்லிகையின் பரிமளத்தோடே கூடவந்து ஈரா நின்றது. அழகிய குறிஞ்சிப்பண்ணோடே கூடின இசையானது தவழா நின்றது; அஸ்தமியா நின்றுள்ள ஆதித்யனையுடைய ஸந்த்யையும் வந்து மோஹிப்பியா நின்றது; சிவந்த அழகிய மேகங்கள் சேர்த்துப் பொகடா நின்றன 'ஆல்' என்றும், 'ஓ' என்றும் மிகவும் நோவுபட்டமைக்குத் தனித்தனி ஸூசகங்கள். [அல்லியந்தாமரைக்கண்ணனென்று தொடங்கி] - இடைப்பிள்ளைகளைத் தன்னுடைய சேஷ்டிதங்களாலே தோற்பித்தாற்போலே தன் திருக்கண்களின் அழகைக்காட்டி என்னை அடிமைகொண்டு என்னோடே அத்யாஶ்சர்யமாம்படி பரிமாறி அத்தாலே மேனாணித்திருந்தவனாலே புல்கப்பட்ட முலைகளையும் தோள்களையும் கொண்டு தென்றல் முதலான பதார்த்தங்கள் நலியாதபடி புகுமிடம் காண்கிறிலோம்; இத்தனையில் இருந்து ஸஹிக்கவும் மாட்டாதே தனிமைப்படாநின்றோம்.

ப—முதற்பாட்டில், ஸந்த்யாவேளையில் தென்றல்தொடக்கமான பதார்த்தங்கள் நலியாநின்றன ; ஸர்வேஶ்வரனான க்ருஷ்ணன் விரும்பின அவயவங்களைக்கொண்டு ஒதுங்க இடங்காண்கிறிலோமென்று கூப்பிடுகிறாள்.

மல்லிகைகமழ் - மல்லிகையின் பரிமளத்தையுடைத்தான, தென்றல் - தென்றலானது, ஈரும் - நஞ்சூட்டின வாள்போலே அறுத்துப்பொகடா நின்றது; வண் - ஸ்ராவ்யமாய் அனேகஜாதிக்கு ஆஸ்பதமான, குறிஞ்சியிசை - குறிஞ்சியாகிற பண்ணையுடைத்தான இசையானது, தவழும் - அங்கேத்தத்தைத் தள்ளாநின்றது; செல் - அஸ்தமிப்போமவனான, கதிர் - ஆதித்யனையுடைத்தான, மாலையும் - ஸந்த்யையானது, மயக்கும் - (கூப்பிட்டு ஆற்றவொண்ணாதபடி அறிவழிப்பிப்ப) மோஹிப்பியா நின்றது; செக்கர் - ஸந்த்யையில் செக்கர்நிறத்தையுடைத்தான, நல் - தர்ஶநீயமான, மேகங்கள் - மேகங்களானவை, சிதைக்கும் - "பொன்னிறத்தாடை புனைபவன் வடிவுக்கு ஸ்மாரகமாய்க்கொண்டு தைர்யத்தைச் சிதைக்கா நின்றது ; (இப்படி நலியாநிற்க விரோதமானபின்பு), அல்லி - விகஸிதமாய், அம் - தர்ஶநீயமான, தாமரைக்கண்ணன் - தாமரைப்பூப்போலே இருக்கிற கண்ணழகை யுடையனாய், எம்மான் - (அத்தாலே "ஜிதம்" என்னும்படி நம்மைத் தோற்பித்த) ஸ்வாமியாய், ஆயர்களேறு - ஸஜாதீயரான கோபரும் கொண்டாடும்படியான செருக்கையுடையனாய், அரியேறு - (ஸ்த்ரீபும் விபாகமற இப்படி மதிக்கையாலே) ஸிம்ஹஶ்ரேஷ்டம்போலே மேனாணித்திருப்பானாய், எம்மாயோன் - (ஸம்ஶ்லேஷதசையில் தாழநின்று நம்மோடே பரிமாறும்) ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடையவன், புல்கிய - (அத்யந்தாபிநிவிஷ்டனாய்க்கொண்டு) ஸம்ஶ்லேஷித்த, முலைகளும் - முலைகளையும், தோளும் - தோள்களையும், கொண்டு - , தமியம் - (கூடினைப்

பிரிந்து) தனிமைப்பட்ட நாம், புகலிடம் - ஒதுங்குமிடம், அறிகிலம் - அறிகிறிலோம். ரக்ஷகனானவன் அஸந்நிஹிதனானான்; நாம் அஸஹாயரானோம்; சுற்றும் முற்றும் பாதகமாய்த்து; அவன் விரும்பின வஸ்துவை நோக்கிக் கொடுக்க விரகறிகிறிலோம் என்று கருத்து. தவர்தல் - துளைத்தல். சிதைக்கை - செதுக்குகை. ஆலும் ஓவும் விஷாதாதிஶயஸூசகமான வசைகள். அடிதோறும் கூப்பிட்டது, ஓரொன்றால் வந்த ஆர்த்த்யதிஶயத்தாலே.

ஈ.—முதற்பாட்டில், ஸந்த்யாகாலத்தில் தென்றல் தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியைச் சொல்லுகிறாள்.

[மல்லிகை கமழ்தென்றல்] - இவள் ஆர்தேட்டக் கூப்பிடுகிறாள்! வெறும்புறத்திலே நலியவற்றான தென்றல் மல்லிகையினுடைய பரிமளத்தை ஏறட்டுக்கொண்டு வாராநின்றது. ஸ்வபரிகரமான பத்ரத்திலே நஞ்சு ஊட்டினாற்போலேயாய்த்து தென்றல் பரிமளத்தைக்கொண்டு வருகிறபடி. க்ராணேந்த்ரியத்வாரத்தாலும் நலியாநின்றது. கண்ணுக்கு விஷயமாயிருக்கவொண்ணாதபடி இராப்படை யேறுவாரைப்போலே உடம்பிலேபடக் காண்கிறவித்தனை. இத்தென்றலுக்கு, கண்டவிடமெங்கும் வாயாயிராநின்றது. [ஈருமாலோ] - பண்டே பிரிவாலே சென்றற்றிருக்கிற உடம்பைப் பலகை பலகையாக ஈராநின்றது. 'பத்மஸௌகந்திகவஹம் ஶிவம் ஶோகவிநாஶநம் । தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம்'—இருவராயிருப்பார் காற்றைத் தேடிப் படுக்கை படாநிற்க இவளொருத்திக்கு மாய்த்து பாதகமாகிறது; "யாநிஸ்ம ரமணீயாநி தயாஸஹ பவந்தி மே । தாந்யேவாரமணீயாநி ஜீவதோ மே தயா விநா". [வண்குறிஞ்சி யிசைதவழுமாலோ] - அழகிய குறிஞ்சியிசையானது துளையாநின்றது. காற்றிற்றுப் போகட்டபுண்ணின்மேலே துளைத்துப் போகடாநின்றது. தென்றல் புறம்பே நலிகிறவித்தனை; இசை, செவிவழியே உள்ளேபுக்கு நலியாநின்றது. இசைக்கெவ்வளவு செவ்விபாடுண்டு, அவ்வளவு பாதகமாமித்தனையிறே. அவள் கூடவிருந்தபோது எவ்வளவு போக்யமாயிருக்கும், வ்யதிரேகத்தில் அவ்வளவும் நலியுமிறே. குறிஞ்சியும் தென்றலும் க்ருதஸங்கேதிகளாய் வந்து ஒன்று அதிகரித்த கார்யத்தின்ஶேஷத்தை ஒன்றுசெய்யாநின்றது; 'நற்கொலையாகவொண்ணாது: உயிர்க்கொலையாகவேணும்' நீ இவ்வளவுசெய், நான் இவ்வளவு செய்கிறேன்' என்பாரைப்போலே. [செல்கதிர்மாலையும் மயக்குமாலோ] - செல்லப்பட்டிருந்துள்ள கதிரையுடைத்தான மாலையானது மயங்கப் பண்ணாநின்றது. அஸ்தமியாநின்றுள்ள ஆதித்யனையுடைய ஸந்த்யையானது மோஹிப்பியாநின்றது. புடைவையை வாயிலேகொடுத்து நலிவாரைப்போலே ஓடுகிற வ்யஸநத்துக்குப் போக்குவிட்டுக் கூப்பிடவொண்ணாதபடி உணர்த்தியழியும்படி மோஹிப்பியாநின்றது. [செக்கர் நன்மேகங்கள் சிதைக்குமாலோ] - சிவந்தழகிதான மேகங்கள் சேதித்துப்போகடாநின்றது. ஸந்த்யாராகத்தையும் ஶ்யாமமான நிறத்தையுமுடைய மேகங்கள் அவனுடைய அவயவஶோபைக்கும் நிறத்துக்கும் போலியாய் நலியாநின்றன. கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் ஆஶ்ரயங்கிடக்கவோ நலிவது என்று ஶரீரத்தைச்சேதித்துப் போகடாநின்றன. [அல்லி இத்யாதி] - இவற்றை இன்னாதாகிறதென்? அவன்தான் முன்னே நாம் முடிகைக்கன்றோ கலந்துபோநின்றது? ஸர்வமும் பாதகமாம்படி முன்னே புகலறுத்தான் அவனன்றோ? [அல்லியுந் தாமரைக்கண்ணன்] - அல்லியையுடைத்தாய் அழகிதான தாமரைபோலேயிருந்த திருக்கண்களையுடையவன்;

முதலுறவு பண்ணுவது கண்ணாலேயிறே. த்ருஷ்டிவேர்ப்பு பிறக்கையிறே ஸம்ச்லேஷ முண்டாவது. [எம்மான்] - அவ்வழகாலே என்னை அனந்யார்ஹையாக்கினவன். [ஆயர்கோன்] - அவ்வழகாலே இடையரைத் தோற்பித்தாற்போலே தன் செருக்குக்கு ஆண்களைத் தோற்பிக்குமவன், பெண்பிறந்தாரைச் சொல்லவேண்டாவிறே. “பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்” என்கிறபடியே வடிவழகாலே அடர்த்து இருப்பது. [அரியேறு] - என்னை அடிமைபடுத்தி என்னோடே கலந்து அத்தாலே பெறாப்பேறு பெற்றானாய் மேனாணிப்புத் தோற்ற இருக்கிறபடி. ஸிம்ஹம் செருக்கினப்படி. [எம்மாயோன்] - ஸம்ச்லேஷதசையில் காதல் காட்டிக்கொண்டு தாழநின்று பரிமாறினவன். போகின்றவனுக்குக் கரப்பு அரிதாய்ப் பயப்பட்டுப் பரிமாறிற்று. [புல்லிய முலைகளுந் தோளுங்கொண்டு] - அவன் வந்து ஸம்ச்லேஷிக்கிறபோது ஸர்வாங்க ஸம்ச்லேஷத்துக்கு உறுப்பன்றிக்கே போயிற்றாய்த்து; அநுபவிக்கப்பெற்றதுமாய் இளைப்பாறினவிடமும் நெருக்கிறபடி. புல்லியவென்று, லக்ஷிதமாக அவனுக்கு முலையும் தோள்களிலும் உண்டான அவயவத்தைச் சொல்லிற்று. [புகுமிடமிலேம்] - இப்ரதேசத்தில் தென்றல் முதலான பதார்த்தங்களைக் கழித்துக்கொண்டு புகுமிடம் காண்கிறிலோம். “ஸாயங்காலத்தில் வெறுப்பு ப்ரஜாபதியப்போர், தக்கர்பதிக்கிட்ட ப்ரஜைகள் அலைப்புக்கு அலந்து பகலிடமறியாதாற்போலே, நான் ஜீவிக்கும்படி ஜீவிக்கிறேன்; இவற்றைக்கொண்டு புகுமிடங்காண்கிறிலேன்” என்கிறாள். [தமியேனாலோ] - இத்தசையில் ரக்ஷகனானவனும் வாராமையாலே தனிமைப்பட்டிருக்கிறேன். அஸாதாரணமான தென்றல் முதலான பதார்த்தங்கள் பாதகமாகின்றன. அவ்வளவின்றிக்கே ஹதத்தின் விட்டமாக்கியையானால் ப்ரஜைப்போலே இருக்குமாக்கு உதவவேண்டாவோ? “ஸ்த்ரீஸஹஸ்ரஸகீவிஸேஷா” என்று தம்தனிமையில் தம்போயாகிலும் உண்டாய்த்து; அதுவுமில்லை இங்கு.

ஈடு.—முதற்பாட்டு. ஸந்த்யாகாலத்தில் தென்றல்தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியைச் சொல்லுகிறாள்.

[மல்லிகை] - “மல்லிகை” என்றுதொடங்கி “செக்கர்மேகங்கள் சிறுகத் துமாலோ” என்னுமளவும் இவள் தூர்தேசத்தில் கட்டுச்செல்லுகிறாள். [மல்லிகைகமழ் தென்றல்] - வெறும்புறத்திலே வாளிட்டதுபோன்ற தென்றல். அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தை எடுத்துக்கொண்டு வாராநின்றது - வெளியாடான புண்ணிலே நெருப்பிட்டாற்போலே யாய்த்து. தென்றல் பரிமளத்தைக் கொண்டு வருகிறபடி. அவன் கூடவிருந்தபோது அநுகூலமான பதார்த்தங்களுடைய இப்போது பாதகமாகிறபடி. “யாநி ஸ்ம ரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே | தாந்யேவாரமணீயாநி ஜீவதோ மே தயா விநா” (யாநிஸ்மரமணீயாநி தயாஸஹபவந்திமே | தாந்யேவாரமணீயாநி ஜீவதோ

முதற்பாட்டு - மல்லிகை இத்யாதி. பதார்த்தங்களடைய பாதிக்கையாலே - ஸந்த்யாகாலத்தில் இத்யாதி. தென்றல் முதலானவை பாதிக்கிறதென்று நிருபித்துச் சொல்லாதே, “ஈருமாலோ, கொல்லுமாலோ” என்று ப்ரத்யேகம் சொல்லியிருக்கையாலே - தனித்தனியே என்றருளிச்செய்தது.

வ்யாக்யானாவதரணம் - மல்லிகை இத்யாதி. “மல்லிகைகமழ்தென்றல்” என்றதுக்கு ஸ்வாபம் - வெறும்புறத்திலே இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - வடு இத்யாதி. பதார்த்தம் - ஆபுயும். அநுகூலமான தென்றல் பாதகமாமானென் என்ன - அவன்கூட இத்யாதி. இப்படி பாதகமான விடமுண்டோவென்ன - யாநிஸ்ம இத்யாதி. அவை பெண்மையென்ன - ஏவம்புத்தபவாற இத்

மேதயாவிநா) "ஏஷ புஷ்பவஹோ வாயு꞉ ஸ்பர்ஶோ ஹிமாவஹ꞉ | தாம் விசிந்தயத꞉ காந்தாம் பாவகப்ரதிமோ மம," (ஏஷபுஷ்பவஹோவாயுஸ்ஸுக ஸ்பர்ஶோஹிமாவஹ꞉ | தாம்விசிந்தயத꞉காந்தாம் பாவகப்ரதிமோமம,) "ஸதா ஸுகமஹம் மந்யே யம் புரா ஸஹ ஸீதயா | மாருதஸ் ஸ விநா ஸீதாம் ஶோகஸஞ்ஜநகோ மம." (ஸதாஸுகமஹம்மந்யே யம்புராஸஹஸீதயா | மாருதஸ்ஸவிநாஸீதாம்ஶோகஸஞ்ஜநகோமம.) "தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம்" (தந்யாலக்ஷ்மணஸேவந்தே பம்போபவநமாருதம்) என்று கூப்பிடுவோ னவனிறே; (இருவ ராயிருப்பார் காற்றைத்தேடிப் படுக்கைபடாநிற்க,) "இக்காலமிவ்வூர் பனிப்பியல்வெல் லாம் தவிர்ந்தெரிவீசும்" என்னுமாபோலே, இவரொருவர்க்குமேயாய்த்து பாதகமாகிறது. [மல்லிகைகமழ்தென்றல்] - க்ராணேந்த்ரியத்துக்கும் பாதகமாய், ஸ்பர்ஶேந்த்ரியத்தை யும் அழியாநின்றது. இராப்படை ஏறுவாரைப்போலே உடம்பிலேபடக் காணுமித்தனை போக்கி, கண்ணுக்குத்தோற்றுதாய்த்து; கண்டு தப்பவொண்ணாது. இத்தென்றலுக்கு, கண்டவிடமெங்கும் வாயாயிராநின்றது. [ஈருமாலோ] - பண்டே பிரிவாலேசென்றற்றிருக் கிற உடம்பை, பலகைபலகையாக ஈராநின்றது. [வண்குறிஞ்சியிசைதவருமாலோ] - அழ கிய குறிஞ்சியிசையானது துளையாநின்றது. காற்றுசார்ந்துபோகட்ட புண்ணின்மேலே துளைத்துப் போகடாநின்றது: தென்றல், புறம்பே நலிகிறவித்தனை; இசை, செவிவழியே யுள்ளேபுகுந்து நலியாநின்றது. [வண்குறிஞ்சி] - இசைக்குளவ்வளவு செவிப்பாடுண்டு, அவ்வளவும் பாதகமாமித்தனையிறே. அவன் கூடவிருந்தபோது எவ்வளவு போக்யமா யிருக்கும்? வ்யதிரேகத்தில் அவ்வளவும் நலியுமிறே. குறிஞ்சியும் தென்றலும் கூடி க்ருத

யாதி ப்ரமாணத்வயம். காற்று பாதகமென்னுமதுக்கு இவர் ஸ்ரீஸூக்தி-இக்காலம் இத்யாதி. வ்யாக் யாதாவின்படு - தந்யா இத்யாதி. "யாநி ஸ்ம ரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே | தாந்யேவ ரமணீயாநி ஜீவதோ மே தயா விநா" (௬௬-௰) "ஏஷ புஷ்பவஹோ வாயு꞉ ஸுகஸ்பர்ஶோ ஹிமாவஹ꞉ | தாம் விசிந்தயத꞉ காந்தாம் பாவகப்ரதிமோ மம," (௫௨ - ௰) "ஸதா ஸுகமஹம் மந்யே யம் புரா ஸஹ ஸீதயா | மாருதஸ் ஸ விநா ஸீதாம் ஶோகஸஞ்ஜநகோ மம," (௫௩-௰), "பத்மஸௌகந்திகவஹம் ஶிவம் ஶோகவிநாஶநம் | தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம்" (௭௪௰) இதி கிஷ்கிந்தாகாண்டே ப்ரதமே. திருவிருத்தம் அஞ்சாம்பாட்டு, "பனிப்பியல்வாகவுடையதண்வாடையிக்காலமிவ்வூர், பனிப்பியல்வெல்லாந்தவிர்ந்தெரி வீசும்-" குளிர்த்தியை ஸ்வபாவமாகவுடைத்தான மந்தமாருதம், இக்காலத்திலே இத்தேசத்திலே குளிர்ந்தஸ்வபாவமெல்லாம் தவிர்ந்து எரிவீசாநிற்குமென்றபடி- கூப்பிடுவானவனிறே; "ஆயிருக்க, இவள் கூப்பிடுகிறாள்" என்று கூட்டுவது. "மல்லிகைகமழ்தென்றல்" என்றதால் பலிதம் - க்ராணேந்த்ரியத்துக்கும் இத்யாதி. பாதகமென்றறிந்தால் தப்புகிறதுக்கென்னென்ன - இராப் படை இத்யாதி. அமூர்த்தமானவாயு ஈருகையாலே இதுக்குத் தப்பவொண்ணாதென்றபடி. "ஈரும்" என்றதுக்கு பாவம் - இத்தென்றலுக்கு இத்யாதி. ஈருகை - அறுக்கை. கண்டவிடமெங்கும் வாயாயிராநின்றது என்றது - ஸ்பர்ஶம் ஸர்வாங்கீணமாகையாலே. "ஈரும்"என்றதுக்கு பாவாந்தரம்- பண்டே இத்யாதி. கீழிற்பதத்தையுங்கூட்டி "தவரும்" என்றதுக்கு பாவம் - காற்றுசார்ந்து இத் யாதி. தவருகை - துளைக்கை. இது தென்றலைப்பற்றவும் க்ரூரமென்கிறார் - தென்றல் புறம்பே இத்யாதி. * வண்மைக்கர்த்தம் - இசைக்கு இத்யாதி. விவரணம் - அவன்கூட இத்யாதி. செவிப் பாடு - செவியிலே புகுருகை; போக்யதையென்றபடி. "மல்லிகை" என்றுதொடங்கி இவ்வளவும் பதச்சேர்த்திக்கு ாவமாதல்; "தென்றலீரும், குறிஞ்சிதவரும்" என்றதுக்கு பாவமாதல் - குறிஞ்

ஸங்கேதிகளாய்வந்து, ஒன்றையதிகரித்த கார்யத்தின் ஶேஷத்தை ஒன்று செய்யாநின்றது. "நற்கோலியாகக் கொல்லவொண்ணாது, உயிர்க்கோலியாகக் கொல்லவேணும்: அதில் நீ இவ்வளவுசெய், நான் இவ்வளவுசெய்கிறேன்" என்று க்ருதஸங்கேதராய் வந்தாரைப் போலேயாய்த்திருக்கிறது. [செல்கதிர் இத்யாதி] - செல்லப்பட்டிருந்துள்ள கதிரையுடைத்தான மாலையானது, மயங்கப்பண்ணாநின்றது. அஸ்தமியாநின்றுள்ள ஆதித்யனையுடைய ஸந்த்யையானது, மோஹிப்பியாநின்றது. வாயிலே சோறையைத் தறித்துக் கொல்லுவாரைப் போலே, ஆற்றாமைக்குப்போக்குவிட்டுக் கூப்பிட்டு பரிக்கவொட்டுகிறதில்லை. [செக்கர் நன்மேகங்கள் சிதைக்குமாலோ] - ஸந்த்யாராகத்தையும் ஶ்யாமமான நிறத்தையுமுடைத்தான மேகங்கள் அவனுடைய அவயவஶோபைக்குத் ஒப்புவாக்கும் ஸ்மாரகமாய், "இவை என்னம்புசெய்தது" என்று அவற்றை †தர்ஷித்துக்கொண்டு, "ஆஶ்ரயங்கிடக்கவோ நலிவது?" என்று வயிரத்தைச் செற்றாநின்றது. [அல்லியந்தாமரைக்கண்ணனித்யாதி] - நாம் அவற்றை யின்றாதாகிறதேன்? அவன்தான் முன்னே நம்மை முடிக்கக் காரியம்பார்த்து வைத்திலனோ? "கலந்துபிரியவே இவள் முடியும்" என்றன்றோ அவன் பிரிந்தது? இவையானால் போக்குவிட்டடித்தனவிறே: பகலடித்தான் அவனிறே. [அல்லியித்யாதி]-‡(அல்லியையுடைத்தாய் அழகிய தாமரைபோலே விரிந்த திருக்கண்களையுடையவன்) முதலுறவுபண்ணுவது கண்ணிறே; த்ருஷ்டிபந்தம் பிறந்திறே ஸம்ஶ்லேஷிப்பது. [எம்மான்] - அக்கண்ணழகாலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். [ஆயர்களேறு] - அவ்வழகாலே இடையரைத் தோற்பித்தாற்போலே. "ஸாஹஸாத்" (ஸம்ஸாம்) - வயிரவுருக்காய்த்து அவனுடையஸௌந்தர்யம். தன்னோடொத்தாரை அப்படி நலியாநின்றால், அபலைகளை நலியச் சொல்லவேண்டாவிறே. [அரிஏறு]-கண்ணாலே குளிரநோக்கி இவளை அநந்யபரையாக்கி, இவளோடே ஸம்ஶ்லேஷித்து, அத்தாலே தான் பெறும் பேறு பெற்றானாய் மேனாணிப்புத்தோற்ற நின்றபடி. ஸிம்ஹஶ்ரேஷ்டம். [எம்மாயோன்] - அம்மேன்மையையுடையவன், தாழ்ந்தார்சிலர் உயர்ந்தவர்களோடே கலக்குமா

சியும் இத்யாதி. ஶேஷவ்யாபாரம் - நற்கோலி இத்யாதி. வ்யாபாரம் - அஸ்தமியாநின்றுள்ள இத்யாதி. கதிர் - ஆதித்யன். "மயக்கும்" என்றதற்கு பாவம் - வாயிலே இத்யாதி. மேலும் வ்யூஹமாகிறது இவ்வாகாரத்தாலே என்றுமதனைக் காட்டாநின்றகொண்டு. இவைகளைப்பற்ற இதின் வ்யாசத்வாதிஶயத்தை அருளிச்செய்கிறார் - ஸந்த்யாராகத்தையும் இத்யாதி. செற்றாநின்றது - செறுக்காநின்றது. சிதைக்கும் - செறுக்காநின்றது. "பல்லிமுலைகளாம் தோற்றுக்கொண்டு பகலிடமறிகிலம்" என்றதைக் கடாக்ஷித்த பாவம்-நாம் இவற்றை இத்யாதி. காரியம் பார்த்துவைத்திலனோ தென்ன - கலந்து இத்யாதி. அவற்றிலும் இவன் செய்தது அதிகமென்கிறார் - இவையானால் இத்யாதி வாக்யத்வயத்தாலே. இதனையுடைத்தான அழகிய தாமரைபோன்ற கண்களையுடைய என் ஸ்வாமியென்று ஸம்புதார்த்தம். முதல் கண்ணைச் சொன்னதற்கு பாவம் - முதலுறவு இத்யாதி. அதெப்படியென்ன - த்ருஷ்டிபந்தம் இத்யாதி. இதோடே கூட்டி "எம்மான்" என்றதற்கு பாவம் - அக்கண்ணழகாலே இத்யாதி. என்னையென்றிக்கே தன்னோடொத்த புருஷர்களிடம் தோற்பிக்குமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - ஸாஹஸாத் இத்யாதி. பூர்ணமென்றது - "ஸாஹஸாத்

ஸாஹஸாதூபஷிதிதாவஹாரிணம்" என்கிறபடி யென்றபடி. "ஸத்ரு காணாகணம் ... வஶீகர்" என்ற இந்த ஶ்லோகத்துக்கு பூர்வார்த்தம். இத்தால் பாவம் - தன்னோடொத்தாரை இத்யாதி. "தாமரைக்கண்ணனெம்மான்" என்றதைக் கடாக்ஷித்த பாவம் - கண்ணாலே இத்யாதி. "மாயோன்" என்றதுக்கு - வ்யாமோஹமாக அர்த்தம் அருளிச் செய்கிறார்-அம்

† தர்ஷித்தல் - பழித்தல். ‡ குண்டலிதம் ப்ரகடிதம்.

போலே, கையைக்காலைப்பிடித்துத் தாழநின்று பரிமாறினபடி. கலக்கிறபோது மின்மினி பறக்கும்படிகாணும் கலந்தது. [புல்லியமுலைகளும்தோளுங்கொண்டு] - அவனும் வாரா திருக்கிறான்; நானும் வருந்தி ஒருபடி ஜீவித்துக்கிடக்கிறேன்; அவனுக்குப் பிறந்த ப்ரஜை களைக்கொண்டு புகலிடம்அறிகிலேன். நான்செய்தபடிசெய்ய, இம்முலைகளின் வீக்கம் தீர அநுபவிக்கப்பெறுவது எப்போதோ? க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு, சோறு" என்னுமாபோலே படுத்தாநின்றன. அவன்தானும் கலக்கிறபோது ஸர்வாங்க ஸம்ஶ்லேஷ க்ஷமனன்றுபோலேகாணும். அவனிழிந்த துறையும், இளைப்பாறினவிடமும். [புல்லிய வித்யாதி] - கலக்கிறபோதை அவனுடைய அலமாப்பையும், தம்முடைய கரணங்களுக்கு உண்டான ப்ராவண்யாதிஶயத்தையும், அவன் பெருப்பேறு பெற்றானாய் நின்று பரிமாறின படியையும், தமக்கொரு புகலற்றிருக்கிறபடியையும் சொல்லுகிறது. [புகலிடமறிகிலம்]- வ்யதிரேகத்தில் தென்றல் முதலான பதார்த்தங்களைத் தப்பிச் சென்று புகுகைக்கு இடங் காண்கிறிலோம். [தமியமாலோ]-இத்தசையில் ரக்ஷகனானவனும் வாராமையாலே தனி மைப்படாநின்றோம். இப்படி தன் விஶ்லேஷதியாக பாதகமானால், பகதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுநனைத்தள்ளித் தான் மார்வை யேற்றாற்போலே, "இவைவரும்" என்றுஅறிந்தால் தான் கூட விருக்கவேண்டாவோ? அவன்கூடவிருந்தானாகில் இவைதாம் இழிதொழில்செய்யத் தொடங்குமிறே. "ராமஸ்ஸௌமித்ரிஸஹித:" (ராமஸ்ஸௌ மித்ரிஸஹித:) என்று அவர் தாம் நோவுபட்டுக் கூப்பிடுகிறபோது ஒரு தம்பியாராகிலும்கூட வுண்டு நோவுபடுகைக்கு; அங்ஙனும் ஒருதுணையில்லை எனக்கு. "ஸ:" (ஸ:)-பிராட்டியைப் பிரிந்து நடுவே கபந்தன்கையிலே யகப்பட்டு நோவுபட்டு நிற்கிற நிலையைச் சொல்லுகிறது. "தாம்" [தாம்] - இப்பிரிவும் ஆற்றாமையுமில்லாதாரையும் அழிக்கவற்றாய்த்து. "புஷ்கரிணீம்" (புஷ்கரிணீம்) - பரப்புமாறப்பூத்த பொய்கைகளும் சோலைகளுமாய், ஜலக்ரீடைக்கு யோக்யமான தேஶமாய்த்து பிரிந்து தனியிருப்பார்க்குக் கண்கொண்டு காணப் போகாது. "கத்வா" (கத்வா) - நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே, ம்ருத்யுவினுடைய ஆஸ்யத்திற் புகுவாரைப்போலே வந்து கிட்டிக்கொடு நின்றார். ம்ருத்யுவாகிற புடைதான்

மேன்மை இத்யாதி ஆஶ்சர்யமாக அர்த்தாந்தரம் - கலக்கிற இத்யாதி; மின்மினி பறந்தாற்போலே க்ஷணந்தோறும் தோற்றும்படி. "புல்லியமுலைகளும்" இத்யாதிக்கு பாவம் - அவனும் இத்யாதி. விலக்ஷணம் - நான்செய்த இத்யாதி. புல்லிய - புல்கிய; ஸம்ஶ்லேஷித்தவென்றபடி. அவனுக்குப் பிறந்த - அவனுக்காக வுண்டான. வீக்கம் - ஆசை. பலிதம் - க்ஷாம இத்யாதி. அவயவாந்தரங்க ளிருக்க, முலையையும் தோளையும் சொல்லுவானென்னென்ன - அவன்தானும் இத்யாதி. அவற்றிலே கலக்கும் ப்ரகாரத்தை விசதீகரிக்கிறார். அவன் இழிந்த இத்யாதி; "மெல்லியல்தோள் தோய்ந்தாய்" என்று இழியுந் துறை தோள்; "மலராள்தனத்துள்ளான்" என்று இளைப்பாறினவிடம் முலையென்ற படி. "மாயோன்" என்று தொடங்கி மேலிற்பதங்களுக்கு பாவம் - கலக்கிறபோதை இத்யாதி. "மாயோன்புல்லிய" என்று அவன் அலமாப்பும், "முலைகளுந்தோளும்" என்கிறவிடத்தில் தம்முடைய கரணப்ராவண்யமும், "அரியேறு" என்று பெரும்பேறுபெற்றானாயிருக்கிறபடியும், "புகலிடமறி கிலம்" என்கிறவிடத்தில் புகலற்றபடியையும் சொல்லுகிறது. தமியம் - தமியோமென்றபடி. "ஆலோ" என்றதுக்கு பாவம் - இப்படி இத்யாதி. கூடவிருந்தால் பாதகமாகாதோவென்ன - அவன்கூட இத்யாதி. "தமியம்" என்றதுக்கு பாவம் - ராமஸ்ஸௌமித்ரி இத்யாதி. ப்ரஸ்துத ஶ்லோகார்த்தம் - ஸ இத்யாதி; "ஸ தாம் புஷ்கரிணீம் கத்வா பத்மோத்பலஜஷாகுலாம் ராமஸ்ஸௌமித்ரிஸஹிதோ விலலாபாகுலேந்த்ரிய:" இதி கிஷ்கிந்தாகாண்டே. (க.க.) சோலை களும் என்றது - ஆர்த்தம். "புஷ்கரிணீம்" என்றதால் பலிதம் - பிரிந்து இத்யாதி. முகத்துக்

ஏதென்றால்: "வக்த்ராம்புஜஸ்வாகாராட" (வக்த்ரோத்பலஸ்வாகாராம்) - முகத்துக்கும் கண்ணுக்கும் போலியானவற்றை யுடைத்தாயிருந்தது. "உயர்தாமரைசெங்கழுநீர் மாதர்கள்வாண்முகமும்கண்ணுமேந்தும்" என்னக்கடவதிறே. 'ராகை:' (ராகை:) பிறர் கூப்பீடுதவிர்த்துப் போந்தவராய்த்து. "ஸஸமித் ஸஸம்ப்ருத:" [ஸஸமித்ஸம்ப்ருத:]- "ராகஷேபணே" (ராகஷேபணே) என்ற ஏதேனுமளவிலும் கூடாமன்று நோக்கிக் கொண்டு போந்தவரும் முன்றாக; ஆற்றுப்படுவன் தேப்டம்முன்றாக இழியுமாபோலே. "விலாஸாகாராஸ்ய:" (விலாஸாகாரலேந்த்ரிய:) - அநேகலக்ஷணங்களோடே யாய்த்துக் கூப்பிட்டது. ப்ராப்யவஸ்துவைப் பெறவேணுமென்னும் மநோரதமாய், சித்த இவருடைய மநோரதத்துக்கீடாக வந்துகிட்டும்படி அவனும் வாராதேநிற்க, அவனுடைய வரவுக்கீடான தூர்யகோஷம், ஸ்ரீபாஞ்சஜந்யத்வநி, ந்ருபகோஷம், திருவடிதிருச்சிறகோசை, மற்றுமுண்டான நன்னிமித்தங்கள், மந்த்ரஸ்வாநாதிகள் என்றாற்போலே சொல்லுகிறவை ஒன்றும் காணாமையாலே, அநுகூல பதார்த்தங்கள் ப்ரதிகூலமாகிறது. காணங்களும் சரீரமுமாய் க்லேசப்படுகைமாகிறவித, விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால் வாங்கவும் மாட்டாதே, இங்குப் பொருந்துவதும் செய்யாதே, கண்டதடைய பகையாயிருக்கிறபடி. ஆக, "இங்குப் பொருந்தாதே அங்குப் புகப்பெறாதே நடுவேநின்று க்லேசப்படுகிற அவஸ்த்தை ஸர்வத்ரபயாகிறது" என்றதிறே ஒருதாத்பர்யஞ் சொல்லக் கடவதாயிருக்கும். (க)

இரண்டாம் பாட்டு.

புகலிடமறிகிலம்தமியமாலோ! புலம்புறுமணிதென்றலாம்மலாலோ!
பகலெல்லைவாண்சாந்தமாலோ! நஞ்சமம்புலவுதண்வாடையமாலோ! [ன்
அகலிடம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்துமளிக்கின்றஆயன்மாயோ
இகலிடத்தசுரர்கள்கூற்றம்வாரான்இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்!

ஆ.—(புகலிடம்) - புலம்புறுமணி தென்றல் தொடக்கமானவற்றை நினையும் வாயிபாசின்றனை; வமன்குதுவேங்களைப் போக்கிக்கொண்டு ஸர்வாத்மாக்களையும் பலபடியால் ரக்ஷிக்கிற பரமகாருணிகனான எம்பெருமான் வருகிறிலன்; இனியிருந்து நான் உஜ்ஜீவிக்கைக்கு உபாயமென்? என்கிறாள்.

தும் கண்ணுக்கும் என்றது - பிராட்டியுடைய கண்ணுக்கும் முகத்துக்குமென்றபடி. அவை போல் போமென்ன - உயர்தாமரை இத்யாதி. 'பிரகூப்பீடு' தவிர்த்து - "பரித்ராணாய" என்ற கருத்து. 'ராகேஷபணே' - "அநுத்ரோதவிலோஸமார்க்ரஹணேவ்ஷு ப்ரோக்ஷோத்ர ஸம்ஜ்ஞா ணோராவஹதிஸ்ரேஷ்ட்ராகூஸம்யுணமேகம் த்வஸ்த்ரதி" த்ருதி இவ்விக்ரதானகோடமவாம் (கஉஎ). அவிரோதேகூடி நுவல்பட்டமொன்றுமதத்தை தருப்பாக்கம் - ஆற்றுப்படுவன் இத்யாதி. "ருகாசேஷ்ய:" என்றதற்கர்த்தம் - அநேகலக்ஷணங்களோடே என்பது. இத்திருவாய் மொழிக்கு அத்யாபதேசம் - ப்ராப்யவஸ்துவை இத்யாதி. ஸ்வாபதேசம் - காணங்களும் இத்யாதி. "செல்கதிர்மாலே" என்றதுக்கு ஸ்வாபதேசம் - அகதிருந்து இத்யாதி. இங்ஙனே ஒருதாத்பர்யம் சொல்லக்கடவதாயிருக்கும் என்றது - தாத்பர்யார்த்தமன்று; ப்ரயோகத்திலே மருளிச்செய்த அந்யாபதேச ஸ்வாபதேசங்களை யருளிச் செய்தபடியென்று கருத்து. "ஆல், ஓ" என்ற விரண்டும் அசை; விஷாதாதிசய வாசகம். (உ)

ஓ.—இரண்டாம்பாட்டில், பாதகபதார்த்தங்கள் தனித்தனியே நலிந்து அவை பலஹாநிமிகமிகப் பல கூடிவந்து நலியாநின்றன என்கிறாள்.

[புலம்பென்று தொடங்கி] - சேக்கள் கழுத்தில் த்வநிக்கிற மணி, தென்றல், குழல் இவையெல்லாம் அவற்றுக்கு ஸ்மாரகமாய்க்கொண்டு நலியாநின்றன. ஆஸ்வாஸகரமான பகலைப்போக்கின ஸந்த்யையை, அழகிய சந்தனம், பஞ்சமம், முல்லையென்கிற யாழ், குளிர்ந்தவாடை இவையெல்லாம் நலியாநின்றன. இப்பதார்த்தங்களுடைய தர்ஶநத்தாற்பிறந்த வ்யதியாலே அவற்றாலேவந்த நலிவு சொல்லமாட்டாதே பதார்த்தத்தைச் சொன்னாள். [அகலிடம் படைத்தென்று மேலுக்கு] - ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணி இருந்ததேகுடியாக ரக்ஷித்து அவ்வளவன்றிக்கே அவற்றின்பக்கலிலே மிகவும் வ்யாமுக்தனாய் ஆஸ்ரித விரோதிகளாய்க்கொண்டு யுத்தபூமியிலே எதிரிட்ட அஸுரர்க்கும் ம்ருத்யுவானவன். அப்படியே இக்காலத்தில் நலிகிறவற்றை நீக்கிக்கொண்டு வந்து தோற்றுகிறிலன்; இப்படி ஆபத்ஸகனானவன் வாராதிருக்க இவற்றின் ஸந்நிதியிலேயிருந்து என் ப்ராணனை நோக்குகையென்று ஒரு பொருளுண்டோ?

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரரக்ஷகனானவன் ஸந்நிஹிதனாகிறிலன்; பாதகங்கள் தனித்தனியன்றியே திரள்திரளாயீராநின்றன; ஒதுங்கவிடம்காண்கிறிலோம்; இனி ப்ராணரக்ஷணம்பண்ணும் ப்ரகாரமென்? என்கிறாள்.

தமியம் - தனிப்பட்டநாம், புகலிடம்-பெரும்படைக்கு ஒதுங்கவிடம், அறிகிலம் - அறிகிறிலோம்; புலம்புறு - நாகைத்தொடருகிற சேக்களின் கழுத்திலே த்வநிக்கிற, மணி - மணியும், தென்றல் - (அஸஹ்யமாய் நலிகிற)தென்றலும், ஆம்பலாலோ - இலைக்குழலும், (கூடிக்கொண்டது); பகல்டுமாலை - (பதார்த்த தர்ஶநம்பண்ணுயல்)பகலை நசிப்பிக்கிற ராத்ரிமுகமும், வண்சாந்தமாலோ - தத்காலோசிதமான அங்கராகஸமுதாயமும், (ஒருமுகமாய்த்து); பஞ்சமம் - பஞ்சமமாகிறபண்ணும், முல்லை - முல்லைமாலையும், தண்வாடையாலோ - குளிர்ந்தவாடையும், (ஒருதிரளாய்த்து; இப்படி படைதிரண்டாற்போலே தனித்தனிபாதகங்கள் ஸங்கமான இவ்வவஸ்தையில்), அகலிடம் - விஸ்தீர்ணமானஜகத்தை, படைத்து-உண்டாக்கி, இடந்து - ப்ரளயத்திலழுந்தாமலிடந்தெடுத்து, உண்டு - மஹாப்ரளயத்திலே வயிற்றுக்குள்ளே வைத்துநோக்கி, உமிழ்ந்து - உமிழ்ந்து, அளந்து - (அந்யாபிமாநம்வாராமல்)அளந்துகொண்டு, எங்குமளிக்கின்ற - எல்லாவிஷயத்திலும் வரையாமல்உபகாரகனாய், ஆயன்-இந்தக்காரணத்வ ரக்ஷகத்வத்துக்குஏகாந்தமான க்ருஷ்ணாவதார ஸௌலப்யத்தையுடையனாய், மாயோன் - ரக்ஷணாநுரூபமான ஆஶ்சர்யசேஷ்டிதவிஶிஷ்டனாய், இகலிடத்து - யுத்தத்திலே எதிரம்புகோத்த, அசுரர்கள் - அஸுரர்களுக்கு, கூற்றம் - ம்ருத்யுவானவன், வாரான்-(இந்தபாதகஸங்கங்களை அழித்து என்னை ரக்ஷிக்கும்படி) வருகிறிலன், இனி-அவன்விரும்பாமல் உபேக்ஷித்தபின்பு, என்னுயிர்-எனக்கே சுமையான ப்ராணனை, இருந்து-ஸத்தையோடேயிருந்து, காக்குமாறென் - ரக்ஷிக்கும்ப்ரகாரமென்? ரக்ஷகனானவனாலல்லது ரக்ஷணத்தில் ஶக்தியும் ப்ராப்தியுமில்லையென்றகருத்து. பாதகஸ்வரூபங்களைச்சொல்லி பாதிக்கிறப்ரகாரம் சொல்லாதொழிந்தது, ''படைபடை'' என்பாரைப்போலே வாசாமகோசரமான பயமும் ஆர்த்தியும் அதிசயிக்கையாலே. தென்றலையும் வாடையையுஞ்சொல்லிற்று, ஒருக்ஷணத்திலே அநேககல்பகங்கள் கழிகிறதான கருத்தாலே.

இ.—இரண்டாம்பாட்டில், வையுக பதார்த்தங்கள் தனித்தனியே நலிந்தவை வேறாகி மிகப்பல கூடிவந்து நலியாநின்றன என்கிறாள்.

[புகலிடமறிகிலம்]- மேல்வரப்புகுகிற வ்யஸநங்களைத் தீர்த்துச்சொல்லுகிற வார்த்தையாதல்; கீழ்நலிந்தவற்றுக்கஞ்சி ஸ்வச்சம் பின்னாட்டுகிற அநுபாஷணமாதல். [தமியமாலோ]- புகலற்றார்க்குத் துணையாமவன் இல்லாமையில் உதவாமையாலே தனிமைப்படாநின்றோம். [புலம்புறுமணி]- நாகுகளைத் தொடருகிற ரிஷபங்களின் கழுத்தின் மணி. அந்நாகுகள் கிட்டாமையாலே கூப்பிடுகிறாப்போலேயாய்த்து த்வநிக்கிறபடி. அது தனக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. [தென்றல்]- "மல்லிகை கமழ்தென்றல்" என்று துணைகொண்டு வருகையன்றிக்கே வெறும்புறத்திலே வந்து நலியாநின்றது. "ஆமையறுத்து உடம்புக்கிட்டு வருவது" என்று வெறும்புறத்திலே வந்து நலியாநின்றது. [ஆம்பல்]- இலைக்குழலாதல், ஆம்பற்குழலாதல். [அந்தோ]- "சருமாலோ, தவருமாலோ" என்று நலிகிறபடி சொல்லவொண்ணாதபடி. "புலி" என்பாரைப்போலே இவற்றின் பேர்சொல்ல அஞ்சவேண்டிப்படியைச் சொல்லுதல்; இவற்றால்படுகிற நலிவு பேச்சுக்கு நிலமல்லாதபடியாலே சொல்லாதொழிதல். [பகலடு மாலை]-பதார்த்தநிர்ணயம்பண்ணி தரிக்கலாம் பகலையும் முடித்துக்கொண்டு மாலையானது தோற்றுகின்றது; பிராட்டி தனிமையில் "ஐயோ" என்னும் பெரியவுடையாரை முடித்துக்கொண்டு ராவணன் நலிந்தாற்போலே. [வண்சாந்தம்] - அழகிய சாந்தம். [பஞ்சமம்] - பஞ்சமமாகிற பண். முல்லை- முல்லையாழென்கிற பண்ணாதல்; இடையருக்குத் தார் முல்லையாகையாலே அத்தைச்சொல்லுதல். [தென்வாடையாலோ] - தென்றல் காலமும் வாடைக்காலமும் தன்னிலே தூரமாயிருக்க இப்படி சொல்லுகிறது, பிரிவோடே காலம் நெடுகிச் சென்றபடியென்னுதல்; தென்றலுக்கஞ்சி வாடையின்கீழே ஒதுங்கவந்து நிற்கிறவிடத்திலே வாடை நலிகிறபடியைச் சொல்லுதல்; ஆர்த்தஸ்வரமாக எல்லாக்காற்றும் ஒருகாலே அடிக்கிறது என்னுதல். [அகலிடம் இடந்தானே] - பரப்பையுடைத்தான பூமி உருமாய்ந்துபோக அத்தைப்புண்டாக்கி, ப்ரளயாபத்திலே அகப்பட்ட பூமியைவிடுத்தெடுத்து, ப்ரளயத்தில் அகப்படாமல் வயிற்றிலேவைத்து, நோக்கி, வெளிநாடுகாண உமிழ்ந்து ப்ரபலர் அபஹரித்த வளவிலே எல்லையிடந்து மீட்டுக்கொண்டு இப்படிவரையாதே ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்குமவன். இருந்தேகுடியாக ரக்ஷிக்குமவன்கிடீர் மஹிஷிக்கு வியபட உதவாதிருக்கிறான்! [ஆயன்] - "க்ஷூடவஷிஷொகாநாம்" என்கிறபடியே ஐச்வர்யஸமேதன். [மாயன்] - ரக்ஷணார்த்தமான ஆச்சர்ய சக்தியுக்தன். [இகலிடத்தசுரர்கள் கூற்றம்] - யுத்தபூமியிலே எதிரிட்ட அஸுரர்க்கு ம்ருத்யுவானவன். எதிரம்புகோத்த அஸுரர்க்காய்த்து ம்ருத்யுவாவது; "ஶரணம்" என்ற அஸுரர்க்கு ரக்ஷகனுமித்தனை; ப்ரஹ்லாத விபீஷணாதிகளை ரக்ஷித்தானிறே. [வாரான்] - என்னை நலிகிற பதார்த்தங்களை ஶிக்ஷித்துக்கொண்டு வருகிறிலன். [இனியித்யாதி] - வரையாதே ரக்ஷிக்குமவனுமாய், ப்ராப்தனுமாய் விரோதிநிரஸநஸ்வபாவனுமானவன் வாராதிருக்க ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத எனக்கு ஆறியிருக்கப்போமோ? [இனியிருந்து] - "நஶோசஸம்ஶ்ராவலோஹேநநநஷ விஷ்யாஸ்வே ! வந்ஹம்ஸாவிஷிதஷித்வம் ஸக்ஷஶோகிலஷ்டே" என்கிறபடியே அத்தலையில் ஆற்றாமையும், "வாலிபட்டான், படைகூட்டிற்று" என்றாற்போலே ரக்ஷணத்தில் உத்யோகத்தையும் சிலர்வந்து சொல்லக்கேட்டுத் தான் ஆறியிருக்கி

றேனோ? [இனியிருந்து] - "அவனுடைய சரக்கு" என்று ஆத்தனையும் கைநோக்கிக் கொண்டிருந்தேன்; இவற்றின் ஸந்நியில், அவன் வாராதொழிந்தபின்பு முடியுமத்தனை போக்கி, இருக்க க்ஷமையல்லேன். [என்னுயிர் காக்குமாறென்] - பிறருயிராகில் காக்கலாமிறே! ஸம்ஶ்லேஷார்த்தமாகப் பரித்துக்கொண்டிருக்குமதொழிய ப்ராணனை நோக்கிக்கொண்டிருக்கப்போமோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. முன்பு தூசியேறினபேர்க்கு உரமாகநின்ற பேரணி உறுபூசலானவாறே திரளவமுக்குமாபோலே, தனித்தனியே நலிந்தபாதகங்கள் பலஹாநி மிகமிகப் பலகூடிவந்து நலியாநின்றதென்கிறாள்.

[புகலிடமறிகிலம்] - மேல்வருகிற பாதகபதார்த்தங்களைக்குறித்துச்சொல்லிற்றாகவுமாம்; அன்றிக்கே, கீழ்ச்சொன்னவைதனக்கேயஞ்சி அநுபாஷிக்கிறதாகவுமாம். [தமியமாலோ] - புகலிடமற்றார்க்குத் துணையாமவன் உதவாதொழியத் தனியிருக்கிற விருப்பிறே. (தமியம் - தனிப்பட்ட நாம்.) †[புலம்புறு மணி] - நாகுகளைத்தொடர்கிற சேக்கள்கழுத்தில் மணியினுடையத்வநி, அந்நாகுகள் கைபுகுராமையாலே கூப்பிடுகிறாற்போலே யிராநின்றது. [தென்றல்] - வெறும்புறத்திலே தென்றலென்னவமையும், "மல்லிகைகமழ்தென்றல்" என்னவேண்டா; வினைமுடுகினால் பின்னை யுடம்புக்கீடிடாதே ஏறுவாரைப்போலே. "ஆர்எதிராக உடம்புக்கு ஈடிடுகிறது?" என்றிராநின்றது. [ஆம்பலாலோ] - குழலென்னுதல், இலைக்குழலென்னுதல்; இவையெல்லாம், "ஈருமாலோ, தவருமாலோ, மயக்குமாலோ, சிதைக்குமாலோ" என்றாற்போலே சொல்லவேண்டா; "புலி, புலி" என்பாரைப்போலே இவற்றின்பேரைச்சொல்ல, பயங்கரமாயிருக்கிறது. அன்றிக்கே, இவற்றினுடையநலிவு வாயால்சொல்லில் வாய் வக்குரிக்கும்படியா யிருக்கையாலே, சொல்லாதொழிந்ததாதல். [பகலமோலை] - பிராட்டியுடைய வ்யஸநத்துக்கு உறுப்பாகப் பெரியவுடையாரை முடித்துக்கொண்டுவந்து ராவணன் தோற்றினாற்போலே ஆஶ்வாஸகரமான பகலை முடித்துவந்து தோற்றிற்றாய்த்து ஸந்த்யை. பகல் பதார்த்ததர்ஶநம்பண்ணி யாற்றலாமிறே; அதில்லாமையாலே ராத்ரிவ்யஸநம் ஒருமுகஞ்

இரண்டாம்பாட்டு - புகலிடம் இத்யாதி. கீழ் - தனித்தனியேநலிந்த பாதக பதார்த்தங்கள் திரளாக பாதிக்கும ப்ரகாரத்தை ஸங்க்ரஹமாக அருளிச்செய்யா நின்றுகொண்டு, அப்படி நலிகைக்கு ஹேதுவையும் அருளிச்செய்கிறார் - முன்பு இத்யாதி. தூசி - ஸேநாமுகம். பேரணி - பெரிய வ்யூஹம். உறுபூசல் - கைகலந்தயுத்தம்; மூலபலயுத்தமாதல். பலஹாநிமிகுகைநலிகைக்கடி - பல கூடிவந்து என்றது - "மணி, தென்றல், ஆம்பல், மாலை, சாந்தம், பஞ்சமம், முல்லை, வாடை என்ற வற்றைப்பற்ற.

மேல்வருகிறவென்றது - இப்பாட்டிற் சொல்லுகிறவென்றபடி. தனியேதென்ன - புகலிடம் இத்யாதி. "புலம்புறுமணி" - புலம்புதலிலேயுற்ற மணி; த்வநிக்கிறமணி. த்வநி பாதகமாகிறபடியென்னென்ன - நாகுகளை இத்யாதி. சேக்கள் - வ்ருஷபங்கள். "மல்லிகைகமழ்தென்றல்" என்றாற்போலே விசேஷணமிட வேண்டாவோவென்ன - வெறும்புறத்திலே இத்யாதி. வேண்டாமைக்கு ஹேதுவேதென்ன - வினைமுடுகினால் இத்யாதி. பரிஹாராந்தரம் - ஆர்எதிராக இத்யாதி. ஈடு - ஜோடு, கவசம். "ஆம்பல்"- ஆய்க்குழலும், இலைக்குழலும். "ஈரும், தவரும், மயக்கும்" என்னாதே, வெறுமனே "மணி தென்றலாம்பல்" என்கிறதென்னென்ன, பரிஹாரத்வயம் - இவையெல்லாம் இத்யாதியாலும், அன்றிக்கே இவற்றினுடைய இத்யாதியாலும். வக்குரிக்கும்படி என்றது - வேம்படியென்றபடி. "பகலமோலை" என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாகஹாவம் - பிராட்டியுடைய இத்யாதி. பகல் ஆஶ்வாஸகரமோவென்ன - பகல் இத்யாதி. யாழாவது - வீணாவிசேஷம்.

செய்திருக்குமிறே. [வண்சாந்தம்] - அழகியசாந்தம், [illegible] பண். [முல்லை] - யாழ். அன்றிக்கே, முல்லைப்பூத்தான் இடையர்க்குத்தாரா யிருக்குமிறே; [illegible] லிற்றுகவுமாம். [தண்வாடை] - அவ்வாடையோடே தென்றலோடே [illegible]. தென்றல்வருவது ஒருகாலமும் வாடைவருவது ஒருகாலமுமாயிருக்குமிறே: [illegible] லாம் அவ்வகாலங்களிலேவந்து தோற்றப்படியாய்த்துக் காலம் [illegible]. அன்றியே, அநர்த்தஸூசகமாய் எல்லாக்காற்றும் ஒருகாலே [illegible]. இனித் தென்றலுக்கஞ்சி வாடையின்கீழேபோதுங்க [illegible] [புகலிடமித்யாதி] - [illegible] யானவன் இப்படி பாதகபதார்த்தத்தின்கையிலே [illegible] ஸர்வஸாதாரணமாக ஆபத்துவந்தால் வயிற்றிலேவைத்து நோக்குமவன்கிடீர் இப்போது வாராதொழிகிறான்! பரப்புடைத்தானபூமி உருமாய்ந்துகிடக்க உண்டாக்கி. ப்ரளயங்கொண்ட இத்தையிடந் தேடேத்து, திரியவும் ப்ரளயம்வர வயிற்றிலேவைத்து நோக்கி உமிழ்ந்திட்டுத் [illegible] வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, [illegible] இருந்திக்கொள்ள [illegible] மீட்டுக்கொண்டு, இப்படி வரையாதேநோக்கும் ஸ்வபாவனானவன்கிடீர் இப்போது வாராதொழிகிறான்! [ஆயன்] - “க்ருஷ்ணவஹீ” [illegible] இத்யாதி. [மாயோன்]-ஆச்ரிதர்களுக்கு அநுரூபமான [illegible]. [இகலித்யாதி] - யுத்தபூமியில்காணும் ஆச்ரிதர்களுக்குத் [illegible]. “[illegible]” என்கிற ப்ரஹ்லாதவிபீஷணாதிகளைப்பற்றச்செய்திலனிறே; [illegible]. “[illegible]” [illegible] என்னக் கடவதிறே. [வாரான்] - இந்த அம்பேற்கவந்தேன்றோ, [illegible].

இடையர்க்குத் தாரானையாலே க்ருஷ்ணனுக்கு [illegible] “முல்லை” என்றது முல்லைப்பூவாதல். [illegible] - அவ் வாடையோடு இத்யாதி. இவ்வாக்யார்த்தம் - இனித்தென்றல் இத்யாதிவாக்ய [illegible]. “அவ் வாடையோடே” இத்யாதிவாக்ய விவரணம் - தென்றல் வாவதை இத்யாதிவாக்ய [illegible] - ஒரு ஸத்தையையிலேதானே [illegible] றென்று கருத்து. பரிஹாரார்த்தம் - அன்றியே இத்யாதி. “[illegible]” [illegible] விவரணமாதல், “வாடை” என்றுமே “தண்வாடை” [illegible] இத்யாதி. மேலுக்கெல்லாம் [illegible] இத்யாதி. “[illegible]” [illegible] என்றது. “அளிக்கின்ற” என்றவர்த்தமாக்கப்பட்ட [illegible]. “[illegible] திடந்து” இத்யாதிகளெல்லாம் செய்யவன் [illegible] இத்யாதி. “க்ருஷ்ணவஹீ [illegible]” இதிஉதாஹரணமே. [illegible] “[illegible]” என்றுமே. “இகலிடத்து” என்று விசேஷிப்பானென்? என்ன - யுத்தபூமியில் இத்யாதி. [illegible] முடிவேத் தாற்பர்யமிக்கிறார் - [illegible] இத்யாதிவாக்யத்தாலே. “இகலிடத்து” [illegible]. யுத்தத்திலே கூற்றம் என்னுமதுக்கு ப்ரமாணம் - [illegible] இத்யாதி. ‘[illegible] [illegible] ! [illegible] [illegible]” இதி [illegible] (ரிக-கூடு) “[illegible]” என்றதிலே [illegible]. என்பக் கல் வருமிடத்தில் ஒரு [illegible] இந்த அம்பேற்கவும் இத்யாதி. “அகலிடம்படைத்து” என்றுதொடங்கி “வாரான்” என்றவற்றைப்பக்கூட்டி. “இனி”

காட்டவமையும். [இனியித்யாதி] - வரைந்துநோக்குவானொருவனாய் நான்ஆறியிருக்கிறேனோ? வருமிடத்தில் ப்ரதிபந்தக முண்டென்று ஆறியிருக்கிறேனோ? என்னுடையரக்ஷணத்தில் எனக்குஅந்வயமுண்டாய்த்தான் ஆறியிருக்கிறேனோ? வரையாதே ரக்ஷிக்குமவனுமாய் ஶக்தனுமாய் ப்ராப்தனுமாயிருக்கிறவன் வாராதொழிய, அவனுடைய ரக்ஷ்யகோடியிலேயாய் அஶக்தையாய் அப்ராப்தையாயிருக்கிற நான் என்ப்ராணன்களை நோக்குகையென்று ஒருபொருளுண்டோ? [இனியிருந்து] - வருந்தனையும் ஜீவித்துக்கிடக்கும்படி "ந மாம்ஸம் ராகவோ புங்க்தே" (நமாம்ஸம்ராகவோபுங்க்தே) என்று சிலர் சொல்லுதல், "த்வாமபஶ்யந் ந்ருபாத்மஜே" (த்வாமபஶ்யந்ருபாத்மஜே) என்னுதல் செய்துதான்ஆறியிருக்கிறேனோ? வரவுக்குஉடலாக 'கரன்பட்டான், கபந்தன்பட்டான், வாலிபட்டான், கடலடைப்பது, வந்துபுகுந்தாரத்தனை' என்றுதான் ஆறியிருக்கிறேனோ? [இனியிருந்து] - இதுக்கு முன்பெல்லாம் "அவன்சரக்கழியவொண்ணாது" என்று நோக்கிக்கிடந்தமை தோற்றுகிறதாய்த்து 'இனி' என்கையாலே. [என்னுயிர்காக்குமாறேன்] - பிறருயிராய்த்தான் நோக்கியிருக்கிறேனோ? இவற்றின்கையிலே நோவுபட எனக்குப்பணியாகவோ என்னுடைய ப்ராணரக்ஷணம்? (உ)

மூன்றாம் பாட்டு.

இனியிருந்தென்னுயிர்காக்குமாறென் இணைமுலை நமுக நுண்ணிடை நடங்கத், துனியிருங்கலவிசெய் தாகந்தோய்ந்து துறந்தெம்மையிட்டகல் கண்ணன் கள்வன், தனியிளஞ்சிங்கமெம்மாயன்வாரான் தாமரைக்கண்ணுஞ்செவ்வாயும் நீலப்,பனியிருங்குழல்களுநான்கு தோளும்பாவியேன் மனத்தே நின்றீருமாலோ!

என்றதுக்கு வ்யதிரேகாந்வயமுகங்களாலே ஸாவமருளிச்செய்கிறார்-வரைந்து இத்யாதி நாலுவாக்யத்தாலே. "படைத்து" என்றத்தால் ஸித்தமான ஜநகத்வத்தைவிவக்ஷித்து, ப்ராப்தனுமாய் என்றது. "உயிர்" என்கையாலே - ஸ்வரக்ஷணேஸ்வாந்வய மில்லாமை ஸித்தம். "காக்குமாறென்" என்றத்தைப்பற்ற - நோக்குகையென்றொரு பொருளுண்டோ என்றது. "வாரான்" என்றதிலே ஸூசகாதிராஹித்யத்தையும் விவக்ஷித்து, அத்தோடேகூட்டி, "இனி" என்றதுக்கு இரண்டாம்ஸாவம் - வருந்தனையும் இத்யாதி. விவரணம் - வரவுக்கு இத்யாதி. 'ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே । வந்யம் ஸுவிஹிதம் நித்யம் பக்தமஶ்நாதி பஞ்சமம் ॥ காநநாநி ஸுரம்யாணி நத்ய: ப்ரஸ்ரவணாநி ச । சரந் ந ரதிமாப்நோதி த்வாமபஶ்யந் ந்ருபாத்மஜே" இதி ஸுந்தரகண்டே ஸீதாம்ப்ரதி மாருதி: இதுக்குமூன்றாம்ஸாவம் - இதுக்குமுன்பு இத்யாதி. அதவா, 'வரவுக்குஉடலாக' இத்யாதிவாக்யம் மூன்றாம்ஸாவமாய், 'இதுக்குமுன்பெல்லாம்' இத்யாதி. வாக்யம் நாலாம்ஸாவமாதல். "என்" என்றதுக்குஸாவம் - பிறருயிர் இத்யாதி. பிறர் என்றது ஈஶ்வரனை. அதாவது - அவனுக்கு உறப்பானால் நோக்கலாமொழிய அவன்விட்டால் நோக்கப்போமோ வென்றபடி. "யாவத்யத்ராத்மநோ ஸஹ" இதிவத். ஸலிதம் - இவற்றின் இத்யாதி "புகலிடமறிகிலம்தமியமாலோ" என்றது - அநுவாதமானபோது, 'புலம்புறுமணிதென்றல்' என்று தொடங்கி, 'காக்குமாறென்' என்றடைவேயந்வயம்; அநுவாதமாகாதபோது, 'புலம்புறு' என்று தொடங்கி, 'காக்குமாறென்'; ஆகையாலே, 'தமியம் - புகலிடமறிகிலம்' இத்யந்வய:. (உ)

ஆ—(இனியிருந்து.) - தன்னுடைய ஆச்சர்யமான ஸௌர்யாதிகுணங்களாலே என்னை வசீகரித்து, தன்னை ஒருக்ஷணம் விஶ்லேஷிக்கில் தரியாதபடியான வைலக்ஷண்யத்தை விளைக்கும் அதிமாத்ரஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, ஒரு த்ருணத்தைப் பரித்யஜிக்குமாபோலே என்னைப்பரித்யஜித்தகண்ணன் வருகிறிலன்; அவனுடைய தாமரைக் கண்ணும், செவ்வாயும், நீலப்பனியிருங்குழல்களும், நான்கு தோள்களும் என்னெஞ்சை ஈராநின்றன; இனியிருந்து என்னுயிர்காக்கைக்கு உபாயமென்? என்கிறாள்.

ஒ—மூன்றாம்பாட்டில், அவனுடைய திவ்யாவயவங்கள் ஹ்ருதயத்திலே ஸ்ப்ருதமாய்நின்று நலியாநின்றன என்கிறாள்.

[இனியிருந்தென்னுயிர் காக்குமாறென்] - அவனுடைய ஸௌந்தர்யமே உள்ளே நின்று நலியாநின்றால், இனி ப்ராணனைக் காக்கவிரகுண்டோ? என்கிறாள். [இணைமுலையென்று தொடங்கி] - ஸம்ஶ்லேஷ ஸாவகாஶத்தாலே முலைகளிரண்டும் குழையவும் நுண்ணியவிடை நுடங்கும்படியாகவும் துஃகஸஹமான ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணி என்னை நீராக்கி என்னுடம்பிலே தோய்ந்து; பொறுக்கவொண்ணாதபடி நிரதிஶய ஸாவமாய்ப்படி கலந்தென்றுமாம். [துறந்தெம்மையிட்டகல் கண்ணன்] - அசேதநங்களைப் போகடுமாபோலே எங்களைப்போகட்டு அகலுமதுவே ஸ்வபாவமான க்ருஷ்ணன். [கள்வன்தனியென்று தொடங்கி] - ஸம்ஶ்லேஷ தஶையில் ஸர்வஸ்வாபஹாரியான ஆலோகஅவலோகனாதிகளை யுடையனாய், என்னோட்டைக் கலவியாலே இளகிப் பதித்து மேனாணிப்பதுஞ்செய்து, விஶ்லேஷ தஶையில் என்பக்கலிலே அதிசாபலத்தையுடையவன் வருகிறிலன்; தாமரைப்பூப்போலே யிருக்கிற கண்ணும் சிவந்த திருப்பவளமும், சுருத்துக் குளிர்ந்திருக்கிற பெரிய திருக்குழல்களும் நாலு திருத்தோள்களும் இவ்வழகுகளை அநுபவித்து இழந்தால் மறக்கவொட்டாதே நினைத்து நோவுபடுகைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னுடைய மனஸ்ஸிலே நிரந்தரமாகநின்று நலியாநின்றன.

ப.—அநந்தரம், ஸமுதாயமான ஸௌந்தர்யத்தையன்றியே, அதிரமணீயமான அவனுடைய அவயவங்களானவை ஆர்த்ரமாக நலியாநின்றன; இனி ப்ராணரக்ஷணம் பண்ணும் ப்ரகாரமென்? என்கிறாள்.

இனி - ஆஶ்வாஸகரங்கள் ஸர்வதா அற்றபின்பு, இருந்து, என்னுயிர் - என் ப்ராணனை, காக்குமாறு என் - ரக்ஷிக்கும் ப்ரகாரமென்? இணைமுலை - சேர்த்தியழகாலே அவனுக்கு ஊர்ஜிதமான முலைகளானவை, நமுக - (ஸம்ஶ்லேஷஸாரஸ்யத்தாலே) குழையும்படியாகவும், நுண்ணிடை - நுண்ணிடையானது, நுடங்க - தளரும்படியாகவும், துனி - துஃகஸஹமாம்படி, இரு - (ஆஶ்ரயத்தளவன்றிக்கே) பஹுமுகமான, கலவிசெய்து - ஸங்கத்தைப்பண்ணி, ஆகம்தோய்ந்து - (விடாயர் மடுவிலே முழுகுமாபோலே பெரிய அபிநிவேஶத்தோடே) என்வடிவிலே அவகாஹித்து ஸஜ்ஜித்து, (அநந்தரத்திலே), எம்மைத்துறந்து-(பின் இரக்கமறும்படி) என்னைக்கைவிட்டு, இட்டு - (அசேதந ஸமாநமாம்படி) போகட்டு, அகல்கண்ணன் - அகலுமதுவே நிரூபகமான க்ருஷ்ணனாய், கள்வன் - விஶ்லேஷார்த்தமான ஸம்ஶ்லேஷதஶையில் க்ருத்ரிமமான வ்யாபாரத்தை யுடையனாய், தனி - பெறாப்பேறு பெற்றானாம்படி அத்விதீயனாய், இளஞ்சிங்கம்-(அத்தாலே) பாலஸிம்ஹம்போலே வடிவில் இளமையையும் மேனாணிப்பையுமுடை

யனும், எம்மாயன் - விஶ்லேஷாபிப்ராயத்தாலே தாழ்ந்துபரிமாறின ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையவன், (தான்), வாரான் - வருகிறிலன்; தாமரைக்கண்ணும்-பிரிகிறவளவில் செல்லாமை தோன்ற நோக்கின தாமரைபோன்றகண்ணும், செவ்வாயும் - (விஶ்லேஷோக்தியை வ்யக்தீகரிக்கமாட்டாத) சிவந்த திருப்பவளமும், நீலம் - (ஸம்ஶ்லேஷதஶையில் ஶ்லதமாய் அநியமிதமாகையாலே மிகைத்த) நீலநிறத்தையும், பனி-குளிர்த்தியையும், இரு - பரப்பையுமுடைத்தான, குழல்களும் - திருக்குழல்களும், நான்கு தோளும் - (விஶ்லேஷதஶையில் தரிக்கைக்காக பரிஷ்வங்கார்த்தமாகப் பணைத்த) நாலு திருத்தோள்களும், பாவியேன் - (பிரிந்திருந்து ஈடுபடுகைக்கீடான) பாபத்தையுடைய என், மனத்தே - மநஸ்ஸிலே, நின்று - ப்ரகாசித்துநின்று, ஈரும் - நலியாநின்றன. நமுகுதல் - குழைதல்.

இ.—மூன்றாம்பாட்டில், கண்ணாற்கண்டவை வ்யூகமாகப் புக்கவாறே, அவற்றுக்கஞ்சிக் கண்ணைச் செம்பளித்தாள்; அகவாயிலே அவன்அழகுகள் ஸ்மாரகமாய் நின்று நலியாநின்றன என்கிறாள்.

[இனிப்பிரிந்திருந்துயிர்காக்குமாறென்] - எனக்கு தாரகமான அழகு பகையானால் எனக்கு ப்ராணனை நோக்கவிரகுண்டோ? [இணைமலர்] - அவன்சேர்த்தியழகு கொண்டாடும் மலர். [நமுக] - குழைய. கடின ஸ்தலம் வர்ஷத்தாலே நெகிழுமாபோலே ஸம்ஶ்லேஷதஶையில் ஸ்பர்ஶத்தாலே குழைந்தபடி. [நுண்ணிடைநுடங்க]- வெறும்புறத்திலே அருந்தலைக்கீழ் விளைநிலம்போலே நோக்கவரிதான இடை நுடங்கும்படியாகவும்: கலக்கும்போது எதிர்த்தலையைப் பேண அறிந்திலன்; தன் அபிநிவேஶம் தீர்ந்தானத்தனை. [துனியிருங்கலவிசெய்து] - துர்வஹமான கலவிசெய்து. [இருங்கலவி]- கலக்கிறபோது பரிமாறினவகைகள், ஆஶ்ரயித்தளவன்றிக்கேயிருக்கை. ஸம்ஶ்லேஷம் விஶ்லேஷாந்தமாயல்லதிராமையாலே துர்வஹத்தை விளக்குமென்னுதல்; அத்தஶையில் பொறுக்கப் போகாதபடியிருக்கையாலே துர்வஹமென்னுதல். [ஆகம் சேர்ந்து] - என்னை நீக்கி என்னுடம்பிலே சேர்ந்து. "ஸ்ரீ ஷெஶீ தஜிவஹ உழ" என்னுமாபோலே, தன்விடாய் கெட்டானாயிருந்தான். என்னுடம்போடே அணைந்தது தனக்குப் பெரும்பேறாக நினைத்திராநின்றான். [துறந்தெம்மையிட்டு] - இப்படி விருப்பத்துக்கு விஷயபூதையான என்னைக்கைவிட்டு அசேதநத்தைப் போகட்டாற்போலே போகட்டோம் என்னும் நினைவுமில்லாதபடி போகட்டு. இப்படி அவகாஹித்ததெல்லாம் கைவிடுகைக்கு உடலாய்த்ததென்கை. [அகல்கண்ணன்] - அகலுகையே ஸ்வபாவமான க்ருஷ்ணன். அவனுக்குக்கலவி காதாசித்கம்; அகலுகையே நிரூபகம்; கலவியாலல்லது பிரிவுண்டாகாமையாலே கலந்தானித்தனை. [கள்வன்தனியிளஞ்சிங்கம்] - கலக்கிறபோதை நோக்கும், பேச்சும், பண்ணின வ்யாபாரங்களும் ஸர்வஸ்வாபஹாரிகளாயிருக்கை; அப்போது தன்ஆற்றாமையாலே கலக்கிறானென்று தோற்றும்படியாய் ஸமத்தில் பிரிந்து நோவுபடுத்தச் செய்தானாயிருக்கை யென்றுமாம். [தனி] - என்னோட்டைக்கலவியாலே அத்விதீயனென்று தோற்றும்படியிருக்கிறவன். [இளஞ்சிங்கம்] - என்னோட்டைக்கலவியாலே இளகிப்பதித்து மேனாணித்திருக்கிறவன். [எம்மாயன் வாரான்] - பிரிவை நினைத்துக் கலங்கிப் போகமாட்டாதே என்பக்கல் அதிசாபலத்தாலே அத்தஶையில் தடுமாறினவன் இப்போது வருகிறிலன். அத்தஶையில் சாபலத்தோபாதி போரும் இப்போதை விரக்தியும். [தாமரை இத்யாதி] - அவன் கண்

னுக்கு விஷயமாகாதொழிந்தால் இவை நெஞ்சுக்கு விஷயமாகாதொழிந்தால் ஆகாதோ? தான் போகாநின்றால் இவற்றையும் வைத்துப் போகவேணுமோ? கலந்தபோது தன்பேறென்று தோற்றும்படியான ஹர்ஷமடங்கக் கண்ணிலே தோற்றும்படியான திருக்கண்களையுடையவன் என்னுதல்; பிரிவை நினைத்து வாய்விடமாட்டாதே ஆற்றாமையடங்கவும் நோக்கிலே தோற்ற நின்ற நிலை யென்னுதல். [செவ்வாயும்]-பிரிவை ப்ரஸங்கித்து முடியச்சொல்லமாட்டாத போதைச் சிவந்த அதரமும். [கலப்பணிபிருங் குழல்களும்]-கலவியாலே குலைந்து பிரிவை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கழுத்துக் குனிந்த பெரிய திருக்குழல்களும். [நான்குதோளும்] - †இவர் தமையாற்றத்தைக்கண்டு குழலைப் பேணி வருத்தலையும் தரிப்பரிதாக்கத்தான் எதிரே அணைத்த நாலுதோளும். “உபஸம்ஹர” என்றது கம்ஸாதிகளுக்கிறே; பெண்களுக்கு நாலாய்த் தோற்றுமிறே. [பாவியேன்] - இவ்வழகுகளை யநுபவிக்க இழந்தால், அநுவழித்திருக்கப்பெறாதே நினைக்கைக்கு அடியான பாபத்தைப் பண்ணின என்னுடைய. [மனத்தேநின்று சுடுமாலோ]-மனஸ்ஸிலே நிரந்தரமாக நின்று நலியாநின்றது. அணைக்க எட்டுதல், நெஞ்சுக்கு எட்டாதொழிதல் செய்யப் பெற்றிலேன். அறிவழிந்து மறந்து பிழைக்கவும் பெற்றிலேன்.

ஈடு.—மூன்றாம் பாட்டு. கண்ணுக்கிலக்கான பதார்த்தங்களடங்க வ்யாபகமாகப்புக்கவாறே அவற்றுக்கஞ்சாக் கண்ணைச் செம்பளித்தான்; அகவாயிலே அவன் அழகு ஸ்ம்ருதமாய் நலியாநின்றதென்கிறார்.

[இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்] - என்னதென்றபிமானித்த உடம்பு பகையாய்த்து: என்னதென்றபிமானித்த அழகு பகையாய்த்து; இனியிருந்து என்னுடைய ப்ராணரக்ஷணம்பண்ண என்றொரு பொருளுண்டோ? [இணைமுலைமுக] - அவன் சேர்த்தியழகுசொல்லி வாய்வெருவும் முலைகளானவை, கடினஸ்தலத்திலே வர்ஷித்தால் பதமாமாபோலே, ஸம்ஶ்லேஷஸமயத்தில் அவனுடைய ஸ்பர்ஶத்தால் மெல்கிக்குழைந்தபடி. நமுகுகை-குழைகை. [நுண்ணிடை நடுங்க]-வெறும்புறத்திலும் அருங்குலைக்கீழ் விளைநிலம்போலே நோக்கவரிதான இடை நடுங்கும்படியாகவும். கலக்கும்போது எதிர்த்தலையைப் பேண அறிந்திலன்: தன் அபிநிவேசம் தீர்த்தானத்தனை. [இனியிருந்

மூன்றாம்பாட்டு - இனி இத்யாதி. கீழ் - வ்யாபகமான [illegible] சொல்லி வந்தவன், இப்பாட்டிலே - அழகு வ்யாபகமானபடியைச் சொல்லுகிறதென்னென்ன - கண்ணுக்கிலக்கான இத்யாதி. “மனத்தேநின்றுருகுமேலோ” என்கையாலே - கண்ணைச் செம்பளித்தமை ஸித்தம்.

“இணைமுலைமுக” என்று தொடங்கி “சுடுமாலோ - இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்” என்று அந்வயமுகேந ஹ்ருதயம் - என்னதென்று இத்யாதிவாக்யத்ரயம். வாக்யத்ரயத்திலும், என்னதென்றபிமானித்த என்றது - அர்த்தாத் ஸித்தம். “இணைமுலைமுக” இத்யாதியைப் பற்ற - உடம்பு என்றது. உடம்பாவது - தன்னுடைய சரீரம். “தாமரைக்கண்ணும்” இத்யாதியைப்பற்ற - அழகு என்றது. “இனியிருக்கவல்செய்து” என்று தொடங்கி, “உடல்” என்னுமவைச்சொல்லுகையாலே, ‘உடம்பு பகையாய்த்து’ என்றது ஸித்தம். ஆத்மஸ்வரூபமாகக் [illegible] காக அருளிச்செய்கிறார் - அவன்சேர்த்தியழகு இத்யாதி. மெல்கி - ம்ருதுவாய். அருங்கலை - நோக்க வரிய கரை. நிர்வாகத்தால் ஸலிதமாதல், நிர்ப்பந்தத்தைப் பெலிப்பத்தனமும் கடகழித்து ஸாவமாதல் - கலக்கும்போது இத்யாதிவாக்யத்வயம். நடுங்க - தளரும்படியாக. “இனி”

† ‘இவன் தமையாற்றத்தைக்கண்டு குழலைப்பேணி வருத்தலையுந் தரிப்பரிதாக நான’ என்று பாடங்காண்கிறது.

கலவிசெய்து] - து:ஃவ ஃபலமான கலவியைச்செய்து. [இருங்கலவி]-கலக்கிறபோது பரிமாறின வகைகள், ஆஶ்ரயத்தளவன்றிக்கே யிருக்கை. ஸம்ஶ்லேஷம் விஶ்லேஷாந்தமாயல்ல திராத.மயாலே து:ஃவத்தை விளக்குமென்னுதல்; அத்தமையிலே தலைதடுமாறுகக் கலக்கையாலே பொறுக்கவொண்ணுதபடி து:ஃவரூபமென்னுதல். [ஆகந்தோய்ந்து] - இக்கலவியாலே நீராக்கி, "ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" (ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மேஶீதமிவஹ்ரதம்) என்கிறபடியே இவளோடே கலந்தாணுய்த்து; க்ரீஷ்மகாலத்தில் மடுவிலே முழுகிக்கிடப்பாரைப்போலே. [துறந்து] - இப்படி யவகாஹித்ததெல்லாம் போகடுகைக்கு உடலாய்த்து. [எம்மையிட்டு] - இப்படி என்பக்கலிலே விருப்பத்தைப்பண்ணிவைத்து, சில அசித்பதார்த்தங்களைப் போகடுமாபோலே போகட்டோ மென்கிற நினைவும் கூடப் போகட்டாணுய்த்து. [அகல்கண்ணன்] - இவனுக்குக்கலவி காதாசித்கம்; அகலுகை நிருபகம்: கலவியாலல்லது பிரிவு கூடாமை கலந்தானத்தனை. [கள்வன்] - ஸம்ஶ்லேஷத்தில் குளிரநோக்கும் நோக்கும், பேசினபேச்சும், பரிமாறின பரிமாற்றமு மெல்லாம் ஸர்வஸ்வாபஹார ஸூசமமாயிருக்கிறது. கலக்கிறபோது செய்தவையடையத் தன்னுற்றுமையாலே செய்தானென்று தோற்றும்படியாய்ப் பிரிவில் இவை நம்மைவஞ்சிக்கைக்காகச் செய்தாணுயிராநின்றது. [தனியித்யாதி] - "யஸ்யஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:" (யஸ்யஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:) என்னுமாபோலே, இவளோட்டைக் கலவியாலே அத்விதீயனென்று தோற்றும்படியிருந்தான். [இள] - கலக்கக் கலக்கக் கீழ்நோக்கிப் பிராயம் புகாநின்ருன். [சிங்கம்] - இவளோட்டைக் கலவியாலே பெருப்பேறு பெற்

என்று - து:ஃவமாய், தத்ஃபலத்தைச் சொல்லுகிறது; து:ஃவஃபலமானவென்றபடி. து:ஃவஃபலகமாய் ஆஶ்ரயத்தளவல்லாத பஹுமுகமான ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணியென்று முந்தினவர்த்தம். * இருமை - பெருமையாய், ஆதிக்யத்தைச்சொல்லுகிறது. "து:ஃவஃபலம்" என்றத்தை விவரியாநின்றுகொண்டு, "துனியிரு" என்றதுக்கர்த்தாந்தரம் - ஸம்ஶ்லேஷம் இத்யாதிவாக்யத்வயம். இருமை - பெருமையாய், அஸஹமென்றபடியாய், அஸஹமாய் து:கரூபமான கலவியைப் பண்ணி யென்றிரண்டாமர்த்தம். தோயும்போது நீரிலேயாகவேண்டுகையாலே- நீராக்கி என்றது. "ஆகம்தோய்ந்து -" வடிவிலே யவகாஹித்து. "ஆகந்தோய்ந்து - துனியிருங்கலவி செய்து" என்றந்வயிப்ப து.நீரான துக்கு ப்ரமாணம்-ஏஷப்ரஹ்ம இத்யாதி. "த்ருஷ்ட்வா காஞ்சநஸங்காஶம் ராமம்ஸம் ஶோகஸந்தப்த: ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்", இதி ஸ்ரீராமாயணே [அயோ,4,50] "க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்"என்றதுக்கர்த்தம் - க்ரீஷ்மகாலத்தில்இத்யாதி. கிழையுங்கூட்டி "துறந்து"என்றதுக்குஸாவம்-இப்படியவகாஹித்து இத்யாதி. "இட்டு" என்று அசேதநவத் சொன்னதுக்குஸாவம் - இப்படி யென்பக்கலிலே இத்யாதி. துறந்து-போகட்டு; இட்டு-துறந்தோமென்கிற நினைவையும் போகட்டு என்றிரண்டுக்கும்ஸேஷம். "என்னைக் கைவிட்டு அசேதநஸமாநமாம்படி போகட்டு" என்று உரையில் ஶப்தார்த்தம். "கலவி செய்து" என்று வைத்து, "அகல்கண்ணன்" என்று நிரூபித்ததுக்கு ஸாவம் - இவனுக்கு இத்யாதி. ஆனல் கலப்பானென்? என்ன-கலவியால் இத்யாதி. "கள்வன்" என்றதுக்கு ஸர்வஸ்வாபஹாரக னென்றர்த்தம் அருளிச்செய்கிருர் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. "கள்வன்" என்றதுக்கு வஞ்சகனென்றர்த்தாந்தரம் - கலக்கிற இத்யாதி. "தனி" என்றதுக்கர்த்தம் - யஸ்யஸா இத்யாதி. "அப்ரமேயம்ஹிதத்தேஜோ யஸ்யஸா ஜநகாத்மஜா" இத்யாதி ஆரண்யகண்டே ராவணம்ப்ரதி மாரீச:(௩௭-௧௮) மாயன்-சபலன். சாபல்யமேதென்ன-பிரிவை இத்யாதி. இவ்வாக்

றுனாய் மேன்மணித்திருந்தபடி. [எம்மாயன்வாரான்] - பிரிவைநினைத்துக் கலங்கிப் போகமாட்டாதே என்பக்கல் அதிசாபலத்தாலே அத்தசையில் நமோந்னவன் இப்போது வருகிறிலன். அத்தசையில் சாபலத்தோபாதியும் போரும் இப்போதை விரக்தியும். அப்போது போகையிலுள்ள அருமை போரும், இப்போது வருகையிலுள்ள அருமையும். [தாமரையித்யாதி] - அவன், கண்ணுக்கு விஷயமாகா தொழிந்தால், இவை நெஞ் சுக்கு விஷயமாகாதொழிந்தா லாகாதோ? தான் போகிறான், இவற்றைவைத்துப் போக வேணுமோ? கலந்தபோது தன்பேறென்று தோற்றும்படியான திருக்கண்களை யுடைய வனென்னுதல்; பிரிவைநினைத்து வாய்விடமாட்டாதே ஆற்றாமையடங்கலும் நோக்கிலே தோற்றும்படி நின்ற நிலை யென்னுதல். [செவ்வாயும்] - பிரிவை ப்ரஸங்கித்து முடியச் சொல்லமாட்டாதபோதைச் சிவந்த திருவதரமும் இவனுடைய * சிறியவாயும், கண் களும் இருக்கிறபடி. [நீலப்பனியிருங்குழல்களும்] - கலவியாலே குலைந்து பிரிவை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கறுத்துக் குளிர்ந்த பெரிய திருக்குழலும் [நான்கு தோளும்] - இவள்தமோற்றத்தைக் கண்டு குழைப்பேணிவருந்துமையும் நீக்கைக்காக நெருக்கியணைத்த நாலுதிருத்தோளும்: "உபஸம்ஹர" (உபஸம்ஹர) என்றது கம் ஸாதிகளுக்கிறே; பெண்களுக்கு நாலாய்த்தோற்றுமிறே. "ஶங்கசக்ர கதாபாணே" (ஶங்கசக்ரகதாபாணே) என்றுளிறே. [பாவியேன்] - நினைவு நுகளை மறவித்து இருக் தால், மறந்திருக்கப் பெறுதபடியான பாபத்தைப்பண்ணின என்னுடைய. [மனத்தே நின்றிருமாலோ] - மாநஸிலே நிரந்தரமாக நின்று நலியாநின்றது. அணைக்கும்படி கைக்கெட்டுதல், நெஞ்சுக்கெட்டாதொழிதல் செய்யப் பெற்றிலேன். † அறிவிழந்து மறந்து பிழைக்கவொண்ணாதபடி பண்ணினாளாய்த்து. (௩)

யத்தால் ஸஹிதம் - அத்தசையில் இத்யாதி. தத்விவரணம்-அப்போது இத்யாதி. "வாரான்" என் றத்தைக் கடாக்ஷித்து மேலுக்கெல்லாம் பாவம் - அவன், கண்ணுக்கு இத்யாதி. விவரணம் - தான் போகிறன் இத்யாதி. "தாமரைக்கண்ணும்" என்றதுக்கு. "கலவிசெய்து, நாம்து" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து பாவத்வயம் - கலந்தபோது இத்யாதி வாக்யத்வயம். "நாம்து" என்ற துக்கநுகுணமாக "செவ்வாயும்" என்றதுக்கர்த்தம் - பிரிவை ப்ரஸங்கித்து இத்யாதி. "தாமரை கண்ணும்" என்றதி லிரண்டாமர்த்தத்துக் கநுகுணமாக இத்யாதி அதனுக்கும் உண்டென்கிறார். இவனுடைய இத்யாதி. சிறியவாயும் - உகவிசேஷிக்கிற வாயும். இருமை - நீட்சியாய், முடித்திருக்கிற குழலில் நீட்சி தோற்றுகைக்கு ஹேதுவேதென்ன - கலவியாலே இத்யாதி. போகாநிற்கிறவன் தோளை இவள் எப்படியறிந்தாளென்ன - இவள் தமோபாவத்தை இத்யாதி. க்ருஷ்ணனுக்கு நாலுதோளுண்டோவென்ன-உபஸம்ஹர இத்யாதி. "உபஸம்ஹர விஶ்வாத்மந் ரூபமேதச்சதுர்புஜம் । ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் திதிஜந்மந:" இதி பஞ்சமேம்ஶே தேவகீ (௩-௰௩). அப்படித் தோற்றுமிறேயென்ன ப்ரமாணம் - ஶங்கசக்ர இத்யாதி. "ஶங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத । கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதாம்" இதி ஸபாபர்வணி பாஞ்சாலீ (௭௰-௪௩). பாபமேதென்ன - இவ்வழுது களை இத்யாதி. "மனத்தே" என்றதவதாரணார்த்தம் - அணைக்கும்படி இத்யாதி. "ஆகோ" என்ற திக்கு பாவமாதல், "நிற்கும்" என்றவர்த்தமானத்துக்கு பாவமாதல் - அறிவிழந்து இத்யாதி. 'இனி முலைநமுக'என்று தொடங்கி, 'நின்றிரும் - இனியிருக்கவென்னுயிர்காக்குமாறென்' இத்யந்வய: (௩)

† அறிவழிந்து என்று பாடாந்தரம்.

நான்காம் பாட்டு.

பாவியேன்மனத்தேநின்றீருமாலோவாடைதண்வாடைவெவ் வாடையாலோ! மேவுதண்மதியம்வெம்மதியமாலோமென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ! தூவியம்புள்ளுடைத்தெய்வவண்டுதுதைந்த எம் பெண்மையம்பூவிதாலோ! ஆவியின்பரமல்லவகைகளாலோயாமுடை நெஞ்சமும்துணையன்றாலோ!

ஆ.—(பாவியேன்.) - திருக்கண்களும் திருப்பவளமும் திருக்குழல்களும் திருத்தோள்கள் அழகும் என்னெஞ்சைநின்று ஈராநிற்கச்செய்தே, அதின்மேலே தண் வாடைமுதலாயுள்ள இவையும் காலாக்நிபோலே என்னை ஊஹியாநின்றன: வண்டுகள் பூமாலையைப்புஜித்தாற்போலே பெரியதிருவடிமேலே ஏறியருளிவந்து ஆத்தஸாரமாம்படி யென்னை ஸம்புஜித்தருளினப்ரகாரம்நின்று பாதியாநின்றது; இவ்வாத்மாவினளவின் றியே இப்படி அபர்யந்தபாதகங்கள் பாதியாநின்றன; இவையெல்லாம் பொறுக்கலா மிறே ஒருதுணையுண்டாகில்; என்னெஞ்சுங்கூடத் துணையன்றியேபோய்த்து என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், அவனுக்கு ஸ்மாரகமாய் அவ்வழியாலே நலிகை யன்றிக்கே தானே தனித்தனியே அஸஹ்யமாய் ஊஹியாநின்றன என்கிறாள்.

[வாடையென்று தொடங்கி] - தண்வாடையான வாடையும் வெவ்வாடை ஆகாநின்றது. எல்லாராலும் ஸ்ப்ருஹைபண்ணப்படும் குளிர்ந்த சந்த்ரன் அஸஹ்யசந்த்ரனாகாநின்றான். ம்ருதுவான மலராலேசெய்த படுக்கை வெவ்வியபள்ளியாய் நலியா நின்றது. பெரியதிருவடியையுடைய தெய்வமாகிற வண்டாலே ஆத்தஸாரமான என் னுடைய பெண்மையாகிறபூ ஏவம்விதமாய் நலிவுபடாநின்றது. [ஆவியின் பரமல்லவகை களாலோ] - பாதகங்களினுடையபடி இவ்வாத்மாவின் அளவல்ல. பண்டு இவன் ஸம்புஜித்த படிகளை நினைக்க அவை பாதிக்கிறபடி யென்றுமாம்.

ப.—அநந்தரம், அதிரூபமான கருடவாஹநத்தையுடையவன் ஸம்புஜித்த ஆஶ்ரயமும் ஈடுபடும்படி நெஞ்சுதுணையாகிறதில்லை; ஆஶ்ரயத்துக்குத் தகுதியன்றியே லோகாநுகூலபதார்த்தங்கள் எனக்கு பாதகங்களாகாநின்றனவென்கிறாள்.

பாவியேன்மனத்தே-(ஸர்வாநுகூலமானவையும் ப்ரதிகூலமாம்படி) பாபத்தை யுடையேனான என்னெஞ்சிலே, நின்று-(தோற்புரையேபோகாமல்) ஒருபடிப்படநின்று, வாடை - வாடை, ஈரும் - ஈராநின்றது; தண் வாடை - (அவனுடைய ஸம்ஶ்லேஷ தசையில் என்னோடு நாட்டோடு வாசியறக்) குளிர்ந்து அநுகூலமான வாடையானது, வெவ்வாடை - (“பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரிவீசும்” என்கிறபடியே) வெவ்விய வாடையாகாநின்றது; மேவு - ஸர்வர்க்கும் ஆஶ்வாஸகரமாம்படி செறியப்படும், தண் - குளிர்ந்த, மதியம் - சந்த்ரனானவன், வெம்மதியம் — நெருப்பைச் சொரியாநின்றான்; மென்மலர்ப்பள்ளி - ம்ருதுவான புஷ்பத்தாலே படுக்கப்பட்ட படுக்கையானது, வெம் பள்ளி - பண்டுபோலன்றியே அஸஹ்யமான படுக்கையாகாநின்றது; அம் - ரமணீய மான, தூவி - சிறகையுடையனான, புள் - பெரியதிருவடியை, உடை - வாஹநமாக வுடைய, தெய்வம் - பரதேவதையாகிற, வண்டு - வண்டானது, துதைந்த-விமர்த்தித்த

ஸாஜிக்கையாலே ஆத்தஸாரமான, எம் பெண்மை - என்னுடைய ஸ்த்ரீத்வமான, இது - இது, அம் பூ-(பரிதாபஸஹமல்லாத) ஸுகுமாரமான பூவென்னலாயிராநின்றது; ஆவியின் பரமல்ல - இவ்வாத்மாவுக்குப் பொறுக்கலாவனவல்ல, வகைகள் - அவனுடைய ஸம்ச்லேஷ விச்லேஷப்ரகாரங்களும், வ்யஞ்சகபதார்த்த ப்ரகாரங்களும், (ஆற்றியிருக்கலாம் படி), யாமுடை - நாம் காணமாகவுடையோமான, நெஞ்சமும் - நெஞ்சானது, துணையன்று - உசாத்துணையாகிறதில்லை. துதைகை - மிகுக்கை.

இ.—நாலாம்பாட்டில், அகவாயிலே நின்று நலிகிறவையொழிய ஸ்வரூபேண வந்து ஸ்பர்சாதிகளாலே ஸ்மாரகமாய்நின்று நலிகிற பதார்த்தங்களைச் சொல்லுகிறாள்.

